

# தெரிந்து கொள்ளுங்கள்

## பாகம்~1

Rev.Dr.A. சேவியர் B.Sc.,M.A (Theo).,DD.
(எழுத்தாளர் சுவிசேஷகர் போதகர்)

# தெரிந்து கொள்ளுங்கள்

## (பாகம் 1)

ஆசிரியர்

Rev. Dr. A. சேவியர் B.Sc., M.A, (Theology), D.D.

(சுவிசேஷகர், போதகர், எழுத்தாளர்)

2016

(மறு பதிப்பு)

வெளியீடு

"கடைசிகால விடுதலை ஊழியம் டிரஸ்ட்"

எண். 3, 27வது தெரு, சிவசக்தி நகர்,

சி-பிரிவு, அண்ணனூர், சென்னை - 600 109.

போன்: 044-26375758, 26841363

செல் : 9444979822, 9444873848, 9444184648

facebook:- endtimedeliveranceministry; youtube:- endtimetrust xavier

www.endtimedeliverance.com;

e-mail:-info@deliverance.com

**தெரிந்து கொள்ளுங்கள் - பாகம் 1**

First Edition : 2001
Second Edition : 2008
Third Edition : 2016
Total Copies : 1000
Book Serial No : 2/13

**Copy right :**

End Time Deliverance Ministry Trust

காணிக்கை : ₹ 90/-

**Printed by :**

**Saravan Printers**

New 91, Old 44, V.M. Street (Near BSNL Quarters)
Royapettah, Chennai - 600 014.
Email : saravanprinters@gmail.com

# முன்னுரை

## விசுவாசம் வெற்றியைத் தரும்

பவுல் அப்போஸ்தலன் கூட, தான் முற்றும் கற்றுத் தேர்ந்தவனில்லை என்று சொல்லும்போது, வேதத்தை முழுமையாய் அறிந்து கொண்டவர்கள் ஒருவருமில்லை என்று திட்டமும் தெளிவுமாய் நாம் சொல்ல முடியும். ஆனாலும், நம்மிடமுள்ள அறியாமை மாறி, தேவனைப் பற்றி அறிகிற அறிவிலே பெருக வேண்டும் என்று விரும்புகிற நம் தேவன், அடியேனுக்குத் தெரியப்படுத்தியதை நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையால் இப்புத்தகத்தை சமர்ப்பிக்கின்றேன்.

*வாசியுங்கள் ! விசுவாசியுங்கள் !*

*ஆசீர்வாதம் பெறுங்கள் !*

*இயேசு சீக்கிரம் வருகிறார் !*

*ஆயத்தமாவோம் !! ஆயத்தமாக்குவோம் !!!*

- **ஆசிரியர்**

சென்னை
ஜுலை 2016

**குறிப்பு :**

இது குறித்து எந்த சந்தேகமோ, கேள்வியோ இருந்தால், தயவுசெய்து ஆசிரியரிடம் எப்போதும் கேட்கலாம்; அவர் நடத்தும் கூட்டங்களில் கேள்விகளோடு வரலாம்; மாத இதழுக்கும் எழுதி அனுப்பலாம்.

# பொருளடக்கம்

## பாகம் - 1


| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1) | அதிகாரமும் வல்லமையும் | 87 |
| 2) | அந்தி கிறிஸ்துவின் முத்திரை என்ன? | 243 |
| 3) | அந்நிய பாஷையா? அடையாளமா? | 49 |
| 4) | அற்புதமும், அக்கிரமச் செய்கையும் | 91 |
| 5) | ஆபிரகாம் தன் ஜாதியில்தான் பெண் எடுத்தானா? | 155 |
| 6) | ஆயிர வருட அரசாட்சி | 139 |
| 7) | ஆயிர வருட அரசாட்சி எங்கே நடக்கும்? | 204 |
| 8) | ஆவி - உயிர் - ஆத்மா | 9 |
| 9) | ஆவிகளை பகுத்தறிவது எப்படி? | 250 |
| 10) | ஆவிக்குரிய யுத்தம் என்றால் என்ன? | 247 |
| 11) | இரண்டாம் மரணம் என்றால் என்ன? | 255 |
| 12) | இரண்டு ஊதுதல் | 217 |
| 13) | இயேசுவின் இரகசிய வருகை | 16 |
| 14) | இயேசுவின் இரத்தம் விலையேறப் பெற்றதா? | 152 |
| 15) | இயேசு டிசம்பரில் பிறக்கவில்லை | 116 |
| 16) | இஸ்ரேல் ராஜ்யம் இரண்டாய் உடைந்தது ஏன்? | 164 |
| 17) | ஈசோப்பினால் சுத்திகரிப்பு | 129 |
| 18) | ஈஸ்டர் பண்டிகை எப்படி வந்தது? | 74 |
| 19) | உபவாசம் பற்றி... | 257 |
| 20) | உன் பாவங்களை விட முடியாது | 123 |
| 21) | ஊழியம் செய்ய எங்கே போக வேண்டும்? எப்போது போக வேண்டும்? | 174 |

| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 22) | ஊழியம் யாரோடு இணைந்து செய்யலாம்? | 144 |
| 23) | எது கெட்ட வார்த்தை? | 120 |
| 24) | எது சபை? | 131 |
| 25) | எது புதிய ஏற்பாட்டுப் பிரமாணம்? | 88 |
| 26) | எலியாவின் ஆவி எலிசாவுக்கா? | 130 |
| 27) | எல்லாக் குழந்தையும் கர்த்தரின் சுதந்திரமா? | 95 |
| 28) | ஓய்வு நாள் ஆசரிப்பு எப்போது வந்தது? ஏன் வந்தது? | 178 |
| 29) | கனி கொடுப்பது எப்படி? | 89 |
| 30) | **கடைசி கால இரகசியங்கள்** | |
| | இயேசு சொல்லும் இரகசியம் | 48 |
| | பவுல் சொல்லும் இரகசியங்கள் No. 1 | 33 |
| | பவுல் சொல்லும் இரகசியங்கள் No. 2 | 36 |
| | பவுல் சொல்லும் இரகசியங்கள் No. 3 | 38 |
| | பவுல் சொல்லும் இரகசியங்கள் No. 4 | 39 |
| | பவுல் சொல்லும் இரகசியங்கள் No. 5 | 41 |
| | பவுல் சொல்லும் இரகசியங்கள் No. 6 | 43 |
| | பவுல் சொல்லும் இரகசியங்கள் No. 7 | 44 |
| | யோவான் சொல்லும் இரகசியங்கள் No. 1 | 46 |
| | யோவான் சொல்லும் இரகசியங்கள் No. 2 | 47 |
| 31) | கடைசி காலம் எது? | 170 |
| 32) | கண்களை பிசாசும் திறக்க வைக்கும் | 126 |
| 33) | கர்ப்பத்தை தேவன் அடைப்பாரா? | 146 |
| 34) | கள்ள உபதேசங்கள் - வசன விளக்கம் | 259 |
| 35) | கிறிஸ்தவன் ஆசரிக்க வேண்டிய பண்டிகை கிறிஸ்மஸ்ஸா? | 191 |

| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 36) | கிறிஸ்துவாகிய மேசியா என்கிற தேவகுமாரன்தான் பிதாவா? | 194 |
| 37) | கிறிஸ்துவின் சபையில் தசமபாகம் | 97 |
| 38) | ஞானஸ்நானம் யார்? எப்போது? ஏன் பெற வேண்டும்? | 198 |
| 39) | ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளா? | 163 |
| 40) | சபை மேய்ப்பர்கள் எப்படி இருக்க வேண்டும்? | 241 |
| 41) | சமாரியர் தாழ்த்தப்பட்டவரா? | 148 |
| 42) | சாத்தானின் திரித்துவம் | 72 |
| 43) | சாம்பல் புதனும், லெந்து நாட்களும் | 84 |
| 44) | சாஸ்திரிகள், ஜோசியர்கள், சூனியக்காரர்கள், கல்தேயர் என்போர் யளார்? | 169 |
| 45) | சிலுவையை எடுத்துக் கொண்டு செல்வது எப்படி? | 86 |
| 46) | சுவிசேஷங்கள் பலவிதம் | 106 |
| 47) | தசமபாகம் யாருக்கு கொடுக்க வேண்டும்? | 185 |
| 48) | தேவ சித்தத்தை அறிவது எப்படி? | 219 |
| 49) | தேவனின் மன்னிப்பும் மனிதனின் மன்னிப்பும் | 128 |
| 50) | தேவனின் முன்னறிதல், முன்குறித்தல், தெரிந்து கொள்ளுதல் | 102 |
| 51) | தேவனுக்கு கோபம் வருமா? | 183 |
| 52) | நகையணிதல் புறஜாதிகள் வழக்கமா? | 236 |
| 53) | நம் தேவனுக்கு பெயர் உண்டா? | 207 |
| 54) | நரகமா? பாதாளமா? | 81 |
| 55) | நான்கு விதமான சுவிசேஷங்கள் | 109 |
| 56) | நாம் ஏழையாயிருப்பது தேவசித்தமா? | 225 |
| 57) | நியாயத்தீர்ப்பு சரீரப் பாவத்திற்கா? | 100 |

| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 58) | நீதிமானின் எலும்புகள் முறிக்கப்படுமா? | 158 |
| 59) | பண்டிகைகள் தேவையா? | 76 |
| 60) | பத்துக் கற்பனை யாருக்கு? | 113 |
| 61) | பரிசுத்த ஜாதியாவது எப்படி? | 23 |
| 62) | பலிகளைப்பற்றி தெரிந்து கொள்ளுங்கள் | 230 |
| 63) | பழைய ஏற்பாட்டில் இயேசு இருந்தாரா? | 167 |
| 64) | பழைய ஏற்பாட்டுப் பண்டிகைகள் நமக்கு சொல்லும் உண்மைகள் | 234 |
| 65) | பாபிலோனியக் கொள்கை | 160 |
| 66) | பாவமன்னிப்பிற்கு இரத்தம் சிந்த வேண்டுமா? | 125 |
| 67) | பிசாசு யார்? | 69 |
| 68) | பிதா - இயேசு - பரிசுத்த ஆவி | 26 |
| 69) | பிலேயாமின் வழியும், சத்தியமும் | 104 |
| 70) | புளித்தமாவும், ஸ்திரீயும், மூன்றுபடி மாவும் | 223 |
| 71) | பூ வைக்கலாமா? பொட்டு வைக்கலாமா? நகை போடலாமா? | 187 |
| 72) | பூமியின் மூன்று காலங்கள் | 112 |
| 73) | பெரிய பாவம்... சின்ன பாவம் | 118 |
| 74) | பைபிள் வரலாறு | 201 |
| 75) | மரியாளின் வார்த்தையை கேட்பவனே கிறிஸ்தவன் | 156 |
| 76) | மறுபடியும் பூமி எப்போது அதிரும் | 166 |
| 77) | மீதமானவர்கள் யார்? | 181 |
| 78) | முக்காடு ஏன் போட வேண்டும்? | 151 |

| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 79) | முதலாம் உயிர்த்தெழுதல் | 253 |
| 80) | முத்தங்கள் பலவிதம் | 121 |
| 81) | யாக்கோபின் இக்கட்டு காலம் | 209 |
| 82) | யூத ராஜ்யமும், இஸ்ரவேல் ராஜ்யமும் | 150 |
| 83) | யோசேப்புக்கு இயேசு ஏன் பிறக்கவில்லை? | 115 |
| 84) | வரப்போகும் அந்திக்கிறிஸ்து | 211 |
| 85) | வாக்குத்தத்தம் வேறு, ஆசீர்வாதம் வேறு! | 117 |
| 86) | வாரத்தின் முதலாம் நாள்தான் அப்பம் பிட்க வேண்டுமா? | 245 |
| 87) | விருத்தசேதனம் | 75 |
| 88) | வேதம் சொல்லும் பாலியல் | 135 |


## ஆசிரியரின் நூல்கள்

- தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் I)
- தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் II)
- கருகலான சத்தியம் (பாகம் I)
- கருகலான சத்தியம் (பாகம் II)
- விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்! (பாகம் I & II)
- வியாதியா?! மரணமா?!
- கதைகள் அறுபது
- சிறுவர் வேதாகமப்பள்ளி (கதையும் பாடலும்)
- வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்
- "இஸ்லாமியர்களின் கேள்விகள்"
- "உங்களுக்குத் தெரியுமா?"
- கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்

# ஆவி – உயிர் – ஆத்மா

இன்றைய கிறிஸ்தவ உலகத்திலே ஆவி - உயிர் - ஆத்துமா போன்றவைகளுக்கான முழுக்கருத்தும் பலருக்குத் தெரியாததினால், தங்களுக்கு தோன்றியபடியெல்லாம் விளக்கங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தேவத்துவத்தின் அடிப்படையை, வேதத்தின் மூலத்தை அப்பழுக்கு இல்லாமல் ஒரு கிறிஸ்தவன் அறிய முனைவானானால் அவன் நிச்சயம் அந்த மூன்றை பற்றியும் முழுமையாக அறிந்திருக்க வேண்டும். நானும் அப்படித்தான் இருந்தேன், தேவ ஆவியானவர் எனக்குச் சொல்லிக் கொடுத்ததை உங்களுக்குச் சொல்ல வாஞ்சிக்கிறேன்.

தேவன் மனிதனைப் படைத்தார். எப்படிப் படைத்தார்? தம்முடைய சாயலின் படியும் ரூபத்தின்படியும் படைத்தார். மனிதனை ஆணாக மட்டும்தான் படைத்தாரா? இல்லை... இல்லை... ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார். ஆதி 1:26,27 சொல்லுவதும் இதுதானே! தேவனுடைய ரூபம் தான் மனிதனின் ரூபம் என்றால், இப்போது நாம் காண்கின்ற ஆணின் ரூபம்தான் தேவனின் ரூபமா? அல்லது பெண்ணின் ரூபம்தான் தேவனின் ரூபமா? தேவனின் ரூபம் ஆணின் ரூபம் போலும், பெண்ணின் ரூபம் போலும் இருக்கின்றது என்றால் நாம் காணுகின்ற மாமிசப் பிரகாரமான ஆணின் ரூபத்தையும் பெண்ணின் ரூபத்தையும் குறிக்காது. ஏனெனில் இவை இரண்டும் வித்தியாசமாய் இருக்கின்றனவே. இப்படியே தேவனுக்கு மனிதரூபம் என்றால் சிவன், பாதி ஆணாகவும், பாதி பெண்ணாகவும் இருப்பது போல தேவனின் நிலையாகிவிடுமே! இரண்டு கண், இரண்டு காது, வாய், மூக்கு, கை, கால் உள்ள இப்படிப்பட்ட ரூபம்தான் தேவனின் ரூபம் என்றால், தேவன் மனிதனைப் போல, முன் பக்கமுள்ள மக்களைப் பார்க்கும்போது, பின்னாலுள்ள மக்களைப் பார்க்க முடியாதே! அமெரிக்காவை காண்கிறவர் ஆஸ்திரேலியாவைக் காணமுடியாதே! அதனால்தான் முருகனுக்கு ஆறுமுகங்கள் உள்ளனவோ? எனவே, தேவனின் ரூபம் இது அல்ல. ஆனால் ஆணுக்கும் பெண்ணுக்கும் தன் ரூபத்தையே கொடுத்து உள்ளார் எப்படி?

தேவன் மனிதனை மண்ணினாலே உருவாக்கினார் (ஆதி 2:7) God formed Man, Not Created Man. சிருஷ்டிப்பு என்றால்

ஒன்றுமில்லாமையிலிருந்து படைப்பது (Created). உண்டாக்குவது (Made-formed) என்றால் ஏதோ ஒன்றிலிருந்து உண்டாக்குவது. தன்னுடைய ரூபமும் சாயலும், ஒன்றுமில்லாமையிலிருந்து சிருஷ்டித்த மனுஷனாகிய ஆணுக்கும் பெண்ணுக்கும் மட்டுமே தந்தார். மண்ணினால் உண்டாக்கப்பட்டதற்கு அல்ல. ஆதி 3:19ன் படி மண்ணுக்கு திரும்ப வேண்டிய, மண்ணிலிருந்து வந்த இந்த சரீரத்தின் ரூபம் தேவரூபம் அல்ல என்று புரிகிறதல்லவவா? பிலி. 2:6-8 வசனங்களை பார்த்தால், தேவனுடைய ரூபம் வேறு. சரீரப் பிரகாரமான மனுஷரூபம் வேறு என அறியலாம்.

தேவன் தன்னுடைய ரூபத்தை ஒன்றுமில்லாமையிலிருந்து சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனுக்குக் கொடுத்திருக்கிறார். யார் அந்த மனுஷன்? தேவன் மண்ணிலிருந்து ஒரு மனுஷனையும், ஒன்றுமில்லாமையிலிருந்து ஒரு மனுஷனையும் இரண்டு பேரை படைத்தாரா? இல்லையே! ஒன்றையல்லவா படைத்தார். (மல். 2:15)

மனிதனுக்குள்ளேயே உள்ளான மனுஷன், புறம்பான மனுஷன் என்ற இரண்டு இருக்கின்றது என்று வேதம் சொல்கிறதல்லவா? (2 கொரி. 4:16; யோபு 32:8). இந்தப் புறம்பான மனுஷன் தான் மண்ணினால் உண்டாக்கப்பட்ட சரீரமான மனுஷரூபம். உள்ளான மனுஷன்தான், தேவன் தன் ரூபத்தின்படியேயும், சாயலின்படியேயும், சிருஷ்டித்த ஆவி ஆத்துமா என்பது. எப்படி அந்த உள்ளான மனுஷனை ஆவி, ஆத்துமா என்று சொல்கின்றோம்? யோபு 12:10 34:14 சங். 32:2; 1கொரி. 14:14; யோ. 19:30; பிர. 12:7 போன்ற எத்தனையோ வசனங்களின்படி மனுஷனுக்கு ஆவி என்ற ஒன்று இருக்கின்றது என்று அறிகிறோம்.

சங் 63:1; 42:1; சங். 103:1,2, 3யோ. 2; மத். 10:22; லூக். 12:20 போன்ற எத்தனையோ வசனங்களின்படி மனுஷனுக்கு ஆத்துமா என்ற ஒன்று இருக்கின்றது என்று அறிகிறோம். 1தெச. 5:23 மனுஷனுக்கு ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று உள்ளது என்று அறிவிக்கிறது. சரீரத்தைப் பார்க்கிறோம். ஆவியையும், ஆத்துமாவையும் பார்க்க முடியாது. ஆனால் நமக்குள் இருக்கின்றது என்று அறிகிறோம். இதைத் தான் தேவன் தம்சாயலாய் சிருஷ்டித்தார். ஆதாம், ஏவாளுக்குப் பின் தேவசாயலான மனுஷன் பாவசாயலானான். இதை மறுபடியும் ஜெநிப்பிக்கத்தான் கிறிஸ்து இயேசு மனுஷரூபம் எடுத்து வந்தார். அல்லேலூயா! அவரால் தேவ சாயலாய் சிருஷ்டிக்கப்பட்டு மறுபடியும் பிறந்திருக்கிறோம்.

எபி. 4:12ன்படி இந்த ஆவியும், ஆத்துமாவும் ஒன்றோடொன்று பிணைந்துள்ளது என்று அறிகிறோம். இந்தப் பிணைந்துள்ள ஆவி,

ஆத்துமா தான் உள்ளான மனுஷன். பேதுரு சொல்கிறார்: **"நமக்கு கூடாரம் உண்டு!"** என்கிறார். அதாவது TABERNACLE. அதிலே

- **பிரகாரம்**
- **பரிசுத்தஸ்தலம்**
- **மகாபரிசுத்த ஸ்தலம்**

என மூன்று உண்டு. "நான் என் கூடாரத்தை விட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து, இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும்" (2பேது 1:13,14). **யார் இந்த நான்?** "தேகத்தை விட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசை உண்டு... நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்" (பிலி 1:23,24). **யார் அந்த நான்?**

இவன் தான் உள்ளான மனுஷன். இவன்தான் ஆவி, ஆத்மா. இவன்தான் ஆரம்பத்தில் தேவசாயலாகவும், தேவனின் ரூபத்தின்படியும் சிருஷ்டிக்கப்பட்டவன். இவன்தான் சரீரத்தை விட்டு தேவனிடம் போகின்றான் என்று பிர. 12:7, 2கொரி 12:2,3; லூக். 12:20 போன்ற வசனங்கள் சாட்சியிடுகின்றன, இந்த உள்ளான மனுஷனும், புறம்பான மனுஷனாகிய சரீரமும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதற்குத்தான், தேவன் மனுஷனின் நாசியில் ஜீவசுவாசத்தை ஊதினார். ஜீவசுவாசம் என்பது சுவாசம் மட்டுமல்ல... ஜீவனுள்ள, ஆதி. 1:26, 27ல் சிருஷ்டித்த ஆவி-ஆத்மாவோடு, சுவாசத்தை இணைத்து, ஜீவசுவாசமாய் ஊதினார் என்று அறிகிறோம். இதுபோல் எந்த ஜீவராசிகளுக்கும் தேவன் ஊதவில்லை. இப்படி ஊதப்பட்ட சுவாசத்தினால் தான் மனுஷனுக்கு உயிர் வந்தது. மனிதன் உயிர் உள்ளவனானான். யோபு 33:4, ஆதி. 2:7ஐப் பிரதிபலித்து இதை நமக்குச் சொல்லுகிறதல்லவா! **"சர்வ வல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர் கொடுத்தது" - யோபு 33:4.**

"In whose hand is the soul of every living thing and the breath of all mankind" - யோபு 12:10.

"நீர் உமது முகத்தை மறைக்க திகைக்கும். நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக் கொள்ள அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும்" - சங். 104:29

"Behold I will cause breath to enter into you and ye shall live" - எசே. 37:5

தானி. 5:23; அப் 17:25 போன்ற அநேக வசனங்களால் தேவனின் ஜீவசுவாசத்தால் தான் உயிர் என்ற ஒன்று ஜீவராசிகளுக்குக்

கிடைக்கிறது என்று தெள்ளத் தெளிவாக அறிகிறோம். தேவன் சுவாசத்தைக் கொடுக்கிறார், உயிர் வருகிறது. இந்த உயிர் என்பது உள்ளான மனுஷனுக்கும் வருகிறது, புறம்பான மனுஷனுக்கும் வருகிறது. புறம்பான மனுஷனாகிய சரீரத்திற்கு உயிர் எங்கே இருக்கின்றது என்று பார்ப்போம்.

லேவி. 17:4-11; ஆதி. 9:4 போன்ற வசனங்களின்படி புறம்பான மனுஷனாகிய மாமிசத்தின் உயிர் இரத்தம்தான். அதனால்தான் உயிருள்ள ஜீவராசிகள் அனைத்திற்கும் இரத்தம் இருக்கிறது. இரத்தம் சிந்தப்பட்டால் உயிர் போகின்றது என்று அர்த்தம். நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் தன் விலையேறப் பெற்ற ரத்தத்தை சிந்தி நம்மை மீட்டு எடுத்தார் என்றால், தன் உயிரையே கொடுத்து இரட்சித்தார் என்று பொருள் அல்லவா! அல்லேலூயா! அதனால்தானே உயிர்போகிற நிலையில் இருப்போருக்கு, உயிர் கொடுக்க இரத்ததானம் வழங்கப்படுகிறது! இந்த இரத்தமாகிய உயிரும் தேவனின் சுவாசத்தால் தான் இயங்குகின்றது. அதனால் தான் இரத்தம் சரீரத்தில் செலுத்தப்படும்போது சுவாசம் இருக்கிறதா நாடித்துடிப்பு இருக்கிறதா என்று பரிசோதிக்கிறார்கள், நாடித்துடிப்பு இல்லை என்று தெரிந்தபோது, சுவாசத்தை மீண்டும் பெற்றிட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மனிதன் மரித்துவிட்டான் எள்பதை சுவாசத்தை வைத்துத்தான் கணிக்கப்படுகிறது.

இந்த சுவாசம்தான் ஜீவராசிகளுக்கு உயிரைக் கொடுக்கிறது; இரத்த ஓட்டத்திற்கு வழிவகுத்து ஜீவாத்துமாவாக வைக்கிறது. இயேசு கிறிஸ்து மரித்துவிட்டாரா என்று கண்டுபிடிக்க அவரின் விலாவை ஈட்டியினால் போர்ச் சேவகன் குத்தினான். **உடனே இரத்தமும், தண்ணீரும் புறப்பட்டது (யோ 19:34)** புறம்பான மனுஷனாகிய அவர் சரீரம் உயிரற்றுப் போயிற்று. கர்த்தருக்கு தோத்திரம்; அதனாலே எனக்கு இரட்சிப்பு வந்தது; உனக்கு இரட்சிப்பு வந்தது.

இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்று வேதவாக்கியம் கூறுகிறதல்லவா? அதாவது, இரத்தமாகிய உயிர் கொடுக்காமல் பாவமன்னிப்பு இல்லை. இதனால்தானே ஒருவன் செய்த - இரத்தம் சிந்திய - உயிர் பறித்த பாவத்திற்கு பரிகாரமாய் அவனுடைய உயிரை - இரத்தத்தை மாய்க்க வேண்டும் என்று உலக நீதிமன்ற சட்டமே இருக்கின்றது. இந்த உயிர், சர்வ வல்லவரின் சுவாசம் கொடுத்தது. ஆமென், மனிதனோ ஜீவராசியோ மரித்தபின் அவன் உயிர் அதாவது இரத்தம் என்ன ஆயிற்று? ஒன்றுமில்லாமல், மண்ணால் உண்டாக்கப்பட்ட சரீரத்தோடு மண்ணாகிப் போனது. ஜீவசுவாசம் தேவனுடையது அது தேவனிடமே இருக்கும். (சுவாசம் என்பது மூச்சு-

Breath-என்றும், ஜீவசுவாசம் என்பது, ஆவி, ஆத்மாவோடு இணைந்த ஜீவன் என்றும் அறிக).

புறம்பான மனுஷனுக்கு இப்படி என்றால், உள்ளான மனுஷனாகிய ஆவி - ஆத்துமாவுக்கும் உயிர் உண்டல்லவா? உண்டு. இந்த உயிரும் ஆதி. 2:7ன்படி தேவனின் சுவாசத்தால் தான் வருகின்றது. உள்ளான மனுஷனின் உயிர் எது? எங்கே இருக்கிறது?

**"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்"- யோ. 14:6.**

**"நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" யோ. 10:10.**

இது போன்ற பல வசனங்களின்படி நாம் அறிந்து கொள்வது கர்த்தராகிய இயேசுவே ஜீவன்; அவரே உயிர்.

அதனால் தான், **"சின்னஞ்சிறு வயதில் என்னைத் தெரிந்து கொண்டார் தூரம் போயினும் கண்டு கொண்டார் தமது ஜீவனை எனக்கும் அளித்து ஜீவன் பெற்றுக் கொள் என்றுரைத்தார்"** என்று நாம் பாடுகின்றோம். எதற்கு ஜீவன் அளித்தார்? புறம்பான சரீரமாகிய மனுஷனுக்கா? இல்லையே! அவன் தான் உயிரோடு இருக்கிறானே. பின்னே எதற்கு? உள்ளான, ஆவி - ஆத்மாவாகிய மனுஷனுக்கே. ஏன்? தேவன் படைக்கும்போது தமது ஜீவசுவாசத்தால் உள்ளான மனுஷனுக்கும் ஜீவன் தந்து விட்டார். ஆனால் ஆதாமின் பாவத்தினால், ஆதி. 2:17ன் படி அந்த ஜீவன் மரித்துப் போனது. நமக்கும் அப்படியே. எபே. 2:1 மற்றும் 5ன்படி நமது உள்ளான மனுஷன் மரித்துப் போயிருந்தான். பாவங்களினால் உள்ளான மனிதனிலுள்ள ஆவியும் ஆத்மாவும் இரண்டுமே மரித்து விட்டதா? மரணம் என்பது Cessation of Communication, புறம்பான மனுஷனுக்கு தொடர்பு உலகத்தோடு என்றால், உள்ளான மனுஷனுக்கு Communication உலகம் அல்லாததோடு. தேவன் ஆவியாயிருப்பதால் அவரோடு ஆவிதான் தொடர்பு வைக்கும். தொடர்பு இல்லையென்றால் அவரோடு ஆவிதான் மரித்தது என்று பொருள். ஆத்மா எப்போதுமே ஆவியைக் கொண்டோ சரீரத்தைக் கொண்டோ ஜீவிக்கும். **கிறிஸ்து இயேசு தமது ஜீவனை மரித்துப்போன உள்ளான மனுஷனுக்கு உயிராய் கொடுத்தார் ஜீவன் தந்தார், ஏசுவே அந்த ஜீவன் இப்போது நமது உள்ளான மனுஷனும் ஜீவிக்கிற ஆத்மாவானான்!** அல்லேலூயா! (Compare with யோ. 20:22).

புறம்பான மனுஷன் மரித்தபின் - அதாவது ஜீவசுவாசத்தினால் வந்த உயிர் மரித்தபின் - அப்படியே கிடப்பான். There is no action.

அப்படியே உள்ளான மனுஷன் மரித்தபின் அதாவது கிறிஸ்துவின் ஜீவன் இல்லாதபோது அவனும் அப்படியேதான் கிடப்பான். ஆனால் ஒரு வித்தியாசம் பாருங்கள். மண்ணிலிருந்து உண்டான மனுஷன் மரித்ததும் பூமிக்குரிய action இராது. பரலோகத்துக்குரிய கிரியை இருக்குமா? இருக்காது. ஏனெனில் பரலோகத்துக்குரிய கிரியைகளோடு தொடர்பு கொள்ள வேண்டிய உள்ளான மனுஷன் உடன் இல்லை. அவன் தன்னைத் தந்த தேவனிடம் போகிறான். ஆனால் உள்ளான மனுஷன் மட்டும் மரித்துப் போனால் பரலோகத்துக்குரிய தொடர்புகள் மட்டும் தான் சரீரத்திற்கு இல்லாமல் போகும். பூமிக்குரிய தொடர்புகள் இருக்கும். எப்படியெனில் பூமிக்குரிய தொடர்புகளோடு கிரியை செய்யக்கூடிய புறம்பான மனுஷன் உயிருடன் இருக்கிறான் அல்லவா! அதாவது, ஆவியும் - ஆத்மாவும் சரீரத்திற்கு அடிமையாகி, சரீரத்தின் ஆளுகைக்கு உள்ளாகிவிட்டது. தேவன் மனிதனுக்கு ஆவியைச் சிருஷ்டித்ததே அவரோடு தொடர்பு கொள்ளத்தான். ஏனென்றால் தேவன் ஆவியாயிருக்கிறார். மனிதனும் அவர் சாயலில் ரூபத்தில் இருக்க வேண்டும் என்பதால், ஆவியை படைத்தருளினார். ஒரு ஆவிதான் இன்னொரு ஆவியோடு தொடர்பு கொள்ள முடியும் தன்னுடைய ஆவியின் நிலைமை அழியாமலே. இது விஞ்ஞான உலகம் ஒத்துக் கொள்ளக்கூடியது. மனிதனின் ஆவி தேவனின் பரிசுத்த, ஆவியோடு தொடர்பு கொள்ள முடியும். எப்போது? அந்த ஆவிக்கு ஜீவன் இருக்கும்போது அதாவது ஜீவனாகிய உயிராகிய கிறிஸ்து இருக்கும்போது. அஃது இல்லாத பட்சத்தில், மனிதனுடைய ஆவி, சரீர மனுஷனின் ஆளுகைக்கு உட்படுவதால், பரிசுத்த ஆவிக்கு பதிலாக, அசுத்த ஆவியோடு தொடர்பு கொள்ளும். பிசாசின் ஆவியால் இது நடக்கிறது. முடிவு நரகமாகிவிடும். எனவே தான் தேவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை, ஜீவன் பரிபூரணப்படவும் தந்தருளினார். கர்த்தருக்கே தோத்திரம். புறம்பான மனுஷன் மண்ணிலிருந்து வந்ததால் மண்ணுக்கு போகிறான். இந்த மண்ணும் ஒரு நாளில் அழிந்து போகும். ஆனால் உள்ளான மனுஷனை தேவனே சிருஷ்டித்ததால் சுவாசம் போனவுடனே அது தன்னைத் தந்த தேவனிடம் போகிறது. (பிர. 12:7) அங்கே அதன் தகுதிக்கேற்ப பரதீசுக்கோ, பாதாளத்திற்கோ தள்ளப்பட்டு காக்கப்படும். பரதீசுக்குப் போனது இயேசுவின் இரண்டாம் வருகையின் போது உயிர்ப்பிக்கப்பட்டு மறுரூபமான சரீரத்தோடு இணைக்கப்பட்டு தேவனோடு வாழும். பாதாளத்திற்குப் போனதோ நியாயத்தீர்ப்பின் போது **(வெள்ளை சிங்காசனம்)** உயிர்ப்பிக்கப்பட்ட சரீரத்தோடு இணைக்கப்பட்டு, அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலாகிய நகரத்தில் தள்ளப்படும். தேவன் எப்படி நித்தியமானவரோ அப்படியே அவர் அழிக்கும் வரை நித்தியமாய் இருக்கும். ஆவி - ஆத்மா என்ற உள்ளான மனுஷன் என்றென்றும் இருப்பான்.

உள்ளான மனுஷனில் இரண்டு பிரிவுகள் இருப்பதாய் அறிந்தோம். அதிலே ஆவி என்பது தேவனோடு தொடர்பு கொள்ளவும், தேவ மனசாட்சியோடு இருக்கவும், தேவ காரியங்களை அறிந்து கொள்ளவும் சிருஷ்டிக்கப்பட்டது என்றும் அறிந்தோம்.

**"But there is a spirit in man; and the inspiration of the Almighty giveth understanding" - யோபு 32:8.**

"The spirit of the man is the lamp of the Lord, searching all the inward parts" - நீதி. 20:27

**"For thou will light my lamp, the Lord my God will lighten my darkness"- சங். 18:28** போன்ற வசனங்கள் இதை உறுதிபடுத்துகின்றன.

மத். 11:29, 26:38; யோ. 12:27; உபா. 6:5; 1சாமு. 18:1; யோபு 14:23; சங். 42:6, 84:2; நீதி. 24:14, 2:10 போன்ற வசனங்களின்படி **ஆத்மா என்பது அன்பு, விருப்பம், உணர்ச்சி, திடமனம், சிந்தனை போன்றவைகளின் ஸ்தானமாயிருக்கிறது.** தேவனின் ஜீவன் இருக்கும்வரை இந்த ஸ்தானம் தேவனுக்கு நேராய் இருக்கும். ஆதாமின் செயல்களைப் போலானால், இது பிசாசுக்கு நேராய்ப் போய்விடும். இந்த ஆத்மா, தேவனுக்கு நேராய் இருக்க வேண்டுமானால் உள்ளான மனுஷன் உயிருள்ளவனாய் இருக்க வேண்டும் (Refer மத். 8:22; எபே. 5:14). அதாவது தேவனோடே தொடர்பு கொள்ள வேண்டும் என்பதற்காய் சிருஷ்டிக்கப்பட்ட ஆவி ஜீவனுள்ளதாய் இருக்க வேண்டும். அப்போதுதான் மனுஷனின் ஆவி, தேவ ஆவியோடு பேசிப் பழகி பல கருத்துக்களை அறிவுரைகளை ஆத்மாவிற்குச் சொல்லும், ஆத்மா அதன்படி சரீரத்தை இயக்கி செயல்படும். (சங் 103:1-3)

இதனால் தான் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஜெபம் பண்ணி முடித்தவுடனே, **"என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி"** என்று சொல்லுவார்கள். ஏன் என்று எப்போதாவது யோசித்திருக்கிறோமா? ஏதோ வழக்கமாகிவிட்டது. இதிலே யாரோ ஆத்மாவிற்கு 'தேவனை தோத்தரி' என்று கட்டளை கொடுக்கிறார்கள்! யார் அது? அதுதான் ஆவி. இதுவரை தேவனோடு தொடர்பு கொண்டு ஜெபித்த ஆவி (யோ. 4:24) இப்போது ஆத்மாவிற்கு கொடுக்கும் கட்டளைப்படி ஆத்மாவும் சரீரமும் செயல்படவேண்டும். இல்லையேல் ஆவியின் கட்டளைக்கு மதிப்பில்லை; தேவனிடம் ஆவி தொடர்பு கொண்டதற்குப் பலன் இல்லை. எனவே மனிதனுடைய இம்மூன்று பிரிவுகளுக்கும் அடிப்படையாய் ஆவி (Spirit) இருக்கிறதாய் அறிகிறோம். இந்த ஆவியைத்தான் வேதத்தில் பல இடங்களில்

'இருதயம்' என்றும், (1பேது. 3:4) ஒரு சில இடங்களில் 'உள்ளம்' என்றும் போடப்பட்டுள்ளது. (ஒரு சில இடங்களில் ஆவியை ஆத்மா என்றும் ஆத்மாவை ஆவி என்றும் தவறாய் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது) இப்படிப்பட்ட மனுஷனின் ஆவிதான், தேவன் தந்த தீபமாகிய ஆவிதான் முதலில் மரித்த நிலைமையை விட்டு, ஜீவனாகிய கிறிஸ்துவால் உயிர் பெற வேண்டும். இதுதான் ஒவ்வொரு மனுஷனும் பெற வேண்டிய ஆரம்ப ஆவியின் இரட்சிப்பு. ரோ. 10:9,10 வசனங்கள் இதைத்தான் விளக்குகின்றன. அதன் பிறகு இரட்சிக்கப்பட்ட ஆவியினாலே ரோ. 12:2ன்படி நாளுக்குநாள் மறுரூபமாகிய ஆத்ம இரட்சிப்பு அடையவேண்டும்.

*(குறிப்பு: பல இடங்களில் ஆத்மா Soul என்பது 'மனம்' என்றும், (1சாமு. 20:4) அறிவு என்றும் ஒரு சில இடங்களில் 'உள்ளம்' என்றும் வேதத்ததில் போடப்பட்டுள்ளது).*

இப்படி உள்ளான மனுஷன், ஜீவனாகிய கிறிஸ்துவோடு இருந்தால், ரோ. 8:23ன்படி புறம்பான மனுஷனின் முழு இரட்சிப்பு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமை பொருந்திய இரண்டாம் இரகசிய வருகையில் ஈடேறும். அல்லேலூயா!

நாமெல்லாரும் அதற்காய் ஜீவிப்போமாக! உள்ளான மனுஷன் நாளுக்கு நாள் புதிதாக்கப்பட செயல்படுவோமாக! புறம்பான மனுஷனுக்குரிய ஜீவனாகிய - உயிரைப் பற்றி நமக்கு கவலையில்லை.

**"நல்ல போர்ச் சேவகனாய் தீங்கடைய**
**நல்லதொரு போராட்டம் நடத்தியே**
**ஓட்டம் முடித்து நற்பரிசாம் நித்திய**
**ஜீவகிரீடம் பெற்றிடவே அழைக்கின்றார்"**

"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக! உங்கள் ஆவி ஆத்மா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாய் இருக்கும்படி காக்கப்படுவதாக" 1தெச. 5:23 Refer 2கொரி. 5:10.

❖ ❖ ❖

# இயேசுவின் இரகசிய வருகை

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காய் காத்திருக்கும் நமக்கு **"இரகசிய வருகையா? பகிரங்க வருகையா?"** என்பது பற்றி கவலையே இல்லை. எப்படியோ இயேசு வருவார் நாம் அவரோடு

செல்வோம். ஆனால் வருகையிலே கைவிடப்பட்டு, கண்ணீர் வெள்ளத்தில் மாளப்போகும் மக்களுக்கு இந்த உண்மை தேவையல்லவா!

**“இயேசு வருவார் மறுபடியும்”** என்று தேவ தூதர்கள் சொன்னார்கள் (அப். 1:11) அப்போஸ்தலர்கள் சொன்னார்கள் (1தெச. 4:16) இயேசுவே சொல்லிவிட்டுப் போனார் (யோ. 14:13) ஆக நிச்சயம் இயேசு இரண்டாம் முறை வரப்போகிறார். மூன்றாம் முறையும் பூமிக்கு வருவார் என்று ஓரிடத்திலும் வேதத்தில் சொல்லப்படவில்லை. எனவே அதைப்பற்றிய சிந்தனை நமக்கு வேண்டாம். இரண்டாம் முறை அதாவது மறுபடியும் இயேசு எதற்காய் வரப்போகிறார்?

1. சபையைக் கூட்டிக் கொண்டு போக (யோ. 14:3; 1 தெச. 4:14-18).
2. இஸ்ரேல் தேசத்தின் முழு இரட்சிப்பிற்காய் (ரோ. 11:25-27).
3. அந்தி கிறிஸ்துவை அழிக்க (2 தெச. 2:8).
4. புறஜாதிகளை நியாயந்தீர்க்க (மத். 25:31-31).
5. ஆயிர வருட அரசாட்சி அமைக்க (மத். 25; ஏசா. 24:23; சக. 14:9).
6. வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக் கொடுக்க (வெளி. 20:4).
7. புதிய வானம் புதிய பூமி அமைக்க (வெளி. 22).

இவையெல்லாம் இயேசுவின் இரண்டாம் வருகையிலேயே நடக்குமா? தேவன் வேதத்தில் பல காலங்களில் நடக்க வேண்டியவைகளை ஒரே தரிசனமாக சொல்லியிருக்கிறார். லூக்கா 1:31-33 வசனங்களைப் படிப்போமானால், மரியாளிடம் தேவ தூதன் சொன்ன காரியமும் இயேசுவின் முதல் வருகையிலும் இரண்டாம் வருகையிலும் நடக்கக்கூடியவை. தாவீதின் சிங்காசனத்தைக் கொடுப்பதும், அவர் யாக்கோபின் சந்ததியை அரசாளுவதும் முடிவில்லாத ராஜ்யம் ஸ்தாபிப்பதும் முதல் வருகையில் நடக்கவில்லையே! ஏசா. 61ம் அதிகாரத்தை இயேசு தேவாலயத்தில் வாசிக்கும் போது, முழுதரிசனங்களையும் வாசிக்காமல் முதலாம் வருகையிலே நடக்கக்கூடிய தரிசனத்தை மாத்திரமே வாசித்தார் என்று லூக். 4:17-20 வசனங்கள் தெரிவிக்கின்றன அல்லவா! அப்படியே 2சாமு. 7:8-16ல் சொல்லப்பட்ட தரிசனமும் முழுமையாய் நடக்காமல் இன்னும் மீதியிருக்கின்றது என்று அப். 15:17ன் மூலம் அறியலாம். எனவே இரண்டாம் வருகையின் தரிசனத்தில் மேலே சொன்ன எல்லாக் காரியங்களுமே நடக்கும் என்று சொல்லப்பட்டாலும், முதலில் நடப்பது சபையை கூட்டிக் கொண்டு போக இயேசு வருவதாகும்.

இந்த வருகையைத்தான் **"இரகசிய வருகை"** என்று சொல்கின்றோம். எப்படி?

1 கொரி. 15:51ல் பவுல் சொல்லும் காரியம் என்ன? 1 தெச. 4:16-18 வசனங்கள் சொல்வது என்ன? தேவன் எக்காள சத்தத்தோடு வருவார். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் பின்பு உயிரோடு இருக்கும் நாமும், மரணமடையாமலே எபி. 9:27க்கு மாறாய், ஏனோக்கைப் போல அவரோடு எடுத்துக் கொள்ளப்படுவோம்.

**கைவிடப்பட்டவர்களின் நிலை என்ன?**

அப். 1:11; சக. 14:4 போன்ற வசனங்களின்படி தேவன் ஒலிவ மலையில் கால் வைப்பார் அப்போது உலகத்திலுள்ள எல்லாருமே பயந்து நடுங்கி ஓடி ஒளிவார்கள். அவர் வாயிலிருந்து புறப்படும் பட்டயத்தால் மாண்டு போவார்கள் (வெளி. 19:11, 21:16, 15:16; மத். 24:30). வெளி. 6:15-17ம் இதையே உறுதிப்படுத்துகின்றது.

<u>முதலில் சொன்னது:</u> மேகங்கள் மேல் வருவார்; பரிசுத்தவான்களோடு பரலோகம் செல்வார்; பூமியில் இறங்கார்.

<u>இரண்டாவதாய் சொன்னது:</u> பரிசுத்தவான்களோடு மேகங்கள் மேல் வந்து ஒலிவமலையில் இறங்குவார்; உலகத்திலுள்ளோர் பயந்து நடுங்குவர். ஆக, இரண்டுமே இரண்டாம் வருகையில் உள்ளவை என்றாலும் முதலில் சொன்னதும், இரண்டாவதாய் சொன்னதும் வேறு வேறு என்று புரிகிறதா? முதலாவதாய் சொன்னபடி, தேவன் "தான் மட்டும்" வருவதை பூமியிலுள்ள கைவிடப்பட்டவர்கள் பார்க்கவில்லையே! பார்ப்பதாகவும் வசனம் இல்லையே! ஆனால் மத் 24:30 வெளி. 1:7 போன்ற வசனங்களின்படி பூமியிலுள்ளோர் எல்லாரும் பார்த்துப் புலம்புவார்கள் என்று உள்ளதே. நாம் அப்போது இருப்போமா? இருந்தால் நாமும் புலம்ப வேண்டுமே? தேவனைக் கண்டு ஆனந்த களிப்பு வருமா, புலம்பல் வருமா! ஆனந்தக் களிப்பு வருமென்றால் அந்த புலம்பல் கூட்டத்தில் நாம் இல்லை; அதற்கும் முன்பே நாம் பரலோகம் போய்விட்டோம் என்றுதானே பொருள்! எப்படிப்போனோம்? எப்போது போனோம்? பூமியில் உள்ளோர் எல்லாம் புலம்பும்படியாய் தேவன் எப்போது வருவார்?

மத். 24:29ன்படி மகா உபத்திரவத்திற்குப் பின் சூரியன் அந்தகாரப்பட்டு, சந்திரன் ஒளியைக் கொடாதிருந்து, நட்சத்திரங்கள் விழுந்து, வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்பட்ட பின்தானே பூமியிலுள்ளோர் எல்லாரும் கண்டு புலம்பும் அந்த வருகை! அந்த கால கட்டத்தில் மணவாட்டி சபையாகிய நாம் உலகில் இருப்போமா? இருந்தோமென்றால், மத். 24:29ன்படி சொல்லப்பட்ட காரியங்கள் ஒன்றும்

இன்னமும் நடக்காதபோதே, "இன்று இராத்திரியிலோ நாளையோ தேவன் வருவார்" என்று நாம் இப்போதே எப்படிச் சொல்லலாம்! உண்மை என்ன? தேவன் இன்று கூட வரலாம். ஆனால் ஒன்று... நாம் மகா உபத்திரவத்தையும் அதற்குப் பின் நடக்கும் காரியங்களையும் காணாமலே எடுத்துக் கொள்ளப்படுவோம். வெளி 3:10 லூக் 21:36 ஏசா 57:1 போன்ற வசனங்களை பாருங்கள். எனவே இரண்டாவதாய் சொல்லப்பட்ட வருகையின் போது நாம் இருக்கப்போவதில்லை கைவிடப்படுபவர்கள் முதலாவதாய் சொல்லப்பட்ட வருகையை பார்ப்பதாக வசனங்கள் இல்லை.

தேவனைப் பார்க்காவிட்டால், சத்தத்தையாவது உலகத்தார் கேட்டிருக்க மாட்டார்களா என்பது கேள்வி. இந்த மணவாட்டி சபையை எடுத்துக் கொள்ளப் போகும் வருகையில் மூன்று சத்தங்கள் சொல்லப்பட்டுள்ளன.

(1) **தேவனின் சத்தம்**

(2) **பிரதான தூதனின் சத்தம்**

(3) **தேவ எக்காளம்.**

1. **<u>தேவனின் சத்தம்:</u>** வெளிப்படுத்தின விசேஷம் முழுவதும் "காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்றே வசனங்கள் உள்ளனவே. காரணம் என்ன? காது எல்லோருக்கும் தானே உள்ளது. ஆனாலும் விசுவாசக்காதுள்ளவன் மட்டுமே கேட்பான். அப்படித்தான் அவிசுவாசக் காதுள்ளவன் இந்த சத்தத்தை கேட்கமாட்டான். **"கெம்பீரசத்தத்தை அறியும் ஜனங்கள் பாக்கியமுள்ளவர்கள்"** (சங். 89:15) என்ற வசனத்தின்படி தேவனின் ஆராவார சத்தத்தை பாக்கியமுள்ள ஜனங்களே அறிய முடியும். தேவனின் சத்தம், மரித்தவர்களும் கேட்கும் விநோதமான சத்தம் என்று யோவா 5:28-29 சொல்கிறது. இதை உறுதிப்படுத்தும்படியே இயேசு, மரித்த லாசருவின் கல்லறையின் முன் சத்தமிட்டு **"லாசருவே வெளியே வா"** என்றார் (யோவா 11:43) கல்லறையில் மரித்திருந்த எல்லோருமே எழும்பாமல் லாசரு மட்டுமே எழும்பி வந்தான் என்றால் அந்த சத்தத்தின் மகிமைதான் என்னே! பிதாவாகிய தேவன், மாம்சத்திலிருந்த இயேசுவோடு பேசின வார்த்தைகளை அருகிலிருந்த மக்களால் அறிந்து கொள்ள முடியவில்லை என்று யோவா 12:28,29 சொல்கிறது. அப் 9:7 22:9 26:14 வசனங்களின்படி **"சவுலே, சவுலே"** என்று தேவன் பேசியதை அருகிலிருந்தோர் அறியவில்லை. 1சாமு 3:7-8ன்படி, **"சாமுவேலே, சாமுவேலே"**

என்ற தேவனின் சத்தத்தை அருகிலிருந்த ஆசாரியன் ஏலி கூட அறியவில்லை. தேவனின் ஆரவார சத்தத்தை நாம் கேட்க ஆயத்தமாவோம் அல்லேலூயா!

2. <u>பிரதான தூதனின் சத்தம்:</u> தேவனோடு தேவ தூதர்கள் போர் வீரர்களைப் போல் வருகின்றனர். நாமெல்லாரும் மறுரூபமாகி வானமண்டலம் தாண்டி தேவனோடு சேர ஆயத்தமாகுகின்ற நேரம். வானமண்டலத்திலுள்ள பிசாசின் பொல்லாத சேனைகள் (எபே 6:12) நம் வழிக்குத் தடை பண்ணுகின்றன. அப்போதுதான் பிரதான தூதன் பிசாசோடு சண்டையிட்டு நமக்கு வழியை ஆயத்தப்படுத்துகின்றான். போர்க்களத்தில் இருந்த போர்வீரர்களுக்கு தெரியும் இந்த சத்தம் எவ்வளவு பலமாயிருக்குமென்று, தானியேலின் ஜெபத்திற்கு பதில்வரும் வழியிலும் (தானி 10:12-14) மோசேயின் சரீரம் சம்பந்தப்பட்ட வழக்கிலும் (யூதா 9) பிரதான தூதன் போரிட்டான் என்று அறிகிறோம். இந்த சண்டையும் சத்தமும் வான மண்டலத்திலே: அதுவும் ஆவிகளுக்குள்ளே. அது பூமியிலுள்ளவர்களுக்கு கேட்க வாய்ப்பில்லை.

3. <u>தேவ எக்காளம்:</u> அன்று இஸ்ரவேலரை அழைக்க எக்காளம் தான் ஊதப்படும் (எண் 10:2) நெகேமியா தேவாலயம் கட்டும்போதும் எக்காள சத்தம்தான் ஊதுவான். இஸ்ரவேலர் மட்டும் கூடுவார்கள். பள்ளிகளில் கூட Roll Callக்கு விசில் அடிக்கும்போது, கேட்ட மாணவர் மட்டுமே ஓடி வருவார்கள். அதுபோல நாம் எதிர்கொண்டு போக, எக்காளம் ஊதப்படுகின்றது. இது உலகப் பிரகாரமான எக்காளம் அல்ல. தேவ எக்காளம். தேவ எக்காளத்தை தேவ பிள்ளைகள், ஆவிக்குரிய மணவாட்டிகள் மட்டுமே கேட்பர், அல்லேலூயா! தேவ எக்காளம் எப்படி இருக்குமென்று ஒருவரும் அறிந்ததில்லை. எல்லோர் வீட்டிலும் ரேடியோ இருந்தாலும், அந்த ரேடியோ ஸ்டேஷனுக்கு ஏற்றபடி டியூன் பண்ணிய ரேடியோ மட்டுமே அந்த நிகழ்ச்சியை எடுக்கும்; மற்றவை எடுக்காது. அதுபோல் வருகைக்காய் காத்திருக்கும் மணவாட்டிக்குத்தான் அது கேட்கும். தாவரங்கள் கூட பசிக்கிறது என்று கதறுகிறதாம். விஞ்ஞானி கண்டுபிடித்து இருக்கிறார். அதன் குரலை கேட்கும் கருவிமூலம் பதிவு செய்து, தண்ணீர் வார்க்கிறார். தாவரத்தின் குரல் நமக்கு கேட்பதில்லையே!

1தெச 4:17ல் **"எடுத்துக் கொள்ளப்படும்"** என்பதற்கு **Caught up** என்ற வார்த்தை உள்ளது. இதே கிரேக்க பதம்தான் அப் 8:39;

மத் 13:19; யூதா 23; யோ 10:12 போன்ற வசனங்களில் உள்ளன. காந்தேகே மந்திரியை விட்டு, பிலிப்பு பிரிந்ததை அவன் காணவில்லையே! கண்டிருந்தால் இன்னும் கொஞ்சநேரம் இருங்கள் என்று சொல்லியிருப்பான். மந்திரிக்கே தெரியாமல் இரகசியமாய் எடுத்துக்கொள்ளப்பட்டான் பிலிப்பு. நாமும் உலகத்தாருக்கு தெரியாமல் இரகசியமாய் உலகத்தை விட்டு எடுத்துக் கொள்ளப்படுவோம். அப்படி எடுத்துக் கொள்ள இயேசு திருடனைப் போல, எப்போது வருவாரோ தெரியவில்லை; பிதாவே அறிவார்; நாம் ஆயத்தமாவோம்.

வேதம் கற்றுக் கொடுக்கிற உண்மை என்னவென்றால், பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும், புதிய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு நிழலாட்டம். அப்படியாய் நாம் பார்க்கும்போது, ஆபிரகாம் ஈசாக்காகிய மணவாளனுக்கு, ரெபேக்காளாகிய மணவாட்டியை பார்த்து அழைத்து வரும்படி, எலியேசருக்கு உத்தரவு கொடுத்தான். பரிசுத்த ஆவியானவர் எப்படி மணவாட்டி சபையை, யேசுவாகிய மணவாளனுக்காய் ஆயத்தப்படுத்துகின்றாரோ, அப்படியே! இதிலே, ஈசாக்கை, ரெபேக்காள் பார்த்ததில்லை. மணவாட்டியாகிய நாமும் இயேசுவைப் பார்த்ததில்லை. எலியேசர், எப்படி ஆபிரகாம் பரம்பரை பற்றி விசாரித்து, பெண்ணை தயார்படுத்தினாரோ, அப்படியே பரிசுத்த ஆவியானவரும், நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தி நம்மை ஆயத்தம் பண்ணுகிறார். மணவாட்டி மணவாளனை சந்திக்க போகும்போது, ஈசாக்கை ரெபேக்காளின் வீட்டாரோ ஊராரோ ஒருவரும் பார்க்கவில்லை. ரெபேக்காள் எலியேசரோடு வரும்போது, ஈசாக்கு, லகாய்ரோயீ என்னும் துரவு வழியாய் தியானம் பண்ண வந்தபோது தான் மணவாட்டியை பார்க்கிறான். மணவாளனும், மணவாட்டியும் அங்குதானே சந்திக்கிறார்கள். அதுபோல நாம், இயேசுவை வானத்திலே சந்திப்போம். நமது சந்திப்பு வேறு யாருக்கும் தெரியாது. இயேசுவின் மணவாட்டியோடு சேரும் இந்த வருகையும் ஒருவருக்கும் தெரியாது. மணவாட்டியோடு வராத மணவாட்டியின் ஊராருக்கும் தெரியாது. எல்லாம் இரகசியமே! அல்லேலூயா!

இயேசு கிறிஸ்து உயிர்தெழாவிட்டால் நமக்கு உயிர்த்தெழுதல் இல்லை. அப்படிப்பட்ட மகத்துவமான இயேசுவின் உயிர்தெழுதலை நேரில் பார்த்தவன் ஒருவனும் இல்லை ஒருவனாகிலும் இல்லை. **அவர் உயிர்த்தெழுந்தது ரகசியமே!** ஏன் இரகசியமாய் உயிர்த்தெழுந்தார்? முந்தி ஆதாமை, மரணத்துக்கு ஏதுவான அயர்ந்த நித்திரை பண்ணவைத்து, ஏவாளாகிய மணவாட்டியை உண்டாக்கியது, எப்படி பிந்தின ஆதாமாகிய கிறிஸ்து மரித்து மணவாட்டியாகிய கிறிஸ்தவ சபையை உண்டாக்கியதற்கு நிழலாட்டமாய் இருந்ததோ, அப்படியே முதற்பேறான இயேசுவின் இரகசிய உயிர்த்தெழுதல்,

மற்றபுத்திரர்களான நமது உயிர்த்தெழுதலுக்கு நிழலாட்டம். எனவே நம்மவர்களின் உயிர்த்தெழுதலும் இரகசியமே! யாரும் அறியார்.

நாம் உயிர்த்தெழுவது இரகசியம் என்றால் அவர் நம்மை அழைக்க வருவதும் இரகசியம் தானே! யோ 20:17ல் மரியாளிடத்திலும், 27ல் தோமாவிடத்திலும், உயிர்த்தெழுந்த இயேசு சொன்னதிலிருந்து நாம் அறிவது என்ன? அந்த இடைப்பட்ட நேரத்தில் இயேசு பரலோகம் சென்று, திரும்பி வந்துவிட்டார் என்றே நிதானிக்க வேண்டியிருக்கிறது. அதனாலே தான் தொட்டுப்பார் என்று ஆணையிட்டார். அப்படி அவர் பரலோகம் சென்று வந்ததை யாரும் காணவில்லை. இரகசியமாய் நடந்தது அது. ஏன் அப்படி? லேவி 23:10-14ல் சொல்லப்பட்ட முதற்பலன் பண்டிகைக்கு நிறைவேறுதல் இதுதானே! இயேசு கிறிஸ்து, யோவான் 14ல் சொன்னபடி நம்மை அழைக்க வருவதற்கும் இது நிழலாட்டமாய் உள்ளதல்லவா! ஆகவே தான் இந்த இயேசுவின் வருகை இரகசிய வருகை.

இந்த இரகசிய வருகையில் கைவிடப்பட்டால், அந்திகிறிஸ்துவின் ஆக்கினைக்குள்ளாகி அழிந்துபோக வேண்டிவருமே! யூதா 14-15 வசனங்களின்படி தேவன் நியாயந்தீர்க்க பகிரங்கமாய் ஒலிவமலையின் மீது காலெடுத்து வைத்து வரும்வரைக்கும், மக்கள் இரத்த வெறிபிடித்த அந்திக் கிறிஸ்துவுக்கும், சாத்தானுக்கும், கள்ளத்தீர்க்கதரிசிக்கும் உட்பட்டு, அன்றாடம் செத்து, செத்து அழிய வேண்டுமே! அத்தோடு தேவனின் கோபாக்கினைக்கும் உட்பட வேண்டுமே!

பூர்வகாலம் முதல் பங்குபங்காகவும், வகை வகையாகவும் செயலாக்கி, மக்களை இரட்சிப்புக்குள் கொண்டு வர முனைந்த தேவன், ஒரே பகிரங்க வருகையிலேயே, அவிசுவாசிகளை நியாயந்தீர்க்க விரும்பாமல், மகா உபத்திரவ காலத்திலும், அல்லல்பட்டு, அழிந்துபோகப்போகும், விடுபட்ட மக்களும், இரகசிய வருகையின் மகிமையை உணர்ந்து, அப்போதாவது மனந்திரும்பட்டும் என்று ஆண்டவன் கொண்டிருக்கும் பெரிதான அன்பின் ஆழம் நீளம், உயரம் தான் என்னே!

இயேசுவின் இரகசிய வருகையில் ஆனந்தமாய் செல்ல ஆயத்தமாவோம்! கறை திரையற்ற பூரண புருஷராக கடந்து போவோம்! கல்லறைகள் திறந்து கிடப்பதையும், தேவ பிள்ளைகள் காணாமல் போவதையும், நாம் பார்க்க வேண்டாம். அல்லேலூயா!

❖ ❖ ❖

# பரிசுத்த ஜாதியாவது எப்படி?

**''பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே''** (எபி 12:14) தேவனைச் சந்திக்க ஆயத்தமா? பரிசுத்தமில்லாமல் அவரை சந்திக்க முடியாது. நாம் பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1தெச 4:3). அதனால் தான் பவுல் சொல்கிறான் **"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக''** (1தெச 5:23) நம்மை பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்று விரும்பி, நம்மை பரிசுத்தமாக்கி பரலோகம் கொண்டு போகிறவர் தேவனே! நாமே நம்மை பரிசுத்தமாக்கிக் கொள்ள முடியாது.

**பரிசுத்தம் என்றால் இரண்டு அர்த்தங்கள் உள்ளன.**

1. **தனிமைப்படுத்துதல் Set apart**
2. **Holiness**

இரண்டுமே நமக்கு தேவை. இஸ்ரவேல் மக்கள் விபச்சாரம், வேசித்தனம், முரட்டாட்டம், விக்ரக ஆராதனை போன்ற பாவங்களைச் செய்த போதும் அவர்களை தேவன் **"பரிசுத்த ஜாதி''** என்றே அழைக்கிறார் (உபா 7:7,6 லேவி 20:26) அதன் பொருள் என்னவென்றால், உலகத்தைவிட்டு, பிரித்தெடுக்கப்பட்ட, வேறு பிரிக்கப்பட்ட, தனிமைப்படுத்தப்பட்ட ஜாதி என்று பொருள். ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நாமும் உலகத்தை விட்டுப் பிரித்தெடுக்கப்பட்ட, வேறு பிரிக்கப்பட்ட, தனிமைப்படுத்தப்பட்ட ஜாதியாய் இருக்க வேண்டும் என்பது அவரது சித்தம். **"நான் உலகத்தானல்லாதது போல நீங்களும் உலகத்தாரல்லவே''** - (யோ 17:16) என்று இயேசு சொன்னாரே.

நாம் உலகிலே வித்தியாசமானவர்களாய் இருக்க வேண்டும். நடை, உடை, பாவனை, சொல், செயல் எல்லாவற்றிலுமே ஒரு புதுமை வேண்டும். இதுதான் பரிசுத்தம் என்ற வார்த்தைக்கான முதல் அர்த்தமான

- **தனிமைப்படுத்துதல் - Set apart;**

**இன்னொன்று Holiness**: அதாவது மாம்ச கிரியை நீங்கி, ஆவியின் கனி பெருக வேண்டும் (கலா 5:22). நம் மனம் அதாவது ஆத்துமா நாளுக்கு நாள் புதிதாகி மறுரூபமாக வேண்டும். (ரோ 12:2). **கிறிஸ்துவின் சாயல் நமக்குள்ளே வேண்டும்; நம்மைக் கண்டவன் கிறிஸ்துவைக் காண வேண்டும். நமக்குள்ளே ஜீவன் இருந்தால் மட்டும் போதாது. அந்த ஜீவன் பரிபூரணப்பட**

**வேண்டும்.** இப்படிப்பட்ட Holinessம், Set apartம் இல்லாததால், பரிசுத்த ஜாதி என்றழைக்கப்பட்ட இஸ்ரவேல் கூட்டத்திலிருந்து இரண்டு பேர் மட்டுமே கானானை சுதந்தரித்தார்கள்.

கிறிஸ்தவன் என்ற பெயர் இருந்தாலோ, கிறிஸ்தவ பாரம்பரியத்தில் இருந்தாலோ, உலகப் பிரகாரமான பாவங்களை செய்யாதிருந்தாலோ, தேவன் விரும்புகிற இந்த பரிசுத்தம் வந்து விடாது; அதனாலேயே நாம் பரலோகம் போய்விடவும் முடியாது. எந்த சபையும் நம்மை இரட்சிக்காது; எந்த போதகரும் நம்மை இரட்சிக்க முடியாது. அவனவன் செய்த கிரியைகளுக்கேற்ற பலன் தேவனோடு வரும். ஆக நாம் செய்ய வேண்டியது என்ன? இயேசுவை விசுவாசித்தால் மட்டும் போதுமா? பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றனவாமே! (யாக் 2:19) கிறிஸ்தவனுக்கென்று ஒரு மூல உபதேசம் ஒன்று உள்ளது. இந்த உபதேசத்தின்படி நடக்கும் போது தான் நாம் இஸ்ரவேலரைப் போல வேறு பிரிக்கப்பட்ட பரிசுத்த ஜாதி என்ற கூட்டத்தில் இணைகிறோம். அப்போதுதான் கிறிஸ்தவர்கள் என்ற கூட்டத்தில் ஒருவனாகிறோம். அதுவரைக்கும் பெயர்க் கிறிஸ்தவன்தான். உண்மை கிறிஸ்தவன் இல்லை.

**இந்த மூல அஸ்திபாரம் தான் என்ன?** எபி 6:1-2 சொல்வதைப் பார்ப்போம் **"ஆகையால் கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவோமாக".**

**மனந்திரும்புதல்:** 'நீ மனந்திரும்பி விட்டாயா?' அப் 2:38ல் பேதுரு சொன்னபடி நீங்கள் மனந்திரும்பினீர்களா? அன்றைக்கு இஸ்ரவேலர் எதிலிருந்து மனந்திரும்பினார்கள்? இயேசு கிறிஸ்துவை இரட்சகரென்றும் ஆண்டவரென்றும் ஏற்றுக்கொள்ளாமல் சிலுவையில் அறைந்தார்களே, அந்த பாவத்திலிருந்து மனந்திரும்பினார்கள். என்றைக்கு? பெந்தேகொஸ்தே நாளில்; நீ என்றைக்கு மனந்திரும்பினாய்? ஞாபகமில்லையா? இல்லையென்றால் நீ இன்னும் மனந்திருந்தவில்லை என்று அர்த்தம். இன்றே பாகாலைவிட்டு, அந்நிய தேவர்களை விட்டு, நாத்திகத்தை விட்டு, அரைகுறை விசுவாசத்தை விட்டு, தேவன் தண்டிப்பாரே என்பதனால் கொண்டிருக்கும் நம்பிக்கையை விட்டு, தேவனுக்கு சமமாய் உலகில் உன்னை அறியாமலே கொண்டுள்ள காரியங்களை விட்டு, இரண்டு எஜமான் ஊழித்தை விட்டு முழுவதுமாய் மனந்திரும்பு.

<u>விசுவாசம்</u>: தேவன் பேரில் விசுவாசம் வை, வார்த்தையாகிய தேவனின் வார்த்தையை நம்பு (யோ14:1). **"இயேசு நமது பாவங்களை சுமந்து மரித்தார்; மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்; மீண்டும் வருவார்; அவரோடு நாமும் நித்தியமாய் வாழப்போகிறோம்"** என்று நம்பு. **"என் பாவங்கள் போயின; நான் நீதிமான்; அவர் எனக்கு கொடுத்த ஆசீர்வாதங்களை நான் விசுவாசிப்பேன்**; ரோ 10:9-10ன்படி "இருதயத்திலே விசுவாசித்து வாயினாலே அறிக்கை செய்வேன்; நான் அவர் பிள்ளை; அவரே எல்லாம்" என்று நம்பு. இதுவரை இப்படிப்பட்ட விசுவாசம் இல்லையென்றால் இன்றே விசுவாசி அறிக்கையிடு.

<u>ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்:</u> ஸ்நானம் என்று ஒருமையில் இல்லை; "ஸ்நானங்கள்" என்று பன்மையில் உள்ளது. இந்த ஸ்நானங்கள் சம்பந்தப்பட்ட உபதேசங்களை அறிந்து கீழ்ப்படிய வேண்டும். அந்த ஸ்நானங்களாவன:

1. **கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம்**
2. **ஜலத்தினால் ஞானஸ்நானம்**
3. **பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்**

இவைகள் மூல உபதேசங்களான மனந்திரும்புதல், விசுவாசம் போன்ற காரியங்களுக்குப் பிறகு நடக்க வேண்டியவை, அவைகளில்லாமல் இவைகள் இல்லை. இவைகள் இல்லாமல் மூல உபதேசம் இல்லை. மூல உபதேசப்படி நடக்காவிட்டால் நாம் ஆரம்ப கிறிஸ்தவன் கூட இல்லை.

**<u>கைகளை வைக்குதல்:</u>** புத்திரஸ்வீகாரம் பெற்ற (கலா 4:7 ரோ 8:15) ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைகளுக்குள்ளும் தேவ வல்லமை நிரம்பிக்கிடக்கின்றது. அதை நாம் விசுவாசித்து அந்த வல்லமை வெளிக்காட்ட கைகளை வைக்கும் கிரியை வேதத்தில் உள்ளது. பரிசுத்த ஆவியைப் பெறவேண்டுமா? கைகளை வைப்பதை நம்பு! வியாதியிலிருந்து விடுதலையா? கைகளை வைப்பதை நம்பு! ஏதோ ஒரு நல்ல தேவ காரியங்களுக்காய் தயார் செய்து அனுப்ப வேண்டுமா? கைகளை வைப்பதை நம்பு! கைகளை வைப்பது மூலமாய் வல்லமை வெளிப்படுகிறது. 1தீமோ 5:22ஐ தியானி.

<u>மரித்தோரின் உயிர்த்தெழுதல்:</u> மரித்தோரில் நீதிமான் இயேசுவின் வருகையில் எழும்புவான்; பாவிகளுக்கு இரண்டாம் உயிர்த்தெழுதலில் பங்கு உண்டு. முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுபவன் பாக்கியவான் (வெளி 20:6). இதற்காய் தயாராக வேண்டும்.

<u>நித்திய நியாயத்தீர்ப்பு:</u> எல்லோருக்கும் நியாயத்தீர்ப்பு உண்டு. ஆனால் பாவிகளுக்கு ஆக்கினைத் தீர்ப்பு. நாமோ நியாயாசனம் முன்பாய் நின்று நம் கிரியைகளுக்கேற்ற கிரீடம் பெறப்போகின்றோம் (ரோ 8:1; 2கொரி 5:10). இறுதி நியாயத்தீர்ப்பாகிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்போடு (வெளி 20:11) புதிய வானம், புதிய பூமி உருவாகும்.

இந்த அடிப்படை மூல கிறிஸ்துவ உபதேசங்களை ஒவ்வொரு கிறிஸ்தவனும், அறிந்து செயல்பட்டால்தான், கிறிஸ்தவன் என்று சொல்லவே அவனுக்குத் தகுதி வருகிறது. இல்லையேல் பெயர்க் கிறிஸ்தவன்தான். அவன் Nominal Christian. **இந்த அஸ்திபாரத்தில் கட்டப்பட்ட கிறிஸ்தவன், மறுபடியும் அந்த அஸ்திபாரத்தையே போடத்தேவையில்லை.** அவனே ஆவிக்குரிய இஸ்ரவேலரின் வரிசையில் வந்துவிட்டான். இப்போதுதான் அவன் பிரித்தெடுக்கப்பட்ட ஆவிக்குரிய பரிசுத்த ஜாதி. இனி தேவனைப் போன்ற பரிசுத்தம் தேவை. ஆகையால், கிறிஸ்துவைப் போல் பரிசுத்தமாக, அவரைப் பற்றிச் சொல்லிய வசனங்களை ஆராய்ந்து, அவர் சொன்னபடி அவரைப் போல நடந்து பரிபூரணராக கடந்து போக வேண்டும் (யோவா 15:3 சங் 105:19 107:24) அப்போது தான் இயேசுவின் இரகசிய வருகையில் கற்புள்ள கன்னியாக, மணவாளனோடு வானுலகம் செல்ல முடியும். **அதற்குத்தான் சபைக்குள்ளே சுவிசேஷகர்கள் மூலமாய் (எபே 4:13), "மகிமையின் சுவிசேஷம்" போதிக்கப்பட வேண்டும்.** அல்லேலூயா!

இனி அஸ்திபாரம் இல்லாதவர்கள் அஸ்திபாரம் போடட்டும்! அஸ்திபாரம் உள்ளவர்கள், மறுபடியும் தேவையில்லாமல் அந்த அஸ்திபாரத்தையே போடாமல் பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமடைய, கிறிஸ்துவைப் போல மறுரூபமாக, ஆயத்தமாகட்டும். கிறிஸ்து கட்டிய சபை கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள்! அந்நிய நுகத்தோடு பிணையாதிருங்கள்! பழையவைகள் ஒழியட்டும் எல்லாம் புதிதாகட்டும். 1ம் சங்கீதம் சொன்னபடி நடங்கள். இயேசு சீக்கிரம் வருகிறார்! அல்லேலூயா!

❖ ❖ ❖

## பிதா – இயேசு – பரிசுத்த ஆவி

**"இயேசு தேவனல்ல யெகோவா தான் தேவன்", "பரிசுத்த ஆவி என்பது ஒரு சக்தியே அன்றி ஆள் தத்துவமல்ல'', ''தேவன் மூன்று ஆள் தத்துவமாக இல்லை ஒன்றே ஒன்று தான்''. ''இயேசுதான் யெகோவா; யெகோவாதான் இயேசு;**

**இயேசு தான் பரிசுத்த ஆவி; பரிசுத்த ஆவி தான் யெகோவா"** என்றெல்லாம் பலவாறாக இக்காலத்தில் கிறிஸ்தவ உலகில் பேசப்படுகின்றன. வேதம் என்ன சொல்லுகின்றது?

ஆதி 1:1ல் கடவுள் (God) என்ற வார்த்தைக்கு மூல பாஷையில் **'Elohim'** என்று உள்ளது. **ஏலோகிம் என்றால் more then two.** பன்மையில் உள்ளது. பன்மையில் உள்ள சொல்லானாலும் ஒருமையில் சொல்லப்பட்டுள்ளது. வேதத்தின் முதல் வசனமே முழு பதிலையும் தந்துவிட்டது. தேவன் பன்மையில் ஒருமையாய் இருக்கிறார். இதற்கு ஆதாரமாக ஆதி 1:26,27; 3:22 போன்ற வசனங்கள் வெளிப்படையாகவே சாட்சி இடுகின்றன. ஆதி. 2:4, 14:18, 15:2, 17:1, 21:22; யாத். 34:6, 1சாமு. 1:3; மல். 3:18 போன்ற இன்னும் பல வசனங்களில் உள்ள கடவுள் என்ற வார்த்தை பன்மையில் மூல பாஷையில் இருப்பதால், திரித்துவதேவன் என்பதைப் பற்றி நாம் ஆராய வழி கொடுக்கின்றது. "இஸ்ரவேலே கேள் நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்'' உபா. 6:4. **"The LORD our God is one LORD"** என்பதற்கான எபிரேய பதம்தான், **"புருஷனும் மனைவியும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்"** என்ற ஆதி. 2:24ம் வசனத்திற்கும் வருகிறது. புருஷனும் மனைவியும் ஒரே ஆளாயிருக்கிறார்கள் என்று இதற்கு அர்த்தமல்ல. இருவரும் இரு ஆள்தத்துவமாய் இருக்கிறார்கள். ஆனால் திருமணத்தின் மூலமாய் இருவரும் "Physically, emotionally, intellectually, spiritually" ஒன்றாய் இருக்கிறார்கள். அப்படியே தேவனும் ஆள் தத்துவத்தில் Elohim ஆக இருந்தாலும் **"Our God is one God"** அதனால் தான் இயேசு கிறிஸ்து பரலோகம் போகும்போது, ஞானஸ்நானம் "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே" (மத் 28:19-20) கொடுங்கள் என்று சொல்லிவிட்டுப் போனார். "நாமங்களினால்" அல்ல, நாமத்தினால். அல்லேலூயா! "Plural in Singular". இரண்டுக்கும் மேற்பட்ட Elohim என்ற வார்த்தையை மத் 28:19-20ல் ஒப்பிடும்போது, ஒன்றான மெய்த்தேவன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூன்று ஆள் தத்துவமாய் இருக்கிறார் என்று அறியலாமல்லவா! இயேசு ஞானஸ்நானம் பெற்ற போது வானத்திலிருந்து பிதாவின் குரல் கேட்டது. பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல இறங்கி வந்தார். தேவனின் மூன்று ஆள் தத்துவமும் இங்கே விளங்குகிறது அல்லவா! "பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர்: பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்'' - 1யோ 5:7 என்ற வசனம் இன்னும் அதிகமதிகமாய் உணர்த்துகின்றது அல்லவா! இந்த வசனத்திற்கு Manuscript இல்லை, இது இடைச்சொருகல் என்று பலர் கருதுகின்றனர். அப்படியென்றால் வேத புத்தகத்தில் ஏன் இன்னும்

வைத்திருக்கிறார்கள்? கர்த்தரே அறிவார். இந்த வசனம் சில manuscriptல் இருப்பதாக, சிப்ரியன், விஜிலியஸ் போன்றோர் குறிப்பிடுகின்றனர். The codex Montfortii and the Vulgate contain it. ஒருமையாய் இருக்க வேண்டிய Elohim என்ற வார்த்தை ஆதி 20:13, 35:7 போன்ற இடங்களில் பன்மையாகவே போடப்பட்டுள்ளது. சக 1:7-2:17, சங் 110:1 வசனங்கள் இரண்டு ஆள்தத்துவமுள்ளவர்கள் பேசிக்கொள்வதாய் அறியலாம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரலோகில் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். நமக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார் என்று வேதம் கூறுவதால் இரு ஆள் தத்துவத்தை உணர்கிறோம். ரோ 1:20ன் படி தேவத்துவம் - Trinity - உலகப் படைப்புகளிலிருந்தே உணர்ந்து கொள்ளலாம். இந்த அண்டசராசரமும் **Space, Matter, Time** என்ற மூன்று பிரமாணங்களுடன் படைக்கப்பட்டிருக்கின்றது என்று விஞ்ஞானமே ஒத்துக் கொள்ளக்கூடியதாய் உள்ளது. மனிதனே ஆவி, ஆத்மா, சரீரம் என்ற மூன்றாய் இருக்கின்றான். எனவே காணப்படாதவைகளாகிய திரித்துவம், காணப்படுகிற படைப்புகளாலே தெளிவாய் அறிந்து கொள்ளலாம். திரித்துவம்-திரியேகம், என்ற வார்த்தை இல்லாததால் தேவன் மூன்று ஆள்தத்துவமாய் செயல்படுவது இல்லை என்று சொல்ல முடியுமா? "ஜெபமே ஜெயம்" என்று வேதத்தில் எங்கே உள்ளது? இல்லை என்பதால் ஜெபத்தால் ஜெயமில்லையா? "சினிமா பார்க்கக்கூடாது புகை பிடிக்கக்கூடாது பொட்டு வைக்கக் கூடாது" என்று வேதத்தில் எங்கே உள்ளது? பின் ஏன் அதை கடைப்பிடிக்க வேண்டும். வெளிப்படையாய் இல்லாவிட்டாலும், மற்ற வசனங்களுக்குள் இந்த உண்மைகள் புதைந்து கிடக்கின்றன. அப்படியே தான் திரித்துவம் - திரியேகம் - என்பதும்.

**"யெகோவா ஒருவர் தான் தேவன்" இயேசு தேவனா? பரிசுத்த ஆவியானவர் தேவனா? இது கேள்வி.**

**"ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனாய் இருந்தது"** - யோ 1:1.

**"தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்"** - 1தீமோ 3:16.

**"இவர் என்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன்"** - ரோ 9:5.

**"மகாதேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து"** - தீத் 2:13.

**"இவரே மெய்யான தேவனும்..."** 1யோ 5:20.

**"நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு"**-2பேது 3:10.

இன்னும் பல வசனங்கள் இயேசுவே தேவன் என்று உரைக்கின்றன. பவுலின் 2தெச 1:12,13 இயேசுவே தேவன் என்றும், தேவனும் இயேசுவும் 'God' என்றும் விளக்கமாய் தெரிவிக்கின்றது.

இயேசு பிதாவாகிய தேவனைவிட சிறியவர் என்று சொல்கிறார்கள். அது தவறு.

1. தேவனுக்கு விரோதமான பாவங்களை தேவன் தவிர வேறு யாரும் மன்னிக்க முடியாது - மாற் 2:7. ஆனால் இயேசு சொல்கிறார், **"உன் பாவம் உனக்கு மன்னிக்கப்பட்டது"** என்று. எனவே இவர் பிதாவுக்கு கீழானவரல்ல; பிதாவுக்கு சமமானவர். எனவே தான் இவர் மீட்பரும் இரட்சகருமானார்.
2. **"தேவன் ஒருவர் தவிர நல்லவர் ஒருவருமில்லையே"** என்று சொன்னார் இயேசு. ஆக, பிதா ஒருவர் தான் நல்லவர் பாவம் செய்யாதவர். யோ 8:46ல் 'Which of you convinceth me of sin?" என்கிறார் இயேசு. பிலாத்து, "இவர் மேல் ஒரு குற்றமும் அறியேன்" என்கிறான். காட்டிக் கொடுத்த **யூதாஸ் "மாசில்லாதவரை காட்டிக் கொடுத்தேனே"** என்கிறான். ஆக, நீதிபதியாலும், எதிரியாலும், தன்னாலுமே பாவமில்லாதவர் என்ற நிரூபிக்கிறார். அப்படியென்றால் இவர் பிதாவுக்கு சமம் தானே.
3. தன்னையே தேவன் என்று சொல்கிறார். இயேசு (யோ 10:33,13:13, யோ. 14:9, 8:24,28; 13:13; மத். 21:3; 7:22; 42-45; 12:6)
4. தேவத்துவம் இயேசுவினில் இருந்தது. கொலோ. 2:9, பிலி. 2:5-8.
5. தேவன் ஒருவர் தான், தானே தன் ஆவியை விட முடியும்; தானே உயிர்த்தெழ முடியும். (யோ. 10:18)
6. இயேசு நித்திய தேவன். ஏசா. 9:6-7 எபி. 1:8, யோ. 1:1-2, 20:28.
7. உயிர்த்தெழுதலே, தேவன் என்பதற்கு ஆதாரம். ரோ. 1:5.
8. **'இம்மானுவேல்'** என்று பெயரிடப்பட வேண்டும் என்று முன்னுரைக்கப்பட்டதே, இவர் தேவன் என்று விளங்குகின்றது. இம்மானுவேல் என்றால் **"தேவன் நம்மோடு"** என்று அர்த்தம்.
9. உயிர்த்தெழுந்த இயேசுவைப் பார்த்து தோமா சொன்னார் "என் ஆண்டவரே! என் தேவனே!" இயேசுவை தேவனென்றே சொல்கிறார். இயேசு தேவனானதால் இந்த மகிமையை இயேசுவே மறுக்கவில்லை. அல்லேலூயா!

கர்த்தரும் இரட்சகருமான இயேசுவை தேவன் உண்டாக்கினார் என்றும், இவர் தேவனின் குமாரன் என்றும் வாதிடுவோரும் உண்டு. **"சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்"** என்று கொலோ 1:15ன்படி இவர்தான் முதலில் படைக்கப்பட்டவர் என்று கூறுகிறார்கள். "First Born" என்பது வேறு 'Begotten' என்பது வேறு (யோ. 3:16,1:14). கொலோ.. 1:18 இதை மேலும் அதிகமாய் விளக்குகிறது. முதற்பேறு என்றால், மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறு. ரோ. 8:29: எபி. 1:6, வெளி. 1:5 போன்ற வசனங்களைப் பாருங்கள். இதைத்தான் இரண்டாம் சங்கீதத்தில் ஜெநிப்பித்தார் என்று சொல்லப்படுகிறது. (சங். 2:7) அப் 13:33, எபி. 5:5, 1:5 போன்ற வசனங்களாலே அறியலாம். **சங். 89:27ல் சொல்லப்பட்ட தாவீது முதற்பேறா?** இல்லையே! நம் இயேசு மனிதனாய் வந்ததால், எல்லா சிருஷ்டியிலும் இவர் பெரியவராயிருக்கிறார்

இயேசு கிறிஸ்து படைக்கப்பட்டவரானால், யோ 8:58ம் வசனம் தேவையில்லையே!

**"Before Abraham was I am"** என்றார் இயேசு, படைக்கப்பட்டிருந்தால் **"Before Abraham I was"** என்று சொல்லியிருப்பார். இதை மூல பாஷையில் பார்த்தால் ஆபிரகாமின் படைப்பை **Genesthai...to be begotten or born** என்ற அர்த்தத்திலும், இயேசுவுக்கு **Egoeimi – Before Abraham Came into being "I am"** என்ற அர்த்தத்திலும் உள்ளது. இந்த 'I am' என்ற வார்த்தையைத் தான் தேவன் யாத் 3:14ல் மோசேயிடம் **"இருக்கிறவராய் இருக்கிறேன்"** என்றார். இந்த 'I am' என்ற வார்த்தையைத் தான் கெத்சமனே தோட்டத்தில் போர்ச்சேவகர்கள் பிடிக்க வரும்போது சொன்னார். ஏசா. 45:6லும் இதே வார்த்தைதான் உள்ளது. ஆக இயேசு படைக்கப்பட்டவரல்ல நித்திய தேவன் என்று அறிகிறோம். இந்த வார்த்தையை கேட்ட உடனே யூதர்களுக்குப் புரிந்தது இவர் தன்னை தேவன் என்று சொல்லிக் கொள்கிறாரென்று. எனவே கல்லெறியத் தொடங்கினார்கள் (யோ 8:59). அந்த யூதர்களுக்கு இவர் வார்த்தை புரிகிறது. இக்கால கிறிஸ்தவர்களுக்கு இவர் வார்த்தை புரியவில்லையே! இவர்களுக்காக ஜெபிப்போம். **கிறிஸ்துமஸ் கொண்டாடும் போது மாத்திரம் நித்திய பிதா என்கிறார்கள் (ஏசா 9:6). ஏன்?**

'Son of God' என்று இயேசு சொன்னதாலே (மாற் 1:11, மத் 17:5). **"அவர் தேவனின் குமாரன்; தேவனுக்கு கீழானவர்"** என்று கருதுகிறார்கள். (கொலோ. 2:9ஐ வாசியுங்கள்). தேவகுமாரன் என்றால் இயேசுவின் அப்பா தான் "தேவன்" என்கிறீர்களே,

a. அப். 4:36ல் **பர்னபாவை 'ஆறுதலின் மகன்'** எனப்படுகின்றதே. பர்னபாவின் அப்பா பெயர் ஆறுதலா?

b. மாற் 3:17ல், **யாக்கோபையும், யோவானையும் 'Sons of Thunder'** எனப்படுகின்றதே, அவர்களின் அப்பா இடிமுழக்கமா?

c. ஏசா. 14ல் **லூசிபரை 'Son of Morning'** எனப்படுகின்றதே, லூசிபரின் அப்பா பெயர் Morning ஆ?

d. தாவீதின் குமாரன் என்றால் இயேசுவின் அப்பா பெயர் தாவீதா? இல்லவே, வேறென்ன பொருள்? இங்கே அப்பா என்று சொல்லப்படவில்லை அதன் குணாதிசயமும் மகிமையும் நிறைந்தது என்ற அர்த்தத்தில் சொல்லப்பட்டது. **தேவகுமாரன் என்றால், தேவனின் மகிமையும், குணாதிசயமும் (Glory & Nature) நிறைந்தவர் என்று பொருள், தேவனின் Nature & Glory தேவன் ஒருவருக்குத் தான் உண்டு.** எனவே இயேசுவே தேவன். Son of God என்ற உடனே, இயேசு தன்னை தேவனென்றே சொல்கிறார் என்று (யோ. 5:18; மத் 26:63-65) யூதர்கள் புரிந்து கொண்டார்களே நமக்கு ஏன் புரியவில்லை? ஆவியானவர் விளக்குவாராக.

1 கொரி. 10:1-4 வசனங்களைப் படியுங்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே என்கிறார் பவுல். ஏசா 26:4 சொல்கிறது: **"கர்த்தராகிய யெகோவா நித்திய கன்மலை".** அப்படியென்றால் நித்திய கன்மலையாகிய கிறிஸ்துவே கர்த்தராகிய யெகோவா! "யெகோவாவின் சாட்சிகள்" என்று அழைக்கப்படுபவர்கள், "இயேசுவின் சாட்சிகள்" என்று அர்த்தமல்லவா! இந்தக் கன்மலை தான் தேவன் என்று சங் 18:31, உபா. 32, சங் 19:14 போன்ற வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. யாக்கோபு தூதனானவரோடே போராடினாரே "கர்த்தராகிய அவர் சேனைகளின் தேவன் யெகோவா என்பது அவருடைய நாம சங்கீர்த்தனம்" (ஓசி. 12:5) ஆக யெகோவாவும், இயேசுவும் தேவனே; சமமானவர்களே. அல்லேலூயா!

**"பரிசுத்த ஆவியானவர் ஒரு சக்தியல்லவா! அவர் எப்படி ஆள் தத்துவமானவர்" இது கேள்வி**

1. ஆதி 1:2ல் படிக்கிறோம். "தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்" என்று. ஆதி 1:26-27: 3:22 வசனங்களின்படி பிதா, குமாரன் ஆகியோரோடு ஆவியானவர் ஆள்தத்துவமாய் இருந்தார் என்று அறிகிறோம்.

2. "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்கிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்று வெளி 2:3ல், அடிக்கடி படிக்கிறோம்.

3. "கர்த்தரே ஆவியானவர்" - 2கொரி 3:17.

4. "தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்" - யோபு 33:4.

5. "கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பியவர்" - ரோ. 8:11, அப். 2:32.

6. "வேறொரு தேற்றரவாளன்" - யோ. 14:16,17,26.

7. அவர் வெளிப்படுத்துகிறவர்; ஆராய்கிறவர்; அறிகிறவர் (1கொரி 2:10-11)

8. அவர் சித்தமுள்ளவர், உணர்கிறவர், பேசுகிறவர், போதிக்கிறவர், வழிநடத்துகிறவர். (1கொரி 2:11, ரோ 15:30, எபே 4:30, வெளி 2:7, ரோ 8:26, யோ 14:26, ரோ 6:15, அப் 20:28).

9. அவர் ஆள்தத்துவமாய் இருப்பதால் தான் அவருக்கு நாம் ஆலயமாய் இருக்கிறோம். (1கொரி. 6:19,20). நமக்குள் அவர் இருக்கிறார் (1யோ. 4:4).

10. அவர் சாட்சியாய் இருப்பதால் He is the person. (அப் 5:32).

11. ஆவிவந்தது என்றால் ஆவியானவர் வந்தார் என்று பொருள் See எசே-2.

12. புறாவைப் போல் இறங்கி வந்தார் இயேசு ஞானஸ்நானம் எடுக்கும்போது.

13. வெளி. 22:17ன்படி இவர் ஆள்தத்துவமானவர்.

1. ஆள்தத்துவமானவர் தேவனா? இது கேள்வி. மத் 28:18,19 வசனங்களின்படி இவர் தேவத்துவத்தில் ஒருவர் என்றும், தேவனுக்குச் சமமானவர் என்றும் அறிகிறோம்.

2. 2கொரி 3:17ன்படி இவர் கர்த்தர். இவர் தான் சிருஷ்டிக் கர்த்தரே கன்மலை யேகோவா இரட்சகர். இவர் தேவனே.

3. நாம் ஆசீர்வாதம் அளிக்கும்போது, பிதாவாகிய தேவனையும், கர்த்தராகிய இயேசுவையும், பரிசுத்த ஆவியானவரையும் சமமாய் சொல்வதால் தேவனல்லவா? See 2கொரி 13:14.

4. அப் 5:3ன்படி மனுஷரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொன்னார்கள் என்பதால் அவர் தேவனல்லவா?

5. கிறிஸ்து, தாமாகவே மனிதனாய் பிறக்கவில்லை. அப்படியென்றால் பரிசுத்த ஆவியாகிய தேவனால் பிறந்தார். தேவனாகிய இயேசுவை மனிதனாய்க் கருவாக வைத்தவர் பரிசுத்த ஆவியானவர் என்பதால் இவரும் தேவன்தான் (லூக். - 1).

6. இயேசுவாகிய தேவனும், ஆவியாகிய தேவனும் உரையாடுவதை பார் (சகரி 1:7, 2:27).

7. வரங்களை கொடுக்கிறவர் தேவனாகிய ஆவியானவர் (அப் 10:38, 1கொரி 12:11). எனவே தேவனுடைய பிள்ளையே! பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியும் மூன்று ஆள்தத்துவமுள்ள ஒரே தேவன் என்று அறிகிறோமல்லவா! இரட்சிப்புக்கு இவர்கள் செய்வது என்ன?

Father is he who brings forth.

Son is he who arranges or executes that which the Father brings forth.

**Holy Spirit is he who applies to the people that which was provided by the father through the Son.** (Refer யோ 3:16)

ஆக, இரட்சிப்பில் மூவரும் இணைந்து செயல்படுகிறார்கள். இம்மூவரையும் திரித்துவ தேவன் என்று இருதயத்திலே விசுவாசித்து வாயினாலே அறிக்கை பண்ணும்போதுதான் இரட்சிப்பின் மகத்துவம் இன்னதென்று புரியும். இல்லையேல் யோபு 42:3ல் சொல்லுகிறபடி இருக்கிற பிள்ளைகளாய் மாறிவிடுவோம்.

ஆனாலும் தேவத்துவத்தை இன்னும் முழுமையாய், அவர் இருக்கிற வண்ணத்தை, பிரகாரத்தை, அவரின் வருகையிலே அறிந்து கொள்ள காத்திருப்போம் (1யோ 3:2).

**“என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல் உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்கிறார் பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது” ஏசா 55:8-9.**

❖ ❖ ❖

# கடைசி கால இரகசியங்கள்

## “பவுல் சொல்லும் இரகசியங்கள்” No. 1

இரகசியம் என்றாலே இரண்டு பேருக்கு மட்டுமே தெரிந்த காரியம். ஒரு இரகசியத்தை வெளியே நான் சொல்கிறேன் என்றால், அந்த இரகசியம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் ஒன்றும் மற்றவர்கள்

யாருக்கும் அன்றைக்கு தேதிவரை தெரியாது என்று அர்த்தம்: மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்று பொருள். இப்படித்தான் பவுல் அப்போஸ்தலன் தன்னுடைய நிருபங்களிலே பல இரகசியங்களை வெளிப்படுத்தியிருக்கிறான். ஆதாம் முதற்கொண்டு, பவுல் வரைக்கும் யாருக்குமே வெளிப்படுத்தாமல் இரகசியமாய் வைத்திருந்ததை, தேவன் இந்தக் கடைசி காலத்தில், பவுல் மூலமாய் நமக்கு வெளிப்படுத்துகிறார். அல்லேலூயா! இந்த இரகசியத்தை கேட்கக் கொடுத்த ஜனம் பாக்கியமுள்ளது. ஒவ்வொரு ரகசியங்களாய்ப் பார்ப்போம். தேவன் சொல்லிக் கொடுக்கும் இரகசியங்களை காதுள்ளவன் கேட்கக்கடவன்.

**“இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன் நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும். ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்” 1கொரி 15:51-53.**

இதிலே சொல்லப்பட்ட இரகசியம் என்ன? இயேசு வருவார் நம்மை அழைத்து கொண்டு போவார் என்பதா? இதைத்தான் இயேசு முதற்கொண்டு எல்லோரும் சொல்லியிருக்கின்றனரே! பின்பு எது இரகசியம்! **“நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை” இது தான் இரகசியம்.** நாம் மரிக்கப்போவதே இல்லை. ஆதாம் ஏவாளுக்கு தண்டனை கொடுத்த போது **“நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய்”** என்றார் தேவன். அது முதற்கொண்டு எல்லா மனிதனும் மரிக்கின்றான். இயேசு கூட மரித்தார். **“மனிதன் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கும் சட்டம்”** என்று எபி. 9:27 சொல்கிறது. ஏனோக்கும் எலியாவும் மட்டும்தான் இந்தச் சட்டத்திற்கு மாறாக மரிக்காமலே பரலோகம் போனார்கள். ஏன் அவர்கள் மரிக்கவில்லை என்று எங்குமே வேதத்தில் சொல்லப்படவில்லை. இந்த காரியங்கள் வருங்காலத்தில் நடைப்பெறப்போகும் காரியங்களுக்கு என்று ஒரு தீர்க்கதரிசிக்கும் விளக்கப்படவில்லை. எப்படியோ எல்லா மனிதரும் மரிப்பார்கள் என்று உள்ள அடிப்படை சத்தியத்திற்கு மாறான தேவனுடைய திட்டத்தை கடைசி காலத்தில் பவுல் மூலமாய் தேவன் வெளிப்படுத்தி இருக்கிறார். தேவனோடே பரலோகம் போகும் நாம் நிச்சயமாய் நித்திரை அடைவதில்லை. இது தான் இரகசியம். ஒரு கூட்ட மக்களை சாகாமலே மறுரூபமாக்கி கொண்டு போகவேண்டும். என்ற தேவனுடைய திட்டத்தை, பவுலுக்கு வெளிப்படுத்தி, அவர்கள் இருவருக்கும் தெரிந்த இரகசியத்தை நமக்கும் தேவன் தெரியப்படுத்தினார். அல்லேலூயா!

இனி கடைசி கால சந்ததியாகிய நாம் மரணபயமே இல்லாமல் மரிக்காமலேயே மறுரூபமாகக் காத்திருப்போம்.

எப்போது மறுரூபமாவோம்? இந்த இரகசியம் என்ன? கடைசி எக்காளம் தொனிக்கும்போது மறுரூபமாவோம். சாதாரணமாய் எக்காளம் எப்போது தொனிக்குமென்றால், எல்லோரையும் ஒன்றாய்ச் சேர்த்து ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காய் புறப்பட ஆயத்தமாக்கத்தான். இது முக்கிமாய் இராணுவத்திலும், போலீசிலும், பள்ளியிலும் அன்றாடம் காணலாம். சத்தம் கேட்ட உடனே அனைவரும் ஒன்றாய்ச் சேர்ந்து விடவேண்டும். நாம் மறுரூபமாகும்போது தொனிக்கும் சத்தம் உலக எக்காளமல்ல தேவ எக்காளம். இந்த சத்தம் எப்படியிருக்கும்? ஒருவரும் அறியார்.

எண்ணாகமம் 10ம் அதிகாரம் பார்த்தால், சபையை கூடி அழைக்க, பாளையத்தை பிரயாணப்படுத்த, இரண்டு வெள்ளிப் பூரிகைகள் செய்யச் சொல்லி தேவன் கட்டளை இடுகிறார். ஒன்றை மாத்திரம் ஊதினால், இஸ்ரவேலிலுள்ள ஆயிரத்திற்கதிபதிகள் கூடி வர வேண்டும். அவைகளைப் பெருந்தொனியாய் முதல் முறை முழங்கும்போது கிழக்கே உள்ள பாளையங்கள் புறப்பட வேண்டும். இரண்டாம் தரம் பெருந்தொனியாய் முழங்கும்போது தெற்கே உள்ள பாளையங்கள் புறப்பட வேண்டும். சபையைக் கூட்ட சாதாரணமாய் ஊத வேண்டும். பிரயாணப்பட பெருந்தொனிமுழங்க வேண்டும். இப்படியாய் மணவாட்டியாகிய சபையை கூட்டி, பரமகானானுக்கு பிரயாணப்படுத்த தேவ எக்காளம் ஊதப்படும். அதிலும் கடைசி எக்காளம் ஊதும்போது தான், உயிரோடு இருக்கும் நாம், மரிக்காமலே மறுரூபமாகப் போகிறோம். இதிலும், பரமகானானுக்கு பிரயாணப்படுவதிலும், கிழக்கே உள்ள பாளையம், தெற்கே உள்ள பாளையம் என்ற மோசே காலத்தில் இருந்தது போல, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எக்காளம் கேட்டு புறப்படுவார்கள். உயிரோடிருக்கும் நாம் அடுத்த எக்காள சத்தம் கேட்டு புறப்படுவோம். அதைத்தான் கடைசி எக்காளம் என்று பவுல் சொல்லுகின்றான். நெகேமியா ஆலயம் கட்டும்போதும், இஸ்ரவேலரைக் கூட்டிச் சேர்க்க எக்காள சத்தத்தை பயன்படுத்தினானென்று நெகே. 4:20ல் அறிந்து கொள்ளலாம். யோவேல் 2:1ஐயும் வாசியுங்கள். ஆக கடைசி எக்காளம் தொனிக்கும் போது நாமெல்லாரும் கூட்டிச் சேர்க்கப்படுவோம். அது வரை நாம் நித்திரை அடையப்போவதில்லை. இந்த இரகசியம் நமக்கு பாலாகவும், தேனாகவும் இருக்கிறதல்லவா! அல்லேலூயா!

❖ ❖ ❖

## "பவுல் சொல்லும் இரகசியங்கள்" No. 2

**"புறஜாதிகள் சுவிஷேத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்கு உள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாய் இருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்"** "அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்து கொள்ளலாம்" (எபே 3:3,5).

பவுல் சொல்லும் இந்த இரகசியம் என்ன? பூர்வகாலம் முதல் தேவ ஜாதி, புறஜாதி என்ற இரண்டு பகுதிமக்கள் தான் இருந்தனர். தேவ பக்தியுள்ள சந்ததி வரவேண்டும் என்று தான் ஆபிரகாமை தேவன் புறஜாதியிலிருந்து பிரித்தெடுத்தார். (ஆதி 12:1). இப்படிப்பட்ட சமுதாயத்தில் வந்தவர்கள்தான், இஸ்ரவேலர் என்றாகி, நியாயப் பிரமாணக்காரர்களாக மாறி, காணியாட்சிக்கு உட்பட்டவர்களாய் இருந்தார்கள். புறஜாதிகளிலிருந்து வருபவர்கள் யாராயினும், நியாயப் பிரமாணத்துக்கு உட்பட்டு இஸ்ரவேலராய் ஜீவித்தார்கள். இப்படியாய் இஸ்ரவேலர், புறஜாதியார் மட்டுமே இருக்கின்ற காலத்தில்தான் இயேசு பிறந்தார். அவர் சொன்னார்: **"இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்"** (மத் 16:18) இந்த உண்மை யாருக்கும் விளங்கவில்லை. யூதமார்க்கத்திலிருந்து முற்றிலும் வித்தியாசமான கிறிஸ்தவமார்க்கம் என்ற ஒன்று இயேசுவால் ஆரம்பிக்கப்பட்டது என்ற ஒரு இரகசியம் நமது உலகம் உண்டாகி 4000 வருஷங்களுக்குப் பின்பு பவுலால் இப்படி வெளிப்படுத்தப்பட்டது. அதுவரை ரகசியமாகவே இருந்தது. இப்படி இரகசியமாய் இருந்து வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்தவ சபை இரகசியமாகவே எடுபட்டு போகும். அல்லேலூயா! ஸ்தாபித்தவரே எடுத்துக் கொள்ளப்போகிறார். மாரநாதா!

புறஜாதியாரை யூதமார்க்கத்தில் இயேசு சேர்க்கவில்லை: அல்லது யூதமார்க்கத்தை சுத்திகரித்து புதிதாக்கவில்லை. **"சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாக சிருஷ்டித்து இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்"** (எபே 2:15,16) **Jesus created a new man. அவன் தான் "கிறிஸ்தவ சபை".** இது ஒரு புதிய சிருஷ்டிப்பு. (Refer கொலோ 3:10,11) அதனால்தான் பவுல் அப்போஸ்தலன் "யூதருக்கும் கிரேக்கருக்கும் (புறஜாதியார் Gentiles) தேவசபைக்கும் (Christianity) இடறலற்றவராயிருங்கள்" (1கொரி 10:33) என்று மூன்று பிரிவாய்ச் சொல்லுகின்றான். யூதரிலிருந்தும்,

புறஜாதியாரிலிருந்தும் நம்மை அழைத்திருக்கிறாரே தேவன்! (ரோ. 9:24). அந்த புதிய GROUP தான் நமது கிறிஸ்தவ சபை.

கிறிஸ்துவின் சுவிஷேத்தினாலே புறஜாதிகளும் உடன் சுதந்திரர் (ரோ 8:15: கலா 4:6); ஒரே சரீரமாகிய கிறிஸ்துவுக்கு உள்ளானவர்கள். **"நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்"** (1கொரி 12:13). கிறிஸ்துவுக்குள், கிறிஸ்தவம் என்கிற பெயரால், கிறிஸ்துவால் கட்டப்பட்ட புதியசபைதான் பவுல் சொல்லும் ரகசியம். இந்த சபையார், வாக்குத்தத்தை சுதந்தரிக்கிறவர்கள் (கலா 3:9,14) இதுவும் பவுலின் ரகசியத்தில் ஒன்றே.

இந்த சபை எப்படி கட்டப்படுகிறது? "அந்தப்படியே நாம் இருத்திறத்தாரும் (யூதர் - புறஜாதியார்) ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம். ஆகையால் நாங்கள் இனி அந்நியரும், பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாய் இருக்கிறீர்கள். அதற்கு இயேசு தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது: அவர் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்" (எபே. 2:18, 3:6) அல்லேலூயா!

**இந்த இரகசியம் யாருக்கும் தெரியாது என்று எபே. 3:6 சொல்வதைப் பாருங்கள்.** இப்படியாய் தேவனால் ரகசியமாய் வைக்கப்பட்டு, பவுலால் வெளிப்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் சபையிலே நாம் இருப்பது பாக்கியமன்றோ! நமக்குள்ளே சுதந்திரமும், கிறிஸ்துவுக்குள்ளே நமக்குள்ள வாக்குத்தத்தமும் பவுலால் வெளிப்படுத்தப்பட்டு நாம் அனுபவிக்க பாத்திரவான்களாக நம்மை மாற்றிய தேவனுக்கு தோத்திரம்! ரகசியமாய் இருந்து வெளிப் படுத்தப்பட்ட இந்த சபை இரகசியமாகவே எடுபடும். ஆயத்தமாவோம். எல்லாரையும் விட இந்த சபையார் விசேஷித்தவர்கள் அன்றோ! நாம்தானே மணவாட்டி சபை: மற்றவர்கள் எல்லாம் தோழர்கள் அல்லவா! இயேசுதானே மணவாளன் (வெளி 9:9, யோ 3:29, எபி 11:40).

❖ ❖ ❖

## "பவுல் சொல்லும் இரகசியங்கள்" No. 3

**''மேலும் சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறிய வேண்டுமென்றிருக்கின்றேன். அதென்னவெனில் புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரின் ஒரு பங்கு கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப் பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்"** ரோ. 11:25,26.

பவுல் சொல்லும் இந்த இரகசியம் என்ன? கிறிஸ்துவின் சுவிசேஷத்தை இஸ்ரவேலர்கள் ஏற்றுக் கொள்ளாததினால், ஒலிவ மரத்தின் சுபாவக் கிளைகளாகிய அவர்கள் வெட்டப்பட்டு, காட்டொலிவ மரத்துகிளைகளாகிய புறஜாதியார், இஸ்ரவேலர் இருந்த இடத்திலே ஒட்ட வைக்கப்பட்டனர். இஸ்ரவேலரின் கீழ்ப்படியாமையினாலே புறஜாதியார் இரக்கம் பெற்றார்கள். இதனால் இஸ்ரவேலருக்கு விரோதமாய் தேவன் நாள் முழுவதும் தன் கைகளை நீட்டி, அவர்கள் அந்தகாரப்பட்டு அழிந்து போகும்படிசொன்ன ஏசா. 65:1,2: 29:10, சங் 69:22 போன்ற பல வசனங்களை வைத்துக்கொண்டு, இஸ்ரவேலர்கள் இத்தோடே அழிந்து போவார்கள் என்று கிறிஸ்தவர்கள் நம்பினார்கள். ஆனால் இஸ்ரவேலர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே பவுலின் விருப்பமும் ஜெபமுமாய் இருந்தபடியினால் (ரோ. 10:1,2) அவனுக்கு இந்த இரகசியத்தை தேவன் வெளிப்படுத்தினார். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் ஒருவருக்கும் ளிெப்படுத்தப்படாத இரகசியம் இது. தேவன் தம்முடைய ஜனங்களை (இஸ்ரவேலரை) தள்ளிவிடவில்லையாம் (ரோ. 11:1) பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாத 7000 பேரை தேவன் மீதியான எலியாவின் நாட்களில் வைத்ததுபோல, இரட்சிப்புக்கென்றே ஒரு பங்கு இஸ்ரவேலரை தேவன் வைத்திருக்கிறாராம். இந்த இஸ்ரவேலரின் இதயம் சுவிஷேத்தின் மீது கடின மனதாயிருக்குமாம் (Israels blindness to Gospel) இப்படிக் கடினமனதுடையவர்கள் அப்படியே இருந்து விடப்போவது இல்லை. ஏசா. 66:7-8, சக. 12:10-13, 14:1-21 போன்ற வசனங்களின்படி அவர்களெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். அது எப்போது?

கடின மனதுடைய ஒரு பங்கு இஸ்ரவேலர் இரட்சிப்புக்கென்று இருப்பார்கள் என்பது பவுலுக்கு மட்டுமே தேவன் வெளிப்படுத்திய ஒரு இரகசியம். புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்குமே (Until the fullness of Gentiles be come in) இந்த Blindness இருக்கும் என்பது இன்னொரு இரகசியம்: இந்த நிறைவு எப்போது உண்டாகும்? கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் சேர, தேவனின் திட்டம் நிறைவேறும்படியாய் புறஜாதிகளுக்கு கொடுக்கும் அழைப்பு முடியும்

வரை. அதாவது மணவாட்டியாகிய சபை முழுவதுமாய் பூரணப்படும் வரை (Refer எபே. 1:22-23: 4:11-13, அப். 15:14: 1கொரி. 12:12-13, 2பேது. 3:9) அதாவது கிறிஸ்தவ சபை இரகசிய வருகையிலே எடுத்துக் கொள்ளப்படும் வரை. அதன்பின் மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து யாக்கோபின் அவபக்தியை விலக்குவார். அல்லேலூயா!

இப்படியாய் தேவனால் இரகசியமாய் வைக்கப்பட்டு பவுலால் வெளிப்படுத்தப்பட்டதினால், **"தேவனுடைய கிருபை வரங்களும், இஸ்ரவேலரை அவர் அழைத்த அழைப்பும் மாறாதவைகளே"** என்று நாம் உணர முடிகிறதல்லவா! இனி நாம் இஸ்ரவேலருக்கு விரோதமாய் பெருமை பாராட்டாதிருப்போமாக (ரோ 11:18). அவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போமாக!

❖ ❖ ❖

## "பவுல் சொல்லும் இரகசியங்கள்" No. 4

**"இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகின்றேன்"** - எபே. 5:32

கிட்டத்தட்ட 4000 வருடங்களாய் வெளிப்படுத்தப்படாத இரகசியத்தை தேவன் பவுலின் மூலமாய் நமக்கு வெளிப்படுத்துகிறார். அது என்ன? கிறிஸ்துவும் சபையும், கணவனும் மனைவியும் போலவாம்: மணவாளனும் மணவாட்டியும் போலவாம். சபை என்ற ஒன்று உண்டாகும் என்பதே இரகசியமாய் இருந்து பவுல் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டது என்று ஏற்கெனவே பார்த்தோம். அந்த சபையே மனைவியாம்: மணவாட்டியாம்! (எபே 5:22-23).

உன்னதப்பாட்டு முதலாய் பல வேத புத்தகங்களில் மணவாளன் மணவாட்டி, புருஷன், மனைவி, சகோதரி போன்ற காரியங்கள் வருகின்றன. ஆனால் அவைகள் கிறிஸ்துவுக்கும் சபைக்கும் சம்பந்தப்பட்டவை என்று ஒருவரும் அறிவித்த பாடில்லை. பவுல் சொல்கிறார் கிறிஸ்துவால் உண்டாக்கப்பட்ட நமது சபை (மத் 16:18) மனைவியைப் போலவாம். எப்படி?

1. புருஷனுக்கு மனைவி கீழ்ப்படிகிறது போல (Submissive) சபை, கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிய வேண்டும் (எபே. 5:22).
2. மனைவிக்குத் தலை புருஷன்: சபைக்குத் தலை கிறிஸ்து (எபே. 5:23).
3. மனைவி புருஷனுக்கு இணைந்து (Be Subject) போக வேண்டும்: சபையும் கிறிஸ்துவுக்கு இணைந்து போக வேண்டும் (எபே 6:24)

4. மனைவி புருஷனிடத்தில் பயபக்தியாய் இருக்க வேண்டும்: (Revenrence) சபையும் கிறிஸ்துவிடத்தில் பயபக்தியாய் இருக்க வேண்டும் (எபே 5:23).

**<u>பவுல் சொல்கிறார்:</u> "சபையை உண்டாக்கிய கிறிஸ்து புருஷனைப் போலவாம்". எப்படி?**

மேற் சொன்னவைகள் அல்லாமல் இன்னும் சில காரியங்கள்:

1. புருஷன் மனைவியில் அன்பு கூர வேண்டும் (Agappe Love தேவன்பு) கிறிஸ்துவும் சபையில் அன்பு கூறுகிறார். (எபே. 5:25).
2. புருஷனும் மனைவியை போஷித்து காப்பாற்ற வேண்டும்: கிறிஸ்துவும் அப்படியே சபையை போஷிக்கிறார் (எபே 5:29).
3. மனைவி பரிசுத்தமும், பிழையற்றதும் கறைதிரையற்றதுமாய் மாற்ற, புருஷன் தன்னையே ஒப்புக்கொடுக்க வேண்டும்: கிறிஸ்துவும் அப்படியே சபையை காக்கிறார். (எபே. 5:26-27).

**<u>இவைகளுக்கும் மேலாய் பவுல் சொல்லும் இரகசியம்:</u>** கர்த்தரும் ஆண்டவருமாயிருக்கிற இயேசுவின் சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் எலும்புகளுக்கும் உரியவைகளாகவும் நாம் இருக்கின்றோமாம்! என்னே ஆச்சரியம்! இது ஆதாமும் ஏவாளும் இருந்ததுபோலல்லவா! (ஆதி 2:23) இது உண்மையா? நாம் கிறிஸ்துவால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் (யோ 3:3,5); கிறிஸ்துவுக்குள்ளாய் உண்டாக்கப்பட்டிருக்கிறோம். அதனால் தான் நமக்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயர். (அப் 11:26). **கிறிஸ்து + அவர்கள்: அவர்களே கிறிஸ்து**: நாமே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயும் இருக்கிறோம் (1கொரி. 12:27, 6:15, ரோ. 12:4-5). இந்த சபை இன்னும் எடுத்துக் கொள்ளப்படாமல் இருப்பதால் தான், இயேசு பரலோகிலும் கூட, மனித உருவத்தோடே இருக்கிறார். அல்லேலூயா! சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு நாம் எப்படி இருப்போம்: அவர் எப்படி இருப்பார்; அறியோம் (1யோ 3:2); சரீரமாகிய நம்மீது கொண்டுள்ள அக்கறையினால்-தேவ அன்பினால் தான் நமக்காய் பிதாவினிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். ஒரே மாமிசம் ஒன்றையொன்று சண்டை போடாததுபோல, நாம் எவ்வளவோ பாவங்கள் செய்து அவருக்கு விரோதமாய்ப் போனாலும், அவர் ஆக்கினையை செலுத்தாமல் கிருபையாய்க் காக்கிறார். இந்தப் பாக்கியம் மணவாட்டியாகிய நம்மைத் தவிர, பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கு இல்லையே! அல்லேலூயா!

**<u>இன்னும் சற்று அதிகமான இரகசியம் ஒன்று:</u>** புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு மனைவியோடே இசைந்து

இருப்பது போல, கிறிஸ்துவும், **"தேவனுடைய ரூபமாயிருந்தும், தன்னுடைய பிதாவுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி மனுஷசாயலானார்"** (பிலி. 2:6,7) முதன் முதலில் நான் "மனிதன் மாறாதவனா?" என்ற தலைப்பில் எழுதியது போல, தேவன் சரீரமாகிய நம்மோடே வாழ ஆதிமுதற்கொண்டு விரும்பினார் என்று மறுபடியும் சொல்கிறேன். தன்னுடைய தகப்பனையும் தாயையும் விட்டு, மனைவியாகிய நாம் பாவத்தில் கிடந்தாலும், நம்மோடே இசைந்து வாழ்வதை கிறிஸ்து நாடுகிறார். அதனால்தான் 1யோ. 1:8-10ன்படி, ஏழெழுபது தரமும் மன்னிக்க சித்தமாயிருக்கிறார். எத்தனையோ கள்ள உபதேசங்கள், கள்ள தீர்க்கதரிசிகள், கள்ள கிறிஸ்துக்கள் எழும்பினாலும், மனைவியாகிய கிறிஸ்தவ சபை கிறிஸ்துவோடு ஒரே மாமிசமாய் இருப்பதால், அந்த மாமிசத்தை நியாயந்தீர்க்காமல், தேவன் சபையைக் கொண்டுபோகின்றார். என்னே அவரின் அன்பு!

இந்த இரகசியத்தை உணர்ந்த மணவாட்டிகளாய் நாம் ஜீவித்து பரலோக ராஜ்யத்தில் பங்கு பெற ஆயத்தமாவோம்.!

❖ ❖ ❖

## "பவுல் சொல்லும் இரகசியங்கள்" No. 5

**"ஆதிகாலங்களுக்கும், தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து.. புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐஸ்வரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாகக் உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" கொலோ. 1:25,27.**

பூர்வ காலங்களில் மறைக்கப்பட்டு பவுலால் வெளிப்படுத்தப்படும் இரகசியம் என்ன? இந்த இரகசியம் புறஜாதிகளுக்குள்ளே இப்போது விளங்கும் மகிமையின் ஐஸ்வரியமாயிருக்கிறது என்று பவுல் சொல்கிறான். கிறிஸ்துவானவர் நமக்குள் இருப்பதே அந்த இரகசியமாம். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கிறிஸ்துவானவர் இஸ்ரவேலுருக்கே உரியவர் என்ற நிலை இருந்தது. அவர்கள் மட்டுமே காணியாட்சிக்கு உட்பட்டவர்கள்: புத்திர சுவீகாரர்கள் என்ற நிலை இருந்தது. அவர்கள் மட்டுமே மகிமையிலே பரலோகம் செல்பவர்கள் என்ற நம்பிக்கை இருந்தது. அதை நியாயப் பிரமாணக் கிரியைகளிலே பெற எத்தணித்தார்கள்.

இயேசு சொன்னார், **''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடத்திற்கு வரான்''** இப்படிப்பட்ட தேவ வசனத்தை, வசனமாகிய கிறிஸ்துவை உள்ளத்தில் கொண்டால் புற ஜாதியாரின் சரீரம் பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயுமிருக்கும் (ரோ. 8:10). நமது ஆவி புதுப்பிக்கப்பட்டதாய், இரட்சிக்கப்பட்டதாயிருக்கும் (எபே. 4:23). இன்றைக்கு நாம் ஆவியிலே மறுபிறப்பு அடைந்து விட்டோமென்றால், (யோ. 3:5) கிறிஸ்து நமக்குள்ளே இருக்கிறார் என்று அர்த்தம் (கலா. 2:20) நமது ஆவியின் ஜீவன் கிறிஸ்துவுடனே கூட தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது நாமும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவோம் என்பது தான் மகிமையின் நம்பிக்கை (கொலோ. 3:3,4). இந்த இரகசியமாகிய தேவ வசனத்தை பூரணமாய் தெரியப்படுத்துகிறதற்கு புறஜாதியாராகிய நம் பொருட்டு தேவனால் அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே பவுல் புறஜாதியார் அடங்கிய சபைக்கு ஊழியக்காரரானான் (கொலோ. 1:26).

பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவன் எருசலேம் ஆலயத்தின் மகாபரிசுத்த ஸ்தலத்திலே இருந்தார்: ஆனால் கிறிஸ்து மரித்த போது திரைச்சீலை மேலிருந்து கீழாய் இரண்டாய்க் கிழிந்ததன் பலனாய், தேவன் நமக்குள்ளே வந்துவிட்டார். நாமே அந்த ஆலயமாகி விட்டோம் (1கொரி. 3:16). என்னே ஆச்சரியம்! என்னே தேவ அன்பு! இஸ்ரவேலரோடு கூட இருந்தவர்: அவர்கள் மேல் இருந்தவர்: இன்றைக்கு நமக்குள்ளே வாசம் செய்கிறார். அல்லேலூயா! அவரே நமது மகிமையின் நம்பிக்கை.

தேசத்திலே பயங்கரமான கலாட்டாக்கள்: சண்டைகள் வந்து ஒழுங்கு சீர்கெடும் நிலை வரும்போது, அரசாங்கம் 144 தடை உத்திரவுபோடும். அப்படியே இரட்சிக்கப்பட்ட நமக்கு ஒரு நிலை வந்தால் நாமும் 144 தடை உத்திரவை போட்டுக் கொள்ள வேண்டும். அது தான் **"உலகத்தில் இருப்பவனிலும் உனக்குள் இருப்பவர் பெரியவர்"** என்ற 1 யோவான் 4ம் அதிகாரம் 4ம் வசனம். இதை விசுவாசித்து அறிக்கையிட்ட உடனேயே நிலைமைகள் மாறும்; வெற்றிப்பாதை கிட்டும். இது எப்படிக் கிடைத்தது? கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாய் நமக்குள் இருப்பதாலே! இந்த இரகசியத்தைத்தான் பவுல் மூலமாய் தேவன் வெளிப்படுத்த சித்தமாகி, அவனை புறஜாதிகளுக்கென்றே நியமித்தார். இந்த மகிமையின் ஐஸ்வர்யமாகிய இரகசியம் வெளிவந்ததற்காய் தோத்திரம்! இனி, இரட்சிக்கப்பட்ட புறஜாதிகளுக்குள்ளே கிறிஸ்துவானவர் இருக்கிறார் என்பதை அதிகமதிகமாய் அனைவரும் விசுவாசித்து, கிரியைகளிலே காட்டுவோம்! இந்த மகிமையின் சுவிசேஷம், நம்மை மகிமையின் மேல் மகிமைப்படுத்தி பரலோகம் போக ஆயத்தமாக்கட்டும்! இயேசு வருகிறார்!

ஆயத்தமாவோம்! (யோ. 15:7ன்படி இயேசுவின் வார்த்தை நமக்குள், மத்.28:20ன்படி பூமியின் கடைசிபரியந்தம் நம்மோடிருப்பதைத்தான்- அந்த பிரசன்னத்தைத்தான் - கிறிஸ்து நமக்குள்ளே இருக்கிறார் என்று பவுல் கூறுகிறார். மற்றப்படி, மனிதனாய் வந்த வார்த்தையின் உருவம் பரலோகிலே (1யோ.2:1,2); வார்த்தை நம்மிலே! அல்லேலூயா!)

❖ ❖ ❖

## "பவுல் சொல்லும் இரகசியங்கள்" No. 6

**"உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் தம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம்" 1கொரி 2:7.**

பவுல் சொல்லும் இரகசியமான தேவஞானம் என்ன? இந்த ஞானம் உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவனால் உண்டாக்கப்பட்ட தாம். இதைத்தான் நீதி 8:22-30 வசனங்கள் கூறுகின்றன. இந்த ஞானம் கர்த்தரின் அருகே செல்லப்பிள்ளையாய் இருந்ததாம்: இதைக் காண்கிறவன் ஜீவனைக் கண்டடைகிறானாம் (நீதி. 8:30,35). இப்படி சாலமோன் சொல்வதால் அந்த ஞானம் தான் இயேசு என்று சொல்பவர்களும் உண்டு. அப்படியானால் நீதி 8:24,26ன்படி அவர் உண்டாக்கப்பட்டவர் ஆகிறார். **"தேவனுக்கு கீழானவர்; அவர் தேவனல்ல"** என்ற நிலைக்கு உள்ளாகிறார். இது கிறிஸ்தவத்திற்கு விரோதமானது. அதனால்தான், மறைக்கப்பபட்டிருந்த இந்த இரகசியத்தை பவுல் மூலமாய் தேவன் வெளிப்படுத்தச் சித்தமானார்.

இந்த இரகசியமான தேவ ஞானத்தை இவ்வுலகத்தார் அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை சிலுவையில் அறையமாட்டார்களே (1கொரி 2:8). இந்த தேவ ஞானத்தை அறிந்து கொள்ள பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்க வேண்டும் (1கொரி 2:12) என பவுல் விளம்புகிறார். **"இயேசுவே நமக்கு ஞானமும் நீதியும் மீட்புமானார்" (1கொரி 1:31)** என்று பவுல் சொல்கிறார். ஞானமே இயேசு என்று சொல்லவில்லை; இயேசுவே நமக்கு தேவ ஞானமாய் இருக்கிறார் என்கிறார். தேவ ஞானம் பிதாவுடையது: அதை தேவன் அபிஷேகித்து வைத்திருந்தார். இன்றைக்கு அந்தப் பிதாவின் ஞானம் இயேசுவுக்குள்ளாய்.. இயேசு வழியாய் நமக்கு கிடைத்து இருக்கிறது. அல்லேலூயா!

பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்து கொள்ளுகிறதற்கு உரியவர்களாக வேண்டும் என்று பவுல்

விரும்புகிறார். இயேசுவுக்குள்ளே ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது என்றும் சொல்கிறார் (கொலோ 2:2,3). ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக இயேசுவுக்குள் வாசமாயிருக்கிறது (கொலோ 2:9). அல்லேலூயா! யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவ ஞானமாயிருக்கிறார் (1கொரி 1:24). உலக ஞானிகளை வெட்கப்படுத்தும்படி பைத்தியங்களைத் தெரிந்து கொண்ட அழைப்பைப் பாருங்கள். அழைக்கப்பட்டு, தேவ ஞானமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவுக்கு உட்பட்டு இருப்பதினாலே, தேவன் உலகத் தோற்றத்திற்கு முன்னே ஏற்படுத்தின இரகசியத்தை தமது ஆவியினாலே இன்று பவுல் மூலமாய் வெளிப்படுத்துகிறார். நாம் ஆவிக்குரியவர்களாய் இருப்பதால் ஆராயந்து நிதானித்து அறிகிறோம் (1கொரி 2:10,15). தேவத்துவத்தின் ஞானம், நீதி, பரிசுத்தம், மீட்பு போன்ற எல்லா பரிபூரணமும் சரீரபிரகாரமாக இயேசுவுக்குள் வாசமாயிருக்கிறது என்று பவுல் சொல்லும் ரகசியத்தை உணர்கிறோம். (1கொரி 1:31)

மனிதனுக்கான எல்லா தேவஞானமும் தேவத்துவத்தின் பரிபூரணமான மனுஷகுமாரனாகிய இயேசுவுக்குள் அடங்கியிருக்கிறது. தேவனுக்குரியவைகளை நிதானிக்க தேவ ஞானம் தேவை; அதாவது இயேசு கிறிஸ்து தேவை. அவர் (யோ 15:7) - அவரின் வார்த்தை நமக்குள் இருக்கும்போது தேவகாரியங்கள் அனைத்தும் புலனாகும்: அவரை இனி ஒருக்காலும் சிலுவையில் அறையமாட்டோம்.

❖ ❖ ❖

## "பவுல் சொல்லும் இரகசியங்கள்" No. 7

**"தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக் கொள்ளுகிறபடியே மகா மேன்மையானது"** (1தீமோ 3:16).

**"அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது"** (2தெச 2:7).

ஆக பவுல் இங்கே இரண்டு இரகசியங்களைப் பற்றிச் சொல்கின்றான். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று எதிர்மாறானவை என்பதால் இவைகளை ஒவ்வொன்றாய்ப் புரிந்து கொண்டால் தான் அடிப்படைச் சத்தியம் வெளிவரும். அவைகள் என்ன என்று பார்ப்போம்.

**"தேவ பக்திக்குரிய இரகசியம்"** என்பதை ஆங்கிலத்தில் **"Mystery of Godliness"** (தேவத்துவ இரகசியம்) என்று போடப்பட்டு

உள்ளது. கிறிஸ்துவைப் பற்றியே இது என பவுல் கூறுகிறார். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். எப்படி? கன்னிமரியின் வயிற்றில் பரிசுத்த ஆவியினால் பிறந்து தேவனுடைய குமாரன் ஆனார் (லூக்1:35) என்பதே இரகசியம். இயேசு **"மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனாய் இருக்கிறார்"** (ரோ 1:5) என்பதே ஆவியினாலே நீதியாக்கப்பட்ட இரகசியம். தேவதூதர்களால், உயிர்த்தபோது காணப்பட்டது இரகசியம். இஸ்ரவேலருக்கே உரியவர் என்ற நிலைமாறி அவர் புறஜாதிகளுக்கும் உரியவர் என்ற மறைபொருளை வெளிக்காட்டியதே இரகசியம். உலகத்தாராலே விசுவாசிக்கப்பட்டதே இரகசியமாயிருந்த காரியம். மகிமையிலே எடுத்துக்கொள்ளப்பட்டதே இரகசியமாயிருந்தது. இத்தனை இரகசிய காரியங்களும் மகா மேன்மையானவை. இதையே பவுல் விளக்குகிறார். இதற்குமேலும் உள்ள இரகசியங்கள் வெளி. 10 முதல் விளக்கப்படுகிறது.

**(Inquity) அக்கிரமமானது தேவபக்திக்கு (Godliness) எதிரியானது.** அக்கிரமத்தின் இரகசியம் தேவபக்திக்குரிய இரகசியத்துக்கு எதிரிடையானது. தேவபக்திக்குரிய இரகசியம். கிறிஸ்துவைப் பற்றி என்றால், அக்கிரமத்தின் இரகசியம் அந்திக் கிறிஸ்துவைப் பற்றியதாகும். ஆதி 3:15ல் சொன்னபடி ஸ்திரியின் வித்துக்கும், சாத்தானின் வித்துக்கும் பகைவரும். ஸ்திரியின் வித்து இயேசுவும் அவரின் பிள்ளைகளும்: சாத்தானின் குமாரன் அந்திக் கிறிஸ்து, கேட்டின் மகன் (1தெச 2:3). இதுவே இரகசியம்தான். இயேசு உயிர்த்து எழுந்ததுபோல அவனும் எழுவான் (வெளி 11:7, 13:3). பிசாசின் தூதர்களால் காணப்படுவான்: அவன் பிசாசுக்கு உரியவன் என்ற நிலைமாறி உலகிற்கே உரியவன் என்றாவான். உலகமே அவனை நம்பும். இதுவெல்லாம் அக்கிரமத்தின் இரகசியம்.

இந்த இரகசியம் இப்போதே கிரியை செய்கிறது. அது தான் அந்திக் கிறிஸ்துவின் ஆவி (1யோ 4:3). கிறிஸ்துவைப் பற்றிய "தேவ பக்திக்குரிய இரகசியத்தை" அறிய விடாமலே அக்கிரமத்தின் இரகசியம் கிரியை செய்கிறது. இவ்விரண்டையும் இரகசியமாய் இல்லாமல் பரசியமாய் பவுல் மூலமாய் வெளிப்படுத்திய தேவனுக்கு நன்றி! தேவத்துவ இரகசியத்தை அதிகமாய் அறிந்து கொள்வோம். அக்கிரமத்தின் இரகசியத்தை கண்களால் காணாமலே மறுரூபமாவோம். அல்லேலூயா!

❖ ❖ ❖

# 'யோவான் சொல்லும் இரகசியங்கள்' No.1

**"என் வலது கரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது"** (வெளி 1:20).

யோவான் இரண்டு இரகசியங்களைப் பற்றிச் சொல்கின்றான். அவன் பத்மூ தீவில் நாடு கடத்தப்பட்டிருக்கும் போது ஆவிக்குள்ளானான். அப்பொழுது இயேசு கிறிஸ்து ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவுவதையும், தமது வலது கரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருப்பதையும் தரிசனத்திலே காண்கின்றான் (வெளி 1:13.16). அப்போதுதான் தேவன் இந்த இரு இரகசியங்களையும் பற்றி எழுதச் சொன்னார்.

இந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம் (Messengers): ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம். இதிலென்ன இரகசியம் இருக்கிறது? அப்போஸ்தலர் காலம் வரை ஒரே சபையை காட்டினார் (மத் 16:18). ஆனால் இங்கே ஏழு சபைகள் என்று சொல்லப்பட்டுள்ளது. உலகத்தொடக்கம் முதல் இரகசியமாயிருந்த கிறிஸ்தவ சபையை பவுல் மூலம் விளக்கிய தேவன், யோவான் மூலமாய் ஏழு சபைகளின் இரகசியத்தை சொல்கிறார். இந்த ஏழு சபைகளைப் பற்றி வெளி 2,3ல் சொல்லப்பட்டுள்ளது. இந்த ஏழும் கிறிஸ்தவ சபைகள் தான். ஆனால் அப் 2:44-47ன்படி ஒரே சபையாயிருந்தவர்கள், ஏழு சபைகளாய் மாறியவர்கள் அல்லது மாறியிருக்கிறவர்கள் என்ற இரகசியத்தை தேவன் வெளிப்படுத்துகிறார். அப்போஸ்தலர்கள் காலத்திலேயே இந்த ஏழு சபைகளைப் பற்றிய குணாதிசயங்களோடு கூட ஒரே சபை இருந்திருக்கலாம். ஆனால் சபை சரித்திரத்தைப் பார்க்கும் போது ஒவ்வொரு காலத்திலும் இருக்கப் போகிற சபைகளைப் பற்றியே வரிசையாய் சொல்லியிருப்பதை அறியலாம். இப்போது லவோதிக்யா சபையின் நிலையில் பெரும்பாலான கிறிஸ்தவ சபைகள் இருக்கிற இரகசியத்தை அன்றே தேவன் வெளிப்படுத்தி இருக்கிறார். அல்லேலூயா!

இங்கே பொன் குத்துவிளக்குகள் என்பதை "விளக்குத் தண்டுகள்" (Lamp stand-KJV) என்று உணரலாம். பரிசுத்த ஆவியாகிய எண்ணெய் உள்ளடக்கியிருக்கிற சபையாகிய விளக்குத் தண்டிலிருந்து திரியின் மூலம் இயேசுவாகிய விளக்கு எரிந்து கொண்டிருக்கிறார்.

நட்சத்திரங்கள் என்றாலே தேவ தூதர்கள் என அர்த்தமானாலும், **''செய்தி கொடுப்பவர்கள்'' (Messengers)** என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளதால், ஏழு சபைகளிலிருந்தும் கிளம்பும் ஊழியக்காரர்களையே இது குறிக்கிறது எனலாம். இயேசு தன் வலது கரத்தாலே ஏந்திக் கொண்டிருப்பதால் அவர்கள் ஊழியர்களே என அறியலாம். ஆசாரியத்துவ முறைப்படி அல்லாமல், ஏழுதரப்பட்ட சபைகளிலிருந்தும் ஏழு வகையான ஊழியக்காரர்கள் ஒரே காலத்திலோ, ஏழு வித்தியாசமான காலங்களிலோ எழும்புவார்கள் என்ற இரகசியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அல்லேலூயா! இங்கு சொல்லப்படும் ஏழு என்பது சரியாய் 7 என்ற எண்ணிக்கையில் இல்லாமல் முழுமை என்ற அர்த்தத்திலும் இருக்கலாம்.

❖ ❖ ❖

# 'யோவான் சொல்லும் இரகசியங்கள்' No.2

**''மேலும், இரகசியம், மகாபாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதி இருந்தது''**- வெளி 17:5.

யோவான் சொல்லும் "இரகசியம், மகாபாபிலோன்" என்பது ஒரு நகரமாயிருக்க முடியாது. எப்படியெனில் வெளி 21:9-10ன்படி காட்டப்பட்ட "புதிய எருசலேம்" கிறிஸ்துவின் மணவாட்டியாய்க் காட்டப்பட்டிருப்பதால், இது ஒரு ஸ்திரியை அல்லது ஒரு அமைப்பைக் குறிப்பதாகும். கிறிஸ்துவுக்கு சபையாகிய மணவாட்டி உண்டு என்ற இரகசியத்தை பவுல் மூலம் சொன்ன தேவன், அந்திக் கிறிஸ்துவுக்கு மணவாட்டியே இது என உணர வாய்ப்பு தருகிறார். இந்த அந்திக் கிறிஸ்துவின் மணவாட்டி: சகல பொய் மதங்களை பின்பற்றும் அமைப்பு: பாபிலோன் என்றாலே குழப்பம் நிறைந்த அமைப்பு: இவள் மிருகத்தின்மேல் அமர்ந்துள்ளாள். இந்த மிருகம் அந்திக்கிறிஸ்துவே (வெளி 17:3-13). வெளி 17:4,6 போன்ற வசனங்களின்படி பார்த்தால் அந்த ஸ்திரீ உபத்திரவ காலத்தில் எழும்பிப் பிரகாசிக்கப் போகிற தற்கால ரோம சபையின் கூட்டுச் சபைகளையே குறிக்கிறது எனலாம். அந்திக் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய இந்த பாபிலோன் சபை, தேவ பக்தியின் வேஷம் தரித்து Universal Church ஆக காணப்படும் என்ற இரகசியத்தை யோவான் சொல்கிறார். வெளி 17:5ன்படி இது

ஒரு அரசுமதமாய் இருக்கும். இது கொஞ்ச காலமே ($3^1/_2$ வருடம்). வெளி 17:16ன்படி 10 ராஜ்யங்களின் கூட்டணிக்கு (தானி 7:13) அதிகாரங்கள் இந்த பாபிலோன் சபையால் மட்டுப்படுவதால், இந்த அமைப்பு அழிக்கப்பட்டுப் போகும். அப்பொழுது தானே மிருகத்தின் தொழுகை ஆரம்பமாகும்.

இப்படிப்பட்டதான மகாபெரிதான இரகசியத்தை இந்தக் காலத்தில் யோவான் மூலம் வெளிப்படுத்திய தேவனுக்கு தோத்திரம்!

❖ ❖ ❖

# 'இயேசு சொல்லும் இரகசியம்'

**"பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; அவர்களுக்கோ அருளப்படவில்லை"** (மத் 13:11) என்று இயேசு சொன்னார். பரலோக ராஜ்யத்தின் இரகசியங்கள் அன்றுவரை மறைக்கப்பட்டு, இயேசுவால் வெளிப்படுத்தப்பட்டது. அந்த இரகசியம் தான் என்ன?

மத் 19:24ன்படி தேவனுடைய ராஜ்யம் என்ற ஒன்று உள்ளது. என அறிகிறோம். இதன் தலைமை செயலகம் பரலோகில் உள்ளது. இதற்கு தேவனே ஆளுநர். வானம் அவருக்கு சிங்காசனம்; பூமி அவருக்கு பாதபடி: வானத்துக்கும் பூமிக்கும் அவரே ராஜா. ஆனால் மத் 4:17ல் உள்ள பரலோக ராஜ்யம் என்பது என்ன? 1கொரி 15:24ன்படி இயேசு ராஜ்யத்தை பிதாவிடம் ஒப்படைப்பார் என அறிகிறோம். ஒப்படைக்கப்போகும் இந்த ராஜ்யத்தை இயேசுதான் ஸ்தாபிப்பார் என்று வேதம் ஆதிமுதல் பறைசாற்றுகின்றது (2சாமு 7:8-17, சக 12:8, லூக் 1:31-33). இதை ஸ்தாபிக்கவே இயேசு வந்தார்; அது தான் பரலோக ராஜ்யம் **(Kingdom of Heaven).** இப்படிப்பட்டதான இராஜ்யத்தை ஏற்றுக்கொள்ள மனதின்றி, யூத ராஜாவாகிய இயேசுவை (மத் 2:2) புறம்பே தள்ளினார்கள். இதை முன்கூட்டியே உணர்ந்த இயேசு, பரலோக ராஜ்யத்தின் இரகசியத்தை முன்பாகவே வெளிப்படுத்துகிறார். இந்த பரலோக ராஜ்யம் இயேசுவின் மரணத்திற்கும், அவரின் மகிமையான வருகைக்கும் இடையில் நிறைவேறும் என்கிறார்(மத் 13:1-50). சபை கட்டப்படும் இரகசியம் (மத் 16:18) இந்த கால கட்டத்தில் தான் நடக்கும் என்றும் இயேசு கூறுகிறார். இந்த சபையினாலே தான் பரலோக ராஜ்யம் நம் காலத்தில் ஆவிக்குரிய ரீதியில் கட்டப்படுகிறது. அதற்கு நாமெல்லாரும் சாட்சி. இந்த இரகசியம் இப்போது தான் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நாமெல்லாரும் (இரட்சிக்கப்பட்ட) பரலோக ராஜ்யத்தில் இணைந்துவிட்டோம். அல்லேலூயா! இயேசுவே நமக்கு ஆண்டவர். இதை ருசித்துப் பாருங்கள். (See மத் 6:33)

இந்த பரலோக ராஜ்யத்தின் ஆண்டவராகிய இயேசுராஜா ராஜாதி ராஜாவாய் வந்து தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து 1000 வருடம் ஆட்சி செய்வார் (மத் 24:27-30) (அப் 15:14-17; வெளி 20:1-10). பரலோக ராஜ்ய உறுப்பினர்களாகிய சபையும், இஸ்ரவேலரும் இந்த பூமியிலே அரசாளுவார்கள். பூமியிலே தெய்வீக அதிகாரம் நிலை-நிறுத்தப்பட்டு, இந்த ஆட்சியை பிதாவிடம் ஒப்படைப்பார். அப்போது தேவனும் ஆட்டுக்குட்டியான வரும் இருக்கின்ற சிம்மாசனத்தின் கீழ் (வெளி 22:1) தேவனுடைய இராஜ்யம், புதிய வானம் புதிய பூமியில் ஸ்தாபிக்கப்படும். மத் 19:24 பரிபூரணமாய் விளங்கும். இயேசுவின் தலைமையிலான தற்கால பரலோக இராஜ்யத்தில் நாம் பரிபூரணப்பட்டால் தான், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும். இந்த பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மனந்திரும்பி இயேசுவை ஆண்டவரென்றும் இரட்சகரென்றும் இருதயத்திலே விசுவாசித்து, வாயினாலே அறிக்கை செய்து பாவமன்னிப்புக்கென்று முழுக்கு ஞானஸ்நானம் பெற்றே ஆக வேண்டும் (அப் 2:47: 22:16) அல்லேலூயா! இப்போது நடப்பது பரலோக ராஜ்யம் ஆவிக்குரிய ரீதியில். இனி நடக்கப்போவது உண்மையான (actual) 1000 வருட பரலோக ராஜ்யம் இந்த பூமியில். அதன்பின் தேவனுடைய ராஜ்யம் புதியவானம் புதிய பூமியில். ஆமென்! இப்போதுள்ள பரலோகராஜ்ய ரகசியம் நமக்கு மாத்திரமே இயேசுவால் வெளிப்படுத்தப்படுகிறது. அல்லேலூயா!

❖ ❖ ❖

# அந்நிய பாஷையா? அடையாளமா?

எங்கு பார்த்தாலும், "பரிசுத்த ஆவியைப் பெற்றாயா? அந்நிய பாஷை பேசுகிறாயா?" என்ற கேள்வியே உன் காதில் விழுகிறதை அறிகிறாய். இதனால் கோபப்பட்டவர்களும் வெறுப்படைந்தவர்களும், தாறுமாறாய் பேசுகிறவர்களும் ஏராளம்: அந்தக் கூட்டத்தில் ஒருவனாய் இருந்தேன் நான். தேவன் தாமே என்னைப் பிரித்தெடுத்தார். அல்லேலூயா!

**"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாய் இருக்கின்றது.."** (1கொரி 6:19, 3:16). நமது சரீரமே

ஆலயம்: இந்த ஆலயத்தில் தான் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். இதைத்தான் 1யோ 4:4ம் சொல்லுகின்றது. இந்த நிலை புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே; ஆனால் பழைய ஏற்பாட்டிலோ நமது சரீரமல்ல ஆலயம்: எருசலேமில் கட்டப்பட்டிருந்தது தான் ஆலயம். அதற்குள்ளே தான் பரிசுத்த ஆவியாகிய தேவன் வாசம் பண்ணினார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தினால் தேவாலயத்திரைச் சீலை மேலிருந்து கீழாக இரண்டாய்க் கிழிந்ததன் பலனாக, அந்த தேவாலய மகிமை போய்விட்டது. அந்த மகிமையை நமக்கு தேவன் அளித்துள்ளார். அப்படிப்பட்ட மகிமையை அடைவது எப்படி? பழைய ஏற்பாட்டு தேவாலயத்தில் இருந்த தேவன் நமக்குள்ளே வருவது எப்படி? இந்த சரீரம் தேவாலயமாக மாறும்போதுதான். பழைய தேவாலயத்தில் நடந்த அனைத்து அற்புத அடையாள மகிமையும் நமக்கு உண்டாகுமா?

**"இயேசு நின்று சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்; வேத வாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்"** (யோ 7:37,38). தாகத்திற்கு பானம் பண்ணுவது ஒரு அனுபவம்: அதன் பின்பு ஜீவநதிகள் ஓடுவது இன்னொரு அனுபவம். இந்த இரண்டு அனுபவங்களையும் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தேவன் இயேசு திட்டமாய்ச் சொல்கிறார்: அதனால்தான் சத்தமிட்டுச் சொல்கிறார். காதுள்ளவன் கேட்கக்கடவன். ஜீவதண்ணீர் என்பது பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது என்று நாமறிவோம். (Refer ஏசா 44:39, யோ 7:39) இந்த நிலைவந்தால் தான் பழைய ஏற்பாட்டு தேவாலய மகிமை நமக்கு வந்து சேரும்!

யோ 7:39ன்படி விசுவாசிகள் பரிசுத்த ஆவியைப் பெற வேண்டும் என்று அறிகிறோம். பிலிப்பு மூலமாய் வசனத்தைக் கேட்டு இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரை பெறாமலிருந்ததை பேதுருவும், யோவானும் கண்டு (அப் 8:15) அவர்களுக்காய் ஜெபம் பண்ணினதின் நிமித்தம் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் என்று அறிகிறோம். எபேசு பட்டணத்து மக்கள், பவுலின் வார்த்தையினால் உணர்த்தப்பட்டு ஞானஸ்நானம் பெற்ற பிறகு, பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் என்று அறிகிறோம். (அப் 19:5,6) அப்படியே, தேவனுடைய மனுஷனான கொர்நெலியு (அப் 10:2,22) பேதுருவின் வசனத்தைக் கேட்கும்பொழுதே பரிசுத்த ஆவியைப் பெற்றான் (அப் 10:44,45). தமஸ்குவுக்குப் போகும் வழியிலேயே இரட்சிக்கப்பட்டு, அனனியாவால் சகோதரன் என்று அழைக்கப்படுமளவுக்கு விசுவாசியான பவுல், பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும்படிக்கு அனனியா வீட்டுக்கு

வந்தான். (அப் 9:17) இயேசுவோடு கூட இருந்து, ஞானஸ்நானம் பெற்று, தேவனுடைய விசுவாசிகளாய் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருந்த நூற்று இருபது பேர், பெந்தேகொஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் (அப் 2).

ஆக, பரிசுத்த ஆவியைப் பெறுகின்ற அனுபவம், விசுவாசிகளான பிறகுதான் என்று தெள்ளத் தெளிவாய் விளங்குகின்றதல்லவா! நீங்களும் புதிய ஏற்பாட்டு விசுவாசிகள்தானே! இந்த அனுபவம் உண்டா?

எபே 1:13ன்படி விசுவாசிகளாய் ஆனபோதே பரிசுத்த ஆவியை பெற்றுவிட்டேன் என்கிறாயா? ஆங்கில மொழிபெயர்ப்பை படித்தால் புரியும்.

**"In whom ye also trusted after ye heard the word of truth the gospel of your salvation; in whom also after ye believed ye were sealed with that Holy spirit of Promise"** இங்கே "At the time of belief" அல்ல: "after you believed" விசுவாசியாய் ஆனபிறகுதான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியை பெற முடியும் என்று யோ 7:39ல் சொன்னபடியே இங்கே நடந்திருக்கிறது அல்லவா!

யோ 3:17ன்படி உலகம் இரட்சிக்கப்பட முடியும். ஆனால் இரட்சிக்கப்படாத உலகம் பரிசுத்த ஆவியைப் பெற முடியாது. இதை,

**"உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ளமாட்டாது"** என்று யோ 14:17 விளக்குகிறதல்லவா! அப்படி என்றால் பரிசுத்த ஆவியை யார் பெற முடியும்? ரோ 10:9-10ன்படி "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஆண்டவரென்றும், இரட்சகரென்றும் இருதயத்திலே விசுவாசித்து வாயினாலே அறிக்கை பண்ணி இரடசிக்கப்பட்டவர்கள் தான் பெற முடியும். ஏனென்றால் இவர்கள் உலகத்தாராய் இருக்கும் போது பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து" (யோ 16:8,9) பரிசுத்த ஆவியானவர் உணர்த்தியதால், மனந்திரும்பி, விசுவாசிகளாய் இருப்பர்; இதனால் பரிசுத்த ஆவியை அவர்கள் அறிந்தும் உணர்ந்தும் இருப்பார்கள்: அதன்படியே வாக்குத்தத்தமுள்ள பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுவார்கள். அதன் பயனாக, விசுவாசிகளோடு இருந்த ஆவியானவர், "நான் பிதாவை வேண்டிக் கொள்வேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருருளுவார்" (யோ 14:16) என்ற வசனப்படி, விசுவாசிகளுக்குள்

(In-Refer யோ 14:17 King James) என்றென்றும் இருப்பர். அவர் வாசமாயிருப்பதால் நமது சரீரம் தேவனுடைய ஆலயமாய் மாறும். இயேசு கிறிஸ்து தேவனால் உலகத்திற்கு அளிக்கப்பட்ட பரிசு (யோ 3:16): பரிசுத்த ஆவியானவர் தேவனால் விசுவாசிகளுக்கு அளிக்கப்பட்ட பரிசு (லூக் 24:49, யோவே 2:28-32: அப் 1:15) ஆக நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது.

1. பரிசுத்த ஆவியானவர் நம்முடன் (With us)
2. பரிசுத்த ஆவியானவர் நமக்குள் (In us)
3. பரிசுத்த ஆவியானவர் நம்மேல் (Upon us / filled with)

நாம் விசுவாசிகளாய் மாறினபோது, பாவத்தை உணர்த்தி தேவனிடம் வழி நடத்திய பரிசுத்த ஆவியானவர் நம்முடன் இருக்கிறார். சத்திய வசனத்தைக் கேட்டு, ஆவியானவரால் கிறிஸ்துவுக்குள் பிறப்பிக்கப்பட்டு, மறுபிறப்பின் அனுபவத்தோடு புது சிருஷ்டியாய் இருக்கும்போது (யோ 3:3,5) He is with us. அவர் நமக்குள்ளே இருக்க வேண்டிய அனுபவம்தான், பரிசுத்த ஆவியைப் பெறுகின்ற அனுபவம். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கு இந்த அனுபவமுமில்லை; சிலாக்கியமுமில்லை; ஏனென்றால் எபி 11:39,40 வசனப்படி நாம் விசேஷித்தவர்கள்; மணவாட்டி. யோவேலிலே சொல்லப்பட்ட வாக்குத்தத்தம் இப்போது நமக்குத்தான். அவர்களுக்கோ அந்திகிறிஸ்துவின் நாட்களில் (யோ 2:28-32). அல்லேலூயா!

**"என்றென்றைக்கும் நம்முள்ளே இருப்பார்" (யோ 14:16) ஒருக்காலும் நம்மைவிட்டு எடுபடார்.**

இரண்டாவது அனுபவத்தைப் பெற முதலாவது அனுபவம் கண்டிப்பாய் தேவை. முதலாவது அனுபவத்தோடு இயேசுவோடே ஊழியம் செய்த அப்போஸ்தலர்கள், அவர் மரித்தபின் பயந்து நடுங்கி இருந்தனர்; உயிர்த்தெழுந்த இயேசுவைப் பார்த்த பிறகும், மக்களைப் பிடிக்க இயேசு அழைத்தார் என்பதை மறந்து, மறுபடியும் மீன் பிடிக்க போனார்கள். அதாவது தங்களோடு பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் என்று உணரவில்லை; பழையபடி உலகப் பிரகாரமான மனுஷர்களாகி விட்டார்கள்; இந்த நிலையில், முதல் அனுபவமே இல்லாமல் இரண்டாவது அனுபவத்தை அவர்களால் எப்படி பெற முடியும் என்பதால் அவர்களுக்கு உணர்த்தும்படியாய். பரிசுத்த ஆவியானவர் அவர்களோடும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் (With Holy Spirit) "இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி; "உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக; பிதா என்னை அனுப்பினது போல நானும் உன்னை அனுப்புகிறேன்" என்று சொல்லி, "அவர்கள் மேல் ஊதி

பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்" (யோ 20:21,22). இதன் மூலமாய் அவர்கள் பரிசுத்த ஆவியானவர் தங்களோடு இருக்கிறார் என்று உணர்ந்து, "...மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருந்தார்கள்" (லூக் 24:58,59).

இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளையே! நீயும் பரிசுத்த ஆவியானவர் உன்னோடு (with) இருக்கிறார் என்று உணர்ந்து கொள். ஆவியினாலும் ஜலத்தினாலும் மறுபிறவியடைந்து விட்டேன் என்று உறுதிப்படுத்திக்கொள். அப்போஸ்தலர்கள் போல சந்தோஷமாய் தேவனைத் துதித்துப்பாடு, நிச்சயமாய் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியை அவர்களைப்போல பெறுவாய். நீ இரட்சிக்கப்பட்டதை, விசுவாசியாய் ஆனதை மறந்து விட்டாயானால் உன்னோடு இருக்கும் பரிசுத்த ஆவியானவர் விலகிப் போவார். பிறகு இரண்டாவது அனுபவம் வராது. இந்தக் காலத்தில் இயேசு நேரிடையாய் வந்து நம்மேல் ஊதமாட்டார்; வேதவசனமே நம்மேல் ஊதப்படும். சங் 51:11 உனக்கு எச்சரிப்பாய் இருக்கட்டும்.

பரிசுத்த ஆவியானவரின் இரண்டு கிரியைகளைப் பார்த்தோம். அதில் முதல் கிரியைமட்டும் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களிடம் இருந்தது. இ∴தல்லாமல் இன்னொரு கிரியையும் அவர்களிடம் இருந்தது.

அதுதான், 'பரிசுத்த ஆவியானவர் நிரப்பப்படல். (Filled with Holy Spirit) அல்லது பரிசுத்த ஆவியானவர் நம்மேல் இருத்தல்' (Upon us).

இந்த அனுபவம் இயேசுவோடே இருந்தது (ஏசா 61:1-3) மரியாளோடு இருந்தது (லூக் 1:35); எலிசபெத்தோடு இருந்தது (லூக் 1:41). சவுலோடு இருந்தது: தாவீதோடு இருந்தது: அனைத்து பரிசுத்தவான்களோடும் இருந்தது. பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதலோ அல்லது ஆவியானவர் நம்மேல் இருப்பதோ ஒரு சில குறிப்பிட்ட தேவ காரியங்களுக்காகத் தான் என்று அறிகிறோம். அந்தக் காரியம் முடிந்தபின், இந்த அனுபவமும் முடிந்து விடுகிறது. இதனால் அடிக்கடி தேவ ஆவியால் நிரப்பப்பட விரும்புகிறோம். எந்த ஒரு காரியம் செய்யத் தொடங்கும் போதும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும் அனுபவம் - நம்மேல் வரும் அனுபவம் - பழைய ஏற்பாட்டிலும் உண்டு: புதிய ஏற்பாட்டிலும் உண்டு. இதுதான் அபிஷேகம் என்பது.

ஆக, With, In, Upon/Filling என்ற மூன்று, பரிசுத்த ஆவியானவரால் கிடைக்கப்பெறும் அனுபவங்களில், இரண்டாவது

அனுபவம் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நமக்கு மட்டுமே தேவனால் அளிக்கப்பட்டது.

அப் 1:4ல் ஒரு காரியம் சொல்லப்பட்டள்ளது: அது தான் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம். அதுதான் "அவர் (இயேசு) பரிசுத்த அவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்பார் (மத் 3:11)" என்ற யோவான் ஸ்நானனின் தீர்க்கதரிசன நிறைவேறுதல். எபே 1:13ன் அனுபவம் அதுதான். இந்தக் காரியத்தை தேவன் இயேசு அப் 1:8ல் விளக்கமாகச் சொல்கிறார்.

**"But ye shall receive power after the Holy Spirit is come upon you".**

யோ 14:16-17ன் படியான வசன நிறைவேறுதல் இதுதானே:-

**"But ye know him; for he dwelleth with you and shall be in you".**

ஆக இந்த பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவதிலே பரிசுத்த ஆவியானவரின் 'In', 'Upon/Filling' என்ற இரண்டு அனுபவங்களும் இணைந்து செயல்படுகின்றன என்று அறிகின்றோம். கிறிஸ்தவனுக்கு மூன்று விதமான ஞானஸ்நானப் பிரிவுகள் உண்டு. எப்படி ஒரு தேவன் மூன்று ஆள்தத்துவமாய் இருக்கிறாரோ அப்படியே ஒரே ஞானஸ்நானம் மூன்று பிரிவுகளாய் உள்ளது. (See "ஸ்நானங்கள்" என்று எபி 6:1,2ல் உள்ளதை)

1. <u>கிறிஸ்துவின் வசனத்தால் ஞானஸ்நானம்:</u> அதாவது இயேசுவை ஆண்டவரென்றும் இரட்சகரென்றும் ஏற்றுக் கொள்வது. இது கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம்.

2. <u>ஜலத்தினால் ஞானஸ்நானம்:</u> பாவத்திற்கு மரித்து நீதிக்கு பிழைக்கும் அடையாளம். தேவனோடு உடன்படிக்கை பண்ணுவது.

3. <u>பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்:</u> பரிசுத்த ஆவியானவர் நம் சரீரத்தை ஆலயமாகக் கொண்டு நமக்குள்ளே இருப்பது! நமக்கு ஒவ்வொரு காரியங்களுக்கும் பெலன் - Power தருவது. கிறிஸ்தவனுக்குரிய அடிப்படையான அஸ்திபாரம் என்று பவுலா் எபி 6:1-2ல் சொல்லும்போது "ஸ்நானங்களுக்கு அடுத்த உபதேசம்" என்று "ஸ்நானங்கள்" என்று பன்மையில் காட்டுகிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இந்த மூன்று பிரிவுகளடங்கிய ஞானஸ்நானங்கள் நிச்சயம் தேவை, இதுதான் அடிப்படை.

பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் என்பது புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு மட்டுமே அருளப்பட்டிருக்கிறது என்று அறிந்தோம்.

இதைப் பெறத்தான் அப்போஸ்தலரோடு சேர்ந்த 120 பேர் எருசலேமிலே காத்திருந்தார்கள். நாமும் அப்படி காத்திருக்க வேண்டும் என்று சொல்பவர்களும் உண்டு. அவர்கள் அறிந்து கொள்ள வேண்டியது.

1. சமாரியர்கள் காத்திருந்து பரிசுத்த ஆவியைப் பெறவில்லை (அப்8)
2. பவுல் காத்திருந்து பெறவில்லை
3. எபேசியர் காத்திருந்து பெறவில்லை (அப் 19)
4. கொர்நேலியு காத்திருந்து பெறவில்லை.

நாமும் காத்திருந்து பெறத்தேவையில்லை. அப்போஸ்தலர்கள் ஏன் காத்திருந்தார்கள்? எருசலேமில் காத்திருங்கள் என்பது இயேசுவின் கட்டளை. நாம் அந்தக் கட்டளைப்படி காத்திருக்க வேண்டுமானால் எருசலேமில் போய் காத்திருக்க வேண்டும். இது முடியக்கூடிய காரியமா? இது தேவைதானா? பரிசுத்த ஆவியானவர் பெந்தேகொஸ்தே நாளிலேயே பூலோகம் வந்துவிட்டார். இது ஆவியானவரின் யுகம். ஒவ்வொரு ஆளும் காத்திருந்து அவரை மறுபடியும் பரலோகிலிருந்து வரவழைக்க முயல்வது அறிவீனம். ஏற்கெனவே உலகிற்கு பரிசுத்த ஆவியானவர் பிதாவால் அனுப்பப்பட்டு விட்டார்; அவரை விசுவாசத்தோடு பெற்றுக் கொள்ள வேண்டியது நம் கடமை. பரிசுத்த ஆவியானவரை, உபவாசித்து, பரிசுத்தமாயிருந்து தேவனை மன்றாடிக் கேட்டுப் பெறவேண்டும் என்று பலர் நினைக்கிறார்கள். இது சரியான சிந்தனை இல்லை. இயேசுவின் ஊழியத்தின்போது, ஜெபத்திலே பிதாவை வேண்டிப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று லூக் 11:13ல் சொன்னார். ஆனால் அவரின் ஊழிய முடிவிலே அவரே பிதாவினிடத்தில் வேண்டிக் கேட்டு, பரிசுத்த ஆவியை அனுப்பி வைப்பார் என்று யோ 14:16-17ல் சொன்னார். அதன்படியே பரலோகம் போன 10வது நாள் பரிசுத்த ஆவியானவரை அனுப்பி வைத்தார். எனவே நாம் “அனுப்ப வேண்டி ஜெபிக்க தேவை இல்லை.” இயேசுவே ஜெபித்து அனுப்பிவிட்டார். அனுப்பப்பட்டவர் நம் அருகிலேயே இருக்கிறார். பெற்றுக் கொள்ள வேண்டியவர்கள் நாம்.

இந்த பிதாவின் வாக்குத்தத்தம், நமக்கல்ல: அப்போஸ்தலர்களுக்குத்தான் என்போரும் இன்று உண்டு. **“வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது”** (அப் 2:39) என்ற வசனத்தை அறிக.

எபே 4:30ன்படி எபேசியர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் முத்தரிக்கப்பட்டார்கள் என்று அறிகிறோமே! இந்த முத்திரை பதிக்கப்பட்டவர்கள் தான் பரலோக ராஜ்யத்தில் முன்னுரிமை பெறுவர். தேவனுடைய பிள்ளையே! விழித்தெழு! பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக்கொள். அப்போது:

1. **பரிசுத்த ஆவியானவர் உனக்குள் தங்குவார் (IN) அதனால்**
   - a. மாம்ச கிரியைகளில் வெற்றி (ரோ 8:2-4; கலா 5:16-17)
   - b. சரீரம் தேவனின் ஆலயம் (1கொரி 6:19)
   - c. கிறிஸ்துவின் சாயல் ஏற்பட (கலா 5:22-23) (அதாவது ஆவியின் கனியாக உள்ள குணாதிசயத்திற்காக)
   - d. பலவீனங்களில் நமக்கு வெற்றி (ரோ 8:26)
   - e. ஜெபத்திலே தரித்திட (எபே 6:18)
   - f. புத்திர ஸ்வீகாரத்தை நிலை நிறுத்த (கலா 4:6: ரோ 8:15)
   - g. பிதாவினிடம் சேரும் சிலாக்கியம் (எபே 2:18)
   - h. வேத வசனத்தை, நம்மை சுத்திகரிக்கவும், பரிசுத்தமாக்கவும் உபயோகிக்க (எபே 5:26; 2தெச 2:13; 1பேது 1:2)
   - i. ஆறுதல் பெற: நமக்காகப் பரிந்து பேசப்பட (அப் 9:31; ரோ 8:26)
   - j. வரங்கள் கிரியை செய்ய (1 கொரி. 12)
   - k. இயேசுவை மகிமைப்படுத்த (யோ 16:17)
   - l. சாத்தானை மேற்கொள்ள (1யோ 4:4)

   மற்றும் பல காரியங்கள் ஏதுவாகும்.

2. **பரிசுத்த ஆவியானவர் உன்மேல் வருவார்; உன்னை நிரப்புவார். (Upon-Filling) அதனால்**
   - a. ஆவிக்குரிய வல்லமை உண்டு (1கொரி 14:4)
   - b. இயேசு செய்த கிரியைகளை செய்யலாம்: அதற்கு மேலும் செய்யலாம் (யோ 14:12)
   - c. தேவனோடு இரகசியம் பேச (1கொரி 14:2)
   - d. ஆவியானவர் நம்முள் உள்ளார் என உணர
   - e. விசுவாசத்தில் உறுதிப்பட: ஸ்திரப்பட (ரோ 1:10: யூதா 20)
   - f. சரீர, ஆத்ம இளைப்பாறுதல் கிடைக்க (ஏசா 28:11-12)
   - g. சகலத்தையும் அறிய (1யோ 2:20)
   - h. ஊழியத்தின் வல்லமைக்கு (அப் 1:8)
   - i. இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசயங்கள் நடக்க

   இன்னும் பல காரியங்கள் ஏதுவாகும்.

இப்படிப்பட்ட பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் ஒரே ஒரு முறைதான் கிறிஸ்தவ வாழ்க்கையிலே. ஆனால் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படல் அல்லது பரிசுத்த ஆவி நம்மேல் வரல் என்பது கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதும் நடக்க வேண்டிய அனுபவம். பரிசுத்த ஆவியானவர் ஒருமுறை உள்ளே வந்துவிட்டால் நமக்குள்ளே தங்குவார்: ஆவியின் கனிகள் வளர்ச்சி பெறும்: பரலோகம் போக முடியும். ஆனால் தொடர்ந்து பரிசுத்த ஆவியில் நிரப்பப்படும் பொழுது. ஆவியின் வரங்கள் கிரியை செய்யும்: ஊழியம் பெருக வாய்ப்புண்டு: பரலோகம் போனால் கிரீடங்கள் பெற வழிவகைகள் உண்டு. (Compare அப் 2:4 றவை 4:29-31 & எபே 1:13,14 with 5:18).

இதைப் படித்துக் கொண்டிருக்கிற தேவ ஜனமே! முதலில் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்: அப்போதுதான் பரிசுத்த ஆவியானவர் உனக்குள் இருக்கிறார் என்ற உணர்வு வரும். பரிசுத்த ஆவியை பெற்றுவிட்டாய் என்ற திருப்திவரும்.

இரட்சிக்கப்படுவது எப்படி தேவனுடைய கிருபையோ அப்படியே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு தேவனின் வரங்களைப் பெறுவதும் தேவ கிருபையே! (1கொரி 12:11 with எபே 2:8) நம்மை தேவன் **''அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாகவும் ராஜரீக ஆசாரிய கூட்டமாயும்''** (1பேது 2:9) வைத்துள்ளதால் தேவனின் வரங்களை தேவ கிருபையால் பெற வேண்டியது முக்கியமே!

அப்படியானால் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுவிட்டேன்: பரிசுத்த ஆவியைப் பெற்றுவிட்டேன் என்று அறிவது எப்படி என்று கேட்கிறாய்?

அதற்கு முன்னால் ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். தண்ணீர், பாத்திரத்தோடு இருப்பது (With Vessel) என்பது வேறு: பாத்திரத்திற்குள் இருப்பது என்பது வேறு: பாத்திரத்தின் மேல் நிரம்பி வழிவது (Filled Upon) என்பது வேறு: இந்த கடைசி காலத்திலே இந்த மூன்றாவது அனுபவம்தான் தண்ணீரான பரிசுத்த ஆவியோடு, சரீரமான பாத்திரத்திற்கு அதிகம் தேவை என்று தேவன் நினைக்கிறார். அதனால்தான் "ஜீவ தண்ணீர் புறப்பட்டு ஓடும்" என்று யோ 7:39ல் சத்தமிட்டு இயேசு சொன்னார். இதைத்தானே அப் 1:8: மத் 28:18-19 வசனங்கள் விளம்புகின்றன (Refer யூதா 20, எபே 4:19, 6:18).

அப் 2ம் அதிகாரத்தில் பிதாவின் வாக்குத்தத்தப்படி, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட நிகழ்ச்சி

விளக்கப்பட்டிருக்கின்றது. அங்கே பேதுரு சொல்லுகிறார். **"அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தின்படி நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்" - அப் 2:33.**

அவர்கள் கண்டது என்ன? **"அக்கினிமயமான நாவுகளைப் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது"** - (அப். 2:3). அவர்கள் கேட்டது எதை? "அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின் படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்" அப். 2:4.

ஆக பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றவன் அந்நிய பாஷைகளிலே பேசுவான்: எருசலேமிலே ஆவியானவர் இறங்கியதை கண்டனர். ஆவியானவர் ஒரே ஒரு முறை தான் பரலோகிலிருந்து இறங்கினார். இப்போது இந்த உலகிலேயே இருக்கிறார். எனவே பெந்தேகொஸ்தே நாளுக்குப் பிறகு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறுகிறவர்களுக்கு அன்று போல அக்கினிமயமான நாவுகளைப் போல பரலோகிலிருந்து இறங்கமாட்டார். அப்படி இறங்கியதாகவும் வேத ஆதாரமில்லை; ஆனால் அவர்களோட உள்ள பரிசுத்த ஆவியானவரைப் பெறும் போது இரண்டாவது காரியமான "வெவ்வேறு பாஷைகளில்" பேசியதாக வேதம் கூறுகின்றது.

1. சமாரியர்கள் ஞானஸ்நானம் மட்டும் பெற்றிருந்து, பரிசுத்த ஆவியைப் பெறாமல் இருந்தார்கள் என்று பேதுருவும் யோவானும் கண்டார்கள் (அப் 8:15) எப்படிக் கணடார்கள்? அவர்கள் அந்நிய பாஷைகள் பேசாமலிருந்ததே, பேதுருவும் யோவானும் கண்டதற்கு ஆதாரமாய் இருக்கலாம். எப்படியெனில் அவர்கள் கைகளை வைத்து ஜெபம் பண்ணுகையில் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். இதை இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்ற மாயவித்தைக்காரன் சீமோன் கண்டான். அப்படியென்றால் நிச்சயமாய் பெந்தெகொஸ்தே நாளில் நடந்தது போல அவர்களும் அந்நியபாஷை பேசியிருப்பார்கள். இடம் அசைந்ததாகவோ அக்கினிமயமான நாவுகள் இறங்கியதாகவோ ஆதாரம் இல்லை.

2. கொர்நேலியு வீட்டிலே பேதுரு பிரசங்கிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் இறங்கியதை பேதுருவோடு வந்திருந்த யூதர்கள் கண்டு பிரமித்தார்கள். எதைக் கண்டு பிரமித்தார்கள்? **"அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும். தேவனைப்**

**புகழுகிறதையும்"** (அப் 10:44-47) கண்டு பிரமித்தார்கள். அக்கினிமயமான நாவுகள் இறங்கவில்லை; இடம் அசையவில்லை. பேதுருவும், அவர்கள் "நம்மைப் போல பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்" என்கிறான். பேதுரு பரிசுத்த ஆவியை அந்நியபாஷை அடையாளத்தோடு தானே பெற்றார்.

3. நாம் பெற்றபடியே ஞானஸ்நானத்தை மறுபடியும் பெற்ற எபேசு பட்டணத்து விசுவாசிகளின் மேல் பவுல் கைகளை வைத்தபோது பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் வந்தார். அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசி தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். (அப் 19:6) இவர்கள் அதற்கு முன்பு பரிசுத்த ஆவியை பெறாதவர்கள்: அறியாதவர்கள். பரிசுத்த ஆவியைப் பெறும்பொது அந்த இடம் அசையவில்லை. அக்கினிமயமான நாவு இறங்கவில்லை; ஆனால் அந்நிய பாஷைகளைப் பேசினார்கள்.

4. தமஸ்குவுக்குப் போகும் வழியில் சந்திக்கப்பட்டடு, இயேசுவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்ட பவுல், பார்வை அடையவும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படவும் - பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பண்ணப்படவும் அனனியாவிடம் கொண்டுவரப்பட்டான்: பார்வையடைந்தான்: ஞானஸ்நானம் பெற்றான் (அப் 9:17-18). ஆனால் பரிசுத்த ஆவியைப் பெற்றதைப் பற்றி வேதம் விளக்கவில்லை. ஆனால், "உங்களெல்லாரிலும் நான் அதிகமாய் பாஷைகளைப் பேசுகிறேன்" (1கொரி 14:18) என்ற பவுலின் வார்த்தையின்படி அவர் அந்நியபாஷை அடையாளத்தோடு தான் பரிசுத்த ஆவியை பெற்றிருக்க வேண்டும் என்று உறுதியாகிறது.

ஆக, பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கு, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் அடைந்ததற்கு, அடையாளம் அந்நியபாஷையில் பேசுவது தான் என்று அறிகிறோம். இதைப்படிக்கும் தேவபிள்ளையே! நீயும் பரிசுத்த ஆவியைப் பெற்றாயா? அப்பொழுதுதான் உன்னுள்ளும் (IN) உன் மேலும் (Upon) பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் என்று நீ நிச்சயமாய் உணரலாம்: இல்லையேல், பரிசுத்த ஆவியானவர் உன்னோடு தான் (with) இருப்பார். நீ தேவனுடைய ஆலயமல்ல: 1யோ 4:4 உனக்கு ஒவ்வாது.

பெந்தெகொஸ்தே நாளில் பேசிய அந்நியபாஷை கூடியிருந்தவர்களுக்குப் புரிந்ததே! நமக்கும் அப்படித்தானே புரிய வேண்டும் என்று சொல்பவர்களும் உண்டு. பேசுகின்ற அந்நியபாஷைகள் எல்லாமே புரிய வேண்டும் என்று கட்டாயம் இல்லை.

1. ‘‘அந்நிய பாஷைகளைப் பேசுகிறவன் ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல் தேவனிடத்தில் பேசுகிறான்” (1கொரி 1:27) என்ற வசனப்படி ஒருவருக்கும் புரியாது என்று அறிகிறோம்.
2. ஆவியிலே தோத்திரம் பண்ணும்போது மற்றவன் பக்திவிருத்தி அடையமாட்டான்: தனக்குத்தானே பக்திவிருத்தி உண்டாக அந்நிய பாஷையிலே பேசுகிறான் (1கொரி 14:16, 17:4) என்று வேதம் சொல்வதால் வியாக்கியானம் பண்ணாமல் அந்நியபாஷை புரியாது என்று அறிகிறோம். (1கொரி 14:27-28)
3. 1கொரி 13:1ன்படி தூதர்பாஷைகளையும் பேசுவோமென்பதால் அது யாருக்கும் புரியாது அல்லவா!

**இதனால் எல்லா அந்நியபாஷைகளுமே புரியாது என்று அர்த்தமல்ல.** அப் 2ம் அதிகாரத்தில் உள்ளது போல புரிகின்ற பாஷைகளும் உண்டு. இதற்குநானே சாட்சி. நான் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்ற நேரம். அப்போது சென்னை திரு.வி.க நகரில் உள்ள A.C.A சர்ச்சில் பாஸ்டர் மார்ட்டின் தாஸீடனும், அவர் மனைவியுடனும் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு அந்நிய பாஷைகளில் எனக்கே அறியாமல் பேசிக்கொண்டிருந்தேன். ஜெபம் முடிந்த பின்பு ‘Brother’ உங்களுக்கு கன்னட பாஷை தெரியுமா என்று கேட்டார்கள். தெரியாது என்றேன்.

“இப்போது, நீங்கள் கன்னட பாஷையில் தேவன் பேச வைத்தார்” என்றார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இப்படியும் பலருக்கு ஏற்பட வாய்ப்புகள் உண்டு. “எப்படியோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பண்ணப்படும்பொழுது பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேச்தொடங்கினார்கள்” (அப் 2:44) என்ற வசனப்படி ஆவியானவர் கொடுக்கிற அந்நியபாஷையிலே பேசுவோமாக! அல்லேலூயா! பேசுகிறது நாம்: பரிசுத்த ஆவியானவர் அல்ல. **“And began to speak, with other tongues as the spirit gave them utterance”** அப் 2:4. **“For if I pray in an unknown tongue, my spirit prayeth”** (1கொரி 14:14) நமது ஆவி பேசுகிறது. ஜெபிக்கிறது பாடுகிறது அந்நிய பாஷையிலே. பரிசுத்த ஆவி அல்ல.

நாம் ஏற்கெனவே அறிந்து கொண்டோம் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் ஒரே ஒரு முறைதான் என்று. எப்படி இரட்சிப்பு ஒரே முறையோ அப்படியே! ஆனால் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுதல் வாழ்க்கை முழுவதும், இதைத்தான் அபிஷேகம் (anointment) என்றும்

சொல்லப்படுகிறது. இந்த அபிஷேகம் என்பது பழைய ஏற்பாடு முதற்கொண்டு இன்றுவரை ஏதோ ஒரு தேவ காரியத்திற்காய் செய்யப்படுவது என்று அறியலாம். சவுல் அபிஷேகம் பண்ணப்பட்டான், தாவீது அபிஷேகம் பண்ணப்பட்டான், இயேசு அபிஷேகம் பண்ணப்பட்டார். ஆனால், புதிய ஏற்பாடு விசுவாசிகளுக்கே உரித்தான பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறும்போது பேசும் அந்நிய பாஷை அடையாளம், பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும் போதும் வரலாம் (Refer ஏசா 28:11-12). "உங்கள் எல்லோரிலும் நான் அதிகமாய் பாஷைகளைப் பேசுகிறேன் அந்நியபாஷைகளில் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள்: தனக்குத்தானே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறேன்". 1கொரி 14:18, 39:14 என்று பவுல் கூறுவதால் எப்போதும் நாம் அந்நிய பாஷைகளை அதிகமாய்ப் பேச வேண்டும். பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும் போதெல்லாம், அபிஷேகம் பண்ணப்படும்போதெல்லாம், ஜெபிக்கும் போதெல்லாம், பாடும் போதெல்லாம் அந்நிய பாஷைகளில் தேவனோட இரகசியங்களை பேசவேண்டும். (யூதா 20, எபே 5:18-91, 1கொரி 14:2)

"அந்நிய பாஷையில் ஏன் பேச வேண்டும்: நமது தாய் மொழியில் பேசினால் தேவன் அறியாரா?" என்று கேட்போரும் உண்டு. நாம் ஜெபிக்க வேண்டியது. கேட்க வேண்டியது இன்னது என்று அறியாத வேளையிலே பரிசுத்த ஆவியானவர் அந்நிய பாஷைகளை கொடுக்கிறார் என்று ரோ 8:26 (English Version) கூறுகிறது. மேலும்

உலகத்திலுள்ள எல்லா பாஷைகளுமே பிசாசுக்கு, தெரியும்: ஆனால் பரிசுத்த ஆவியானவர் பேசும்படி நம் நாவிலே போடுகிற பாஷையிலே தேவனிடம் முறையிடாத போது, அவன் குறுக்கே இடைப்பட்டு நமக்கு தேவனிடத்திலிருந்து கிடைக்கக் கூடிய ஆசீர்வாதங்களை, இரகசியங்களை, வெளிப்பாடுகளை வந்து சேரவிடாமல் தானியேலுக்குச் செய்தது போல செய்ய நினைக்கலாம்: அல்லது நமது வேண்டுகோளுக்கு செவி சாய்க்க தேவனை விடாதவாறு நம்மைப்பற்றி எந்தச் சூழ்நிலையிலும் நம்மீது அன்புள்ள தேவனிடம் குற்றம் சுமத்தலாம் (வெளி 12:10). எனவே தான் அந்நிய பாஷை தேவையாய் இருக்கிறது. எபி 11ம் அதிகாரத்திலுள்ள பரிசுத்தவான்களை விட நாம் விசேஷித்தவர்களல்லவா! மணவாட்டியாகிய நம்மை அழைக்கத்தானே தேவன் வரப்போகிறார். அப்படியிருக்க நாம் இந்த தேவனின் கிருபை வரத்தை தள்ளலாமா? கூடாதே!

**அந்நிய பாஷைகளைப்பற்றி எழுந்துள்ள கேள்விகள்**

**<u>கேள்வி எண் 1:</u> "வெளி 16:13ன்படி இது தவளைகளின் சத்தம்: அசுத்த ஆவிகளின் சத்தம்" என்கிறார்கள்.**

- ❖ அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெறுவது இரட்சிக்கப்பட்ட தேவ பிள்ளைகளுக்கு தேவன் தரும் ஈவு (1கொரி 12:11,7: அப் 2:4: யோ 14:17 English). இரட்சிக்கப்பட்டவனிடம் அசுத்த ஆவி இல்லை: எனவே அவன் மூலமாய் அந்நிய பாஷையை கொடுப்பது அசுத்த ஆவி அல்ல: இந்த சத்தம் பரிசுத்த ஆவி கொடுக்கின்ற சத்தம். அல்லேலூயா!

**<u>கேள்வி எண் 2:</u> ''பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் பேசவில்லையே? யோவான் ஸ்நானனும் இயேசுவும் கூட பேசவில்லையே''.**

- ❖ இவர்கள் எல்லாருக்கும் பரிசுத்த ஆவியானாலே ஞானஸ்நானம் பெற வேண்டும் என்ற பிதாவின் வாக்குத்தத்தம் செயல்படும் நேரம் வரவில்லை. நமக்கு அது வந்திருக்கிறது. எனவே பேசுகிறோம். (see யோ. 7:39)

**<u>கேள்வி எண் 3:</u> 1கொரி 13:8ன்படி ''அந்நிய பாஷைகள் ஒழிந்து போகும்'' என்பதால், இந்த பாஷை ஒழிந்துவிட்டது.**

- ❖ இந்த வசனத்தில் அந்நிய பாஷை மாத்திரம் ஒழிந்துபோம் என்று சொல்லவில்லை; தீர்க்கதரிசனங்களும் ஒழிந்து போகுமாமே! அப்படியென்றால் 1கொரி 14:39ல் தீர்க்கதரிசனஞ் சொல்ல நாடுங்கள் என்று பவுல் சொன்னது தவறா? தீர்க்கதரிசனங்களை அற்பமாய் எண்ணாதிருங்கள் (1தெச 5:20) என்று பவுல் ஏன் சொன்னான்? சபையிலே தீர்க்கதரிசன வரம் ஏன் இருக்கிறது? (எபே.4:13). 1கொரி 13:8ன்படி அறிவானாலும் ஒழிந்து போகுமாமே! இந்தக் காலத்தில் அறிவும் ஒழிந்துவிட்டதா? கடைசி காலத்தில் அறிவு பெருகிப்போகும் என்று தானியேல் 12:4ல் சொன்னானே அது தவறா? அல்ல, அல்ல. அந்நிய பாஷையும். தீர்க்கதரிசனமும், நமது அறிவும் ஒழிந்து போகும். எப்போது? நிறைவானது வரும்போது, அதாவது தேவனோடு முகமுகமாய் நாம் நிற்கும்போது (1கொரி 13:10-12). ஒரே நாளில் எல்லா சிருஷ்டிக்கும் பெயர் வைத்தானே ஆதாம் அது இந்த அறிவாலா? இல்லை. இல்லை இந்த அறிவு ஒழிந்து போகும்: அந்நிய பாஷையும் அப்போது ஒழிந்து போகும். இப்போது அல்ல.

**<u>கேள்வி எண் 4:</u> மாற் 16:17ல் சொன்னபடி அந்நிய பாஷையில் பேசுகிறவன் பல மொழிகளில் பேசுவது இல்லையே.**

- ❖ இரட்சிக்கப்படாதவன் கூட பலமொழிகளில் பேசுகிறானே! தேவன் இயேசு பரலோகம் போகும்போது சொன்னதுதான் இந்த (மாற் 16:17). விசுவாசிகளால் நடக்கும் 5 அடையாளங்கள். பிசாசுகளை

துரத்துவது இயற்கைக்கு அப்பாற்பட்டது. (It is super natural) ஒரு அடையாளம் இயற்கைக்கு அப்பாற்பட்டது என்றால் எல்லாமே Super natural தான். எனவே தான் நவமானபாஷை இயற்கைக்கு அப்பாற்பட்டதாய் நம் மத்தியில் இருக்கிறது. இது அடையாளமாகிய அந்நிய பாஷை அல்ல. வரமாகிய அந்நிய பாஷை.

**<u>கேள்வி எண் 5:</u> "அக்கினியும், காற்றும் வரவில்லையே! அந்நிய பாஷை தேவையா?"**

❖ அக்கினி, காற்று, இடிமுழக்க சத்தம், இடம் அசைவு எல்லாமே முதன் முதலாய் இயேசுவானவர் பரத்திற்கு சென்றபின் பரிசுத்த ஆவியானவர் பூலோகம் வந்தபோதுதான்: மற்ற இடங்களில், உலகிலுள்ள ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளும் போது இவைகள் இல்லையென்று ஏற்கனவே பார்த்துவிட்டோம். ஆனாலும் இவைகள் இல்லாவிட்டாலும் பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கான அந்நியபாஷை அடையாளம் நிச்சயம் தேவை. எப்படி ஒரு கல்யாணத்தில் சோறு, பட்டு, தங்கம் எல்லாம் இல்லாமல் போனாலும், பொண்ணு மாப்பிள்ளை மிக மிக முக்கியமோ அப்படியே!

**<u>கேள்வி எண் 6:</u> "மற்றவர்களை உணர்த்தும் படிதான் பேச வேண்டும் என்று 1கொரி 14:19ல் பவுல் சொல்கிறாரே."**

❖ இப்படி பவுல் சொல்வது சபையின் கிரமம். "அர்த்தம் சொல்லுகிறவன் இல்லாவிட்டால் சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்" 1கொரி 14:28 என்று பவுல் கூறுவதால் அந்நியபாஷை கண்டிப்பாய் பேச வேண்டும் என்பது பரிசுத்த ஆவியைப் பெற்ற நிச்சயம் உள்ளவர்களுக்கு நியதி. இது வரமாகிய அந்நிய பாஷை பற்றியது.

**<u>கேள்வி எண் 7:</u> "கொட்டடித்தால் ஆவி வருகிறதே! கொட்டடித்தால் நிற்கிறதே".**

❖ "அந்நிய பாஷையில் பேசத் தொடங்குகிறது நாம்; ஆவியானவரல்ல. ஏற்கெனவே பார்த்தோம். எனவே தொடங்குகிற நாம், முடிக்கவும் முடியுமல்லவா! ஆவியானவர் நம் மூலம் பேசுகிறார். நாம் பேசவும் முடியும்: நிறுத்தவும் முடியும். 1கொரி 14:15ஐப் பாருங்கள். "I will" NOT "Holy Spirit will" அந்நிய பாஷையில் பேசுவதுவரமாய் இருந்தால் பரிசுத்த ஆவியானவர் நம்மை பேசச் சொல்லி 'Force' பண்ணமாட்டார்: நிறுத்தச் சொல்லியும் 'Force' பண்ணமாட்டார்.

**கேள்வி எண் 8: 1கொரி 12ன்படி ஆவியின் வரங்களிலே கடைசி வரம்தானே இது: எனவே முதலில் உள்ள வரங்களை விரும்புவோமே!**

❖ ஏணியிலே ஏறி மேலே போகும்போது கடைசிப்படியில் ஏறித்தான் மேலே போக முடியும். அப்படித்தான் இந்த கடைசி வரத்தை வைத்துத் தான் ஊழிய முன்னேற்றம். பவுலைப் போல "உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகின்றேன்'' என்று பெருமையாய் நாமும் சொல்ல வேண்டாமா? அப்போதுதானே பேதுருவும் புரியாத ஞானத்தை உடைய பவுலைப் போல் நாம் ஆக முடியும். இந்த அந்நியபாஷை வரம் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட ஈவு என்று ஏற்கெனவே அறிந்தோமே!

**கேள்வி எண் 9: அந்நியபாஷை பேசுகிறவன் ஒழுக்கமாக இல்லையே!**

❖ ஒழுங்கு என்பது ஆவியின் கனியில் நிலைத்திருப்பது. (கலா 5:22-23). இதைக் கொடுப்பது நமது ஆவி: பரிசுத்த ஆவி அல்ல. யோ 15:5ன்படி தேவன் செடி; நாம் கொடி; கனி கொடுக்க வேண்டியது நாம் தான். நமது பரிசுத்தத்திற்காய் பரிசுத்த ஆவியானவர் நம்முள் (In) இருந்து ஆவியின் கனி கொடுக்க நடத்துவார். ஆனால் பரிசுத்த ஆவியின் வரமாகிய அந்நியபாஷை என்பது பரிசுத்தத்திற்காய் அல்ல; வல்லமைக்காய். இது ஆவியானவரால் நிரப்பப்படும்போது; அபிஷேகிக்கப்படும்போது; அவர் நம்மேல் வரும்போது (Upon) நடக்கக்கூடியது என்று ஏற்கெனவே பார்த்தோம். ஆக, ஆவியின் வரங்கள் இருந்தும், ஆவியின் கனி இல்லையேல் மத் 7:22ன் நிலைவரும். ஆவியின் கனி இல்லாவிட்டாலும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தினாலே பரிசுத்த ஆவியானவர் நம் உள்ளே இருக்கிறார் என்ற உணர்வின்றி அவரைத் துக்கப்படுத்தினாலும் (எபே 4:30-31) அவரின் கிருபை வரங்கள் மாறாதவை, என்றும் நிற்கும். (ரோ.11:29) சிம்சோன் பாவியான பிறகும், ஆவியானவரின் வல்லமை கிரியை செய்யவில்லையா? மணவாளனின் தோழனுக்கே அப்படி என்றால், மணவாட்டிக்கு அதிலும் மேலல்லவா!

**கேள்வி எண் 10: எல்லோரும் அந்நிய பாஷை பேசுகிறார்களா (1கொரி 12:30).**

❖ ஊழியம் என்று நாணயத்திலே இரண்டு பக்கங்கள் உள்ளன. ஒன்று பொது (Public) ஊழியம்: இன்னொன்று தனிப்பட்ட ஊழியம் (Private) ஊழியம். பொது ஊழியம் அனைத்து

விசுவாசிகளுக்குமல்ல: இது சபைக்கென்று பிரத்யேகப்பட்டது. இதைத்தான் 1கொரி 12:28லிருந்து பவுல் சொல்கிறார். (See எபே 4:12-13) இது அனைத்து இரட்சிக்கப்பட்ட தேவ பிள்ளைகளுக்கும் அல்ல என்று விளங்குகிறதல்லவா! ஆனால் தனி ஊழியம் என்பது எல்லாருக்கும் உரியது (1பேது 2:9). இந்த அடிப்படையில் தான் பவுல் அந்நியபாஷை பற்றி கேள்வி கேட்கிறார். தனிப்பட்ட ஊழியத்தில் அனைவரும் ஊழியக்காரர்கள்: எனவே அனைவரும் அந்நியபாஷை பேச வேண்டும் (யூதா 20) பொது ஊழியமாகிய சபை ஊழியத்தில் அனைவரும் ஊழியக்காரர் அல்லவே! எனவே எல்லோரும் அந்நியபாஷை பேச வாய்ப்பில்லையே! அல்லேலூயா!

**<u>கேள்வி எண் 11:</u> அப்போஸ்தலர் கை வைத்தால்தான் பரிசுத்த ஆவியைப் பெற முடியுமா?**

❖ தேவையில்லை. பவுலின் மீது கைவைத்தது அனனியா என்ற சீஷன்தானே. கொர்நேலியு மீது யார் வைத்தது கை? வாஞ்சையாயிருந்தால் இரட்சிக்கப்பட்டவன் பரிசுத்த ஆவியை ஏதோ ஒரு வழியில் பெற்றுக் கொள்வான். தடை இல்லை. பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும்போது இடம் அசையலாம். அசையாமலும் இருக்கலாம்: மேகம் நிழலிடலாம்: நிழலிடாமலும் போகலாம்: அக்கினி நாவு வரலாம்: வராமலும் இருக்கலாம் (அப் 4:23-24, மத் 17:5, அப் 16:25).

**<u>கேள்வி எண் 12:</u> பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டவன் குதிப்பானா? ஆடுவானா?**

❖ "தாவீதைப் போல நடனமாடி அப்பாவை தோத்தரிப்போம்" என்ற பாட்டின்படி இது சரி.

**<u>கேள்வி எண் 13:</u> அந்நியபாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெற்று வரங்கள் உள்ள தேவ பிள்ளைகள் இயேசுவின் நாமத்தினாலே செய்கின்ற அற்புத அடையாளங்கள் எல்லாம் பிசாசின் கிரியைகள் என்கிறார்களே. இது சரியா!**

❖ பிசாசின் கிரியைகள் என்றால் அதை நடத்துகிறவன் பிசாசு. பிசாசு இயேசுவின் நாமத்தினாலே கிரியைகள் செய்வானா? மாட்டான்! பிசாசானவன் (யோ 10:10, மாற் 3:23) திருடவும் கொல்லவும் அழிக்கவும் மாத்திரமே உலாவுகிறான் (யாக் 1:17). நன்மையான ஈவென்றால் அது பிதாவினுடையது தான்: பிசாசினுடையது அல்ல. அற்புத அடையாளம் இயேசுவின்

நாமத்தினாலே செய்கிறவர்கள் இயேசுவோடு தரித்திராவிட்டாலும், அவர்களின் வரங்களின் கிரியைகளை அவர் தடுக்க மாட்டார். (மாற் 9:38,39) தேவனுடைய கிருபை வரங்கள் மாறாதவை (ரோ 11:29). ஆனால் நியாயத்தீர்ப்பு நாளிலே அவர்கள் பரலோகம் சேர்வது அரிது (மத் 7:22).

ஒருவர் அந்நியபாஷை அடையாளத்தோடு அபிஷேகம் பெற்றுவிட்டால் தேவனுடைய சபையாரோடு இணைந்திருப்பது தான் சரி. அப்பொழுது தான் சபை கூடி வருதலை விட்டுவிடாதிருக்க முடியும். அப்படி இல்லாமல் பழைய துர் உபதேசமுள்ள சபையாரோடோ, மக்களோடோ அங்கம் கொண்டு, அவர்கள் வழியையும் பின்பற்ற முனைந்தால் சங். 1ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஆசீர்வாதம் வராது! ஏசாயாவிலே சொல்லப்பட்டது போல இரண்டு மனதுடன் எத்தனை நாளைக்குத்தான் குந்திக் குந்தி நடக்க முடியும்? இருளுக்கும் ஒளிக்கும் சம்பந்தமேது? என்று பவுல் சொல்கிறானே (2கொரி 6:14-16). ஆவிக்குரிய சபையாரோடு தானே உன் சகவாசம் இருக்க வேண்டும்! சுகவாசத்திற்காய், சகவாசத்தை விட்டுவிடாதே! ஆபிரகாமைப் போல் வெளியே வா! (ஆதி 12:1). இயேசுவை வணங்குகிறவர்களோடு தானே தங்கியிருக்கிறேன் என்கிறாயா? எபி. 6:1-2 வசனங்களின்படி அடிப்படை சத்தியத்தை கடைப்பிடித்து. அப்போஸ்தலர்களின் உபதேசத்தில் நிலைத்திருப்பவர்கள் தான் உண்மைக் கிறிஸ்தவர்கள். என்னுடைய பரம்பரை ஆட்களை திருத்தவே நான் பழைய சபையிலேயே இருக்கிறேன் என்கிறார்களே: அவர்கள் பவுலை நோக்கிப் பாருங்கள்! இரட்சிக்கப்பட்டு முழுக்கு ஞானஸ்நானம் பெற்று, அந்நியபாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெற்று யூதமார்க்கத்திலா இருந்தான்? இல்லையே! யூதமார்க்கத்திலிருந்து வெளியே வந்து இயேசு மார்க்கத்திற்கு வந்தபின்பே யூதமார்க்கத்தாரை திருத்தப் போனான் (See கலா 1ம் அதிகாரம்) இதைப்படிக்கும் தேவ பிள்ளையே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டாயா? நீ நிச்சயமாய் பழைமையை விட்டு வெளியே வா! ரோ 12:2ன்படி மனம் மறுரூபமாகு! அல்லேலூயா! (அப் 2:40).

இந்த அந்நியபாஷையை தொடர்ந்து தேவனிடம் பேசுங்கள்; அதனால் தேவனிடத்திலிருந்து தொடர்ந்து ஆசீர்வாதம் வந்து சேரும்.

<u>**இந்த அந்நியபாஷையில் நாம் ஏன் பேச வேண்டும்? அதனால் பிரயோஜனம் என்ன?**</u>

1. "பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றோம் - பரிசுத்த ஆவியைப் பெற்றுவிட்டோம், பரிசுத்த ஆவியானவர் நமக்குள்

இருக்கிறார்; நமது சரீரமே அவரின் ஆலயமே'' என்று சொல்வதற்கான அடிப்படையான இயற்கைக்கு அப்பாற்பட்ட அடையாளம் இது (அப் 2:4; 10:46)

2. For Spiritual edification (1கொரி 14:4) தேவனோடு இரகசியங்கள் பேசலாம் (1கொரி 14:2).

3. தேவன் நம்மோடு, நமக்குள் இருக்கிறார் என்று ஞாபகப்படுத்தும் (யோ 14:16-17 in English).

4. அந்நியபாஷையில் பேசுவது விசவாசத்தை வளர்க்கிறது (யூதா 20).

5. அந்நியபாஷையில் ஜெபிக்கும்போது உலகப் பிரகாரமான தொடர்புகள், சம்பந்தங்கள் எல்லாவற்றிலும் ஒட்டு இராது: உறவு இராது (1கொரி 14:28). இரண்டு எஜமான் ஊழியம் வராது.

6. அவிசுவாசிகளுக்காய் அந்நிய பாஷையில் ஜெபிக்கும்படியான உணர்வுகளை தருகிறது. ஜெபித்து வெற்றியும் பெற முடியும்.

7. அந்நியபாஷையில் தேவனை அதிகமதிகமாய் தோத்தரிக்க துதிக்க நன்றி சொல்ல முடியும் (1கொரி 14:15-17).

8. அந்நிய பாஷையில் பேசுவதால் நாவு நம் கட்டுக்குள் வருகிறது (யாக் 3:8).

9. ஆவியின் வரங்களைப் பெற்று, வல்லமையோடு ஊழியம் செய்ய (அப் 1:8) முடியும்.

10. அந்நியபாஷையினால் புதுபுது அபிஷேகம் பெற முடியும். நாம் பெறுகின்ற இந்த அபிஷேகமே நம்மை வழி நடத்தும். (1 யோ 2:27).

இன்னும் ஏராளம், ஏராளம், ஆகவே சகோதரரே! 1கொரி 14:5ல் பவுல் சொன்னபடி, **"நீங்கள் எல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகின்றேன்"** அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கு மற்றவர்களையும், உங்களையும் கூட தடை பண்ணாதிருங்கள் (1 கொரி 14:39).

இப்படிப்பட்ட அந்நியபாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியின் ஆலயமாய் மாறுவதற்கு வழிமுறைகள் என்ன? உபவாசம் இருக்க வேண்டுமா? காத்திருக்க வேண்டுமா? அழுது புரள வேண்டுமா? There is no hard and fast rule. இரட்சிக்கப்பட்டது எப்படி தேவகிருபையோ அப்படியே இதுவும் தேவ கிருபையே!

1. மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெறலாம் (அப் 2:38). புது துருத்தியாய் இருந்தால் தான் திராட்சை ரசத்தை அடைக்க முடியும் (மத் 9:17): ரோ 10:9,10ன்படி இரட்சிக்கப்பட வேண்டும் (2கொரி 5:17: யோ 7:37-39). ஜீவ தண்ணீருள்ள நதிகள் நிச்சயமாய் ஓடும்.

2. அப் 19ம் அதிகாரத்திலுள்ள எபேசியரைப் போல பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள ஆயத்தமாய்; வாஞ்சையாய் இருக்க வேண்டும். ஆவியானவர் பிதாவினால், கிறிஸ்து இயேசுவின் வேண்டுதலின்படி, பெந்தேகொஸ்தே நாளிலே அனுப்பப்பட்டாயிற்று. அவர் உலகில் தான் இருக்கிறார். நமக்குள் வந்து தங்க ஆயத்தமாயிருக்கிறார். நாம் விரும்பி பெற்றுக் கொள்ள வாஞ்சிக்க வேண்டும்.

3. பரிசுத்த ஆவியைப் பெறும்படியாய் எந்த ஒரு அபிஷேகம் பண்ணப்பட்ட தேவ பிள்ளையும் கைகளை வைத்து ஜெபிக்கலாம். அதன் மூலம் வல்லமை பாயும் என்று விசுவாசிக்க வேண்டும்.

4. பரிசுத்த ஆவியானவர் நம் வாயிலே இயற்கைக்கு அப்பாற்பட்ட வார்த்தைகளைக் கொடுப்பார். நாம் பேசுவோம்: பேச முடியும் என்று நம்ப வேண்டும். (அப் 2:4: 10:46: 1கொரி 14:2,4,14,15,18,27).

5. பரிசுத்த ஆவியை அல்லாது வேறே எந்த ஆவியையும் பெற்று விடுவோமோ என்று பயப்பட வேண்டாம். தேவனுடைய பிள்ளையாய் மாறிவிட்டோம் என்று உறுதி இருந்தால் போதும். நிச்சயம் பரிசுத்த ஆவியைத்தான் பிள்ளைகள் பெறுவார்கள். (லூக் 11:11-13: 10:19, உபா 14:16).

6. வாயைத் திறந்து பேச வேண்டும். யோபு 29:21-23, யாக் 5:7, ஓசியா 6:3: சகரி 10:1. இயேசு சொன்னார்:- Come and drink (யோ 7:39). நாம் வரவேண்டும், குடிப்பதற்கு வாயைத் திறக்க வேண்டும். தண்ணீர் தயாராக இருக்கிறது. அல்லேலூயா!

7. சுற்றியுள்ளோரைப் பார்க்க வேண்டாம்: குழப்ப வார்த்தைகளைப் பேசும் ஆட்கள் அருகில் நிற்க வேண்டாம். Be free since Holy Spirit is bestowed free!

8. ஒன்றிரண்டு வார்த்தைகளைப் பேசினாலும் நம்பிக்கையாய், பரிசுத்த ஆவியைப் பெற்றுவிட்டேன் என்று திருப்தியாயிரு. பவுலைப் போல அநேகம் பாஷைகளைப் பேசலாம்! Praise the Lord!

இரட்சிக்கப்பட்ட தேவ பிள்ளையே! நீ பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்று. பெலனடைந்து, உலகமெங்கும் சாட்சியாய் ஜீவிக்கப் போகிறாய் என்று தேவனுடைய ஸ்தானதிபதியாகிய நான் இந்த வார்த்தைகளை முழுமையாய் ஊக்கத்தோடு படித்த உன்னைப் பார்த்து தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகின்றேன்!

இனி காலம் செல்லாது! இயேசு சீக்கிரம் வருகிறார்! தேவ பிள்ளையே ஆயத்தமா?

❖ ❖ ❖

# பிசாசு யார்?

எங்குப் பார்த்தாலும் 'பிசாசு பிசாசு' என்று ஒரே பேச்சாக இருக்கிறது. இந்த பிசாசுதான் யார்? இவனுடைய காரியமெல்லாம் என்ன என்று தேவனுடைய பிள்ளைகள் தெரிந்து கொள்ள வேண்டுமே! நமக்கு எதிராளி பிசாசு என்று வேதம் சொல்கிறது (1பேதுரு 5:8). எதிரியை பற்றித் தெரிந்தால் தானே அவனை முறியடிக்க முடியும்.

பிசாசு எப்படி இருப்பான்? கருப்பாய், குண்டாய், கொம்புகளோடு, நாக்கெல்லாம் தொங்கவிட்டுக் கொண்டு. பயங்கரமான பற்களோடு, முண்டக் கண்களோடு இருப்பான் என்று உலகம் சொல்கிறது. கிறிஸ்தவனும் நம்புகிறான். ஆனால் வேதம் சொல்லுகிறது **"அவன் அழகாய் இருப்பான்: ஞானமாய் இருப்பான்; உத்தமனாய் இருப்பான்; இசை ஞானி;"** (எசே 28: ஏசா 14). **ஆனால் அவன் மேட்டிமையினால் தேவனிடத்திலிருந்து தள்ளப்பட்டபோதே அவனது ஞானம் தந்திரமாய் மாறிவிட்டது. இப்பொழுது அவன் நரியைவிட தந்திரம் உள்ளவன்** (ஆதி 3:1). கொலைபாதகன் (யோ 10:10) உத்தமனில்லை. அழகாய்த்தான் இருக்கிறான் என்று விக்கிரக தெய்வங்களை பார்த்தாலே அறியலாம்: இந்த விக்ரகங்கள் பிசாசு அல்ல என்பதைக் காட்டத்தான் பிசாசுக்கு கொடூர ரூபத்தை உலகம் கொடுத்திருக்கிறது.

எத்தனை பிசாசுகள் இருக்கின்றன? லூசிபர் என்ற ஒரே ஒரு பிசாசுதான் உண்டு. இவன்தான் சாத்தானென்றும் வலுசர்ப்பம் என்றும் சொல்லப்படுகிறவன் (வெளி 12:9). இவனுக்குக் கீழேதான் ஒரு பெரிய தூதர் கூட்டம். வேதத்திலே இந்த பிசாசின் தூதர்களையும் பிசாசு என்றே பல இடங்களில் சொல்லப்பட்டுள்ளது: சில இடங்களில் அசுத்த ஆவிகள் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த பிசாசு இப்போது எங்கேயிருக்கின்றான்? நரகத்திலல்ல. இவனுக்காகத்தான் தேவன்

நரகத்தை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கிறார் (மத். 25:41) அதிலே இவனும் ஒரு நாள் போய்ச் சேருவான் (வெளி. 20:10). இப்போதோ இவன் வானமண்டலத்தில் இருக்கிறான் (எபே 6:12, வெளி. 12:7,8). அவனுடைய தூதர்கள் பூலோகத்திலுள்ள எல்லா இடங்களிலும் சாத்தானின் பணியை தலைமேற்கொண்டு செய்கின்றனர். பிசாசும் அவன் தூதர்களும் தான் தங்களுடைய காரியத்தை தடையின்றி செய்கின்றனர். ஆனால் மனிதனோ தன்னுடைய காரியத்தை விட்டுவிட்டு பிசாசோடு உடன்படுகின்றான். லூசிபர் அல்லாமல் பாதாளக் குழியில் அபெத்தோன் என்ற பொல்லாத ஆவிகளின் ராஜா இருப்பதாக வெளி. 19:11 சொல்கின்றது. இது வெளி.20:1,2ல் சொல்லப்பட்ட இடம். இந்த ஆவிகள் ஆதி.1:1,2ல் வந்த ஜலப்பிரளயத்தில் அழிந்தவைகள் (2 பேது. 3:5,6) என்றும் வேத வல்லுநர்கள் கணிக்கிறார்கள்.

மனிதன் படைக்கப்பட்ட உடனே அவனுக்கு உலகம் முழுவதையும் கீழ்படுத்தி ஆண்டுகொள்ள அதிகாரம் கொடுத்தார் தேவன் (ஆதி 1:28). ஆனால் ஆதி 9:1,2ன்படி ஆண்டு கொள்ளுகிற அதிகாரத்தை அவன் இழந்துவிட்டான் என்று அறிகிறோம். லூக் 4:5,6ன்படி உலகத்தின் சகல அதிகாரமும் மகிமையும், பிசாசுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறியலாம். 2கொரி 4:4 போன்ற வசனங்களின்படி இவ்வுலகத்தின் அதிபதி பிசாசு. இந்த பிசாசை அழிக்க தேவன் முதல்முறை உலகுக்கு வரவில்லை. அதன் கிரியைகளை அழிக்கவே வந்தார் (1யோ 3:8). ஆனால் பிசாசின் சகல அதிகாரங்களையும் இயேசு சிலுவை மரணத்தினால் பெற்றுக் கொண்டுவிட்டார் (மத் 28:18: வெளி 1:18). இதை நாம் விசுவாசித்து அறிக்கையிடும்பொழுது, நாமும் பிசாசின் கையிலுள்ள எல்லாவற்றையும் பிடுங்கிக் கொள்ளலாம் இயேசுவின் நாமத்தினாலே! அல்லேலூயா! இந்தக்காரியம் இயேசுவை இரட்சகரென்றும் ஆண்டவரென்றும் ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு புரியவில்லை. மத் 16:19: 28:18 போன்ற வசனங்களை அப்பியாசிக்க மறுக்கின்றனர். லூக் 16:20,21ல் உள்ள லாசருவின் விசுவாசமே தாங்களும் கொண்டிருக்க விரும்புகின்றனர்: வெற்றி வாழ்க்கையில் நாட்டமில்லை. ஆதி 1:28ல் சொல்லப்பட்டபடி பூமியை ஆண்டுகொள்ள வாஞ்சையில்லை. மனக்கண் பிரகாசமடைய வேண்டுமென்ற பவுலின் எண்ணம் ஈடேறட்டும் (எபே 1:19).

இந்த பிசாசு வானமண்டலத்தில் ஒரு ராஜாங்கமே நடத்துகிறது என்று வேதம் சொல்கிறது. உலகில் இந்தியா, சீனா, ரஷ்யா போன்ற ராஜாங்கம் இருப்பது போலவே வானமண்டலத்திலும் பிசாசின் இராஜாங்கம் இருக்கிறது என்று தானி 10:13, எசே 28:12 போன்ற வசனங்களால் அறியலாம். பெர்சிய நாட்டில் ஒரு தீமை செய்ய

வேண்டுமென்றால், லூசிபர் தமக்குக் கீழுள்ள பெர்சிய அதிபதிக்கு ஆணையிடுவான். இப்படியே ஒவ்வொரு நாட்டிற்கும் ஆணையிடுவான். (தானி 10:13) இரட்சிக்கப்பட்ட நமக்கு தனித்தனியான தேவதூதர் இருப்பது போல அவன் பல நாடுகளுக்கும் வைத்திருக்கின்றான். (மத் 18:10, எபி 1:14).

அவனுக்கு மகாபெரிய வல்லமை இருக்கிறது. பிரதான தூதனாகிய மிகாவேலே, மோசேயினுடைய சரீரத்தைக் குறித்து பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, அவனைத் தூஷணமாய் குற்றப்படுத்த துணியவில்லை. கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக என்று மட்டும் சொன்னான் (யூதா 9). தேவதூதன், தானியேலின் வேண்டுதலுக்கு தேவனின் பதிலைக் கொண்டு வருகையில், 21 நாள் மட்டும் பிசாசு எதிர்த்தானாம்: மிகாவேல் தூதனின் உதவியோடு அவன் தானியேலிடம் வந்து சேர்ந்தானாம் (தானி 10:12-13). இன்னும் பாருங்கள். அவனது வல்லமையை! சாத்தான் யூதாசுக்குள் புகுந்ததால் (யோ 13:27) இயேசுவை காட்டிக் கொடுக்க, போர்ச்சேவகர்களோடு கெத்சமனேக்கு யூதர்கள் வந்தபோது, "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக் கொண்டால், அவர் 12 லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?" (மத் 26:53) என்றார் இயேசு! சாத்தானை முறியடிக்க இவ்வளவு தேவ தூதர்படை தேவைப்படுகிறது பாருங்கள். யோபுவே சாத்தானை 'Mighty' என்று பயந்து அலப்புகிறான். இந்த வல்லமையெல்லாம், மாசற்ற ரத்தம் சிந்திய இயேசுவின் நாமத்தின் முன்னே தவிடுபொடியாகும். (அப் 4:12: மாற் 16:17). அதனால்தான் தேவன் சொல்லுகிறார்: **"உலகத்தில் இருக்கிறவனிலும் உனக்குள் இருக்கிறவர் பெரியவர்"** (1யோ 4:4). இந்த விசுவாசம் இருந்தால் எதிரியான சாத்தானை முறியடிக்கலாம்.

இந்த சாத்தானின் செயலால் தான் வறுமை வந்தது (ஆதி 3:17,18). வியாதி வந்தது (அப் 10:38, யாக் 1:13): மரணம் வந்தது. (ஆதி 3:19). கிறிஸ்து இயேசு நமக்காய் வந்ததினால், நமக்கு வெற்றி வாழ்க்கை வருகிறது: ஐசுவரியம் கிடைக்கிறது. (2கொரி 8:9: 1யோ 5:5). வியாதியிலிருந்து விடுதலை கிடைக்கிறது (மத் 8:33: 1பேது 2:24). மரணத்தினின்றும் விடுதலை கிடைத்து நித்திய ஜீவனைப் பெறுகிறோம் (யோ 10:10). இவ்வளவு விடுதலை கிடைத்தும் **"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு: ஆனாலும் திடன் கொள்ளுங்கள; நான் உலகத்தை ஜெயித்தேன்"** (யோ 16:33) என்ற இயேசுவின் வார்த்தையை விசுவாசிக்காததால், வறுமை தலை விரித்தாடுகிறது; வியாதி தாண்டவமாடுகிறது. மரணத்துக்கு அதிபதி பிசாசுதான். (எபி 2:14) மரணத்தை (சரீர) மரண தண்டனையை கொடுத்தவர் இயேசுதான். ஆவிக்குரிய மரணத்தைக் கொடுத்தவன்

பிசாசு. அதை தேவன் தமது இரத்தத்தினால் நீக்கினார். இதை விசவாசிக்கிறவன் பெற்றுக் கொள்கிறான்: சரீர மரணமோ, நியாயத்தீர்ப்புக் கொடுத்தவர்தான் மாற்ற வேண்டும். சபையாராகிய நமக்கு இரகசிய வருகையிலே இது அழிந்து போகும் (1கொரி 15) மரணப்பிசாசோ வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்குப் பிறகு அழிந்து போகும் (வெளி 20:14).

இந்த பிசாசு அநேக அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கிறான். (மத் 24) யாரை விழுங்கலாமென்று கெர்ச்சிக்கிற சிங்கம் போல அலைகிறான் (2பேது 5) சிங்கம் விழுங்காது: பற்களினால் கடித்துத் தின்னும், பிசாசுக்கு பல்லை தேவன் பிடுங்கிவிட்டதால் அவன் விழுங்க அலைகிறான். ஒரு நாள் வரப் போகிறது. அப்போது அவன் பூமிக்கே வந்து காரியமாற்றப் போகிறான் (வெளி 12:10) இப்போதே இப்படியென்றால் அப்போது? ஐயகோ! அந்த நாளில் நாம் இருக்க வேண்டாம். எதிரியான பிசாசை இன்னும் அதிகம் தெரிந்து கொண்டு சர்வாயுத வர்க்கத்தை உறுதியாய்த் தரித்து நிற்போம். அவன் ஓடியே போவான்!

❖ ❖ ❖

# சாத்தானின் திரித்துவம்

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று கடவுளின் திரித்துவம் இருப்பது போல, சாத்தானின் திரித்துவமும் இருக்கிறது என்பதைக் தெரிந்து கொள்ளுங்கள்.

"Satanic Trinity" சாத்தானின் திரித்துவத்தில், வலுசர்ப்பம், மிருகம், கள்ளத்தீர்க்கதரிசி ஆகிய மூவரும் இணைந்து உள்ளனர். இது சாத்தான் உண்டாக்கிய போலி திரித்துவம். பார்க்க இயலாதா, கண்ணிற்கு புலனாகாத வலுசர்ப்பமானது, போலி பிதாவையும் (The anti-God), மிருகமாகிய அந்தி கிறிஸ்து, போலி கிறிஸ்துவையும் (The anti-Christ) கள்ள ஆவியையுடைய கள்ளத்தீர்க்கதரிசி, போலி பரிசுத்த ஆவியையும் (The anti-Spirit) பிசாசு சித்தரிக்கின்றன.

<u>போலி பிதா:</u> சாத்தான் வானத்துக்கும் பூமிக்கும் தேவனாய் இருக்கிறான். (எபே 2:2, 2கொரி 4:4, எபே 6:11-12): பராக்கிரமசாலி (யூதா 9): அவன் ராஜா: அவனுக்கு ராஜ்ய பாரமுண்டு (மத் 12:24-30).

<u>போலி கிறிஸ்து:</u> சாத்தானிடம் தேவன் சொன்னார். 'உன் வித்துக்கும் அவன் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்' (ஆதி

3:15) ஸ்திரியின் வித்து கிறிஸ்து: அப்படியே சாத்தானின் வித்து போலி கிறிஸ்து: அந்தி கிறிஸ்து. பவுல் அவனை கேட்டின் மகன்- அதாவது பிசாசின் மகன் என்று 1தெச 2:3ல் சொல்கிறார். இவன் ஸ்திரியிடம் பிறப்பான்: பிறந்துவிட்டான் என்று சொல்வோரும் உண்டு. இதைப் பின்னால் பார்ப்போம். இவன் இயேசுவைப் போல் உயிர்த்தெழ வேண்டுமே! வெளி 11:7ஐப் பாருங்கள். பாதாளத்திலிருந்து அந்திகிறிஸ்து ஏறிவருகின்றான். எப்படிப் பாதாளம் போனான்? அந்தி கிறிஸ்துவும் கேட்டின் மகன்; ஆனால் இயேசு காலத்திலே ஒரு கேட்டின் மகன் இருந்திருக்கிறான். அவன் தான் யூதாஸ் (யோ 17:12). அவன் ஸ்திரியிடம் பிறந்தவன். அவன் தனக்குரிய இடமான பாதாளத்திலிருந்து அந்தி கிறிஸ்துவாக வந்திருக்கிறான் என வெளி 11:7 சொல்கிறது: வெளி 17:8-ம் இதற்கு ஆதாரமாய் உள்ளது. (அதாவது பாதாளத்திலுள்ள யூதாசின் வல்லமை - ஆவி - இவனுக்கு இருக்கும்) இவனுக்கு உலகிலே போலி பிதாவாகிய சாத்தானால் சிங்காசனம் கொடுக்கப்படபோகிறது. (2தெச 2:4).

**கள்ள ஆவி:** இது பரிசுத்த ஆவியைப் போல. போலி பிதாவாகிய வலுசர்ப்பம், 'வலுசர்ப்பத்தின் வித்து-மகன்' ஆகிய அந்தி கிறிஸ்து ஆகிய இருவரிடமிருந்தும் புறப்படுகிற கள்ள தீர்க்கதரிசி. இவன் ஆளமாட்டான். மிருகமான போலிகிறிஸ்துவை உயர்த்தி மகிமைப்படுத்துவான். பரிசுத்த ஆவியானவர் உலகை இயேசுவிடம் வழி நடத்துவது போல இவன் பூலோகத்தாரை, அந்தி கிறிஸ்துவை வணங்கும்படி செய்வான். பரிசுத்த ஆவி போல வல்லமை இவனுக்குண்டு. மீட்கப்படும் நாளுக்கென்று தேவனுடைய பிள்ளைகளை பரிசுத்த ஆவியானவர் முத்திரை இடுவது போல, இவனும் அழிவின் நாளுக்கென்று முத்திரை இடுவான் (எபே 4:30, வெளி 13:16-17). இவன் ஓர் அற்புத வேலையாள். கிறிஸ்து எல்லா கிரியைகளையும் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே செய்தது போல (அப் 10:38). அந்தி கிறிஸ்து, கள்ள தீர்க்கதரிசியின் அற்புத வேலையால் காரியச்சித்தியை போலியாக அடைவான்.

இப்படியாக பிசாசு ஒரு போலி திரித்துவத்தை உண்டாக்க முனைந்து விட்ட காலத்திற்குள்ளாய் நாம் வந்து இருக்கிறோம். "கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்தரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள்". (மத் 24:24)

**"அவர்களை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கத்தரிசியும் இருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டார்கள"** (வெளி 20:10) என்ற

வசனத்தின்படி இந்த சாத்தானின் திரித்துவ ஆட்கள் மூவரும் ஒரே இடத்திற்கே போவார்கள்.

எனவே வருகைக்காய் காத்திருக்கும் நாம் இப்பொழுதே கிரியை செய்கிற வலுசர்ப்பத்தின் ஆவியையும், கள்ளத்தீர்க்கதரிசியின் ஆவியையும் பகுத்தறியக் கடவோம். வருகையிலே சேர ஆயத்தமாவோம். அல்லேலூயா!

❖ ❖ ❖

## ஈஸ்டர் பண்டிகை எப்படி வந்தது?

பாபிலோனியத் தேவதை இஸ்தார். தம்மூசு என்னும் தெய்வத்தை திருமணம் செய்ய விரும்பினாள். தம்மூசு ஒரு நாள் வேட்டைக்குப் போனபோது ஒரு காட்டுப்பன்றி அவரைக் கொன்றுபோட்டது. அவன் ஆத்மா பாதாளம் போனது. அவனைக் காணாமல் தவித்த இஸ்தார் விஷயமறிந்து பாதாளம் சென்றாள். இஸ்தாரின் சகோதரி எரஸ்கிகால் தான் பாதாள நிர்வாகி. இஸ்தார் பாதாளம் வந்ததற்காய் கோபப்பட்டு அவளை எரஸ்கிகால் திரும்பிப் போகச் சொன்னாள். இஸ்தார் மறுத்ததால், பாதாளத்திலேயே அவள் சிறை வைக்கப்பட்டாள். இனப்பெருக்கத்தை கவனிக்கும் இஸ்தார் பூமியில் இல்லாததால், மிருகங்கள் குட்டிப்போடவில்லை; தாவரங்கள் பூக்கவில்லை. இதனால் மனிதர்கள் பலியிடுவது குறைந்தது, பலிகள் குறைந்ததால் தெய்வங்களெல்லாம் பூமிக்குவந்து, விஷயம் தெரிந்துகொண்டு பாதாளம் போய் எரஸ்கிகாலிடம் சொல்லி இஸ்தாரை விடுதலையாக வைத்தார்கள். தம்மூசு இல்லாமல் இஸ்தார் பூமிக்குவர மறுத்ததால், அவரையும் அனுப்பி வைத்தார்கள். உடனே பூமியில் தாவரங்கள் பூத்தன; மிருகங்கள் குட்டிப்போட்டன. மக்களுக்கு மகிழ்ச்சி; தெய்வகளுக்கும் மகிழ்ச்சி, இது பாபிலோனிய புராணக்கதை.

இதன் அடிப்படையில் தம்மூசு இறந்துவிட்டான் என்று வருஷத்துக்கு ஒரு முறை பாபிலோனில் துக்க நாள் கொண்டாடி அழுவர். பிறகு, தம்மூசுடன் இஸ்தார் பூமிக்கு வந்துவிட்டதாக சந்தோசமான இஸ்டார் பண்டிகை ஒரு முறை கொண்டாடுவர் (எசே 8:14). இந்த பாபிலோனிய மக்கள் கத்தோலிக்க திருச்சபையில் நுழைந்ததால், இதற்கு இணையாக, அழுகின்ற தபசு நாளென்றும், சந்தோச ஈஸ்டர் என்றும் கிறிஸ்தவ வட்டாரங்கள் பண்டிகை நாட்களாக்கி கொண்டாடி வருகின்றனர். இதைத் தெரிந்து கொள்ளுங்கள். இன்னும் இவைகள் தேவையா?

# விருத்தசேதனம் (Circumcision)

விருத்தசேதனம் என்றால் ஆண்களின் நுனித்தோலை வட்டமாக வெட்டி விடுவதாகும். இதை இக்கால யூதர்களும், இஸ்லாமியர்களும் சட்டதிட்டமாகச் செய்கின்றனர். புறஜாதிகள் சிலரும் டாக்டரின் ஆலோசனைப்படி இதைச் செய்கின்றனர். இது மருத்துவ ரீதியாக சுகாதாரத்திற்கடுத்த ஒன்று. அதிகமான நுனித்தோலின் மூலமாய் அந்த பாகம் சுகாதாரமில்லாமல் அசுத்தமாக வாய்ப்புகள் நிறைய உண்டு. வெளிப்படையாய் பார்த்தால் ஒன்று தெரியவரும்; இப்படிப்பட்ட சுகாதாரக் குறைவினால், உடலுறவில் சுகாதாரக்கேடு வரலாம்: சந்ததிப் பெருக்கத்திற்கு உடலுறவே காரணமாய் இருப்பதால், சந்ததி ஆரோக்கியமாய் பிறக்க, வாழ இந்தப் பகுதி சுத்தமாய் இருக்க வேண்டும்: அதனால் விருத்தசேதனம் பண்ணப்படுகின்றது.

முதன் முதலாக வேதத்தில் விருத்தசேதனம் ஆபிரகாம் மூலமாய்த்தான் அறிமுகப்படுத்தப்பட்டது (ஆதி 17). ஆபிரகாமை திரளான ஜாதிகளுக்கு தகப்பனாக்க, அவனிலே ஜாதிகளை உண்டாக்க தேவன் அவனோடு உடன்படிக்கை செய்தார். அதற்கு அடையாளமாய் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும். இந்த அடையாளமானது, தேவனுடையது ஆபிரகாமின் சந்ததி என்றும், ஆரோக்கியமான தேவனின் சந்ததி என்றும் உலகிற்கு வெளிப்படுத்தும். ஆபிரகாமும், அவன் வம்ச எல்லா ஆண் பிள்ளைகளும், வீட்டிலுள்ள அடிமைகள் எல்லோரும் விருத்தசேதனம் பண்ணியாக வேண்டும். ஆபிரகாமுகக்கு 99 வயது. அப்போது தேவன், “நீ திரளான ஜாதிகளுக்கு தகப்பனாவாய்” என்று சொல்லி இந்த உடன்படிக்கையை செய்தார். 99 வயதான ஆபிரகாம் தனக்கும் பிள்ளை பிறக்கும் என்று சொன்ன தேவ வார்த்தையை விசுவாசித்தது, அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. விருத்தசேதனம் என்றால் என்ன என்று உலகிற்கு தெரியாத காலத்தில், அவன் விசுவாசத்தினால் அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெற்றான் (ரோ 4:9-12). இந்த விருத்தசேதனம், நியாயப் பிரமாணச்சட்டமாய் மோசே மூலமாக இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் அது சரீர ஆரோக்கியத்திற்கு அடுத்ததாய் மட்டுமே காணப்படுகின்றது. விசுவாசத்தினால் ஆபிரகாம் அடைந்த நீதியினால் அவன் விருத்தசேதனமுள்ளவர்களுக்கும், விருத்தசேதனம் இல்லாதவர்களுக்கும் இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் அவன் தகப்பனானான் (கலா 3:7).

கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் நாம், மாம்சத்திற்குரிய பாவ சரீரத்தை, விருத்தசேதனம் போல, களைந்து விட்ட அனுபவத்தைப்

பெற்றுள்ளதால், கையால் செய்யப்படாத இருதய விருத்தசேதனத்தை, ஆவிக்குரியபடியே பெற்றுவிட்டோம். பாவத்திற்கு மரித்து, கிறிஸ்துவைப் போல் உயிர்ப்பிக்கப்பட்டோம். ஆபிரகாமின் நீதி நமக்கு வந்தது. இதற்கு அடையாளம்தான் 'கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம்' எடுப்பது என்று வேதம் கூறுகின்றது. (கொலோ 2:11-13). இது கிறிஸ்துவ விசுவாசிக்குரிய தேவ சட்டம். அப்போதுதான் ஆபிரகாம் நீதிமான் என்று பட்டம் பெற்றது போல், நாமும் பெற முடியும். (ரோ 3:21-24, 5:1, 1கொரி 6:11) இப்படிப்பட்டதான ஞானஸ்நானம் விசுவாசத்தினாலே தானே ஒழிய, மற்றபடியல்ல: விசுவாசம் at the age of accountability-ல் தான் வரும்: குழந்தையில் அல்ல.

கிறிஸ்துவுக்குள் விருத்தசேதனமாகிய ஞானஸ்நானம் பெற்றபோது, மாமிச விருத்தசேதனம் விசுவாச வாழ்க்கையில் ஒன்றுக்கும் உதவாது: **"அதனால் ஆசீர்வாதம் இம்மையிலும் மறுமையிலும் கிடைப்பதில்லை"** (கலா 6:15, 1கொரி 7:19) தேவன் விரும்புவது இருதயத்தில் விருத்தசேதனம் மட்டுமே. (பாவ இருதயத்தை நீக்குதல்) (உபா 10:16, 30:6, பிலி 3:3). இதனால் சரீர விருத்தசேதனம் பண்ணுவது பாவமல்ல: சுகாதாரத்திற்கு தேவையானால் செய்யலாம்.

❖ ❖ ❖

# பண்டிகைகள் தேவையா?

கிறிஸ்மஸ் என்றும், புத்தாண்டு என்றும், ஈஸ்டர் என்றும், அறுப்பின் பண்டிகை என்றும் பலவாறாய் கிறிஸ்தவ வட்டாரங்களில் பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன: ஏராளமான பணங்கள் செலவழிக்கப்படுகின்றன: உலகப்பிரகாரமான உடைகள், உணவுகள், உல்லாசங்கள் இவைகள் அனுபவிக்கப்படுகின்றன: அத்தோடு ஆராதனைகளும் எப்போதும் போல் அல்லாமல் வித்தியாசமான நேரங்களில் நடத்தப்படுகின்றன: பண்டிகை கிறிஸ்தவன் நானல்ல என்று சொல்லிக் கொண்டே பண்டிகை ஆசாரிப்பு நடக்கின்றன. அன்றைய தினம் ஆவிக்குரிய சபைகளில் கூட ஆகாரங்கள் வழங்கப்படுகின்றன: உயிர்த்தெழுந்த நாள் ஆராதனைகளும் கைவிடப்படுகின்றன. இந்த நிலையில் பண்டிகைகளைப் பற்றி வேதம் என்ன கூறுகின்றது என்று பார்ப்போம்.

வேதத்திலே ஆதி அப்போஸ்தலர்கள் காலத்திலே மேலே சொல்லப்பட்ட பண்டிகைகளை கிறிஸ்தவர்கள் கொண்டாடியதாய் வசனம் இல்லை: தேவனும் கொண்டாடச் சொன்னதாகவும் இல்லை. ஆனால் பழைய ஏற்பாட்டில் லேவி 23-ம் அதிகாரத்திலே தேவன்

பண்டிகைகளை கொண்டாடச் சொல்லி கட்டளையிட்டிருக்கிறார். இந்தப் பண்டிகைகள் எல்லாம் "கர்த்தருடைய பண்டிகைகள்" (Feasts of the Lord) என்று வேதம் திட்டமாய்ச் சொல்கின்றது. **இந்தக் கர்த்தரின் பண்டிகைகள் மொத்தம் எட்டு. இவைகளில் பிரதானமானது "ஓய்வு நாள் ஆசாரிப்புப் பண்டிகை".** இது ஒவ்வொரு வாரமும் ஏழாம் நாளாகிய சனிக்கிழமை ஆசரிக்க வேண்டியது. அது தவிர, ஒவ்வொரு வருஷமும் குறிப்பிட்ட நாட்களில் அனுசரிக்க வேண்டிய பண்டிகைகள்:-

1. பஸ்காப் பண்டிகை
2. புளிப்பில்லாத அப்பப்பண்டிகை
3. முதற்பலன் அல்லது அசைவாட்டும் பண்டிகை
4. அறுப்பின் பண்டிகை அல்லது பெந்தகொஸ்தே பண்டிகை
5. எக்காளப் பண்டிகை
6. பாவ நிவாரண நாள் பண்டிகை
7. கூடாரப் பண்டிகை

"இந்தப் பண்டிகைகள் எல்லாமே வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கின்றன." அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றியது. எனவே தான் பவுல் கொலோ 2:16.17-ல் சொல்கின்றான் "இந்தப் பண்டிகைகளை கொண்டாடவில்லை என்று எவனும் கிறிஸ்தவனைக் குற்றப்படுத்தக் கூடாது: ஏனெனில் இவைகளின் நிழலாட்டமான இயேசுவே வந்து இரட்சித்து மீட்டு நமக்குள்ளே இருக்கிறார்" இப்படிப்பட்டதான பகிரங்கமான வெளிச்சம் கிடைத்தும் இன்னும் ஏன் கிறிஸ்தவர்கள் பண்டிகை கிறிஸ்தவர்களாய் இருக்க வேண்டும்? வரப்போகும் மேசியாவுக்காய் காத்திருந்து பண்டிகையை ஆசரித்த இஸ்ரவேலரைப் போல் ஏன் இன்னும் இருக்க வேண்டும்? இந்தப் பண்டிகைகளின் நோக்கம் என்ன? இவைகள் ஏன் ஆசரிக்கப்பட்டன? என்று பார்ப்போம்.

**ஓய்வு நாள் ஆசாரிப்புப் பண்டிகை**: (லேவி 23:2,3) இளைப்பாறுதல் ஏதுமின்றி அடிமையாய்க் கிடந்த இஸ்ரவேலரை விடுதலை செய்ததற்கு அடையாளமாய், தேவன் படைப்பின் தொழிலைவிட்டு ஓய்ந்திருந்தது போல இஸ்ரவேலர்கள் ஓய்ந்திருந்து இந்தப் பண்டிகையை ஆசரிக்க வேண்டும் (உபா 5:15). இன்றோ தேவன் இயேசு தன் இரத்தத்தினாலே நம்மை மீட்டு விடுதலையாக்கிவிட்டார். வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்கள் இயேசுவிடம் வந்தாலே இளைப்பாறுதல்-ஓய்வு. (மத் 11:28) எப்படி? ஏழாம் நாளை ஆசரிப்பதிலா? இல்லையே! கிறிஸ்துவின் வசனமாகிய

நுகத்தை ஏற்றுக் கொண்டாலே இளைப்பாறுதல். இப்படியாய் நிழலாட்டமான, சனிக்கிழமை ஓய்வு நாள் ஆசரிப்புப் பண்டிகை நமக்கு தேவையா?

<u>பஸ்கா பண்டிகை:</u> (லேவி 23:4,5) யூதகாலண்டரின் முதல் மாதமான 'ஆபீப்' 14-ம் தேதி இது கொண்டாடப்படும் (யாத் 12, லேவி 23:5, எண் 9:1-14). எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர்கள் விடுதலையாக்கப்பட்ட நாளில் இது ஆரம்பமானது. இஸ்ரவேலரை விடுவித்தது போல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மையும் பாவத்தின், பிசாசின், அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்க பாவ மன்னிப்புக்கென்று தன்னையே பஸ்காவாக்கினார் (1கொரி 5:7, 1பேதுரு 1:19). இயேசுவின் சிலுவை மரணத்திற்கு இது நிழலாட்டமானதால் இந்தப் பண்டிகையை நாம் கொண்டாடத் தேவையில்லை. இந்த ஆபீப் 14-ம் தேி நமது உலக ரோம காலண்டர்படி மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் வரும். இதையே பலர் 'பெரிய வெள்ளி' "Good Friday" என்று கொண்டாடுகின்றனர்.

<u>புளிப்பில்லாத அப்பப்பண்டிகை:</u> (லேவி 23:6-8) பஸ்கா பண்டிகையிலிருந்து ஏழு நாட்கள் இந்த பண்டிகை கொண்டாடப்படும். இஸ்ரவேலரின் எகிப்தினின்று விடுதலை, பஸ்காவாய் இருப்பது போல, அவர்கள் துரிதமாய் எகிப்தைவிட்டு ஓடிப் போனதற்கேதுவாய் இந்தப் பண்டிகை இருக்கிறது. This feast was commemorative of the haste with Israel left Egypt (யாத் 12:39). It is of a holy walk after redemption. இந்தப் பண்டிகையிலே புளிப்பில்லாத அப்பமே உபயோகப்படுத்தப்பட்டது. புளிப்பு என்றாலே பாவ வாழ்க்கை (1கொரி 5:6-8, கலா 5:7-9) இயேசுவின் பஸ்காப் பலியால் இரட்சிக்கப்பட்ட உடனேயே ஒவ்வொரு கிறிஸ்தவனும், பரிசுத்த வாழ்க்கை வாழ, பாவ எகிப்தை விட்டு உடனடியாய், துரிதமாய் ஓடவேண்டும். இந்த பண்டிகை ஏழு நாட்கள் என்பதால், ஏழு என்பது வேதத்தில் முழுமை-பரிபூரணம் போன்றவற்றை உணர்த்துகின்றது என்பதை அறிந்து, நமது வாழ்க்கை முழுவதும் நாம் பரிசுத்த ஓட்டத்தை தொடர்ந்து பவுலைப் போல ஓட வேண்டும். இதை பண்டிகையில் காட்டிப் பலனில்லை.

<u>முதற்பலன் அல்லது அசைவாட்டும் பண்டிகை:</u> (லேவி 23:10,14) இது ஆபீப் மாதம் 16-ம் தேதி கொண்டாடப்படும். பாலஸ்தீனாவில் முதலில் விளையும் தானியம் வாற்கோதுமை. இந்தக் கோதுமைக் கதிரை முதற்பலனாய் தேவனுக்குப் படைத்த பின்தான் அறுவடையே ஆரம்பமாகும். முதற்பலன் தேவனுக்கே! இது கிறிஸ்துவுக்கு நிழலாட்டம். முதலில் உயிர்த்தெழுந்தவர் கிறிஸ்து;

நாமெல்லாரும் பின்புதான் (1கொரி 15:23, 1தெச 4:13-18). பஸ்கா பண்டிகை 14-ம் தேதி; முதற்பலன் பண்டிகை 16-ம் தேதி. கிறிஸ்து மரித்தது வெள்ளிக்கிழமை; உயிர்த்தது ஞாயிற்றுக்கிழமை; இது நிழலாட்டப் பண்டிகை; நாம் கொண்டாடத் தேவையில்லை.

**அறுப்பின் பண்டிகை (அ) பெந்தகொஸ்தே பண்டிகை:** (லேவி 23:16,17) முதற்பலன் பண்டிகையிலிருந்து 50-வது நாள் கொண்டாடப்படுகின்றது. உண்மையிலேயே இயேசு உயிர்த்தெழுந்த நாள் தொடங்கி 50-வது நாளில் தான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார் சபைக்கு. இது நிழலாட்டமான பண்டிகை (அப். 2:1-4). இங்கே புளித்தமாவுதான் உபயோகப்படுத்தப் படுகிறது; காரணம் பரிசுத்த ஆவியானவர் சபைக்கு கொடுக்கும் போதெல்லாம் பரிபூரணர் ஒருவருமில்லை; கோதுமையும் களையும் சபையில் எப்போதும் இணைந்தே இருக்கும் (மத் 13:33, அப் 5:1-10, 15:1). இதுவும் நிழலாட்டமே! எனவே இந்த பண்டிகையின் உண்மையை உணர்ந்த ஒரு கிறிஸ்தவனும் இதை ஆசரிக்கக் கூடாது. இந்த அனுபவம், வாழ்க்கை முழுவதும் தேவை என்பதால் ஏழு நாள் ஆசரிக்கப்பட்டது.

**எக்காளப் பண்டிகை:** (லேவி 23:23-25). இது தீர்க்கதரிசன அடிப்படையிலான பண்டிகை. பெந்தகொஸ்தே பண்டிகையிலிருந்து நீண்ட நாட்களுக்குப் பிறகு ஏழாம் மாதம் முதல் தேதி கொண்டாடப்படுகின்றது. இந்த இடைப்பட்ட காலகட்டம் கிறிஸ்தவ சபையார் மத்தியிலே ஆவியானவர் கிரியை செய்கிற காலமாயிருக்கும். ஆனால் இஸ்ரவேலர்களோ சிதறிப் போனார்கள். எக்காளம் என்றாலே "கூவி அழைத்து கூட்டிச் சேர்ப்பதற்கு" என அறியலாம். அப்படியாய் சிதறிப் போனவர்களை கூட்டிச் சேர்ப்பதற்கு நிழலாட்ட பண்டிகை இது. (ஏசா 18:3, 27:13, யோவே 2:1, 3:21). இஸ்ரவேலர்கள் முழுமையாய் கூடிச் சேர்வது சபையின் காலத்திற்குப் பின்பு தான் என்று நாம் அறிவோம்.

**பாவ நிவாரண நாள்:** (லேவி 23:26-32) எக்காளப் பண்டிகை முடிந்த மறுநாளே இது ஆரம்பமாகிறது. உபா 30:1-3ல் சொல்லப்பட்ட உடன்படிக்கை நிறைவேறும்படியான தீர்க்கதரிசன அடிப்படையிலான பண்டிகை இது. இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வருகைக்கும் பூமியிலே நிறுவப்போகும் 1000 வருட அரசாட்சிக்கும் ஆயத்தமாய் இப்பண்டிகை காணப்படுகின்றது. எக்காள அழைப்பு வந்த உடனே இஸ்ரவேலர் எல்லாரும் மனந்திரும்பி அழுது புலம்புவார்கள் (யோவே 2:1, 11-15, சகரி 12:10-14, 13:1). அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்படும் முழுமையாய். (ரோ 11:25,26) இதற்கு நிழலாட்டமான பண்டிகையே இது.

<u>**கூடாரப் பண்டிகை**</u>: (லேவி 23:34-44). அறுவடையின் காலம் முடிந்த உடனே, ஏழாம் மாதம் 15 முதல் 21-ம் தேதி வரை கொண்டாடப்படும். முதல் அறுவடைப் பலன் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல். இஸ்ரேல் நாட்டின் எல்லா அறுவடையும் முடிந்தபின் தான் இப்பண்டிகை என்பதால் கிறிஸ்துவுக்குள் மரித்த எல்லோரும் உயிர்த்தெழுந்தபின் நடக்கும் காரியத்தை தீர்க்கதரிசனமாக சொல்லப்படும் பண்டிகையாய் இது இருக்கிறது என அறியலாம். இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வருகை நிகழும்; இப்பூமியில் ஆயிர வருட அரசாட்சி நடக்கும். தேவனோடு சந்தோஷ வாழ்க்கை இஸ்ரவேலருக்கு மட்டுமல்ல: எல்லாருக்குமே! (எஸ்றா 3:4, சகரி 14:16-21, வெளி 21:3). இப்பண்டிகையின் போது இஸ்ரவேலர்கள் கூடாரத்தில் வாழ்வது என்பது, "நாம் இப்பூமியிலேயே ஆளப்போகிறோம் கிறிஸ்துவுடனே" என்பதற்கு நிழல். ஏழு நாட்கள் பண்டிகை என்பது கிறிஸ்துவின் முழுமையான பூவுலக ஆட்சியாகும்.

இப்படிப்பட்டதான வருங்காரியங்களுக்கு நிழலாய் கிறிஸ்துவை மையமாக்கி உள்ள இந்தப் பண்டிகைகளை அப்போஸ்தலர்கள் கொண்டாடவும் இல்லை; கொண்டாடச் சொல்லவும் இல்லை. இப்படியிருக்க, இந்தப் பண்டிகைகளை நாம் கொண்டாடலாமா? கொண்டாடினால், கொலோ 2:16-17ல் பவுல் சொல்லியது வீணாகிவிடுமே! கிறிஸ்துவாகிய மேசியாவின் மேல் உனக்குள்ள விசுவாசம் விருதாவாகிவிடுமே! நீ பேர்க் கிறிஸ்தவனாய் காட்சியளிப்பாயே! இந்தப் பண்டிகைகளைக் கொண்டாடினாலே இப்படி என்றால், வேதத்திலேயே சொல்லப்படாத, இது வரைக்கும் எந்த வேதப் பரிசுத்தவானும் ஆசரிக்காத, கிறிஸ்துமஸ், ஈஸ்டர், கல்லறைத்திருவிழா, பரிசுத்தவான்கள் திருவிழா போன்ற பல பண்டிகைகளை கொண்டாடுகிறாயே, கிறிஸ்து உனக்காய் மரித்து உயிர்த்தது வீணா? இயேசு பிறந்தார்; மரித்தார்; உயிர்த்தெழுந்தார்; மீண்டும் வருவார் என்ற விசுவாசத் தொனியோடே கூடிய மகிழ்ச்சிப் பெருக்கம் என்றென்றும் உனக்குள் இருக்க வேண்டுமே! தினந்தோறும் உனக்குப் பண்டிகைதானே! தினந்தோறும் குதூகலம் கொண்டாட்டம் தானே! உலகப் பிரகாரமான பண்டிகைக் கிறிஸ்தவனாய் இனி என்றைக்குமே இருக்கமாட்டேன் என்று இன்றைக்கு உறுதி எடுப்போமா? இயேசு சீக்கிரம் வருகிறார்! அல்லேலூயா! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்! மேகம் போன்ற திரளான ஊழியக்ககாரர்களைப் பார்க்காதே! இயேசுவை நோக்கியே ஓடு! (எபி 12:1).

❖ ❖ ❖

# நரகமா? பாதாளமா?

நரகத்தைப் பற்றி பேசப்படுவதைப் பாருங்கள்!

1. இந்த உலக வாழ்க்கையே நரகம்: இத்தோடு மனுஷன் அழிந்து போவான்.

2. கடைசி காலத்திலே இந்த உலகத்தை அக்கினியால் தேவன் அழிப்பாரே. அந்த அக்கினிதான் நரகம்.

3. அன்பாயிருக்கிற தேவன் என்றென்றுமாய் பாவிகளை அக்கினியில் போட்டு வாதிக்கமாட்டார். அக்கினி கொஞ்ச காலம் தான்.

இப்படி ஏராளமான ஹேஷ்யங்களை பரிசுத்த வேதத்தை வைத்துக் கொண்டே சொல்லுகின்றனர். வேதம் என்ன சொல்கின்றது? ஆவியானவர் விளக்கட்டும்! காதுள்ளவன் கேட்கக்கடவன்! மேற்கொண்டு இதை வாசியுங்கள். வேதத்திலே நரகம் என்றும், பாதாளம் என்றும் பல இடங்களில் சொல்லப்படுகின்றன. எபிரெயு பாஷையிலே 'Gahenna' என்பது கிரேக்க பாஷையிலே **'Geenna'** என்று அழைக்கப்படுகின்றது. இந்த வார்த்தை அநேக இடங்களில் **"நரகம்" HELL** என்ற அர்த்தத்தில் வருகிறது. இது பழங்காலத்தில் மனித-நரபலியிடுகிற Hinnom பள்ளத்தாக்கை குறிக்கிறதாய் இருக்கிறது. (2நாளா 33:6, எரே 7:31). தொடர்ந்து இந்த பள்ளத்தாக்கிலே எரியும் அக்கினி, பாவிகளின் மேல் வரக்கூடிய முடிவில்லாத தண்டனைக்கு எச்சரிப்பு அடையாளமாக இஸ்ரவேலருக்கு இருக்கிறது. எபிரெயு பாஷையிலே Sheol என்றும், கிரேக்க பாஷையிலே HADES என்றும் 'பாதாளம்' என்ற அர்த்தத்தில் வருகிறது. இந்த நரகமும், பாதாளமும், எங்கே, எப்படி, எதற்காய் இருக்கின்றன என்று ஆராய்வோம்.

**நரகம்:** இன்றைய தேதியிலே இது இல்லை: ஆனால் இது ஒரு இடம்: இது உலகில் இல்லை: தேவன் ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கிறார். இது பிசாசுகளுக்கும் அவர் தூதர்களுக்கும் மட்டுமே ஆயத்தம் பண்ணப்படுகிறது. இரண்டாம் வருகையின்போதும், வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின் போதும் பாவிகள் இங்கே அனுப்பப்படுவார்கள் (மத் 25:41, வெளி 20:10,14,15). இங்கே அக்கினி எரிந்து கொண்டிருக்கும்: இதை அக்கினியும் கந்தகமும் எரிகிற தீக்கடல் என்றும் சொல்லப்படுகின்றது. இங்கே அக்கினி அவியாமலும், புழு சாகாமலும் இருக்கும். அப்படியென்றால் என்ன பொருள்? அங்கே ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்ட பாவிகள் அவியாமலும், சாகாமலும் வேதனையால் துடித்துக் கிடப்பார்கள் (வெளி 20:10, மாற் 9:44, ஏசா

66:24). அந்த அக்கினிக்கும் ஆத்மாவையும், சரீரத்தையும் அழிக்கும் வல்லமையைக் கூட தேவன் கொடுக்க முடியும் (மத் 10:28) துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் இதிலே தள்ளப்படுவார்கள் (சங் 9:17). இவர்கள் செய்த பாவம் பரிசுத்த ஆவிக்கு விரோதமான மன்னிக்க முடியாதது. யோ 16:8-9ல் சொல்லியபடியான பரிசுத்த ஆவியால் கண்டித்து உணர்த்தப்பட்ட பாவத்தை தொடர்ந்து செய்து, இயேசுவை ஆண்டவரென்றும் இரட்சகரென்றும் விவாசித்து அறிக்கையிடாமல் (ரோ 10:9-10) மரணத்துக்கு-இரண்டாம் மரணமாகிய நரகத்திற்கு உட்பட்டவர்கள் (1யோ 5:16, வெளி 20:6). இந்த நரக வாதை ஒரு குறிப்பிட்ட காலம் மட்டுமல்ல: இது, நித்தியம் நித்தியமாய் ஜீவனை அடைந்து பரிசுத்தவான்கள் பரலோகில் எப்படி களிப்பார்களோ, அப்படி பாவிகள் நித்தியம் நித்தியமாய் ஆக்கினை அடைவார்கள். இது உறுதி. (மத்.25:46) சிலர் சொல்கிறார்கள்: இது நித்திய வாதை இல்லை என்று. வெளி 20:10ல் சொல்லப்பட்ட சதாகால வாதையை, யாத் 21:6, 1சாமு 1:22 போன்ற வசனங்களில் உள்ள "என்றென்றைக்கும்" உள்ள வார்த்தையை வைத்து சிலகாலம் தான் என்று வாதிடுகின்றனர். ஆனால் நரக வாதையின் காலத்தைப் பற்றி சொல்கின்ற இடங்களிலே "Olam" "Ainoios" என்று முறையே எபிரெயு, கிரேக்க பாஷைகளிலே போடப்பட்டுள்ளதன் அர்த்தம், 'Eternal' "நித்திய நித்தியம்". How God is eternal similar is the time of Hell. **<u>இன்னொரு கேள்வி</u>** இப்படி நித்திய நித்தியமாய் இருக்கிற நரகத்தில் பாவிகளின் உடல் வெந்து போகாதா? உயிரோடே நரகத்திலே தள்ளப்பட்ட மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியும். ஆயிரம் வருடத்திற்கு பின்னும் அவிந்து போகாமல் இருக்கிறார்கள் என்று வேதம் சொல்லவில்லையா? (வெளி 19:20, 20:10). மல்கியா 4:1,3 வசனங்களைக் வைத்துக் கொண்டு, இதுதான் அக்கினியால் அழிக்கப்படுவது; அதுதான் நரகம் என்று வாதிடுவோரும் உண்டு. நாம் ஏற்கெனவே பார்த்துவிட்டோம் நரகம் இந்த பூமியில் இல்லை என்று. எனவே மல்கியா 4-ல் சொல்லப்பட்டது நரக ஆக்கினை அல்ல. அது தேவனின் யாக்கோபின் இக்கட்டு கால நியாயத்தீர்ப்பு; பூமி அக்கினிக்கு இரையாகுதல்.

<u>பாதாளம்:</u> இது இரட்சிக்கப்படாத பாவிகள் மரணத்திற்குப் பின் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு வரை வைக்கப்பட்டுள்ள இடம் (வெளி 20:11-15). பழைய ஏற்பாடு காலத்தில், இயேசு உயிர்த்தெழும் முன்பு வரை, பரிசுத்தவான்களும் பாவிகளும் போகும் இடமாயிருந்தது, இதை லாசரு ஐஸ்வரியவான் சரிதையும் இயேசு-கள்ளன் மரணத்துக்குப் பின் நிகழ்ச்சியும் உணர்த்துகின்றது. (லூக் 16:19-31, லூக் 23:43) இந்த பாதாளம் எங்கே இருக்கின்றது? நமது

விசுவாசப் பிரமாணப்படி இயேசு மரித்தபின் பாதாளங்களில் இறங்கி, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். (Refer அப் 2:31 with சங் 16:10) எபே 4:9ன்படி, இயேசு பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று அறிகிறோம்; அந்த பூமியின் தாழ்விடம் தான் பாதாளம். இதை சமீபத்திலே சோவியத் விஞ்ஞானிகளின் பூமியைத் தோண்டும் ஆராய்ச்சியில், 9 மைல் ஆழத்திற்குப் பிறகு, அலறுகிற மனித சத்தங்களும், 2000°Fக்கு மேல் உஷ்ணமும் இருந்ததை கண்டு. தோண்டும் முயற்சியை கை விட்டு விட்டதாகவும், கேட்ட அலறல்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளதாகவும் செய்தித்தாள்களில் அறிகின்றோம். (Weekly World news April 24, 1990). எனவே வேதத்தின்படியும். விஞ்ஞான ஆராய்ச்சியின் படியும், பாதாளம் பூமிக்குள்ளே இருக்கிறது என்பது உண்மை. லாசருவும், ஐஸ்வரியவானும், நல்லவனும். பாவியும் பாதாளம் போய் ஒருவரை ஒருவர் பார்த்தும், பேசியும் இருந்ததாலும், இரண்டு இடத்திற்கும் இடையே இணையக் கூடாத பிளவு (லூக் 16:26) இருந்ததாலும், அந்த நாட்களிலே பாவிகளும், பரிசுத்தவான்களும், ஒரே இடத்திலுள்ள வெவ்வேறு விதமான பாதாளங்களுக்கு மரித்த உடனே சென்றார்கள் என்று அறிகிறோம்.

பழைய ஏற்பாட்டின் நாட்களிலே மரித்த அனைவரும், பாதாளச் சிறைக்குள் கொண்டு போகப்பட்டனர். ஆனாலும் அங்கேயே பரிசுத்தவான்களுக்கும் பாவிகளுக்கும் வித்தியாசங்கள் இருந்தன. கிறிஸ்து இயேசு உயிர்த்தெழுந்ததினால் மரணத்திறவுகோலும், பாதாளத்திறவுகோலும் கிறிஸ்துவிடம் வந்துவிட்டன (வெளி 1:18). அதனாலே தான் எபே 4:8ன்படி பாதாளத்திலே சிறைப்பட்டிருந்த ஆபிரகாம், ஈசாக்கு, தாவீது போன்ற பரிசுத்தவான்களை பரதீசுக்குக் கொண்டு போனார் என்று பல வேத வல்லுநர்கள் கணிக்கிறார்கள். தேவனின் மரணத்திற்க்குட்பட்ட தம்முடைய புதிய ஏற்பாட்டுப் புத்திரர்களை தற்போது பரதீசுக்கு கொண்டு போகிறார். அதை பவுல் கண்டார் (2கொரி 12:1-3). பாதாளத்தின் திறவுகோல் - அதிகாரம் - உயிர்த்தெழுந்த இயேசுவிடம் இருந்ததால், பரிசுத்தவான்கள் மட்டுமே வெளிக்கொணரப்பட்டார்கள். பாதாளம் என்ற இடம் இன்னும் இருக்கத்தான் செய்கிறது. அப்படியே, மரணத்தின் திறவுகோலும் உயிர்த்தெழுந்த இயேசுவிடம் இருந்ததாலும், எபி 9:27ன்படி அனைவரும், மரிக்க வேண்டும் என்பது தேவனுடைய நியாயத்தீர்ப்பாய் இருப்பதாலும், பரிசுத்தவான் என்று நிச்சயிக்கப்படவே 2கொரி 5:10ன்படி நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும் என்பதாலும் மரணமும் இன்னும் இருக்கத்தான் செய்கிறது. வெளி 20:14ன்படி மரணப்பிசாசும், பாதாளப்பிசாசும், வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு வரை இருக்கும் என்று அறிகிறோம். இந்த பாதாளம் என்பது கல்லறை – 'Grave-

yard' – ஆகும் (See 1கொரி 15:55; ஆதி 37:35) கல்லறையில் வசிக்கும் பிசாசு தான் இந்தப் பாதாளப் பிசாசு. மற்றபடி, பூமிக்குள் இருக்கும் பாதாளத்திற்கு பிசாசு ஏதுமில்லை (See லூக் 8:28,31). புதிய பூமி வரும்போது, இந்த பாதாளம் பற்றி பேச்சே இல்லை.

நரகம், பாதாளம் என்பவைகளைத் தவிர படுபாதாளம் Bottomless bit-Abyss என்ற ஒன்றும் (வெளி 20:1) TARTAROS (2பேது 2:4) என்று ஒன்றும் உள்ளன. ஆனால் இவைகளுக்கும், நரகத்திற்கும் பூமிக்குள்ளிருக்கும் பாதாளத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. 'Tartaros' என்ற வார்த்தையை நரகம் என்று மொழி பெயர்க்கப்பட்டிருந்தாலும், மேலே சொல்லப்பட்ட நரகமல்ல இது. அதில்தான் இன்னும் பிசாசு ஒன்றும் தள்ளப்படவில்லையே! ஆனால் இந்த 'Tartaros' என்ற நரகத்தில், பிசாசுகளுக்கு திருஷ்டாந்தமாய் பாவம் செய்த தேவ தூதர்கள் (யூதா 6; 2பேது 2:4) சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் 'Abyss' என்ற படுகுழியில் ஆயிர வருட அரசாட்சியின் போது பிசாசு தள்ளப்பட்டு சிறைப்படுத்தப்படும் என்றும் நாம் அறிந்துள்ளோம். Abyss என்பது பூமிக்குள் ஆழத்தில் இருக்கலாம் என்று கணிக்கப்படுகின்றது. இங்குதான் வெளி 9:11ல் உள்ள அப்பொலியோன் இருப்பதாக கணிக்கப்படுகிறது.

❖ ❖ ❖

# சாம்பல் புதனும் லெந்து நாட்களும்

பெரும்பாலான கிறிஸ்தவ வட்டாரங்கள் சாம்பல் புதன் என்றும் அன்று முதல் 40 நாட்கள் லெந்துகாலம் என்றும் ஆசரிக்க ஆரம்பித்துள்ளன. கர்த்தர் நமக்குத் தந்திருக்கிற வேதப் புத்தகத்தில் ஒரு இடத்திலும் 'சாம்பல் புதன்' கொண்டாடியதாகவோ, லெந்து நாட்கள் ஆசரித்ததாகவோ இல்லை. இயேசுவின் உபதேசமும் இல்லை; அப்போஸ்தல உபதேசமுமில்லை. கி.பி 4-ம் நூற்றாண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு, போப் மார்க்கத்தால் சட்டமாக்கப்பட்ட இந்த பண்டிகை முறைகள். கத்தோலிக்க சபைகளில் மட்டுமல்லாது அவர்களை எதிர்த்து வந்த புரோட்டஸ்டண்ட் சபைகளிலும் நுழைந்திருக்கிறது. இப்படிப்பட்டவைகளை ஆசரிக்கும் புரோட்டஸ்டண்ட் மார்க்கத்தோடு பல இடங்களில் ஆவிக்குரிய சபைகள் இணைந்து போகின்றது வேதனையாய் இருக்கின்றது. சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் நீடிய சாந்தத்தோடும், உபவாசத்தோடும் கண்டனம்

பண்ணி கடிந்துகொண்டு புத்தி சொல்லு (2தீமோ 4:2) என்ற பவுலின் வார்த்தை பல ஆவிக்குரிய சபையார்களின் காதுகளில் விழவில்லை. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? அவிசுவாசியுடனே விவாசிக்கு பங்கேது? (2கொரி 6:14,15) இப்படிச் செய்வது விக்கிரக ஆராதனை இல்லையா? மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னது இயேசுவின் காலத்திலும் நிறைவேறுகிறது. இந்தக் கடைசி காலத்திலும் நிறைவேறுகிறது (மத் 15:9).

இரட்டுடுத்தி சாம்பலில் கிடந்த எஸ்தரையும், யோபுவையும் எடுத்துக் கொண்டு, சாம்பலுக்கு மகிமையைத்தர ஆரம்பிக்கின்றனர் (யோபு 2:8; 42:8; எஸ். 4:1-3). தூளும் சாம்பலுமாய் இருக்கின்றேன் என்று ஆபிரகாம் சொன்னதை வைத்து சாம்பலுக்கு மேன்மை காட்டுகிறார்கள் (ஆதி 18:27). அவர்கள் தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது (ரோ 1:21). ஆபிரகாம் சொன்னதைப் போல நாம் சாம்பலாய்த்தான் இருந்தோம். என்றைக்கு இயேசுவே ஆண்டவரென்றும், இரட்சகரென்றும் இருதயத்திலே விசுவாசித்து வாயினால் அறிக்கை செய்து, பாவத்திற்கு மரித்து நீதிக்கு ஒப்பனையான ஞானஸ்நானம் பெற்றோமோ அன்றே சாம்பலாகிய நமக்கு சிங்காரத்தைத் தந்திருக்கிறார்! (ஏசா 61:3). இதை விசுவாசி! தேவனுடைய மகிமையைக் காண்பாய்! ஆபிரகாம் போன்றோரெல்லாம் நம்மையல்லாமல் பூரணராவதில்லை (எபி 11:39,40). நாமே மணவாட்டி. அல்லேலூயா! உயிர்த்தெழுந்த ஞாயிறு என்று (Easter) ஆசரிக்கப்படும் ஞாயிறுக்கு முதல் ஞாயிறு குருத்தோலை பிடித்து பவனி வருபவர்கள், அதே குருத்தோலையை சாம்பல் புதனன்று எரித்து சாம்பலாக்கி, உடம்பில் பூசிக்கொள்கிறார்கள். சிங்காரமான உடம்பு சாம்பலாகுமா? தேவனுடைய ஆலயமாகிய சரீரம் சாம்பலாகுமா?

அன்று முதற்கொண்டு லெந்து நாட்களாம். இயேசு 40 நாள் உபவாசமிருந்தாரே அப்படித்தான் இது என்கிறார்கள். “என்னைப் போல உபவாசமிரு 40 நாளைக்கு” என்று இயேசு எங்கேயாவது சொன்னாரா? இயேசு உபவாசமிருந்து பரிசுத்த ஆவியின் வல்லமையை பெற்றார். பிசாசின் சோதனைகளை ஜெயித்தார் (மத் 4) 40 நாளுக்குப்பின் அவர் மரிக்கவில்லையே! ஆனால் இங்கோ உபவாச நாளின் இறுதியிலே இயேசுவின் மரண நாளை ஆசரிக்கிறார்களே. ஏன்? உபவாசத்திற்குப் பின்னும் இயேசு $3\,^1/_2$ வருடம் வல்லமையாய்

ஊழியம் செய்தாரே! பின்பு ஏன் இவர்களின் மனக்கண்ணை பிசாசானவன் குருடாக்கினான்? இவர்களின் மனக்கண் திறக்கட்டும்; பிரகாசமாக்கட்டும் (எபே 1:19). இந்த 40 நாளிலும் கறிமீன் சாப்பிட மாட்டார்கள். கல்யாணம் போன்ற காரியங்கள் பாவமா? அவசியமானவைகளல்லாமல், பாரமான எதையுமே மக்கள் மேல் சுமத்தாமல் இருப்பது. பரிசுத்த ஆவிக்கும் அப்போஸ்தலர்களுக்கும் நலமாக முதலாம் நூற்றாண்டிலே காணப்பட்டது (அப் 15:28.29). பரிசுத்த ஆவிக்கு விரோதமான எதையுமே கிறிஸ்தவன் செய்யக்கூடாது. அவரே சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துகிறவர், இந்த 40 நாள் உபவாச காலம் இயேசுவின் மரணத்தோடு ஏன் இணைக்கப்பட்டது? நாமெல்லாரும் பாரம்பரியக் கிறிஸ்தவர்களுமல்ல; பண்டிகைக் கிறிஸ்தவர்களுமல்ல, இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்கள். அந்நியநுகத்தோடு பிணைக்கப்படமாட்டோம்! (1கொரி 6:14). இயேசுவின் நுகமோ இலகுவானது (மத் 11:30). தேவன் தாமே பாரம்பரியக் கிறிஸ்தவர்களோடு பேசுவாராக! அவர்களுக்குகாய் ஜெபிப்போம்! தேவனுடைய வித்தாகிய வசனத்தால் அவர்கள் பிறக்கட்டும்! (1பேது 1:23). பிசாசின் கிரியைகள் ஓடிப்போகும்! எல்லா நாளும் நம்மைத் தாழ்த்துவோம்! எப்போது வேண்டுமானாலும் உபவாமிருந்து இயேசுவைப் போல் வல்லமையைப் பெறுவோம்! இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் எந்நாளும் நினைப்போம்! அல்லேலூயா!

❖ ❖ ❖

# சிலுவையை எடுத்துக்கொண்டு செல்வது எப்படி?

மத் 10:38 16:24 லூக் 9:23 14:27 போன்ற வசனங்களை வைத்துக்கொண்டு நாம் உண்மையிலேயே சிலுவையை எடுத்துக் கொண்டு நடக்க வேண்டும் என்று போதிக்கின்றனர். நல்லது தான். எந்த சிலுவையை? கிறிஸ்துவின் சிலுவையை சுமக்க வேண்டும் என்று சிலர் பிரசங்கிக்கின்றனர். அல்ல... அல்ல... வசனத்தை மறுபடியும் படியுங்கள். நீங்களும் நானும் சுமக்க வேண்டியது இயேசுவின் சிலுவையை அல்ல; நம் சிலுவையைத் தான். நம் சிலுவையைச் சுமப்பதால் தான் நாம் இயேசுவின் தொண்டர்களாய் மாறுகின்றோம். இப்படி நம்சிலுவையை நாம் சுமக்கும் முன் செய்ய வேண்டிய ஒரு காரியம்; **"நம்மை நாமே வெறுக்க வேண்டும்."** நமது ஜீவனின் மேல் கூட வெறுப்பு வேண்டும். **"கிறிஸ்துவுக்காய் என் ஜீவன்"**

என்ற எண்ணம் வர வேண்டும். அதனால் தான் ஊழியக்காரர் பாடுகிறார்: "உன்னையே வெறுத்துவிட்டால் ஊழியம் செய்திடலாம்; சுயத்தை சாகடித்தால் சுகமாய் வாழ்ந்திடலாம்". இப்படிப்பட்டவர்கள்தான் இயேசுவின் பின்னடியார்கள். இவர்கள் தங்கள் சிலுவையை சுமக்க வேண்டும். எது நமது சிலுவை? கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதின் நிமித்தம், கிறிஸ்துவை பிரசங்கிப்பதன் நிமித்தம் வரும் துன்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் (2தீமோ 3:12; 1பேது 3:19) உலகத்திலே உபத்திரவம் உண்டு; திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் (யோ 16:33) என்ற தேவனின் வார்த்தையை நம்பி செயல்பட வேண்டும். அதனால்தான் பக்தன் பாடுகின்றான் "கிறிஸ்துவுக்குள் நம்பாடுகள் ஒரு நாளும் வீணாகாது." கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதன் நிமித்தமாய், அவரை பிரசங்கிப்பதன் நிமித்தமாய் அவமானம் வரும்; நிந்தை வரும்; சோதனை வரும் (1பேது 4:12-14). இவையெல்லாவற்றையும் கிறிஸ்துவுக்காய் சகித்து, நம்மில் அன்புகூர்ந்த கிறிஸ்துவாலே ஜெயமுண்டு என்று விசுவாசித்து நடக்க வேண்டும். (ரோ 8:37) கிறிஸ்து நமக்கு சிலுவை சுமக்கும் மாதிரியை வைத்துப் போனார். (1பேது 2:21) அவர் போல நாமும் அந்த பக்தன் பாடியது போல "அவமானம் நிந்தை சிலுவைகளை அனுதினமும் நான் சுமந்திடுவேன்" என்று சுமக்க வேண்டும். அப்போதுதான் நாம் இயேசுவை பின்பற்றும் சீஷர்கள். அவர்மேல் நமக்கு அன்பு இருக்குமானால் அவர் சொன்ன வார்த்தையின்படியே நம்சிலுவையை சுமந்து பின் தொடர்வோம்! (1யோ 5:3). இப்படி சிலுவையை சுமப்பதினால் சிந்தையே மாறிவிடும்; நீடிய பொறுமை வரும்; நிரந்தர அமைதி வரும். அல்லேலூயா!

❖ ❖ ❖

# அதிகாரமும் வல்லமையும்

இயேசு கிறிஸ்து பரலோகம் போகும்போது தன்னுடைய சகல அதிகாரங்களையும் கொடுத்துவிட்டுப் போனார் (மத் 28:18-20) இயேசுவின் சீடர்களாகிய நாம், இந்த அதிகாரங்களெல்லாம் நம்மிடம் இருக்கிறது என்று விசுவாசித்தால் மாத்திரமே பிசாசின் கிரியைகளை ஜெயிக்கமுடியும். இயேசுவின் நாமம் தரித்த பிள்ளையாய், என்றைக்கு மாறினோமோ, நமக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவர் உலகத்திலிருக்கிறவனிலும் பெரியவர் என்று என்றைக்கு நம்பினோமோ அன்றே இயேசுவின் அதிகாரங்கள் நமக்கு வந்துவிட்டன.

இரட்சிக்கப்பட்டு கொஞ்ச நாட்கள் தான் ஆகலாம்; பரவாயில்லை. இயேசுவின் நாமத்தின் மூலமாய் அதிகாரம் இருக்கிறது என்று நீ உணரும் போதே பிசாசு ஓடிப்போவான். உதாரணமாக Trafficலே நிற்கும் போலீஸ்காரர், ஏழையாய் இருக்கலாம்; பலவீனமாய் இருக்கலாம்; ஜாதியிலே தாழ்ந்தவராய் இருக்கலாம். ஆனால் தன்னுடைய போலீஸ் உடையினாலும், தனக்குள்ள அதிகாரத்தினாலும், ரோட்டிலே வரும் வாகனங்களை Stop என்ற அதிகாரத்தை காட்டியே நிறுத்த முடியும். அதற்காய் ரோட்டிலே போய் கற்களையோ மரங்களையோ தடையாக வைத்து நிறுத்த வேண்டியதில்லை. அதிகாரத்தினாலே அனைத்தும் நிற்கும். அப்படியே நாமும் சர்வாயுதங்களை அணிந்து கொண்டு, இயேசுவின் நாமம் என்ற அதிகாரத்தோடு நின்றால், பிசாசு ஓடுவான். ஆனாலும் ஒன்று... ஒரு போலீஸ்காரர் அதிகாரத்தோடு யூனிபார்மில் நின்று ஒரு திருடனைக் கூப்பிடும்போது, அவர் சொங்கியாய், வல்லமையில்லாதவராய் காட்சியளித்தால், அந்தத்திருடன் அவரைத் தள்ளிவிட்டு ஓடிப் போய் விடுவான். அப்படித்தான் நமக்கும் தேவன் தந்த அதிகாரம் இருந்தும், தேவன் தரும் ஆவியின் வல்லமை இல்லாவிட்டால், ஒருசில பிசாசின் கிரியைகளை மேற்கொள்ள முடியாது. எனவே தான் **"இந்த வித ஜாதி பிசாசுகள் உபவாசத்தினாலும் ஜெபத்தினாலுமே போகும்"** (மத் 17:21) என்று இயேசு சொன்னார். அப்படியானால் உபவாசத்தினாலும் ஜெபத்தினாலும் நாம் ஆவியின் வல்லமையை பெற்றுக் கொள்ள முடியும். இப்படிப் பெறுகின்ற வல்லமையும் ஏற்கெனவே கொண்டுள்ள அதிகாரமும் இணைந்து செயல்படும் போது எல்லா பிசாசின் கிரியைகளும் தூள் தூளாகிவிடும். அல்லேலூயா!

❖ ❖ ❖

# எது புதிய ஏற்பாட்டுப் பிரமாணம்?

**"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுமனதோடும் அன்பு கூறுவாயாக; உன்னிடத்தில் அன்பு கூறுவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக"** என்று இயேசு சொன்னார் (மத் 22:37-39; மாற் 12:28-34; லூக் 10:25-28). இந்த இரண்டு அன்புப் பிரமாணங்கள் தான் புதிய ஏற்பாட்டு மக்களுக்கு தேவன் இயேசு கொடுத்த பிரமாணங்கள் என்று அநேகமாக எல்லாப்

பிரசங்கியாரும் போதித்து வருகின்றனர். இது தவறு. மத் 22:36; லூக். 10:26 போன்ற வசனங்களை மறுபடியும் படியுங்கள். இந்த இரண்டு பிரமாணங்களும், பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தில் உள்ளவை; இவைகள் புதிய ஏற்பாட்டுப் பிரமாணங்கள் அல்ல. உபா 6:5; லேவி 19:18 போன்ற வசனங்களை படித்துப் புரிந்து கொள்க. அப்படியானால் புதிய ஏற்பாட்டு பிரமாணம்தான் என்ன? உன்னைப் போல் பிறரையும் நேசி என்பது பழைய ஏற்பாடு. ஆனால் **"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கின்ற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்"** (யோ 13:34) என்றார் இயேசு. நாம் பாவிகளாய், ஒன்றுமில்லாதவர்களாய், தேவனுக்கு எதிரியான பிசாசின் கூட்டத்தில் இருக்கும்போதே நம்மேல் அன்பு வைத்து நமக்காய் இயேசு பலியானாரே (ரோ 5:8) அதேபோன்ற அன்பை நாம் காட்ட வேண்டும் என்பது தான் புதிய கட்டளை. நம்மைப் போல், நாம் நன்றாய் இருப்பதுபோல, பிறனிடம் அன்புகாட்டுவதல்ல. இந்த அன்பு நம்மைப்போல் பிறனையும் நேசிக்கின்ற அன்பு அல்ல; இது தேவ அன்பு. இந்த அன்புக்கட்டளை நம்மில் இருந்தால் நாம் கிறிஸ்துவின் சிந்தை உடையவர்களாயிருப்போம்.

❖ ❖ ❖

# கனி கொடுப்பது எப்படி?

**இயேசு செடி; நாமெல்லாரும் கொடிகள்** என்று யோ 15:1,2 சொல்கின்றது. செடியிலிருந்து சத்தைப் பெற்றுக் கொண்ட கொடி, கண்டிப்பாய் கனி கொடுக்கவே வேண்டும். கனி கொடுக்காவிடில், அத்திமரத்தை சபித்தது போல தேவன் சபித்துவிடுவார். ஆவியின் கனி என்றும் (கலா 5:22,23) நீதியின் கனி என்றும் (பிலி 1:10) பலவகை கனிகள் மனிதனின் வாழ்க்கையிலே உண்டு. ஆவியின் கனியினால் நமது சாயல் (Character) வெளிப்படும்; நீதியின் கனியினால் நமது நடத்தை வெளிப்படும். தேவன் நியாயத்தீர்ப்பு கொடுப்பது கனிகளை வைத்துத்தானே ஒழிய நாம் செய்யும் அற்புத ஊழியத்தை வைத்தோ, ஆத்தும ஆதாயம் வைத்தோ அல்ல. கனி கொடாத மரமெல்லாம் வெட்டப்படும் என்று இயேசு சொன்னதை மறக்க முடியுமா? கனி கொடுக்கவில்லையென்றால் கிடைக்கும் பரிசு ஆக்கினைத்தீர்ப்பு.

கனியே கொடுக்காத கொடியும் உண்டு; ஏதோ கனி கொடுக்கும் கொடியும் உண்டு; அதிக கனி கொடுக்கும் கொடியும் உண்டு; மிகுந்த கனி கொடுக்கும் கொடியும் உண்டு. ஆனால் தேவனுடைய நாமம், மிகுந்த கனி கொடுக்கும் போது தான் மகிமைப்படுகின்றது (யோ 15:8). இப்படியாய் மிகுந்த கனிகளை கொடுப்பது எப்படி?

நாம் பரிசுத்தமாய் வாழ்ந்தால் கனி கொடுப்பவர்களாவோம். நமக்குப் பரிசுத்தம் தேவ வசனத்தால்தான் வருகிறது. (யோ 17:17; 15:3). வேத வசனத்தை உட்கொண்டு அதை தியானித்து அசை போட, அது மிகுந்த கனி கொடுக்க ஏதுவானவர்களாய் நாம் மாறுவோம். ஆவியினாலும் வசனத்தினாலும் முழுகினவன் (யோ 3:3,5) முழுவதும் சுத்தமாயிருக்கிறான் என்று இயேசு சொல்லவில்லையா? (யோ 13:10). தேவனுடைய வசனத்தால் தேவன் நம்மை வெள்ளியைப் புடமிடுகிறது போலப் புடமாக்கி பரிசுத்தமாக்குகிறார் (சங் 66:10; 105:19; 107:20). தேவன் பொல்லாங்கினால் சோதித்து நம்மைப் புடமிடுவதில்லை; (யாக் 1:13). தன்னுடைய வசனத்தினாலே புடமிட்டு பரிசுத்தப்படுத்துகிறார். அதன் மூலமாய் மிகுந்த கனிகள் கொடுக்கிறோம். பவுல் அப்போஸ்தலன் கொரிந்திய சபையிலுள்ள ஒரு விபச்சாரக்காரனை வசனத்தால் கடிந்து கொண்டு, அவனை பிசாசுக்கு ஒப்புக் கொடுக்கிறேன் என்று நிருபத்தில் எழுதினான் (1கொரி 5:1-5). என்ன ஆச்சரியம் பாருங்கள்! பவுலின் வசனப்புடமிடுதலாலே, அந்த மகன் மனந்திரும்பி சுத்தமானான் என்று 2கொரி 7:8-9ன் மூலம் அறிகின்றோம். விபச்சாரியை கல்லெறிந்து கொல்ல இயேசுவிடம் கொண்டு வந்த போது “உங்களில் பாவம் இல்லாதவன் இவன் மேல் முதலாவது கல்லெறியக்கடவன்” என்ற வசனத்தைக் கேட்டு, மனசாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டு பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள் (யோ 8:7,9). ஆக, தேவனுடைய வார்த்தை எந்த மனிதனையும் மாற்றவல்லது. அதன் மூலமாய் அவனின் சாயல்மாறும்; நடத்தை மாறும்; மிகுந்த கனிகளைக் கொடுப்பான். தேவனுடைய வசனத்தால் கனிகளைத் தரமுடியும். அத்தோடு அந்த வசனத்திலே கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்தால் மிகுந்த கனிகளைக் கொடுக்க முடியும். (யோ 15:4) கிறிஸ்தவ வாழ்க்கையில், Sonship, Fellowship என்ற இரண்டு ஐக்கியங்கள் உண்டு. இயேசுவே ஆண்டவரென்றும் இரட்சகரென்றும் இருதயத்திலே விசுவாசித்து வாயினாலே அறிக்கை பண்ணினால் இரட்சிக்கப்படுகின்றோம். Sonship புத்திரசுவிகாரம் நமக்கு வந்துவிடுகின்றது (யோ 1:13); இப்படியாய் புத்திரசுவிகாரம் உள்ள மனுஷன் இயேசுவின் வார்த்தையில் நிலைத்திருந்து (in Christ) செயல்பட்டால், Fellowship ஐக்கியம் தேவனோடு வளர்கிறது.

அப்படிப்பட்டவன் தேவனைப் போல மாறுகின்றான்; மனம் மறுரூபமாகின்றது (ரோ 12:1,2). அவரைப் போலவே மிகுந்த கனி கொடுப்பான். இப்படிப்பட்டதான ஐக்கியத்தால், நான் பாவியல்ல; நீதிமான் என்ற உணர்வு வருகிறது; அதைப்போலவே, செயல்படவும் முடிகின்றது; கவலைகளையெல்லாம் இயேசுவின் மேல் வைத்துவிட்டு சந்தோஷ வாழ்க்கை வாழ முடிகின்றது; அவரிடமிருந்தே ஞானமும், பலமும், ஜீவனும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இதனால் மிகுந்த கனி கொடுக்க முடிகின்றது.

அடுத்ததாய், மிகுந்த கனி கொடுக்க தேவையான ஒன்று கீழ்ப்படிதல். தேவன் இயேசு எப்படி பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு, மரணபரியந்தம் தன்னைத் தாழ்த்தி தேவ அன்பை வெளிக்காட்டினாரோ அப்படியே நாமும் நம்மிலே வெளிப்படவேண்டும் (யோ 15:10,12) அதனால்தான் இயேசு புதிய பிரமாணமாய், கிறிஸ்துவின் பிரமாணமாய் தன்னைப் போல் அன்பு காட்டுங்கள் என்று சொல்லிப் போயிருக்கிறார்.

எனவே, நாம் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படாமல், தேவனுடைய வசனத்தால் பரிசுத்தமாகி, கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்து, அவருக்கு கீழ்ப்படிந்து வாழ்வோம்; அதிக கனிகளைக் கொடுப்போம்; இம்மையிலும் மறுமையிலும் அதிக ஆசீர்வாதங்களைப் பெறுவோம்; ஆவியானவர்தாமே நம்மை வழி நடத்துவாராக! ஆமென்!

❖ ❖ ❖

# அற்புதமும் அக்கிரமச் செய்கையும்

மத் 7:22,23 வசனங்களை வாசியுங்கள். எப்போதுமே கிறிஸ்தவ வட்டாரத்திலே அற்புதம் அடையாளம் செய்பவர்கள் இயேசுவின் நாமத்திலே தான் செய்கின்றனர். அப்படியிருந்தும் நியாயத்தீர்ப்பு நாளிலே இயேசு, "அறியேன்" என்று சொல்வாராமே. ஏன்? அதுவும் "அக்கிரமச் செய்கைக்காரர்" என்று சொல்வாராமே. ஏன்? அவர்கள் என்ன கொலையும், திருடும், விபச்சாரமும் செய்கின்ற பாவிகளா? அற்புதம் செய்கிறவர்கள் என்ன அக்கிரமம் செய்கின்றனர்? அக்கிரமம் என்றால் என்ன அர்த்தம்? கிரமத்துக்கு எதிரிடை அக்கிரமம். ஆங்கிலத்திலே 'law-lessness workers' என்று போடப்பட்டுள்ளது. கன்மலையாகிய இயேசு கிறிஸ்துவின் வசனம் இல்லாதவர்கள்; வசனத்தின் மேல் கட்டப்படாதவர்கள் (மத் 7:25). அதாவது வசன ஆதாரமில்லாமல், துர்உபதேசத்தால், கள்ளப்போதகத்தால், கள்ள தீர்க்கதரிசனத்தால்

கட்டுவது அக்கிரமம். இப்படி ஆட்கள் அநேகர் என்று மத் 7:12,13 கூறுகின்றது.

இப்படி ஆட்களை எதினாலே அறிவது. அவர்களின் கனிகளாலே அறியலாம் என்று வேதம் சொல்கின்றது. என்ன கனிகளால் அறிவது? ஒன்று ஆவியின் கனி (கலா 5:22). இது அவர்களின் Characterஐ-சாயலை அறிவிக்கின்றது. இன்னொன்று நீதியின் கனி (பிலி 1:10). இது அவர்களின் நடத்தையை - Conductஐ அறிவிக்கின்றது. இந்த கனிகளை, அற்புதம் செய்வோர் மட்டுமல்ல. நாமும் எப்படிப் பெறுவது? வசனத்தினால் கனிகளைப் பெறலாம் (யோ 17:17). கிறிஸ்துவின் வார்த்தையில் நிலைத்திருந்தால் பெறலாம் (யோ 15:4); கிறிஸ்துவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்திருந்தால் பெறலாம். (மத் 7:10,12; யோ 13:34). ஆக, மொத்தத்தில் கனிகள், வசனத்தில் நடந்தாலே உண்டு. வசனப்படி வாழ்க்கை இல்லாவிட்டால் கனி இல்லை; இப்படி கனி இல்லாதவர்கள் துர்உபதேசக்காரர்; அக்கிரம செய்கைக்காரர்; law lessness workers. மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பது வசனம்; ஆனால் அக்கிரமச் செய்கைக்காரரோ தன் குழந்தைக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் குழந்தை ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். **“இரட்சிக்கப்படுகிறவர்களை அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்”** என்ற வசனத்தின்படி இரட்சிப்பை; முழுக்கு ஞானஸ்நானத்தை நம்பி அதை கிரியைகளில் காட்டியவர்கள் கூடும், சேரும் இடம் தான் சபை (அப் 2:47). இந்த சபை கூடிவருதலை விட்டுவிடாதிருக்க வேண்டும். ஆனால் அக்கிரமச் செய்கைக்காரரோ ஆற்றிலே ஒருகால் சேற்றிலே ஒரு கால் என்பது போல, இரட்சிப்பையே, முழுக்கு ஞானஸ்நானத்தையே நம்பாத சபையில் அங்கத்தினராக இருக்கிறார்கள்; ஆவிக்குரிய சபைகளோடும் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அந்நிய நுகத்தோடு பிணையாதிருப்பாயாக என்ற வசனத்தை அறிந்தும், (அப் 2:40) பெயர்க்கிறிஸ்தவ சபைகளில் அங்கம் வகிக்கும் அக்கிரமச் செய்கைக்காரரோடு, ஆவிக்குரியவர்களும் இணைந்து ஊழியம் செய்வதால் தாங்களும் அக்கிரமச் செய்கைக்காரராகிறார்கள். (See யாத் 4:24,26) விக்ரகத்தை உண்டாக்குவதோ, வெளிக்காட்டுவதோ பாவம் என்று வசனம் சொல்கிறது. ஆனால் அக்கிரமச் செய்கைக்காரர்களோ இயேசுவின் படங்களைத்தான் தொங்க விடுகின்றனர். சிலுவையைத்தான் நடுகின்றனர். கல்லறையிலே கூட சிலுவையை வைத்து மாலை இடுகின்றனர். அவனவனின் கிரியைகளுக்கேற்ப தான் நியாயத்தீர்ப்பு என்று வேதம் சொல்கின்றது. ஆனால் அக்கிரமச் செய்கைக்காரரோ வருஷத்திற்கு ஒருமுறை, தாங்கள் காக்கப்பட ஜெபிக்கின்றனர். பொருளாசை விக்கிரக ஆராதனை என்ற வசனத்திற்கு விரோதமாய்

செயல்படுகின்றனர். வெள்ளை காகத்தை தேடும் கருப்பு எலியாக்களாக மாறுகின்றனர். **“தேவன் பொல்லாங்கினால் சோதிக்கிறவரல்ல; வியாதி பொல்லாங்கு; வறுமை பொல்லாங்கு; மரணம் பொல்லாங்கு. இவையெல்லாம் தேவன் தருவதில்லை** என்று வசனம் சொல்லியும், தேவன் இவைகளினால் சிட்சிக்கிறார் என்று சொல்லித் திரிகிறார்கள். இப்படி எத்தனையோ காரியங்களை சொல்லிக்கொண்டே போகலாம். மொத்தத்தில் வசனத்திற்கு (Law) விரோதமெல்லாம் அக்கிரமச் செய்கை (Law lessness).

இப்படிப்பட்ட உபதேசக்காரர் அற்புதம் செய்ய முடியுமா? இது கேள்வி. முடியும். எப்படியெனில் தேவனுடைய கிருபை வரங்கள் மாறாதவை. (ரோ 11:29, 12:6,8). முற்காலத்திலேயே சிம்சோன் பாவக் காரியங்களில் ஈடுபட்டிருந்தும், இறுதியிலே வரத்தைப் பெற்று பெருத்த கிரியை செய்து மரித்தானே! புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர், அக்கிரமச் செய்கைகளினால் விலகவே மாட்டார். எனவேதான் வேதம் சொல்லுகிறது “அவரை துக்கப்படுத்தாதிருங்கள்” என்று; ஆக, பரிசுத்த ஆவியானவர் நம்மோடே இருப்பார்; எடுபடமாட்டார். எனவே வரங்களும் கிரியை செய்ய முடியும். வரங்கள் கிரியை செய்வதாலே நியாயத்தீர்ப்பு நம்பக்கம் அல்ல. **Judgement is not by your ministry but by your fruits. Ministry is for crowns.** கனி கொடாத மரமெல்லாம் அக்கினிக்குள் போடப்படும் (மத் 7:19) பரலோக பிதாவின் சித்தப்படி செய்கிறவன்தான் பரலோகம் போவான் (மத் 7:21). நாமெல்லாரும் பரிசுத்தமாக வேண்டுமென்பதே தேவ சித்தம் (1தெச 4:3). பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிக்க முடியாது. **இந்தப் பரிசுத்தம் வசனத்தாலேதான் கிடைக்கிறது** (யாக் 1:22,26; ரோ 2:13). தன்னுடைய வசனத்தாலே தேவன் நம்மை பரிசுத்தமாக்குகிறார். நம்முடைய சுயபெலத்தால் பரிசுத்தமாக முடியாது. வசனத்துக்கு விரோதமானால் பரிசுத்தம் வராது; நியாயத்தீர்ப்பில் தேவன் “அறியேன்” என்பார்.

அக்கிரம செய்கைக்காரர் இயேசுவின் நாமத்தை உபயோகித்தே அற்புதம் செய்கிறார்கள்; எப்படி உபயோகிக்கிறார்கள்? அப் 19:13-26ஐ வாசியுங்கள். பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பேரில் ஆணையிடுகிறோம் என்று சொன்னதினால் பிசாசுகள் ஓடவில்லை. நீங்கள் யார் என்று கேட்டு பிசாசு அவர்களை மேற்கொண்டான். ஆனால் துர்உபதேச- அக்கிரமச் செய்கைக்காரரோ “அவர் பிரசங்கிக்கிற இயேசு; இவர் பிரசங்கிக்கிற இயேசு” என்றெல்லாம் சொல்வதில்லை. தாம் நம்பும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் உறுதியாய்ச் சொல்வதால், இயேசுவின் நாமத்திற்கு பிசாசுகள் ஓடுகின்றன. ஏனென்றால் அந்த நாமம் மேலான நாமம். அனைத்தும் நடுங்கும் நாமம்.

அற்புதங்கள் பிசாசினாலும் நடக்கும். வேளாங்கண்ணியில் அற்புதம் நடக்கவில்லையா? திருப்பதியில் அற்புதம் நடக்கவில்லையா? ஏர்வாடி; புட்டபர்த்தி, விராலிமலை போன்ற இடங்களில் நடக்கவில்லையா? அவர்களின் பின்னே போகும் கிறிஸ்தவர்கள் ஏராளம். மேகம் போன்ற திரளான சாட்சிகள் இருந்தாலும் அவர்களைப் பார்க்காமல் இயேசுவை நோக்கியே ஓடவேண்டுமென்பது தேவ சட்டம், (எபி 12:1) எலியாவின் நாட்களில் பாகால் மூலமாய் அக்கினியை இறக்கமுடியவில்லை. தேவனே இறக்கினார். ஆனால் இந்த கடைசி நாட்களிலோ பிசாசு இறக்க முடியும் என்று வேதம் சொல்கிறது. (வெளி 13:13; மத் 24:24; லேவி 16:14) அவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல அலைந்து திரிகிறான். கள்ளத்தீர்க்கதரிசிகளை உண்டுபண்ணி இப்படியாய் வஞ்சிக்கிறான். அற்புதம் செய்யும் கள்ளத் தீர்க்கதரிசிகள் சொல்வதோ இயேசுவின் நாமம்; ஆனால் அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் (மத் 7:15), இயேசுவின் பெயரையே உளமாற உச்சரிக்காதவர்கள், அற்புதம் செய்யும் போது அவர் நாமம் உச்சரிப்போர் அற்புதம் செய்ய முடியும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று தேவத்துவம் விளங்குவது போல், பிசாசும், வலு சர்ப்பம், அந்தி கிறிஸ்து; கள்ளத்தீர்க்கதரிசி என்று மூன்றாய் செயல்படுகின்றான். இவைகளைக் கண்டு நாம் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். அற்புதங்களிலெல்லாம் பெரிய அற்புதம் என்ன தெரியுமா? உளையான சேற்றிலே உள்ள மகனை தூக்கி எடுத்து இரட்சிப்புப் பாதையில் நடத்துவதுதான். இதைச் செய்கிற, செய்ய முடிந்த ஒரே ஜீவிக்கிற தேவன் இயேசு கிறிஸ்து மட்டுமே. ஏனென்றால் அவர் ஒருவர்தானே பாவத்திற்கு மரித்து, நீதிக்கு பிழைத்து எழுந்த அற்புத உயிர்த்த ஆண்டவர்.

பாஸ்டர். பால்யாங்கி சோ சொல்கிறார் **''அற்புதம், வரங்களெல்லாம், ஆவி உலகின் கடைசி எல்லையிலிருந்து ஆரம்பமாகி தான் கிரியை செய்கின்றன. இது பரிசுத்த ஆவி உலகிலும் நடக்கிறது; பிசாசின் ஆவி உலகிலும் நடக்கிறது''** என்று. ஆம் தேவனுடைய பிள்ளையே! ஆவிகளைப் பகுத்தறியும் வரம் முதலில்உனக்குத் தேவை! வெறுமனே வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பி விடாதே! முடிவு அழிவுக்குழியாகிவிடும். பரிசுத்த ஆவியின் வரம் பெற்ற எந்த ஊழியரும், ஜெபம் பண்ணி அற்புதம் செய்யவேமாட்டார். இது சரித்திரம் சொல்லும் காரியம். இயேசு கிறிஸ்துவும் ஒரு இடத்தில் கூட ஜெபம் பண்ணி அற்புதம் செய்யவில்லை. ஜெபம் பண்ணி ஏதாவது அற்புதம் நடந்தால் அது அற்புதவரத்தால் அல்ல; ஜெபத்தைக் கேட்டு தேவன் அருளியது சுகமாக்கும் ஈவு. இப்படியாய் செய்து கொண்டிருக்கும் ஊழியர்கள்தான்

"அற்புத வரம் பெற்றவர்" என்று சொல்லிக் கொள்கின்றனர். இது அற்புதவரமல்ல. பேதுருவின் நிழல்பட்டு சுகமானதே இதுதான் அற்புதம். பவுலின் உருமால் தொட்டு சுகமானதே இதுதான் அற்புதம். இயேசுவின் வார்த்தையிலும் சுகமானதே அதுதான் அற்புதம். இப்படிப்பட்ட அற்புத வரமுள்ள ஊழியர்கள் தமிழ்நாட்டில் எழும்பவில்லையோ என்று நான் கலங்குகின்றேன். ஒருவேளை பத்திரிக்கைகளிலும், மேடைகளிலும் பிரபலமாகாது ஆயிரக்கணக்கானோர் இருக்கிறார்களோ நாமறியோம்! தேவனே அறிவார்!

<u>பிசாசுகளை விரட்டுவது வரமல்ல:</u> இதை வரமென்று நம்பி ஏமாறும் கிறிஸ்தவர்கள் ஏராளம். பிசாசுகளை விரட்டுபவர்கள் விசுவாசிகள் எல்லோரும். (மாற் 16:16) யார் அதைவரமென்று நினைத்து விரட்ட துணியாமல் இருக்கிறார்களோ, அவர்களின் மனக்கண் பிரகாசமாக வேண்டும். இறுதியாய் தேவனுடைய பிள்ளைகளே! கனிகளை அறிந்து வரங்களை நம்புங்கள். இரட்சிக்கப்பட்டவர், வரங்கள் கிரியை செய்கிறது என்று சொல்கின்றவர், இரட்சிக்கப்படாத சபையில் அங்கம் வகிப்பது சரியல்லவே! இது வேத விரோதமல்லவா! Lawlessness அல்லவா! தேவனிடம் தியானம் பண்ணுங்கள். தேவனே வெளிப்படுத்துவார்! அல்லேலூயா!

❖ ❖ ❖

# எல்லாக் குழந்தையும் கர்த்தரின் சுதந்திரமா?

**"குழந்தைப் பிறப்பு எல்லாமே கர்த்தரின் சிருஷ்டிப்பு. கர்த்தரின் பலன்; கர்த்தரின் சுதந்திரம்"** என்று பலர் நம்புகின்றனர். பிரசங்கிக்கின்றனர். நிச்சயமாய் இந்தக் கருத்தும் சரியல்ல. தேவன் தன்னுடைய சிருஷ்டிப்பை முதல் ஆறு நாட்களிலே முடித்துவிட்டார். சிருஷ்டிப்பு என்றாலே ஒன்றும் இல்லாமையிலிருந்து உருவாக்குவது. இந்தப் பணி கடந்த 6000 வருடங்களாய் இந்த பூமியில் தேவன் செய்யவில்லை. அப்படியானால் உலகிலுள்ள மக்களை சிருஷ்டித்தது யார்? இது கேள்வி. ஆதாமையும் ஏவாளையும் தேவன் சிருஷ்டித்தார். அவர்களுக்குப் பின்னால் மனுஷர்களை உருவாக்க தேவன் ஆணுக்கும் பெண்ணுக்குமே அதிகாரத்தை கொடுத்து கட்டளை இட்டார்; **"நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்"** (ஆதி 1:28) பலுகவும், பெருகவும், பூமியை நிரப்பவும் முழு அதிகாரமும்

மனிதனுக்கு வந்தவிட்டது. இனி, குழந்தைகளை உண்டாக்குவது மனிதன் கையில் தான் உள்ளது. இந்த பெரிதான காரியம் சிலருக்கு இதுவரை தெரியவில்லை. ஆணும் பெண்ணும் இல்லாமல் குழந்தைகளை தேவனால் சிருஷ்டிக்க முடிந்தாலும், அவர் அந்தத் தொழிலை நம்கையில் விட்டுவிட்டார். நமக்கு எவ்வளவு பெரிய பொறுப்பையும் ஸ்தானத்தையும் நம் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார் பாருங்கள்!

அப்படியென்றால் தேவன் இல்லாமலே குழந்தைகள் பிறக்கின்றனவா? இது கேள்வி. "காத்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா" (சங் 127:7). இதிலே சொல்லப்பட்ட வீடு, நமது இல்லம் அல்ல. குழந்தைகளை உருவாக்கி வாழுவதைக் குறிக்கிறது. இந்த வசனத்தின் மூலம், கா்த்தரும் வீட்டைக் கட்டுகிறார்; அவா் இல்லாமல் தானாகவும் மனுஷன் வீட்டைக் கட்டுகிறான். இப்படிக் கட்டுவது விருதா. அது பக்தியற்ற சந்ததியாயிருக்கும். சாராள் சொல்வதைக் கேளுங்கள்! "என் அடிமைப் பெண்ணோடே சேரும். ஒருவேளை அவளால் என் வீடு கட்டப்படும்" (ஆதி 16:2). தேவன் சாராள் மூலமாகவே வீடு கட்டப்படும் என்று ஏற்கெனவே சொல்லியிருந்தும், தானே தனக்கென்று வீடு கட்ட ஆரம்பித்தாள்; இஸ்மவேலைக் கண்டாள்; ஆனால் இப்பிராயசம் விருதாவாயிற்று. ஆக, தேவன் இல்லாமல் நாமே குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிகிறோம். ஆணும் பெண்ணும் சேரும் போது, தேவன் குழந்தைப் பாக்கியத்திற்கு சித்தம் கொண்டாரானால், அந்தக் குழந்தை பக்தியுள்ள சந்ததியாம். சாமுவேலைப்போல; தானியேலைப்போல, எஸ்தரைப் போல விளங்கும். தேவனின் ஒத்துழைப்பு இல்லாத போது, பிசாசானவன் தன்னுடைய சித்தத்தை ஆணும் பெண்ணும் சேரும்போது இணைக்கிறான். முடிவோ... பக்தியற்ற சந்ததி வருகிறது. அதனால் தானே காயீன் பொல்லாங்கனால் உண்டானவன் என்று சொல்லப்படுகிறது (1யோ 3:12); யூதாஸ் கேட்டின் மகன் என்று அழைக்கப்படுகின்றான்.

எனவே குழந்தைப் பாக்கியத்திற்காய் முயற்சி செய்பவர்கள், கர்த்தரின் சித்தத்திற்கு விட்டுக்கொடுத்து அவர் உதவியுடன் வீட்டைக்கட்ட ஆரம்பியுங்கள். அப்போது தான் பக்தியுள்ள சந்ததி உனக்கு வரும். அப்படி வரும் குழந்தைதான் கர்த்தரால் வரும் பலன்டூ சுதந்திரம்டூ கனி. மற்றவையெல்லாம் கர்த்தரால் வரும் சுதந்திரம் அல்ல. அவைகள் ஆணும் பெண்ணும் அறிந்தோ அறியாமலோ பிசாசினால் கொடுக்கப்படும் சுதந்திரம். எனவே இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளாகிய நாம், நமக்கு கொடுக்கப்பட்ட

தேவனின் அதிகாரத்தை கர்த்தரின் சித்தத்தோடு பயன்படுத்தி கனிகளைப் பெறுவோம்; பக்தியுள்ள சந்ததியை உருவாக்குவோம்.

பலர் வீட்டைக் கட்ட தேவன் கொடுத்த அதிகாரத்தை பயன்படுத்தியும் வீட்டைக்கட்ட முடியவில்லையே! மலடியாய் இருக்கிறார்களே. ஏன்? ஒன்று அது பிசாசின் செய்கையாய் இருக்கலாம். வீட்டைக்கட்ட உனக்கு அதிகாரம் இருக்கிறது; ஆனால் அதற்குரிய வல்லமை இல்லை. அதாவது ஆணிடம் உயிரணுவும், அதோடு கூட கருத்தரிக்க இணைந்து கருத்தரிக்க பெண்ணிடம் ஓவமும் இல்லை. அப்படியே இருந்தாலும் இரண்டும் இணைந்து கருத்தரிக்க போதுமானவையாய் இல்லை. இந்த வல்லமையை, ஜீவனைத் தரும் வல்லமையை தேவன் ஒருவர்தான் கொடுக்க முடியும். எனவே ஆபிரகாமைப் போல தேவனிடத்தில் கேட்டு வல்லமையோடு அதிகாரத்தை பயன்படுத்துங்கள். வெற்றி நிச்சயம். பிசாசின் செய்கையாய் இருந்தால், இந்த ஜாதிப்பிசாசு உபவாசத்தினாலும் ஜெபத்தினாலும் தான் ஓடும் (மத் 17:21) என்பதை நம்பிச் செயல்படு. வெற்றி உனதே! எல்லாவற்றிற்கும் மேலாக உன்னைப் பற்றிய தேவனுடைய சித்தம் இன்னதென்று முதலாவது அறிந்து செயல்படுங்கள். (1யோ 5:14).

❖ ❖ ❖

# கிறிஸ்துவின் சபையில் தசமபாகம்

முதலில் கிறிஸ்துவின் சபை என்றால் என்ன என்று பார்ப்போம். கிறிஸ்துவின் சபையை - Church of Christ - கிறிஸ்துவே கட்டினார் என்று மத் 16:18 சொல்கிறது. இயேசுவுக்கு முன்னே சபை (Church) இல்லை. அப்பொழுது இருந்ததற்கெல்லாம் பெயர் Assembly - Congregation - கூட்டம். என் சபையைக் கட்டுவேன் என்று இயேசு சொல்லிவிட்டுப் போனார். இப்படிப்பட்ட மணவாட்டி சபை வருமென்று பவுலுக்குத்தான் வெளிப்பாடு கிடைத்தது. 4000 ஆண்டுகளாய் மறைக்கப்பட்டிருந்த இரகசியம் பவுல் மூலமாய் வெளிப்பட்டது (எபே 2:19 - 3:6). பழைய காலங்களில் நடந்தவை எல்லாமே இக்காலத்திற்கு நிழலாட்டமாய் இருக்கின்றன. அப்படியேதான் இந்த சபைக்கும் நிழலாட்டம் இருந்தது. ஆதாமாகிய மணவாளனை அயர்ந்த நித்திரை பண்ண வைத்து (அதாவது மரணத்திற்குள்ளாவது போல) ஏவாளாகிய மணவாட்டி உண்டாக்கப்பட்டாள். அதுபோல் மணவாளன் இயேசுவின் மரணத்திற்குப் பின்னே மணவாட்டி சபை உருவானது. இது அப். 2

முதல் ஆரம்பமானது; 1கொரி 15:52 வரை இவ்வுலகில் இது இருக்கும். இந்த சபை இயேசுவின் மேல்தான் கட்டப்பட்டது. (எபே 2:20; சங் 118:22; 1பேது 2:4-7). பேதுருவின் மேல் என்று பலர் கருதி, பேதுருவைப் போல இருக்கும் போப், பிஷப் போன்றோர் மேல் இயங்கும் சபைதான் கிறிஸ்துவின் சபை எனச் சொல்கின்றனர். அது தவறு. மத் 16:18ல் பேதுருவை நீ ஒரு Petros-கல் என்கிறார்; சபை கட்டப்படுவது PETRA பெரிய பாறை மேலே என்கிறார்; அந்த அஸ்திபாரப்பாறை இயேசுவே என்று நமக்கு 1பேது 2:4; 1கொரி 3:11 போன்ற வசனங்கள் சொல்கின்றன.

அந்த இயேசுவின்மேல், இயேசுவால் கட்டப்பட்ட சபையில் அங்கத்தினர் யார்? இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட நீதிமான்கள்தான். (1கொரி 12:12-13); தலைவர் யார்? இயேசுவே தலைவர்-ஆண்டவர் (எபே 1:22-23). ஆலயம் எது? கற்களால் கட்டப்பட்டு சபை கூடுகிற இடமல்ல ஆலயம். எல்லா தேவ பிள்ளைகளும் இணைந்தாலே அந்த இணைப்பு-ஒருங்கமைப்பு-தான் ஆலயம். (எபே 2:21,22; 1கொரி3:16). இந்த ஆலயத்திலே எல்லோரும் இணைந்த சபைதான் கற்புள்ள கன்னிகையாய் கிறிஸ்துவுக்கு நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படியானால் இந்த சபை எந்த சபை? A.C.A.யா? A.G.யா? ஷெகினாவா? வானவில்லா? S.D.A.வா? C.S.I.யா? R.C.யா? நாம் சொல்லுகின்ற சபைகளெல்லாம் ஒருவேளை தேவனின் சித்தத்தால் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், இயேசுவால் ஆரம்பிக்கப்படவில்லை. எது கிறிஸ்துவின் சபை என்று தீர்மானிக்க தேவன் ஒரு இலக்கணம் வைத்திருக்கிறார். எபி 6:1,2ல் சொல்லப்பட்ட அடிப்படைச் சத்தியத்தில் நிற்கிற சபைதான் கிறிஸ்துவின் சபை. மற்றவைகளெல்லாம் பெயர்க் கிறிஸ்தவ Nominal Churches தான்.

சிலர் ரோ 16:16ஐ வைத்துக்கொண்டு "கிறிஸ்துவின் சபை" என்று பெயருள்ள சபைதான் கிறிஸ்துவின் சபை என்கின்றனர். அது தவறு. சபை என்பது பெயரிலோ, பாரம்பரியத்திலோ அல்ல. உலகத்திலுள்ள அத்தனை சபைகளுமே மனிதன் ஸ்தாபித்து பெயரிட்டது தான். ஆனால் அந்த சபைகளிலே கிறிஸ்துவின் சபை என்ற பெயரில்லையே அதனால் அவை இயேசுவின் சபையில்லையா?

1. வெளி 2,3ல் வரும் ஏழு சபைகள். ஊர்களை வைத்தே தேவனுடைய சபைகள் என்று சொல்லப்படுகிறதே.

2. "ஜீவனுள்ள தேவனுடைய சபை" "தேவனுடைய சபை" என்றும் வேதத்தில் எழுதப்பட்டு உள்ளது. (1கொரி 1:1; 2கொரி 6:16) சபைப் பெயர்கள் தேவனுடைய நாமத்திற்கு விரோதமில்லாதிருந்து, ஆவிக்குரிய ரீதியில் எபி 6:1,2ன்

சத்தியத்தை அஸ்திபாரமாய்க் கொண்டிருந்தால் அவைகள் எல்லாமே கிறிஸ்துவின் சபைகள். அவைகளில் ஏதாவதொன்றில் அங்கத்தினராய் இருந்து, சபை கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள்.

<u>இப்படிப்பட்ட சபைகளில் தசமபாகம் பற்றி வேதம் என்ன சொல்கின்றது?</u> **"கொடுங்கள்; கொடுக்கப்படும்"** என்பது இயேசுவின் கட்டளை (லூக் 6:38); கடந்த கால வருமானத்திலிருந்து, கர்த்தருக்குரியதை 10ல் ஒரு பங்கு கொடுப்பது தசமபாகம். காணிக்கை என்பது உன்னுடைய பணத்திலிருந்து, எதிர்காலச் செலவுக்குரிய பணத்திலிருந்து விசுவாசத்தோடு கொடுப்பது. தேவனுக்குரிய தசமபாகத்தை வஞ்சிக்காமல் கொடுக்க வேண்டும். பழைய ஏற்பாட்டில் ஆலயத்திலே கொடுக்க வேண்டும். (மல் 3:10) புதிய ஏற்பாட்டிலோ நாமே ஆலயம்; இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டமே ஆலயம். அங்கே கொடுக்க வேண்டும். "தசமபாகம் நியாயப் பிரமாணத்திற்குரியது; நமக்கல்ல" என்று சொல்வோரும் உண்டு. நம்முடைய விசுவாசத் தகப்பன் நியாயப்பிரமாண காலத்திற்குரியவர் அல்ல. அவர் தசமபாகம் கொடுத்தாரே! (ஆதி 14:18-20) யாக்கோபு கொடுத்தானே (ஆதி 28:20-22) ஆபிரகாமின் ஆசீர்வாதம் நமக்கு தேவை என்றால் இந்த காரியத்தை நாம் செய்ய வேண்டாமா? இயேசு கூட தசமபாகம் கொடுக்க வேண்டும் என்று தான் போதித்தார் (மத் 23:23). இயேசுவிற்குப் பிறகு 36 வருஷத்திலே எழுதப்பட்ட எபிரேயர் புத்தகத்தில் மரிக்கிற மனுஷர்கள் தசமபாகம் வாங்கினார்கள் என்று பவுல் கூறுகின்றான் (எபி 7:8). ஆக, நியபயப்பிரமாணத்துக்கு முன்னும், நியாயப்பிரமாண காலத்தின் போதும், இயேசுவின் காலத்திலும், புதிய ஏற்பாட்டு காலத்திலும் தசமபாகம் கொடுப்பது வழக்கமாயிருப்பதை அறிகிறோம். ஏன் இப்படி இந்த தசமபாகத்திற்கு முக்கியத்துவம்? மல் 3:10ஐ மறுபடியும் வசியுங்கள். தசமபாகத்தை "கொண்டு வாருங்கள்" என்றாலே, அவருடைய, அவருக்குரிய தசமபாகம் நம்மிடம் இருக்கிறதான, "அதை கொண்டு வாருங்கள்" என்று அர்த்தம். தசமபாகமே அவருடையது. நமது கடந்த கால வருமானத்தில் உள்ளது. அதைக் கண்டிப்பாய் அவருக்கு செலுத்தியாக வேண்டும். அதை வஞ்சிக்கக்கூடாது. நம் தேவனாகிய கர்த்தரை நாம் சோதிக்கவே கூடாது என்பது வேத கட்டளை (மத் 4:7) ஆனால் தேவன் சொல்கிறார்:- "என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களை எல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதனால் என்னை சோதித்துப் பாருங்கள்" (மல் 3:10). தேவனே தம்மை

சோதித்துப்பார் என்று சொன்ன ஒரே காரியம் இதுதான். அப்படியானால் இந்த தசமபாகம் என்கின்ற காரியம் தேவனுடைய பார்வையில் எவ்வளவு மகத்துவமானது என்று அறியுங்கள்.

இப்படிப்பட்ட மகத்துவமான காரியத்தை நாம் செய்யும்போது நமக்குவரும் ஆசீர்வாதங்களாவன:-

1. இடங்கொள்ளாமற் போகுமட்டும் பெருத்த, மகிமையான ஆசீர்வாதம் உண்டு. (மல் 3:10).
2. உன்னை பட்சித்துப் போட எத்தணிப்பவர் மீது தேவ கண்டிப்பு வரும் (மல் 3:11).
3. எல்லா ஜாதிகளும் நம்மைப்பார்த்து பாக்கியவான்கள் என்று கூறுவர். (மல் 3:11).
4. நம்தேசம், நம் விருப்பப்படியே தேவ ஆசீர்வாதத்தோட விளங்கும் (நாம் பூமிக்கு உப்பும் உலகிற்கு ஒளியும் அல்லவா!)
5. நமது சொத்திற்கு, செல்வத்திற்கு பாதுகாப்பு உண்டு.

நாமெல்லாரும் தேவராஜ்யமாகிய ஆவிக்குரிய கானானில் வந்துவிட்டோம் (கொலோ 1:11). எனவே நாம் விசுவாசித்து கொடுக்க வேண்டும். (உபா 26:1-5; எபி 4:4) கொடுப்போம்! பெறுவோம்! விதைப்போம்! அறுப்போம்!

❖ ❖ ❖

# நியாயத்தீர்ப்பு சரீரப் பாவத்திற்கா?

நமது சரீரம் பூலோகத்திற்குரியது. இந்த சரீரத்தின் மூலம்தான் நாம் செய்யும் நன்மையோ தீமையோ வெளிவருகிறது. ஒருவன் தன் ஆவியிலோ ஆத்மாவிலோ தீமை செய்தாலும் அதை அவன் சரீரப்பிரகாரமாய் கிரியைகளிலே கொண்டு வரும் போதுதான் பாதிப்பு தெரிகிறது. அதுவரைக்கும் யாருக்கும் பாதிப்பு இல்லை. ஒருவன் ஒரு வீட்டில் திருடலாம்; திருடலாம் என்ற சிந்தனையை ஆத்மாவிலே கொண்டிருந்தாலும், திருடும் போதுதான் பாவம் வெளிப்படுகின்றது. இதைத்தான் வேதம் சொல்லுகிறது; **“இச்சையானது கர்ப்பம் தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பரிபூரணமாகும்போது மரணத்தை பிறப்பிக்கும்”** என்ற யாக் 1:15ஐப் பாருங்கள். இச்சை மனிதனுக்கு ஆரம்பம் ஆவியிலோ ஆத்மாவிலோதான். அது பாவத்தைப் பிறப்பிப்பது சரீரம் மூலமாய்த்தான். அதைத்தான் இயேசு சொன்னார்!

**"ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்திலே அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று"** (மத் 5:28). இது சரீர விபச்சாரம் என்று பலர் எண்ணிக் கொண்டிருந்தனர். அல்ல, அல்ல... இது ஆவியிலோ அல்லது ஆத்மாவிலோ செய்கிற விபச்சாரம். இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் எல்லாருமே நாம் சரீரத்தில் செய்த நன்மைக்காவது தீமைக்காவது நியாயசனத்திற்கு முன்பாக நிற்கவேண்டும் (2கொரி 5:10). என்வே சரீரப்பாவம் தான் மிக மிக முக்கியமானது. அப்படியானால் ஆவியிலும் ஆத்மாவிலும் பாவம் செய்யலாமா? இது கேள்வி. இயேசு வரும்போது நம் ஆவி, ஆத்மா, சரீரம் ஆகிய மூன்றுமே குற்றமில்லாதிருக்க வேண்டும். (1தெச 5:23). இந்த உலக சரீரம், ஒன்று ஆவி சொல்வதையோ ஆத்மா சொல்வதையோ கேட்டே செயல்பட்டு ஆகவேண்டும். எனவே ஆவியும் ஆத்மாவும் தன் இஷ்டப்படி எப்படி வேண்டுமானாலும் செயல்படமுடியும். ஆதாமும் ஏவாளும் ஆவியிலே எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல், அவர்களின் அறிவாகிய ஆத்மாவில் உணர்த்தப்பட்டபடியே செயல்பட்டார்கள். அப்போது தான் பாவ உணர்வு வரும். நீ உன் இருதயமாகிய ஆவியிலே எழுதப்பட்ட (எபி 8:10) வசனத்தின் வித்தாய் இருப்பதால், ஆவி உன் பாவ உணர்வுள்ள ஆத்மாவை மேற்கொள்ளட்டும். பாவ உணர்வு முளையிலேயே அழிந்து போகட்டும். சரீரம் ஆவியினால் நடத்தப்படட்டும். மனிதனுடைய கிரியைகள் எல்லாமே சரீரத்தில்தான். நியாயத்தீர்ப்பு எல்லோருக்குமே அவனவனின் கிரியைகளுக்கு ஏற்றபடிதான் (வெளி.22:12; 1கொரி 5:10). நியாயத்தீர்ப்பிலே ஆக்கினைத்தீர்ப்பும் உண்டு. அது ரோ 8:1ன்படி உள்ள நமக்கு இல்லை. சரீரத்தில் செய்யும் பாவத்தையும் தேவன் மன்னிப்பார். ஆனால் உலகத்தாரோ பெரும்பாலும் அதை மறக்கவோ மன்னிக்கவோ முயலுவதில்லை. உதாரணமாய் தாவீதை எடுத்துக் கொள்ளுங்கள். அவன் பத்சபாளுடன் சரீரப்பிரகாரமாய் பாவம் செய்தான்; குழந்தையும் பிறந்தது. உலகமே இதை அறிந்தது. தாவீதும் தன் பாவத்திற்காய் மன்னிப்புக் கேட்டான். தேவனும் மன்னித்தார். ஆனால் தாவீதின் சரீரப்பிரகாரமான பாவத்தால் வந்த குழந்தையை தேவன் அடித்தார் என்று வேதம் சொல்கின்றது. ஏன் தேவன் கொல்ல வேண்டும்? 2சாமு 7:12,13ன்படி தாவீதின் மகன், தேவனுக்கு என்று ஒரு ஆலயம் கட்டுவான் என்றும், அவனது ராஜ்யத்தை தேவனே ஸ்தாபிப்பார் என்றும் சொல்லப்பட்டது. எருசலேமிலே முதல் ஆலயம் கட்டி, வரப்போகிற மேசியாவுக்கு நிழலாட்டமாய் அனைத்து இஸ்ரவேலரும் பலி செலுத்தி விசுவாச வீரர்களாய் திகழ வேண்டும் என்பது தேவனின் எண்ணம். தவறான, அசிங்கமான, தேவனால் அருவறுக்கப்படுகிற சரீரப்பிரகாரமான பாவத்தின் வழியாய் பிறந்த தாவீதின் பிள்ளை

வளர்ந்து கோவில் கட்டினால், உலகத்தார் ஒருவனும் அவனை மதிக்கமாட்டார்கள்; அதன் மூலமாய் தேவாலயமும் தூஷிக்கப்படும்; தேவ சித்தம் பாதிக்கப்படும். எனவே சரீரப்பிரகாரமான, உலகமறிந்த பாவம், உலகத்தார் எண்ணத்திலிருந்தே மறைந்துபோக, தேவதிட்டம் நிறைவேற அந்த குழந்தையை சாகடித்தார். ஆனாலும் தான் சொன்னபடி அடுத்த மகனான சாலொமோன் மூலம் காரியமாற்றினார். எனவே, உலகப்பார்வையிலே அழிக்க முடியாத பாவமாகிய சரீரப்பிரகாரமான பாவத்தை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். முளையிலே கிள்ளி எறியுங்கள். வசனம் நிறைந்த இருதயமாகிய ஆவியினால் நடத்தப்படுங்கள். ஆவி ஆத்மாவையும், ஆத்மா சரீரத்தையும் நடத்தட்டும் (சங் 103:1-3).

❖ ❖ ❖

# தேவனின் முன்னறிதல், முன்குறித்தல், தெரிந்து கொள்ளுதல்

ரோ 8:29,30ஐ வாசியுங்கள். உலகத்தில் நடக்கும் எல்லாக் காரியங்களையும் தேவன் முன்னறிந்திருக்கிறார். (Foreknowledge of God), நன்மையும் தீமையும் அனைத்துமே அறிந்திருக்கிறார். நீயும் நானும் ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாய் ஆனதே தேவனின் முன்னறிவின்படிதானே! (1பேதுரு 1:2) அப்படியே ஏரோதும், பிலாத்தும், இயேசுவுக்கு விரோதமாய், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடும் கூட மெய்யாகவே கூட்டம் கூடியதும் தேவனின் முன்னறிவின்படியும், முன் குறித்தலும்படிதான் (அப் 4:27,28). தேவனின் முன்குறித்தல் என்பது (Predestination) இரட்சிப்புக்கு மாத்திரம் அல்ல உலகில் நடக்கும் நல்ல, கெட்ட எல்லா செயல்களுக்கும் கூடத்தான். எல்லா மக்களையும், எல்லாக் காரியங்களையும் தேவன் முன்னறிந்து பலவற்றை தமக்கென்று முன்குறித்து, தெரிந்து கொண்டிருக்கிறார் (Elected).

இரட்சிப்பைப் பொறுத்தவரை தேவன் எல்லாரையுமே அழைக்கிறார். தேவ அழைப்பை ஏற்றுக்கொள்வதும் உதாசீனப்படுத்துவதும் அவனவனுக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரம் (யோ 3:16; 1தீமோ 2:4,2; 1பேதுரு 3:9; வெளி 22:17). தேவனால் முன்னறிந்தவர்களும், முன்குறித்தவர்களும் தேவ அழைப்பை ஏற்றுக்

கொள்கிறார்கள் (ரோ 8:29); தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிறார்கள். ஏற்றுக் கொள்ளாதவர்களே நித்திய ஆக்கினைக்கென்று தேவனால் முன்னறிந்து முன் குறிக்கப்பட்டவர்கள். மொத்தத்தில் தேவனின் முன்னறிவும், முன்குறித்தலும் இரு பெரும் காரியங்களை விளக்குகின்றது. **1.தேவனால் நடக்கும் தெரிந்து கொள்ளப் பட்டவர்களின் இரட்சிப்பு, 2.தேவனால் அனுமதிக்கப்படும் காரியங்கள்.** நன்மையானவைகளை தேவன் தருகிறார் என்று அறிந்திருக்கின்றோம் (யாக் 1:17). ஆனால் தீமையான காரியங்கள் எல்லாம் தேவனால் நடப்பதல்ல. தேவனால் உலகத் தோற்றத்திற்கு முன்பே அனுமதிக்கப்படுபவை. இவைகளையும் தேவன் முன்னறிந்து முன் குறித்திருக்கிறார். அவர் முன்னறிந்திருந்தாலும் உலகில் நடக்கும் தீயகாரியங்களுக்கு மனிதன் மேலேயே முழுப் பொறுப்பையும் வைக்கிறார் (லூக் 22:22; யாக் 1:14).

தேவனின் தெரிந்து கொள்ளுதல் என்பது **ஒன்று** Corporate, உதாரணமாக இஸ்ரவேல் தேசம் அல்லது சபையை தெரிந்து கொள்வது (ஏசா 45:4; எபே 1:4). **இன்னொன்று** Individual (1பேது 1:2) தேவனின் அநாதி முன்னறிவின்படியே தெரிந்து கொள்ளுதல் நடைபெறுகின்றது. இது மனிதனின் தகுதியினால் அல்ல; தேவ கிருபையினால் மட்டுமே (ரோ 9:11; 11:5,6). தேவனின் விருப்பப்படியேதான் நடக்கின்றது. தன்னுடைய பெரிதான கிருபையினாலே தனக்கென்று ஒரு கூட்டத்தை தேர்ந்தெடுப்பது என்று கணிக்கலாம் (யோ 15:19) மட்டுமல்லாமல் தன்னுடைய பலதரப்பட்ட பணிகளைச் செய்ய அவரால் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்றும் ஒரு கணிப்பு வருகிறது. (லூக் 6:13; அப் 9:15; 1கொரி 27:28). இந்த 2வது கணிப்பில் வருவோர் எல்லோருமே முதல் கணிப்பில் உள்ளோரோடு இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று நிச்சயமில்லை.

தேவன் தன்னுடைய அநாதி தீர்மானத்தின்படி செய்து கொண்டிருக்கின்றார் என்றால், "போதிக்க போதகர் எதற்கு? சபை எதற்கு? ஜெபம் எதற்கு?" என்றெல்லாம் கேள்விகள் எழலாம். மனிதனுக்கு சுயாதீனம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே அவன் தேவனால் முன்னறிந்தவனானால் எப்படியாவது அவனுக்கு சத்தியத்தை சொல்லி, அவனுக்குள்ளே சுயாதீனப்படியே அவனை இரட்சிப்புக்குள் நடத்த, போதகர், சபை, எல்லாமே தேவைதான். வேதவசனக் கேள்வியினால் மட்டுமே அவனுக்கு விசுவாசம் வந்து, தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மகனாய் மாறிவிடுகின்றான். இப்படிப்பட்டதான சுயாதீனம் கொடுக்காமல், அதிகாரத்தினால் தேவன் தெரிந்து கொண்டு

காரியமாற்றினால், பிசாசு தேவனை குற்றஞ்சுமத்தமாட்டானா? உம் இஷ்டப்படி ஆட்களை இழுக்கிறீர் என்று குறை சொல்லமாட்டானா? எனவே தான் தேவன் ஊழியர்களை வைக்கிறர். இரட்சிப்புக்குள் வராத மக்களை தேவன் முன்குறித்திருந்தும் அவர்களுக்கு ஏன் சுவிசேஷம் சொல்ல வேண்டும்? இது கேள்வி. அவர்களுக்கு சுவிசேஷம் சொல்லா விட்டால் நியாயத்தீர்ப்பு நாளில் இவர்கள் மட்டுமல்ல; பிசாசும் சேர்ந்து எங்களுக்கு சுவிசேஷம் சொல்லவில்லை என்று சொல்லி தப்பிக்க வாய்ப்புண்டல்லவா? தேவன் எல்லவற்றையும் நிதானித்து செய்கிறார்.

“தீமையான காரியங்கள் கூட முன் அறிந்தவை; ஆனால் அவைகள் தேவனால் நடப்பதல்ல” என்று ஏற்கெனவே பார்த்தோம். அப்படியெனில் நன்மையும் தீமையும் தீர்மானத்தின்படியே நடக்குமே அதற்காய் ஏன் நாம் ஜெபிக்க வேண்டும்? இது கேள்வி. ஒருவனுக்கு தீமையை கொடுப்பவன் பிசாசு (யோ 10:10). இந்த தீமையிலிருந்து தேவன் தன் தீர்மானத்தின்படி விடுதலையாக்கினால், பிசாசானவன் தேவனைப்பார்த்து “பட்சபாதமுள்ளவர்” என்று சொல்லமாட்டானா? மற்ற மனிதனும் அப்படியே எண்ணமாட்டானா? எனவேதான் அவன் ஜெபிக்க, ஜெபிக்க, தேவன் தன் தீர்மானத்தின்படியே தீமையை விலக்கச் சித்தம் கொள்ளுகிறார்; நன்மையைச் செய்யவும் சித்தம் கொள்கிறார்.

ஆக, நாம் நிற்பதும் நிர்மூலமாகாதிருப்பதும் அவரின் கிருபை. அவர் சொல்ல ஆகும். கட்டளையிட நிற்கும். நம் காலங்கள் அவரின் கரங்களில் உள்ளன. விசுவாச ஓட்டத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவரும் இயேசு! விசுவாசம் ஸ்திரப்பட ஆவியானவர் நமக்கு வரமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறார். இந்த விசுவாசம் வளர வளர ஆசீர்வாதம் பெருகும். அல்லேலூயா!

❖ ❖ ❖

# பிலேயாமின் வழியும் சத்தியமும்

தேவன் கொடுத்த வரத்தை வியாபாரமாக்கி கூலிக்கு வேலை செய்யும் தீர்க்கதரிசிக்கு உதாரணம் பிலேயாம். இதுதான் பிலேயாமின் வழி (1பேது 2:15) வரங்கள் எல்லாம் தேவனுடைய நாமத்தின் மகிமைக்கே அளிக்கப்படுகிறது. அதிலும் தீர்க்கதரிசன வரம் சபைக்குப் பக்திவிருத்தி உண்டாக்கவே அளிக்கப்படுகிறது. (1கொரி 14:5,22). ஆனால் பிலேயாமோ அதை வியாபாரப் பொருளாக்குகின்றான். பிலேயாமைப் பற்றி மோவாபின் ராஜாவாகிய பாலாக் சொல்வதைக்

கேளுங்கள்:- **“நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன்; நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று அறிவேன்”** (எண் 22:6). ஆக புற ஜாதிகள் மத்தியிலும் தேவனின் கிருபை வரத்தினால் சாட்சியாய் இருந்த பிலேயாம், பணத்திற்காய் பொருளுக்காய் தனது வரத்தை வியாபார பொருளாக்கிவிட்டான். இந்த வழி மரணவழி (நீதி 14:12). இப்படி வழிகளுள்ள ஊழியக்காரர் இக்காலத்திலே அதிகம் உண்டு. இவர்கள் தான் வெள்ளைக் காகத்தை தேடும் கறுப்பு எலியாக்கள் என்று ஏற்கெனவே எழுதினேன். கருத்தரங்கிலும் செய்தி கொடுத்தேன். இவர்களை அடையானம் கண்டு கொள்ளுங்கள்.

பிலேயாமின் சத்தியத்தைப் பாருங்கள். சத்தியம் என்று சொல்லக்கூடாது; கொள்கை என்று சொல்ல வேண்டும். ஏனென்றால் நம் இயேசுவின் வார்த்தை மாத்திரமே இந்த உலகில் சத்தியம். பொருளாசையினால் முயற்சி செய்தும், பிலேயாமால் இஸ்ரவேல் மக்களை சபிக்க முடியவில்லை, அதனாலே பாலாக் ராஜாவுக்கு பிலேயாம் போதிக்கும் தீய கொள்கைகளைப் பாருங்கள் (False doctrine of Balaam):- இஸ்ரவேல் மக்களை கறைப்படுத்த நினைக்கிறான் (எண் 31:15-16; 22:5; 23:8) கானான் தேசம் நோக்கிப் போகும் இஸ்ரவேலரின் யாத்திரைப் பயணம் தடைபடும்படியாய், அஞ்ஞானிகளோடு தொடர்பில்லாமல் தனித்து தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாய் உலகத்தை விட்டுப் பிரிந்திருந்த இஸ்ரவேலரின் தனித்தன்மையை, அவர்கள் விட்டு விடும்படியாய், தேவனால் சபிக்கப்பட்ட மோவாபியர் குலப் பெண்களை திருமணம் முடிக்க இஸ்ரவேலருக்கு சோதனையை உருவாக்குகிறான். பெண்களை வைத்து இஸ்ரவேலரின் தனித்தன்மையை கெடுக்க நினைக்கிறான், இது மாமிச விபச்சாரம். ஆவிக்குரிய விபச்சாரங்களும் நிறைய உள்ளன. பொருளாசை ஆவிக்குரிய விபச்சாரம், விக்கிரக ஆராதனை ஆவிக்குரிய விபச்சாரம், உலக சிநேகம் ஆவிக்குரிய விபச்சாரம் (யாக் 4:4) இப்படிப்பட்ட விபச்சாரங்களை சபையிலே கொள்கையாய் போதித்து மக்களைக் கெடுக்கும் பிலேயாம்கள் இன்று அதிகம் உள்ளனர். இப்படிப்பட்ட கொள்கையுடைய சபையாய்த்தான் பெர்கமு சபை இருந்தது என அறிகிறோம். இந்த சபை பரமகானானுக்குப் போகும் யாத்திரையை விட்டு விட்டு சாத்தானின் சிங்காசனமாகிய உலகத்தில் வாழ்கிறது என அறிகிறோம் (வெளி 2:13). இது தான் பிலேயாமின் கொள்கையுள்ளவர்கள் என்று முந்தி அறிய வேண்டும். (யோ 12:31; 14:30; 16:11) பிலேயாமின் தவறுகளைச் செய்யும் சபையாரே! நீங்கள் இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்து கொள்ளுங்கள் (யூதா 4). எல்லாரும் பாவம் செய்து தேவ

மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறார்கள். (ரோ 3:23,24). 1யோ1:8,9 என்றென்றும் உங்களோடிருக்கட்டும்.

❖ ❖ ❖

# சுவிசேஷங்கள் பலவிதம்

நற்செய்தி (சுவிசேஷம்) என்றாலே இயேசுவின் பிறப்பைப் பற்றிக் கூறுவது என்று பல கிறிஸ்தவர்கள் நினைக்கின்றனர். (லூக் 2:10) அப்படியானால் இயேசுவின் பிறப்பிற்கு முன்பெல்லாம் நற்செய்தி இல்லையா? விசுவாசத்தின் தகப்பனாம் ஆபிரகாமுக்கே சுவிசேஷம் சொல்லப்பட்டதாமே (கலா 3:8) அது என்ன? **"கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பூமியிலே பிறப்பார்; அவர் மூலமாய் உன் சந்ததிகளாகிய விசுவாசமார்க்கத்தார் அனைவரும் (அதாவது கிறிஸ்தவ சந்ததி - கலா. 3:16) ஆசீர்வதிக்கப்படுவார்கள்"** என்று இயேசுவைப் பற்றிய சுவிசேஷம் அவனுக்கு சொல்லப்பட்டது. ஆக, ஆதியாகமம் முதல் சுவிசேஷம் சொல்லப்பட்டிருக்கிறது என்று 1நாளா 16:23; சங் 96:2; ஏசா 41:27; 52:7; 61:1 போன்ற பல வசனங்களால் அறிகின்றோம்; அத்தோடு சொல்லப்பட்ட சுவிசேஷம் எல்லாமே இயேசுவைப் பற்றியே சொல்லப்பட்டது என்றும் அறிகிறோம்.

இந்த நற்செய்திகள் எல்லாமே இரட்சிப்புக்கு ஏற்றதான சுவிசேஷமாகும். முதலில் சுவிசேஷத்தின் உண்மையை உணர்ந்து கொள்வோம். 1கொரி15:3-6; 2தீமோ 2:8-9 போன்ற வசனங்களை வாசியுங்கள் "தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசு நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, பலருக்கு தரிசனமானார்". இதுவே நற்செய்தி. இந்த நற்செய்திக்கு வேதத்தில் பல பெயர்களுடன் சொல்லப்பட்டுள்ளது.

1. <u>தேவனின் சுவிசேஷம் (ரோ 1):-</u> ஏன் இந்தப் பெயர் வந்தது என்றால், இந்த நற்செய்தி பிதாவாகிய தேவனின் அன்பால் யோ 3:16ன்படி உருவானது.

2. <u>கிறிஸ்துவின் சுவிசேஷம் (1கொரி 12:14):-</u> ஏன் என்றால், இந்த நற்செய்தி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பலியால் வந்தது. அவரே, சுவிசேஷத்தை விசுவாசிக்க வேண்டிய கருப்பொருளாய் இருக்கிறார்.

3. <u>தேவ கிருபையின் சுவிசேஷம் (அப் 20:24):-</u> இந்த சுவிசேஷம் சாபத்திற்குட்பட்டவர்களை கிருபையாய் பாதுகாக்கிறது. வேதத்தின் ஆரம்ப நிகழ்ச்சியே சாபம் தான். (ஆதி 3) பழைய ஏற்பாட்டின் முடிவிலும் சாபம் நிலைத்திருக்கிறது. (மல் 4:6) ஆனால் மத்தேயு புத்தகம் இயேசுவை வைத்து ஆரம்பிக்கிறது. அவராலே சாபங்கள் எல்லாம் நீங்கின.

4. <u>மகிமையின் சுவிசேஷம் (2கொரி 4:4; 1தீமோ 1:11):-</u> ஏனெனில் இது மகிமையான தேவனைப் பற்றியது; நிறைய சபை மக்களை மகிமையில் கொண்டு வருகிறது (எபி 2:10)

5. <u>உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷம் (எபே 1:13):-</u> ஏனெனில் விசுவாசிப்பவர்களுக்கு இரட்சிப்புவரை தேவ பெலனாய் இருக்கிறது (ரோ 1:16).

6. <u>சமாதான சுவிசேஷம் (எபே 6:14):-</u> ஏனெனில் இது விசுவாசிக்கும் பாவிக்கும், தேவனுக்கும் கிறிஸ்துவின் மூலமாய் சமாதானம் தரும்.

இந்த நற்செய்திகள்தான் தற்காலத்தில் இரட்சிப்புக்கு ஏற்றபடியாயும், மகிமைப்படும்படியாகவும் (இரட்சிப்பின் சுவிஷேசம் மற்றும் மகிமையின் சுவிசேஷம்) பிரசங்கிக்கப்படுகின்றது. இந்த சுவிசேஷங்கள் இல்லாமல் இன்னும் பல நற்செய்திகளும் வேதத்தில் உண்டு. அவைகளை அறிவோம்.

1. <u>இராஜ்யத்தின் சுவிசேஷம் (மத் 4:23):</u> இந்த சுவிசேஷத்தை இரட்சிப்பின் சுவிசேஷம் என்று எடுத்துக் கொண்டு விளக்கமளிப்போரும் உண்டு. மத் 24:14ல் "ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோமெங்கமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்" என்று இயேசு சொன்னார். இதை வைத்துக் கொண்டு பலர், "எல்லா மக்களுக்கும் இன்னும் சுவிசேஷம் போகவில்லை; இன்னும் குறைந்தது 5 சதவீத மக்களாவது இயேசுவை அறியாமல் இருப்பார்கள். அவர்களுக்கு அறிவித்த பின்தான் இயேசு வருவார்" என்று போதிக்கிறார்கள். ஆனால் அவர்களே, "இயேசு இன்று இராத்திரியிலோ சேவல் கூவும் நேரத்திலோ வருவார்; ஆயத்தமாயிருங்கள்" என்று பிரசங்கிக்கிறார்கள். முன்னுக்குப் பின் முரணாய் இல்லையா? நமது இரட்சிப்பின் சுவிசேஷம் எல்லாருக்கும் பிரசங்கித்த பின்தான் இயேசு வருவாரா? மத் 24ல் சொல்லப்பட்டது வருகை சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல. எருசலேம் தேவாலயம் இடிக்கப்படுவது, மற்றும் உலகத்தின்

முடிவு சம்பந்தப்பட்டவை. ராஜ்யத்தின் சுவிசேஷம் எல்லாருக்கும் பிரசங்கிக்கப்பட்டபின் தான் உலக ராஜ்யங்களின் முடிவு வருமென்று இயேசு சொன்னாரே ஒழிய, தன் வருகை அதாவது இரகசிய வருகை இருக்கும் என்று சொல்லவில்லை. அதுவும் நாம் பிரசங்கிப்பது ராஜ்யத்தின் சுவிசேஷம் அல்ல என்று அறிகிறோம். அது தேவனுடைய ராஜ்யம் வரப் போகிற நற்செய்தியை சொல்வதாகும். முதன்முதலாய் இதை பிரசங்கித்தவன் யோவான்ஸ்நானன் (மத் 3:2) இதை இயேசுவும் பிரசங்கித்தார். (மத் 4:17) தாவீதோடு தேவன் ஓர் உடன்படிக்கை பண்ணியிருக்கிறார் (2சாமு 7:16) தாவீதின் சிங்காசனம் என்றென்றும் நிலைப்பெற்றிருக்குமாம். லூக் 1:32-33; ஏசா 9:7ன்படி இந்த ராஜ்யத்திற்கு முடிவு இராது. இது தான் இயேசு, அர்மகதோன் யுத்தத்திற்குப் பிறகு அமைக்கப்போகும் 1000 வருட அரசாட்சி. இந்த நற்செய்தி மேசியாவுக்காய் காத்திருக்கும் இஸ்ரவேலர்களுக்கு அதிகமதிக மகிழ்ச்சியை தரும். யோவான்ஸ்நானகனின் பிரசங்கத்தால் ஆவிக்குரிய தேவனுடைய இராஜ்யம் இயேசுவால் நிறுவப்பட்டிருக்கிறது. அதிலே நாமெல்லாம் இணைந்திருக்கிறோம். இந்த ராஜ்யத்தின் சுவிசேஷம், அந்தி கிறிஸ்துவின் நாட்களில், இஸ்ரவேலர்கள் "இவனல்ல மேசியா" என்று எண்ணப்போகிற கால கட்டத்தில் வரப்போகிற இரண்டு சாட்சிகளால் அறிவிக்கப்படும். எப்படியெனில் மல் 4:5ன்படி எலியா வந்து பிரசங்கிக்க வேண்டும். லூக் 1:17ன்படி யோவான்ஸ்நானகன் எலியா அல்ல.

2. <u>நித்திய சுவிசேஷம் (வெளி 14:6):-</u> இது இரட்சிப்புக்கல்ல. இது தூதனின் பிரசங்கம். தூதன் பிரசங்கிப்பது வேறு எங்குமே இல்லை. கொர்நெலியுவிடமோ (அப் 10:3-6) மேய்ப்பர்களிடமோ (லூக் 2:10) அதிகாரத்தோடு கீழ்ப்படியுங்கள் என்று சுவிசேஷம் சொல்லப்படவில்லை. இங்கு ஏன் தூதன் சொல்லுகிறான். தெரியுமா? இந்தக் காலம் மகா உபத்திரவக் காலம். அந்தி கிறிஸ்துவின் இறுதி மூன்றரை வருடகாலம். இந்த நேரத்தில் இரட்சிப்புக்குட்பட்ட விசுவாசிகள் பிரசங்கிக்க ஒருவருமில்லை. மக்கள் மாக்களாக்கப்படுகின்ற காலமிது. ஆக்கினை நியாயத்தீர்ப்பு வரப்போகின்ற நேரமிது. அல்லற்பட்டு அவதியுறும் விசுவாசிகளுக்கு ஆறுதலாய் (வெளி 13:12) சமாதானத்திற்காய் சொல்லப்படும் சுவிசேஷம். இது தேவனை சிருஷ்டிகர் என தொழுது கொள்ள அறிவிப்பு; இரட்சகர் என்று அல்ல. இந்த மகா இக்கட்டுக் காலத்திலும் தேவனுக்கு மக்கள் மேலுள்ள

கிருபையைப் பாருங்கள்! நம்முடைய நாள் தான் இரட்சகர் என்று அறிவிக்கும் நாள். இதை உணராத சிலர், இந்த நித்திய சுவிசேஷத்தை, இன்றைக்கு பிரசங்கித்து, "தேவனை சிருஷ்டிகர் என்று தொழுது கொள்ளுங்கள்; சிருஷ்டிப்புக்கு அடையாளம் சனிக்கிழமை ஓய்வு நாள்; அதை ஆசரி" என்கின்றனர். பாவம்! இவர்கள், தூதனாக மாறிவிட்டார்கள். எபி 2:6-7 வசனங்களை விசுவாசித்து, தேவ தூதர்களை விட பெரியவர்கள் நாமென்ற உணர்வு அவர்களுக்கு வரவில்லை. தேவ தூதர்கள் நமக்கு பணி விடை ஆவிகள் என்று இன்னும் அவர்கள் உணரவில்லை (எபி 1:14).

3. <u>**வேறொரு சுவிசேஷம்:-**</u> எல்லா சுவிசேஷங்களுமே கிருபையை மையமாக வைத்தே உள்ளன. இயேசுவைப் பற்றினதாகவே இருக்கிறது. கிருபை மையமில்லாமல், இயேசுவை நோக்காமல் எந்த செய்தியாவது சுவிசேஷம் என்று வந்தால் அது வேறொரு சுவிசேஷம். (கலா 1:6-12); 2கொரி 11:4). அது Perversion of Gospel of Grace. கிருபையால்தான் மனிதனுக்கு இரட்சிப்பு. கிருபையால்தான் மனிதன் இரட்சிப்பில் பூரணம் அடைகிறான். கிரியைகளினால் அல்ல; சட்டதிட்டங்களால் அல்ல. தேவையில்லாத சட்டதிட்டங்களை கைக்கொள்ளும்படியாய் செய்தி கொடுத்து, அந்தக் கிரியை இல்லாவிட்டால் பரலோகம் இல்லை என்று பொய்ச் செய்தியை, நற்செய்தி என்று போதிக்கும் ஆவிக்குரிய சபைகள் கூட தற்காலத்தில் உண்டு. இந்த வேறொரு சுவிசேஷத்திற்கு எச்சரிக்கையாயிருங்கள். வேத வசனத்திற்கு ஒத்தக்கிரியை வெளிப்பட, தேவ கிருபை நம்மைத் தாங்குவதாக!

❖ ❖ ❖

# நான்கு விதமான சுவிசேஷங்கள்

தலைப்பைப் பார்த்த உடனே மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்ற நான்கு சுவிசேஷங்களைப் பற்றி எழுதப்போகிறேன் என்று சிலர் நினைக்கலாம். இந்த நான்கு சுவிசேஷப் புத்தகங்களும் 66 புத்தகங்களடங்கிய வேதத்தில் உள்ளது என்று நாம் அறிந்திருக்கிறோமே! நான் எழுதப் போவது இந்த நான்கு சுவிசேஷப் புத்தகங்களைப் பற்றி அல்ல; வேதத்திலே சொல்லப்படும் நான்கு விதமான சுவிசேஷங்களை நாம் அனைவரும் தெரிந்து கொண்டு

காலத்திற்கு ஏற்ப ஜாக்கிரதையுடன் வாழ விரும்புகிறேன். ஆவியானவர் தாமே வழிநடத்துவாராக!

1. <u>ராஜ்யத்தின் சுவிசேஷம்:</u> இது உலகின் முடிவு காலத்தில் பிரசங்கிக்கப்படும் என்று மத் 24:14 சொல்கின்றது. லூக் 1:32-33ல் உரைக்கப்பட்டபடி இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் ராஜ்யத்தை நிறுவி ஆளப் போகின்றார் என்பதே இந்த நற்செய்தி. இது தான் 1000 வருட அரசாட்சி. இந்த சுவிசேஷம் யோவான் ஸ்நானனால் ஆரம்பிக்கப்பட்டது (மத் 3:2). பின்பு இயேசுவாலும் அவருடைய சீஷராலும் பிரசங்கிக்கப்பட்டது. ஆனால் இயேசு ராஜாவாக அப்போது நிராகரிக்கப்பட்டவுடன் அது முடிவுற்றது. மீண்டுமாக சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு அது பிரசங்கிக்கப்படும். இப்போது இதைப் பிரசங்கிப்பது அறியாமை. தற்போது பிரசங்கிக்க வேறொரு சுவிசேஷம் உள்ளது. எலியா, மோசே போன்ற தூதர்கள் வந்து ஆரம்பித்து வைக்கும் ராஜ்யத்தின் சுவிசேஷம், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே இஸ்ரவேலரை மறுபடியும் கூட்டிச் சேர்க்க உதவும்.

2. <u>தேவ கிருபையின் சுவிசேஷம்</u> (இரட்சிப்பின் சுவிசேஷம்): பவுலைப் போன்று நாம் எல்லாரும் பரப்பும் சுவிசேஷம் இது (அப் 20:24). நிராகரிக்கப்பட்ட ராஜாவான இயேசு கிறிஸ்து நமது இரட்சிப்புக்காக சிலுவையில் மரித்த நற்செய்தி இது (1கொரி 5:1-5; 2தீமோ 2:8,9). இது தேவ அன்பின் அடிப்படையில் (யோ 3:16) பிறந்ததால், இதை தேவனுடைய சுவிசேஷம் என்றும் சொல்லலாம் (ரோ 1:1) பாவிக்கும் தேவனுக்குமிடையே சமாதானம் உண்டாக்கி ஆத்மாவுக்கு சமாதானம் கொடுப்பதினாலே இந்த சுவிசேஷம் சமாதானத்தின் சுவிசேஷம் என்றும் அழைக்கப்படுகின்றது (எபே 6:15). கிறிஸ்துவே கிருபை என்பதால் இது கிறிஸ்துவின் சுவிசேஷம் என்றும் அழைக்கப் படுகின்றது (ரோ 1:16; 2கொரி 1:14). இந்த நற்செய்தியைத்தான் நாம் இப்போது பிரங்கித்து ஆத்ம ஆதாயம் செய்கிறோம். இதற்காகவே நாம் ஆசாரியராக்கப்பட்டுள்ளோம் (1பேது 2:9).

3. <u>மகிமையின் சுவிசேஷம்:</u> இது தேவ கிருபையின் அல்லது இரட்சிப்பின் சுவிசேஷத்தின் அடுத்தபடியாய் இருக்கிறது. இரட்சிப்பின் சுவிசேஷத்தால் இரட்சிக்கபட்ட தேவ பிள்ளைகளுக்கு சொல்ல வேண்டிய தேவ செய்தி இது. இதைச் சொல்லத்தான் சபையிலே சுவிசேஷ ஊழியத்தை தேவன் வைத்துள்ளார். (எபே 4:11-13) இயேசுவின் மகிமையின் பிரசன்னமாகுதலான 2ம் வருகை இதில் அடங்கியுள்ளது. (தீத்

2:13); தேவனைப் பற்றி இது பேசுகிறது (எபி 2:10 See ஓசி 4:6). இந்த நற்செய்தியை கேட்கக்கூடாமல் பிசாசானவன் பலருடைய கண்களை பிரகாசமாகாதபடி வைத்துள்ளான் (1தீமோ 1:11; 2கொரி 4:3-4). இப்படிப்பட்ட நற்செய்தியால் இம்மையிலே நூறத்தனை ஆசீர்வாதம்; மறுமையிலே நித்திய ஜீவன் உண்டு (மாற் 10:29,30) இதனால் தான் மனக்கண் பிரகாசமாக வேண்டும் என்று பவுல் எபே 1:19ல் சொல்கிறான்.

4. <u>நித்திய சுவிசேஷம்:</u> இது மனிதனால் அல்ல ஒரு தூதனால் பிரசங்கிக்கப்படுவதாகும் (வெளி 14:6). இதன் பாரம் இரட்சிப்பு அல்ல; மனந்திரும்ப அல்ல. மாறாக நியாயத்தீர்ப்பை அறிவிப்பதாகும். இது இஸ்ரவேலருக்கு ஓர் நற்செய்தி; மட்டுமல்ல கைவிடப்பட்டு அந்தி கிறிஸ்துவின் ஆட்சியில் அல்லோலப்படும் மக்களுக்கு ஆறுதல் செய்தி. இது சபை இரகசிய வருகையில் எடுபட்டுப் போனபின், அந்தி கிறிஸ்துவின் கடைசி 3½ ஆண்டுகளில் சொல்லப்படுவதாகும். இது தேவனை இரட்சகராக அல்லடு சிருஷ்டிகராக தொழுது கொள்ள அழைக்கப்படும் அழைப்பு. இப்படிப்பட்டதான அழைப்பு ஏதேன் முதல் இயேசு வரைக்குமே இருந்ததால் இதை நித்திய சுவிசேஷம் என்று சொல்கின்றோம். இதன் பாரம் மனந்திரும்புதல் அல்ல; வெளி 14:7ஐ வாசியுங்கள். பயப்பட வேண்டும். அவ்வளவு தான். இயேசுவுக்குப் பின் இரட்சிப்பின் சுவிசேஷம் தான் சொல்லப்படுகிறது. சபை எடுபட்ட பின் மறுபடியும் நித்திய சுவிசேஷம் சொல்லப்படும்.

இப்படியாய் காலங்களையும், சுவிசேஷங்களையும் புரியாமலிருந்ததால் கள்ள உபதேசம் பரவிவிடும். இதனால் தானே இரட்சிப்பின் சுவிசேஷம் சொல்ல வேண்டிய காலத்தில், நித்திய சுவிசேஷம் என்று சொல்லித்திரியும் செவன்த்டே அட்வெண்டிஸ்ட் சபை எழும்பியிருக்கிறது. ராஜ்யத்தின் சுவிசேஷம் என்று சொல்லித்திரியும் யேகோவா சாட்சிகள் எழும்பியிருக்கின்றனர்; மகிமையின் சுவிசேஷத்தை பிரகடனப்படுத்தாத பல ஆவிக்குரிய சபைகள் எழும்பியிருக்கின்றன; இரட்சிப்பின் சுவிசேஷமே தெரியாத பெயர்க் கிறிஸ்தவ சபைகள் அதிகமாய் எழும்பியிருக்கின்றன. இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! உனக்கு வெளிப்படுத்தப்பட்ட இரண்டு சுவிசேஷத்திலே உறுதியாயிரு! மற்றவர்களுக்கும் அதை மட்டுமே உறுதிப்படுத்து! ஆமென்!

❖ ❖ ❖

# பூமியின் மூன்று காலங்கள்

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். (ஆதி 1:1). இங்கே சொல்லப்பட்ட ஆதியிலே என்ற வார்த்தைதான் யோ 1:1ல் "ஆதியிலே வார்த்தை இருந்தது", என்ற வசனத்தில் வருகின்றது. வார்த்தையாகிய தேவன் ஆதியிலே இருந்தாராம். இது அளவிடமுடியாத கணக்கிலடங்காத யுகா யுகங்களுக்கு முற்பட்டது. அப்படிப்பட்ட காலத்தில்தான் தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியின் வயதைக் கணக்கிடும் விஞ்ஞானமும் இதை ஒத்துக் கொள்கின்றது. வானத்தையும் பூமியையும் படைத்தார். ஆனால் பூமி மட்டும் ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் இருந்ததாம் (ஆதி 1:2). ஏசா 45:18ன்படி "வானங்கள்ள சிருஷ்டித்து பூமியையும் வெறுமையாயிருக்க சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காக செய்து படைத்தார்" என்று அறிகிறோம். அப்படியானால் பூமியை வெறுமையாய் சிருஷ்டிக்கவில்லை என்று அறிகின்றோம். பின்பு எப்படி பூமி ஒழுங்கின்மையும், வெறுமையுமாய் மாறியது? எரே 4:23-26 மீண்டும் ஆதி 1:2ல் வரும் கருத்தையே பிரதிபலிக்கிறது. இதிலிருந்து ஆரம்பத்தில் அருமையாய்ப் படைக்கப்பட்ட பூமி ஏதோ காரணங்களால் ஒழுங்கற்றதும் வெறுமையானதுமான நிலைக்கு பிற்காலத்தில் வந்திருக்க வேண்டும் என்று யூகிக்கலாம். எனவே தான் ஆதி 1:1க்கும் 1:2க்கும் இடையே நீண்ட இடைவெளி உண்டு என்று வேத வல்லுநர்கள் ஒப்புக் கொள்கின்றனர் எசே 28:12-19; ஏசா 14:12ன்படி லூசிபர், சாத்தானாய்மாறி உன்னத ஸ்தானத்திலிருந்து தள்ளப்பட்ட உடனே, ஆதிகால பூமியில் காணப்பட்ட ஒழுங்கான நிலையைக் கெடுக்கும் பணியில் ஈடுபட்டவனாக கலகத்தின் காரியங்களை நடப்பித்ததாலே, பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் மாறிவிட்டது என யூகிக்கலாம். இதிலே இன்னொன்றையும் கவனியுங்கள். 2பேது 3:6ல் "அப்பொழுதிருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்த தென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்களே" என்ற வாக்கியம் நோவாவின் கால ஜலப்பிரளயத்தை குறிக்கவில்லை. ஏனெனில் நோவாவின் கால ஜலப்பிரளயத்தால் பூமி அழிந்து போகவில்லையே! அதே பூமிதானே இன்றும் இருக்கிறது.

இவைகளிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது. இந்த பூமியானது 3 பிரத்தியேகப்பட்ட காலங்களை கடந்து செல்ல நியமிக்கப்பட்டுள்ளது.

1. சீரும் சிறப்புமாய் படைக்கப்பட்டு ஜலப்பிரளயத்தால் அழிந்து போன முதல் பூமியின் காலம். அதாவது பிசாசினால் ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் ஆக்கப்பட்ட காலம்.

2. ஆதாம் ஏவாள் காலத்திலே சீராக்கப்பட்டு இன்று நாம் வாழ்கின்ற இந்தக் காலம். இது அக்கினியால் புதுப்பிக்கப்படப் போகின்றது (2பேது 3:7)

3. புதுப்பிக்கப்படும் புதிய பூமியே நித்திய காலமாய் தொடர்ந்து இருக்கப் போகிறது.

அந்த மூன்றாவது காலகட்டத்தில் நாம் தேவனோடு நித்திய நித்தியமாய் இருப்போமென்ற நிச்சயம் இருக்கிறதா? சிந்தியுங்கள்.

❖ ❖ ❖

# பத்து கற்பனை யாருக்கு?

10 கற்பனை கிறிஸ்தவர்களுக்குத்தான் என்று போதிப்பவர்களும் உண்டு. அதிலும் இன்னும் சிலர் "9 கற்பனைதான் கிறிஸ்தவர்களுக்கு; ஓய்வு நாள் ஆசரிப்பு என்ற 4ம் கற்பனை மட்டும் நமக்கு இல்லை; அது யூதர்களுக்கு" என்று பிரசங்கிப்பதும் உண்டு. ஒரு சிலர் "ஞாயிற்றுக்கிழமையாகிய ஓய்வு நாளை ஆசரித்து 10 கற்பனையும் நிறைவேற்றுகிறோம்" என்றும் சொல்கின்றனர். இவர்கள் எல்லோருமே மொத்தத்தில் சனிக்கிழமையாகிய வாரத்தின் ஏழாம் நாள்தான் ஓய்வு நாள் என்றும், அது ஞாயிற்றுக் கிழமையாய் ரோமன் கத்தோலிக்க போப்பால் மாற்றப்பட்டது என்றும் முந்தி அறிய வேண்டும்.

இஸ்ரவேல் மக்களுக்கு சீனாய் மலையில் வாய்மொழியாய்ச் சொன்ன முதல் பிரமாணம் 10 கற்பனைதான் (யாத் 20). அதன் பின் அவர் மோசேயிடம் யாத் 21,22,23 அதிகாரங்களில் பல பிரமாணங்களைச் சொன்னார் என அறிகின்றோம். மோசே கர்த்தருடைய இந்த வார்த்தைகள் எல்லாவற்றையும் ஒரு புஸ்தகத்திலே எழுதி வைத்தான் (யாத் 24:4). இதுவே உடன்படிக்கையின் புஸ்தகம். 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணப் புஸ்தகத்தை மோசே எடுத்து ஜனங்களின் காது கேட்க வாசித்தான் (யாத் 24:7). கர்த்தர் சொன்ன இந்த 10 கற்பனைகளோடும் கூடிய எல்லா நியாயப் பிரமாணங்களுக்கும் கீழ்படிந்து நடப்போம் என்று இஸ்ரவேலர்கள் சொன்னார்கள். அப்போது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின் மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடு பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான் (யாத் 24:8). (இந்த நிகழ்ச்சி வரைக்கும் 10 கற்பனைப் பலகைகள் கொடுக்கப்படவில்லை என்றும், உடன்படிக்கைப் பெட்டி இன்னும் செய்யப்படவில்லை என்றும் அறிக). ஆக, பழைய உடன்படிக்கையின் ஒப்பந்த ஷரத்து, 10

கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் என்று உறுதியாய் அறிகிறோம். இந்த ஒப்பந்தமும், நியாயப் பிரமாணமும் இஸ்ரவேலருக்குரியது. நாமோ புது உடன்படிக்கைக்காரர்கள். நியாயப் பிரமாணம் நீதிமான்களுக்கு விதிக்கப்படவில்லை (1தீமோ 1:9).

யார் நீதிமான்? பழைய உடன்படிக்கை (ஏற்பாடு) காலத்தில் 10 கற்பனை கிரியைகளின்படி நீதிமான் ஒருவனும் இல்லை; ஒருவனாகிலும் இல்லை என்று வேதம் கூறுகின்றது (ரோ 3:10). ஆனால் புது உடன்படிக்கைப் படி இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகின்றோம். (ரோ 3:24; எபே 2:8). **“கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும் நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள்; பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்; நீதிமான்களாக்கப் பட்டீர்கள்’** என்ற 1கொரி 6:11ன்படி நாமெல்லாரும் நீதிமான்களாக்கப்பட்டோம். பழைய ஏற்பாட்டிலும் கற்பனைகளடங்கிய நியாயப்பரமாணக் கிரியைகள் இல்லாமல் நம்மைப்போல் விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்பட்டவர்களும் உண்டு. (See எபி 11). எனவே 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம், நீதிமான்களாக்கப்பட்ட நமக்கு விதிக்கப்படவில்லை. ஆகவே, 10 கற்பனையோ, மற்றக் கற்பனைகளோ புதிய ஏற்பாட்டு விசுவாசிகளை கட்டுப்படுத்தாது. அப்படியானால் பொய் சொல்லலாமா? களவு செய்யலாமா? கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் நம்மை பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே! (ரோ 8:2) கிறிஸ்து இயேசுவினாலே ஆவியின் பிரமாணம் (Spiritual Law) நம்மை வழி நடத்துகின்றது. அவருடைய வசனமே சத்தியம்; கற்பனை; ஆவியின் பிரமாணம் (1யோ 2:3-5). இயேசு கிறிஸ்துவின் வசனப்படியேதான் கிறிஸ்தவர்கள் நடக்கும்படியாய் போதிக்கப்பட வேண்டும் என்று இயேசு மத் 28:18,-20ல் சொல்லி விட்டுப் போயிருக்கிறார். கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல (2யோ 9). கடைசி நாளில் நியாயத்தீர்க்கப்போகிறது மனிதனாய் இயேசு சொன்ன வசனமே (யோ 12:48). எனவே பத்து கற்பனை நம்மைக் கட்டுப்படுத்தாதுடு நாம் மாமிசத்தில் வந்த இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களைக் கைக்கொள்வோம்; பரலோகம் போவோம்!

❖ ❖ ❖

# யோசேப்புக்கு இயேசு ஏன் பிறக்கவில்லை?

மனிதனாய்ப் பிறந்த இயேசு ஏன் நம்மைப் போல ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறக்காமல் பரிசுத்த ஆவியினால் பிறந்தார் என்பதை நான் பலமுறை விளக்கியிருக்கிறேன். அது குறித்து இன்னும் அதிகமாய் ஆவியானவர் சொல்வதை கேட்போம்.

இயேசுவின் வம்ச வரலாறு என்று மத்தேயு ஆரம்பித்து, "ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்" என்று தொடங்குகின்றான். ஆபிரகாமாகிய ஆண், பிள்ளை பெற முடியுமா? சாராள்தான் பெற்றாள். இந்த வசன உள்ளார்த்தம்தான் என்ன? ஈசாக்கு ஆபிரகாமின் மாம்சீக வித்தினால் உண்டானவன் (ஒரு சிலர் நினைப்பது போல் ஈசாக்கு தேவனால் நேரிடையாய் உருவாகவில்லை). தேவனால் நேரிடையாய் உருவானவர் உலக சரித்திரத்திலே இயேசு ஒருவர் மட்டுமே. அல்லேலூயா! அப்படியே மறுபடியும் மத்தேயு எழுதுவதை பாருங்கள். ஆண்கள் தான் பெற்றார்கள் என்று யோசேப்பு வரை இப்படியே தான் எழுதப்பட்டுள்ளது. வசனம் 1:16ஐ பாருங்கள்! **"யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப் பெற்றான். அவளிடத்தில் கிறிஸ்து எனப்படுகிற இயேசு பிறந்தார்".** மரியாள் மூலமாய்த்தான் இயேசு பிறந்தார்; யோசேப்பினால் இயேசு பிறக்கவில்லை. லூக்கா வம்ச வரலாறு எழுதும்போது கூட "இயேசு யோசேப்பின் குமாரனென்று எண்ணப்பட்டார்" (SUPPOSED) (லூக் 3:23) என்றுதான் எழுதி உள்ளார். மத் 1:11ஐ பாருங்கள். இயேசுவின் பரம்பரையிலுள்ள யோசியா என்பவன் எகொனியாவைப் பெற்றான். யார் இந்த எகொனியா? இவன் விந்தில் ஒருவனாகிலும் வாழ்வடைந்து, தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து யூதாவை அரசாளப் போவதில்லை என்று கர்த்தர் சொன்னார் (எரே 22:30). இந்த சபிக்கப்பட்ட எகொனியாவின் வித்தின் வழிவந்த யோசேப்புக்கு இயேசு பிறந்திருந்தால், அவனின் சாபம் இயேசுவுக்கு வந்திருக்கும். அவர் அதிகாரத்தோடும் வல்லமையோடும் நீதியோடும் தாவீதின் சிங்காசனத்தில் இருக்க முடியாது. யாக்கோபின் குடும்பத்தாரை அரசாள முடியாமல் லூக் 1:32-33ல் நிறைவேறப் போகும் தீர்க்கதரிசனம் நிறைவேறாமல் போய்விடும். எனவே யோசேப்பின் வழியில் தேவன் பிறக்கவில்லை. எகொனியாவின் சாபம் அவரைச் சாரவில்லை. தாவீதின் சிங்காசனம் அவருக்குரியதே. அல்லேலூயா! அவரே ஆளப்போகிறவர் 1000 ஆண்டுகள்.

# இயேசு டிசம்பரில் ஏன் பிறக்கவில்லை?

**"அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள்"** (லூக் 2:8). இந்த நாள் தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாவீதின் ஊரிலே பிறந்தார் என அறிகிறோம். (லூக் 2:11) மாரிக்காலம் (Winter Season) முதற்கொண்டு தொடர்ந்து வரும் வசந்தகாலம் (Spring Season) வரை மேய்ப்பர்கள் தங்கள் ஆட்டு மந்தையை திறந்த வெளிகளில் வைத்து காத்துக்கொண்டு தங்கி இருக்கமாட்டார்கள். ஏனென்றால் மந்தைகள் மாண்டுபோகவோ, நோய்வாய்ப்படவோ, மேய்ப்பர்கள் நோய் வாய்ப்படவோ இந்த காலம் ஒத்தகாலமாய் உள்ளது என்று நாமறிவோம். இதனால்தான் எருசலேமின் அழிவு மாரிக்காலத்தில் நடவாதபடிக்கு வேண்டிக் கொள்ளுங்கள் என்று எச்சரித்தார் இயேசு (மத் 24:20). காரணம் என்னவெனில் மாரிக்காலத்தில் ஓடிப்போய் தப்பித்துக் கொள்ள இயலாமல் போய்விடும்; பாதுகாப்பு உண்டாக்கிக் கொள்ள வழியற்றுப் போய்விடும். இந்த மாரிக்காலம் அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் இஸ்ரேல் நாட்டில் ஆரம்பமாகிறது. அப்படியானால் அக்டோபர் அல்லது நவம்பர் முதல் வசந்த காலம் வரை மேய்ப்பர்கள் மந்தைகளை திறந்த வெளியில் வைத்திருக்க முடியாது என்பது நாமறிகின்ற உண்மை. எனவே லூக் 2:8ன்படி அது டிசம்பராய் இருக்க முடியாது. அதினிமித்தம் இயேசுவின் பிறந்தநாள் டிசம்பர் மாதத்தில் அல்ல என உறுதியாய்க் கூறலாம். பஸ்கா பண்டிகைக்குப் பிறகு அதாவது வசந்த காலம் ஆரம்பிக்கும் போது மேய்ப்பர்கள் மந்தைகளை வெளியே கொண்டு போய் காத்துக் கொள்ள ஆரம்பிப்பது இஸ்ரவேலில் வழக்கம். முதல் மழை ((முன்மாரி) அக்டோபர் அல்லது நவம்பரில் பெய்யும்போது இப்படியாய் மந்தைகள் திறந்த வெளியில் காக்கப்படாது. எனவே இயேசுவின் பிறப்பு இந்த கால கட்டத்திற்குள் தான் என்று சொல்லக்கூடாது. ஆனாலும் சரியான நாளை யாரும் யூகிக்க முடியவில்லை. கிழக்கிலிருந்து, பாலகன் இயேசுவைப் பார்க்க வந்த சாஸ்திரிகளுக்குக் கூட நட்சத்திரம் காணப்பட்ட காலம் இயேசு பிறந்து கிட்டத்தட்ட ஓராண்டுக்குப் பின்னே தான் என்று யூகிக்க முடிகிறது. எப்படியெனில் பிரதான ஆசாரியர் வேதபாரகர் இவர்களைக் கொண்டு ஆராய்ந்தும் ஏரோதுவால் இயேசுவின் பிறந்த இடம் மற்றும் தேதியை அறிந்து கொள்ள இயலாமல்,

சாஸ்திரர்களிடத்தில் விசாரித்த காலத்தின்படியே இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொல்லக் கட்டளையிட்டான். (மத் 2:16,17) என்று பார்க்கிறோம். எனவே இயேசு கிறிஸ்து டிசம்பர் 25ல் பிறக்கவில்லை என்று சொல்ல முடிகிறது. நாம் பண்டிகைக் கிறிஸ்தவர்களாய் இல்லாதபடிக்கு, ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாய் மாற ஆவியானவர் வழி நடத்துவாராக!

❖ ❖ ❖

# வாக்குத்தத்தம் வேறு; ஆசீர்வாதம் வேறு!

டிசம்பர் 31 இரவு, பழைய வருட புதுவருட ஆராதனையில் பங்கு கொண்டிருப்பீர்கள் என்று நான் கர்த்தருக்குள் நம்புகின்றேன். வேதத்தின்படி ஒரு நாள் முடிகிறது சாயங்காலத்தில்தான். இரவு 12 மணியில் அல்ல. (சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று என்ற வசனங்களை ஆதி 1ல் காண்க). இரவு 12 மணியில் தான் ஒருநாள் முடிகிறது என்பது ரோமசர்க்காரின் ஏற்பாடு. சூரியன் அஸ்தமிக்கும் நேரம் தான் ஒருநாள் முடியும் நேரம். எப்படியோ இன்றைக்கு எல்லாக் கிறிஸ்தவர்களும் இந்த ரோம கால முறைமைகளையே பயன்படுத்துகின்றனர். ஆதியாகமத்தின் வார்த்தை பழைய ஏற்பாடு என்று வாதிடுவோருக்கு சொல்லுகின்றேன்! "பழைய ஏற்பாடு சீனாய் மலையில்தான் ஏற்பாடாயிற்று". எப்படியோ புது வருஷம் உலகப் பிரகாரமாய் கிறிஸ்தவர்கள் எல்லோருக்கும் டிசம்பர் 31 இரவு 12 மணிக்கு பிறந்தது. அப்போது ஒவ்வொரு சபையிலும் ஒரு வாக்குத்தத்தம் சொல்லப்பட்டிருக்கும். இந்த புதிய ஆண்டில் இந்த ஒரு வாக்குத்தத்தின்படியே தான் தேவன் ஆசீர்வதிப்பார் என்று பிரசங்கம் வேறு. அப்படியானால் வேதத்தில் சொல்லப்பட்ட மற்ற வாக்குத்தத்தமெல்லாம் இந்த வருஷம் நடக்காதா? வேதத்தில் சொல்லப்பட்ட அத்தனை வாக்குத்தத்தமும் விசுவாசிகளுக்குத்தானே! அப்படியிருக்க ஒன்றை மட்டும் ஏன் பிடித்துக் கொள்ள வேண்டும்? வாசிக்கிறவர்கள் சிந்தியுங்கள். அடுத்து, **வாக்குத்தத்தம் என்றால் "Promise" "உறுதிப்பாடு" "சத்திய ஒப்பந்தம்"** என்று அர்த்தம். இந்த வாக்குத்தத்தப்படி நம் தேவன் கண்டிப்பாய் செய்தே முடிப்பார். அவர் சொன்னதைச் செய்கிறவர்; செய்கிறதை சொல்கிறவர். நாம் அவரோடு ஒத்துப் போகாவிட்டாலும் அவர் சொன்ன வாக்குப்படி செய்தே

தீருவார். மீண்டும் வருவேன் என்று வாக்குப் பண்ணிய தேவன் நிச்சயம் வருவார். கானான் தேசத்தை கொடுப்பேன் என்றவர் கண்டிப்பாய் கொடுப்பார். (ஆதி 17:8) யார் பின்மாறிப் போனாலும் அவர் சொன்ன வார்த்தையில் பின்மாற மாட்டார். ஆனால் Blessings அதாவது **ஆசீர்வாதம் என்பது Conditional.** "இதை நீ செய்தால் தான் நான் இதைச் செய்வேன்" என்று சொல்லி செய்வது. ஆனால் Promiseக்கு நிபந்தனை இல்லை. இஸ்ரவேலர் பரிசுத்த ஜாதியானது ஒரு நிபந்தனையின் பேரில் தான். அதாவது தேவனின் உடன்படிக்கையைக் கைக்கொண்டால் இந்த ஆசீர்வாதங்கள். This is Conditional (யாத் 19:5,6). இன்றைய பெரும்பாலான சபைகளிலே வாக்குத்தத்த வசனம் என்று சொல்லி ஆசீர்வாதங்களை பிரசங்கிக்கிறார்கள். அது தவறு. இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! வாக்குத்தத்தங்கள் எல்லாமே உனக்குத்தான். தேவையானவைகளை எடுத்து உபயோகித்து வெற்றிப் பயணம் தொடருங்கள். நிபந்தனைகளோடு கூடிய ஆசீர்வாதங்களை அனுதினமும் பெற்று மகிழுங்கள். ஆசீர்வாதங்களை, வாக்குத்தத்தம் என்று சொல்லி ஏமாந்து போகாதீர்!

❖ ❖ ❖

# பெரிய பாவம்... சின்ன பாவம்

"பாவம் என்றாலே எல்லாம் ஒன்றுதான்; இதிலே பெரிய பாவம் சின்ன பாவம் என்று ஒன்றுமில்லை" என்று பல கிறிஸ்தவர்கள் சொல்வதைக் கேட்டிருக்கிறீர்கள். வேதம் என்ன சொல்கின்றது என்று பார்ப்போம். 1யோ 5:16ஐ வாசியுங்கள். மரணத்துக்கு ஏதுவான பாவம் ஒன்று இருக்கிறது. மரணம் என்றால் சரீரப் பிரகாரமான மரணமல்ல; ஏனென்றால் சரீரமரணம் அவனவன் செய்கிற பாவங்களினால் வருவதில்லை. அப்படி என்றால் வயிற்றிலிருக்கும்போதே எத்தனையோ குழந்தைகள் மரிக்கின்றனவே, அந்த குழந்தைகள் என்ன பாவம் செய்தன? ஒன்றுமில்லையே. பின்னே ஏன் அவைகள் சாகின்றன? ஆதாம் செய்த பாவத்தின் தண்டனையினால் எபி 9:27ன்படி அனைவரும் சரீரமரணமடைகிறார்கள். அப்படியானால் இங்கே சொல்லப்படும் மரணம் எது? இதுதான் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற நரககம் (வெளி 20:6). இந்த நரகத்திற்குப் போகும்படியான பாவம் எது? வெளி 20:15ன்படி ஜீவ புஸ்தகத்தில் பேர் எழுதப்படாதவன் நரகம் போவான் என அறிகிறோம். யாருடைய பெயர் ஜீவ புஸ்தகத்தில்

எழுதப்படுகின்றது? எப்போது இயேசுவை ஆண்டவரென்றும் இரட்சகரென்றும் ஏற்றுக்கொண்டு, பாவத்திற்கு மரித்து, நீதிக்குப் பிழைத்திருக்கிறானோ அப்போதே அவன் பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படும். சங் 69:28ன்டி நீதிமான்கள் பெயர்கள் அதிலே இருக்கும். யார் நீதிமான்? இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட அத்தனை பேரும், நீதிமான்கள் (ரோ 3:23; 1கொரி 6:11). அதாவது இரட்சிக்கப்பட்டவர்கள் பெயர் இருக்கும். இந்த ஜீவ புஸ்தகத்தில் பெயர் இல்லையென்றால் ஒன்று அவன் இரட்சிக்கப்படாமல் இருக்க வேண்டும்; அல்லது இரட்சிக்கப்பட்டபின், பின் மாறிப்போயிருக்க வேண்டும். பின்மாறிப்போதல் என்றால் என்ன பொருள்? மறுபடியும் இரட்சிப்புக்கு முன்னிருந்த நிலைக்குப் போகுதல். அதாவது மறுபடியும் இயேசுவை ஆண்டவர் என்றும் இரட்சகர் என்றும் ஏற்றுக்கொள்ளாத நிலை. இந்த நிலையில் இருந்ததால் தான் தேவனின் ஸ்தானத்தில் கன்றுக் குட்டியை வைத்து இஸ்ரவேலர்கள் வணங்கினார்கள். அதனால் இவர்கள் பெயரை கிறுக்கிப்போட தேவன் நினைத்தார் (யாத் 32:32). பலர் நினைக்கிறார்கள்:- **“பொய், திருடு, விபச்சாரம், கொலை, கொள்ளை செய்தாலே கிறுக்கிப் போடப்படும்''** என்று. அப்படியானால் இஸ்ரவேலர்கள் விபச்சாரம், வேசித்தனம் பண்ணும் போதெல்லாம் தேவன் அவர்கள் பெயரை கிறுக்கிபோடவில்லையே! ஏனென்றால் இந்தப் பாவங்கள் செய்தாலும், தெய்வ பயம் இருப்பதினாலே, இரட்சிப்பின் வஸ்திரம் வெண்மையாய் இருப்பதினாலே, **தேவனால் பிறந்த அவன் தொடர்ந்து பாவம் செய்யான்; He will not stick on sin or Continue to sin** (1யோ 3:9). ஆக மொத்தத்தில் இரட்சிக்கப்படாதது அதாவது இயேசுவை ஆண்டவரென்றும் இரட்சகரென்றும் ஏற்றுக்கொள்ளாதது அல்லது தேவனுக்கு சமமாகவோ மேலாகவோ வேறு எதையோ வைப்பதுதான் மரணத்துக்கு ஏதுவான பாவம். இந்தப் பாவம் தான் இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படாதது. (மத் 12:31,32). இந்தப் பாவத்தைத்தான் பரிசுத்த ஆவியானவர் உலகத்தாருக்கு கண்டித்து உணர்த்துகிறார் (யோ 16:8,9). இந்தப் பாவம் தான் பரிசுத்த ஆவிக்கு விரோதமான மன்னிக்க முடியாத பாவம்.

இதுவல்லாத மற்ற எந்தப் பாவங்களும் மன்னிக்கப்படும். இப்படி மன்னிக்க முடியாத பாவங்களைச் செய்தவர்களுக்காய் பரிந்து பேசக்கூடாது என்று வேதம் சொல்கின்றது (எரே 7:16). அவர்களுக்கு விசுவாசத்தை துவக்கும்படியாய் வேண்டுமானால் ஜெபிக்கலாம். ஆனால் மற்ற பாவங்களை செய்கிற விசுவாசிக்கோ, பரிந்து தேவனிடம் பேசலாம். அப்படியானால் வெளி 21:8; 22:15ல் உள்ள பாவங்கள்

யாருடையது? எப்படிப்பட்டது? இது தொடர்ந்து பாவம் செய்கின்ற பின் மாறிப்போன அவிசுவாசிகளுடையது.

இந்தப்படியான மரணத்திற்கு ஏதுவான பாவத்தைத்தான் சாவான பாவமென்று ரோமன் கத்தோலிக்கர் சொல்கின்றனர். அப்படியானால் குழந்தை ஞானஸ்நானம் சாவான-பாவமே! சிலை வணக்கம்; சிலுவை வணக்கம்; அப்போஸ்தலர் வணக்கம் எல்லாமே சாவான பாவமே! இந்தப் பாவமுள்ள கொள்கை நபரோடோ, சபையோடோ ஆராதனையில் ஈடுபடுவது தேவனின் பார்வையில் பொல்லாப்பானது. இதனால் தானே ஆராதனை பண்ணும்படி இஸ்ரவேலரை இரட்சிப்புக்குள் வராத எகிப்தியனோடு இல்லாமல் பிரத்தியேகமாய் பிரித்துக்கொண்டு வந்தார் மோசே. வந்த சபையார் மன்னிப்புக்கு ஏதுவான பாவங்களை செய்த போதிலும் தேவன் அவர்களையும் சேர்த்து பரிசுத்த ஜாதி என்று சொல்கின்றார். ஆக, மூல உபதேசத்திற்கு (எபி 6:1,2) விரோதமான எல்லாமே, மன்னிக்க முடியாத பெரிய பாவம் தான்.

❖ ❖ ❖

# எது கெட்ட வார்த்தை?

தலைப்பைப் பார்த்தவுடனே பலருக்கு ஆசிரியர் மேல் கோபம் வரலாம். கெட்ட வார்த்தை என்றால் என்ன என்று ஆவிக்குரிய கிறிஸ்தவர்களுக்குக்கூடத் தெரியவில்லை. சயனித்தல் (ஆதி 39:14; உபா 22:22), முலைகள் (ஓசி 9:14; லூக் 11:27) இரண்டு ஸ்தனங்கள் (உன்ன 7:3,7) போன்ற வார்த்தைகளெல்லாம் கெட்ட வார்த்தைகள் என்று உலகத்தார் சொல்வதையே நம்மவர்களும் சொல்கிறார்கள். “நீ நிர்வாணமாய் (Nacked அம்மணமாய்) இருக்கிறாய் என்று சொன்னவன் யார்?” என்று ஆதி 3:11ல் தேவன் ஆதாமைக் கேட்பதை சிந்தியுங்கள். நிர்வாணம் என்ற உடனே கெட்டது என்ற சிந்தனை மனிதனுக்குள் வந்துவிட்டது. இப்படியே பல காரியங்களை, சொற்களை, மறைத்து, மறைத்து மூடிவைப்பதால்தான், அதைத் திறந்து பார்க்க வேண்டும் என்ற ஒரு எண்ணம் உருவாகி, அந்த எண்ணத்தோடு ஆக்கப்பூர்வமான சிந்தனையை விட்டுவிட்டு, மனிதன் மாய்ந்து போகிறான். மூடிவைப்பதும் பிசாசின் வேலை; திறக்க வைப்பதும் பிசாசின் வேலை. அப்படியானால் இந்த வார்த்தைகளைப் பேசலாமா? ஏன் கிறிஸ்தவர்கள் கூட இந்த வார்த்தைகளைப் பேசலாமா? இவைகளைப் பேசுவதில் தவறில்லை; வேதத்தில் பலர் இந்த வார்த்தைகளை உபயோகித்தனர்; அவர்கள் பாவியல்ல. தேவனும்

உபயோகித்திருக்கிறார். ஆனால் ஒன்று; உலகத்தார் மத்தியில் நம்மைப் பற்றிய தேவசாட்சி கெட்டுப்போய்விடுமே என்பதை நினைக்க வேண்டும். புலால் உண்பது பாவமல்ல, ஆனால் பவுல் சொல்கிறான். **"அதனால் புலால் சாப்பிடாத இன்னொருவனுக்கு இடையூறு என்றால் சாப்பிடாதே"** (1கொரி 8:13) உன் சுயாதீனம் - சுதந்திரம் மற்றொருவனுடைய மனச்சாட்சியினாலே குற்றமாய் எண்ணப்பட வேண்டுவதென்ன? (1கொரி 10:29) மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது தவறுகிறதற்காவது, பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால் அவைகளில் ஒன்றையும் செய்யாதிருப்பதே நன்மையாயிருக்கும். (ரோ 14:21) அப்படியானால் கெட்ட வார்த்தை என்பது எது? எபே 4:29ஐ வாசியுங்கள். பக்திவிருத்திக்கு ஏதுவானது நல்ல வார்த்தை. பக்திவிருத்திக்கு ஏதுவல்லாதது கெட்ட வார்த்தை. அந்த நல்ல வார்த்தை தான் தேவ வார்த்தை. இதனாலே நமக்கு பக்தி விருத்தியாகும். வசனத்தால் விசுவாசம் வளரும் (ரோ 10:17) இந்த விசுவாச தேவ வார்த்தைகளையே நாம் பேசுவோம். யோபுவைப் போல வசனம் இணையாத வார்த்தையெல்லாம் அலப்பல் வார்த்தை. தேவ வார்த்தை அல்ல. (யோபு 42:2) இந்த வார்த்தை நமக்கு வேண்டாம், தேவ வார்த்தையே தியானிப்போம். நம் வாயின் வார்த்தைகளை தேவன் காவல் வைப்பார். மரணமும் ஜீவனும் நம் நாவில்தானே இருக்கிறது! (யாக் 3). எனவே தேவ வார்த்தைகளோடு இணைந்த வார்த்தைகளைப் பேசுவோம். அவைகள் நல்ல வார்த்தைகள், "தேவன் வியாதியை கொடுத்து சிட்சிக்கிறார்; அதனால் மரணத்தை தேவன் தருகிறார்" "இந்த உலகில் அழுகையும் கண்ணீரும்தான்; பரலோகில் தான் மகிழ்ச்சி" "வெற்றி வாழ்க்கை நமக்கில்லை" "பொருளாதார ஆசீர்வாதம் நமக்கில்லை" "வாதை நம் கூடாரத்தை அணுகும்" "விபத்துக்கள் ஏற்படும்" "நமது எலும்புகள் முறிக்கப்படும்" "நரகம் என்ற ஒன்று இல்லை" "குழந்தை ஞானஸ்நானமே போதும்" "அந்நிய பாஷை தவளைகளின் பாஷை" போன்ற வசனத்திற்கு விரோதமான பல கெட்ட வார்த்தைகளை பேசாதிருப்போம்.

❖ ❖ ❖

# முத்தங்கள் பலவிதம்

இந்த ஆராய்ச்சி தேவைதானா? இது பலருடைய கேள்விகளாக இருக்கலாம், ஆனால் இவைகளைத் தெரிந்து கொள்வது மிகவும்

நல்லது. (யோ 5:38) வேதத்தில் வரும் முத்தங்களை பார்ப்போம். அதற்கு முன்பாக முத்தம் என்றால் என்ன என்று பார்ப்போம். வாயின் உதடுகளினாலே ஒருவரை ஒருவர் தொட்டுக் கொள்வது; ஒத்துப்போவது. ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? இதன் தாற்பரியம்தான் என்ன? நீதி 24:26ஐ வாசியுங்கள். செம்மையான - அடுத்தவன் ஏற்றுக் கொள்ளத்தக்கதான - நன்மையான பதில்களை வார்த்தையினால் சொல்லாமல், வாயின் முத்தத்தால் செய்கிற காரியமே முத்தமிடலாகும். இது உயிருக்கு உயிராய் பழகுவோர் செய்வது.

வேதத்தில் பலதரப்பட்ட முத்தங்கள் உள்ளன. **யோசேப்பு தன் தகப்பனை முத்தமிட்டான்** (ஆதி 26:25,27) இது **அப்பா - மகன் அன்பு** முத்தம். **ஏசா, யாக்கோபை முத்தமிட்டான்** (ஆதி 33:4) இது **அண்ணன் தம்பி பாச முத்தம். தாவீதும் யோனத்தானும் முத்தமிட்டது நட்பின் முத்தம்,** (1சாமு 20:41); **நகோமி தன் மருமகளை முத்தமிட்டாள்** (ரூத் 1:9). **இது உறவின் முத்தம்.** இவை எல்லாவற்றிற்கும் மேலாக இவ்வுலக **மாம்சீக ஆணும் பெண்ணும் விரும்பும் முத்தம் காதல் முத்தம்** (ஆதி 29:11). எந்த முத்தமாக இருந்தாலும் சரி எல்லாமே அன்பின் அடிப்படையில் எழுந்தவைதான். அன்பினால் இணைகின்ற வார்த்தைகளை முத்தத்தினால் தெரிவிக்கின்றோம். இது மாம்சீக கிரியைகளாக இல்லாமலிருக்க வேண்டும். இல்லையேல் அந்த முத்தம் சத்தமிடும் முத்தமாயிருக்கும். அது வஞ்சனையின் முத்தம் (நீதி 27:6). இதுதான் யூதாஸ் காரியோத்து இயேசுவை செய்த முத்தம் (மத் 6:48.49) தேவனுக்கு விரோதமான முத்தம். அன்பின் முத்தம் போல பாசாங்கு காட்டும் நடிப்பு முத்தம்; வேசியின் முத்தமும் இப்படியே! (நீதி 7:130 இப்படிப்பட்ட வஞ்சனையின் முத்தத்தை இயேசு அறிந்திருக்கிறார். அதனால்தான் "முத்தத்தினாலேயா மனுஷகுமாரனை காட்டிக் கொடுக்க வந்தாய்?" (லூக் 22:48) என்று இயேசு கேட்டார். இயேசுவின் பிள்ளைகளாகிய நீயும், முத்தங்களை பகுத்தறிந்து கொள். உன் மனம் குருடாயிருந்தால் (1கொரி 4:4) சந்தோஷமாய், நன்மையாய் ஆரம்பத்தில் தெரிந்தது இறுதியில் படுபாதாளமாய் வந்து சேரும்.

எந்த முத்தம் எப்படி இருந்தாலும், இவைகளெல்லாம் மனுஷர்களின் மனுஷீக முத்தம். ஆனால் அழியாத முத்தம் தேவன் தமது வாயின் முத்தங்களால் முத்தமிடுவது. (உன் 1:2) அது தான் நிரந்தரமானது. திராட்சைரசத்தைப் பார்க்கிலும் இன்பமான தெய்வீக அன்பு, அவர் வாயின் முத்தம் தான், வானமும் பூமியும் அழிந்து போனாலும் என்றும் நிலைத்திருக்கும் அவர் வாயின் வார்த்தைகளே!

அல்லேலூயா! இந்த முத்தத்தால் நாம் திருப்தியாவோம்! களிப்படைவோம்! அல்லேலூயா! அவர் நம்மை முத்தமிடுகிறாரே பதிலுக்கு நாம் முத்தமிட வேண்டாமா? உன் முத்தத்திற்காய் மணவாளன் இயேசு காத்திருக்கமாட்டாரா? பாவியாகிய ஸ்திரி இயேசுவைத் தேடிவந்து முத்தமிட்டது இயேசுவுக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? இயேசு மகிழ்ந்து சொன்ன லூக் 7:44-50 வசனங்களைப் படியுங்கள். இப்படிப்பட்ட முத்தங்களை தினமும் இயேசு உன்னிடமிருந்து எதிர்பார்க்கிறார். வேதபாரகன் பரிசேயன் கொடாத முத்தம் இந்த பாவி தந்தாளே அவளுக்கு எல்லாவற்றிலிருந்தும் விடுதலை வந்தது - இரட்சிப்பு வந்தது - சமாதானத்தோடே போனாள் (வச 50). உன் வாழ்வில் சமாதானம் இல்லையா? முழுமையான விடுதலையில்லையா? “இயேசுவின் பாதத்தில் ஓர் நாள்” என்று சொல்லி உன் வாயின் வார்த்தையாகிய ஆவியின் முத்தத்தால் ஒரு நாள் மட்டும் முத்தமிடாதே! தினந்தோறும் முத்தமிடு! நீ ஆசீர்வதிக்கப் படுவாய்! அப்படிப்பட்ட நீ உன் சபையாரை பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்த ஆரம்பி! (1கொரி 16:20) இந்த முத்தம் பிரத்தியேகப்பட்ட முத்தம்; தூய்மையான முத்தம். இது மாமிச வாயினாலல்ல. **மாமிச வாயிலிருந்து வரும் ஆவியின் வார்த்தைகளால்!** தேவனால் முத்தமிட்டு, அவரையும் முத்தமிட்ட நீ பெற்ற இன்பத்தை உன் சக சபையாரும் பெறும்படியாய் அவர்களையும் முத்தமிடு! அன்பு பெருகட்டும்! அல்லேலூயா! (ரோ 16:16).

❖ ❖ ❖

# உன் பாவங்களை நீ விட முடியாது

வாலிப சகோதரர்கள் நிறைய பாவக் காரியங்களிலிருந்து விடுதலையாக முடியாமல் தவித்துக் கொண்டிருப்பதை நான் அறிவேன். குடிகாரனாய் இருந்தால் குடியை விடமுடிவதில்லை. கோபக்காரனானால் கோபத்தை குறைக்க முடியவில்லை; சுய புணர்ச்சி; ஆண் புணர்ச்சி, இச்சை மற்றும் லஞ்சம், லாவண்யம் போன்ற காரியத்தில் உள்ளவனானால் அவைகளை விட முடியவில்லை. இப்படியாய் பலர் எண்ணி தங்களுக்குள்ளேயே விம்மி மாளுகின்றனர். இப்படிப்பட்ட வாலிபர்கள் ரோ 10:9-10ன்படி இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களா? பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைக்கும் ஞானஸ்நானம் பெற்றுள்ளார்களா? இரட்சிப்புக்குள் வரும்போதே, “அந்தப் பாவத்தை விடு; இந்த பாவத்தை விடு; அதன்பின்னே இயேசுவிடம் வா” என்று

பிரசங்கியார் சொல்லைக் கேட்டு அதையே நம்பி வந்திருப்பாய். உன் பாவங்களை நீயே விட்டுவிட முடியுமென்றால் இயேசு எதற்கு? இரட்சிப்பு எதற்கு? பேதுரு இப்படித்தானே தன்னால் முடியும் என்று சொல்லி மூன்றுமுறை மறுதலித்து வீழ்ந்து போனான் (லூக் 22:33). இஸ்ரவேல் மக்களும் தங்களால் நியாயப் பிரமாணங்களை கைக்கொள்ள முடியும் என்று சொல்லி (யாத் 19:8) வீழ்ந்து போனார்கள். ஒருவனாலும் தன்னால் சுயமாய் நிமிர்ந்து நிற்க முடியாது. ''நான் நிற்கிறதும், நிர்மூலமாகாதிருக்கிறதும் உம்முடைய கிருபை" என்ற பவுலின் சொல்லை யோசித்துப் பாருங்கள். குடிப்பழக்கமா? உன்னால் மாற்ற முடியாது; நீ இயேசுவை முழுமையாய் ஏற்றுக்கொள்; அவர் மாற்றுவார். வேறு எந்த பாவ காரியமானாலும் சரி, உனக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவரே உன்னை மாற்றுவார். இதுதான் நாளுக்கு நாள் மனம் மறுரூபமாகுதல் (ரோ 12:1,2) இரட்சிக்கப்பட்ட உடனே யாரும் புதுமையாய் மாறுவதில்லை. "புது சிருஷ்டியாகிவிட்டோம்" என்பது நமது சிந்தனையிலோ மாம்சீக செயல்களிலோ அல்ல. அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்துபோன நம் ஆவி, ஜீவன் பெற்று, மறுபடியும் பிறந்து புது சிருஷ்டியாகியிருக்கிறது. உன் ஆத்துமா தினந்தோறும் மறுரூபமாகிறது பரிசுத்த ஆவியினாலே. உன் சரீரம் கிறிஸ்து வரும்போது மறுரூபமாகும். ஐந்து நட்சத்திர ஓட்டலில் குடித்து புசித்து நடனமாடும் ஒரு சகோதரி, D.L.மூடி என்ற பிரசங்கியாரின் சுவிசேஷக் கூட்டத்தில் ஒப்புக்கொடுக்க முன் வந்தார்கள். ஆனால் அவளுக்குள்ளே இருந்த பாவத்தை அவளால் விட முடியவில்லையே என்று சொல்லி அவரிடமே அழுதாள். அவர் சொன்னார் - "உன் பாவத்தை உன்னால் மட்டும் விட முடியாது" முதலில் இயேசுவை ஏற்றுக்கொள்; அவர் மாற்றுவார்". அந்த சகோதரி அப்படியே நம்பி ஏற்றுக்கொண்டாள். சில மாதங்கள் கழித்து அதே சகோதரி பிரசங்கியாரைக் கண்டு, ஐயா "நான் இப்போது குடிப்பதில்லை; டான்ஸ் ஆடுவதில்லை; எனக்குள் வந்த இயேசு என்னை தினந்தோறும் மாற்றினார்" என்றாள்.

'ஆம் பிள்ளைகளே! உங்களுக்குள் இருக்கும் எல்லா துர்க்குணங்களையும் தேவன் கொஞ்சம் கொஞ்சமாய் மாற்றுவார். உன்னால் மாற்ற முடியாது. சங் 1ன்படி நட, தேவ வசனங்கள் உன்னை மாற்றும். அல்லேலூயா!'

❖ ❖ ❖

# பாவ மன்னிப்பிற்கு இரத்தம் சிந்த வேண்டுமா?

உலக நீதிமன்றங்களிலே, ஒருவன் கொலை செய்தவனானால் அவனுக்கு தூக்கு தண்டனை விதிக்கிறார்கள். ஏன்? நீ ஒருவனின் இரத்தத்தை சிந்த வைத்தாயே அதற்கு பரிகாரமாய் உன் இரத்தம் சிந்தப்பட வேண்டும் என்று சொல்கின்றார்கள். ஏனென்றால் இரத்தத்தில்தான் உயிர் இருக்கிறது (ஆதி 9:4) நியாயப்பிரமாணமும் இப்படித்தான் சொல்கிறது (யாத் 21:12,14). கொலையில்லாமல் வேறு குற்றம் செய்தால் ஜெயிலில் போடுகிறார்களே. ஏன்? உயிர் போகாத வேறு குற்றம் செய்தாலும், பாதிக்கப்பட்டவன் அதனாலே மிகவும் வருந்தி வாடிப்போவானல்லவா? அப்படி கவலைப்படுவதினால் சரீரத்தில் ஒரு முழம் கூடாது; குறையவேண்டுமானால் செய்யலாம் (மத் 6:27) ஏன்? உடல் வற்றுகின்றது? ஆயுசு குறைகிறது? அதற்குப் பதிலாக குற்றாளி சிறைச்சாலையிலே இரத்தம் குறைக்கப்படுகின்றான். இப்படிப்பட்டதான இரத்தம் சிந்தும் முறை, அதனாலே செய்த பாவம்-குற்றம் மன்னிக்கப்படும் முறை எப்படி வந்தது? ஆதி 9:5,6ஐ வாசியுங்கள். மனுஷன் தேவசாயலால் படைக்கப்பட்டவன். பூமியிலே பலுகிப்பெருகி நிரப்பி, பூமியைக் கீழ்ப்படுத்தி ஆண்டுக்கொள்ளவே படைக்கப்பட்டவன். பூமியிலே எவன், இரத்தமாகிய உயிரை எடுக்கிறானோ, அவன் தேவனின் திட்டத்தை மதிக்காதவன்; எதிர்க்கிறவன். அப்படிப்பட்டவன்மேல் தேவன் கோபமாய் இருக்கிறார்; பழி வாங்குவார். இதனாலே இரத்தம் சிந்த வைத்தவன் பதிலுக்கு பதிலாய் இரத்தம் சிந்தி ஆக வேண்டும். அதனால்தான் ஆபேலின் இரத்தம் சிந்தப்பட்ட உடனே தேவன் விசாரிக்க ஓடி வருகிறார். இப்படியாய் பழிவாங்கிக் கொண்டேயிருந்தால் எல்லா மனிதனும் (ஆதி 4:9,10) இரத்தம் சிந்தப்படவேண்டிய நிலைவரும்; அதன் பின் பூமியிலே தேவன் எண்ணியபடி பக்தியுள்ள சந்ததி வருவதற்கு (மல் 2:15) வாய்ப்பில்லாமல் போய்விடும். மேலும் ஒருவன் ஒரு மனிதனைக் கொன்றால், அவனுக்கு ஒருமுறை இரத்தப்பழி வாங்கலாம்; அஃதில்லாமல் இரண்டு மூன்று கொலைகள் செய்திருந்தால் மற்ற இரண்டு கொலைகளுக்கும் பழி வாங்குவது எப்படி? கொலை செய்தவன் செய்த மற்ற பாவங்களுக்கு பழிவாங்குதல் எப்படி? (ரோ 3ன்படி) எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானார்களே! இதன் முடிவுதான் என்ன?

இதனால்தான் இயேசுகிறிஸ்து மனிதனாய் வந்து, மனிதர்களின் பாவங்களுக்காய் தன் இரத்தம் சிந்தினார். அவர் ஒருமுறை இரத்தம்

சிந்தி உயிர் கொடுத்ததால் எப்படி எல்லாருடைய பாவங்களுக்கும் ஏற்றதாகும்? அவர் நம்மைப்போல் மனுஷ இரத்தத்தால் பிறந்திருந்தால் ஒருவனின் பாவத்திற்கு ஒருவேளை போதுமானதாய் இருக்கலாம்; ஜாமீன் கொடுப்பது போல. ஆனால் அவரது இரத்தம் மனுஷ இரத்தமல்ல; பரிசுத்த ஆவியானவரின் இரத்தம்; விலையேறப்பெற்ற இரத்தம். அந்த இரத்தம் சிந்துவதினாலே ஒரு மனிதனின் பாவமல்ல, கோடாகோடி மனிதர்களின் பாவங்கள் சுத்தமாக முடியும். எனவே தான் இயேசு கிறிஸ்து நம் எல்லோருக்காகவும் கன்னி வயிற்றில் பிறந்து, இரத்தம் சிந்தி ஜீவனை விட்டார். அவராலே எல்லாருடைய பாவங்களும் மன்னிக்கப்படுகின்றன. விசுவாசிக்கிற எவனும் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்கிறான். பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளாதவன் எவனும் மன்னிப்பு பெறாதவன். அவன் நித்தியமாய் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே கிடந்து, இரத்தம் சிந்தி - உயிரை விட்டுக் கொண்டே இருக்க வேண்டிவரும். அதற்கு முடிவே இல்லை. இந்த நிலை நமக்கு வேண்டாம்.

❖ ❖ ❖

# கண்களை பிசாசும் திறக்க வைக்கும்

பாஸ்டர் பால்யாங்கிசோ எழுதுகிறார்:- **“அற்புதங்களெல்லாம் ஆவி மண்டல வல்லமையினால் நடக்கிறது; இந்த மண்டலம் பொல்லாத ஆவி மண்டலம்; தேவ ஆவி மண்டலம் என்று இரண்டு பிரிவாய் இருக்கிறது. பிசாசு மண்டலம் வழியாகவும் அற்புத வல்லமை வெளிப்படலாம்”.** மத் 24:24ஐ ஆதாரமாய்க் கொள்ளுங்கள். அப்படியானால் பிசாசினால் குருடாக்கப்பட்ட மனக்கண் (1கொரி 4:4) பிசாசின் மூலமாயும் வல்லமையாய் திறக்கப்படலாம்; தேவன் மூலமாயும் திறக்கப்படலாம். பிசாசின் மூலமாய் திறக்கப்பட்டால் முடிவு நாசமும் மோசமுமாகும். அதற்கு திறவாதிருந்தாலே நலம். ஆனால் தேவன் மூலமாய் திறக்கப்பட்டால் அது சந்தோஷமும் சமாதானமுமாகும். ஏதேனிலே ஏவாளுக்கு இச்சக வார்த்தைகளை பிசாசானவன் பேசி, ஆதிப் பெற்றோர்களை ஆவிக்குரிய மரணமடையச் செய்தான்; அவர்கள் கண்களை(மனம்) குருடாக்கினான். அதினாலே இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தை பிறப்பித்தது (யாக் 1:15) தேவனின் வார்த்தையை மீறி அந்தக் கனியைப் புசித்தார்கள். தேவன் தடுத்ததைப் புசித்ததால், ஆதி 3:5ல் பிசாசு சொல்லியபடியே, அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது (ஆதி 3:7). இந்த கண் திறப்பு பிசாசின்

செயலினால் தான் என்பதால், கண்கள் திறக்கப்பட்டதும், தாங்கள் நிர்வாணி என்று உணர்த்தப்பட்டார்கள். (இப்படி உணர்த்தப்பட்டது பிசாசால்தான் என்று ஆதி 3:11ன் மூலம் அறிகிறோம்) தங்களுக்கு தாங்களே பாதுகாப்பு, விடுதலை தேடிக் கொள்ள முயன்றனர் இலைகளின் மூலமாய்; தேவனைத் தேடுகிற அறிவு மங்கிப்போயிற்று; தேவ பிரசன்னமும் அவரின் சத்தமும் கேட்க பயந்து ஒளிந்து கொண்டார்கள்; கர்த்தரின் சந்நிதியை விட்டே விலகினர். இதுதான் பிசாசின் கண்திறப்பு. தேவனின் மனக்கண் திறப்போ முற்றிலும் வித்தியாசமானது. உயிர்த்தெழுந்த இயேசுவைப் பார்த்தபிறகும் விசுவாசியாமல் மீண்டும் பழைய மீன்பிடி வாழ்க்கைக்கு திரும்பினர்; காலையிலே இயேசுவின் அற்புதத்தால் மீன்கள் கிடைத்தும் குருடாகவே இருந்தனர், உணர்வில்லை. அவர்களின் நிலை நிர்வாணநிலை. எனவே தான், இயேசு என்று அறிந்த உடனே இடையிலே துணியைக் கட்டிக்கொண்டு கடலிலே குதித்தான் பேதுரு (யோ 21:7) தேடி வந்த இயேசுவை நாடிப்போக மனமில்லை; மனம் குருடாகிவிட்டது. ஆனால் மனக்கண் திறக்கும் இயேசுவோ அவர்களை விடவில்லை. அவர்களோடு அப்பம் புசித்து அவர்கள் கண்களையே திறந்து வைத்தார் (லூக் 24:45) அதனாலே அவர்கள் தேவ வாக்கியங்களை அறிந்து கொண்டனர். இயேசுவை அறிந்து விசுவாசித்தனர். மிகுந்த சந்தோஷம் வந்தது; நாள்தோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்தனர் (லூக் 24:52,53) அதற்குப் பின்னாலுள்ள நாட்களில் கர்த்தருக்கு சாட்சியாய் எழும்பிப் பிரகாசித்தார்கள்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! உன்னை நீயே பரிசோதித்துப்பார். உன் மனக்கண் தேவனால் தேவ ஆவியால் திறக்கப்பட்டதா அல்லது பிசாசினால் - பொல்லாத ஆவி மண்டலத்தால் திறக்கப்பட்டதா? இன்றே தீர்மானி. நீ ஒளியாம், தேவனால் மட்டுமே ஒளி பெற வேண்டும். ஒளியின் தூதனின் வேஷத்தை உணர்ந்து கொள். சிந்தித்து செயல்படு! கெர்ச்சிக்கிற சிங்கமாய் நிற்கிறான் பிசாசு! காலம் கடைசி காலம்! ஏமாந்து போகாதே! கள்ளக் கிறிஸ்துகளும் கள்ள தீர்க்கதரிசிகளும் சுற்றித்திரியும் காலம். அதுவும் கிறிஸ்தவ சபைகளுக்குள்ளே! தேவன் தாமே நம் மனக் கண்களை திறந்து பிரகாசமாக்கட்டும்!

❖ ❖ ❖

# தேவனின் மன்னிப்பும் மனிதனின் மன்னிப்பும்

வருடா வருடம் லெந்து-தபசு நாட்களை ஆசரித்து, Good Friday மற்றும் ஈஸ்டர் கொண்டாடும் அன்பர்களே! Good Friday மற்றும் ஈஸ்டர் ஆராதனை மட்டும் நடத்தப்போகும் சகோதரர்களே! தேவ மன்னிப்புக்கும் மனித மன்னிப்புக்கும் வித்தியாசம் தெரியுமா? மனிதன் செய்கின்ற பாவங்களை - குற்றங்களை மனிதனோ, மனித அரசாங்கமோ மன்னிக்கின்றனர் என்றால், அது அவர்களுக்குள்ள தண்டனையிலிருந்து விடுவிக்கிற காரியமாயிருக்கிறது. வருஷந்தோறும் தேசிய விடுமுறை நாட்களில் பல சிறைக் கைதிகள் விடுவிக்கப்படுகின்றார்கள் என்றால், அவர்கள் செய்த பாவத்துக்குண்டான தண்டனையினின்று விடுவிக்கப் படுகின்றார்கள் என்று பொருள். அப்படியானால் அனுபவிக்க வேண்டிய மீதி தண்டனையை யார் அனுபவிப்பது? அது என்னவாயிற்று? தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டாலும் அவன் செய்த பாவம் மறக்கப்படுகிறதா? கொலைகாரன், கொள்ளைக்காரன் என்றுதானே உலகம் சொல்லிக் கொண்டே இருக்கும். தண்டனை குறைக்கப்பட்டு விடுதலையாக்கபட்டதாலே, அவன் முற்றிலும் திருந்தி நல்லவனாவானா? தேவனின் மன்னிப்பை யோசித்துப் பாருங்கள். நாம் செய்த பாவத்தின் தண்டனையினின்று விடுவிக்கப்பட்டாலும், நம்முடைய பாவத்தின் தண்டனையை இயேசு ஏற்றுக் கொண்டார். எனவே ஒருக்காலும் அந்த தண்டனை மறுடியும் வராது. நமது பாவ தண்டனையிலிருந்து மட்டும் நமக்கு விடுதலையில்லை, நம்முடைய பாவங்களையெல்லாம் தேவன் சுமக்கிறார்; அவைகளை மறக்கிறார்; மன்னிக்கிறார்; ஒருநாளும் நினைப்பதே இல்லை. கிழக்குக்கும் மேற்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் ஆக்கிவிடுகின்றார். அல்லேலூயா! இனி நம்மேல் பாவம் ஒரு சிறு துளி கூட இல்லை. இனி நாம் பாவியல்ல. அல்லேலூயா! தேவனின் பார்வையில் கொலைக்காரனோ, குடிக்காரனோ, கொள்ளைக்காரனோ நாம் அல்ல. கர்த்தருக்கே மகிமை. இனி நாம் நீதிமான் (1கொரி 6:11; ரோ 3:23).

தேவன் நம்மை மன்னித்ததாலே, நமக்கு நீதிமான் என்று பட்டத்தை கொடுக்கிறார். தகுதியில்லாத நமக்கு இந்தப் பட்டம் கொடுக்கிறார். ஏன்? அந்தப் பட்டத்தினிமித்தம் நாம் நீதிமானாய் வாழ்வோம் என்ற விருப்பத்தில்தான். ஆக தேவனின் மன்னிப்பால் நம் தண்டனை மாறுகிறது; அதன் தண்டனையை தேவனே அனுபவித்தார்; பாவம் மறக்கப்படுகின்றது; ஒருக்காலும் நினைப்பதே

இல்லை. நீதிமான் என்ற பட்டம் வேறு! “இனி நாம் பாவியல்ல; மறுபடி பிறந்து விட்டோம்” இப்படிப்பட்டதான தேவ மன்னிப்பைக் கொடுத்த தேவ காரியத்தை **நினைக்காமல் வீணே, சடங்காச்சாரமாய், பண்டிகைகளை ஆசரித்து என்ன பயன்?** யோசிப்போம்! பண்டிகைக் கிறிஸ்தவர்களாய் மாற மாட்டோம் என தீர்மானிப்போம். தேவ ஆசீர்வாதம் நம்மோடு என்றும் இருப்பதாக!

❖ ❖ ❖

# ஈசோப்பினால் சுத்திகரிப்பு

ஈசோப்பு என்பது சுவரில் முளைக்கிற சுமார் ஒன்றரை அடி உயரமுள்ள சிறிய பூண்டு (ரோ 4:33). நியாயப்பிரமாணப்படி இரத்தத்தினால் சுத்திகரிப்பதற்கும், தண்ணீரினால் சுத்திகரிப்பதற்கும் இந்த ஈசோப்பு உபயோகப்படுத்தப்படுகின்றது. லேவி 14:1-7 மற்றும் எண் 19:1-19 வசனங்களை வாசியுங்கள். தாவீது பத்சபாளுடன் பாவம் செய்தபின்னே தன்னை ஈசோப்பினால் சுத்திகரியும் என்று தேவனிடம் கதறி அழுகிறான் (சங் 51:7). இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கும்போது அவர் மரித்துவிட்டாரா என்பதை அறிய போர்ச்சேவகன் ஈட்டியினால் அவர் விலாவைக் குத்தினான். உடனே இரத்தமும் தண்ணீரும் வெளிப்பட்டது. (யோ 19:34) இப்படியே தேவன் நமது பாவமன்னிப்பிற்காய் தன் இரத்தத்தையே சிந்தினார் (மத் 26:28) See 1யோவா 5:6-8. இந்த இரத்தமும் தண்ணீரும் நியாயப்பிரமாண ஈசோப்பினால் செய்யப்படுகின்ற நிழலாட்ட சுத்திகரிப்பின் நிஜம். ஈசோப்பின் மூலமாய், ஒரு சாதாரண பூண்டின் மூலமாய் இரத்தத்தாலும், தண்ணீரிலும் சுத்திகரிப்பு அன்று. இன்றோ சிலுவையிலிருந்து வெளிப்பட்ட இயேசுவின் இரத்தத்தாலும் தண்ணீராலும் சுத்திகரிப்பு. எப்படி? தேவனை விசுவாசியாத ஒரு பாவி, கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு, இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கழுவப்படுகிறான்; சுத்திகரிக்கபடுகின்றான்; (மத் 26:28; எபி 1:3; 9:12; 10:14) இதைத்தான் நாம் இரட்சிப்பு என்கின்றோம் (ரோ 10:9,10; எபே 2:8). மற்றபடி சபையார்-பரிசுத்தவான்கள் பாவங்கள் செய்யும்பொழுது, அவர்கள் தண்ணீரால் கழுவப்படுகின்றனர்; சுத்திகரிக்கப்படுகின்றனர். அதாவது ஆண்டவராகிய தேவனுடைய வார்த்தையால் சுத்திகரிப்பு. இதற்காகத்தான் 1யோ 1:7-10ல் சொல்லப்பட்ட பாவ அறிக்கை. இந்த இரண்டு சுத்திகரிப்புக்காகவும் தான் இயேசு தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார் (எபே 5:25-26).

ஆசரிப்பு கூடாரத்தைப் பாருங்கள். வாசலுக்கு முன்பாக தகன பலிபீடம் இருக்கிறது. அதையும் தாண்டி, கழுவுகிறதற்கு தொட்டி இருக்கிறது. (See யாத் 40:6-7; 30:17-21) முதலில் நிழலாட்டமான பலிபீடம், இதைத் தாண்டித்தான் தேவனிடம் சேர முடியும். இரத்தத்தால் கழுவப்பட்டு, இரட்சிக்கப்பட்டுத்தான் சேரமுடியும். அதுமட்டும் போதாது. இரட்சிக்கப்பட்டவன், ஏதாவது மீறுதலுக்குட்பட்டிருக்கும்போது, தேவ தொடர்பு கூடி வராது. எனவே தண்ணீர்த் தொட்டியில், அதாவது தேவ வசனத்தால் விசுவாசி கழுவப்பட்டே தேவனோடு இணைய வேண்டும். ஈசோப்பினால் சுத்திகரிப்பின் ஆவிக்குரிய அர்த்தம் தான் என்னே! அல்லேலூயா! (இந்த ஈசோப்பு, மனிதனாய்ப் பிறந்த தேவனுக்கு அடையாளம் என அறியலாம்)

❖ ❖ ❖

# எலியாவின் ஆவி எலிசாவுக்கா?

எலியா எடுத்து கொள்ளப்படும்போது, அவனின் ஆவி எலிசாவுக்கு இரட்டத்தனை யாய் கிடைத்தது என்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் போதிக்கிறார்கள்; நம்புகிறார்கள். இது சரிதானா? பரிசுத்த ஆவியானவர் சொல்லிக் கொடுப்பார். அல்லேலூயா! எரிகோவில் பார்த்துக்கொண்டு நின்ற தீர்க்கதரிசிகளின் புத்திரர் சொன்ன அதே கருத்தைத்தான் இன்றைய (2ராஜா 2:15) கிறிஸ்தவ வட்டாரம் நம்புகின்றது.

வேதத்தின்படி மனிதன் மரித்த உடனே சரீரம் மண்ணுக்குப் போகிறது; ஆவி மேலே போகின்றது (பிர 12:7). இயேசு மரிக்கும் பொழுது, கூட இருந்த கள்ளனின் ஆவியும், ஆத்மாவும் பரதீசுக்குப் போனது என்று அறிவோம் (லூக் 23:43) இயேசு மரித்த பின்னே அவருடைய ஆவி பாதாளம் போனது; மூன்றாம் நாள் அங்கிருந்து உயிர்த்தெழுந்தார். இதுதான் கிறிஸ்தவர்களின் விசுவாசப்பிரமாணம். லாசரு - ஐஸ்வரியவான் காரியத்தில் மரித்த லாசருவின் ஆவி ஆபிரகாம் மடிக்கும் ஐஸ்வரியவானின் ஆவி பாதாளத்திற்கும் போனதாய் அறிகிறோம். தேகத்தைவிட்டுப் பிரிந்த உடனே ஆவியான உள்ளான நீதிமான் தேவனோடே தான் இருப்பான் என்று பவுல் கூறுவதை பிலி 1:23ன்படி அறிகிறோம். பேதுரு கூட இந்த சரீரத்தை விட்டு பிரிந்து போகப்போகிறார் என்று 2பேது 1:13ன் மூலமாய் அறிகிறோம். ஆக, ஒருவருடைய சரீரத்தைவிட்டு ஆவி பிரிந்தால், நிச்சயம் அது மற்றவர்களின் சரீரத்திற்குள் புகாது; புகவும் தேவன் நிர்ணயிக்கவில்லை என அறியலாம். அவனவனுடைய ஆவி, ஆத்மா,

சரீரம் மூன்றின் நிலையை வைத்தே தேவனைச் சந்திக்க முடியும் (1தெச 5:23). எனவே அந்த ஆவி அடுத்தவனுடைய சரீரத்திற்குள் புகுவதற்கு ஏதுவில்லை. அப்படிப் புகுந்தாலும் புதியவனுக்கு இரண்டு ஆவி இருக்குமா? தற்காலத்தில் பிசாசு பிடித்தவர்கள் சொல்லும் ஏமாற்றுக் கதைபோல் ஆகிவிடும். எலியாவின் ஆவி இரட்டத்தனையாய் எலிசாவுக்கு வந்ததென்றால், எடுத்துக் கொள்ளப்பட்ட எலியாவிடம் ஆவி இல்லாமல் போயிற்றே? ஆவியில்லாமல் ஆத்மா மட்டும்தான் எலியாவாக பரதீசில் உள்ளதா? ஆவியும் ஆத்மாவும் பிரிக்க முடியாதே! பின்பு எப்படி இது நடக்கும்? (எபி 4:12). இன்னொரு காரியம் பாருங்கள். லூக் 1:17ன்படி எலியாவின் ஆவி யோவான் ஸ்நானனிடம் வந்து விட்டதா? அப்படியானால் புற மதத்தார் சொல்லுகிறபடி ஒருவருடைய ஆவி கூடுவிட்டுப் கூடு பாயுமா? மறுரூபமலையிலே எலியாவும், மோசேயும், இயேசுவும் கூடாரம் போட்டு இருந்தார்களே (மத் 17) எலியாவுக்கு ஆவி எப்படி வந்தது? எலிசாவிடமிருந்து திரும்பி வந்ததா?

மல் 2:15ஐ வாசியுங்கள். ஒருவனையல்லவா படைத்தார்? ஏன் ஒருவனைப் படைத்தார்? **ஆவி அவருக்குள் பரிபூரணமாய் இருந்ததே!** பல ஆதாம்களையும் ஏவாள்களையும் படைக்க அவரிடத்தில் வல்லமை இருந்ததே! **இந்த வசனத்தில் சொல்லப்பட்டது வெறும் ஆவியை அல்ல. ஆவியின் வல்லமையை;** மகிமையை. இதே கருத்தில்தான் எலியாவின் ஆவி எலிசாவின் மேல் இரட்டத்தனையாய் வந்ததென்றால், எலியாவின் ஆவியின் வல்லமை, வரம், மகிமை, எலிசாவின் மேல் இரட்டத்தனையாய் தேவன் பொழியச் செய்தார். இதை 2ராஜா 2:9ல் எலிசாவே கேட்பதைப் பாருங்கள். எலியாவிலுள்ள வரம் இரட்டிப்பாய் கிடைக்க எலிசா வேண்டுகின்றான்; ஆவியை அல்ல. அவன் கேட்டபடி கிடைத்தது. அல்லேலூயா!

❖ ❖ ❖

# எது சபை?

**"...நீ பேதுருவாய் இருக்கிறாய்; இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்..."** மத் 16:18.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தான் சபையைக் கட்டினார். இயேசு பிறந்து கட்டுவதற்கு முன்பெல்லாம் இருந்த தேவ ஜனங்களுக்கு "சர்ச்" (Church) என்று பெயரில்லை; "Assembly, Congregation" என்று தான் இருந்தது. இந்த சபை கட்டப்படும் என்ற

காரியம், மணவாட்டிசபை உருவாகும் என்ற தீர்க்கதரிசனம் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் ஒருவருக்குமே வெளிப்படுத்தப்படவில்லை, இந்த இரகசியம் பவுலுக்கு மட்டுமே வெளிப்படுத்தப்பட்டது. எபே 2:19 முதல் 3:6வரை உள்ள வசனங்கள் இதை தெளிவாக்குகின்றன. இப்படி மறைத்து வைக்கப்பட்டு, பவுலால் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறதென்றால் அது எவ்வளவு முக்கியமானது; உன்னதமானது; மகத்துவமானது என்று புரிகிறதல்லவா! இதற்கு நிழலாட்டம் தான், ஏவாளைப் படைத்தார், அப்படித் தான் நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை நமக்காக மரணத்துக்கு ஒப்புக் கொடுத்ததன் நிமித்தம் மணவாட்டியாக சபை வந்தது., அல்லேலூயா! இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்து எழாவிட்டால், மணவாட்டி சபையே இராது.

இந்த சபை எதன் மேல் கட்டப்பட்டது? இயேசுவின் மேல் கட்டப்பட்டது. மூலைக்கல் அவர்தான். ஆகாதென்று வீடு கட்டுகிறவர்கள் தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல் ஆயிற்று (எபே 20:20; சங் 118:22; 1பேது 2:4-7). எப்பொழுது இயேசு மூலைக்கல்லானார்? இயேசுவாகிய கல் தள்ளப்பட்டபின்; அதாவது மரித்த பின்; அதாவது மரித்த இயேசு உயிர்த்து எழுந்த பின். மத் 16:18ல் சொல்லிய தீர்க்கதரிசனத்தை அப்போதுதான் நிறைவேற்றி காட்டினார். கர்த்தருக்குத் தோத்திரம்! இந்த சபை பெந்தகொஸ்தே நாள் முதல் (அப் 2) இரகசிய வருகை வரை (1கொரி 15:51) இருக்கும். பலர், வசன வார்த்தைகளை வைத்து, கிறிஸ்துவின் சபை பேதுருவின் மேல் கட்டப்பட்டதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். வசன வார்த்தையை மட்டும் கணிக்கக் கூடிய தவறான காரியம் ஒன்றை மட்டும் ஆராய்வோம். 1பேது 5:8ன்படி நமக்குச் சத்துரு பிசாசு. இதை "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்" என்ற மத் 5:44ம் வார்த்தையோடு இணைத்தால், சத்துருவாகிய பிசாசை சிநேகிக்க வேண்டுமல்லவா? உண்மை அப்படியல்லவே! இங்கே சொல்லப்பட்ட சத்துரு உலகப் பிரகாரமான மனித எதிரிகள்.

"நீ பேதுருவாய் இருக்கிறாய்" மூல கிரேக்க பாஷையிலே பேதுரு என்பதை "Petros- ஒரு கல்" என்று போடப்பட்டுள்ளது. "இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்" - மூல பாஷையிலே இந்தக் கல் என்பதை, 'Petra - ஒரு பெரிய பாறை என்று போடப்பட்டுள்ளது. இந்தப் பெரிய பாறையின் மீது தான் கிறிஸ்துவின் சபை கட்டப்பட்டதே ஒழிய, கல்லின் மேல் கட்டப்படவில்லை என்பதை பேதுருவும் 1பேது 2:4-8ல் விளக்குகிறார். சபைக்கு அஸ்திபாரம் இயேசுவே என்று பவுலும் 1கொரி 3:11ல் சொல்கிறார்.

இப்படி கிறிஸ்துவின் மேல் கிறிஸ்துவால் கட்டப்பட்ட சபையில் அங்கத்தினர்கள் யார்? 1கொரி 12:12-13ன் படி, ஒரே சரீரத்திற்குள்ளாக

ஞானஸ்நானம் பண்ணப்பட்டு ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்ட பிள்ளைகள் தான் உறுப்பினர்கள். இந்த சபைக்கு தலைவர் யார்? கிறிஸ்து தான் (எபே 1:22-33). தேவன் தங்கும் ஆலயம் இந்த சபைதான் (எபே 2:21-22; 1கொரி 3:16) கிறிஸ்துவோட ஒரே சரீரமாயிருக்கிறது இந்த சபை (எபே 5:30-31). இப்பபடிப்பட்ட இலக்கணங்களை உடைய இந்த சபைதான் கற்புள்ள கன்னிகையாக, கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்காய் நியமிக்கப்பட்டிருக்கிறது.

இந்த சபை, இந்தக் காலத்திலே திரளாய்ப் பரவிக் கிடைக்கும் உலகப் பெயர்களுள்ள எந்த சபை? இது அநேகருடைய கேள்வி! வானவில் சபையா, கிருபாசனமா, A.G, C.P.M., I.P.M., I.P.C., திருத்துவ பூரண சுவிசேஷ சபையா, A.C.Aவா, கிறிஸ்துவின் சபையா? S.D.A.வா எது? இந்த சொல்லப்பட்ட சபைகளுக்கெல்லாம் தலைவர் யார்? நிச்சயமாய் உலகப் பிரகார மனிதர் தானே! கிறிஸ்து அல்லவே! இந்த சபைகளை நடத்திச் செல்வது யார்? நிச்சயமாய் உலகப் பிரகாரமான மனிதர்தானே! ஆனால் ஆவிக்குரிய கண்ணோட்டத்தோடு பார்த்தால், இப்படிப்பட்ட சபைகளை ஸ்தாபித்ததோ, பெயரிட்டதோ, நடத்திச் செல்வதோ ஆவிக்குரிய ரீதியில் கிறிஸ்து என்று ஏற்றுக் கொள்ளும்போது, ஆவிக்குரிய சபை என்ற ஒன்றே ஒன்று, ஆவிக்குரிய கிறிஸ்துவின் சபை என்ற பெயரிலே இயங்குகின்றது என்று உணரலாம் அல்லவா! அல்லேலூயா! மனிதன் ஸ்தாபித்து, பேரிட்ட சபையை அழைக்க இயேசு வரப்போவதில்லை. அவர் ஸ்தாபித்த ஆவிக்குரிய சபையை மட்டுமே அழைக்க வருகிறார். மேலே சொல்லப்பட்ட இலக்கண வரம்புகளை உடைய, எபி 6:1,2ல் சொல்லப்பட்ட அடிப்படை சத்தியங் களை உடைய சபைகளில் உள்ள தேவனுடைய பிள்ளைகளைத்தான் தேவன் அழைப்பார் என்பது நிச்சயமே! சபைப் பெயர் முக்கியமில்லை.

அப்படியென்றால், “கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்” (ரோ 16:16) என்ற வசனத்தால் அறிவது என்ன? ரோமாபுரியிலுள்ள ஆவிக்குரிய ரீதியில் கிறிஸ்துவால் கட்டப்பட்ட சபையில் உள்ள பரிசுத்தவான்கள் தான் இந்த கிறிஸ்துவின் சபையார்! மற்றபடி கிறிஸ்துவின் சபை என்ற பெயர் வைத்தால்தான் கிறிஸ்துவின் சபை என்றல்ல; ஸ்தாபித்து (ஆவிக்குரிய சபையை) வைத்தவர் இயேசு; உலக சபைகள் எல்லாமே மனிதர்களால் ஸ்தாபித்து பெயர் வைக்கப்பட்டு அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டவை.

1. வெளி 2,3 அதிகாரங்களினாலே சொல்லப்பட்ட ஏழு சபைகளிலும், ஒன்றுக்குக் கூட ‘கிறிஸ்துவின் சபை’ என்று பெயரில்லையே! அப்படியானால், அவைகள் ஒன்றும் கிறிஸ்துவின் சபை இல்லையா? வெளி 3:7-13ல் சொல்லப்பட்ட நல்ல சபையாகிய

பிலதெல்பியா சபை இயேசுவின் வருகையில் செல்லும் என்ற வார்த்தை தவறா?

2. மேலே சொன்ன சபைகள் ஊர்களை வைத்து அழைக்கப் படுகின்றன; ஆனால் அவைகளின் பெயர் கிறிஸ்துவின் சபைதான் என்போருக்கு இந்த விளக்கம்;

a. கொரிந்து பட்டணத்திலே இருந்த கொரிந்திய சபைக்கு "தேவனுடைய சபை (Church of God)" என்று பவுல் அழைக்கிறாரே. ஏன்? (1கொரி 1:2, 10:33, 2கொரி 1:1) அந்த சபை கிறிஸ்துவின் சபை என்ற பெயரில் இல்லையே?

b. தீமோத்தேயுவுக்கு எழுதும்போது "ஜீவனுள்ள தேவனுடைய சபை (Church of the Living God)" என்று எழுதுகிறாரே. ஏன்? (தீமோ 3:15) அது கிறிஸ்துவின் சபை என்ற பெயரில் இல்லையே?

c. தெசலோனிக்கேயருக்கு பவுல் எழுதும் போது, "உங்களைக் குறித்து தேவனுடைய சபைகளில் மேன்மை பாராட்டுகிறோம்" (2தெச 1:4) என்று கூறுகிறாரே. ஏன்? "கிறிஸ்துவின் சபைகளிலும்" என்று சொல்லவில்லை.

சபைப் பெயர் நம்மை இரட்சிக்காது; பரலோகம் கொண்டு போகாது. சபையின் சத்தியமும் நடக்கையுமே நம்மைப் பரலோகம் கொண்டு போகும். இப்படியாய் சபைப் பெயர்களை வைத்துக் கொண்டு கடைசி காலத்தில் பெருத்த கள்ள உபதேசங்கள் வரும்; ஜாக்கிரதையாய் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்று எண்ணித்தான், தன்மேல் கட்டப்பட்ட சபைக்கு ஒரு குறிப்பிட்ட பெயரை வைக்காமல், ஆவிக்குரிய சபையாக ஸ்தாபித்தாரே என்று அறிந்து உவகை கொள்ளலாம்.

இந்த, கிறிஸ்து உண்டாக்கிய, ஆவிக்குரிய சபையிலே, ஏதோ ஒரு அவயத்தின் பேரிலே உத்தமாய் இருந்து, "தேவனுடைய கற்பனைகளையும், இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்கிறவர்களாகிய பரிசுத்தவான்களாய்த்" (வெளி 14:12) திகழ்ந்து. இயேசு கிறிஸ்துவின் மகிமை பொருந்திய இரகசிய வருகையிலே பங்கேற்க ஆயத்தமாகுங்கள்! ஆயத்தமாக்குங்கள்!

❖ ❖ ❖

# வேதம் சொல்லும் பாலியல் (Sex)

Sex என்ற உடனே பலருக்கு படிக்கவே கஷ்டமாய் இருக்கிறது. இது பாவ வார்த்தை என்ற உணர்வு வருகிறது. காரணம்? அவர்களுக்குப் போதிக்கப்பட்டது அப்படி; வேதம் சொல்வதைப் பாருங்கள். "தேவன் ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார் (ஆதி 1:27)" மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். தேவன் (ஆதி 2:18) இரண்டு வித்தியாசமான பாலியல்களை ஆணும் பெண்ணுமாய் சிருஷ்டித்தார். He created us as sexual beings (to enjoy sex). Sex என்றாலே இணைந்திருக்கும் பாலியல் அமைப்பு என்று பொருள். இந்த Sex என்பது, சரீரப் பிரகாரமாய் அனுபவிக்கமட்டுமல்ல; பக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிக்குத்தான் (மல் 2:15). Sex is meant to be a part of total relationship; that is practical; emotional; intellectual and physical. இதைக் குறித்து இயேசு சொல்வதைப் பாருங்கள். "ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (மத் 19:4,5) ஆக Sex-உடலுறவு (Inter-course) என்பது தேவனுடைய பார்வையில் பாவமில்லை; உடலுறவுக்காகவே ஆணும் பெண்ணுமாய் சிருஷ்டித்திருக்கிறார். ஆதி 1:28ல் தேவன் கொடுத்த கட்டளையே பலுகி பெருகி பூமியை நிரப்புங்கள் என்பதாகும். பவுல் 1கொரி 7:5ல் கூறுவதைப் பாருங்கள். **"உபவாசத்திற்கும், ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரை விட்டு ஒருவரை பிரியாதிருங்கள்."** "ஆதாமும் ஏவாளும் ஏதேனில் இருக்கும் வரைக்கும் உடலுறவு இல்லை; குழந்தை இல்லை; பாவம் செய்த பின்தான் காயின் பிறந்தான்" என்று சொல்லி தேவனுடைய சமூகத்தில் உடலுறவு கூடாது என்று வாதிடுவோரும் உண்டு. அப்படியானால் ஆணும் பெண்ணும் படைப்புத் தேவையில்லை. ஆதி 1:28 மற்றும் 2:24 தேவையில்லை. ஏனோக்கை பாருங்கள். அவன் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமற்போனான், தேவன் அவனை எடுத்துக் கொண்டார். இப்படிப்பட்ட ஏனோக்கு 300 வருஷம் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றானாம் (ஆதி 5:22). அப்படியானால் நாமும் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டே உடலுறவின் மூலம் பிள்ளைகளைப் பெறுவது தவறில்லை; பாவமுமில்லை. "என் தாய்

என்னைப் பாவத்தில் கர்ப்பம் தரித்தாள்" என்று தாவீது பாடியதால் உடலுறவு பாவமென்று போதிக்கின்றவர்கள் உண்டு. அப்படியானால் சபைப் போதகர்களே, ஏன் பாவத்திற்கு வழிவகுக்கும் திருமணத்தை நடத்தி வைக்கிறீர்கள்? ஏதேனில் தேவன் ஆதாமையும் ஏவாளையும் இணைத்தது பாவகாரியமா? கானாவூர் கல்யாணம் பாவ காரியமானால் இயேசு போயிருக்கமாட்டாரே! ஆதாம் - ஏவாள் செய்த பாவ சாயலில் தான், அந்தப் பாவத்தில்தான் தாவீது மட்டுமல்ல; நாமெல்லாரும் பிறந்தோம் என்பதை முதலில் அறியுங்கள். "வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நல்லது" என்ற பவுலின் வார்த்தையை தியானித்தாயா?

ஒரு பக்தியுள்ள சந்ததி உருவாக வேண்டுமென்று தேவன் விரும்பியதால் இந்த பாலியல் Sexக்கு தேவன் ஒரு முறையை உருவாக்கியிருக்கிறார். இந்த பாலியல் என்பது திருமணத்திற்குத்தான் இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். எபி 13:4ஐ ஆங்கிலத்தில் வாசிப்போம் - 'Marriage should be honoured by all and the marriage bed kept pure, for God will Judge the adulterer and all the sexually immoral' யூதா மகன் ஓணான் விவாக மஞ்சத்தை பரிசுத்தமாய் வைக்காததால் தேவ கோபாக்கினையைப் பாருங்கள் (ஆதி 38:8-10) விவாக மஞ்சம் - பாலியல் கிரியைகள் பரிசுத்தமில்லாமல் போனால் கீழ்க்கண்ட காரியங்கள் நடக்கும் என்றும், இப்படிப்பட்ட காரியங்களுக்கு தேவன் ஆக்கினைத்தீர்ப்பு அளிக்கிறார் என்றும் வேதம் திட்டவட்டமாய் தெரிவிக்கிறது.

1. <u>விபச்சாரம்</u> **(Adultery):-** திருமணமான ஆணோ, பெண்ணோ, தன்னால் திருமணமாகாத மற்றவர்களுடன் உடலுறவு கொள்வது விபச்சாரம். இதை நியாயப்பிரமாணத்திலேயே தேவன் அதிகமாய்க் கண்டிக்கிறார் (யாத் 20:14) இப்படிப்பட்டவர்களுக்கு அன்றைக்கே கல்லெறிந்து கொல்ல சட்டம் இருந்தது (யோ 8:4-5). தாவீது பத்சபாளுடன் செய்த காரியம் இந்தப் பிரிவில் தான் அடங்கும். இந்தச் செய்தியைப் படிக்கும் சகோதரனே! சகோதரியே! இப்படிப்பட்ட காரியம் இதுவரை உனக்குள் இருந்தால் உடனடியாக தாவீதைப் போல் மனந்திரும்பி பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்; விபச்சார ஸ்திரிக்கு இயேசு சொன்ன வார்த்தையாகிய "போ! இனி பாவம் செய்யாதே" என்பது உனக்குள் ஒலித்துக் கொண்டேயிருக்கட்டும். பொருளாசையே, விபச்சாரம் என்று வேதம் சொல்கின்றது. விக்ரக ஆராதனையும், விபச்சாரம் என்று வேதம் சொல்கின்றது; அந்நிய நுகத்தோடு இரட்சிக்கப்படாத சபையிலுள்ளோரோடு - பிணைக்கப்படுவது,

விபச்சாரம் என்று வேதம் சொல்கின்றது. இவைகளிலிருந்து விலகு! இவைகளைக் கண்டிக்காமல் துணை போகிற போதகர்களே இவைகளிலிருந்து விலகுங்கள்! ஆக்கினைத்தீர்ப்பு காத்திருக்கிறது. மத் 7:22ல் உள்ளவர்களைப் போல் ஆகாதீர்.

2. <u>வேசித்தனம்</u> **(Fornication)**:- திருமணமாகாதவர்கள் மத்தியில் நடக்கும் உடலுறவு விரகதாபம். இதற்கு எதிர்த்து நின்று தேவனுடைய சித்தத்தைச் செய்த ஆரோனின் மகன் பினகாஸை நினைத்துக் கொள்ளுங்கள் (எண் 25). இது புதிய ஏற்பாட்டிலும் அப்போஸ்தலர்களால் தீர்மானிக்கப்பட்ட சட்டமாயிருக்கிறது. (அப் 15:20) காதல் செய்கிறேன் என்று சொல்லி இந்தக் காரியத்தில் அறியாமலே இறங்கிவிடும் வாலிபர்களுக்காக இதை எழுதகின்றேன். "வேதம் அறிவுறுத்தும் காதல்" என்ற தலைப்பில் ஏற்கெனவே எழுதப்பட்டதை மறுபடியும் வாசியுங்கள் Love is good; but lust is worst. 2கொரி 11:2ன்படி நாம் கற்புள்ளவர்களாக திருமணத்திற்கு தயாராய் நிற்க வேண்டும். "Sexual desire is like an inner fire" (நீதி 6:27-29) வெளித்தீயை சுலபமாய் அணைக்க முடியும். ஆனால் உள்தீ யாருக்குமே தெரியாமலே இருந்து அனைத்தையும் அழித்துவிடும். இதனால் தேவன் சொல்லுகிறார். "சுய கட்டுப்பாட்டுடன் பரிசுத்தமாய் வாழ்" (1பேது 1:13-15).

3. <u>சுயப்புணர்ச்சி</u> **(Masturbation)**:- இது சுயக்கட்டுப்பாட்டுக்கு ஒருவழி என்று சொல்லி இதை தடை பண்ணாமல் வளரவிடுபவர்களும் உண்டு. ஆரம்பத்தில் இது சுயக்கட்டுப்பாடு போல தெரியும். ஆனால் அது உன்னை பிற்பாடு ஆள ஆரம்பிக்கும்; பிறகு உன்னால் அதைக் கட்டுப்படுத்தவே முடியாத நிலை ஏற்படும். திருமணமான பிறகும் கூட, அழகான மனைவி இருந்தும் கூட அது உன்னைத் தொடர்ந்து அடிமைப்படுத்தும். இதனால் தேவாலயமாகிய உன் சரீரம் கெடுகின்றது. மேலும் பக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிக்காய் தேவன் கொடுத்த விந்தை (Semen) நீ வீணாக்குவதால் தேவ சித்தத்திற்கு விரோதியாகிறாய். மறுபடியும் யூதாமகன் ஓணானை நினைத்துக்கொள். மத் 5:27-28ன்படி Masturbation accompanys sexual fantasis and impure thoughts. 1கொரி 6:12; தீத் 2:11-12 வசனங்களை வாசியுங்கள். சில வாலிபருக்கு கனவிலோ, தானாகவோ விந்து வெளிப்படலாம். அப்படிப்பட்டவர்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், தேவன் அளித்த விந்து அவர்

சித்தப்படியே செயலாற்ற வேண்டுமென்று கர்த்தரிடத்தில் ஜெபியுங்கள். அவர் நிச்சயம் மாற்றுவார். தேவனால் கூடாதது ஒன்றுமில்லை.

4. <u>சோதோமி</u> **(Sodomy; Homosex; Lesbianism)**:- இது ஆணோடு ஆண், பெண்ணோடு பெண் விரகதாபத்தோடு இன்பம் பெறுவது. சோதோம் கொமராவில் தலைதூக்கி நின்ற காரியம் இதுதான். லோத்தின் வீட்டிற்கு வந்த இரண்டு மனுஷரை அறிய வேண்டும் சயனிக்க வேண்டும் என்று வாலிபர் முதல் கிழவர் மட்டும் இராத்திரியிலே வந்தார்கள். அது இந்தப் பாவத்திற்க்குத்தான். (ஆதி 19:4,6) 'இது மகா அக்கிரமம்; அதிலும் விபச்சாரம் வேசித்தனத்திலும் மிகவும் பயங்கரம்' என்று லோத்து சொன்னதை வாசியுங்கள். இந்தக் காரியம் ஆண்கள் மத்தியில் அதிகமாய் பரவியுள்ளது. பெண்கள் மத்தியிலும் வளர்ந்து வருகிறது. இது பலுகி பெருகி பூமியை நிரப்புங்கள் என்ற தேவ சித்தத்திற்கு மிகவும் விரோதமானது. ஆண் -பெண்ணோடு இருக்க வேண்டிய தேவனால் நிர்ணயிக்கப்பட்ட உடலுறவு மதியீனமாக்கப்படுகின்றது. லேவி 18:22-23ஐ வாசியுங்கள். See ரோ 1:26-27; 1கொரி 6:9-10.

பாலியல் இச்சையினால் வருகிற போராட்டம் உண்மையிலேயே நமது சிந்தனையிலே - அறிவிலே, ஆத்மாவிலே எழும்புகின்ற போராட்டமாகும். (2கொரி 10:3-5) எனவேதான் நமது மனம் மறுரூபமாக வேண்டும் தேவ வார்த்தையினால் (ரோ 12:1). நமது ஆவியிலே வசனம் எழுதப்படும்போது ஆவியிலே போராட்டம் செய்ய பெலன் வருகிறது. அதனாலே ஆத்மா, ஆவி சொல்வதைக் கேட்டு வழி நடத்துகிறது (எபே 4:22-24) மேற்கண்ட பாவங்கள் அழிந்து போகின்றன. ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்படுகிறோம்; பரிசுத்தமாக்கப்படுகின்றோம். நீதிமான்களாக்கப்படுகின்றோம். அல்லேலூயா! (1கொரி 6:11) ஆவியானவரால் கொடுக்கப்படும் சத்திய வசனமே விடுதலையைத் தரும்.

காலம் கடைசி காலமாயிருக்கிறது. இயேசுவின் வருகை சமீபம். நோவாவின் நாட்களின் மக்களைப் போல உலக மக்கள் நடப்பார்கள் (ஆதி6:2). இரட்சிக்கப்பட்டவர்கள் (தேவகுமாரர்) இரட்சிக்கப் படாதவர்களை (மனுஷகுமாரத்திகள்) அழகுக்காகவும், அந்தஸ்துக்காகவும், பணத்துக்காகவும், படிப்பிற்காகவும் மணக்கிறார்கள். இது வேசித்தனம். மேலும் லோத்தின் நாட்களின் மக்களைப்போல் உலகமக்கள் இருப்பார்கள்; அதுதான் சோதோமி.

ஆண் புணர்ச்சியும் - பெண் புணர்ச்சியும் பெருகி வருகின்றது. வாலிப சகோதரனே! சகோதரியே! பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். (எபி 12:1)

❖ ❖ ❖

# ஆயிர வருட அரசாட்சி

தேவனின் அரசாட்சியைப் பற்றி பழைய ஏற்பாட்டிலே 2சாமு 7:8,17 மற்றும் சக 12:8 போன்றவைகளில் சொல்லப்பட்டுள்ளன. அதுவும் தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் நிரந்தரமாய் கொடுக்கப்படும் என்று தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது, புதிய ஏற்பாட்டு லூக் 1:31-33ல் உறுதியாயிற்று. அந்தப்படி அந்த அரசாங்க ராஜா பெத்லகேமில் பிறந்தார். (மீகா 5:2; ஏசா 7:14). இந்த ராஜ்யம் இப்போதே வந்திருக்கிறது என்று யோவான் ஸ்நானகனும் இயேசுவும், 12 அப்போஸ்தலர்களும் சொன்னதை யூதர்கள் ஆவிக்குரிய ரீதியிலும், அரசியல் ரீதியிலும் மறுதலித்தனர் (மத் 11:20; 21:42-43). இப்படி அவர்கள் மறுதலிப்பார்கள் என்று அறிந்த இயேசு, வரப்போகிற தேவ ராஜ்யத்தின் மகிமையை பற்றியும் அது எப்போது நடக்கும் என்றும் சொல்லிவிட்டு (மத் 13:11; 1:30) அவர் சபைகட்கும் தேவ ரகசியத்தை வெளிப்படுத்தி அதைகட்ட ஆரம்பித்தார் (எபே 3:9-11; மத் 16:18). இந்த சபையின் காலம்தான் நம் காலம். இயேசு கிறிஸ்து கர்த்தாதி கர்த்தாவாய் ராஜாதி ராஜாவாய் மகிமை பொருந்தினவராய் வரும்போது தான் அந்த ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். இதுதான் தேவன் 2ம் முறையாக பூமிக்கு வருவது; ஒலிவ மலையில் கால்வைத்து இறங்குவது (சக 14:4) நேபுகாத்நேச்சார் கண்ட சொப்பனத்துக்கு தானியேல் விளக்கம் சொல்லும்போது, ஒரு கல் மலையிலிருந்து பெயர்ந்து வந்து புறஜாதி ராஜ்யங்களை நொறுக்கி, தானே என்றென்றைக்கும் நிற்கும் என்று சொன்னான் (தானி 2:44) அந்த ராஜ்யம்தான் இது. அவர் 2ம் முறை பூமிக்கு வரும்போது தம்முடைய பரிசுத்தவான்களோடு வருவார்; அதாவது நம்மோடு வருவார் (யூதா 15). அப்படியென்றால் அதற்கு முன்பே சபையாகிய நாமெல்லாரும் மணவாட்டியாய் மத்திய ஆகாயத்தில் இயேசுவாகிய மணவாளனை சந்திக்க எடுத்துக் கொள்ளப்படுவோம். அல்லேலூயா! இரகசிய வருகையிலே சென்ற

நாம் அவரோடு, அந்திகிறிஸ்துவின் பூலோக 7 வருட ஆட்சியின் முடிவில் வருவோம். அர்மகதோன் யுத்தம் நடைபெறும் (வெளி 16:16; 19:15-21). அப்போது அந்தி கிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரியும் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே தள்ளப்படுவார்கள். அப்போது சகல ஜனங்களும் சேர்க்கப்படுவார்கள் (மத் 25:32). செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் இரண்டாகப் பிரித்து, வலது பக்கத்தில் உள்ளவர்களைப் பார்த்து, "வாருங்கள்! என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" என்று இயேசு சொல்வார். இவ்விதமாய் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களால் சுதந்தரிக்கப்போகும் பூமிக்குரிய கடைசி இராஜ்யமே இந்தக்கல் ராஜ்யம். செம்மறியாடு, வெள்ளாடு என்று பிரிப்பதற்கு முன்பே, அந்திகிறிஸ்துவால் ஏற்படப்போகும் கடைசி மூன்றரை வருட யாக்கோபின் இக்கட்டுகாலம் முடிந்தவுடனே ஒலிவமலையில் ராஜாதி ராஜா வரும்போதே அவரைக் குத்தினவர்களெல்லாம் கண்டு, அவரே மேசியா என்று சொல்லி இரட்சிக்கப்பட்டு அவரோடு சேர்ந்து கொள்வார்கள் (சகரி 14:2-4; 12:3; ரோ 11:26).

இந்த ஆட்சி "Millennium" என்ற சொற்றொடரில் ஆறு முறை வெளி 20:1-7 வசனங்களில் வருகிறது. Millennium என்ற சொல் மில்லை என்னும் லத்தீன் மொழியிலுள்ள 1000 மற்றும் 'Annum' என்னும் வருடம் ஆகிய பத்திகளிலிருந்து உருவானது. இந்த ஆயிர வருடந்தான் 'பரலோக ராஜ்யம்' (Kingdom of Heaven) என்று பல இடங்களில் வேதத்தில் வருகிறது. ஆனால் தேவனுடைய ராஜ்யம் (Kingdom of God) என்பது வேறு. தற்கால உலக ஆட்சிகளெல்லாம் அதிகப்படியாய் 5 வருடம்; அதற்கிடையிலேயே 'மந்திரி எந்திரி' என்ற நிலை ஆகிவிடுகின்றது. ஆனால் நம் தேவன் நடத்தும் ஆட்சியோ 1000 வருட ஆட்சி. இதுவரை யாரும் கேள்விப்படாத, கண்டிராத ஆட்சி. இந்த ஆட்சியிலே பிசாசு கட்டப்பட்டு, அதல பாதாளத்திலே போட்டு அடைக்கப்படும். (வெளி 20:2) சங்கிலியால் கட்ட முடியுமா என்ற கேள்வி வரலாம். ஆனால் 1பேது 2:4; யூதா 6 வசனங்களைப் படிக்கும்போது முடியும் என்ற பதில் வந்துவிடுகின்றது.

லூக் 1:31-33; தானி 7:13,14ன்படி இயேசுகிறிஸ்துவே இந்த ராஜ்யத்தின் சகக்கரவர்த்தியாய் இருப்பார் என்று அறிகிறோம். ஆனால் ஓசி 3:5; எரே 30:9; எசே 34:23,24; 37:24,25 போன்ற வசனங்களின் படி தாவீது ஆளுவார் என்று தெரிகிறது. அப்படி பழைய தாவீதோ அல்லது தாவீது என்ற பெயருள்ள வேறொரு ஆளோ ஆண்டால் ஏசா 24:23ல் சொன்னபடி, தாவீதின் மகிமையின்படி சந்திரன் கலங்காது.

சூரியன் நாணமடையாது. எனவே இயேசுதான் சர்க்கரவர்த்தி. ஆனால் தாவீது, இயேசுவுக்கு பதிலாக - Regent - இருந்து Prince-ராஜ பணி செய்யலாம் என்று அறியலாம். மேலும் 1000 வருட அரசாட்சியில் பதவிகள் எப்படிக் கொடுக்கப்பட போகிறது என்று நாம் பார்ப்போம். லூக் 19:11-26ல் இயேசு கிறிஸ்து சொல்லும் உவமையைப் பாருங்கள். 10 தாலந்து சம்பாதிக்கிறவன் 10 பட்டணத்திற்கு அதிகாரியானான். ஒரு தாலந்தை உபயோகிக்காமல் இருந்தவன் அதிகாரியாகும் வாய்ப்பை இழந்து விடுவான்.

இந்த ஆட்சியின் போது மாம்சப்பிரகாரமான மனிதர் கூட்டமான மத் 25ல் உள்ள செம்மறியாடுகளும்; இயேசு ஒலிவமலையில் இறங்கும்போதே மேசியா என்று விசுவாசித்து இரட்சிக்கப்பட்ட இஸ்ரவேலர்களும் (ரோ 11:25). உயிர்த்தெழுந்த மகிமையின் சரீரத்தில் இருக்கும் நம்மை போன்றோரும் இருக்கப் போகிறோம். நாம்தான் ஆளப்போகிறோம். இரண்டு விதமான சரீரங்களில் இருப்போர், ஒருவரோடொருவர் கலக்கவோ ஒருங்கிணையவோ முடியாத சூழ்நிலையில், பொதுப்படையான கூட்டமைப்பு அரசாட்சி எப்படி சாத்தியமாகும் என்று நாம் கேட்கலாம். உயிர்த்தெழுந்த இயேசு 40 நாட்களில் 11 முறை தன் மனித உருவத்தோடு காட்சியளிக்க வில்லையா? ஒலிவமலைக்கு நடந்தே போய் அவர்கள் பார்த்து கொண்டிருக்கையில் பரலோகம் ஏறினாரே! சீஷர்களோடு அப்பமும், ரசமும், மீனும் சாப்பிட்டாரே! ஆதி 18:1-8ன்படி கர்த்தரும் தேவதூதர்களும் மனுஷ உருவில், மனிதரோடே புசித்து குடித்தார்களல்லவா! லூக் 20:35,36ன்படி நாம் தேவ தூதர்களுக்கு ஒப்பாயிருப்போமே! தேவ தூதர்கள் மனிதர்களுக்கு காட்சியளித்து பேசிய, பழகிய நிகழ்ச்சிகள் வேதத்தில் ஏராளம் உண்டே! ஆக 1கொரி 15:42, 43ன்படி பலமுள்ளவர்களாய் எழுப்பப்பட்டவர்கள், அழிவில்லாதவர்களாய் எழுந்தவர்கள், ஏசா40:30ன்படி ஜீவிப்பார்கள் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை.

இந்த அரசாங்கத்தின் தலைமையிடம் எருசலேம் ஆகும். லூக் 21:35ன்படி புறஜாதி சாம்ராஜ்யம் கல்லாகிய கிறிஸ்துவால் அழிக்கப்பட்ட உடனே எருசலேம், தேவனால் - தேவ மக்களால் மிதிக்கப்படும். எசே 48:1-13ன்படி எருசலேம் நகரமும், நகரம் அடங்கிய நாடும் ஆயிர வருட அரசாட்சியின் போது இருக்கும். அப் 1:6ல் "ஆண்டவரே! இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலருக்கு திரும்பக் கொடுப்பீர்" என்று ஒலிவமலையில் நின்றவர்கள் இயேசுவிடம் கேட்டபோது, பிதாவானவர் அதற்கென காலத்தை வைத்திருக்கிறார் என்று பதிலளித்தாரே அந்தக் காலம்தான் அந்த ஆயிர வருட அரசாட்சிக் காலம். ஆதி 15:18-21ன்படி தேவன் இஸ்ரவேலருக்கு வாக்களித்த

ராஜ்யம் எகிப்து நதி தொடங்கி ஐபிராத்து நதிவரை உள்ளதாகும். இது எருசலேமுக்கு தெற்கே 1000 மைல்கள் தூரத்திலுள்ள ஆமாத்திற்கும் இடைப்பட்ட இடமாகும். ஆனால் பூர்வகாலத்தில் இஸ்ரவேலரின் ஆரம்ப குடியேற்றப்பகுதிப் பரப்பைவிட இது எட்டு மடங்கு அதிகமானதாகும். இந்த நிலப்பகுதியை இஸ்ரவேலர்கள் ஆளுவார்கள். புதிய தேவாலயம் சாலமோன் கட்டின தேவாலய பகுதியிலேயே தான் இருக்கும் என நம்பப்படுகிறது. ஜீவ தண்ணீர் எருசலேமிலிருந்து கிளம்பி பாதி கிழக்கு கடலுக்கும் பாதி மேற்கு கடலுக்கும் போகும் என்று சகரி 14:8 சொன்னபடியே இருக்கும். சவக்கடல் இப்போது மத்திய தரைக்கடல் மட்டத்திலிருந்து 1200 அடி கீழே உள்ளது. ஆனால் இந்தச் சவக்கடல் மட்டம் 1000 வருட அரசாட்சி காலத்தில் உயர்ந்திருக்கும். இன்றைய நிலமட்டங்கள் மாறுபட்டுள்ளதாய் நீர் பாயும்படியாய் இருக்கும். அப்படியானால் ஏதாவதொரு பூமியின் மேற்பரப்பில் மாற்றம் நடைபெற்றாக வேண்டும். சகரி 14:4; 10:11 வசனங்களின்படி இயேசு ஒலிவமலையில் இறங்கும்போது இந்த மாற்றங்கள் ஏற்படலாம். மீகா 1:3,4 ஐயும் படியுங்கள்.

தேவாலயத்தில் ஆரோனின் ஆசாரியத்துவம் மீண்டுமாக நிறுவப்படும். உடன்படிக்கைப் பெட்டி, மன்னா, ஆரோனின் கோல், நியாயப்பிரமாண கற்பலகைகள், கிருபாசனம், கேரூபீன்கள், பொன் விளக்குத் தண்டு, தேவ சமூகத்து அப்பம், சுகந்த வாசனைக்குரிய பலிபீடம், திரைச்சீலை, மகாபரிசுத்தஸ்தலம் போன்றவை இருக்காது. மக்களுக்காகப் பரிந்து மன்றாடி பாவ நிவாரண பலி செலுத்தும் பிரதான ஆசாரியன் இருப்பதில்லை. ஆனால் கிறிஸ்துவே ராஜாவும் ஆசாரியராகவும் இருந்து செயல்படுவார். (சக 6:12-13; எரே 23:5,6) தினமும் காலையில் மட்டுமே பலி செலுத்தப்படும். (எசே 46:13-15) பஸ்கா பண்டிகை ஆசரிக்கப்படும். எல்லா தேசங்களும் கூடாரப் பண்டிகையை ஆசரிக்க வருவதன் மூலம் வறட்சி, கொள்ளை நோய் ஆகியவற்றிலிருந்து விடுதலை அனைவருக்கும் கிடைக்கும். இந்த நாளில் ஒரே ஒரு மார்க்கம்தான் இருக்கும். பலவித பாஷைக்காரரும் இஸ்ரவேல் மக்களோடே இணைந்து நம் தேவனையே வணங்க வருவார்கள் (மல் 1:11). பாபிலோனிய சிறைப்பிடிப்பின் போது மறைந்த ஷெகினா மகிமை மீண்டும் இந்த ஆலயத்தை நிரப்பும்.

மனிதன் தனது தவறுக்கும் வீழ்ச்சிக்கும் காரணம் சாத்தான் தான் என்று சொல்லுகின்றான். ஏதேனில் ஏவாள் சொன்னதும் அதுதானே. எனவே தேவன் மனிதனுக்கு முழு சுதந்திரம் கொடுத்து சாத்தானற்ற உலகமாய் இந்த 1000 வருடமும் ஆக்கி, அவனைப் பரிசோதித்து

பார்க்கிறார். சாத்தானின்றி பாவம் வராது என்பது உண்மைதான். ஆனால் மனிதன் தன் சுய உணர்வுகள், நம்பிக்கைகள் எல்லாவற்றையும் தனக்குள்ளே போட்டு வைத்து, நிஜ உருவை வெளிக்காட்ட வழியில்லாமல், கொளுத்துவாரில்லாத தீக்குச்சியாய் இருப்பான்; எல்லாருமல்ல; பெரும்பாலானோர் அப்படி இருப்பார். இது ஆயிர வருட அரசாட்சிக்குப் பிறகு, பிசாசை அவிழ்த்துவிட்டபின், அவனால் பற்ற வைக்கும் போது எரிமலையாய், கோகேமாகே யுத்தம் வெடிக்கும்போது தெரிய வரும் (வெளி 20:8). அப்படிப்பட்ட மனிதர் அனைவரும் அக்கியானால் அழிக்கப்பட்டு, வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின் போது அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே தள்ளப்படுவார்கள்.

1000 வருட ஆட்சியிலே பாலஸ்தீனா தேசம் பாலும் தேனும் ஓடுகிற தேசமாயிருக்கும். எங்கு பார்த்தாலும் செழிப்பு (Prosperity) மிளிரும். ஆமோஸ் 9:13; ஏசா 35:1; 55:13; சங் 67:6; யோவேல் 2:24-26ல் சொல்லப்பட்ட வளங்கள் இருக்கும். ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும்; புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக் கொள்ளும். எருசலேம் எங்கும் தீங்கு செய்வாரில்லை (ஏசா 11:69). மனிதனின் ஆயுசு நாட்கள் நீளும். 100 வயதுக்கு கீழே மரிப்பவன் இரான் (ஏசா 65:20; சக 8:4). இதற்கு காரணம் ஜீவத்தண்ணீருள்ள புதிய நதிதான். பரிசுத்த நகரத்திலிருந்து புறப்படும் இந்த நதியின் இருமருங்கும் மரங்கள் செடிகள் போன்றவைகளின் இலைகள் கூட மருந்துகளாகப் பயன்படும். (எசே 47:12). இரவிலே சந்திரனின் வெளிச்சம், பகல் சூரியன் வெளிச்சத்திற்கு ஈடாக இருக்கும். பகலில் சூரிய வெளிச்சம் இன்றைய சூரிய வெளிச்சம் போல 7 மடங்கு அதிகமுள்ளதாய், ஒரு புதிய தட்ப வெட்ப நிலை உருவாகும். (ஏசா 30:26).

இஸ்ரவேல் நாடு உலகத்தின் அன்றைய புறஜாதிகள் எல்லாவற்றிற்கும் ஆசீர்வாதமாக அமையும். உபா 28:13ன்படி அந்த நாடு உலகிற்கே தலைமையான ஸ்தாபனமாய் விளங்கும். இன்றைய உலக நாடுகள் தலையாய நாடு ஒன்றுமின்றி தவிக்கின்றன. 1000 வருட அரசாட்சியிலோ அந்தப் பெயர் இஸ்ரவேல் நாட்டுக்கு வரும். அன்றைய நாடுகள் அனைத்தும் கிறிஸ்துவின் இரும்பு அரசாட்சிக்குக் கீழிருக்கும் (சங் 2:6-9) அது சமாதானத்தின் காலம்; ஆனாலும் அக்காலம் பலருடைய மனிதர் மத்தியில் கட்டுப்பாடு மிகுந்த காலமானதால், பயத்தினால் கீழ்ப்படிதல் இருக்குமே ஒழிய, அன்பினால் இராது. சமாதானம் வெளித்தோற்றமேயன்றி மெய்யாயிராது. இது ஆயிர வருட ஆட்சிக்குப் பிறகு பிசாசை அவிழ்த்து விடும் போது தெரியவரும்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளைகளே! இந்தக் காலம் எப்போது வருமென்று ஏங்குகின்றாயா? அதற்கு முன்னால், இரகசிய வருகையில் இயேசுவோடு சேர ஆயத்தப்படு! நிச்சயம் அவரோடு 1000 வருடம் ஆளுகை செய்யலாம்! அல்லேலூயா!

❖ ❖ ❖

# ஊழியம் யாரோடு இணைந்து செய்யலாம்?

வாலிப சகோதரர்களே! கர்த்தருக்காய் ஊழியம் செய்ய வேண்டும் என்று நீங்கள் அதிகமாய் விரும்புகிறீர்கள். தேவன் விரும்புவதும் அதுதான். அதனால்தான் மனிதனைப் படைக்கும் போதே குழந்தையாகவோ, வயோதிகனாகவோ படைக்காமல் வாலிபனாய்ப் படைத்தார். வாலிபன் சிம்சோன், தாவீது, தானியேல் போன்ற பல விசுவாச வீரர்களை அவர் எழுப்பினார். இயேசு கூட வாலிப வயதில்தான் ஊழியம் செய்தார். உலகப் பிரகாரமான வாலிபகாலம் கொஞ்ச வருஷங்கள் தான். அதற்குள் நீ செய்ய வேண்டியது ஏராளம் உண்டு. நீங்கள்தான் பலவான்களாயிருக்கிறீர்கள் என்றும் அதனால் தேவ வசனம் உங்களில் நிலைத்திருந்து பொல்லாங்கனை ஜெயிப்பதாலும் தேவன் உங்கள் மேல் பெரிதான கவனம் வைத்துள்ளார் (1யோ 2:14). இப்படிப்பட்ட நீங்கள் யாரோடு சேர்ந்து ஊழியம் செய்ய வேண்டும் என்று வரைமுறை இருக்கிறது. இன்றைக்கு ஊழியத்தைப் பார்த்தால், காசுக்காக, புகழுக்காக, பெருமைக்காக, கூட்டத்திற்காக, ஜாதிக்காக யார் யாரெல்லாமோ இணைந்து ஊழியம் செய்கிறார்கள். இவர்கள் எல்லாரும் அக்கிரமச் செய்கைக்காரர்கள் (Lawlessness people) அறியேன் என்று தேவனால் சொல்ல வேண்டியவர்கள் (மத் 7:22) "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக" (2கொரி 6:14) என்பது திருமணத்திற்கான உபதேசம் என்று பலர் நினைக்கிறார்கள். ஊழியத்திற்கும் அதே சட்டம்தான். (யாத் 4:24-26) இரட்சிக்கப்படாத, பரிசுத்த ஆவியை நம்பாத, அவரின் ஞானஸ்நானத்தை ஏற்காத, முழுக்கு ஞானஸ்நானம் பெறாத, குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கிற, பெயர்க்கிறிஸ்தவ மக்களோடு ஊழியத்திலே நமக்கு ஐக்கியம் கூடாது; இப்படிப்பட்ட சபையில் அங்கம் வகிக்கும் ஊழியக்காரர்களோடும் ஊழிய சம்பந்தம் கூடாது. இரட்சிக்கப்பட்ட நாம் தேவனுடைய ஆலயமாய் (1 கொரி 3:16)

சபையாய் இருக்கும்போது, இதிலே இரட்சிக்கப்படாத தேவ மகிமையற்ற (ரோ 3:23) பாவிகள் எப்படி இணைய முடியும்? (சங் 1:5). "இல்லை... இல்லை... அந்த ஊழியக்காரர் இரட்சிக்கப் பட்டிருக்கிறார்; அந்நிய பாஷை பேசுகிறார்; முழுக்கு ஞானஸ்நானம் பெற்று தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்; அற்புத அடையாளம் செய்கிறார்" என்று நீங்கள் சொல்லலாம். உண்மையாகவும் இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் ஏன் இன்னும் பழைய மார்க்க சபைகளை விட்டு வெளியே வரவில்லை? வந்தால் கௌரவம் போய்விடுமா? பெருமையும் புகழும் குறைந்துவிடுமா? உலகப் பெருமையல்ல சகோதரனே! தேவ நீதியினால் அவர் தரும் மேன்மையே முக்கியம். "பழைய சபையிலுள்ள மக்களை கர்த்தருக்குள் கொண்டு வர அதிலே இருக்கிறேன்" என்று சப்பைக்கட்டு கட்டும் ஊழியக்காரர்கள் உண்டு. அப்படியானால் பவுல் யூதமார்க்கத்தை விட்டு புதிதும் ஜீவனுமான கிறிஸ்தவ மார்க்கத்திற்கு வந்தது புத்தியீனமா? (கலா 1ஐ வாசியுங்கள்). பவுலைப் போல வெளியே வந்து ஆவிக்குரிய சபைகளில் அங்கம் வகித்து பிறகு பழைய சபையாரைத் திருத்தப்போகலாமே! இப்படிப்பட்டவர்கள் அற்புதத்திற்கும் அந்நிய பாஷைக்கும் ஒரு சபையில் அங்கத்துவம், தொட்டிலுக்கும், கட்டிலுக்கும், பெட்டிக்கும், ஒரு சபையில் அங்கத்துவம். இவர்களெல்லாம் பெயர்க்கிறிஸ்தவர்கள், இவர்களைப் போல ஆவிக்குரிய சபையிலுள்ள ஒரு விசுவாசி இருந்தால் அந்த சபை ஊழியர் ஒத்துக் கொள்வாரா? விசுவாசிக்கு ஒரு சட்டம்; அவர்களுக்கு ஒரு சட்டமா?

இப்படிப்பட்டவர்களோடு இணைந்து ஒருக்காலும் ஊழியம் செய்ய கூடாது. மோசே ஊழியத்திற்காய், தன் மனைவியோடும், பிள்ளைகளோடும் தேவனின் அழைப்பின் பேரில்தான் புறப்பட்டான். ஆனால், வழியிலே இராத்தங்கும் போது தேவன் அவனைக் கொல்லப் பார்த்தாரே. ஏன்? யாத் 4:24-26ஐ வாசியுங்கள். கொல்ல வந்த தேவன் பின்பு விலகிப் போனாரே. ஏன்? விருத்தசேதனமாகிய விசுவாசம் இல்லாத மனைவியோடு ஊழியத்திற்கு வருவதையே தேவன் எதிர்த்து, அவன் மனைவி இரத்த சம்பந்தமான புருஷன் என்றவுடனே விலகினார் என்றால், இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யும் ஊழியர்கள் எம்மாத்திரம்? இது கிருபையின் காலமாய் இருப்பதால் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் தனித்து ஊழியம் செய்தாலும் பரவாயில்லை, இப்படிப்பட்ட பெயர்க்கிறிஸ்தவர்களோடு பெயர்க்கிறிஸ்தவ சபைகளில் அங்கம் வகிப்பவர்களோடு ஊழியம் செய்யாதீர்கள். தேவன் பட்சிக்கிற அக்கினி. நியாயத்தீர்ப்பின் நாளிலே உங்கள் நிலைமை மோசமாகிவிடக் கூடாது. சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! ஆவியானவர்தாமே இன்னும் வெளிப்படுத்துவாராக!

# கர்ப்பத்தை தேவன் அடைப்பாரா?

குழந்தை பிறக்கவில்லையென்றாலே பெரும்பாலோர் பெண்களிடத்தில் தான் குறை இருக்கிறது என்று எண்ணுகிறார்கள். வேதத்திலும் சாராள், ரெபேக்காள், ராகேல், எலிசபெத், அன்னாள் போன்ற சகோதரிகளைச் சுற்றித்தான் குழந்தையைப் பற்றிய காரியங்கள் வருகின்றன. குழந்தை இல்லாததற்கு பெண்கள் மட்டும் காரணமல்ல; ஆதி 20:18ஐ வாசியுங்கள். ஆபிரகாமின் ஜெபத்தினால் அபிமெலேக்கையும் தேவன் குணமாக்கி பிள்ளை பெறும்படியாய் அனுக்கிரகம் பண்ணினார். ஆக, ஆண்களிடத்திலும் குறைகள் இருக்கலாம். உலகப்பிரகாரமான தலைவர்கள் அண்ணாதுரை, எம்.ஜி.ஆர், கிருபானந்த வாரியார் போன்றோருக்கு குழந்தைகள் இல்லையே! யார் காரணம்? ஊழியக்காரர்கள் சென்னை பாஸ்டர். சாம்சுந்தரம், பாஸ்டர். மார்ட்டின் தாஸ், பீகார். அகஸ்டின் ஜெபக்குமார், சிஎஸ்ஐ ஊழியர் மோகன். சி. லாசரஸ் போன்றோருக்கு குழந்தைகள் இல்லையே யார் காரணம்? பிரசவிக்கப் பண்ணுகிறவராகிய தேவன் பிரசவத்தை தடுப்பாரோ? (ஏசா 66:9). நீங்கள் பலுகி பெருகி பூமியை நிரப்புங்கள் என்று சொன்ன தேவன் (ஆதி 1:28) தன் விருப்பத்துக்கு மாறாய் செயல்படுவாரா? மலடியாயிருந்த ரெபேக்காளுக்கும் எலிசபெத்துக்கும் இன்னும் பலருக்கும் பிள்ளைகளை கொடுத்தவர் தேவனல்லவா? (ஆதி 25:21; லூக் 1:7,13). ஆதி 30:2ல் யாக்கோபு சொன்னதால் அது உண்மையாகிவிடுமோ? தேவன் கர்ப்பத்தை அடைத்தார் என்பது அவனின் விசுவாசம்; இது அறியாமையினால் வந்த வார்த்தை. "கர்ப்பம் விழுகிறதும் மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை" (யாத் 23:26) என்று தேவன் சொன்ன வார்த்தை பொய்யாகுமா? நியாயப்பிரமாணத்தின் சாபங்களினால் கர்ப்பம் அடைக்கப்படுவதும் உண்டு. இப்படி, மீறுதலினால் என்ன காரியங்கள் ஏற்பட்டாலும் அது கர்த்தரால் ஆனது என்று ஒரு சில இடங்களில் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளன. அன்னாள் விஷயத்திலும் அப்படித்தான். நியாயப் பிரமாணத்தை மீறுவதால் வரும் சாபங்கள் இன்னின்ன என்று தேவன் கூறியிருப்பதால், தேவனே அந்த பொல்லாங்கான காரியங்களை மனிதனுக்குக் கொடுப்பதாய் மக்கள் நம்புகிறார்கள். ஆனால் சாப காரியங்களை தேவன் கொடுப்பதில்லை." மனிதனே மீறுதலினால் பெற்றுக் கொள்கிறான். இந்த சாபமான காரியங்களை எல்லாம் இயேசு சிலுவையிலே மாற்றிப்போட்டார் (கலா 3:13). இதை விவாசிக்கிற எவனுக்கும் சாபம் வருவதில்லை; கர்ப்பம் அடைபடுவதில்லை. அன்னாள் விசுவாசித்தாள் (1சாமு 1:18). அவள் கர்ப்பம்

அடைபடவில்லை. கர்ப்பம் திறக்கப்படவேண்டும் என்பதற்காகவே தேவன் சிலுவையிலே தூக்கப்பட்டார். இதை விசுவாசிக்கிற உனக்கு "கர்ப்பம் திறக்கப்படுவதாக" இயேசுவின் நாமத்தினாலே சொல்கிறேன்.

நான் விசுவாசித்தும் குழந்தையில்லையே என்கிறாயா? இதுவே அவிசுவாச வார்த்தை. "நான் விசுவாசிக்கிறேன்; பொறுமையாய் காத்திருப்பேன். என் தேவனால் கூடாதது ஒன்றுமில்லை; அவர் நிச்சயம் குழந்தையை கொடுப்பார்" என்று இடைவிடாமல் விசுவாசி. சாராளின் தேவன் உன் தேவனில்லையா? எலிசபெத்தின் தேவன் உன் தேவனல்லவா? விசுவாசித்து ஜெபித்தும் சிலருக்குக் குழந்தைகள் இல்லை. காரணம் என்ன? நாம் எதைக் கேட்டாலும் அவர் சித்தப்படிதான் கேட்கவேண்டும் (1யோ 5:14). அப்போதுதான் கேட்பது கிடைக்கும். அப்படியானால் ஒருவர் விசுவாசித்துக் கேட்டும் கிடைக்கவில்லையென்றால் தேவனுக்கு சித்தமில்லையா? இது ஒரு கேள்வி. எல்லாப் பிள்ளைகளுமே கர்த்தரால் வரும் சுதந்திரமல்ல; காயீன், ஏசா, யூதாஸ் போன்றோர் எல்லாம் கர்த்தரால் வரும் சுதந்திரமா? இவர்கள் கர்ப்பத்தின் கனிகளா? (சங் 127:4,5) இவர்கள் கனிகளல்ல; காய்கள். ஒவ்வொரு குழந்தையும் இப்போது உண்டாக்குவது தேவனல்ல. மனிதனை சிருஷ்டிக்கும் வேலையை ஆறாம் நாளிலே முடித்துவிட்டார். முடித்த அவர், நம்மை தொடர்ந்து மனிதனை உண்டாக்க கட்டளை இட்டார் (ஆதி 1:28). அக்குழந்தைகளை உண்டாக்கும் பொறுப்பு நம்மிடம் தான் உண்டு. பொறுப்பு மாத்திரம் இருந்தால் போதாது. பொறுப்போடு கூடிய பலம், வல்லமை தேவை. இவைகளை பிசாசும் விரும்புகிறவர்களுக்கும், தான் இஷ்டப்படுகிறவர்களுக்கும் கொடுக்கிறான். அதன் மூலமாகவும் பிள்ளைகள் உண்டாகின்றன. கற்பழிப்பில், மாம்சீக இச்சையில், தெய்வ பக்தி இன்மையில் உலக வேஷத்தில் வரும் பிள்ளைகள் இவைகள். இவைகள் காப்பத்தின் கனியல்ல; கர்த்தரின் சுதந்திரமும் அல்ல; தேவனின் கிருபையால் கிடைப்பது தான் அவரின் சுதந்திரம். அப்படிப்பட்ட பிள்ளைகள் தான் தேவை நமக்கு. வீணே வேளாங்கண்ணியாலும், வெங்கடாஜலபதியாலும், நாகூராராலும் பிள்ளைகள் தேவையில்லை. அப்படிப்பட்ட பிள்ளைகளையும் சில நேரங்களில் தேவன் தனக்கென்று தெரிந்து கொண்டு அழைப்பதுமுண்டு. தேவன் பட்சபாதமுள்ளவரல்ல; அன்புள்ளவர். ஆனால் உயிரணுவே (Sperm) இல்லாமல் இருக்கும்போது அதை உருவாக்க பிசாசும் முயல்கிறான்; சிலவற்றில் வெற்றி அடைகிறான்; பலவற்றில் தோல்வியடைகிறான். ஆனால் தேவனால் கூடாதது ஒன்றுமில்லை; உயிரணு இல்லாதிருப்பது சாபத்தின் விளைவு.

சில நேரத்தில் தேவன் ஒரு திட்டம் வைத்திருப்பார். அதன்படி குழந்தை இல்லாமல் போகலாம். குழந்தை இல்லை என்பதால் வருத்தப்படுகிறவன் உலகத்தான். தேவனுக்கடுத்தவைகளை சிந்திப்பவர்களுக்கு இது பற்றி கவலையே இல்லை. குழந்தை என்பது தேவனின் ஆசீர்வாதம் என்று பலர் எண்ணுகின்றனர். அது தவறு; குழந்தை பிறப்பதால் தேவனைச் சார்ந்து வாழும் விசுவாசிக்கு-ஆவிக்குரியவனுக்கு என்ன பிரயோஜனம்? அதனால் தேவனுக்குத்தான் ஒரு சந்ததி அதிகமாகிறது. மனிதனுக்கு ஒன்றுமேயில்லை. அவரின் ராஜ்யத்திற்கு நம் மூலம், நம் சரீரத்தின் மூலம் தேவையென்றால் நிச்சயம் தேவன் கைகூடச் செய்வார்; இல்லையேல் நாம் வருத்தப்பட தேவையே இல்லை. தாவீது பாடுவதைப் பாருங்கள். “உலக மக்கள், புத்திரப் பாக்கியத்தினால் திருப்தியடைந்து, தங்களுக்கு மீதியான பொருளைத் தங்கள் குழந்தைகளுக்கு வைக்கிறார்கள். நானோ நீதியில் உம்முடைய முகத்தை தரிசிப்பேன்; நான் விழிக்கும் போது உமது சாயலால் திருப்தியாவேன” (சங் 17:14,15). இப்படிப்பட்ட உள்ளம் நமக்கிருக்கட்டும்! “குழந்தைப் பிறப்பினால் அல்ல என் திருப்தி” என்று நாம் சொல்லி தேவ சாயலால் இரகசிய வருகையில் திருப்தியாவோம்!

❖ ❖ ❖

# சமாரியர் தாழ்த்தப்பட்டவரா?

கிறிஸ்தவர்கள் என்றாலே பெரும்பாலும் உலகத்தால் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லும் சமுதாயத்தார் என்ற நிலை இன்றைக்கு தமிழ்நாட்டில் ஆகிவிட்டது. சென்னை, செங்கை, ஆற்காடு மாவட்டங்களில் இந்த எண்ணம் அதிகமாய் பரவியுள்ளது. அதற்கு ஒரு காரணம்:- உலகத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயம் என்று சொல்லும் சமுதாய மக்கள் தான் இந்த மாவட்டங்களில் அதிகக் கிறிஸ்தவர்களாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் கிறிஸ்தவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் அல்ல என்று அரசாங்கமும் சொல்கின்றது; வேதமும் சொல்கின்றது (1பேது 2:9). அப்படியானால் சமாரியர் தாழ்த்தப்பட்டவரா? சமாரியா நாட்டில் வாழ்ந்தவர்கள் சமாரியர்கள். சமாரியா நாடு வழியாக யூதர்கள் எப்போதும் போகாததாலும், யூதர்கள் சமாரியருடனே எந்த ஒரு சம்பந்தமும் கலவாதபடியினாலும், யூதர்களுக்கு பண்டிகைக்கடுத்த காரியங்களில் விரோதமிருந்ததாலும் (யோ 4:9,4) சமாரியர்கள் பிற்படுத்தப்பட்ட

தாழ்த்தப்பட்ட மக்களோ என்று பலர் எண்ணுகின்றனர். சமாரியா என்பவனிடமிருந்து ஒரு மலையை வாங்கி, கோட்டைகளைக் கட்டி, அவைகளுக்கு சமாரியா என்று உம்ரி என்பவன் பேரிட்டான். (1ராஜா 16:23,24). எருசலேமுக்கு வடக்கே 30 மைல்தாண்டி இது உள்ளது. இஸ்ரவேல் கோத்திரங்கள் 10 ஆகவும் 2 ஆகவும் பிரிந்த போது, 10 கோத்திரத்திற்கு தலைநகராய் இது இருந்தது. பொதுவாக சமாரியர் என்றால் சமாரியா தேசத்து இஸ்ரவேலைக் குறிக்கும். ஆனாலும் அங்கே இருந்தவர்கள் எல்லாரும் இஸ்ரவேலரல்ல. கி.மு.721ல் அசீரியா ராஜா சமாரியாவைக் கைப்பற்றியதால் இஸ்ரவேல் ஆட்சி மறைந்தது. (2ராஜா 17:24). அவன் புறஜாதி ஜனங்களை கொண்டுவந்து சமாரியாவில் குடியேற்றினான். வந்த ஜனங்கள் விக்கிரக ஆராதனைக்காரர்கள். வந்தவர்கள் தொகை பெருகப் பெருக சமாரியாவிலிருந்த இஸ்ரவேலர்கள் கர்த்தருக்குப் பயந்திருந்தாலும், விக்கிரக ஆராதனைக்காரர்களாய் மாறிவிட்டார்கள். பிற்காலங்களில் ஆசாரிய வகுப்பை சேர்ந்த ஒருவன் கெரிசீம் மலையில் ஒரு கோவிலைக் கட்டினான். யூதர்களின் தலைநகரான எருசலேமில்தான் கோவில் இருந்தது. அங்குதான் நியாயப்பிரமாணப் பண்டிகைகள் 12 கோத்திரத்திலும் கொண்டாடப்பட்டன. ஆனால் கெரிசீம் மலையில் கோவில் கட்டிய உடனே அங்கே யூதருக்கடுத்த பண்டிகைகளைக் கொண்டாடினார்கள். இதைக் கேள்விப்பட்ட எருசலேம் யூதர்கள் எருசலேமின் தேவனுக்கேற்ற மகிமை அலட்சியப்படுத்தப்பட்டது என்று உணர்ந்து, சமாரியாவில் வாழ்ந்த அசீரியர் மற்றும் சிறைப்பிடிக்கப்படாத இஸ்ரவேலரடங்கிய கூட்டமாகிய சமாரியரை வெறுத்தனர். அவர்கள் தேசம் விழியாய் குறுக்கே போகமாட்டார்கள். அவர்களோடு எந்த ஒரு சமபந்தமும் இல்லாமல் யூதர்கள் அவர்களைப் பாவித்தனர். சமாரியர் ஒடுக்கப்பட்டவர்களைப் போலானார்கள். சமாரியரில் உள்ள சில இஸ்ரவேலர் யெகோவாவை வணங்குபவராக இருந்தாலும், குடியேறிய மக்களின் பாகால் தெய்வ வழிபாடு இவர்களுக்குள் புகுந்ததால், விக்ரக ஆராதனைக்காரர்களாய் மாறி இஸ்ரவேல் கோத்திரங்களின் பாரம்பரியத்தை விட்டுவிட்டதாலே யூத கோத்திரத்தாருக்கும் இந்த சமாரியருக்கும் வேறுபாடு; பகை ஏற்பட்டது. இது தேவன் சம்பந்தமான பகை. மனிதனாய்ப் பிறந்த இயேசுவே "இவர்களை இணைக்க வேண்டும்; தாம் கட்டப்போகும் சபையில் சேர்க்க வேண்டும்" என்ற அநாதி தீர்மானத்தின்படி முதன்முதலில் சுவிசேஷம் சமாரியப் பெண் மூலமாய் அவர்களுக்குச் சொன்னார் (யோ 4). அல்லேலூயா! ஏசா 61:1-3ன்படி வந்த தேவனாயிற்றே.

❖ ❖ ❖

# யூத ராஜ்யமும் இஸ்ரவேல் ராஜ்யமும்

ஆபிரகாமின் பேரன் யாக்கோபுக்கு இஸ்ரவேல் என்று பெயர் வைத்தார் தேவன். அவனுக்கு 12 ஆண்பிள்ளைகள் இருந்தன. அந்த 12 கோத்திர சந்ததிதான் இஸ்ரவேல் கோத்திரம் என்று அழைக்கப்பட்டது. நியாயாதிபதிகளின் காலமுடிவில், இஸ்ரவேலரின் நிலைமை நிர்ப்பந்தமாயிருந்தபடியால், கர்த்தர் சாமுவேல் தீர்க்கதரிசியை ஏற்படுத்தினார். அவன் வயோதிபனான போது, இஸ்ரவேலர் தங்களுக்கு ராஜா வேண்டும் என்று கேட்டதால், சவுல் ராஜாவாக்கப்பட்டான். அவனுக்குப் பின் தாவீது ராஜாவானான். சரியான இஸ்ரவேல் ராஜ்யம் தாவீதோடுதான் துவங்கியது என்று சொல்லலாம். எருசலேமை தலைநகராய்க் கொண்டு அவன் கி.மு. 1017 முதல் 977 வரை சிறப்பாய் ஆளுகை செய்தான். அவனுக்குப் பின் சாலமோன் ராஜாவாகி கி.மு. 977 முதல் 937 வரை ஆண்டான். சாலமோனின் கடைசி நாட்களில், இஸ்ரவேல் ராஜ்யம் பிரித்துப் போடப்படும் என்றும், யூதா கோத்திரம் மாத்திரம் தாவீதின் சந்ததிக்குப் போகுமென்றும் மற்ற 10 கோத்திரங்களும் யெரோபெயாமைச் சேருமென்றும் அகியா தீர்க்கதரிசி சொன்னபடியே நடந்தது. (1ராஜா 11:31-35). இதன்படி பாலஸ்தீனாவில் யூதா, இஸ்ரவேல் என இரண்டு ராஜ்யங்கள் தொடங்கின. யூதா கோத்திரத்தோடு பெஞ்சமீன் கோத்திரமும் இணைந்து யூத ராஜ்யமாய் மாறியது. இஸ்ரவேல் ராஜ்யம் சமாரியாவை தலைநகராய்க் கொண்டு, கி.மு. 945 முதல் 721 வரை நிலை பெற்றது. கி.மு. 721ல் அசீரிய ராஜா சமாரியாவைக் கைப்பற்றியதால் இஸ்ரவேல் ராஜ்யம் மறைந்தது (2ராஜா 17:24). இந்த ராஜ்யத்தை 4 பகுதிகளாகப் பிரிக்கலாம். 1. கி.மு 945-923 யெரோபெயாம் தொடங்கி ஓம்ரியின் ஆளுகை வரை, 2. கி.மு 929-884 ஓம்ரியின் காலம் தொடங்கி ஆகாபின் மரணம் வரை, 3. கி.மு 884-772 யெகூவின் ராஜ வம்சத்தாரின் காலம், 4. கி.மு 772-721 சகரியாவின் ஆளுகை தொடங்கி ஓசியாவின் நாட்கள் மட்டும். இந்த இஸ்ரவேல் ராஜ்ய ஜனங்கள் தேவனை மறந்து, சுற்றுப்புறத்தோடு கலந்து, விக்கிரக ஆராதனைக்கு உட்பட்டார்கள். தேவன் தீர்க்கதரிசிகள் மூலமாய் இவர்களை எச்சரித்தும் இவர்கள் செவி கொடுக்கவில்லை. இதினிமித்தமே அசீரியராஜா அவர்களை சிறைப்பிடித்துப் போனான். அந்த ராஜ்யமும் நிர்மூலமாயிற்று. கி.மு 975 முதல் சாலமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் தலைமையில், யூத ராஜ்யம் எருசலேமில் ஆரம்பமானது. இவனுடைய நாட்களெல்லாம் யூதாவுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையில் யுத்தம் நடந்து கொண்டேயிருந்தது (See 1ராஜா 12:4; 14:30; 2நாளா 12:15).

யோகாக்கிம் என்ற யூத ராஜாவின் காலத்திற்குப்பின் பாபிலோன் சக்கரவர்த்தி நேபுகாத்நேச்சாரால் யூத ராஜ்யம் பிடிக்கப்பட்டு (கி.மு 597) எருசலேம் அழிக்கப்பட்டு, யூத மக்கள் எல்லாரும் சிறைப்பட்டுப் போனார்கள். இஸ்ரவேல் ராஜ்யமும் வீழ்ந்துபோனது. எரேமியா, ஏசாயா, ஆமோஸ், ஓசியா போன்றோரின் காலத்திலிருந்து (கி.மு 457) சிறைப்பட்டவர்கள் பாபிலோனிலிருந்து வர ஆரம்பித்தார்கள். சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் யூதா கோத்திரத்தார் அநேகராயிருந்தபடியினால், யூதர் என்ற பெயர் அந்த ஜாதியாருக்கு வழங்கப்பட்டது. சுவிசேஷப் புத்தகத்தில் இவர்களை யூதர் என்றே பொதுவாய்ச் சொல்லப்பட்டுள்ளது. இதில்தானே இயேசு பிறந்தார். அப்போது ரோம ராஜ்யம் ஆட்சியிலிருந்தது.

❖ ❖ ❖

## முக்காடு ஏன் போட வேண்டும்?

பெண்கள் முக்காடு போட வேண்டும் என்று ஒரு சில கிறிஸ்தவர்களும், தேவையில்லை என்று இன்னொரு சாராரும் சொல்லி வருகின்றனர். வேதம் சொல்வதைப் பார்ப்போம். 1கொரி 11:3ன்படி ஸ்திரீக்கு புருஷன் தலை, புருஷனுக்கு கிறிஸ்து தலை; கிறிஸ்துவுக்கு தேவன் தலை. ஆதி 3:16ன்படி புருஷன் மனைவியை ஆண்டு கொள்ள வேண்டும். புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறபடியால் தன் தலையை மூடிக் கொள்ள வேண்டுவதில்லை. ஆனால் ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள் (1கொரி 11:7). எனவே ஸ்திரீயானவள் முக்காடிட வேண்டியதாயிருக்கிறது. புருஷனைக் கனவீனம் பண்ணுபவள் முக்காடிட மாட்டாள். அது தலை சிரைக்கப்பட்டது போலிருக்கும். முக்காடிடாத ஸ்திரீ தலை மயிரை கத்தரித்துப் போட வேண்டும். சிரைக்கப்படுகிறது வெட்கமானால் முக்காடு இட வேண்டும் (1கொரி 11:6). விபச்சாரம் செய்து புருஷனுக்கு கனவீனம் பண்ணிய மனைவியின் முக்காட்டை ஆசாரியன் நீக்குவதை எண் 5:18ல் வாசிக்கலாம். மனைவியின் மேல் புருஷனுக்கு அதிகாரம் உள்ளது என்பதை காட்டுவதற்கான அடையாளம் முக்காடு என்று 1கொரி 11:10 சொல்கிறது. “For this cause ought the woman to have power on her head because of the angel”. இப்படிப்பட்டதான ஸ்திரீயின் கீழ்ப்படிதல் (Submission), கர்த்தருக்கு தேவதூதர்களும் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்கான பாடம் புகட்டுவதாய் இருக்கிறது. ஏனென்றால்

நமது எல்லா செயல்களையும் தூதர்களும் கவனிக்கிறார்கள். (பிர 5:6; 1தீமோ 5:21; எபே 5:10-11). பெண்கள் முக்காடிடுவது ஆரம்ப முதல் பழக்கமாயிருந்தது (ஆதி 24:65; 38:14-19; ரூத் 3:15 முதலியன). இது யூத சட்டமாயிருந்தது. ரோமர், கிரேக்கர் போன்ற மற்ற மக்கள் மத்தியிலும் பழக்க வழக்கமாயிருந்தது (Customs). அப்படிப்பட்ட பழக்க வழக்கம் கிறிஸ்தவர்களுக்கு சட்டமாயில்லா விட்டாலும், அதைக் கைக்கொண்டு புருஷனுக்கு கீழ்ப்படிதலைக் காட்டும் போது தேவனின் ஆசீர்வாதம் உண்டென்றால் அதைக் கைக்கொள்வது தவறில்லையே! (1கொரி 11:11,12; 1தீமோ 2:9; 1பேது 3:1-7). நமது தமிழக கலாச்சாரப்படி இது இல்லாவிட்டாலும், கிறிஸ்தவப் பெண்கள், சபையிலேயாவது ஜெபம் பண்ணும்போதும், தீர்க்கதரிசனம் சொல்லும் போதும் மற்ற சபை நேரங்களிலும் முக்காடிட்டுக் கொண்டு தன் தலையாகிய புருஷனைக் கனப்படுத்த வேண்டும் என்பது அப்போஸ்தல உபதேசம் (1கொரி 11:5). இதைக் கைக் கொள்வது ஸ்திரீகளின் கடமையாகும். பெண்கள் நீளமான தலை மயிர் வைக்க வேண்டும் என்பதான சுபாவம், முக்காடிட வேண்டும் என்பதை சொல்லிக் கொடுக்கிறது (1கொரி 11:15). இப்படியாய் முக்காடிடுவது அழகுக்காக அல்ல. இன்றைய சபைகளில் அப்படியே நடக்கின்றன. முக்காடு என்றால் "மூக்காடு" அதாவது மூக்குவரை மூட வேண்டும் என்ற அர்த்தத்தில் உள்ளதாக வேத வல்லுநர்கள் கூறுகிறார்கள். உன் 4:1,3; 6:7 போன்ற வசனங்களின்படி முக்காடிற்குள்ளே தான் கண்கள், கன்னங்கள் எல்லாமே இருப்பதாக அறிகிறோம். எனவே இப்படிப்பட்ட முக்காடு சபையிலே பெண்களுக்கு இருக்கட்டும். இந்த முக்காட்டுக்கான காரியம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து கிளம்பி வரட்டும். அல்லேலூயா! அழகுக்காய் முக்காடிட நினைப்பது வசனத்திற்கு விரோதமான செயல்.

❖ ❖ ❖

## இயேசுவின் இரத்தம் விலையேறப் பெற்றதா?

இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு இல்லை என்று எபி 9:22 சொல்கின்றது. இது எப்படி சாத்தியமாகும்? ஆதி 9:5,6ஐ வாசியுங்கள். மனுஷன் தேவசாயலாய் படைக்கப்பட்டபடியால் (ஆதி 1:26) அந்த மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்த வைக்கிறானோ

(அல்லது அந்த மனுஷனுக்கு விரோதமாய் எவன் குற்றம் - பாவம் - தீங்கு செய்கிறானோ) அவன் தேவனை அவமதிக்கிறான் என்று அர்த்தம். தேவனை அவமதிக்கிறவனுக்கு இந்த உலகில் கொடுக்க முடிந்த மிகப்பெரிய தண்டனை இரத்தம் சிந்துதல் - அதாவது மரணம். இப்படியாய் தேவனே தண்டனை கொடுத்து பழிவாங்குவேன் என்று சொல்லியிருப்பதால், மனச்சாட்சியினிமித்தம் ஆபேல் முதற்கொண்டு அனைவரும் மிருகத்தின் இரத்தத்தை சிந்த வைத்து பாவ நிவாரணம் தேடினார்கள். ஆனாலும் முழுமையாய் எவரும் நிவாரணம் அடையவில்லை; மாறாக பாவம் செய்தவனை கொன்று போட்டாலும் பாவமன்னிப்பு ஒருவேளை கிடைத்தாலும், அதே மன்னிப்பை அவனால் அனுபவிக்கக முடியாது; அதனால் யாருக்குமே பயன் இல்லாமல் போகிறது. ஒரு வேளை ஊர்நீதிப் பார்வைக்கு இது சரியாக இருந்தாலும், இதிலே சம்பந்தப்பட்ட இருவருக்குமே பிரயோஜன மில்லையே! இதைத்தான் தேவன் ஆதியிலே சிந்தித்தார். இதைத்தான் லேவி 17:11ல் சொன்னார். இரத்தத்தை பலி செலுத்து என்று கட்டளையிட்டார். பாவ தண்டனைக்கு உண்டான தண்டனையை செலுத்தும் செயல் என்றார். ஏனெனில் பாவத்தின் முடிவு மரணம்தானே. இப்படியாய் மிருகப் பலி செலுத்துவதை உலகத் தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய மேசியாவின் இரத்தம் சிந்தப்படப் போவதற்கு நிழலாட்டமாய் சொன்னார். விசுவாசித்தவன் அன்றும் வெற்றி பெற்றான். அல்லேலூயா! வெள்ளாட்டுக்கிடா, காளையின் இரத்தத்தை விட இயேசு கிறிஸ்துவின் இரத்தம் விலையேறப்பெற்றது. இந்த இரத்தத்தால் மனிதன் பாவமன்னிப்பு பெற்று (தான் இரத்தம் சிந்தாமல்) சந்தோஷமாய் வாழ்கிறான். கொலோ 1:13-14ன்படி அவன் பாவத்தின் தண்டனையாகிய மரணத்தினின்று விடுதலையாகின்றான்.

அப்படியென்ன நம் இயேசுவின் இரத்தம் விலையேறப் பெற்றது? "பலி செலுத்துவோர் ஒரு செலவு கூட இல்லாமல் ஓசியிலே பலி செலுத்தினால் அது பலியே அல்ல" என்று தாவீது 2சாமு 24:24ல் சொல்வதைப் பாருங்கள். ஆக பலிப் பொருளுக்கு கண்டிப்பாய் விலை உண்டு; விலை தேவை. மிக மிக அதிகமான செலவிலே பலி செலுத்தப்பட்டது. சாலமோன் தான் கட்டின தேவாலயத்தை பிரதிஷ்டை பண்ணியபோது என்ன செய்தான் என்று வேதம் சொல்கின்றது (1ராஜா 8:62-64). இது இதுவரை சரித்திரம் காணாத பலி முறையாம். 22,000 மாடுகளும், 1,20,000 ஆடுகளும் பலியிடப்பட்டனவாம். நினைத்துப் பார்க்கவே ஆச்சரியமாய் இருக்கிறது. பலியான பின் ஓடியிருக்கும் இரத்த வெள்ளத்தை ஒரு கணம் எண்ணிப் பாருங்கள். இக்கால

கணக்குப்படி அந்தப் பலிப்பொருட்களின் விலை 13 மல்லியன் அமெரிக்க டாலராம்! ஏன் சாலமோன் இவ்வளவு செலவழித்தான்! தனக்காய் தன் மக்களுக்காய் ரத்தம் சிந்த வருபவரின் இரத்தத்தின் விலைக்கு ஈடாய் பலி செலுத்த முடியாது; அது விலையேறப்பெற்றது என்று அந்த ஞானி விசுவாசித்தான். அல்லேலூயா! இரட்சிப்பு ‘Cheap’ அல்ல. விலை மதிக்க முடியாதது. அதை விசுவாசிக்கிறவர்களுக்கு இலவசமாய் தருகிறார் தேவன்.

நம் இயேசுவின் இரத்தம் சாதாரண இரத்தமல்ல; உலகில் மேன்மையான வஸ்து பொன்; அந்த பொன்னைப் படைத்தவரின் இரத்தம் விலையேறப்பெற்றது (1பேது 1:18,19). இது மனிதனுக்கும் பெண்ணுக்கும் பிறக்கவில்லையே! அப் 20:28ஐ வாசியுங்கள். இது அவரின் சுயரத்தம். எபி 2:14ஐ வைத்துக் கொண்டு அது சாதாரண Ordinary - இரத்தம் என்கின்றனர். “அதாவது நம் இரத்தம் உடையவரானார்- He took part” என்கின்றனர். ஆனால் மூல பாஷையில் ‘Metechos’ என்று சொல்லாமல் ‘Koinonia’ என்று உள்ளது. அதாவது Not shared fully – “முழுவதுமாய் அவர் ஆகவில்லை” என்று பொருள். மேலும் தேவ இரத்தம், மரியாளின் கர்ப்ப முட்டையோடு இணைந்து (Egg Fertilisation) இயேசு உருப்பெற்றிருப்பார் என்றும் சிலர் சொல்கின்றனர். இது முழுக்க முழுக்க தவறு; எபி 10:5ஐ வாசியுங்கள். இயேசுவின் சரீரம் பரலோகத்திலேயே செய்யப்பட்டு, மரியாளின் கர்ப்பபைக்குள் வைக்கப்பட்டிருக்கிறது. அல்லேலூயா! எனவே மனித இரத்தக் கலப்பே இயேசுவின் இரத்தத்தில் இல்லை. இது விலையேறப்பெற்றது. தொப்பூழ் கொடி மூலமாய் உணவு தான் அனுப்பப்பட்டிருக்க வேண்டும். மனித இரத்தத்தில் இருப்பது மனித ஜீவன் (லேவி 17:11) இயேசுவின் இரத்தத்தில் இருப்பதோ நித்திய ஜீவன். இது இன்றைக்கும் பரலோகில் இருக்கிறது. (எபி 12:24).

**இந்த விலையேறப்பெற்ற இரத்தம் சிந்துதலினால் நமக்கு என்ன பிரயோஜனம் என்று பார்ப்போம்.** (1) சாத்தானின் அதிகாரத்திலிருந்து விடுதலை (கொலோ 1:13; எபே 1:17; எபி 9:12), (2) நம் பாவங்கள் அனைத்தும் கழுவப்பட்டாயிற்று; பழைய பாவங்கள் ஒழிந்தன (1யோ 1:7-9), (3) பாவ மனிதன் நீதிமானாக்கப்படுகின்றான் (ரோ 3:23; 5:9; 2கொரி 5:21), (4) தேவ பிரசன்னத்தில் செல்ல வழி நமக்குக் கிடைத்துள்ளது (எபி 10:19,20), (5) நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம் (எபி 9:14; 2தீமோ 1:7). (7) பிசாசை ஜெயிக்கிறோம் (வெளி 12:11). (8) சாபங்கள் தீர்ந்தன, (9) நித்திய ஜீவன் நமக்குண்டு. இன்னும் ஏராளம் உண்டு. இந்த விலையேறப்பெற்ற இரத்தத்தை வருஷத்துக்கு ஒரு முறையோ அல்லது மாதம் ஒரு

முறையோ, வாரம் ஒரு முறையோ நினைக்காமல் அனுதினமும் நினைப்போம்; விசுவாசிப்போம்; உலகத்தை ஜெயிப்போம்; வெற்றி வாழ்க்கை வாழ்வோம் (1யோ 5:4). அல்லேலூயா!

❖ ❖ ❖

# ஆபிரகாம் தன் ஜாதியில்தான் பெண் எடுத்தானா?

ஆதி 24:3,4 வசனங்களை வைத்துக் கொண்டு, ஆபிரகாம் தன் மகன் ஈசாக்குக்கு தன் இனத்தில்தான் (ஜாதியில்தான்) பெண் எடுத்தான் என்று பலர் எண்ணி, விசுவாச மார்க்கத்தானாகிய நான் ஆபிரகாம் சந்ததி என்பதால் (கலா 3:7) என் ஜாதியில்தான் பெண் எடுப்பேன் என்று சொல்கிறார்கள். ஜாதியில் இவ்வளவு அக்கறை காட்டுபவர்கள், ஆபிரகாம், "பெண் வீட்டாருக்கு சீதனம் கொடுத்தது போல் கொடுப்பேன்" என்று மட்டும் சொல்லாமல், பெண் வீட்டாரிடமிருந்து தான் வாங்குவேன் என்று ஒற்றைக் காலில் நிற்கிறார்களே. ஏன்? சீதனம் மட்டும் உங்கள் இஷ்டப்படி; ஜாதி மட்டும் ஆபிரகாம் செய்தபடியா? ஆபிரகாம் செய்தது என்ன என்று பார்ப்போம்! **வேதத்திலே மூன்று விதமான மனிதப் பிரிவுகள்தான் உண்டு** (1கொரி 10:33). 1. யூத மக்கள், 2. புறஜாதி மக்கள், 3. சபையார். 2கொரி 6:14ன்படி சபையார் -அதாவது இரட்சிக்கப்பட்ட சபையார் அந்நிய நுகத்திலே - இரட்சிக்கப்படாதவர்களோடு விவாகம் செய்யக்கூடாது. அதாவது "என்ளீசியா" பிரித்தெடுக்கப்பட்ட சபையார் வேறு எந்தப் பிரிவோடும் திருமணம் பண்ணக் கூடாது. (2கொரி 6:14-18) இந்த மூன்று ஜாதிப் பிரிவைத் தவிர வேறே எந்த ஜாதிப்பிரிவும் தேவன் அனுமதிக்கவில்லை; அவைகள் மனிதனின் உருவாக்கம். இரட்சிக்கப்பட்டோர் எல்லாருமே ஒரு ஜாதி; அதுதான் பரிசுத்த ஜாதி (1பேது 2:9). ஆபிரகாம் வாழ்ந்த இடம் கானானியர் வாழ்ந்த இடம். கானானியக் குடும்பம் தேவனை விசுவாசிக்காத இராட்சத குடும்பம். அதிலே பெண் கொள்ள ஆபிரகாம் விரும்பவில்லை. ஏனென்றால் அது அந்நிய நுகம்; தேவனுடைய பார்வைக்கு பொல்லாதது. சாலமோன் விஷயத்தில் இது வெளிப்படுகிறதே! (1ராஜா 11) வேறு யாருமே யெகோவா தேவனை விசுவாசிப்போர் இல்லை. அதனால் அவன் இனத்தாரிடம் ஆள் அனுப்பினார். அவன் இனத்தார் அந்நிய நுகமா? எலியேசர் ஜெபித்துக் கொண்டே போகிறான். தேவன் அவனுக்குக் காட்டியது ரெபேக்காளை. ஆதி 24:24ன்படி இவள் நாகோரின் பேத்தி. யார் இந்த நாகோர்?

தேராகுக்குப் பிறந்த ஆபிரகாம், நாகோர், ஆரான் என்பவர்களில் ஒருவன் (ஆதி 11:26). தேராகு என்பவன் அந்நிய தேவர்களை சேவித்தவன் (யோசு 24:2). நாகோரோ அப்படியல்ல; ஆபிரகாமின் தேவனும் அவன் தம்பி நாகோரின் தேவனும் ஒன்றே என்று யாக்கோபு சாட்சியிடுவதை ஆதி 31:53ல் பாருங்கள். தான் வணங்கும் தேவனை உடைய நாகோருக்கு பிள்ளைகள் இருக்கின்றன என ஆபிரகாம் அறிந்து (ஆதி 22:20) நாகோருடைய ஊருக்கு எலியேசரை அனுப்புகிறான்; எலியேசரும் அங்கு வந்துதான் பெண் தேடுகின்றான் (ஆதி 24:10). இதைப் படிக்கும் சகோதரரே! ஜாதி நமக்குத் தூரமாயிருப்பதாக! அந்நிய நுகத்தோடு இரட்சிக்கப்படாத மக்களோடு, சபையாரோடு திருமண உறவு வேண்டாம். ஆபிரகாம் சந்ததியாகிய நாம் அவனைப் போல, தெய்வபயம் உள்ள குடும்பத்திலே பெண் எடுப்போம். இதுவே கர்த்தருக்குப் பிரியமான ஒன்று. அதையே செய்வோம்! அதையே பிறருக்கும் சொல்வோம்!

❖ ❖ ❖

# மரியாளின் வார்த்தையை கேட்பவனே கிறிஸ்தவன்

மரியாள் என்ற உடனே பெயரைக் கூட உச்சரிக்க மறுக்கும் கிறிஸ்தவ கூட்டம் ஒருபக்கம்; மரியாளை தெய்வத்திற்கு சமமாய் வைத்து தோத்தரிக்கும் கிறிஸ்தவ கூட்டம் ஒரு பக்கம். இப்படியாய் உலகிலுள்ள கிறிஸ்தவ மக்கள் காணப்படுகிறார்கள். ஆவிக்குரிய சபை என்று சொல்பவர்கள், பேதுரு, யோவான், எஸ்தர், என்றெல்லாம் தங்கள் பிள்ளைகளுக்குப் பெயர் வைக்கிறார்கள். மரியாள் என்று மாத்திரம் பெயர் வைப்பதில்லையே. ஏன்? மரியாள் என்ன பாவியா? நோவாவைப் போல, ரூத்தைப் போல, பவுலைப் போல இவள் கர்த்தருடைய கண்களில் கிருபை பெற்றவளாயிற்றே! (ஆதி 6:8; 19:19; 2கொரி 1212:9; லூக் 1:28). ஸ்திரீகளிடத்திலே யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினது இல்லை என்பது போல (மத் 11:1) ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் இந்த மரியாள் தானே! (லூக் 1:28). இப்படிப்பட்ட மரியாளை மதிக்காமலிருப்பது, அவர் வாயிலிருந்து வந்த வார்த்தைகளை விசுவாசித்து நடக்காமலிப்பது பாவமல்லவா! பவுலின் வாயிலிருந்து, பேதுருவின் வாயிலிருந்து வந்ததை விசுவாசிக்கிற நீ, மரியாளின் வார்த்தையை மாத்திரம் ஏன் அசட்டைப் பண்ணுகிறாய்? ரோமன்

கத்தோலிக்க மார்க்கத்தார் மரியாளை தேவனுக்குச் சமமாய் வைத்து துதிப்பதினாலே, அந்த மரியாளுக்கு மரியாதை கொடுத்தால் இன்னும் அப்படிப்பட்டதான மரியாள் "வணக்கம்" வளர்ந்து விடும் என்று பயப்படுகிறாயா? அப்படி யோபுவைப் போல நீ பயப்பட்டு செயல்படுவதால் தான், "மரியாளின் வணக்கம்" குறையாமல் பெருகிவருகிறது! (யோபு 3:25). சென்னையிலிருந்து அமெரிக்காவிற்கே ஆரோக்கிய மாதாவின் சிலை அனுப்பப்படுகின்றது. இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நம்முடைய ஆண்டவரை சுமந்த கர்ப்பமும், பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளது அல்லவா (லூக் 11:27). அது உண்மையென்றும் தேவன் இயேசு ஆமோதிக்கின்றாரே! ஆனாலும் அவருடைய வார்த்தையை கேட்டு நடப்பவர்கள் அதிக பாக்கியவான்கள் என்று லூக் 11:28ல் சொல்லப்பட்டதை அறிகிறேன். பாக்கியவதியையே மதிக்காமல், பாக்கியவதியின் வார்த்தையையே கேட்காமல் எப்படி அதிக பாக்கியவானாக முடியும். யோ 1:12ன் படியான தேவ பிள்ளைகள் அனைவரும் எப்படி தேவனுக்கு அடிமையோ, அப்படியே மரியாளும் தன்னை தேவனுக்கு அடிமை என்றே ஒப்புக் கொள்கிறாள்! (லூக் 1:3) காரணம் எந்த தேவனைச் சுமந்தாளோ அதே தேவனால் படைக்கப்பட்ட மகளாயிற்றே! கானாவூர் கல்யாணத்திலே திராட்சைரசம் குறைவுப்பட்டபோது, பாக்கியவதி மரியாள் சொன்ன வார்த்தையை பாருங்கள்: "அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள்." (யோ 2:5) நாம் வைத்திருக்கும் ஆவியின் பட்டயமாம் வேதத்திலே மரியாள் சொன்ன கடைசி வார்த்தை இது. இந்த வார்த்தையை, இயேசுவைப் பற்றி அறியாத வேலைக்காரர்கள் விசுவாசித்து செயல்பட்டார்கள்; வெற்றி கிடைத்தது. ஆனால் பாரம்பரிய கிறிஸ்தவன் என்று பெருமை பாராட்டும் நீ மட்டும் ஏன் அதை நம்பி அதன்படி செயல்பட மறுக்கிறாய்! இயேசு என்ன சொன்னாரோ அதற்கு கீழ்ப்படிந்து நடப்பவன் தான் மரியாளை மதிப்பவன்; மற்றவர்களெல்லாம் வீணே மரியாளுக்கு ஆரவாரம் செய்பவர்கள் தான். இயேசு சொன்னார்:- "மனந்திரும்புங்கள்; மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; பெற வையுங்கள். நான் போதித்த வசனப்படி நடவுங்கள். பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் என்னிடம்தான் உண்டு. நான் மன்னிக்க சித்தமாய் இருக்கிறேன்; பாரம்பரியத்தால் தேவனுடைய கற்பனைகளை அவமதிக்காதீர்கள். விபச்சாரக்காரனும் விக்ரக ஆராதனைக்காரனும் ஒன்றே! என் சிலுவையை எடுத்துக் கொண்டு நடவாதே! உன் சிலுவையை எடுத்துக் கொண்டு என் பின்னே வா. இது போன்ற அவரின் வார்த்தைகளை விசுவாசித்து கீழ்ப்படிந்து நடப்பவன்தான் மரியாளை மதிக்கும் கிறிஸ்தவன்; மரியாளின் வார்த்தையை நினைக்கும் கிறிஸ்தவன்; உண்மைக் கிறிஸ்தவன். மற்றவர்களெல்லாம் மாய்மால,

புறஜாதிகளைப் போன்ற பெயர்க்கிறிஸ்தவர்கள் தான். இன்றே சிந்திப்போம்! செயல்படுவோம்!

❖ ❖ ❖

# நீதிமானின் எலும்புகள் முறிக்கப்படுமா?

இன்றைக்கு அநேக ஊழியக்காரர்கள் ஆக்சிடெண்டாலோ, வியாதியாலோ எலும்புகள் முறிக்கப்படுவதை கேள்விப்படுகிறோம். ஒரு சில ஊழியக்காரர்கள் இது தேவசித்தம் என்கின்றனர். தேவனுடைய பிள்ளைகளின் எலும்புகள், சுவிசேஷ நிமித்தமாய் வரும் எதிர்ப்புகள் அல்லாமல், மற்றபடி வியாதி, விபத்து போன்றவைகளால் முறிக்கப்படுவது எப்படி தேவ சித்தமாகும்? நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்த தேவன் (அப் 10:38) தீமையினின்று பாதுகாக்கின்ற தேவன் (லூக் 11:4) நற்கிரியைகளைச் செய்வதே தனது செய்கையாக உள்ள தேவன் (எபே 2:10) பொல்லாங்கினால் சோதிக்காத தேவன் (யாக் 1:13) எப்படி இதை தம் சித்தமாகக் கொள்வார்? சிந்தியுங்கள். "தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" (யோ 9:3) என்று குருடனைப் பற்றித் தேவன் சொன்னதை வைத்துக் கொண்டு இதுவும் தேவ சித்தம் என்கின்றனர் பலர். தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்பட்டது எப்போது? இவன் குருடனாயிருந்த போதா? இல்லை. அவன் பார்வையடைந்த போது (யோ 9 முழுவதும் வாசியுங்கள் புரியும்.). ஆக தேவனுடைய கிரியை-சித்தம், நன்மைக்குத் தானே ஒழிய பொல்லாங்குக்கு அல்ல. தேவன் அனுமதித்துத்தான் எலும்பு முறிந்தது என்று சொல்வோரும் உண்டு. நம்மை கண்ணின் மணிபோல பாதுகாக்கிறேன் என்றவர் எப்படி பிசாசுக்கு அனுமதி கொடுப்பார்? தீமையினின்று நம்மைக் காப்பவர் தீமைக்குள்ளே நாம் நுழைய வழிவகுப்பாரா? (யோபுவுக்கு அனுமதி கொடுத்தாரே என்று வாதிடுவோர் ஆசிரியரின் "வியாதியா? மரணமா?" என்ற புத்தகத்தை வாசியுங்கள்). பொல்லாங்கான காரியம் நடக்கும்போது கர்த்தர் மேல் காரணத்தைப் போடுவது தவறு.

"நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்; கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்; அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார்; அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை" என்ற சங் 34:19,20ஐ வாசியுங்கள். இதிலே சொல்லப்பட்ட நீதிமான் யார்? ரோ 3:23,24; 10:9,10; 1கொரி 6:11 போன்றவற்றில் சொல்லப்பட்ட பாவத்திற்கு மரித்து நீதிக்குப்

பிழைத்திருக்கிற நாம்தான். ஆனால் சங்கீதத்தில் சொல்லப்பட்டது இயேசு என்று சொல்வோரும் உண்டு. மறுபடியும் இந்த வசனத்தை வாசியுங்கள். இயேசுவை எங்குமே அவன், இவன் என்று வேதத்தில் எழுதப்பட்டதே இல்லை. இந்த வசனம் பொதுவாய் இயேசுவுக்காகவும் நம் எல்லோருக்காகவும் எழுதப்பட்டது. யோ 19:36ன்படி இந்த வசனம் இயேசுவுக்காய் எழுதப்பட்டது என்று சொல்லி தங்களுக்கு ஏற்பட்ட காரியத்துக்கு மாறுத்தரம் சொல்ல சிலர் ஆரம்பிக்கிறார்கள். நிச்சயமாய் இவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறவர்கள். இந்த வாக்கியம் நீதிமான்கள் எல்லோருக்காகவும் எழுதப்பட்டதாலே, அது நீதிபரராகிய இயேசுவுக்குள்ளும் நிறைவேறியது என்று அறியுங்கள். சிலுவையிலே இரட்சிப்புக்குள்ளே வந்த வலது புறக்கள்ளனின் கால்கள் முறிக்கப்பட்டதே அது ஏன் என்று கேள்வி கேட்போரும் உண்டு (யோ 19:32). அவர்களின் கேள்வியின் பாணியிலேயே நான் ஒன்று கேட்கிறேன். வலது புறக்கள்ளனின் கால்கள் முறிக்கப்பட்டதால், நீதிமானின் எலும்புகள் முறிக்கப்படுவதில்லை என்ற வசனம் பொய்யாகுமா? எலிசா, தீமோத்தேயு போன்ற தேவ மனுஷர்களுக்கு வியாதி வந்ததால் வாதை உன் கூடாரத்தை அணுகாது என்ற வசனம் பொய்யாகுமா? கிறிஸ்தவர்களின் வாழ்க்கையை எடைபோடு. இன்னும் கொஞ்சம் யோசிப்போம். எப்பொழுது ஒருவன் நீதிமானாகிறான் தெரியுமா? இருதயத்திலே விசுவாசித்து வாயினாலே அறிக்கை பண்ணும்போது (ரோ 10:9,10) தான். அப்போது அவன் பாவப்பிடியிலிருந்து மட்டும் விடுதலையாகின்றான் என்று அறிய வேண்டும். ஆனாலும் தேவன் அவனுக்கு நீதிமான் என்று பட்டமளிக்கிறார் (1கொரி 6:11; ரோ 3:23,24). இந்தப்பட்டம் நியாயத்தீர்ப்பின்போது உறுதியாக்கிவிடுவார் தேவன். பழைய ஏற்பாடு மக்களுக்கெல்லாம் பாவங்கள் மூடப்பட்டதே ஒழிய, பாவமன்னிப்பு - பாவங்கள் அழிப்பு (Eraze) நடக்கவில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தாலே தான் இந்த உன்னதமான ஈவு புதிய ஏற்பாட்டு சபையாருக்கு கிடைத்தது. அல்லேலூயா! ஆனாலும், பாவங்கள் மூடப்பட்டாலே, அவர்களும் நீதிமான்கள் என்ற லிஸ்டில் வந்துவிடுகிறார்கள். அவர்களே எபி 11ல் வருபவர்கள். இப்படிப்பட்ட - இரட்சிக்கப்பட்ட கள்ளன், தனது பழைய பயங்கர குற்றத்திற்காகவே சிலுவையிலறையப்பட்டான். தேவனின் பார்வையில் இவன் மன்னிக்கப்பட்டிருந்தாலும், அரசாங்கப் பார்வையில் அவன் குற்றவாளியே. எனவே ரோமர் சட்டப்படி அவன் கால்கள் முறிக்கப்பட்டது சரியே! இரட்சிக்கப்பட்டு, நீதிமானாக்கப்பட்ட பின்னும், அவன் பாவம் இல்லாதிருந்தும் பழைய பாவத்திற்கான உலக முறைமை இது.

ஆக, சுவிசேஷத்தினிமித்தம் தேவனுக்காய் நாம் பாடுகள் எப்படி வேண்டுமானாலும் படலாம். ஆனால் மற்ற காரியங்களில் நீதிமானின் எலும்புகள் முறிக்கப்படுவதே இல்லை. ஆமென். தேவனுக்காய் இரத்த சாட்சியாய் மரிப்பது வேறு; நமது சொந்த காரியங்களில் நடப்பது வேறு; மரிப்பது வேறு.

❖ ❖ ❖

# பாபிலோனியக் கொள்கை (BABYLONIAN CULTS)

வாலிப சகோதரரே! இன்றைக்கு கிட்டத்தட்ட எல்லா சபைகளிலும் பாபிலோனியக் கொள்கைகள் வளர்ந்து விட்டதைக் காணலாம்! இந்த பாபிலோன் என்பது என்ன? இது ஒரு நகரமா? வெளி 17:5ஐ வாசியுங்கள். இது வேசித்தனமான இரகசியம் என்று சொல்கின்றது. இரகசியம் என்று அழைக்கப்பட்டு நகரமாய் காட்சி தந்த ஒன்று வேதத்தில் உள்ளது. அதுதான் சபையாகிய மணவாட்டி (எபே 3:1-21; 5:23-32; வெளி 21:9-10); இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியைப் போல இந்த வெளி 17:5ல் சொல்லப்பட்டது, அந்தி கிறிஸ்துவின் மணவாட்டி. இயேசு கிறிஸ்துவின் சபையாகிய மணவாட்டி கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்திருப்பாள்; கிறிஸ்துவால் எப்போதும் மகிமையடைவாள். ஆனால் அந்தி கிறிஸ்துவின் சபையாகிய மணவாட்டியோ புருஷனை ஆட்டிப்படைத்து அவன் மேல் ஏறி உட்கார்ந்திருப்பவள் (வெளி 17:7); கடைசியில் அந்தி கிறிஸ்துவாலே அழிக்கப்படுவாள் (வெளி 17:16) எப்படி மணவாட்டி சபை என்பது ஆவிக்குரிய சபையாரின் தொகுப்போ (மத் 16:18) அப்படியே பாபிலோனிய சபை என்பது, எபி 6:1-2ன்படி அடிப்படை சத்தியம் இல்லாத பாபிலோனியக் கொள்கை நிறைந்த சபையாரின் தொகுப்பு. இந்த பாபிலோனியக் கொள்கை எப்படி வந்தது என்று பார்ப்போம்.

பாபிலோன் என்றாலே குழப்பம் என்று பொருள். ஏதேனில் ஓடிய ஆற்றின் 4ம் கிளை நதியான ஐபிராத்தின் கீழ்க்கரைதான் பாபிலோன் ஸ்தலம் (ஆதி 2:10-15). இங்கிருந்துதான் சாத்தான், ஆதாம் - ஏவாளை சோதித்தான் என்று கணிக்கப்படுகின்றது. சாத்தானின் தலைநகரமே இதுதான். இங்கிருந்து தான் பாவம் பெருகியதாம். அதனாலே ஜலப்பிரளயம் வந்ததாம். அதன்பின் நிம்ரோத் என்ற அரசன் இந்த இடத்தில் தான் "பாபேல்" கட்டினானாம். (ஆதி 10:8-10). உலகில்

மிகப்பெரிய தேவதுரோகம் இங்குதான் ஆரம்பமானது. மக்கள் பல பாஷைகளில் இங்கிருந்து சிதறிப் போகும் போதே, பிசாசானவன் பாபிலோனியக் கொள்கையாகிய விஷக்கிருமியை அவர்கள் மேல் விதைத்துவிட்டான். அந்த விஷக்கிருமி சுலபமாக உலகெங்கும் பரவியது. இப்படியான தேவனுக்கு விரோதமான பாபிலோனியன் Cultஐ "தெய்வ ஞானம்" என்று அப்போது நம்பினர். இன்றைக்கும் சபைகளிலே சில காரியங்களை தெய்வஞானம் என்று சொல்கின்றார்களே அப்படிப்போல! இப்படிப்பட்ட குழுமத்தில் சேருமுன், எல்லோரும் பூஜாரி-ஆசாரியன் - முன்னாலே, பாவ அறிக்கை பண்ண வேண்டும். இந்த முறை இன்னும் சில சபைகளிலும் உண்டே. அன்று பாவ அறிக்கை செய்தவன் இனி அசீரியனோ, எகிப்தியனோ அல்ல; இனி Mystical Brotherhood – "அபூர்வ சகோதரர்கள" என்று அழைக்கப்பட்டனர். அங்கே தலைமைப் பூஜாரி சொல்வதே சட்டம். இன்றும் பல சபைகளில் அப்படித்தான். இந்த பாபிலோன் நகரம் உலக மகா வல்லரசான மேதிய - பெர்சிய சாம்ராஜ்யம் வரை தலைமையிடமாயிருந்தது. அதற்குப்பின் வெளி 2:13ன் படி பெர்கமுக்கு சாத்தானால் மாற்றப்பட்டது என அறியலாம். கி.பி 133ல் அதன் தலைமைப் பூசாரி அட்டலஸ் மரிக்கும்போது, தன் பாபிலோனிய பூசாரிப் பதவியை ரோமுக்கு ஒப்புக் கொடுத்தான். இதனால் ரோமில் பாபிலோனிய சடங்குகள் பெருகின. பாபிலோனின் வாரிசாக மாறிய ரோமில் தலைமைப் பூஜாரியே அரசனானான். ஜூலியஸ் சீசர் இந்த நிலைக்கு வந்தான். கி.பி 376 வரை ரோமச் சக்ரவர்த்திகள் இந்த காரியத்தை கவனித்து வந்தனர். கிரேஷியன் என்ற ரோம சக்ரவர்த்தி, பூஜாரி காரியம் செய்ய கிறிஸ்தவ கொள்கை அடிப்படையில் ஒப்புக் கொள்ளாமல் வெளியேறினான். அதனால் தமாஸல் என்பவர் ராஜாவாகவும் பூசாரியாகவும் கி.பி 378ல் மாறினார். இவன் Mount கர்மேல் பாபிலோனிய மதக்கொள்கை பயிற்சி நிலையத்தில் தலைமைக் குருவாக இருந்தவர். (கர்மேல் பர்வதத்தில் தானே, ஆகாபின் மனைவியின் தேவ துரோகம் பெரிதாகி, தேவ அக்கினியால் வீழ்ந்து போனது). இவ்விதமாய் சாத்தான் ரோமையும் பாபிலோனையும் இணைத்தான். இந்த தமாஸஸ் மூலம்தான் பாபிலோனியக் கொள்கை உலகெங்கும் எல்லா சபைகளிலும் பரவியது.

கி.பி 381ல் கன்னிமரி தொழுகை வந்தது. பாபிலோனிய வானத்து அரசியின் பெயர் இஷ்டார். இவள் சம்பந்தமுள்ள விழாவை ஈஸ்டர் விழா என்று கிறிஸ்தவர்கள் கொண்டாட ஆரம்பித்தனர். கி.பி 519ல் ஒவ்வொரு சபையாலும் இதைக் கொண்டாடியே ஆக வேண்டும் என்று சட்டம் போடப்பட்டது. கிறிஸ்துமஸ் விழா, ஜெபமாலை பழக்கம் எல்லாம் அனுசரிக்கப்பட்டது. டிசம்பர் 25ல் இயேசு பிறகக்கவில்லை. இது பாபிலோனிய தேவதைக்குரிய விழா நாள். ஈஸ்டர் ஒவ்வொரு

வருடமும் வெவ்வேரு தேதிகளில் ஏன் வருகிறது? சூரியனை அடிப்படையாக வைத்து நாட்களை கணித்து அதற்கேற்றபடி இஷ்டார் தேவதை விழாவரும் நாள் அது. Tamuiz (தமூஸ்) என்ற பாபிலோனிய தேவதை பெயரிலுள்ள 'T' (Tou) என்ற முதலெழுத்தை கல்தேயரும் எகிப்தியரும் மந்திர எழுத்தாய் வைத்திருந்தனர். அந்த அடிப்பபடையில் சிலுவை சின்னம் உபயோகப்பட ஆரம்பித்தது. இன்றைக்கு ஈனச்சிலுவை புனித சிலுவை என்று "சிலுவை ஓர் புனித சின்னம்" எனப் பாடவும் ஆரம்பித்துவிட்டனர். சிலுவை அல்ல புனிதம்; சிலுவையில் அறையப்பட்டவரே புனிதர். காந்தி துப்பாக்கியால் மரித்தார் என்றால் மரியாதை துப்பாக்கிக்கா, காந்திக்கா? கட்டபொம்மன் தூக்குக் கயிற்றில் மரித்து தியாகியாய் ஆனாலும், மரியாதை தூக்குகயிறுக்கா, கட்டபொம்மனுக்கா? பிரம்மச்சாரித்துவம் ஆசரிப்பு வந்தது. இன்னும் பல சபைகளில் இவர்களே புனிதர் என்று கருதப்படுகிறது. தலைமுடியின் சிறு பகுதியை ஒட்ட சவரம் செய்தல் (Celebacy) கன்னிமாட ஏற்பாடு போன்றவை ஏற்பட்டது. அஞ்ஞான பாபிலோனிய வீட்டு தேவதை வெஸ்டாவின் அடிமைகள் தேவதா கன்னிகைகளாம். அவர்களுக்கு சமமாய் Nuns உருவாக்கப்பட்டனர்.

இந்த அடிப்படை பாபிலோனியக் கொள்கைகள் வளர்ந்து வளர்ந்து பிற்பாடு குழந்தை ஞானஸ்நானம்; Holy Water (தீர்த்தம்), மேடைமேல் தீபம், "அப்பமும் ரசமும், தேவனின் சரீரமும் இரத்தமும் என உட்கொள்ளல்", ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாள் ஆசரிப்பு, இரத்தாம்பரம், சிவப்பு போன்ற நிற அங்கிகள் உடைய பூஜாரிகள் (வெளி 17:4); மரித்த பின்னும் இரட்சிக்கப்பட வாய்ப்பு (உத்தரிகக்கிற ஸ்தலம்), வெளிப்படையான சன்மார்க்க முறைகள், பாபேல் போல கோயில்களை வானம் நோக்கி கட்டுதல், சிலை மற்றும் உருவ அமைப்பும் வழிபாடும், பலதரப்பட்ட கொள்கை உடையோரிடமும் சேர்ந்து ஆராதனை செய்தல் போன்ற பல பாபிலோனிய வழக்கங்கள் சபைக்குள் வந்துவிட்டன. இவைகளை கி.பி. 538ல் உலகமுழுவதிற்கும் தலைவராய் வந்த போப்புவால் அங்கீகரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது.

இவைகள் மட்டுமல்ல; இன்னும் ஏராளம் உள்ளன. இப்படிப்பட்ட கொள்கைகள் உடைய சபையில் நீ இருக்கிறாயா? இருந்தால் இன்றே வெளியேறு! மணவாட்டி சபையிலே சேர்ந்து கொள். பரிபூரண மணவாட்டி சபை ஏதும் இல்லையென்றால், எபி 6:1-2ன்படியான அடிப்படை சத்தியம் உள்ள சபைகளில் சேர்ந்து கொண்டு உன் ஆவிக்குரிய காரியத்தில் வளர்ச்சி பெறு! வெற்றி நிச்சயம்! உன் பாரம்பரிய சபை உன்னை பரலோகம் கொண்டு போகாது என்று முதலில் அறிந்து கொள்!

# ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளா?

பல கிறிஸ்தவர்கள் ஏசா 58:13,14ஐச் சொல்லி, ஞாயிற்றுக் கிழமை ஓய்வுநாளென்று அறிக்கையிட்டு 14ம் வசனத்தில் சொல்லப்பட்ட ஆசீர்வாதம் கிடைக்கும் என்று விசுவாசிக்கின்றனர். இரட்சிக்கப்பட்ட நாமெல்லாம் ஆபிரகாமின் பிள்ளைகள்: ஆபிரகாமின் ஆசீர்வாதம்தான் நமக்குண்டு (கலா3:7,9) இங்கே சொல்லப்பட்டது யாக்கோபின் ஆசீர்வாதம். இது மாம்சீகப் பிரகாரமான இஸ்ரேவேலருக்குத் தான் உண்டு. இந்த வசனம் சனிக்கிழமையாகிய ஓய்வுநாளை ஆசரிப்பவர்களுக்கே பொருந்தும். அப்படியானால் ஞாயிற்றுகிழமை ஓய்வு நாள் இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். உலகக் காலண்டர்களில் முதல் நாள் ஞாயிறு என்றுதான் உள்ளது: வாரநாட்கள் கணக்கிலும் ஞாயிறுதான் முதலில் வருகிறது. மத் 28:1ன்படி வாரத்தின் முதல் நாளில் தான் மரியாள் கல்லறைக்கு வந்து இயேசுவை பார்க்க வருகிறாள். அன்றுதான் இயேசு உயிர்த்தார் என்று சொல்லி விசுவாசிக்கிறோம்; அநேக கிறிஸ்தவர்கள் அன்றுதான் ஈஸ்டர் கொண்டாடுகிறார்கள். இயேசு மரித்தது ஓய்வுநாளுக்கு முதல் நாள் என்று சொல்லி (லூக் 23:54) Good Friday... பெரிய வெள்ளியும் கொண்டாடுகிறார்கள் கிறிஸ்தவர்கள். ஓய்வுநாள் முடிந்துதான் வாரத்தின் முதல்நாள் என்று அறிந்தும் ஏன் ஞாயிற்றுக்கிழமையை ஓய்வுநாள் என்று அறிக்கையிடுகின்றனர்? நியாயப்பிரமாண பாரம்பரியம் இன்னும் கிறிஸ்தவர்களை விட்டுப் போகவில்லை. மட்டுமல்ல. ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தாரால் கி.பி 321ல் கான்ஸ்டாண்டின் பேரரசன் மூலமாய் ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாள் என சட்டம் வந்தது. சூரிய நமஸ்காரத்திற்கு அடிப்படையாய் ஆரம்பிக்கப்பட்டு, உயிர்த்தெழுந்த நாள் ஓய்வு நாளாயிற்று என்று சொல்லி ஆசரித்தனர். அதன்பின் கி.பி 538ல் வந்த போப், உலகளாவிய சபைகளுக்கு தன் அதிகாரத்தால், சனிக்கிழமை ஓய்வுநாளை ஞாயிறாக மாற்றினார். எனவே ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளல்ல என அறிகிறோம்.

வேறு சிலர் "எசேக்கியராஜா காலத்தில் சூரியன் பின்னிட்டுப் போனதே, யோசுவா காலத்தில் சூரியன் நின்றதே, எனவே உண்மையிலேயே ஞாயிறு தான் ஓய்வுநாளாய் இருந்திருக்க முடியும்" என்று வாதிடுகின்றனர். அப்படியானால் இயேசு ஓய்வுநாளில் தேவாலயம் போனார் என்று உள்ளதே (லூக் 4:16) அவர் ஞாயிற்றுக்கிழமையா போனார்? இன்றைக்கும் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கும் இஸ்ரவேலர்- இரட்சிக்கப்படாதவர்கள்- ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாள் என்கின்றனரா? இல்லையே! இப்படியெல்லாம் சிந்திக்கும் கிறிஸ்தவர்கள் மிகக்குறைவு.

ஆக, இயேசு ஆசரித்த ஓய்வு நாள் சனிக்கிழமை என்பதால் ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாளே அல்ல என்று அறிகிறோம். ஓய்வுநாள் ஆசரிப்பு நியாயப்பிரமாணத்தோடு முடிந்து விட்டதால் ஓய்வுநாளைப் பற்றி அக்கறை வேண்டாம். (கொலோ 2:16,17) ஓய்வுநாளுக்கும் ஆண்டவராயிருக்கிற (மாற் 2:28) இயேசு நம்முள் வந்து விட்டதால் அவர் உபதேசித்த உபதேசப்படி நடப்போம் (மத் 28:18-20) ஞாயிறு அரசாங்க விடுமுறையாய் இருப்பதாலும், அது உயிர்த்தெழுந்த நாளாய் இருப்பதாலும் (சங் 118:22-24) அந்த நாளில் ஆராதனை செய்கின்றோம். இனி அரசாங்கம் ஞாயிறு விடுமுறையை மற்ற நாளுக்கு மாற்றினால் அந்த நாளில் தான் ஆராதனை செய்வோம். கிறிஸ்தவன் ஞாயிறு ஆசரிப்புக்காரனல்ல.

❖ ❖ ❖

# இஸ்ரேல் ராஜ்யம் இரண்டாய் உடைந்தது ஏன்?

ஆரம்பத்திலிருந்தே இஸ்ரேல் ராஜ்யம் என்று ஒன்றுதான் 12 கோத்திரங்களோடு இருந்தது. சாலமோனுக்குப் பிறகு, ரெகோபயாம் காலத்தில் யூதராஜ்யம் என்றும் இஸ்ரேல் ராஜ்யம் என்றும் இரண்டாய்ப் பிரிந்தன. யூதா மற்றும் பெஞ்சமின் கோத்திரத்தார் சாலமோனின் மகனாகிய ரெகோபயாம் தலைமையில் யூதராஜ்யமானார்கள்; யெரோபெயாம் தலைமையில் மற்ற 10 பேரும் இஸ்ரேல் ராஜ்யமானார்கள். இந்த யெரோபெயாம் தான், தாணிலும் பெத்தேலிலும் கன்றுக்குட்டிகளை உருவாக்கி வழிபடவைத்தவன் (1ராஜா 12:27-33). இப்படிப் பிரிந்து போனதற்கு காரணம் என்ன?

அந்நிய நுகத்தோடு பிணைக்கப்படாதிருங்கள் (2கொரி 6:14) என்று எத்தனைமுறை சொன்னாலும் இக்கால கிறிஸ்தவர்களில் பலர், அதிலும் விசேஷமாய் சகோதரிகள் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. திருமண காரியங்களில் மகளையோ மகனையோ மனந்திரும்புதல், பாவமன்னிப்பு, ஞானஸ்நானம் (எபி 6:1,2) போன்ற அடிப்படைச் சத்தியமே இல்லாத சபையைச் சேர்ந்தவர்களுக்கு மணமுடித்து வைக்கின்றனர். தவறு என்று சுட்டிக்காட்டினால், "நீங்களெல்லாம் பட்டால்தான் தெரியும் பிரதர், வயதுக்கு வந்த பிள்ளைகளை திருமணமில்லாமல் வைத்துக் காப்பது எவ்வளவு கஷ்டம் தெரியுமா? சபைப்போதகர்களும் இதற்காய் பிரயாசப்பட்டு தம்பதிகளை ஒழுங்கு

பண்ணுவதில்லை; என் பிள்ளைகள் இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியைப் பெற்று ஊழியமும் செய்பவள்(ன்). இவள்(ன்) ஒருக்காலும் பின்மாறிப்போகமாட்டாள்(ன்). R.C.யோ, சி.எஸ்.ஐயோ, செவன்த்டேயோ எதுவாயிருந்தாலும் என் மகள்(ன்) திருமணம் முடிந்தபின் புருஷனோடு (மனைவியோடு) நிச்சயம் திரும்பி வருவார்கள்" என்று பதில் சொல்லும் பெற்றோர்கள் உண்டு. ஒன்றை மாத்திரம் உங்களுக்கு சொல்லுகிறேன்:- ஆவிக்குரிய வழி: மாம்சீக வழி என்று இரண்டு உள்ளது. தேவனுடைய வார்த்தைகள் ஆவியாகிய இருதயத்தில் எழுதப்பட்ட (எபி 8:10) ஆவிக்குரியவன், வசனத்தை அப்படியே ஏற்றுக்கொள்வான். செயல்படுவான். இது ஆவிக்குரிய வழி; மாம்சீக வழியோ மரணவழி. (நீதி 14:12). அந்நிய நுகத்தோடு திருமணத்திலும் ஊழியத்திலும் பிணைக்கப்படக் கூடாது என்று தேவன் சொன்னால் அது சத்தியம் தானே! சத்தியத்திற்கு விரோதம் ஏன்?

1ராஜா 11ம் அதிகாரம் முழுவதையும் வாசியுங்கள். சாலமோன், பார்வோன் மகள், மோவாபியர், அம்மோனியர், ஏதோமியர், சீதோனியர், ஏத்தியர் போன்ற அந்நிய ஜாதி ஸ்திரீகளை சேர்த்துக் கொண்டான். "அவர்கள், உங்கள் இருதயத்தை சாயப்பண்ணுவார்கள்; பிணையாதே" என்று கர்த்தர் இஸ்ரவேலருக்கு ஏற்கெனவே சொல்லியிருந்தும் சாலமோன் கேட்கவில்லை. அவனுக்கு 700 மனைவிகளும் 300 மறுமனையாட்டிகளும் இருந்தனர். அவர்கள் அவன் இருதயத்தை வழுவிப் போகப்பண்ணினார்கள் (வச 3). இதனால் சாலமோன் அந்நிய தேவர்களுக்கு பலியிடுகிற மேடைகளை எல்லாம் உண்டாக்கினான்; இரண்டுமுறை தேவன் அவனிடம் சொல்லியும் அந்த புறஜாதி ஸ்திரீகளால், சாலமோன் பின்மாறிப் போனான்; தேவனின் கோபம் அவன் மேல் வந்தது. வச 32-39ஐ வாசியுங்கள். தாவீதின் மேல் தேவன் கொண்ட அன்பின் நிமித்தம் சாலமோன் ராஜ்யபாரத்தை எடுத்துப் போடாமல் அவன் மகன் காலத்திலே கூட முற்றிலுமாய் அழிக்காமல் எருசலேமை தலைநகராய்க் கொண்டு ஒரு ராஜ்யத்தையும், யெரேபெய்யாம் தலைமையில் ஒரு ராஜ்யத்தையும் தேவன் உருவாக்கச் சித்தம் கொண்டார்; அப்படியே உருவானது. இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நிச்சயமாய் தேவ திட்டத்திற்கு விரோதமாய் அந்நிய நுகத்தோடு பிணையாதே! இது திருமணத்திற்கு மட்டுமல்ல; ஊழியத்திலும் கூட! தேவகோபம் எழும்பவைக்காதே! இஸ்ரேல் ராஜ்யம் உடைந்தது போல. உன்னுடைய பரம்பரையே உடைந்து போகும். அந்நிய நுகத்தோடு பிணைவது விக்ரக ஆராதனை அல்லவா! (2கொரி 6:14,15) விக்ரக ஆராதனைக்காரன் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே தள்ளப்படுவான்! இந்த காரியத்திலே சகோதரிகள் விழிப்புணர்வோடு இருந்து வசனத்தை பிடித்துப் கொண்டு நடக்க

வேண்டுகின்றேன். சாலமோனுக்கு வந்த புறஜாதிஸ்திரிகளால் தேவ நாமம் தூஷிக்கப்பட நேர்ந்தது; கர்த்தரோடு இணைந்த உங்களால் தேவ நாமம் மகிமைப்படட்டும்! அல்லேலூயா!

❖ ❖ ❖

# மறுபடியும் பூமி எப்போது அதிரும்?

சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்:- கொஞ்ச காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப்பண்ணுவேன் (ஆகாய் 2:6). அப்படியானால் ஏற்கெனவே ஒருமுறை தேவன் அதிரப்பண்ணியிருக்கிறார் என அறிகிறோம். எப்போது? எபி 12:25,26; யாத் 19:16-20டு 20:18-19 போன்ற வசனங்களை வாசியுங்கள். சீனாய் மலையில் இஸ்ரேல் மக்களோடு பேசி, 10 கற்பனைகளைக் கொடுக்க தேவன் பரலோகிலிருந்து இறங்கி வந்தாரே அப்போது பூமி அதிர்ந்தது. ஒருவரும் பார்க்கக்கூடாத நிலையில், சத்தம் மட்டும் கேட்கும் நிலையில் இருந்தது அது. இனி ஒரு முறையோ, தேவன் மத் 24:30ல் சொல்லப்பட்டபடி மனுஷகுமாரனை அனைவரும் காணும்படி ஒலிவமலையில் இறங்கப்போகிறார். (சகரி 14:4; அப் 1:11); பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். அந்தி கிறிஸ்துவை அழிக்க வருகிறார்; யூதர்கள் மனந்திரும்பி இவரே மேசியா என்று அறிக்கையிடுவதின் நிமித்தம் 1000 வருட அரசாட்சியை ஸ்தாபிக்க வருகிறார். பிசாசை கட்டிப்போட வருகிறார். அல்லேலூயா! முதல் முறை வந்தபோது பூமிமட்டும் அதிர்ந்ததாம்; இப்பொழுதோ பூமி மாத்திரமல்ல; வானமும் அசையப்படபோகிறதாம். அர்மகதோன் யுத்தம் நடக்கப்போகும் நாள் அது (வெளி 16:13-16); நியாயத்தீர்ப்பின் நாளான அந்த நாள் மகா கொடிய நாள்; இந்தப் பூமியிலுள்ளோர் யாவரும் நடுங்கும் நாள். எசே 21:27; தானி 2:44; யோவே 3:16 போன்ற வசனங்களையும் வாசியுங்கள். தமக்கென்று தெரிந்தெடுத்த ஒரு சந்ததியை எகிப்திலிருந்து கொண்டு வந்து தம்முடைய முறைமையின்படி நடத்தப்போகிறோம் என்ற மகிழ்ச்சியில் தேவன் அன்று சீனாய் மலையில் இறங்கினார்; இன்றோ, தாம் தெரிந்து கொண்ட ஜனத்திற்கென்று 1000 வருட ஆட்சியைக் கொடுத்து அவர்களை ஆளப்போகிறோம் என்ற மகிழ்ச்சியிலும், எதிரிகளை அழிக்கும் கோபத்தோடும் ஒலிவமலையில் இறங்கப்போகிறார். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இந்த நாளிலே நீ இப்பூமியில் இல்லாதபடிக்கு இதற்குமுன்பே இரகசிய

வருகையில் அவரோடு பரலோகம் போக ஆயத்தமாயிருக்கிறாயா? இல்லையேல் இன்றே ஆயத்தப்படு! மனந்திரும்பு! பாவமன்னிப்புக்கென்று முழுக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொள; இரட்சிக்கப்பட்டவர்கள் இருக்கும் சபையில் சேர்ந்து கொள்; பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்; பரிசுத்தமான வாழ்வை வசனத்தோடு நடத்து. நிச்சயம் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவாய்! வானமும் பூமியும் அசையப்போகும் இந்த நாளைப் பற்றி பயம் வராது! அல்லேலூயா! பரிசுத்த ஆவியானவர் வந்த போதும் கூட அந்த இடம் மட்டும் அசைந்தது (அப் 2:2,3; 4:31) என அறிகிறோம். ஆனால் அவர் வந்தது சபையை உருவாக்கத்தான் என்பதை உணருங்கள்.

❖ ❖ ❖

# பழைய ஏற்பாட்டில் இயேசு இருந்தாரா?

தேவன் மாம்சத்தில் வெளிப்பட்ட போது (1தீமோ 3:16) அவருக்கு இட்ட பெயர்தான் இயேசு. யோ 1:1ன்படி ஆதியிலிருந்தே அவருக்கு வார்த்தை என்ற பெயர். வார்த்தையாகிய தேவன் மாம்சமானார். இவர் தேவகுமாரன் என்றழைக்கப்பட்டவர். இந்த தேவனைத் தான் கிறிஸ்து என்றும் மேசியா என்றும் வேதம் சொல்கின்றது. பலர் நினைக்கிறார்கள். பழைய ஏற்பாட்டின் காலம் பிதாவின் காலம்; அதன்பின் இயேசுவின் காலம்; இப்போது பரிசுத்த ஆவியானவரின் காலம் என்று. இது தவறு. மூன்று ஆள்தத்துவமாய் இருக்கும் நமது ஒரே தேவன், பழைய ஏற்பாட்டிலும் இருந்தார்; இன்றும் இருக்கிறார். பழைய ஏற்பாட்டில் கிறிஸ்து இருந்தாரா என்பதைப் பார்ப்போம்.

ஆதி 1ம் அதிகாரத்தில் தேவன் என்றால் "Elohim" என்று உள்ளது. இது இரண்டுக்கும் மேற்பட்டவர்களைக் குறிக்கும் எபிரேய வார்த்தை. படைப்பின்போது கிறிஸ்து இருந்தார் என இதன் மூலம் அறிலாம் (See யோ 1:3) ஆதி 2ம் அதிகாரம் முதல் "தேவனாகிய கர்த்தர்" என்று ஒருமையில் போடப்பட்டுள்ளது. ஆரம்ப நாட்கள் முதற்கொண்டு மூவருமே மக்களோடு வெவ்வேறு விதமாய் இடைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். பல இடங்களில் "தூதனானவர்" என்று போடப்பட்டுள்ளது. இது இயேசுவையே குறிக்கிறது. உதாரணமாய் 1கொரி 10:1-4ஐ வாசியுங்கள். எகிப்திலிருந்து

வெளியேறிய இஸ்ரேல் மக்களோடு இயேசு சென்றிருக்கிறார்; கன்மலையாய், வெளிப்பட்டிருக்கிறார். சீனாய் மலையில் மோசேயோடு பேசினவர் இவர்தான் என்று ஸ்தேவான் வார்த்தையால் அப் 7:38,53ல் அறியலாம். முட்செடியில் மோசேக்கு தரிசனமான தூதனானவர் இவர்தான். எப்படியெனில், இவரின் பெயர் "இருக்கிறவராகவே இருக்கிறேன்" - "I am that I am" என்பதாகும். இயேசு கிறிஸ்து மனிதனாய் கெத்சமனே தோட்டத்தில் அவரைப்பிடிக்க வந்தவர்கள் முன்னே, அவர் தன்னைப் பற்றி சொன்ன வார்த்தையும் இது தான் (யாத் 3:14; யோ 18:5). இந்த வார்த்தையைக் கேட்ட உடனே அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள். தேவன் நிற்கிற இடம் அன்றும் இன்றும் என்றுமே பரிசுத்த பூமிதான். அல்லேலூயா! இந்த வார்த்தையாகிய தேவன் மோசேக்கு யெகோவா என்னும் நாமத்தில் வெளிப்பட்டார். (யாத் 6:3) ஆக யெகோவாதான் கிறிஸ்து என்று சொல்வதற்கு முடிகிறது. பிதாவாகிய தேவனும் யெகோவா என்னும் நாமத்தில் வெளிப்பட்டிருக்கிறார். யேகோவா என்பது கர்த்தரின் இரட்சிக்கும் தன்மையைக் காட்டுகிறது. இது பிதாவிடமும் உண்டு; கிறிஸ்துவிடமும் உண்டு; பரிசுத்த ஆவியானவரிடமும் உண்டு. "கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்", "கர்த்தரே ஆவியானவர்", "அந்தக் கன்மலை கிறிஸ்துவே" (ஏசா 26:4; 1கொரி 10:4) போன்ற வசனங்களைப் பார்க்கும்போது மூவரின் தன்மைகள் ஒருங்கிணைந்திருப்பது புரியும். அனனியா, மிஷாவேல், அசரியாவுடன் அக்கினி சூளையில் உலாவியவர் இவரே (தானி 3:25).

யாக்கோபு முதன்முதலாய் முழு இரவு ஜெபம் ஆரம்பித்தானே அன்று ராத்திரி அவன் தேவனோடே போராடி மேற்கொண்டான். அந்த தேவன் கிறிஸ்துதான்; எப்படியெனில் அந்த தேவனைத் தூதனானவர் என்றும், சேனைகளின் கர்த்தர் என்றும், யெகோவா என்றும் ஓசி 12:4,5 சொல்கின்றது. ஆதி 16:7; 19:1; 24:7; யாத் 23:23; எண் 22:31; நியா 6:12; 13:13; 2சாமு 24:17; 2ராஜா 1:3; சங் 34:7; போன்ற பலவசனங்களை வாசிக்கும் போது பழைய ஏற்பாட்டில் கிறிஸ்து இருந்தார்; வெளிப்பட்டார் என்று அறிகிறோம். அவர் மனிதனாய், பூமியில் நமக்காய் வெளிப்பட்டார். கடைசியில் இவர் மனிதனை நியாயந்தீர்க்க மீண்டும் வரப்போகிறார். எக்காலங்களிலும், நம்மோடு ஆவியோடோ அல்லது ஆத்மாவோடோ அல்லது சரீரத்தோடோ இருக்கும் இந்த இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையிலே இடம் பெற ஆயத்தமா?

❖ ❖ ❖

# சாஸ்திரிகள், ஜோசியர்கள், சூனியக்காரர்கள், கல்தேயர் என்போர் யார்?

நேபுகாத் நேச்சார், தனக்கு வந்த சொப்பனங்களை விவரிக்கும் படியாய் சாஸ்திரிகளையும், ஜோசியர்களையும், சூனியக்காரர்களையும், கல்தேயரையும் வரவழைத்தான் என்று தானி 2:2 சொல்கின்றது. இவர்களெல்லாம் யார் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டுமே! இன்றைக்கும் இத்தகையோர் இருக்கிறார்கள் அல்லவா! பிசாசின் கிரியைகள் எப்படியெல்லாம் செயல்படுகின்றன என்று நாம் தெரிந்து கொண்டால் தானே அவனுக்கு எதிர்த்து நிற்க முடியும்! (1பேது 5:8).

வானத்து நட்சத்திரங்களைப் பார்த்து எதிர்காலத்தை கணித்துச் சொல்வோர்தான் சாஸ்திரிகள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிறந்தபோது கண்ட நட்சத்திரத்தை வைத்து வந்த சாஸ்திரிகள் இப்படிப்பட்டவர்கள்தான். வானவியலில் (Astronomy) தேர்ச்சி பெற்று அதை எதிர்காலக் கணிப்புக்காய் பயன்படுத்துபவர்கள் இவர்கள். இதை நம்பி பின்னால் செல்லும் கூட்டம் அன்றும் உண்டு. திருமணம் என்றவுடன், நாள் பார்த்து, நட்சத்திரம் கணித்து, சுபமுகூர்த்தத்தில் திருமணம் செய்கின்ற கிறிஸ்தவ சமுதாயத்தினரும் உண்டு, பரலோகத்தின் தேவனிடம் பிரார்த்தனை செய்வதை விட்டுவிட்டு சாஸ்திரிகள் வருகைக்காய் காத்திருக்கிறார்கள். நம் காலம் தேவனின் கரங்களில் உள்ளது (சங் 31:5) என்பதை மறந்துவிட்டு கிரகங்களைக் கணிக்கப் போகிறார்கள். சந்திரன், சூரியன் ஆகியவை இருக்கும் நிலைகளை வைத்து ஏதாவது பிதற்றுகிறவர்கள் தான் சாஸ்திரிகள். சிருஷ்டிகரிடம் போகாமல் சிருஷ்டிகளைப் பார்க்கிறான் மனிதன்.

பூமியில் உள்ள காரியங்களை வைத்து எதிர்காலத்தை தங்களால் சொல்லமுடியும் என்று கூறுபவர்கள் ஜோசியர்கள். அந்த நாட்களில், களிமண்ணால் ஈரலின் பலவிதமான படிமங்களை உருவாக்கி அவைகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பலனை எழுதி வைப்பார்கள். யாருக்காவது பலன் சொல்ல வேண்டுமென்றால் ஒரு ஆட்டைப் பலியிட்டு, அதன் ஈரலை எடுத்து அதன் படிமத்தின் தோற்றத்திற்கு ஏற்கெனவே செய்துள்ள எந்த படிமம் ஒத்துவருகிறதோ அந்தப் படியான பலனை சொல்வார்கள். மேலும் தண்ணீரை ஒரு பாத்திரத்தில் எடுத்து அதிலே எண்ணெய் ஊற்றி, எண்ணெய் படலம் எவ்வித உருவம் காட்டுகிறதோ அதற்கேற்ற பலன் சொல்வார்கள். கிளியை வைத்து ஜோஷியம் சொல்வார்கள். கழுதை கத்துதல்,

பல்லி கத்துதல், பூனைக் குறுக்கே வரல், விதவை எதிரில் வரல் போன்றவைகளை வைத்தும் பலன் கூறுவார்கள். இதிலே ஊன்றிப் போன கிறிஸ்தவ சமுதாயம், தீர்க்கதரிசன வசனங்களை உடைய 66 புத்தகங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், தங்களின் எதிர்காலத்தை இன்னொருவர் மூலமே கேட்டறிய வேண்டும் என்று விரும்புவதால், தற்காலத்தில் பெரும்பாலான ஆவிக்குரிய சபைக் கிறிஸ்தவர்களும், தீர்க்கதரிசனம் என்று இருப்பதை நாடி ஓடி தேடி அலைகிறார்கள். இவர்களுக்காய் ஜெபிப்போம்.

நாங்கள் வானத்தையும் பார்க்க வேண்டாம்; பூமியையும் பார்க்க வேண்டாம். மரித்துப் போனவர்களின் ஆவிகளோடு பேசி எதிர்காலத்தை சொல்ல முடியும் என்று கூறுவோர் சூனியக்காரர்கள். சாத்தானின் மாபெரும் வஞ்சகங்களில் ஒன்று, இறந்து போனவர்களின் ஆவிகளோடு பேச முடியும் என்பது. அப்படியானால் பிர 12:7 பொய்யாகிவிடுமே! சவுலிடம் சூனியக்காரி இப்படித்தானே சாமுவேலின் ஆவியோடு பேச வைத்தாள். இதை நம்புகிறவன் சாத்தானால் உண்டானவன் எனலாம்.

கடைசியாக கல்தேயர் என்போர் பாபிலோனியப் பல்கலைக் கழகத்தில் கணிதத் துறையில் பட்டம் பெற்று, எண்களை எழுதி கூட்டி, வகுத்து, கழித்து, பெருக்கி, அதை வைத்து எதிர்காலத்தை சொல்வோர். நியூமராலஜி என்று இப்போது சொல்கிறார்களே அது இது தான்.

"எதிர்காலத்தைப் பற்றி நான் யாரிடமும் கேட்க தேவையில்லை; ஜீவிக்கிற தேவன் என்னை புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீரண்டை நடத்துவார்; நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் அவர் கோலும் தடியும் என்னைத் தேற்றும்; அவரது வசனமே என் வாழ்க்கை; என் சத்துருக்களுக்கு முன்பாக இந்த பூமியிலேயே என்னை உயர்த்துவார்; ஆசீர்வதிப்பார்; கிருபையும் நன்மையும் என்றும் என்னைத் தொடரும்; நீடித்த நாட்களாய் வாழ்வேன்" என்ற விசுவாச அறிக்கை என்றும் இருக்கட்டும் (சங் 23) பிசாசின் கிரியைகள் நம்மை அணுகாமல் போகட்டும்.

❖ ❖ ❖

# கடைசி காலம் எது?

"இயேசு வரப்போகிறார். இது தான் கடைசிகாலம்" என்று பலர் சொல்வதைக் கேட்கிறோம். இன்றைய காலம் தான் கடைசிகாலம் என்பதை வேத வசனங்களோடு தெரிந்து கொள்வோம். வேதத்தின்படி

புறஜாதியாரின் கடைசிகாலம், இஸ்ரவேலரின் கடைசிகாலம், சபையின் கடைசிகாலம் என்று பல உள்ளன. சபையின் கடைசி காலத்தில் இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் வந்து சபையாரைக் கூட்டிக் கொண்டு போவார். புறஜாதியாரின் கடைசி காலத்தில் தானே இயேசு கிறிஸ்து ஒலிவமலையில் காலடி வைத்து பூமியில் இறங்கி அந்திகிறிஸ்துவின் தலைமையிலான சாம்ராஜ்யத்தை ஒழிக்கிறார். அப்போதுதானே இஸ்ரேலரின் கடைசிகாலமும் இருக்கிறபடியால் இயேசு பூமியில் நிற்கும் போதே அவரைக் குத்தினவர்களும் காண்பார்கள். இஸ்ரவேலர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். அதன்பின் 1000 வருட அரசாட்சியும், நித்திய நியாயத்தீர்ப்பும், அக்கினியால் இந்த பூமியின் அழிவும் உண்டாகும். தானியேல், வெளிப்படுத்தின விசேஷம், இயேசுவின் செய்திகள், ஆகிய எல்லாவற்றையும் உள்ளடக்கியதுதான் இந்த கடைசி காலம் என்பதற்கான ஆதாரங்கள்.

<u>**சபையின் கடைசிகாலம்**</u>: 2ம் வருகையின் நாளையும் நாழிகையையும் பிதா ஒருவர் தவிர வேறொவரும் அறியார். ஆனால் இரகசிய வருகையின் காலத்தை நம்மால் அறிய முடியும் என்று 1தெச 5:4,5 சொல்கின்றது. மத் 24, மாற் 13, லூக் 21 போன்றவற்றில் அவர்வரும் காலம் பற்றி சொல்லப்பட்டாலும், கிறிஸ்துவின் மேல் கட்டப்படுகிற சபையைப் பற்றி அப்போது இருந்தவர்களுக்கு தெளிவான அறிவு இல்லாததாலும், எபே 3:1-6ல் இரகசியமாய் இருந்ததை பவுல் மூலமாய் வெளிப்படுத்தியதாலும், சபை எப்போது எடுத்துக் கொள்ளப்படும், சபையின் கடைசிகாலம் எப்போது என்பதைப் பற்றி அவைகளின் மூலமாய் முழுவதுமாய் தெரிந்து கொள்ள முடியாது. ஆனாலும் பவுலின் நிரூபங்கள், வெளிப்படுத்தின விசேஷம் போன்றவற்றின் மூலமாயும் ஓரளவுக்கு நாம் நிதானிக்க முடியும்.

1. இந்த கடைசி காலத்தில் அறிவு பெருகிப் போகும். கி.மு 6ல் எழுதப்பட்ட தானி 12:4ஐ வாசியுங்கள். கி.பி 95ல் எழுதிய வெளிப்படுத்தின விசேஷம் 22:10ஐ வாசியுங்கள். தானியேலில், கடைசி காலத்தவர் படிப்பதற்காய் "முத்திரை போடு" என்று சொன்ன தேவன், இங்கே "முத்திரை போடாதே" என்பதால் கடைசி காலம் ஆரம்பமாகிவிட்டது எனலாம். அதிலும் குறிப்பாய் கடந்த 200 ஆண்டுகளுக்குள் தான் ஆராய்ச்சிகளும் கண்டுபிடிப்புகளும் பெருகி உள்ளன. சைக்கிள், பஸ், லாரி, ரயில், விமானம், ராக்கெட் போன்றவைகளும் ரேடியோ, கிராமபோன், டேப்ரிக்கார்டர், T.V, டெலிபோன், தந்தி, டெலக், Fax போன்றவற்றையும், மருத்துவத்துறையில் தொழுநோய், மலேரியா, காலரா போன்ற கொள்ளை நோய் ஒழிப்பு, ஒடிந்த எலும்புகளை எலும்பில்லாமலே இணைத்தல் X-ray, Scanning,

இருதய ஆபரேஷன், கிட்னி மாற்றம் கண்ணில் லென்ஸ் போன்ற பல காரியங்களும் நிகழ்ந்துள்ளன. இன்னும் தினமும் ஆராய்ச்சிகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

2. நோவாவின் காலத்தில் நடப்பது போல இந்த காலத்தில் நடக்கும். கர்வம் (Pride), ஆகாரத் திரட்சி (Fullness of Food), சாங்கோ பாங்கம் (Abundance of Idleness) மற்றும் ஏழைகளையும், ஆதரவற்றோரையும் நினையாமை (எசே 16:49) போன்ற காரியங்கள் இன்றும் நடக்கின்றன.

3. லோத்தின் நாட்களின் மக்களைப் போல மக்கள் மாறுவர். ரோ 1 மற்றும் 2தீமோ 3 போன்றவற்றில் சொல்லப்பட்டது போல சுயபுணர்ச்சி, ஆண்புணர்ச்சி, சுகபோகப் பிரியம், தெய்வ பயமின்மை, அன்பில்லாமை போன்றவற்றில் மூழ்கியிருந்த சோதோம் கொமாரா மக்களைப் போல் தற்காலம் ஆகிவிட்டது (ஆதி 19:4-11).

4. அக்கிரமம் பெருகும்; அன்பு தணியும்; அதை நாம் காண்கிறோம்.

5. சுவிசேஷம் எங்கும் பரவும், கடந்த 19 நூற்றாண்டுகளில் இல்லாத அளவிற்கு இந்த நூற்றாண்டில் சுவிசேஷம் அதிகம் பரவுகிறது.

6. யுத்தங்கள், கலவரங்கள் வரும்.

7. பஞ்சம் கொள்ளை நோய் பூமியதிர்ச்சி வரும்.

8. கிறிஸ்தவர்கள் கொல்லப்படுவார்கள்; சகலரும் அவர்களைப் பகைப்பர்; உபத்திரவம் அவர்களுக்கு வரும்.

9. நமக்குள்ளே காட்டிக் கொடுப்போர் பெருகுவர்.

10. அடையாளம் அற்புதத்தால் வஞ்சகம் பெருகும். இது வேளாங்கண்ணி, அந்தோணியார் கோவில், ஏர்வாடி, திருப்பதி, பழனி போன்ற இடங்களில் தெரிகிறது.

11. கள்ள தீர்க்கதரிசிகள், கள்ள கிறிஸ்துகள் எழும்பி கூடுமானால், தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிப்பார்கள். வஞ்சிக்கிற ஆவிகள் கிரியை செய்யும். இன்றைக்கு இப்படிப்பபட்டவர்கள் பின்னால் போகும் ஏராளமான கிறிஸ்தவர்களே இதற்கு சாட்சி.

12. சகோதரன் சகோதரனையும், தகப்பன் பிள்ளையையும் மரணத்திற்கு ஒப்புக் கொடுப்பர்; பெற்றோரை பிள்ளைகள் கொலை செய்வர்.

இன்னும் இது போன்ற பல காரியங்கள் நடப்பதால், இதுதான் சபைக்குக் கடைசிகாலம்.

### புறஜாதியாரின் கடைசிகாலம்

1. மேற்சொன்ன காரியங்களோடு சபை எடுத்துக் கொள்ளப்படும். அதன்பின் கைவிடப்பட்ட கள்ள உபதேச, பாரம்பரிய, பாவ பெயர்க்கிறிஸ்தவர்களே இருப்பர்.
2. நாலாவது ரோம சாம்ராஜ்யம் மறுபடியும் கிளம்பும். அதிலிருந்து ஒரு அசாதாரணமான ராஜா கிளம்புவான் (அந்தி கிறிஸ்து).
3. அவனோடு இஸ்ரேலர் சமாதான உடன்படிக்கைபண்ணி, எருசலேமில் தேவாலயத்தை மறுபடியும் கட்டுவார்கள்.
4. கைவிடப்பட்ட பெயர்க்கிறிஸ்தவர்களுக்கு பெரும் உபத்திரவம் வரும்.
5. தேவனின் கோபாக்கினை நாள் ஆரம்பமாகும்.
6. அந்தி கிறிஸ்துவாகிய கேட்டின் மகன் தன் அட்டகாசத்தை காட்ட ஆரம்பிப்பான்.
7. தன்னைத்தான் தேவனென்று சொல்லி, தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து தன்னை வணங்கச் சொல்வான்.
8. அவனது முத்திரையிடாதவர்களுக்கு கொடுப்பினையும் இல்லை.
9. இரட்சிப்பின் சுவிசேஷம் புறஜாதிகளுக்கு, கைவிடப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு இராது. பரிசுத்த ஆவியானவர் அதற்கு வழி நடத்தவும் மாட்டார்.
10. அந்தி கிறிஸ்துவை அறிந்த, மேசியாவை விசுவாசிக்கும் 1,44,000 இஸ்ரேலர் பாதுகாக்கப்படுவர்.
11. இரத்த சாட்சிகள் தொகை பெருகிப் போகும்.

இன்னும் இது போன்ற பலகாரியங்கள் நடப்பதால், இஸ்ரேலில் ஒரு பங்கு கடினமான மக்களும் மேசியாவிற்காய் காத்திருப்பார்.

இஸ்ரேலரின் இந்த கடைசிகாலமும் புறஜாதியாரின் கடைசிக்காலமும் கிட்டத்தட்ட ஒரே காலத்தில் நடக்கும். மேற்சொன்ன காரியங்கள் மட்டுமல்லாது,

1. கல்மழை, அக்கினி பெய்யும்; அதனால் பலத்த சேதங்கள் ஏற்படும்.
2. இஸ்ரவேலர்கள் ஓடிப்போவர்கள்.

3. இரண்டு சாட்சிகள் எழும்புவர்; தேவ தூதரின் எச்சரிப்பின் சத்தம் கேட்கும்.
4. ஏழுவாதைகள் நடக்கும்.
5. பாபிலோனிய சபை அழிக்கப்படும்.
6. மக்கள் சாக நினைத்தாலும் சாகமுடியாது.
7. இதுவரைக்கும் உலகிலே ஏற்படாத தொல்லைகள், துன்பங்கள் ஏற்படும்.
8. இயேசு கிறிஸ்து சகல பரிசுத்தவான்களாகிய சபையாரோடு ஒலிவமலையில் காலடி வைத்து இறங்குவார்.
9. அவரைக் குத்தினவர்களும் காண்பர். இவரே மேசியா என்று இஸ்ரேலர் இரட்சிக்கப்படுவர்.
10. உயிரோடிருக்கும் புறஜாதியாருக்கு செம்மறியாடு வெள்ளாடு நியாயத்தீர்ப்பு வரும்; செம்மறியாடுகள் 1000 வருட அரசாட்சிக்குள் நுழையும்.
11. அந்தி கிறிஸ்துவும், கள்ள தீர்க்கதரிசியும் அவர்களோடு சேர்ந்தவர்களும் அர்மகதோன் பள்ளத்தாக்கில் யுத்தம் செய்ய எத்தணிப்பர். இதுவே உலக வரலாற்றின் மிகப்பெரிய மூன்றாம் மகா யுத்தம்.

இன்னும் எத்தனையோ காரியங்கள் நடக்கும். எழுத இடமில்லை. வேதத்தை வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். தேவனுடைய பிள்ளையே! சபையோடு பரலோகம் வர ஆயத்தமா? பரிபூரண புருஷனாக ஒப்புக்கொடு. இதுவே கடைசிகாலம். இன்றே இரட்சண்ய நாள். இயேசுவின் இரகசிய வருகை சமீபம்! அவரை சந்திக்க ஆயத்தமா!

❖ ❖ ❖

# ஊழியம் செய்ய எங்கே போக வேண்டும்? எப்போது போக வேண்டும்?

இந்தக் கடைசி காலத்திலே பைபிளைத் தூக்கினவர்கள் எல்லாரும் தங்களைப் பாஸ்டர் என்கிறார்கள்; ஆபிரகாம், தானியேல், தாவீது, யோபு போன்ற ஒரு சிலரைப் பற்றி தெரிந்த உடனேயே தங்களைப் பெரிய பிரசங்கிமார் என்று பிரஸ்தாபப்படுத்துகிறார்கள்.

ஏதோ ஒரு சில வார்த்தைகள் பலித்ததினாலே தங்களை தீர்க்கதரிசிகள் என்று தீர்மானிக்கிறார்கள்; ஏதோ ஒரு சில வியாதிகள் குணமாவதாலே, ஒரு சில பிசாசுகள் ஓடியதாலே தங்களை வரம் பெற்ற ஊழியர்கள் என்று பெருமையடித்துக் கொள்கிறார்கள். பொதுவாக, ஊழியர்கள் என்றால் யார் என்று பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு தெரியவில்லை. ஊழியர் என்றாலே பாஸ்டர் தான் என்ற முடிவில் இன்னும் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். இது ஒரு தவறான கருத்து. ஊழியம் என்பது சபைக்குள்ளேயும் உண்டு; சபைக்கு வெளியேயும் உண்டு. உலக நாணயத்திற்கு இரண்டு பக்கம் இருப்பதுபோல, ஊழியம் என்ற நாணயத்திற்கும், இது போன்ற இரண்டு பக்கங்கள் உள்ளன. சபைக்குள்ளே பரிசுத்தவான்கள் சீர் பொருந்தப் பண்ணும்படிக்கு, சபையிலே அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், பாஸ்டர்கள், போதகர்கள் என்று ஐந்துவிதமான ஊழியப்பிரிவுகள் உண்டு என எபே 4:13 சொல்கின்றது. இந்த 5 ஊழியங்களையும் செய்யும் அத்தனை பேருமே ஊழியர்கள் தானே ஒழிய பாஸ்டர் மட்டும் தான் ஊழியர் என்றில்லை. நமது கையிலே ஐந்துவிதமான விரல்கள் இருப்பது போல இவர்கள் ஐவரும் மகிமைப்படுவார்கள். கட்டைவிரல் என்பது பார்வைக்கு சிறியதாய்த்தான் இருக்கும். ஆனால் இது இல்லாமல் ஒரு வேலையும் கையால் செய்ய முடியாது. இந்த ஒரு விரல் மட்டும்தான் அடுத்த நான்கு விரல்களையும் தொட முடியும். இந்த கட்டை விரல் அப்போஸ்தலர்கள் ஊழியத்தைக் காட்டுகிறது. அப்போஸ்தலர்கள் மற்ற நான்கு ஊழியங்களையும் செய்யத் தகுதி உள்ளவர்கள். ஆள்காட்டி விரல் போன்றது தீர்க்கதரிசன ஊழியம். இது யாரையும் குறிப்பிட்டுக் காட்டிக் கொண்டே இருக்கும். இந்த ஊழியம் சபையிலே பரிசுத்தவான்கள் சீர்பொருந்தப் பண்ணும் பொருட்டு சுட்டிக்காட்டி திருத்தி நடத்தும் ஊழியம். அப்படியாய் சபையிலே இல்லாமல், நினைத்த இடத்திலே தெருவிலே, ஹாலிலே, வீட்டிலே, டி.வி.யிலே ஜோஷ்யக்காரன்போல, புறஜாதி மக்களுக்கும் சொல்வதல்ல. விரல்களின் மத்தியிலே நீளமாய் இருக்கும் விரல், சுவிசேஷ ஊழியத்தைக் குறிக்கிறது. சுவிசேஷ ஊழியம் செய்வோர் பார்வைக்குப் பெரிதாகத்தான் தோன்றுவார்கள்; அவர்களின் நடை, உடை, பாவனை, ஊழியம் எல்லாமே மிகமிக மென்மையாகத்தான் இருக்க வேண்டும். இவர்களும் தங்கள் ஊழியத்தை சபையிலே மட்டும் தான் செய்ய வேண்டும்; புறஜாதிகள் மத்தியில் அல்ல. நான்காவது விரலை மோதிரவிரல் என்பார்கள். மற்ற எல்லா விரல்களை விட இது மோதிரம் போடும் மேன்மையுள்ளதாய் இருப்பதால், இந்த விரல் பாஸ்டர் ஊழியத்திற்கு ஒப்பாயுள்ளது. பாஸ்டர் ஊழியம் என்பது ஏதோ நன்றாய்ப் படிக்காதவர்களோ, வசதியில்லாதவர்களோ செய்ய

வேண்டியது என்ற நிலைக்கு ஆளாகிவிடக் கூடாது. சுண்டுவிரல் என்பது பார்வைக்கு சிறியதுதான். ஆனால் இதன் மகிமை மிகவும் பெரிது. நமது காதிலே எறும்பு நுழைந்துவிட்டால், சுண்டுவிரல் ஒன்று மட்டுந்தான் காதுக்குள் நுழைத்து எறும்பை அகற்ற முடியும். இது போதக ஊழியத்திற்கு (Teacher) ஒப்பாயிருக்கிறது. போதகர்கள் என்றாலே பாஸ்டர்கள் என்ற கருத்து நம் மத்தியிலே நிலவி வருகிறது. அது தவறு; போதகர் வேறு; பாஸ்டர் வேறு (மேய்ப்பர்). போதக ஊழியத்தாலே கெடுக்கிற எறும்பு போன்ற எல்லாவித பிசாசின் அவிசுவாசக் கிரியைகளையும் நீக்கி, விசுவாசத்தை சபையிலே வளர்ப்பிக்க முடியும். எபே 4:13ஐ மறுபடியும் படியங்கள். போதக ஊழியத்தையும், பாஸ்டர் (மேய்ப்பர்) ஊழியத்தையும் ஒன்றாக இணைத்தே பவுல் எழுதி உள்ளான். காரணம் என்ன தெரியுமா? பாஸ்டராக இருப்போர், போதக அபிஷேகம் உள்ளவராய் இருந்தாக வேண்டும். இன்றைக்கு வேதத்தின் அடிப்படையே தெரியாமல், வாசிக்கவே முடியாமல் எத்தனையோ பேர் பாஸ்டர் என்று போட்டுக் கொண்டு போதக ஊழியமும் செய்கின்றனர். அதைக் காணவே கஷ்டமாயிருக்கிறது. அவர்களுடைய முடிவு அழிவு; அவர்களுடைய தேவன் வேறு; அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே; அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள் (எபே 3:19).

ஊழிய நாணயத்தின் மறுபுற ஊழியம்தான் 1பேது 2:9. இவர்கள் அந்தகார இருளினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்து வந்த தேவனை புறஜாதிகளுக்கு அறிவிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்; ராஜரீகமான ஆசாரிய (Royal Priest Hood) கூட்டத்தார்கள். இவர்கள் தான் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளாகிய பரிசுத்தவான்கள் (எபே 1:2). விசுவாசிகள் எல்லாருமே புறஜாதிகள் மத்தியிலே நற்செய்தி ஊழியம் செய்து ஆத்ம ஆதாயம் செய்ய வேண்டும். இவர்களால் நடக்கும் அடையாளங்கள் தான் மாற் 16:17ல் எழுதப்பட்டுள்ளவை. எனவே சபையிலே ஏற்படுத்தப்பட்டுள்ள சுவிசேஷகர்களும் பாஸ்டர்களும் மட்டும்தான் புறஜாதிகள் மத்தியிலே சுவிசேஷ ஊழியம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இன்றே மாறட்டும். விசுவாசிகள் எல்லாருமே ஆத்மாக்களை சபைக்குள் கொண்டுவர வேண்டும். இதற்கு பாஸ்டர்களின் உதவியும் தேவைப்படலாம். இப்படி ஆத்ம ஆதாயம் செய்யும் விசுவாசிகள் எவ்வளவு பெரிய வரம் பெற்றவர்களாயிருந்தாலும், சபைக்குள்ளே வந்த உடனே, பாஸ்டருக்கு கட்டுப்பட்டே நடக்க வேண்டும்.

இப்படியாய் ஊழியம் செய்ய விரும்பவோர்கள் எப்போது ஊழியத்திற்கு போக வேண்டும் தெரியுமா? தன் கையிலே பணம்

கொஞ்சம் இருந்தாலோ, தன் பக்கத்திலே கொஞ்சம் விசுவாசி இருந்தாலோ, தனக்கு ஏதோ ஒரு சில வரம் கிரியை செய்தாலோ, ஒரு சில வேத வசனம் தெரிந்தாலோ, ஒரு சில பாடல்களை அழகாய் பாடத் தெரிந்தாலோ உடனே ஒரு சபையை பக்கத்து தெருவிலோ, ஊரிலோ ஸ்தாபிப்பதோ அதற்கு பாஸ்டராவதோ தவறான காரியம். ஊழியர் என்றாலே பாஸ்டர் என்கிற கருத்து மிகமிக தவறு. நம் தேவன் இயேசு கிறிஸ்து ஊழியம் செய்யத்தான் மனிதனாய்ப் பிறந்தார். பிறந்த உடனேயே அவர் ஊழியத்திற்கு போகவில்லை; அவருக்கு Age of Accountability அதாவது நன்மை தீமை அறியும் நிலை - வந்த போது தான், பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைக்கும் அடையாளமான முழுக்கு ஞானஸ்நானம் பெற்று நீதியை நிறைவேற்றி நமக்கு மாதிரியை வைத்துப் போனார் (மத் 3:15). ஞானஸ்நானம் பெற்ற உடனேயே அவர் ஊழியத்திற்குப் போகவில்லை. அவர் ஞானஸ்நானம் பெற்ற பின்னே பரிசுத்த ஆவியைப் பெற்றார். பரிசுத்த ஆவி பெற்ற பின்னும் அவர் ஊழியத்திற்குப் போகவில்லை. அவர் இரவும் பகலும் 40 நாள் உபவாசம் இருந்தார். ஏன்? ஏதோ ஒரு காரியம் தனக்கு நடக்க வேண்டுமென்று எண்ணி தற்காலத்தில் பல கிறிஸ்தவர்கள் உபவாசமிருந்து தேவனிடம் ஜெபிக்கின்றனர். உபவாசமிருப்பது அதற்கல்ல! உபவாசத்தின் மூலமாக நமது சரீரத்தை ஒடுக்கி, ஆவியை உயர்த்தி தேவனோடு இரண்டறக் கலக்கும் போது, நமது ஆவியிலே வல்லமை கிடைக்கிறது. இப்படியாய் இயேசுவுக்கு வல்லமை கிடைத்ததால் தான், அவர் சரீரம் பலவீனமாயிருந்த போது, பிசாசு மூன்று முறை சோதித்த போதும் அவனை ஜெயித்தார். அல்லேலூயா! அப் 10:38ஐ வாசியுங்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் வேறு; பரிசுத்த ஆவியின் வல்லமையினால் அபிஷேகம் என்பது வேறு; வல்லமையினால் அபிஷேகம் பெற்ற பிறகுதான் இயேசு கிறிஸ்து ஊழியத்திற்கு புறப்பட்டார்; பரிசுத்த ஆவி பெற்ற போது கூட அல்ல. இயேசு பரலோகம் போகும் முன் சீஷர்களிடம் ஊழியம் செய்ய எப்போது போக வேண்டும் என்று கட்டளையிட்டார் தெரியுமா? அப் 1:8ஐ வாசியுங்கள். நீங்கள் பெலனடைந்து, அதாவது வல்லமையைப் பெற்றுக் கொண்ட பிற்பாடுதான் ஊழியத்திற்குப் போக வேண்டும். ஏதோ ஞானஸ்நானம் பெற்ற பின்னோ, பரிசுத்த ஆவியைப் பெற்ற பின்னோ போகக்கூடாது. ஒவ்வொரு முறையும் ஊழியத்திற்குப் போகுமுன்னே, இயேசுகிறிஸ்து இரவு முழுவதும் தேவனோடு தொடர்பு கொண்டு வல்லமையைப் பெற்றுக் கொண்டு தான், ஊழியம் செய்யப் போனார். இயேசு கிறிஸ்துவின் ஊழியப்பாதை ஊழியர்களுக்கு மாதிரியாய் இருக்கட்டும். அல்லேலூயா!

ஊழியம் செய்ய எப்போது போக வேண்டும் என்று தெரிந்து கொண்டோம். எங்கே போக வேண்டும் என்றும் தெரிந்து கொள்வோம். இந்தக் காலத்திலே ஊழியத்திற்கு ஒப்புக் கொடுக்கிற பெரும்பாலான ஊழியர்கள், வெளிநாட்டுக்கு போக வேண்டும் என்று தான் நினைக்கிறார்கள். அமெரிக்கா, மலேசியா, ஜெர்மன், சவுதி அரேபியா போன்ற நாடுகளுக்குப் போக துடிக்கிறார்கள்; அதற்காய் யார் யாரையோ நாடித்தேடி ஓடுகிறார்கள். ஏன் இப்படி? நமது நாட்டிலே, கிராமத்திலே, மலைவாழ் பகுதியிலே எத்தனையோ மக்கள் இயேசுவை அறியாதிருக்கிறார்களே இவர்களுக்கு சொல்வதை விட்டு விட்டு ஏன் அந்நிய நாட்டு மோகம்? வெள்ளைக் காகத்தைத் தேடும் கறுப்பு எலியாவாக யார் இவர்களை மாற்றியது? இவர்களுக்கு பண ஆசையை விதைத்தவன் யார்? பொருளாசையாகிய விக்ர ஆராதனைக்காரன் பரலோகம் வருவானா? மாற் 16:15; மத் 28:18; போன்ற வசனங்களை வைத்துக் கொண்டு உலகம் முழுவதும் போகச் சொல்லி இயேசு சொன்னதால், நாங்கள் ஊழியத்திற்கு வெளிநாடு போவதில் தவறே இல்லை என்று வாதிடும் ஊழியர்களும் உண்டு. இவர்கள் தயவு செய்து அப் 1:8ஐ மறுபடியும் வாசிக்கட்டும். ஊழியம் முதலில் எருசலேமில் தான் செய்ய வேண்டும். அதாவது தாங்கள் சார்ந்திருக்கும் சபையில்தான் முதல் ஊழியம். அதன் பிறகு யூதேயாவில்; அதாவது நம் சபையைப் போன்ற ஆவிக்குரிய சபைகளில் ஊழியம். அதன் பிறகு சமாரியாவில்; அதாவது பாரம்பரிய கிறிஸ்தவர்கள் மத்தியில்; கள்ள உபதேச சபைகள் மத்தியில் ஊழியம். அதன் பிறகு உலகெங்கும்; அதாவது புறஜாதிகள் மத்தியிலே. இப்படியாய் தேவன் நமக்கு ஒரு ஒழுங்கு முறை வைத்திருக்கும்போது இதை நாம் மீறி நம் இச்சையை நிறைவேற்றவா ஊழியம்? பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவே இயேசுவின் ஊழியம். அல்லேலூயா! இயேசு கிறிஸ்துவின் மாதிரியை முன் வைப்போம்.

❖ ❖ ❖

# ஓய்வு நாள் ஆசரிப்பு எப்போது வந்தது? ஏன் வந்தது?

ஓய்வு நாள் என்பது சனிக்கிழமை தான் என்றும். இல்லை இல்லை ஞாயிற்றுக்கிழமைதான் என்றும் கிறிஸ்தவ வட்டாரத்தில் சர்ச்சைகள் எழும்பி வருகின்றன. வேதத்தின்படி ஞாயிற்றுக்கிழமை என்பது உயிர்த்தெழுந்த நாள்; வீடு கட்டுகிறவர்களே ஆகாதென்று

தள்ளப்பட்ட கல் மூலைக்கல்லான நாள்; இதிலே களிகூர்ந்து மகிழ வேண்டும். (சங் 118:22-24). வேதத்தின்படி சனிக்கிழமைதான் ஓய்வுநாள்; இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை கல்லறையில் வைத்த நாளுக்கு மறுநாள் (லூக் 23:53,54); அதாவது வாரத்தின் முதலாம் நாளான இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த நாளுக்கு முந்தின நாள் (மத் 28:1) இப்படியிருக்க ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாள் என்று சொல்வதும், ஓய்வுநாளாய் ஆசரிப்பதும் தவறு. வேதத்தில் எந்த இடத்திலுமே ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளாய் ஆசரிக்க சொல்லவில்லை. மரணத்தையே ஜெயித்து, உலகத்திலே ஒருவரும் செய்ய முடியாத, செய்யாத ஒன்றைச் செய்து, இயேசு உயிர்த்து வந்த நாளாயிருப்பதால் அந்த நாளில் களிகூர்ந்து மகிழ வேண்டும். அதனால் தானோ என்னவோ புறஜாதி மக்கள் கூட அந்த நாளை விடுமுறை நாளாக்கி வீட்டிலிருந்தே களிக்கின்றனர். அவர்களின் மனக்கண் திறந்தால் போதும்; இயேசு அன்று தான் உயிர்த்தெழுந்தார் என்று அவர்கள் அறிவார்கள். கொலோ 2:14-17; எபே 2:15-16 வசனங்களின்படி சனிக்கிழமை ஓய்வு நாள் ஆசரிப்பு, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால், இஸ்ரேலர், புறஜாதிகள் ஆகிய இருவரும் இணைந்த ஒரே சரீரமான, புதிய மனுஷனாகிய சபைக்கு தேவையில்லை. ஏனென்றால் சட்டதிட்டங்களைக் கைக்கொண்டு உலகத்தை விட்டே பிரிந்து வாழ்ந்திருந்த இஸ்ரேலருக்குரிய சட்டதிட்டங்கள் இருதிறத்தாருக்கும் பிரிவினை உண்டாகாதபடி, அந்த சட்டங்கள் கிறிஸ்துவின் மரணத்தோடே முடிந்தன. எனவே அந்த நியாயப் பிரமாணங்கள் நம்மை ஆளப்போவதில்லை. ரோ 3:23,24; 1கொரி 6:11 போன்ற பல வசனங்களினால் நீதிமானாக்கப்பட்ட சபையாருக்கு, இந்த நியாயப் பிரமாணங்கள் தேவையில்லை. (1தீமோ 1:9); கொலோ 2:16-17ல் சொல்லப்பட்ட படி ஓய்வுநாள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றியது. நிஜமாகிய கிறிஸ்து வந்த பிறகு நிழல் நமக்கு தேவை இல்லை. ஓய்வு நாளுக்கும் ஆண்டவராயிருக்கிற இயேசு (மாற் 2:28) நமக்கு ஆண்டவராய் இருப்பதால், ஓய்வுநாள் சட்டம் நம்மை ஆளாது. மத் 28:20ன் படி மனிதனாய் இருந்த இயேசு கிறிஸ்து கட்டளையிட்ட யாவையும் கைக்கொள்வதே நம் தலையாய கடமை.

இந்த ஓய்வுநாள் ஆசரிப்பு உலகத்தின் ஆரம்பத்திலேயே இருந்தது என்று வாதிடுவோரும் உண்டு. ஆதி 2:2,3ஐ வாசியுங்கள். தேவன் ஏழாம் நாளிலே படைப்பினை நிறுத்தி ஓய்ந்திருந்து அதை ஆசீர்வதித்து பரிசுத்தப்படுத்தினார். பரிசுத்தம் என்றால் இந்த இடத்தில்

Holiness அல்லது தூய்மை என்ற அர்த்தத்தில் வரவில்லை; பரிசுத்தம் என்றால், Set apart - அதாவது பிரித்தெடுக்கப்படுதல் அல்லது தனிமைப்படுத்துதல் என்று பொருள். இஸ்ரேல் மக்கள் பரிசுத்த ஜாதி என்று சொல்வதும், நம்மை பரிசுத்தவான்கள் என்றழைப்பதும் இதே அர்த்தத்தில் தானே ஒழிய வேறில்லை. இந்த தேவன் ஓய்ந்திருந்த அந்த ஓய்வு நாளை ஆசரிக்க வேண்டுமென்று ஆதாம் - ஏவாளுக்கோ, நோவாவுக்கோ, ஏனோக்கிற்கோ, ஆபிரகாமுக்கோ, யாக்கோபுக்கோ கட்டளையிடப்படவில்லை. அவர்கள் கைக்கொண்டதாகவும் ஆதாரமில்லை. இஸ்ரேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டு 2ம் மாதம் 15ம் தேதி சீன் வனாந்திரத்தில் மன்னா கொடுப்பது பற்றி மோசே சொல்லும் போதுதான், கர்த்தருடைய ஓய்வு நாள் உண்டென்று இஸ்ரேலருக்கு தெரிந்தது (யாத் 16:23). அதுவும் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டபடி அன்று ஆசரிக்க சொல்லவில்லை. அதற்குப் பின் 3ம் மாதம் சீனாய் வனாந்திரத்தில் தான் இப்படிப்பட்ட ஓய்வு நாள் ஆசரிப்பு கட்டளையை தேவன் தன்வாய் மூலமே தருகிறார். இதுதான் பத்துக் கற்பனையில் வரும் 4ம் கற்பனை. (யாத் 10:1; 20:8-11). இது ஏன் கொடுக்கப்பட்டது?

பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் திருவுளம் பற்றினார். இயேசு சொன்னார்:- "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத் 11:28). இது என்ன சரீர இளைப்பாறுதலா? இல்லை. ஆவிக்குரிய ஆத்ம இளைப்பாறுதல் என்று மத் 11:29 சொல்கின்றது. சனிக்கிழமையை ஓய்வு நாளாக்கி ஆசரிக்க வைத்தது இஸ்ரேலருக்கு மட்டுமே! அதுவும் அது சரீர ஓய்வு தான்; அதன் மூலமாய் ஆவிக்குரிய இளைப்பாறுதலை இஸ்ரேலரால் கிடைக்க வழி செய்தார் தேவன். ஆனால் இஸ்ரேலரோ அவிசுவாசத்தினாலே அதில் பிரவேசிக்க கூடாமற்போனார்கள் (எபி 3:19). விசுவாசித்தவர்களாகிய சபையாகிய நாமோ அந்த ஆவிக்குரிய இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம் (எபி 4:3). ஏழாம் நாள் ஓய்வு இதுவல்ல (எபி 4:4,5). மனிதனாய்ப் பிறந்த இயேசுவினிடத்தில் கற்றுக் கொண்டு, இலகுவான அவரின் நுகமாகிய வசனத்தை ஏற்றுக் கொண்டாலே போதும்; ஆத்மாவுக்கு இளைப்பாறுதல். ஆத்மா சுகமாய் வாழ்ந்தால் நமக்கு எல்லாவற்றிலுமே சுகம் கிடைக்கும் (3யோ 2). அல்லேலூயா! எனவே கிறிஸ்துவின் மூலமாய் வரும் ஆத்ம இளைப்பாறுதலுக்கு நிழலாட்டமான ஓய்வு நாள் ஆசரிப்பு நமக்கு தேவையில்லை.

ஏசா 58:13,14ல் சொல்லப்பட்ட ஆசீர்வாதம் வேண்டுமென்றால் சனிக்கிழமையாகிய ஓய்வுநாளை ஆசரித்தாக வேண்டும் என்று சபையாருக்கு சிலர் சொல்லுகின்றனர். இப்படிச் சொல்வோர் சனிக்கிழமையை ஆசரிப்பதால் கிடைக்கும் ஆசீர்வாதத்தை "உன் தகப்பனாகிய யாக்கோபின் சுதந்திரத்தால் உன்னைப் போஷிப்பேன்" என்கிறார் தேவன். விசுவாச மார்க்கத்தாருக்கெல்லாம் ஆபிரகாமே தகப்பன்; அவனின் ஆசீர்வாதம் தான் நமக்கு உண்டு (கலா 3:7,9) யாக்கோபு மாம்சப் பிரகாரமான இஸ்ரேலருக்கு தகப்பன்; அவனின் ஆசீர்வாதம் அவர்களுக்குத் தான். எனவே சனிக்கிழமையாகிய ஓய்வு நாளை ஆசரிப்போர் இன்னும் யாக்கோபின் வம்சம் தான்; இரட்சிக்கப்பட்ட நாமோ ஆபிரகாமின் சந்ததி; எனவே நாம் மனிதனாய்ப் பிறந்த இயேசுவின் உபதேசப்படி நடப்போம்; இளைப்பாறுதல் பெறுவோம்; வெற்றிவாகை சூடுவோம்! அல்லேலூயா!

❖ ❖ ❖

# மீதமானவர்கள் யார்?

இன்றைக்கு ஒரு சில கிறிஸ்தவ சபைகள் நாங்கள் தான் மீதமான சபையார் என்று சொல்லி பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். வேதத்திலே மீதமான சபை - Remnent Church என்று எங்குமே இல்லை. Church - சபை என்பது எக்ளீசியா என்ற மூல பாஷையாகும். இதை இயேசு கிறிஸ்து தன்மேல் கட்டினார் (மத் 16:18). புதிய ஏற்பாட்டில் பவுல்தான் இரத்தத்தினால் தெரிந்து கொண்ட சபையைப் பற்றிய இரகசியத்தை வெளிப்படுத்துகிறார். (எபே 2:19-3:6) ஆனால் Remnent - மீதமான மக்கள் என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டிலிருந்து வருகின்றது. வெளி 12:17ல் ஆங்கிலத்தில் சொல்லப்பட்ட மீதமானவர்கள் இயேசுவைக் குறித்து சாட்சியை உடையவர்கள் என்பதால், இவர்கள் மீதமான கிறிஸ்தவ சபையார் என்று பலர் எண்ணுகின்றனர். சபை வெளி 4:1க்கு பின் பூமியில் இல்லை என்பதால் வெளி 18 வரை சபையைப் பற்றிய தீர்க்கதரிசனம் உள்ளது என்று சொல்ல நியாயமில்லை. வெளி 12:17ல் சொல்லப்பட்டது மீதமான இஸ்ரேலரைக் குறிக்கிறது. அதாவது மொத்த இஸ்ரேலிலே இருக்கும், இரட்சிக்கப்பட்ட, ஆவிக்குரிய, மகா உபத்திரவ அந்தி கிறிஸ்துவின் காலத்தில் வாழப்போகும் இஸ்ரேலரையே குறிக்கிறது.

எலியாவின் நாட்களில், ஆவிக்குரிய 7000 இஸ்ரேலரை தேவன் மீதியாக வைத்தார் என வேதம் சொல்கிறது. (ரோ 11:4; 1இராஜா

19:18). ஏசாயாவின் நாட்களிலும் கொஞ்சம் ஆவிக்குரிய இஸ்ரேலரை தேவன் மீதியாக வைத்தார் (ஏசா 1:9). இஸ்ரேலர்கள் பாபிலோனில் சிறைப்பட்ட காலத்திலும், எஸ்தர், மொர்தகாய், எசேக்கியேல், தானியேல், அனனியா, மிஷாவேல், அசரியா போன்ற மீதமானவர்களை தேவன் வைத்திருந்தார். 70 வருஷ சிறைக்காலத்திற்கு இறுதியிலும் எஸ்றா, நெகேமியா போன்றோரின் தலைமையில் மீதமானோர் திரும்பி வந்தனர். இயேசுவின் முதலாம் வருகையிலும் ஆவிக்குரிய - மீதமான யோவான் ஸ்நானகன், சிமியோன், அன்னாள் போன்ற இஸ்ரேலர்கள் இருந்தார்கள். (லூக் 2:38 in English) சபையின் இந்த காலத்திலும் விசுவாசமுள்ள யூதர்களை தேவன் மீதமானவர்களாய் வைத்திருக்கிறார் (ரோ 11:5). அந்தி கிறிஸ்துவின் நாட்களிலே 1,44,000 பேரை தேவன் வைத்திருக்கப் போகிறார். (வெளி 7).

இப்படியாய் இஸ்ரேலரில் இருக்கும் போது, கிறிஸ்தவர்களுக்குள்ளும் "ஆவிக்குரிய - மீதமான சபையார்" என்ற ஒரு தனிபிரிவு இருக்கும் என நம்புகின்றனர் சிலர். அது தவறு, ஏனென்றால் தேவன் உருவாக்கிய சபையே ஆவிக்குரிய சபைதான். இரட்சிக்கப்பட்டவர்களை மாத்திரமே சபையில் அவர் சேர்க்கிறார் (அப் 2:47). ஆனால் இஸ்ரேலர் என்றாலே இரட்சிக்கப்பட்டவர்கள் என்று பொருளல்ல; மாம்சீகப் பிரகாரமாய் பிறப்பவர்கள். அவர்களிலே ஒரு சில விசுவாச வீரர்களை தேவன் எல்லா காலங்களிலும் காத்து வருகிறார். அவர்களே மீதமானவர்கள். ஆனால் நம் தேவ சபையிலே தேவனால் சேர்க்கப்பட்டவர்கள் அனைவரும் இரட்சிக்கப்பட்ட ஆவிக்குரியவர்கள் தான். அவர்களை தேவன் ஆவிக்குரிய இஸ்ரேலர் என்று தான் தகுதிப்படுத்துகிறார். அவர்களின் தகுதிகளில் வேண்டுமென்றால் பிதாக்கள், வாலிபர்கள், பிள்ளைகள் என்று இருக்கலாமே ஒழிய (1யோ 2:13,14) மற்றபடி அனைவருமே தேவ பிள்ளைகள் தான். அதிலே மீதமானவர்கள் என்று ஒதுக்க வாய்ப்பில்லை. எனவே இரட்சிக்கப்பட்ட (யோ 3:3,5; ரோ 10:9,10) பிள்ளைகள் எல்லோருமே நாளுக்கு நாள் மனம் மறுரூபமாகி தேவனோடு இணைவோம்! அல்லேலூயா! மீதமான சபை என்று சொல்லி தேவன் எங்குமே பிரிவுபடுத்தி உருவாக்கவில்லை என்று அறிவோம்! ஆவிக்குரியவனாய், இரட்சிக்கப்பட்டவனாய் இருப்பவன் தானே கிறிஸ்தவ சபையான்! மற்றவர்களெல்லாம் தேவனால் கிறிஸ்தவர்கள் என்று பெயர் வைக்கப்படாதவர்கள். மாம்சீக இஸ்ரேலர்கள் கூட இவர்களோடு சேரமாட்டார்கள். இவர்கள் புறஜாதியாரே! ஆமென்.

❖ ❖ ❖

# தேவனுக்கு கோபம் வருமா?

"நம் தேவன் அன்பாயிருக்கிறார்; ஆற்றுகிறார்; அரவணைக்கிறார்" என்று மட்டுமே கேள்விப்பட்ட நாம் அவர் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார் என்பதை மறவாதீர். (எபி 12:29). தேவ கோபம் பயங்கரமானது. தேவ கோபம் கிளர்ந்தெழும் (யாத் 4:14; எண் 11:10; 12:9). தேவ கோபம் பற்றி எரியும் (உபா 29:24); உக்கிரமான கோபம் வெளிப்படும் (எண் 25:4) கோபப்படுவதில் தாமதம் காட்டுவார். நீடிய பொறுமையும் சாந்தமும் உள்ளவர் (சங் 103:8; 145:8) அவர் என்றைக்கும் கோபம் கொண்டிரார் (சங் 103:9; 30:5) இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இதன் மூலம் நீ தெரிந்து கொள்வது என்ன? தன்னால் தெரிந்து கொள்ளப்பட்ட, தீர்மானிக்கப்பட்ட தேவ பிள்ளைகள் மேல் தான் தேவனுக்கு கோபம் வருகிறது என்றும், அதுவும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் வசனத்திற்கு விரோதமான அக்கிரமச் செய்கைகளினாலே தான் (Lawlessness) என்றும், அதுவும் அவர்கள் மனந்திரும்பிவிட்டால் மாறிவிடும் என்றும் அறிகிறோமல்லவா! தேவன் அன்பாகவே இருக்கிறார் (God is Love. Love is not God) என்று அறிந்துள்ள நாம் (1யோ 4:8) அந்த அன்பினின்று பிரியாது நம்மை காத்துக் கொள்ள வேண்டாமா? நித்திய நரகம் நமக்குச் சொந்தமல்லவே! நம் சொந்த தேசம் பரலோகமல்லவா!

இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு கிருபையினால் நீதிமான்களாக்கப்பட்ட பரிசுத்த ஜனமே! பரிசுத்தவான்கள் மேல் தேவனுக்கு வந்த கோபத்தைப் பற்றி கொஞ்சம் பார்ப்போம். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே, ஊழியத்திற்குப் புறப்பட்டுப் போகையில், அந்நிய நுகமாகிய தன் மனைவியோடு போனதாலே தேவனுக்கு கோபம் மூண்டது. அந்நிய நுகப் பிணைப்பு திருமணத்தில் மட்டுமல்ல ஊழியத்திலும் கூடாது என்பது தேவ சித்தம். (யாத் 4:24-26). இரட்சிப்பின் அனுபவமில்லாத பாரம்பரிய பெயர்க்கிறிஸ்தவ சபை அங்கத்தினர், இரட்சிக்கப்பட்டிருந்தாலும், அந்நிய பாஷை பேசினாலும், அற்புதம் அடையாளம் செய்தாலும், பாபிலோனை விட்டு வெளியே வராதவரை அவர் அந்நியரே! பிரித்தெடுக்கப்பட்ட (எக்ளீசியா) சபையாரல்ல. அவரோடு ஊழியம் செய்வது அந்நிய நுகப்பிணைப்பு; தேவ கோபம் மூழும். கிருபையின் காலமாய் இருப்பதால் தேவன் மோசேயை கொல்லப் பார்த்தது போல இன்று கொல்லப் பார்க்கவில்லை. அதனால் துளிர்விட்டுப் போக வேண்டாம். நியாயத்தீர்ப்பு நிச்சயம் உண்டு. இஸ்ரேலர்களினிமித்தம் மோசே, தேவனின் வார்த்தைப்படி செய்யாததால் (எண் 20:10-12) மோசேயைப் பற்றி தன் வாயாலேயே

நற்சாட்சி கொடுத்த (எண் 12:6-8) அதே தேவன், அவன் மேல் கோபம் கொண்டு கானானில் பிரவேசிக்க வைக்கவில்லை. தேவ பிள்ளையே! உனக்கு இது எச்சரிக்கை!

ஆசாரியனாய் அழைக்கப்பட்ட ஆரோன் விக்ரக ஆராதனைக் காரனாகிய விபச்சாரக்காரனாய் மாறி, பொன்னினால் கன்றுக்குட்டியை செய்து ஆராதனை செய்ததினாலே கர்த்தர் அவன் மேலும் மிகவும் கோபம் கொண்டு அழிக்க வேண்டும் என்றிருந்தார். (உபா 9:20). இன்றைக்கு கிருபையின் காலத்தில் ஆவிக்குரிய அருவருப்புகளை, (ஆவிக்குரிய விபச்சாரங்களை) தைரியமாய்ச் செய்து கொண்டிருக்கும் யாராயிருந்தாலும் தேவ கோபத்தை அறியாதிருக்க நியாயமில்லை. பரிசுத்த தேவாலயத்தையே கட்டி பிரதிஷ்டை பண்ணி, தேவனுடைய மகிமையினால் தேவாலயம் நிரப்பப்படுவதை கண்ட சாலமோன் ஞானியிடம், இரண்டு விசை கர்த்தர் சொல்லியும் அவன் கேளாமல் அந்நிய ஸ்திரிகளோடு இணைந்து அந்நிய தேவர்கள் பக்கம் இருதயத்தைச் சாய்த்து தூபம் காட்ட ஆரம்பித்து, கர்த்தர் கற்பித்ததை கைக்கொள்ளாமல் போனதினாலே அவன் மேல் கோபமானார் (1ராஜா 11:1). முடிவு... அவன்மூலமாய் தேவன் தந்த நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதபாட்டு எல்லாம் இருக்கிறது. அந்தோ! அவன் பெயரை மட்டும் எபி 11ல் காணோமே! இஸ்ரேல் மக்கள் மீது தேவனுக்கு வந்த கோபத்தை வாசியுங்கள் (உபா 9:8; 2ராஜா 17:18).

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நீ தேவனுடைய பார்வையில் எந்த நிலையில் இருக்கிறாய்? பட்சிக்கிற அக்கினியான தேவனின் வார்த்தைப்படி நடக்கும் கிரமக்காரனாய் செயல்பட்டு (Lawful) அவரின் அன்பில் இணைக்கப்பட்டிருக்கிறாயா?

உன்னை நீயே சோதித்தறிந்து செயல்படு! தேவன் நீதியுள்ள நியாயதிபதி; அவர் நாள்தோறும் பாவியின் மேல் சினங்கொள்ளுகிற தேவன். அவன் மனந்திரும்பாவிட்டால் நாணேற்றி அதை ஆயத்தப்படுத்தி இருக்கிறார். (சங் 7:11-12). நீயோ கர்த்தரை அவருடைய நீதியின்படி துதித்து உன்னதமான கர்த்தருடைய நாமத்தை கீர்த்தனம் பண்ணு! வசனப்படி நட! தேவ கோபம் உன் மேல் வராது! ஆமென்! தேவ கோபம் நியாயத்தீர்ப்பில் தான் வெளிப்படும் என்று எண்ணாதே! அனனியா - சப்பிராளுக்கு ஏற்பட்டது போல சரித்திர நியாயத்தீர்ப்பு ஏற்டவும் வாய்ப்புண்டு. ஜாக்கிரதை. 1தீமோ 5:24ஐ மறவாதீர்.

❖ ❖ ❖

# தசமபாகம் யாருக்கு கொடுக்க வேண்டும்?

தசமபாகம் கொடுக்கிற பழக்கம், நியாயப்பிரமாணம் சீனாய் மலையில் கொடுக்கப்படுவதற்கு முன்னமேயே, பழைய ஏற்பாட்டுக்கு முன்னமேயே வழக்கத்தில் இருந்தது. விசுவாச மார்க்கத்தின் தகப்பனான ஆபிரகாம், பழைய ஏற்பாட்டுக்கும் முன்னமேயே, மெல்கிசேதேக்கு தசமபாகம் கொடுத்தான் என்று ஆதி 14:20 சொல்கின்றது (See எபி 7:2). யாக்கோபும் தசமபாகம் கொடுத்தான் என்று ஆதி 28:22 சொல்கிறது. எனவே தசமபாகம் கொடுப்பது என்பது பழைய ஏற்பாட்டுச் சட்டம் என்றோ, புதிய ஏற்பாட்டு மக்களுக்குத் தேவையில்லை என்றோ, ஒதுக்கி வைக்க நியாயமில்லை. யாக்கோபு தற்கால மாம்சீக இஸ்ரவேலருக்கும், ஆபிரகாம் புதிய ஏற்பாட்டு ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கும் முன்னோடியாய் இந்த விஷயத்தில் இருந்தார்கள் என்று முந்தி அறிக. வேதத்தில் சொல்லப்பட்ட அத்தனை ஆசீர்வாதங்களுமே எல்லோருக்குமே உண்டு. ஆசீர்வாதங்களெல்லாம் நிபந்தனைக்கு உட்பட்டது (Conditional) என்று நாம் அறிந்திருக்கிறோம். தேவன் வானத்தில் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமல் போகுமட்டும் கொடுக்கப்போகும் ஆசீர்வாதத்திற்கான நிபந்தனையை மல் 3:10ன் மூலம் அறிகின்றோம்.

தசமபாகம் மனுஷனுக்குரியது அல்ல; அது தேவனுக்குரியது (லேவி 27:30) தேவனுக்குரியதை தேவனுக்குச் செலுத்தாமல் வஞ்சித்தால் சபிக்கப்பட்டவர்களாவோம் என்று மல் 3:8.9 சொல்கின்றது. அப்படியானால், தசமபாகத்தை யாருக்கு எங்கே செலுத்தி, சாபத்திற்கு நீங்கலாக்கி, ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வது? மல் 3:10ன் படி தேவனுடைய ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி பண்டசாலையிலே தசமபாகத்தை கொடுக்க வேண்டும். இக்காலத்தில் ஆகாரம் என்பது ஆவிக்குரிய ஆகாரமாகும்; அதாவது விசுவாசத்தை வளர்க்கும், வசனத்தோடு கூடிய சுவிசேஷ ஊழியமாகும். இந்த ஆகாரம் ஆலயமாகிய சபையிலிருந்து கிளம்ப வேண்டும். கற்களால் கட்டப்பட்டது அல்ல ஆலயம். தேவன் இயேசு கட்டிய சபையே ஆலயம்; நாமே ஆலயம் (1கொரி 3:16; 6:19; மத் 16:18). இந்த ஆலயத்தில் தான் பண்டசாலைகள் உள்ளன (Godown) இந்த பண்டசாலைகளிலிருந்து வசன ஆகாரம் உலகமெங்கும் போக வேண்டும். அதற்குத்தான் நாம் தசமபாகம் கொடுக்க வேண்டும். சபையாகிய ஆலயத்திலே தேவன் 5 விதமான ஊழியங்களை வைத்திருக்கிறார். அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர், மேய்ப்பர்,

போதகர் என்பவைகளே. (எபே 4:12,13) தற்காலத்திலே நாம் உண்டாக்கியிருக்கும் அசெம்பிளி ஆப் காட், ஏசிஏ, ஷெக்கினா, சிபிஎம், வானவில், சர்ச் ஆப் காட் போன்ற சபைகளில் அல்ல; தேவன் இயேசு உண்டாக்கிய ஆவிக்குரிய சபையில் இருக்கும் சபை ஊழியங்கள் இவைகள், தற்கால சபைகளில், இந்த 5 ஊழியங்களும் எல்லா சபைகளிலும் இருக்க வாய்ப்பில்லை. இவைகள் ஆங்காங்கே பல சபைகளில் பரவிக்கிடக்கின்றன.

நமது கிறிஸ்தவர்களின் கணிப்புப்படி ஊழியக்காரர் என்றாலே சபையை நடத்துகிற பாஸ்டர்-மேய்ப்பர்தான் ஊழியக்காரர் என்று எண்ணுகின்றனர். ஆனால் எபே 4:13ல் இந்த பாஸ்டர் ஊழியம் 4வது இடத்தில்தான் உள்ளது. இந்த மேய்ப்பர் ஊழியம் செய்பவர், போதக சமர்த்தராய் இருக்க வேண்டும் என்பதால், இவர் போதக ஊழியத்தையும் இணைந்தே செய்ய வேண்டும் என்றுதான் 4வது ஊழியத்தையும் 5வது ஊழியத்தையும் இணைத்தே சொல்லப் பட்டுள்ளது. தற்காலத்தில் போதக ஊழியர் குறைவாகவே இருக்கின்றனர். இவர்கள் மூலமாகத்தான் சபையில் மொத்த ஊழியமே நடக்கின்றது என்ற ஒரு நம்பிக்கை. அதனாலே தசமபாகத்தை என்னிடமே கொடு என்று வற்புறுத்துகின்றனர். நாம் சார்ந்திருக்கும் சபை மேய்ப்பரிடம் தசமபாகம் கொடுக்க வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் இந்த சபை மூலமாய், அப்போஸ்தல, தீர்க்கதரிசன, சுவிசேஷ, போதக ஊழியங்கள் எல்லாம் நடக்கின்றனவா? சபை பண்டசாலையிலிருந்து எல்லாவித ஆவிக்குரிய ஆகாரங்களும் புறப்பட்டுப் போகின்றனவா? இல்லை என்றால் நாம் சிந்திக்க வேண்டாமா? "என் தசமபாகம் 5 வித ஊழியங்களுக்கும் பிரயோஜனமாக வேண்டுமே" என்று நாம் நினைக்க வேண்டாமா? நீ சார்ந்திருக்கும் சபையில் இந்த 5 ஊழியம் இல்லையென்றால் ஜெபி. கர்த்தருக்கு சித்தமானால் அது நடக்கும். இல்லையேல், ஊழியர் ஸ்டான்லி சொல்வது போல எங்கெல்லாம் இப்படிப்பட்ட ஆகாரங்கள் பரிமாறப்படும் ஊழியம் நடக்கிறதோ அங்கெல்லாம் தசமபாகம் கொடுங்கள்; அதில் தவறே இல்லை; அதுதான் வேதத்திற்கு ஏற்றது. ஆமென்.

இந்த 5 ஊழியங்களும் ஐந்து விரல்களை போன்றது. கட்டைவிரல் அப்போஸ்தல ஊழியத்தைக் குறிக்கிறது. இந்த ஒரு விரல்தான் மற்ற நான்கு விரல்களையும் தொடமுடியும். மற்ற நான்கு ஊழியங்களையும் அப்போஸ்தலரால் மட்டுமே செய்யமுடியும். ஆட்காட்டி விரல் தீர்க்கதரிசன ஊழியத்தை குறிக்கிறது. இது சபைக்குள் மட்டும்தான் வெளியே இல்லை. நடுவிரல் சுவிசேஷ ஊழியத்தைக் குறிக்கிறது. 5 விரல்களிலும் இந்த விரல்தான்

உயரமானது. அப்படியே 5 ஊழியங்களிலும் இந்த ஊழியம்தான் உயரமாய் பெரிதாய்த் தெரியும். இது சபையில், நடப்பது. இந்த ஊழியத்தின் மூலமாய்த் தான் மகிமையின் சுவிசேஷம் சபைக்குள் பரவ வேண்டும். மற்றப்படி புறஜாதிகள் மத்தியில் சுவிசேஷ ஊழியம் செய்வோர் சபையார் அனைவரும் (மத் 28:18,20டு 1பேது 2:9). இவர்களால் அற்புதம் அடையாள புறஜாதிகள் மத்தியில் நடக்க வேண்டும். சபையிலும் எழுப்புதல் உண்டாக வேண்டும். மாற் 10:29,30ஐ வாசியுங்கள். சுவிசேஷத்தின் நிமித்தம் வீடு, நிலம், மாடு, மனைவி, வீட்டார் எல்லாவற்றையும் அற்பமாய் எண்ணி செயல்பட வேண்டும் என்று இயேசு கிறிஸ்து இந்த ஊழியத்தை மிகவும் முக்கியப்படுத்தி இருக்கிறார். மோதிர விரல்தான் மேய்ப்பர் ஊழியத்தைக் காட்டுகிறது. இது மதிக்கப்படத்தக்க ஊழியம், சபையாரை நடத்தும் ஊழியம். சுண்டு விரல் போதக ஊழியத்தைக் குறிக்கிறது. போதக ஊழியம் இல்லாதவரை சபை கெட்டுப்போகும். சுண்டு விரல் பார்வைக்கு சிறியது தான். ஆனால் காதில் எறும்போ, ஏதோ நுழைந்துவிட்டால், வேறு எந்த விரலும் காதுக்குள் குடைந்து அகற்ற முடியாது. ஆக போதக ஊழியத்தால் சபையாரிடமுள்ள அறியாமைகளை அகற்ற முடியும். (ஓசி 4:6). இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! “தாய்ச்சபை” “தந்தை சபை” என்ற பாரம்பரியம் வேண்டாம். ஆவிக்குரிய ஆகாரம் கிடைக்க எங்கெல்லாம் வழி உண்டோ அங்கெல்லாம் தசமபாகம் கொடுக்கலாம்; அதற்காக சபைக்கு கொடுப்பதை விட்டுவிட நான் சொல்லவேயில்லை. சொல்லவுமாட்டேன். சபைக்கு கொடுப்பதே பிரதானம்!

❖ ❖ ❖

# பூ வைக்கலாமா? பொட்டு வைக்கலாமா? நகை போடலாமா?

“பூ வைக்கலாமா? பொட்டு வைக்கலாமா? மயிரைப் பின்னலாமா? நகை போடலாமா? விலையுயர்ந்த வஸ்திரம் அணியலாமா? அலங்காரம் பண்ணலாமா?” இது போன்ற கேள்விகளை தொடர்ந்து கிறிஸ்தவ வட்டாரம் கேட்டுக் கொண்டே இருக்கின்றது. இது இயேசு கிறிஸ்துவின் வருகை வரை கூட தொடரும் போல் தெரிகின்றது. காரணம் என்ன? இந்த கேள்விகளுக்கான சரியான பதிலைச் சொல்லி, இனி எப்போதும் இப்படிப்பட்ட கேள்விகள் எழாதபடி செய்யும் போதகர்கள் இல்லை என்பதுதான் வருந்தத்தக்க விஷயம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! பூவை ஏதேனிலே உருவாக்கியவர் காத்தர். தேவன்

உருவாக்கியதை நாம் உதறித்தள்ளினால் அவரை உதறுகிறோம் என்று பொருள். ஒரு பெந்தகொஸ்தே பாஸ்டரின் மனைவி ஒரு நாள், பூவைப் பார்த்து "அய்யோ! பிசாசு... அதை தூக்கி எறி" என்றார்கள். அப்படியானால் பூவாகிய பிசாசைப் படைத்தவர் என்று, தேவனை நீ கனவீனம் பண்ணுகிறாய். மயிரைப் பின்னாமல், பரட்டைத் தலையாய் விடலாமா? பரட்டைத் தலையோடு, மயிரைப் பின்னாமல், பெண்கள் அலைந்தால் சாப்பாட்டிலும் தண்ணீரிலும் எங்கும் மயிர்தான் கிடக்கும். பொன்னும் வெள்ளியும் கர்த்தருக்குரியது. அப்படியிருக்க பொன்னை வெறுக்கலாமா? புத்தியுள்ள ஸ்திரி இரத்தாம்பரத்தை உடுக்கும்போது (நீதி 31:22), சாலமொன் ராஜா போல சரித்திரத்தில் யாரும் உடுத்தவில்லை என்று இயேசுவே பெருமையாய் சொல்லும்போது (மத் 6:29). ராஜா வீட்டுப் பிள்ளைகள் அணியக்கூடாதா, அப்படிக் கேள்விகள் ஏராளம் எழும்புகின்றன.

2தீமோ 3:9,10ஐ வாசியுங்கள். நற்கிரியைகளினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும் தங்களை வெளியிடத்திற்கு காட்டிக்கொடுக்காமல், இப்படிப்பட்ட குணங்களிளெல்லாம் பூஜ்யமாய் இருந்து கொண்டு, மயிரைப் பின்னுதல், பொன், வெள்ளி விலையுயர்ந்த வஸ்திரம் போன்றவற்றால் அலங்காரம் செய்து உலகிற்கு காட்டுவது கிறிஸ்தவப் பெண்களுக்கு ஏற்றது அல்ல. இதனால் கிறிஸ்துவின் நாமமே தூஷிக்கப்பட வழிவகுக்கும். எந்தக் கிறிஸ்தவனிடத்திலும் ஏதோ ஒரு குறைகள் இருந்தாலும் உடனே அது கிறிஸ்தவ சபையையும், கிறிஸ்துவையும் குறைத்துச் சொல்லுகின்ற நிலையை நாம் காண்கிறோம். எபே 2:10ன் படி நாம் இரட்சிக்கப்பட்டதே, தேவனுடைய நற்கிரியைகள் நம்மூலம் வெளிப்படுவதற்கே! 1பேதுரு 3:1-6 வரை வாசியுங்கள். பெண்கள், புருஷர்களை ஆதாயப்படுத்திக் கொள்ள எப்படி இருக்க வேண்டும் என்று பேதுரு எழுதுகிறார். நிறைய பெண்கள் புருஷனைக் கவரும்படியாய் டிரஸ்பண்ணி, பவுடர், லிப்ஸ்டிக், கண் மை எல்லாம் போட்டு, பூ வைத்து, ஆபரணங்களால் மினுக்கி நின்று வரவேற்பதைப் பார்க்கிறோம். புருஷனுக்கு மாத்திரமே இந்த அலங்காரம் செய்வது நல்லதுதான். ஆனால் இந்த அலங்காரமும் அழகும் என்றும் நிரந்தரமானவை அல்ல. அழகுக்காய், கவர்ச்சிக்காய் ஒரு புருஷன் அன்பு காட்டினால் அது கொஞ்சகாலந்தான். சாந்தமும் அமைதியுமே பெண்களுக்கு தேவை. இவைகளால் தான் பூர்வகால, தேவனுடைய மனுஷிகள் புருஷர்களை ஆதாயப்படுத்தினார்கள் என்றும், அதற்கு உதாரணமாய் சாராளை, பேதுரு சொல்வதையும் பாருங்கள். பயபக்தியோடு கூடிய கற்புள்ள நடக்கையினாலேயே பெண்கள் புருஷர்களை ஆதாயப்படுத்த வேண்டும். இதுவே நிரந்தர ஆதாயம்.

இந்த அர்த்தத்தில் தான் பேதுரு எழுதுகிறார். மற்றபடி பொன்னும் வெள்ளியும் தேவனுக்கு விரோதியல்ல.

ஏதேன் தோட்டத்திற்கு தண்ணீர் பாயும்படி உள்ள 4 ஆறுகளில் பைசோன் ஆறுபாயும் ஆவிலா தேசம் பொன் விளையும் பூமியாம்; அந்தப் பொன் நல்லதாம் (ஆதி 2:11,12) விசுவாசமார்க்கத்தின் தகப்பன் ஆபிரகாம் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளையுடைய சீமானாயிருந்தான் (ஆதி 13:2) தன் மகனுக்கு பெண் பார்க்க போகும்போது, ரெபேக்காளுக்கு பொற்காதணியும், பொற்கடகங்களையும் எலியேசர் கொடுத்தான். அவளும் அணிந்தாள் (ஆதி 24:22,30). அவளுக்குமட்டுமல்ல, அவளுடைய தாய்க்கும் சகோதரனுக்கும் வெள்ளியும் பொன்னையும் வஸ்திரங்களையும் கொடுத்தான். இஸ்ரேல் மக்கள் எகிப்திலிருந்து வரும்போதே பொன்னையும் வெள்ளியையும் வஸ்திரங்களையும் கொள்ளையிட்டு குமாரர்களுக்கும் குமாரத்திகளுக்கும் தரிப்பித்து அலங்கரியுங்கள் என்று தேவன் சொன்னார் (யாத் 3:22; 11:2; 12:35). அப்படியே அவைகளைப் பெற்றுக் கொள்ள தேவன் தயை செய்தார் (ஆதி 12:36). மட்டுமல்ல ஆசரிப்புக் கூடாரமே பொன்னாலான வஸ்துக்கள் உடையவை. கேரூபின் பொன்னாலானது. பரலோகில் நாம் நடக்கப்போவதே பொன் தளத்தில் தான். ஆக, பொன் தேவனுக்கு விரோதமானதல்ல; அழகிய விலையுயர்ந்த வஸ்திரமோ, அலங்காரமோ தேவனுக்கு அருவருப்பானதல்ல.

பணம் தேவனுக்கு விரோதமானதல்ல; அது எல்லாவற்றுக்கும் உதவும் (நீதி) பண ஆசையே எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது (1தீமோ 6:10). சாப்பிடுதல் (போஜனம்) தேவனுக்கு விரோதமானதல்ல. போஜனப்பிரியன் தேவனுக்கு விரோதமானவன் (நீதி 23:2). ஐஸ்வர்யம் இருப்பது தேவனுக்கு விரோதமல்ல; ஐஸ்வரிய ஆசையே பரலோகத்திற்கு தடை (எபே 5:5). ஆக, பொன், வஸ்திரம், அலங்காரம் இவைகளின் மேல் ஆசை கொள்வதே தேவனுக்குப் பிரியமில்லாதது; அதுவே தேவனின் பார்வையில் விக்ரக ஆராதனை. ஆதனால்தான் தகுதியான வஸ்திரங்களால் நம்மை அலங்கரிக்க வேண்டும் என்று பேதுரு எழுதியிருக்கிறார். கல்யாண வீட்டிற்கு வந்த ஒருவன், அதற்கேற்ற வஸ்திரம் தரித்து வரவில்லை என்பதாலே அவன் விரட்டப்பட்டதாய் இயேசு உவமானம் சொன்னாரே புரிகிறதா? ஏழை வீட்டு கல்யாணத்திற்கு பயங்கரமான விலையுயர்ந்த பட்டுப்பீதாம்பரமும், பொன் நகைகளும் அணிந்து போகலாமா? ஒரு பெரிய டாடா பிர்லா வீட்டு கல்யாணத்திற்கு ஒன்றுமில்லாத ஏழையைப் போல போகலாமா? இரண்டுமே தவறுதான். ஏன் பள்ளிகளில் சீருடைகள் வைக்கப் பட்டுள்ளன தெரியுமா? உயர்வு தாழ்வு மனப்பான்மையைப்

போக்கத்தான். சில சபைகளில் வெள்ளை உடை அணியச் சொல்வதும் இந்த அடிப்படையில்தான். ஆனால் இது நியாயப் பிரமாணக்கிரியைகள் போல் ஆகிவிட்டதால் இப்படிப்பட்டவர்கள் எல்லாரும் சபிக்கப்பட்டவர்கள் தான் (கலா 3:10). ரோ 14:21ஐ வாசியுங்கள். நீங்கள் எதைச் செய்தாலும் அணிந்தாலும், உன் சகோதரன், உன் அருகிலுள்ளோன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது, பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால் அவைகளில் ஒன்றும் செய்யாமலிருப்பது நல்லது. உண்மையுள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, அன்புள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள். செயல்படுத்துங்கள். (பிலி 4:8)

ஒரு வாலிபப் பெண் தலையிலே மதுரை மல்லிகைப் பூ அழகாய் வைத்துக் கெகாண்டு பஸ்ஸில் பின்புறம் ஏறினால், முன்பக்கத்தில் நிற்கும் வாலிபனுக்கு இந்த வாசனை வந்து அவன் திரும்பிப் பார்க்கிறான்; பலவீனப்பட, இடறலடைய ஏதுவாகிறது. அதனால்தான் அந்த அலங்காரம் வேண்டாம் என சொல்லப்படுகிறது. மற்றபடி பெண்கள் தங்கள் கணவனை மகிழ்விக்க வீட்டிலே விவாக மஞ்சத்தில் வைத்துக் கொள்ளலாமே! யாருக்கும் இடறலின்றி எதையும் செய்யுங்கள். பொட்டு வைப்பது என்பது இந்துக்களின் சடங்காச்சாரமாய் ஆகிவிட்டது. அதை நாமும் செய்தால், நம்மை அவ்வளவு சுலபமாக கிறிஸ்தவன் என்று அடையாளம் கண்டு கொள்ள முடியாது. ஆனால் இன்றோ டி.வியில்செய்தி வாசிக்கும் பெண்ணைக் கூட கிறிஸ்தவள் என்று நம்மால் சொல்வதற்கு இது ஒரு அடையாளமாக இருக்கிறது. இதனால் பொட்டு வைப்பது பாவமல்ல; இந்து உலக வேஷம் நமக்கு வேண்டாம் (ரோ 12:2). உதாரணமாக, மாட்டுக் கறியை அதிகப்படியான கிறிஸ்தவர்கள் உண்கிறார்கள். இது பாவமல்ல. ஆனால் நம் தமிழர்கள் பசுமாட்டை தெய்வமாக எண்ணி, வீடு கிரகப் பிரவேசத்தின் போது இலட்சக்கணக்கான செலவில் வீட்டைக் கட்டி இருந்தாலும், பசு மாட்டை உள்ளே அழைத்து வந்து அதன் சிறுநீரை எல்லா இடத்திலும் தெளித்து, அதை சாணம் போடவைத்து வணங்குகிறார்கள். இவர்கள் மத்தியில் சுவிசேஷம் சொல்லப்போகும் நீ, தெய்வ நிலையிலுள்ள மாட்டை சாப்பிட்டால் அவர்கள் எப்படி உன்னை மதித்து வீட்டிற்குள் விடுவார்கள். எனவே நாம் அதை சாப்பிடக் கூடாது. இது சட்டமல்லவே. அப்படித்தான் பொட்டு வைப்பதும், பூ வைப்பதும், அலங்காரம் பண்ணுவதும், யாருக்கும் இடறலாயிருக்கக்கூடாது. உன் தோற்றத்தைப் பார்க்கும்போதே இவன் கிறிஸ்தவன், இவள் கிறிஸ்தவள் என்று

ஊரார் சொல்ல வேண்டும். கிறிஸ்து + அவள் = அவளே கிறிஸ்து என்ற நிலையில் நம் நடை, உடை, பாவனை எல்லாமே இருக்க வேண்டும்.

பவுலின் 1கொரி 10:19-22ஐ தயவு செய்து வாசியுங்கள். அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, அவன் தன்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினான். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நீயும் அப்படியே இரு! பரலோகம் தான் என் பேச்சு; பரிசுத்தம் தான் என் மூச்சு, கொஞ்சக்காலம் இந்த பூமியிலே! இயேசுவுக்காய்! சுவிசேஷத்திற்காய்! ஆமென்! கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள். இரட்சிப்பின் வஸ்திரமும் நீதியின் சால்வையையும் மாசடையாமல் பாதுகாத்துக் கொள்! உன் இச்சைகள் எல்லாம் சிலுவையில் அறைந்தாயிற்று என்று விசுவாசி (கலா 5:24) வெற்றி உனதே! விசுவாசக் கிரியை தான் தேவையே ஒழிய, சட்டப்படியான கிரியை அல்ல!

❖ ❖ ❖

# கிறிஸ்தவன் ஆசரிக்க வேண்டிய பண்டிகை கிறிஸ்மஸ்ஸா?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஆண்டவரென்றும், பாவங்களுக்காய் மரித்து உயிர்த்தெழுந்த இரட்சகர் என்றும் ஆவியாகிய இருதயத்திலே விசுவாசித்து, வாயினாலே அறிக்கை செய்து இரட்சிக்கப்பட்ட, தேவநீதியை உடைய நீதிமான்தான் கிறிஸ்தவன் (ரோ 10:9.10; ரோ 3:23,24; 1கொரி 6:11). இந்தக் கிறிஸ்தவர்கள் ஆசரிக்க வேண்டிய பண்டிகை எது? வேதத்திலே 8 விதமான பண்டிகைகள் மட்டும் லேவி 23ல் சொல்லப்பட்டுள்ளது. இந்தப் பண்டிகைகள் எல்லாமே வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றியது. கிறிஸ்துவாகிய நிஜம் வந்துவிட்டபடியினாலே இந்தப் பண்டிகைகளை ஆசரிக்க வேண்டுமென்றோ, ஆசரிக்காதது குறித்து குற்றப்படுத்தவோ யாரும் கூடாது (கொலோ 2:16,17) அப்படியானால் கிறிஸ்தவன் ஆசரிக்க வேண்டிய பண்டிகை ஏதுமில்லையா? இது கேள்வி.

வருடாவருடம் டிசம்பர் 25ம் நாள் கிறிஸ்து பிறந்தார் என்று சொல்லி கிறிஸ்மஸ் ஆசரிக்கிறோமே இது கிறிஸ்தவனுக்கு வேண்டாமா? வேதத்திலே கிறிஸ்துவின் பிறப்பை ஆசரிக்க சொல்லி

கட்டளையோ அல்லது ஆதி அப்போஸ்தலர்கள் ஆசரித்தார்கள் என்றோ ஆதாரம் ஏதும் இல்லை. இது இடையிலே நுழைந்துவிட்ட சடங்காச்சாரம். எகிப்திய பாரம்பரியத்திலிருந்து கிறிஸ்துவுக்குள் வந்த மக்களை திருப்திப்படுத்துவதற்காகவே கி.பி 4ம் நூற்றாண்டில் ரோமன் கத்தோலிக்க சபையால் ஏற்படுத்தப்பட்ட பண்டிகை இது. எகிப்திய மக்கள் இன்றும் டிசம்பர் 25ல் சூரிய தேவதைக்கான பண்டிகை கொண்டாடுவதால், கிறிஸ்துவுக்குள் வந்த எகிப்தியர் மறுபடியும் பழைய பண்டிகைக்காரர்களாய் மாறிவிடக்கூடாது என்றெண்ணி, அதே டிசம்பர் 25ல் இயேசு பிறந்தார் என்று சொல்லி, கிறிஸ்மஸ் தாத்தா, கிறிஸ்மஸ் வாழ்த்து, கேரல் சர்வீஸ், புத்தாடை அணிவிப்பு, புதுப்புதுப் பலகாரங்கள் மற்றும் உணவு வகைகள் படைப்பு போன்ற பல காரியங்களைச் செய்கின்றனர். சுய இன்பத்திற்காய், திருப்திக்காய், வேதத்திலே சொல்லப்படாத பாரம்பரிய காரியங்களினாலே தேவனுடைய வார்த்தைகளை அவமாக்குகிறார்கள் (மத் 15:6) புறஜாதியாரைப் போல் மாறுகிறார்கள். பாபிலோனியரைப் போல பண்டிகைக் கிறிஸ்தவர்களாய் மாறிவிட்டதால், தங்களுக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறோம் என்று அறியாதிருக்கிறார்கள். (எபே 4:30).

அப்படியானால் கர்த்தர் பிறந்த நாளைக் கொண்டாடக்கூடாதா? இது கேள்வி. மரிக்கக்கூடிய தன்மையுடைய மனிதனுக்குத்தான் பிறந்த நாள் கொண்டாட வேண்டும்; ஏனெனில் அவனுக்கு மரணநாளும் உண்டு என்று உணர்த்தும்படியாய். ஆனால் இயேசு மரணத்தை ஜெயித்தவராயிற்றே! அவருக்கு இனி மரணமே இல்லையே! அவருக்கு ஏன் பிறந்த நாள் கொண்டாட்டம்? ஒரு சில ஆவிக்குரிய சபையார் சொல்கிறார்கள்: “கிறிஸ்து எனக்குள் பிறந்திருக்கிறார். அதனால் தான் கிறிஸ்மஸ் கொண்டாடுகிறேன்” என்று. அப்படியானால் கிறிஸ்து உனக்குள் பிறந்தது - அதாவது நீ இரட்சிக்கப்பட்டது டிசம்பர் 25லா? இல்லையே! யோ 3:3,5ன் படி என்றைக்கு மறுபடியும் பிறந்தாயோ அன்றுதான் கிறிஸ்து உனக்குள் பிறந்திருக்கிறார். அன்றுமுதல் தினந்தோறும் உனக்கு கிறிஸ்து பிறந்த மகிழ்ச்சிதான்; கிறிஸ்மஸ்தான்; மேய்ப்பர்களிடம் தேவதூதன் சொன்ன நற்செய்தியும் இதுதான். “இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் பாலகன் அல்ல; இரட்சகர், மேரி யோசேப்புக்கு அல்ல; உங்களுக்குப் பிறந்திருக்கிறார்” (லூக் 2:11). ஆமென். நாங்கள் கிறிஸ்மஸ் கொண்டாடுவதில்லை என்று சொல்லி விட்டு, பல ஆவிக்குரிய சபையார் கிறிஸ்மஸ் ஆராதனை மட்டும் வைக்கிறார்களே. ஏன்? அதுவும் தமது சபையார் சீக்கிரமாய்ப் போய் மற்ற சபையாரைப் போல் கிறிஸ்மஸ் சமையல் செய்து மகிழட்டும் என்று காலையிலேயே ஆராதனையை சீக்கிரமாய் முடித்து

அனுப்புகிறார்களே. ஏன்? அறியாமல் கிறிஸ்மஸ் கொண்டாடுவது ஒன்று (அப் 17:30) அறிந்தும் செய்வது மகாப் பெரிய குற்றம். "இரட்சகர் இயேசு பிறந்ததை மற்றவர்களுக்கு பண்டிகை மூலம் சொல்வது எப்படிப் பாவம்? இதுவும் ஒருவகையான சுவிசேஷ ஊழியம் தானே" என்று வாதிடுவோரும் உண்டு. எதுவய்யா நற்செய்தி? இயேசு பிறந்தார் என்று நற்செய்தியை அறிவிக்க இயேசு உன்னையும் என்னையும் அழைக்கவில்லை. கிறிஸ்துவானவர் தாவீதின் சந்ததியில் பிறந்து, வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படியே 3ம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பது தான் நற்செய்தி (1கொரி 15:1-4; 2தீமோ 2:8,9) பாலகன் இயேசு பிறந்ததல்ல நற்செய்தி. பாலகன் குமாரனாகி (ஏசா 9:6; ரோ 1:5) அதாவது மரித்து உயிர்த்தெழுந்து நமக்குள் பிறந்திருக்கிறார் என்பதே நற்செய்தி. இதையே எந்நாளும் சொல்வோம்; இதிலே எந்நாளும் மகிழ்வோம்.

டிச. 25ல் இயேசு நிச்சயமாய் பிறக்கவில்லை என்பதை முதலில் அறிந்து கொள்வோம். உலகம் முழுவதும் கிறிஸ்மஸ் கொண்டாடுவதைப் பார்த்தால், டிசம்பர் மாதம் தான் மேய்ப்பர்கள் லூக் 2:8ன்படி மந்தைகளை வயல்வெளியில் கிடைபோட்டு காத்திருக்க வேண்டும். ஆனால் அக்டோபர், நவம்பர் எல்லாமே இஸ்ரேல் நாட்டிலே மழைக்காலம். முதல் மழை நவம்பரில் தான் பெய்யும். மழைக்காலம் முதல் இளவேனில் காலம் வரை மந்தைகளை இஸ்ரேலர் திறந்த வெளியில் அடைப்பார்களா? பஸ்கா பண்டிகை முதல் (மார்ச், ஏப்ரல்) மழை காலம் வரும் வரைதான் (அக்டோபர், நவம்பர்) இப்படியாய் திறந்த வெளியில் மந்தைகளை அடைப்பது வழக்கம். எனவே இந்த காலகட்டத்தில்தான் இயேசு பிறந்திருக்க வேண்டும் என்று யூகிக்கலாம். ஆக, டிசம்பர் 25ஐ இயேசு பிறந்தநாள் என்று சொல்லி, அந்நிய தெய்வ நாளிலே தேவையில்லாத விழா கொண்டாடப்படுகின்றது.

இயேசு கிறிஸ்து தன்னுடைய பிறந்த நாளை ஒருக்காலும் நினைவு கூறவோ, கொண்டாடவோ சொல்லவில்லை. தனது மரணத்தையே நினைவு கூறச் சொன்னார். அதுவும் மரண நாளையல்ல; மரணத்தை மட்டுமே! அப்படியே ஆதி அப்போஸ்தலர்கள் இயேசு சொன்ன வார்த்தைப்படியே வீடுகள் தோறும் அப்பம் பிட்டு அவரின் மரணத்தை நினைவு கூறினார்கள் (மத் 6:26-28; அப் 2:46; 1கொரி 1:23-26). இதுதான் நமக்குப் பண்டிகை என்று 1கொரி 5:7.8ல் பவுல் எழுதுகிறார். (See யாத் 12:11-20). இந்த இயேசுவின் மரணத்தால் தானே நமக்கும் விடுதலை, நாட்டிற்கும் விடுதலை. இதை எப்போதும் நினைத்து பண்டிகையாய்க் கொண்டாட வேண்டும். இதற்கு நாளோ

நேரமோ கிடையாது. இப்படியாய் தேவன் சொன்ன வார்த்தைப்படி மட்டுமே செயல்படும் போது தேவனிடத்தில் நாம் அன்பாயிருக்கிறோம் என்று பொருள் (1யோ 5:3,4) அப்போது தேவன் நம்மிலும் அதிக அன்பை நம்மீது காட்டுகிறார். அதனாலே, பவுலைப் போல வெற்றிக்கீதம் பாடமுடியும் (ரோமர் 8:37). தேவனின் மரணத்தை நினைவு கூர்ந்து, இராப்போஜனப் பண்டிகையை கொண்டாடும் போது, இயேசு நம் பாவங்களுக்காய் மரித்து மண்ணோடு மண்ணாய்ப் போகாமல் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதற்கும் நாம் சாட்சியாய் உலகின் முன் நிற்கிறோம். இதைத்தான் தேவன் விரும்புகிறார் (அப் 1:8) மற்றப்படி இயேசு பிறந்தார் என்பதற்கு நம் சாட்சி தேவையில்லை; சரித்திரமே அதற்கு சாட்சி பகர்கின்றது. எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் பாரம்பரிய பண்டிகைகளை விட்டு விட்டு, பரமன் இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் இவைகளை மட்டும் நினைப்போம்! புறஜாதியார் மத்தியில் அவரை மனிதனாக அல்ல; மரணத்தை ஜெயித்த தேவனாகக் காட்டுவோம்! - ஆமென்!

❖ ❖ ❖

# கிறிஸ்துவாகிய மேசியா என்கிற தேவகுமாரன்தான் பிதாவா?

எபிரேய பாஷையில் மேசியாவும், கிரேக்க பாஷையில் கிறிஸ்துவும் ஒரே அர்த்தம் உடையவை. “வரப்போகிறவர்”; “அபிஷேகம் பண்ணப்பட்டவர்” என்று பொருள். தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியா வந்து தங்களை ஒரு பெரிய ஜாதியாக்கி, உலகம் முழுவதையும் அரசாளுவார் என்று எதிர்பார்த்து இஸ்ரேலர் காத்திருந்தனர். ஆதி 3:15; 12:5; 49:10; எண் 24:17; உபா 18:18; சங் 2,16,22,40,110 போன்ற வசனங்களை வைத்து அவர் உலகத்திற்குரிய ராஜா என்றே இஸ்ரேலர் நம்பினார்கள். அப்போஸ்தலர்களும் கூட இப்படிப்பட்ட நிலையிலும் இருந்தார்கள். ஆனால் அவர் உயிர்த்தெழுந்த பிறகுதான் அவர் தேவ குமாரனென்றும், உலக இரட்சகர் என்றும் விசுவாசித்தார்கள். (ரோ 1:5; அப் 1:6; லூக் 24:21).

இந்த மேசியாவாகிய கிறிஸ்து பூமியில் மனிதனாய்ப் பிறந்த போது அவருக்கு இட்ட பெயர்தான் “இயேசு”. அப்படியானால் தேவ குமாரன் என்றால் அர்த்தம் என்ன? பவுல் அப்போஸ்தலன் இரட்சிக்கப்பட்ட உடனே கொடுத்த முதல் சாட்சி:- “சவுல் தாமதமின்றி,

கிறிஸ்து, தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்" (அப் 9:20). பேதுருவும் தனது ஊழியத்தின் இரண்டாவது பிரசங்கத்தில் இதைச் சொல்கிறான் (அப் 3:26). பிதாவாகிய தேவனும் இயேசுவை தன்னுடைய குமாரனென்று சாட்சி கொடுத்தார் (மத் 3:17; 17:5). "நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு இயேசுவிடம் சொன்ன போது அவர் அதை ஏற்றுக் கொண்டார். (யோ 6:69). பரிசுத்த ஆவியினால் பிறப்பிக்கப்படும் போதே தேவகுமாரன் எனப்படுவார் என்று தேவ தூதன் சொல்கின்றான். (லூக் 1:35). இந்த மேசியா மற்றும் தேவ குமாரனாகிய இயேசுவைப் பற்றி பழைய ஏற்பாட்டிலும் ஏதும் உண்டா? தானி 9:25; ஓசி 11:1; ஏசா 9:6; சங் 2:7,12; நீதி 30:4 போன்ற பல வசனங்களில் எழுதப்பட்டு உள்ளது. உலகத் தோற்றத்துக்கு முன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் என்று இயேசுவை சொல்லியிருப்பதால், தேவ சமூகத்தில் இரட்சிப்பின் திட்டம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே போடப்பட்டுள்ளது என்று அறிகிறோம். சங் 40:5-8 வசனங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. இந்த ஆட்டுக்குட்டி, வார்த்தை, பாலகனாய் மரியாளின் வயிற்றில் பிறக்கிறார். இயேசு என்று பெயர் சூட்டுகிறார்கள். இவர் குமாரனாய் மாறியது எப்போது தெரியுமா? ஏசா 9:6ஐ மறுபடியும் படியுங்கள். குழந்தையாய் பாலகனாய்ப் பிறந்தவர், குமாரனாக்கப்பட்டார்; அப்போது கர்த்தத்துவம் (Authority) அவர் தோளின் மேலிருந்ததாம். இதைத்தான் மத் 28:18ல் சகல அதிகாரங்களும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றார். எப்போது? உயிர்த்தெழுந்த பின்னே. உயிர்த்தெழுந்ததைத் தான், "நீர் என்னுடைய குமாரன்; இன்று நான் உன்னை ஜெநிப்பித்தேன்" என்று சங் 2:7ல் சொல்லப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக எபி 5:5; அப் 13:32 வசனங்களைக் கொள்ளலாம். ஆக, தேவகுமாரனாய் ஆக வேண்டுமென்று பரலோகில் போட்ட திட்டம்; பூலோகத்தாருக்கு, இயேசு மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்த உடனே நிரூபணமாய் விளக்கப்பட்டது என்று அறிகிறோம் (ரோ 1:5). மனிதர்களான நாம் யோ 1:12ன்படி தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்வதற்கும், இயேசு தேவனுடைய குமாரன் என்று சொல்வதற்கும் நிறைய வித்தியாசங்களுண்டு. யோ 20:17ஐ வாசியுங்கள். "என் பிதா, உங்கள் பிதா; என் தேவன், உங்கள் தேவன்" என்பவைகளை தியானியுங்கள். "என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்", "என்னை அறிந்தீர்களானால், என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்", "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்", "நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்", "நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி..." (யோ 14:17) போன்ற இயேசுவின் வார்த்தைகளை தியானித்தால் தேவனுடைய குமாரன் என்பதன் உள்ளர்த்தம் விளங்கும்.

தேவகுமாரன் என்றால் தேவனின் பிள்ளையென்றோ, இயேசுவின் அப்பா, தேவன் என்றோ அர்த்தமில்லை. (See கொலோ 2:9) அப் 4:36ல் பர்னபாவை "ஆறுதலின் மகன்" என்று சொல்வதால் பர்னபாவின் அப்பா ஆறுதலா? மாற் 3:17ல் யாக்கோபையும் யோவானையும் 'Sons of Thunder' என்று கூறப்பட்டுள்ளதால் அவர்களின் அப்பா இடிமுழக்கமா? ஏசா 14ல் லூசிபரை 'Son of Morning' எனப்படுவதால், Morningன் பிள்ளையா லூசிபர்? இயேசுவை தாவீதின் குமாரன் என்று அழைப்பதால் இயேசுவின் அப்பா தாவீதா? இல்லையே! அப்படியானால் குமாரன் என்பதன் பொருள் என்ன? தேவகுமாரன் என்றால் தேவனின் மகிமையும், குணாதிசயமும் (Glory & Nature), வல்லமையும் அதிகாரமும் நிறைந்தவர் என்று பொருள். அல்லேலூயா! தேவனின் மகிமை வேறு யாரிடமும் இல்லை; அது குமாரனிடம் தான் இருக்கிறது என்றால் குமாரன் தேவன் தானே! அவர் தன்னுடைய மகிமையை யாருக்கும் கொடுக்கமாட்டார் அல்லவா! (யோ 8:54; 17:5). தேவகுமாரன் என்று தன்னை இயேசு சொன்னதாலே, தேவ தூஷணம் சொல்கிறார் என்று எப்படிச் சொல்லலாம் என்று இயேசு யூதர்களிடம் கேட்டார். (யோ 10:36) அவர்களோ தேவகுமாரன் என்றாலே "தேவனுக்குச் சமமானவர், தேவன்" என்று புரிந்து கொண்டு அவர் மேல் கல்லெறியத் துணிந்தார்கள் (யோ 10:33,39). எத்தனையோ முறை இயேசுவை பிடிக்க, கல்லெறிய முயன்று தோற்றுப் போன யூதர்களுக்குப் புரிகிறது தேவகுமாரன் என்றால் அர்த்தம் இன்னதென்று. நம்முடையவர்களுக்குப் புரியவில்லையே! இப்படிப்பட்டவர்களின் மனக்கண் யோபுவுக்குப் போல தேவனால் திறக்கப்படட்டும். (2கொரி 4:4; யோபு 42:5) ஆதாம் ஏவாளுக்குப் போல பிசாசினால் திறக்கப்படாதிருக்கட்டும் (ஆதி 3:7) பிரதான ஆசாரியன் கேட்கிறான் "நீர் தேவனுடைய குமாரனா?" என்று. அதற்கு இயேசு "நீர் சொன்னபடிதான்; அன்றியும் மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு "இவன் தேவ தூஷணம் சொன்னான்" என்றான் (மத் 26:63-65). பிரதான ஆசாரியனுக்குத் தெரிகிறது தேவ குமாரன் என்றால் என்ன என்று. நம்மவர்களுக்குப் புரியவில்லையே! யோ 19:7; 8:53-59 போன்ற வசனங்களை வாசியுங்கள்.

இயேசு என்னும் நாமம் குமாரனுக்கு இருப்பதால் சிலருக்கு இயேசு நாமக் குழப்பம். "நான் என் பிதாவின் நாமத்தினால் வந்திருந்தும் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை" என்று யோ 5:43ல் இயேசு சொல்வதால் பிதாவின் நாமம் தான் இயேசு என்றும், பிதாவும்

இயேசுவும் ஒன்று என்றும் வாதிடுவோரும் உண்டு. தாவீது பெலிஸ்தனை நோக்கி, "நீ பட்டயத்தோடும் ஈட்டியோடும் கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்" என்றான் (1சாமு 17:45). அப்படியானால் வாதிடுவோரின் கருத்துப்படி, தாவீதின் நாமம் கர்த்தரின் நாமமா? இல்லையே! இதன் அர்த்தமென்ன? "என் நாமம் தரிக்கப்பட்ட ஜனங்கள்..." (2நாளா 7:14) என்று உள்ளதால், நம் எல்லோருடைய பெயரும் தேவனின் பெயரா? இல்லையே! இதன் அர்த்தமென்ன? நாமம் என்பது நாம் நினைக்கிறபடி பெயரல்ல. மாறாக தேவனின் வல்லமை, அதிகாரம் கொண்ட ஜனங்கள் என்று பொருள். தேவன் தந்த அதிகாரத்தோடும் வல்லமையோடும் தாவீது பெலிஸ்தன் முன் நின்றான் என்று பொருள். பிதாவாகிய தேவனின் வல்லமையோடும், மகிமையோடும், குணாதிசயத்தோடும், அதிகாரத்தோடும் இயேசு வந்தார் என்று பொருள். இயேசு மனிதனாய்ப் பிறந்ததால் தான், ஏராளமான உலக மனிதர் மத்தியிலே அவருக்கு ஒரு பெயர் வேண்டும் என்பதால், அவர் பிறந்த நோக்கத்தை அடிப்படையாய் வைத்து "இயேசு" என்று பெயரிடப்பட்டது. மற்றப்படி பரலோகிலே ஒரே குமாரனாய் பிதாவின் வலது பாரிசத்தில் அவர் இருப்பதால், அவருக்கு ஒரு தனிப் பெயரே இல்லை; தேவையுமில்லை. யேகோவா நிசி, யேகோவா யீரே, யேகோவா ஷாலோம், அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், சமாதான தேவன், நித்திய பிதா; வார்த்தை; பிதாடு கர்த்தர், தேவன், பரிசுத்த ஆவியானவர், தேற்றரவாளன், மேசியா, கிறிஸ்து, நியாதிபதி, தேவ குமாரன் என்று பல பெயர்களில் இடத்தையும், தேவையையும் பொறுத்து, பிதாவும், குமாரனும், பரிசுத்த ஆவியும் அழைக்கும்படி வெளிப்பட்டார்கள். அவர்களுக்கென்று நம்மைப் போல தனிப்பட்ட பெயர்கள் ஏதும் இல்லை. பிதா, குமாரன், பரிசுத்த அவி என்னும் நாமமே அவர்களின் கிரியைகளை வைத்துத்தான். நீதி 30:4ல் கேட்கப்பட்ட கேள்விகளிலிருந்து அவர்களுக்கு தனிப்பட்ட ஒரு நாமம் இல்லையென்று புரிகிறதல்லவா? இரட்சிப்பின் கிரியைகளிலே, Father is He who brings forth; Son is He who arranges or executes that which father bring forth; Holy Spirit is He who applies to the people that which was provided by the Father through the Son. இந்த சிந்தனையோடு வேதத்தைப் படிப்போம். மூவரும் மூன்று பகுதியாய் ஒருமித்துச் செயல்பட்டு, ஒன்றில் மூன்றாய் வெளிப்படுகிறார்கள் என்று அறிகிறோம். மூன்றாய் வெளிப்படுவோர் ஒன்றாய் எப்படி இருக்கிறார்கள் என்பதை பரலோகில் போய்ப் பார்த்து ஆனந்தமடைவோம்; அந்த மகிழ்ச்சிக்காய் ஆயத்தமாவோம்; ஆயத்தமாக்குவோம். இயேசு சீக்கிரம் வருகிறார். அல்லேலூயா!

# ஞானஸ்நானம் யார், எப்போது, ஏன் பெற வேண்டும்?

ஞானஸ்நானம் என்ற உடனே எல்லோருமே தண்ணீருக்குள் முழ்கி எடுக்கும் ஞானஸ்நானத்தையே நினைக்கின்றனர். ஒருவருக்கு சுவிசேஷம் சொல்கிறவர்கள் "ஞானஸ்நானம் எடுத்துக் கொள்" என்று இந்த ஞானஸ்நானத்தைத் தான் வலியுறுத்துகிறார்கள். இப்படிப்பட்டதான ஞானஸ்நானம் எடுத்தால் தான் கிறிஸ்தவன் என்று போதிக்கின்றனர். இதைக் கேட்ட ஒரு சிலர் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து கிறிஸ்தவனாக்குகிறேன் என்கின்றனர். இவர்கள் எல்லாருமே எபி 6:1,2ல் சொல்லப்பட்ட கிறிஸ்தவனுக்குரிய அஸ்திபார மூல உபதேசத்தை மறந்து விடுகின்றனர். இதிலும் அஸ்திபாரத்தின் மேல் எழுப்பப்பட்டு மேலும் மேலும் வசனங்களை அறிந்து கைக்கொள்ளும் போதுதான் பூரண புருஷனாகிறான் (எபே 4:11); இரகசிய வருகையில் இயேசுவை சந்திக்க ஆயத்தமாகிறான். இந்த அஸ்திபார மூல உபதேசமே இல்லாத போது அவன் எப்படி கிறிஸ்தவன்? அந்த ஆறு அஸ்திபாரத்திலே மூன்றாவதுதான் "ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்". இதிலே ஸ்நானம் என்று ஒருமையில் போடாமல் ஸ்நானங்கள் என்று பன்மையில் போட்டிருப்பதால் இதைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம்.

<u>வேதத்தின்படி இந்த ஞானஸ்நானங்கள் மூன்று வகைப்படும்.</u>

1. கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம்
2. ஜலத்தினால் ஞானஸ்நானம்
3. ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம்.

நம்மவர்கள் இரண்டாவதை மட்டுமே முக்கியப்படுத்துகின்றனர். முதலாவது இல்லாமல் இரண்டாவது இல்லை. அப்படியானால் கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் என்றால் என்ன பொருள்? கலா 3:27; ரோ 6:3-7; 1கொரி 12:12; கொலோ 2:12 போன்ற வசனங்களை வாசியுங்கள். இதுதான் கிறிஸ்துவுக்குள்ளான, கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளான ஞானஸ்நானம், கிறிஸ்து பாவத்திற்கு மரித்து நீதிக்கு உயிர்த்தெழுந்தாரே அந்த அனுபவம். ரோ 10:9,10ல் சொல்லப்பட்டபடி இருதயமாகிய ஆவியிலே (1பேது 3:4) தேவ நீதியைப் பெற்று கொண்டு வாயிலே அறிக்கை செய்கிற இரட்சிப்பின் அனுபவம், "என் பாவம் மன்னிக்கப்பட்டாயிற்று; இனி நான் பாவியல்ல; நீதிமான்" என்று

சொல்லுகிற அனுபவம்; இதுதான் சீஷராகும் அனுபவம்; இது தான் விசவாசியாகும் அனுபவம்; இதுதான் ஜலமாகிய வசனத்தினால் ஆவியானவரைக் கொண்டு பிறக்கும் மறுபிறப்பின் அனுபவம். இந்த கிறிஸ்துவுக்குள்ளாகும் ஞானஸ்நானம் மனிதனின் வாழ்க்கையிலே ஒரே ஒரு முறைதான். ஏனென்றால் ஆவியிலே மறுபிறப்பு, இரட்சிப்பு, புது சிருஷ்டி ஒரே ஒரு முறைதான்; (யாக் 1:18; யோ 3:3,5; எபே 2:1,8; 1பேது 1:23). இதைத்தான் எபே 4:5ல் சொல்லப்பட்டுள்ளது. இதற்குப் பிறகுதான் ஆத்மாவிலும் சரீரத்திலும் இரட்சிப்பு (யாக் 1:21; ரோ 8:23). கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானத்தின் - மறுபிறப்பில் - ஆவியிலே பெற்ற இரட்சிப்பில் முடிவுவரை நிலைத்திருக்கும் போதுதான் அடுத்த இரண்டிலும் இரட்சிப்பு கிடைக்கும்; பூரண புருஷராக முடியும்; வருகையிலே சபையாய் இயேசுவோடு சேர முடியும் (மத் 24:13).

கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் பெற்றவர்கள் தான் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் அத்தனை பேரும். கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் பெற்றவர்கள் அத்தனை பேரும் ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பது புதிய ஏற்பாட்டு தேவ கட்டளை. இது புதிய ஏற்பாட்டு மக்களாகிய நமக்கு யோவான் ஸ்நானன் மூலமாய் ஆரம்பிக்கப்பட்டு, இயேசுவின் மூலமாய் உறுதிப்படுத்தப்பட்டு, அப்போஸ்தலர்கள் மூலமாய் செயல்படுத்தப்பட்டது. இதைத்தான் அப் 2:38; மாற் 16:16ல் சொல்லப்பட்டுள்ளது; இதைத்தான் இயேசு மத் 28:18,19ல் சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கட்டளையிட்டுப் போனார். இதுதான் விசவாசி தேவனோடு பண்ணுகிற உடன்படிக்கை என்று 1பேது 3:21 கூறுகிறது. இந்த ஞானஸ்நானத்தை குழந்தைக்கும் கொடுக்கிறார்களே பாரம்பரிய, பெயர்க் கிறிஸ்தவ சபைகளிலே, அந்தக் குழந்தை கிறிஸ்துவுக்குள்ளாய் ஞானஸ்நானம் பெற்றுள்ளதா? அது இயேசுவின் இரட்சிப்பை அறிந்துள்ளதா? இல்லையே! அப்படியானால் இப்படிக் கொடுப்பவர்கள் வேத வசனத்திற்கு விரோதிகள் அல்லவா! அவர்களும் கெட்டுப் போகிறார்கள்; அவர்கள் சபையாரையும் கெடுக்கிறார்கள். (லூக் 11:52). இவர்களோடு நம்மவர்களும் ஐக்கியம்; அதனாலே அடியும் சில நேரத்தில் பெறுகிறார்கள். ஜலத்தினால் ஞானஸ்நானம் பெறுவதால் பாவம் கழுவப்படுவதில்லை. இது கிறிஸ்துவைத் தரித்துக் கொண்ட, பாவத்திற்கு இயேசுவின் மரணத்தால் மரித்து, நீதிக்கு அவருடைய உயிர்த்தெழுதலால் உயிர்ப்பிக்கப்பட்டு, மறுபடியும் பிறந்திருக்கிற நீதிமான்கள் என்பதைக் காட்டுகிறதற்கான அடையாளமேயாகும். இதனால் "இயேசுவே மணவாளன்; நாம் மணவாட்டி" என்று ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணத்திற்காய் நிச்சயதார்த்தம் பண்ணிக் கொள்கிறோம்! அல்லேலூயா! இயேசு முன் மாதிரியாய் செய்தார்; நாமும் செய்ய

வேண்டும். 'Baptism' என்ற சொல்; 'Baptiso', 'Bapto' என்ற மூல கிரேக்க பாஷைகளிலிருந்து வந்தது. அதன் பொருள் மூழ்குதல் என்பதாகும். எனவே ஜலத்தினால் ஞானஸ்நானம் என்பது தெளிப்பது அல்ல; மூழ்குவதே ஆகும்.

கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் என்பது, வசனத்தைக் கொண்டு விசுவாசத்தினால் பரிசுத்த ஆவியானவரால் நாம் பெறுவது; ஜலத்தினால் ஞானஸ்நானம் என்பது இயேசுவின் சீஷர்கள் (மத் 28:18,19; யோ 7:31; 13:35) மணவாட்டிகள் என்பதற்கு அடையாளமாய் தேவனின் ஊழியக்காரர்களால் பெறுவது. ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் என்பது (மத் 3:11) இயேசு கிறிஸ்து பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் இருந்து கொண்டே கொடுப்பதாகும். இதுதான் அப்போஸ்தலர்கள் பெந்தகொஸ்தே நாளிலே பெற்றது (அப் 1:4,8). இந்த ஞானஸ்நானம் ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்ற பின் கிடைப்பதாகும். கொர்நேலியு வீட்டில் நடந்தது போல ஜலத்தினால் ஞானஸ்நானம் பெறுமுன்னே கூடப் பெறலாம். அப்படிப் பெற்றுவிட்டால், ஜலத்தினால் ஞானஸ்நானத்தை தள்ளி வைக்கவே கூடாது. (See அப் 10:44-48). இப்படித்தான் தற்காலத்தில் அந்நிய பாஷை பேசும் பலர். அற்புதம், அடையாளம், பிசாசை விரட்டுதல் போன்றவற்றில் உள்ளோர், ஜலத்தினாலான முழுக்கு ஞானஸ்நானத்தை ஏற்பதில்லை. அப்படியே ஏற்றாலும், ஆவிக்குரிய சபைகளில் வந்து ஞானஸ்நானம் எடுத்துவிட்டு, மறுபடியும் அதே, பாரம்பரிய - குழந்தை ஞானஸ்நானம் கொடுக்கும் சபையில் அங்கம் வகிக்கிறார்கள். இது வேதத்திற்கு விரோதமான காரியமாகும்.

கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானமின்றி மற்ற இரண்டும் இல்லை. மற்ற இரண்டும் ஒரு வேளை பாரம்பரியம் மற்றும் தேவ இரக்கத்தால் பெற்றிருந்தாலும் கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ் நானமின்றி ஒருவனும் பரலோகம் போக வழியில்லை. இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இயேசுவின் நாமம் தரித்த இயேசுவின் நாமத்தினாலே இயேசுவுக்குள்ளான ஞானஸ்நானம் பெற்றவர்கள் மட்டுமே ஜலத்தினாலான முழுக்கு ஞானஸ்நானம் பிதா - குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே பெற தகுதியுடையவர்கள் என்று அறியுங்கள்! ஆமென்! குழந்தைகள் அல்ல; இரட்சிக்கப்படாதவர்கள் அல்ல.

❖ ❖ ❖

# பைபிள் வரலாறு

பைபிள் என்ற வார்த்தை ஆங்கில மூல வார்த்தை அல்ல. "பைபிளியா" என்ற கிரேக்க பாஷையிலிருந்து வந்தது. பைபிளியா என்றால் புத்தகங்கள் என்று பொருள். இந்த வார்த்தை கிரேக்க மொழி பெயர்ப்பிலுள்ள தானி 9:2ல் வருகிறது. புத்தகங்கள் என்று பன்மையிலேயே முதன்முறையாக கி.மு 132ல் பழைய ஏற்பாட்டைக் குறிக்க உபயோகிக்கப்பட்டது. பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு புத்தகங்கள் அனைத்தையும், "பைபிளியா" - அதாவது புத்தகங்கள் என்ற பெயரில், கிளமெண்ட் என்பவர், கி.பி 2ம் நூற்றாண்டின் மத்தியில் அழைக்கலானார். அநேக புத்தகங்கள் உலகில் இருப்பினும், இது ஒன்றே உண்மையான புத்தகம் எனக் கருதப்பட்டபடியால், இதை ஒருமையிலே "பைபிள்" என்று 13ம் நூற்றாண்டில் வாழ்ந்த விக்லிப் என்பவரின் காலத்தில் அழைக்கலாயினர், இது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆங்கில மொழியில்தான் இந்த வார்த்தை உபயோகிக்கப்படுகிறது. ஆகவே தான் சர்வால்டர் ஸ்காட் என்பவர் மரிக்கும் போது "புத்தகத்தைக் கொண்டு வாருங்கள்" என்று கேட்க, "என்ன புத்தகம்?" என்று வினவிய போது, "உள்ளது ஒரே புத்தகந்தான்" எனக் கூறினார். ஆங்கிலத்தில் இதை "ஸ்கிரிப்தர்" (Scripture) என்றும் சொல்கிறார்கள். இதன் பொருள் "எழுதப்பட்டது" என்பதாகும். அதாவது காலத்துக்குக் காலம் மனிதர் சொன்னவைகளை இது கொண்டிராமல், ஆதியிலே தேவனுடைய வழிநடத்துதலைக் கொண்டு எழுதி வைக்கப்பட்ட உறுதியான வார்த்தை என்பதே. தமிழில் இதை "வேதம்" அல்லது "வேதாகமம்" என்று அழைக்கப்படுகின்றது. இந்து சமயத்திற்கு ஆதாரமாயுள்ள ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு நூல்களையே வேதம் என்ற சொல் குறிப்பதாயிருந்தது. வேதம் என்றால் "அறியப்பட்டது" அல்லது "அறிவு" என்று பொருள். ஆகமங்கள் சைவக் கொள்கையுடையவர்கள் பாராட்டுகின்றவைகளாகும். ஆகமம் என்பது "வந்தெய்தியது" என்ற மூலக்கருத்தைக் கொண்டது. தமிழ்நாட்டில் தமிழில் பைபிளை மொழி பெயர்த்தவர்கள், நம் மக்களுக்கு விளங்கும்படியாய், வேதம், ஆகமம் ஆகிய இரண்டையும் ஒன்றாக்கி வேதாகமம் என அழைத்தனர். அதன் பொருள் "வந்தெய்திய அறிவு" என்பதாகும். ஆக, வேதாகமம் என்பது நமது பைபிள் ஒன்று தான் என்று வெளிப்படையாகவே சொல்லி வைத்தனர்.

மோசேதான் ஆதியிலே தேவ வார்த்தைகளடங்கிய புத்தகத்தை எழுதி சேகரித்து வைத்தான் என யாத் 17:15 சொல்கின்றது. அதற்கு முன்பே ஏனோக்கும் சொன்னான் என்று யூதா 14 சொல்கின்றது. ஆனால் அந்த தோல் சுருள் நமக்குக் கிடைக்கவில்லை. அதன் பின்

தாவீது இதில் ஈடுபட்டான். கி.மு. 292 வாக்கில் எஸ்றா, நெகேமியா போன்றோர் பிரயாசப்பட்டார்கள். (எஸ்றா 7:6; 8:1-8). ஆதியிலே பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் எல்லாமே எபிரேயு பாஷையில் தான் எழுதப்பட்டன. எஸ்றா 4:8; 6:18; 7:12-26; எரே 10:11; தானி 2:4-7:28 போன்றவை மட்டுமே அரபிக் மொழியில் இருந்தன. இஸ்ரேலர்கள் எப்போதுமே பாலஸ்தீனாவில் குடி இருக்க முடியாத சூழ்நிலையால் பல நாடுகளுக்கு சிதறடிக்கப்பட்ட காரணத்தினால், கிரேக்க மன்னன் அலெக்சாண்டரின் படையெடுப்பால் ஆங்காங்கே வாழ்ந்த யூதர்கள் எபிரேய பாஷையை மறந்து கிரேக்க பாஷையை பேசத் தொடங்கினர். எனவே இவர்களுக்கு தாம் விளங்கக்கூடிய கிரேக்க பாஷையிலேயே வேதம் தேவைப்பட்டதால் கி.மு 285-247ல் எகிப்தை ஆண்ட மன்னன் பிலடெல்பஸ் என்பவன் 72 யூத அறிஞர்களைக் கொண்டு, 72 நாட்களில் கிரேக்க பாஷையில் பழைய ஏற்பாட்டை மொழி பெயர்த்தானாம். எனவே இந்த மொழிப்பெயர்ப்பை 72 என்னும் அர்த்தம் கொண்ட “செப்டுவாஜிந்” (Septuagint) என்னும் இந்த மொழிபெயர்ப்பை 72 என்னும் கிரேக்க பதத்தால் அழைத்தனர். இதிலே கிட்டத்தட்ட 20 தள்ளுபடி ஆகமங்களும் இருந்தன. இந்த மொழிபெயர்ப்பில் தவறுகள் இருப்பினும் இதுவே இஸ்ரேலருக்கு வேதமாயிருந்தது. பவுலும் இதிலிருந்தே மேற்கோள் காட்டினான். இப்போதோ நாம் எபிரெய மூலப் பிரிதிகளையே ஏற்றுக் கொள்கிறோம். இவைகள் இங்கிலாந்து நாட்டு மியூசியத்தில் இன்றும் வைக்கப்பட்டுள்ளன. கி.பி. 70ன் எருசலேம் அழிவுக்குப் பிறகு, யூத சனகெரீம் சங்கத்தார் திபேரியா மற்றும் ஜமீயா பகுதிக்கு குடிபெயர்ந்தனர். அவர்கள் கி.பி 90ல் அழிந்த போன, தொலைந்து போன பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் போக பாக்கியுள்ள 39 புத்தகங்களை சேகரித்தனர். இவைகளில் தள்ளுபடி ஆகமங்கள் இணைக்கப்படவில்லை. இந்த பாலஸ்தீனிய பழைய ஏற்பாட்டுத் தொகுப்பைத்தான் தற்போது உலகிலுள்ள கிறிஸ்தவர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

அப்போஸ்தலர்களாலும், தேவனால் ஏவப்பட்ட மனுஷர்களாலும் எழுதப்பட்ட கிரேக்கப் பாஷை புதிய ஏற்பாட்டின் புத்தகங்களிலும் 16 புத்தகங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கி.பி 130 வரையில் 4 சுவிசேஷங்களும், பவுலின் 13 நிருபங்களுமே மதிக்கப்பட்டன. கி.பி 170-220க்குள் பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் கூட 7 புத்தகங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கி.பி. 325ன் நீஸ்கவுன்சிலிலும், 397ல் கார்தேஜ் கவுன்சிலிலும் ஆராயப்பட்டு தற்போது உள்ள புதிய ஏற்பாட்டு 27 புத்தகங்களும் உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. கி.பி 2ம் நூற்றாண்டிலேயே கிறிஸ்துவுக்கு முன் எழுதிய நூல்கள் பழைய ஏற்பாடு என்றும் கிறிஸ்துவுக்குப்பின் எழுதியவை புதிய ஏற்பாடு

என்றும் அழைக்கும் வழக்கம், கிறிஸ்தவர்களுக்குள் ஏற்பட்டது. இவை சத்தியத்தின்படி, தவறானது தான். அப்படியே புதிய ஏற்பாடு ஆரம்பம் இயேசுவின் பிறப்பில் அல்ல; இயேசு மரித்து உயிர்த்த பின்தான். ஆனாலும் பழைய வழக்கம் தொடர்ந்து பழக்கமாய் இருக்கிறது.

எபிரேயு, கிரேக்க பாஷைகளிலிருந்து வேதம், 2ம் நூற்றாண்டில் சீரிய பாஷையிலும், 3ம் நூற்றாண்டில் கொப்திக் பாஷையிலும் அதற்குப்பின் கோதிக் மற்றும் ஆர்மீனியம் பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டன. 2ம் நூற்றாண்டிலேயே ரோம ராஜ்யத்திலே கலாச்சாரம் மாறியதால், ரோமரின் லத்தீன் பாஷை மேலாதிக்கம் கொண்டது. இச்சூழலில் 4ம் நூற்றாண்டில் டமேஸஸ் என்ற போப், ஜெரோம் என்பவரைக் கொண்டு எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் இலத்தீன் மொழிப்பெயர்ப்பை உருவாக்கின்றார். இவர் எபிரெய பாஷை தெரியாததால் "செப்டுவாஜிந்" மொழி பெயர்ப்பையே உபயோகித்தார். ஆனாலும் மூல எபிரேயு பாஷையில் உள்ளதையே மொழி பெயர்க்க வேண்டும் என்று எண்ணி எபிரேய மொழியையே கற்று கி.பி 404ல் வேதம் முழுவதையும் ஜெரோம், இலத்தீனில் மொழிபெயர்த்தார். இதை "ரோமன் கத்தோலிக்கர்" உபயோகித்தனர். ஆனால் வேறு பாஷைகளில் மொழிபெயர்க்க தடை விதித்தனர். மார்டின் லுத்தரின் புரட்சியால் அவர் இரகசிய காவலில் இருந்தபோது, ஜெர்மன் பாஷையில் மொழி பெயர்த்தார் (கி.பி 1521 வரையில்) இங்கிலாந்தில் 1525 மற்றும் 1538ல் "பிஷப் பைபிள்" என்று ஆங்கிலத்தில் வெளி வந்தது. இதைக் கண்ட ரோம சபையார் கோபம் கொண்டு, தாங்களே 1582ல் புதிய ஏற்பாட்டையும், 1610ல் பழைய ஏற்பாட்டையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தனர். 1857ல் புதுச்சேரியிலும் 1890ல் திருச்சியிலும் தமிழில் மொழி பெயர்த்தனர். மூல பாஷைகளிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட எல்லாவற்றிலும் 1604ம் ஆண்டு முதல் 50 கல்விமான்கள் ஆறு குழுக்களாய்ப் பிரிந்து முதலாம் ஜேம்ஸ் மன்னரின் கட்டளையால் மொழி பெயர்க்கப்பட்ட Authorised English Version தான் உலகமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். தற்காலத்தில் பலப்பல மொழிபெயர்ப்புகள் எழும்பியுள்ளன. தமிழ் மொழி பெயர்ப்புக்கு தரங்கம்பாடியில் மரித்த சீகன் பால்கு, அதனைத் தொடர்ந்து வந்த பெஞ்சமின் சூல்ச் ஆகிய இரு ஊழியர்களுமே முழுப் பொறுப்பு.

பழைய ஏற்பாட்டில் உள்ள 37 புத்தகங்களும் 5 பகுதியாய் பிரிக்கப்பட்டுள்ளன.

1. மோசே எழுதிய 5 ஆகமங்கள்
2. நியாயாதிபதி முதல் எஸ்தர் வரை வரும் 12 சரித்திரப் புத்தகங்கள்

3. யோபு முதல் உன்னதபாட்டு வரை வரும் 5 கவிதைப் புத்தகங்கள்
4. ஏசாயா முதல் தானியேல் வரை வரும் பெரிய தீர்க்கதரிசிகள் புத்தகங்கள்
5. மீதமுள்ள 12 சிறிய தீர்க்கதரிசிகள் புத்தகங்கள்

இவைகளை கி.மு 1450 முதல் 500 வரை பல இடங்களில் வாழ்ந்த பலதரப்பட்ட 29 தேவதாசர்கள் எழுதி உள்ளனர். அப்படியே புதிய ஏற்பாட்டில் உள்ள 29 புத்தகங்களும் 5 பகுதிகளாய்ப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. 4 சுவிசேஷங்கள்
2. அப்போஸ்தலர்களின் சரித்திரம்
3. பவுலின் 14 நிருபங்கள்
4. 7 பொதுவான நிருபங்கள்
5. தீர்க்கதரிசன வெளிப்பாடு புத்தகம்.

இவைகளை கி.பி 50 முதல் 95 வரை பல இடங்களில் வாழ்ந்த பலதரப்பட்ட 8 தேவ தாசர்கள் எழுதி உள்ளனர். காலத்தால் அழியாத இத்தனை மகத்துவமுள்ள ஒரே அடிப்படைக் கருத்தையுடைய 66 புத்தகங்களும் ஒன்றாக்கப்பட்ட வேதாகமம், நமது மொழியிலே கிடைத்திருப்பது தேவ கிருபை; தேவன் அளித்த பாக்கியம். எத்தனையோ சந்ததிக்கு கிடைக்காதது நமக்கு கிடைத்திருக்கிறது! கர்த்தருக்கே மகிமை! இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! வேதத்தை தினமும் வாசித்து தியானித்து நீ பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறுவதற்கு இன்றே புறப்படுவாயா? இரட்சிப்பின் பாத்திரம் எங்கே?

❖ ❖ ❖

# ஆயிரம் வருட அரசாட்சி எங்கே நடக்கும்?

சிலர் மோட்சத்தில் நடக்கும் என்கின்றனர்; சிலர் ஏதேன் தோட்டத்தை பரதீசு என்று சொல்லி அதில் நடக்கும் என்கிறார்கள். வேதம் என்ன சொல்கின்றது என்று பார்ப்போம். ஆட்சி என்றால் ஆளுநர் தேவை; மக்கள் தேவை; இடமும் தேவை; வெளி 20:1ஐ வாசித்தால், பிசாசு ஆயிர வருஷம் கட்டி வைக்கப்படுகிறான். காரணம் 1000 வருஷம் வரை ஜனங்களை அவன் மோசம் போக்கக் கூடாது என்பதற்காகத் தான். அப்படியானால் சாத்தானால் மோசம் போகக்கூடிய

ஜனங்கள் இந்த பூமியில் தான் நிச்சயம் இருக்க வேண்டும். வெளி 20:7,8 வாசித்தால் 1000 வருஷ ஆட்சிக்குப் பிறகு சாத்தானின் அட்டகாசம் இப்பூமியில் தான் என்பது உறுதியாகிறது. "இந்த 1000 வருட அரசாட்சி நடக்கும் பூமி இந்த பூமியல்ல; ஏதேன் தோட்டம் போல ஆக்கப்பட்டு ஆதாம் ஏவாள் வாழ்ந்தது போல வாழும் பரதீசு (Paradise) வாழ்க்கை இது" என்று சொல்வோர், புதிய பூமி எப்போது ஏற்படப்போகிறது என்று முதலில் அறிய வேண்டும். 1000 வருட அரசாட்சிக்குப் பின், கோகே மாகே யுத்தத்திற்குப் பின், வெளி 20:11ல் சொல்லப்பட்ட வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்குப் பின், மரணமும் பாதாளமும் இல்லாமல் போனபின் தான், புதிய பூமி புதிய வானம் உண்டாகிறது (வெளி 21:1). எனவே புதிதாக்கப்படும் பூமியிலே இது நடக்கப் போவதில்லை என அறிகிறோம். மேலும், ஆதாம் ஏவாள் போல வாழ்வது என்றால் அங்கே மரணம் இருக்கக்கூடாது அல்லவா! ஆனால் ஏசா 65:20ன் படி மரணம் உண்டே! பாவிகளும் உண்டே! அப்படியானால் ஏதேன் போன்ற பரதீசு அல்ல 1000 வருட அரசாட்சி நடக்கக்கூடியது. இதிலே அறிய வேண்டிய இன்னொரு காரியம் பரதீசு என்பது மரித்த பரிசுத்தவான்களின் ஆவியும், ஆத்மாவும் இளைப்பாறுகிற இடம் தானே ஒழிய அது ஏதேன் தோட்டமல்ல (2கொரி 12:1,4; வெளி 6:9,11).

யோ 3:18; 2:24-26; ஆமோஸ் 9:13; ஏசா 35:1; 55:13; உபா 11:13-17 போன்ற வசனங்களை வாசிக்கும் போது அந்த 1000 வருட ஆட்சி பூமியில் அதிலும் விசேஷமாய் பாலஸ்தீனா தேசம் பாலைவனமாய் இல்லாமல் பாலும் தேனும் ஓடும் பூமியாய் மாறும் என்பதால் அது இந்த பூமியில் தானே. சர்வ சிருஷ்டிகளும் அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்படும் என ரோ 8:20-22ல் பவுல் கூறியது ஏசா 11:6-9ஐ வாசிக்கும் போது உறுதியாகிறதல்லவா! ஓநாயும் புலியும் 1000 வருட ஆட்சியில் ஒன்றாய்ச் சேர்ந்து படுத்துக் கொள்ளும் என்றால் அது பரலோகிலா நடக்கும்! அங்கு மிருகங்கள் இல்லையே! இந்த ஆயிர வருஷமும் ஆளத்தகுதி உள்ளவர்கள் யாரென்று வெளி 20:4 சொல்கின்றது. இவர்கள் தான் இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் சபையாய் எடுத்துக் கொள்ளப்பட்டவர்களும், இரத்த சாட்சியாய் ஆதிமுதல் அந்தி கிறிஸ்து காலம் முடிய மரித்தவர்களும் ஆவார்கள். இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் பரலோகில் பாடிய பாடலைப் பாருங்கள் (வெளி 5:10; 1பேது 2:9) பூமியிலே அரசாளுவார்களாம்! அல்லேலூயா! இதையே பவுல் ரோ 5:17ல் சொல்கிறான்.

இயேசு பரலோகம் போகும் போது ஆளுகை எப்போது கிடைக்கும் என்று அப்போஸ்தலர்கள் கேட்ட போது அதற்கு ஒரு

காலமும் வேளையும் உண்டு என்று சொன்னாரே (அப் 1:5-7). அந்தக் காலம் தான் 1000 வருட அரசாட்சி காலம். தேவன் இயேசு ராஜாதி ராஜாவாய் எருசலேமை தலைநகராய் (ஏசா 2:2-4; எரே 40-48; சக 14) கொண்டு வீற்றிருப்பார். ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணின பாலஸ்தீனா பகுதியை (ஆதி 15:18-21) இஸ்ரவேலருக்கு வாழ ஆளக் கொடுப்பார் (அப் 15:17-21; 17:6-19; ஏசா 60:21; எசே 47:13-48). இயேசு கிறிஸ்து மகிமையோடு ஒலிவ மலையில் காலடி வைப்பதைக் கண்டு இரட்சிக்கப்படும் இஸ்ரேலர்கள் அங்கே வாழ்வார்கள். (சக 14:4; 12:10; ரோ 11:26,27; வெளி 1:7). இரகசிய வருகையிலேயும் அந்தி கிறிஸ்துவின் நாளிலும் பரலோகம் போய் மறுரூபத்திலிருக்கும் இஸ்ரேலர்கள் அங்கே ஆள்வார்கள்; மற்றப் பூமியின் பகுதிகளை மற்றவர்களுக்கு வாழ, ஆளக் கொடுப்பர். யார் மற்றவர்கள்! இரகசிய வருகையிலே எடுத்துக் கொள்ளப்பட்ட சபையார் மற்றும் இரத்த சாட்சியாய் மரித்தோர் தான் ஆள்பவர்கள். மாம்சப் பிரகாரமான இஸ்ரேலருக்கு தேசம் பிரிக்கப்பட்டது போல இவர்களுக்கும் அப்போதே பிரிக்கப்பட்டது. (உபா 32:8; அப் 17:26). ஒலிவ மலையில் காலடி வைத்து பூமிக்கு வரும் போது தேசத்தாரை நியாயந்தீர்க்க செம்மறியாடு, வெள்ளாடு என்று பிரிக்கிறாரே அந்த செம்மறியாடு பகுதி மக்கள் தான் (மத் 25:31-45) 1000 வருட அரசாட்சியில் மற்றப்பகுதியில் வாழத் தகுதியுள்ளவர்கள். இவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களல்ல, சன்மார்க்கர்; சுயநீதிமான்கள்; சிறுமந்தையாகிய இஸ்ரேலருக்கு உலகத்தோற்ற முதல் உதவிய தேசத்தார்; தேவ பிள்ளைகளுக்கு ஒரு கலசம் தண்ணீராவது கொடுத்தவர்கள். இவர்களுக்குத் தான் நீடித்த ஆயசு; அதன் பின் மரணம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இன்னும் வேத வசனங்களை தியானி! தேவன் இன்னும் அதிகமாய் வெளிப்படுத்துவார்! ஆமென்.

தானியேலில் ஒன்றின்பின் ஒன்றாய் பூமியில் தோன்றிய ராஜ்யங்கள் எழுதப்பட்டுள்ளன. இவைகள் யாவும் இனி இப்பூமிக்கு வரப்போகும் கல்ராஜ்யத்தால் அழிக்கப்பட்டுப் போகும் என்று எழுதப்பட்டுள்ளது. இந்த கல்ராஜ்யம் தான் மூலைக்கல்லான பூமிக்கு வந்து நிரப்பப்போகும் இயேசு கிறிஸ்துவினுடைய 1000 வருட அரசாட்சியான ராஜ்யம் என்பதால், இது பூமியில் தான் நிறுவப்பட போகிறது என்பது தெள்ளத் தெளிவாகிறது. இந்த ஆட்சி மோட்சத்திலோ ஏதேனிலோ என்றால் ஆளப்படுபவர்கள் யார்? சிந்தியுங்கள்.

❖ ❖ ❖

# நம் தேவனுக்கு பெயர் உண்டா?

நமது பழைய ஏற்பாடு எபிரேயு மொழியில் தான் எழுதப்பட்டது என்று நாம் அறிவோம். எபிரெய மொழி பேசும் எபிரேயர்களும் அவர்களைச் சுற்றியிருந்தவர்களும் தங்கள் தேவனை 'ஏல்' (EL) என்ற பெயராலேயே அழைத்தனர். இதன் பொருள் "வல்லமையுள்ளவர்" என்பதாகும். இதன் அடிப்படையில் தான் தங்களின் பிள்ளைகளுக்கு சாமுவேல், இஸ்ரவேல், எல்கானா, பெத்தெல் என்றெல்லாம் பெயர் வைத்தனர். இந்த ஏல் என்ற பெயர் மற்ற தெய்வங்களுக்கும் இருந்தபடியால், கவிதை வடிவில் எழுதும் போது மட்டும் ஏல் என்று பழைய ஏற்பாட்டில் எழுதினர். மற்றப்படி எல்ஷடாய் (சர்வ வல்லமையுள்ள தேவன் - ஆதி 17:1); 'எல்எலியோன்' (உன்னதமான தேவன் - ஆதி 14:18); 'எல் ஓலம்' (சதாகாலமுமுள்ள தேவன் - ஆதி 21:33); எல்ஜிப்பார் (வல்லமையுள்ள தேவன் - ஏசா 9:6) என்று ஒரு அடைமொழி போட்டே எழுதினார்கள். 'ஏலோஹிம்' என்று ஆதி 1:1ல் ஆரம்பித்து கிட்டத்தட்ட 2000க்கு மேற்பட்ட இடங்களில் எழுதப்பட்டு இருக்கிறது. ஏலோஹிம் என்பது எபிரெயு பாஷையில் இரண்டுக்கும் மேற்பட்டவர்களைக் குறிக்கும் பன்மைச் சொல்லாகும். இதனை வைத்துத்தான் தேவன் மூன்று ஆள்தத்துவமாய் செயல்படுகிறார் என்றும் இம்மூவருக்குமே ஏலோஹிம் என்று ஒரே பெயர்ச்சொல் தான் இருந்தது என்றும் நாம் உணர்கிறோம் (Ref ஆதி 1:26; 3:22). இந்தப் பெயர்கள் எல்லாமே அந்தக் காலகட்டத்தில் அந்தப் பகுதிகளின் தெய்வங்களுக்கு வழங்கப்பட்ட பெயர்களிலிருந்து உருவானவை.

ஆனால், மூன்று ஆள்தத்துவமுள்ள நம் ஒரே தேவனுக்கு இவைகள் போன்ற காரணப் பெயர்கள் இல்லாமல், இடுகுறிப்பெயராக, அவரின் சொந்தப் பெயராக கிட்டத்தட்ட 6661 முறை பழைய ஏற்பாட்டில் வருகின்றது. அந்தப் பெயரை அறிவதற்கு முன்னால், தேவனுக்கு ஒரு பெயர் தேவையா என்ற ஒரு கேள்விக்கு விடையளிக்கலாம். ஆண்டாண்டு காலமாக அநேக தெய்வங்கள் பல பெயர்களில் இவ்வுலகில் அழைக்கப்படுவதால், ஜீவனுள்ள நம் தேவனையும் அழைக்க ஒரு பெயர் தேவையாயிருந்தது. இந்தப் பெயரை மனிதன் தேவனுக்கு வைத்து அழைக்கவில்லை; அல்லது இது மனிதன் கருதும் காரணப் பெயராயும் இல்லை. இது தான் யாவே (Yahweh) என்ற பெயராகும். இதன் பொருள் "நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்" (I am that I am) என்பதாகும். இதை முதன் முதலில் மோசேக்கு யாத் 3:14ல் வெளிப்படுத்தினார். எபிரெயு பாஷையில் ஆதியிலே உயிரெழுத்துக்கள் சிறிதும் காட்டப்படவில்லை; மெய்யெழுத்துக்களிலிருந்தே கருத்தின்படி சொற்கள்

உருவாக்கப்பட்டன. பாபிலோனில் சிறையிருப்புக்குப் பின், யூதர்கள் தம் சொந்த நாட்டிலும் அருகாமையிலும் அராமிக் பாஷையை பேசப்பட்டதால் அவர்கள் கஷ்டத்துடனே வாசிக்க நேர்ந்தது. இதனால் அவர்களுக்கு வாசிக்க உதவியாய் இருக்கும்படி உயிரெழுத்துக்களைக் காட்டுவதற்கு குறிகளும், கீறுகளும் மெய்யெழுத்துக்களும் மேலும் கீழும் போடப்பட்டன. 'யாவே' என்ற மெய்யெழுத்தாலான எபிரெய சொல், 'யேகோவா' என்று எளிதில் வாசிக்க நேர்ந்தது. இந்தச் சொல்தான் தேவனுக்குரிய பெயர். மூன்று ஆள்தத்துவமுள்ள ஒரே தேவனாய் நம் தேவன் இருப்பதால் மூவருக்கும் இதே பெயர்தான் என்று முதலில் அறிய வேண்டும். பலர் நினைப்பதுபோல இது பிதாவுக்கு மட்டும் உரிய பெயரல்ல.

இதை விளக்க ஒன்றிரண்டு உதாரணங்களை சொல்லலாம். முட்செடியின் நடுவிலே மோசேக்கு தரிசனமான தூதனானவர் (அப் 7:30டு யாத் 3:2) "இருக்கிறவராகவே இருக்கிறேன்" - யாவே யேகோவா - என்ற பெயரில் வெளிப்பட்டவர் தான் (யாத் 3:14) கெத்சமெனே தோட்டத்தில் "நான் தான்" (I am) என்று சொன்ன உடனே வந்தவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள் (யோ 18:6) இது குறித்து "கருகலமான சத்தியம்" என்ற நூலில் வாசியுங்கள். ஒசியா 12:2-5ஐ வாசித்தால் இவரே யேகோவா என அறியலாம். "கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்". (ஏசா 26:4) "கர்த்தரே ஆவியானவர்" (2கொரி 3:17) மற்றும் 1கொரி 10:4; ஏசா 12:2; 26:4; எரே 33:2; யாத் 6:2; சங் 66:4 போன்ற வசனங்களை வாசிக்கும் போது கர்த்தரே பிதா; கர்த்தரே கிறிஸ்து; கர்த்தரே ஆவியானவர் என்றும் அந்தக் கர்த்தரின் நாமமே யேகோவா என்றும் அறிகிறோம். கர்த்தர் என்றாலே பல இடங்களில் யேகோவா என்ற அர்த்தத்திலேயே வருகிறது.

தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்கக்கூடாது என்று 3ம் கற்பனை எழுத்து வடிவில் சீனாய் மலையில் கொடுக்கப்பட்டாலும் அதன் கருத்து எபிரெயர்களின் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்திருந்தது. இஸ்ரேல் தேவனின் பெயர் யாவே என்று இருந்த போதிலும் அதை அப்படியே பல இடங்களில் எழுதியிருந்தாலும் வாயிலே, உச்சரிக்கும் போது - வேதம் வாசிக்கும் போது யாவே என்று சொல்லாமல் Adonai - (ஆதி 15:2) என்று உச்சரித்தார்கள். இந்த அதொனை என்ற சொல் கிட்டத்தட்ட 337 இடங்களில் கடவுளைக் குறிக்க பழைய ஏற்பாட்டில் வருகிறது.

ஆங்கிலத்தில் ஏல், ஏலா, ஏலோகிம் என்ற பதத்தை God என்றும், யாவே - யெகோவா என்ற பதத்தை LORD என்றும், அதொனை என்ற பதத்தை Lord என்றும் மொழி பெயர்த்துள்ளனர். தமிழில் ஏல்

என்பதை தேவன் என்றும் யேகோவா என்பதை கர்த்தர் அல்லது யேகோவா என்றும் அதோனை என்பதை ஆண்டவர் என்றும் மொழிபெயர்த்துள்ளனர். (ஆதி 1:1; 2:4; 15:2; 17:1; 14:18; 21:33; யாத் 34:6; ஏசா 9:6; 1சாமு 1:3). இந்த அதோனை என்ற பதமாகிய Lord என்னும் ஆங்கிலச் சொல் lord என்று சிறிய 'l' எழுத்தில் ஆரம்பித்தால் இது ஆண்டவரை - தேவனை - கர்த்தரை குறிக்காமல், எஜமானையும். ஆள்கிறவனையும், கணவனையும் குறிக்கும் தாழ்மைக்குரிய சொல்லாக வரும் என்று அறியுங்கள். தமிழில் "கர்த்தர்" என்ற மொழிபெயர்ப்பு, போதகர் பப்ரீசியஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது. இது பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவருக்கும் சொல்லப்பட்டதை அறியுங்கள். யேகோவாவை கர்த்தர் என்று தமிழ்படுத்திய இடமெல்லாம் கொட்டை எழுத்தில் உள்ளதை பாருங்கள்.

புதிய ஏற்பாட்டில் கடவுளைக் குறிக்க உபயோகிக்கப்படும் சொல் தியோஸ் (Theos) என்பதாகும். இந்தப் பதம் சமஸ்கிருதத்தில் "தேவ" என்று உள்ளது. நம் தமிழ் வேதம் சமஸ்கிருதம் கலந்தே இருப்பதால் இது தேவன் என்று மொழி பெயர்க்கப்பட்டது. இதன் மூலப்பொருள் "ஒளி" அல்லது "பிரகாசம்" என்பதாகும். இயேசு என்ற பெயர், மனிதனாய் பிறந்த தேவனுக்கு இட்ட மானிடப் பெயராகும். இது காரணப் பெயர். பழைய ஏற்பாட்டில் தேவ தூதனானவராய், குமாரனாய் காணப்பட்ட, சித்தரிக்கப்பட்ட மூன்று ஆள்தத்துவத்தில் ஒருவராகிய தேவன், மனித வடிவில் எது வரைக்கும் இருக்கிறாரோ அதுவரை இந்த மானிடப் பெயராலே அவர் அழைக்கப்படுவார். இது புதிய வானம் பதிய பூமி ஆரம்பிக்கும் வரை தொடரும் என விசுவாசிக்கிறோம். இந்த இயேசுவை, கர்த்தர் என்றும், ஆண்டவர் என்றும். தேவன் என்றும் புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் அழைக்கப்பட்டிருக்கிறது. இயேசு என்ற பெயரல்ல தேவனால் வெளிப்படுத்தப்பட்ட தம்முடைய பெயர்; "யாவே" அல்லது யேகோவா என்பதே வெளிப்படுத்திய பெயர்.

❖ ❖ ❖

# யாக்கோபின் இக்கட்டு காலம்

எரே 30:7ல் யாக்கோபின் இக்கட்டுக்காலம் என்று போடப்பட்டுள்ளது. யாக்கோபு என்றால் மாம்சப்பிரகாரமான இஸ்ரவேலின் 12 கோத்திரத்தாரையும் குறிக்கிறது. யாக்கோபுக்கு தேவன் இட்ட

பெயர் இஸ்ரவேல். எனவே நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர் என்ற பெயரில் வாழ்கிறோம். நமக்கு இயேசு கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட (மத் 16:18), புதிய ஏற்பாட்டு சபையாகிய கிறிஸ்தவ சபை இருக்கும் வரை உபத்திரவம் உண்டு (யோ 16:33; அப் 14:22). ஆனால் மத் 24:21,29; மாற் 13:24ல் சொல்லப்பட்ட உபத்திரவமோ வருங்காலத்திற்குரியது. "பாழக்குகிற அருவருப்பைக் குறித்து தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே" என்று இயேசு சொல்லி (மத் 24) இந்த உபத்திரவங்களைக் குறித்து வர்ணித்திருப்பதால், நிச்சயமாய் இந்த உபத்திரவம் தானியேல் சொல்லும் 70ம் வாரத்தோடு இணைந்ததாகத்தான் இருக்க வேண்டும். (இது குறித்து ஆசிரியரின் "வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்" என்ற ஆராய்ச்சிப் புத்தகத்தை வாசியுங்கள்). எரே 30:7; தானி 9:27; 12:1; மத் 24:21-22 போன்றவையும் ஆதாரமாய் இருக்கின்றன. வெளி 7:14ல் மகா உபத்திரவ காலம் என்று உள்ளது. தானியேல் சொல்லும் 7 வருஷமும் உபத்திரவ காலம் என்றும், கடைசி 3 1/2 வருஷம் மட்டும் மகா உபத்திரவ காலம் என்றும் வேதம் உறுதிப்படுத்துகிறது. இந்த 7 வருட உபத்திரவ காலம் அந்தி கிறிஸ்துவோடு இஸ்ரேலர் உடன்படிக்கை பண்ணி ஆலயம் கட்டி, பலி முறைகள் செய்வதிலிருந்து (தானி 9:27) ஆரம்பமாகிறது. இதில் முதல் 3 1/2 வருடங்கள் உலகம் முழுவதும் (வெளி 3:10) உபத்திரவமாயிருக்கும். அதிலும் விசேஷமாய் இரகசிய வருகையில் கைவிடப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு அதிகமாய் இருக்கும். ஆனால் மகா உபத்திரவ காலம் இஸ்ரவேலருக்கே மிகவும் பயங்கரமாய் இருக்கும். இதுவே யாக்கோபின் இக்கட்டுக்காலம்.

இந்த யாக்கோபின் இக்கட்டுகாலமாகிய தானியேலின் கடைசி 3 1/2 ஆண்டுகளில் சமுத்திரத்திலிருந்து எழும்பிய மிருகமாகிய (வெளி 13:1) அந்திகிறிஸ்து, தான் இஸ்ரவேலரோடு செய்த உடன்படிக்கையை முறிப்பான் (தானி 9:27). பலியையும் காணிக்கையும் ஒழியப் பண்ணுவான்; தேவாலயத்தில் தேவன் போல் உட்கார்ந்து தன்னைத்தான் தேவனென்று ஆராதிக்க சொல்லுவான் (2தெச 2:4; மத் 24:15); மத்திய ஆகாயத்திலிருந்து பூமிக்கு தள்ளப்பட்ட பிசாசானவன் மிகுந்த கோபம் கொண்டபடியால் (வெளி 12:12) அவன் அந்தி கிறிஸ்துவுக்கு தன்னுடைய வல்லமையைக் கொடுத்து செயல்பட வைப்பான் (வெளி 13:4.5); இதுவரைக்கும் எண்ணிப் பார்க்க முடியாத பிசாசின் கிரியைகள் இவன் மூலமாய் நடக்கும். தேவனின் ஏழு கலசங்களின் கோபாக்கினை நியாயத்தீர்ப்பு நடைபெறும் (வெளி 16).

இந்த உபத்திரவ காலத்திலே இரட்சிப்பே இருக்காது. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரேலர்களும், புறஜாதி மக்களும் பாதுகாக்கப்படுவார்கள்; விடுதலையாக்கப்படுவார்கள் (வெளி 7:1-4,9).

இந்த மகா உபத்திரவத்திற்கு பிற்பாடுதான் இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜாவாய் கர்த்தாதி கர்த்தாவாய், மகிமையோடு, சகல சபைப் பரிசுத்தவான்களுடனும், பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுடனும் ஒலிவ மலையில் காலடி வைத்து நியாயம் தீர்க்க வருகிறார் (மத் 24:29-30; சகரி 14:4; யூதா 14,15). இப்போதுதான் அர்மெகதொன் யுத்தம்; இதுதான் 3ம் உலகமகாயுத்தம்; இப்போது தான் பூமியில் உயிரோடிருக்கும் புறஜாதியாருக்கு மத் 25ல் சொல்லியபடி நியாயத்தீர்ப்பு; இஸ்ரேலர் இரட்சிக்கப்படல் (ரோ 11:25,26); அந்தி கிறிஸ்துவும் கள்ள தீர்க்கதரிசியும் உயிரோடே நரகத்தில் தள்ளப்படல் (வெளி 19:20); பிசாசு கட்டப்படல்; ஆயிர வருட அரசாட்சி ஆரம்பம்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இந்த உபத்திரவகாலம் உனக்குத் தேவையா? கடைசி எக்காளம் தொனிக்கும் போது மத்திய ஆகாயத்திலே இயேசுவோடு எடுத்துக் கொள்ளபட ஆயத்தமா? (1கொரி 15:51) உங்கள் ஆவி, ஆத்மா, சரீரம் குற்றமில்லாமல் காக்கப்படுவதாக (1தெச 5:23). அல்லேலூயா!

❖ ❖ ❖

# வரப்போகும் அந்திக்கிறிஸ்து

''அந்தி'' ''கிறிஸ்தோஸ்'' என்ற இரண்டு கிரேக்க வார்த்தையிலிருந்து தான் அந்திக் கிறிஸ்து என்ற சொல் வந்தது. “அந்தி” என்றால் “எதிராக” அல்லது “பதிலாக” என்று பொருள். கிறிஸ்தோஸ் என்றால் கிறிஸ்து என்று பொருள். ஆக, அந்திகிறிஸ்து என்றால் ''கிறிஸ்துவுக்கு எதிராளி'' என்று அர்த்தம். இந்த அந்திகிறிஸ்து என்பது ஒரு ஆளா? அமைப்பா? அல்லது ராஜ்யமா? என்று பார்ப்போம். யோ 5:43ன்படி அந்தி கிறிஸ்து என்றால் ஒரு ஆள் என்று அறிகிறோம். தற்காலத்தில் பலர் சொல்கின்றபடி அந்தி கிறிஸ்து என்பது ரோபாட்டோ (Robot) கம்ப்யூட்டரோ அல்லது ஒரு மிஷினோ அல்ல. இவன் ஒரு பெரிய ஆள். இவன் சாதாரண ஆளல்ல. 2தெச 2:3ன்படி அவன் கேட்டின் மகன். கேட்டின் மகன் என்றால் கிரேக்கப் பாஷையில் “டயபோலஸ்” (Diabolus) என்று உள்ளது. இந்த வார்த்தை சாத்தானையும், சாத்தானின் அவதாரத்தையும் குறிக்கும். இதன்படி பார்த்தால் கேட்டின் மகன் எனப்படும் அந்திக்கிறிஸ்து சாத்தானின் அவதாரமாய் இருக்கலாம் என்று யூகிக்கலாம். யோ 17:12ல் யூதாஸ் காரியோத்தையும் கேட்டின் மகன் என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. நான்று கொண்டு செத்த,

காட்டிக் கொடுத்த பாவியாகிய இவன் மரித்து தனக்குரிய இடத்திற்கு (அதாவது பாதாளத்திற்கு - தீய எல்லைக்கு) போனான் என்று அப் 1:24ல் பேதுரு சொல்வதால், கேட்டின் மகன் என்றால் சாத்தானின் அவதாரமாய் இருக்கப்போகிறான் என அறிகிறோம். வெளி 11:7 மற்றும் 17:8ன்படி இந்த அந்தி கிறிஸ்துவாகிய மிருகம் பாதாளத்திலிருந்து வரும் சாத்தானின் வல்லமையினால் நிரம்பியிருக்கப் போகிறது என்பதால், அவன் சாத்தானின் அவதாரம் தான் என்ற நமது கணிப்பு உறுதியாகின்றது. யூதாசின் ஆவியும், அந்தி கிறிஸ்துவின் ஆவியும் சாத்தானின் ஆவியே! ஆமென். மேலும் ஆதி 3:15ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தை வாசியுங்கள். “உன் வித்துக்கும் ஸ்திரீயின் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்” என்பதன் அர்த்தமென்ன? ஸ்திரீயாகிய இஸ்ரேல் சபையின் வித்தாகிய இயேசு கிறிஸ்துவுக்கும், சாத்தானின் வித்தாகிய அந்தி கிறிஸ்துவுக்கும் தான் பகை என்று நாம் உணர்வதால், அந்தி கிறிஸ்து, சாத்தான் அவதாரம் தான் என்று மேலும் உறுதியாகிறது. கேட்டின் மகன் எனப்பட்ட அந்திகிறிஸ்துவை அக்கிரமத்தின் இரகசியம் (Mistry of Iniquity) தேவத்துவத்தின் இரகசியத்திற்கு (Mistry of Godliness) எதிரானது என்பதால், அந்திகிறிஸ்து சாத்தானின் அவதாரமாகவே வெளிப்படப்போகிறான் என்பது திண்ணம்.

### இந்த அந்திக்கிறிஸ்து எப்படி இருப்பான்?

1. இவன் ஒரு கலப்பு மனிதன் - Composite man in Nature. இவன் பிசாசின் அவதாரம் என்பதால் தேவனின் திருத்துவமாகிய பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்பதைப் போல, சாத்தானின் திருத்துவமாகிய வலுசர்ப்பம், மிருகம், கள்ள தீர்க்கதரிசி என்பதில் இரண்டாம் ஆளாயிருப்பான். மரணமடையாமலே உயிரோடே நரகத்திலே தள்ளப்பட்டு நித்திய நித்தியமாய் இதே சரீரத்திலேயே வேகப்போகும் ஒரு தனிப்பட்ட மனிதன் (வெளி 19:20 20:10).
2. மனிதரை வசப்படுத்தும் ஆற்றல் உள்ளவன். பாபிலோனிய நேபுகாத்நேச்சார், மேதிய - பெர்சிய Xerxes, கிரேக்க சக்கரவர்த்தி அலெக்சாண்டர், ரோம சக்கரவர்த்தி அகஸ்து ராயன் போன்ற அனைவரின் அத்தனை திறமையையும் வல்லமையையும் உடையவன்.
3. ஈடு இணையற்ற அரசாட்சி நடத்தும் ஒரு திறமையான Administrator.
4. பெரிய ராணுவ சக்தியை உடையவன்.

5. உலக அதிகாரமே அவன் கையில் வரும்.

6. எல்லோராலும் வணங்கக்கூடியவன்.

7. சமாதானமும் சௌக்கியமும் உண்டென்று சொல்லி, இஸ்ரேலரோடே ஒப்பந்தம் செய்பவன் (தானி 9:27).

8. பிதாவையும் குமாரனையும் மறுதலிப்பான் (1யோ 2:18,23).

9. மாம்சத்தில் வந்த இயேசுவை மறுதலிப்பான் (2யோ 7:1; 1தீமோ 3:16).

10. கட்டப்படப்போகும் எருசலேம் ஆலயத்தில் தேவன் போல் உட்கார்ந்து தன்னைத்தான் தேவனென்று காண்பிப்பான் (2தெச 2:30-7).

11. மாறுபாடானவைகளைப் போதித்து விசுவாச துரோகம் செய்வான் (அப் 20:29-30; 2தெச 2:3)

12. இவன் மற்றவர்களுக்குத்தான் தன் அடையாள முத்திரையைப் பதிப்பான்; தனக்கல்ல.

13. இவன் ராஜாவாகத்தான் வெளிப்படுவானேயல்லாமல் குழந்தையாகவோ வேறு நிலையிலோ வெளிப்படமாட்டான் (வெளி 17:10; 13:1; தானி 7).

## எப்போது வெளிப்படுவான்?

இந்த அபூர்வமான அந்திகிறிஸ்து எப்போது வெளிப்படுவான் என்று பார்ப்போம். 1யோ 4:3; 2:18; மத் 24:24ன் படி அந்திகிறிஸ்துவின் ஆவிகள் அநேக கள்ளக் கிறிஸ்துக்களுக்குள் இப்போதே கிரியை செய்கின்றன. ஆனால் வரப்போகும் அந்திகிறிஸ்து இன்னும் வெளிப்படவில்லை. 2தெச 2:6-8ஐ வாசியுங்கள். அவன் வெளிப்படாதபடிக்கு இப்போது ஒரு ஆள் தடை செய்கிறாராம். ஆங்கிலத்தில் பார்த்தால் அந்திகிறிஸ்து வெளிப்பட "Hinderence will be there until he is taken out off the way" என்று உள்ளது. அவன் வெளிப்படப் போகும் பாதையில் தடையாய் இருக்கும் ஆளை (he) நீக்கினால் தான் அவன் வெளிப்படுவான். அப்படியானால் தடை செய்கிறது யார்? பரிசுத்த ஆவி என்கின்றனர். அப்படியானால் HE என்று Capital Letterல் அல்லவா போட்டிருக்க வேண்டும். ஒரு சிலர் தடை செய்கிறது கிறிஸ்தவ சபை என்கின்றனர். சபை என்றால் பெண்பாலில் (ஸ்திரி) அல்லவா போட்டிருக்க வேண்டும். இங்கே ஆண்பாலில் he என்று உள்ளதே. எபே 4:11; 2:15 போன்ற வசனங்களில் கிறிஸ்தவ சபையை ஆண்பாலில், புருஷர், மனுஷன் என்று வருவதை அறியுங்கள். ஆக, பரிசுத்த ஆவியின் வல்லமையோடு

கூடிய ஜெபத்திலே நின்று தடை செய்யும் சபையாரையே இது குறிக்கிறது எனலாம். சபையானது இரகசிய வருகையிலே மணவாட்டியாய் எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகுதான் நிச்சயமாய் அந்தி கிறிஸ்து வெளிப்படுவான். இரகசிய வருகையிலே இயேசு கிறிஸ்து, சபையை எடுத்துக் கொள்ளும் அந்த நாளையும் நாழிகையையும் பிதா ஒருவர் தவிர வேறொருவனும் அறியான். ஆனால் அந்தக் காலகட்டத்தை அறியாமலிருக்க நாம் அந்தகாரத்தில் இல்லையே! (1தெச 5:4). எனவே தற்காலத்தில் தான் சபை எடுபடப் போகிறது என்றும், அப்போது தான் அந்தி கிறிஸ்து வெளிப்படுவான் என்றும். இக்கால உலக சம்பவங்களால் அறிந்து கொள்கிறோமே! ஆமென்.

## எங்கிருந்து வருவான்?

அந்திகிறிஸ்து எங்கிருந்து வருவான் என்பது கேள்வி. தானி 2ல் நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தையும், தானி 7ல் உள்ள தானியேலின் தரிசனத்தையும் முதலில் கவனிப்போம்.

| தானி 2 | தானி 7 | சித்தரிக்கப்படும் ராஜ்யம் | வசன ஆதாரம் |
|---|---|---|---|
| பொன்னான | சிங்கம் | பாபிலோன் | எரே 4:7; ஆபகூக் 1:6,8 |
| வெள்ளியான மார்பு | கரடி | மேதிய-பெர்சிய | தானி 8:20 |
| வெண்கலமான வயிறு தொடை | சிறுத்தை | கிரேக்கம் | தானி 8:21,22 |
| இரும்புக் கால்கள் | பயங்கர மிருகம் | ரோமர் | தானி 7:23 |

ரோம சாம்ராஜ்யத்திற்குப் பிறகு எந்த ராஜ்யமும் உலகில் எழும்பப் போவதாய் வேதம் சொல்லவில்லை. கி.மு. 6ம் நூற்றாண்டிலேயே, பாபிலோன் சாம்ராஜ்ய காலத்திலேயே வீரப்போகும் உலக சாம்ராஜ்யங்களை திட்டமும் தெளிவுமாய் வெளிப்படுத்திய தேவனுக்கு மகிமை. 4வது ராஜ்யமாகிய ரோமசர்க்கார் இருக்கும் போதுதான் ஒரு கல்லாகிய இயேசு கிறிஸ்து வந்து உலக சாம்ராஜ்யங்களை அழித்து தம்முடைய ராஜ்யத்தை இந்த பூமியில் 1000 ஆண்டுகள் ஸ்தாபிப்பார் என்று சொல்லப்பட்டுள்ளது. ரோமசாம்ராஜ்யம் இருக்கும் போதுதானே இயேசு கிறிஸ்து முதலாம்

முறை பூமிக்கு வந்தார் (ரோம சர்க்கார் தானே அவரை மரணத்திற்கு உத்திரவிட்டது). அப்போது ஏன் அவர் அழிக்கவில்லை? அன்றைக்கு தேதியில் ரோமராஜ்யம் முழுமையாய் இருந்தது. கி.மு. 30ல் தான் ரோமராஜ்யம் ஆரம்பம். நேபுகாத்நேச்சரின் சொப்பனப்படி அந்த ராஜ்யம் இரண்டு கால்களாய் அன்றைக்கும் பிரிந்திருக்கவில்லை. கி.பி 346ல் தான், இந்த சாம்ராஜ்யம் கிழக்கத்திய ரோம் என்றும், மேற்கத்திய ரோம் என்றும் இரண்டாய்ப் பிரிந்தது. மட்டுமல்ல மேற்கத்திய ரோம் கி.பி 476ல் வீழ்ந்து போனது; கிழக்கத்திய ரோம ராஜ்யம் கி.பி.1453ல் வீழ்ந்து போனது. இதைத்தான் சாவுக்கேதுவான காயம் என்று வெளி 13:3ல் சொல்லப்பட்டுள்ளது. இந்தக்காயம் சொஸ்தமாக்கப்பட்டு பூமியிலுள்ள யாவரும் 4வது ரோம சாம்ராஜ்யத்தை ஆச்சரியத்தோடே பார்த்து பின்பற்றுவார்கள் என்று சொல்லப்பட்டிருப்பதால், வீழ்ந்து போன ரோமராஜ்யம் திரும்பவும் உயிர் மீட்சி அடையும். இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்தது போல இந்த சாம்ராஜ்யமும் உயிர்த்தெழுந்துள்ளது என்று உலகிற்கு காட்டப்படும். எனவேதான் வெளி 17:8ல் பாதாளத்திலிருந்து ஏறி வந்த மிருகம் என்று எழுதப்பட்டுள்ளது. இதைக்குறித்து மேலும் வெளி 17:8-11 வசனங்களை வாசியுங்கள். அசரியா, எகிப்து, பாபிலோன், மேதிய - பெர்சிய, கிரேக்கம் ஆகிய 5 பேரும் விழுந்தார்கள்; 6வது ராஜ்யமான பழைய ரோம், வெளிப்படுத்தல் விசேஷம் எழுதும்போது இருக்கிறது. 7வது சாம்ராஜ்யம், அதாவது Revival Rome Kingdom (Beast-மிருகம்-அந்தி கிறிஸ்துவின் கூட்டமைப்பு) எழும்பப் போகிறது. இந்த ஏழாவதிலிருந்தே 8வது தனி அந்தி கிறிஸ்து எழும்பப் போகிறான் (வெளி 17:10,11).

புதுப்பிக்கப்பட்ட ரோமசாம்ராஜ்யம் எப்படி இருக்கும் தெரியுமா? தானி 2ல் சொல்லப்பட்ட சொப்பனம் போல பத்து விரல்களுக்கொத்த பத்து ராஜாக்கள் இணைந்து, இரும்பும் களி மண்ணும் போல எழும்புவார்கள். தானி 7ல் உள்ள 4ம் மிருகத்திற்கு 10 கொம்புகள் தோன்றுகின்றதே (10 கொம்பு என்பது 10 ராஜா) அது இதுதான். வீழ்ந்து போன ரோம சாம்ராஜ்யத்திலிருந்து, 10 ராஜாக்கள் - 10 நாடுகளின் கூட்டணி - இன்னும் எழும்பவில்லை. இதைத்தான் E.E.C என்றும் E.C.M என்றும் பல வேதப் பண்டிதர்கள் சொல்கிறார்கள். இந்தப் பத்து ராஜ்யமும் இணைந்தே இருக்கப்போவதால், அனைத்துக்கும் நாணயமுறை, வியாபாரச்சட்டம், அரசியல் ஒழுங்கு எல்லாம் ஒன்றாகவே இருக்கும். இந்தத் தன்மையில் இன்றைக்கும் கூட ஒரு சில நாடுகள் இணைந்திருப்பதைக் காணும்போது இயேசுவின் பகிரங்க வருகை மிகவும் சமீபம் என யூகிக்க வாய்ப்புண்டு. வெளி 17ல் வரும் வேசியைப் பாருங்கள். வச 5,6ன்படி இந்த வேசி மகாபாபிலோன்; அதாவது மகா குழப்பவாதி. இந்த வேசி, இரகசிய

வருகையில் கைவிடப்பட்ட கிறிஸ்தவ சபைகள் ஒன்று சேர்ந்து போப்பின் தலைமையில் அல்லது போப்பின் ஒத்துழைப்போடு இயங்கப் போகும் Universal Church. இந்த ஸ்திரீதான் - இந்த சபைதான் 10 ராஜாக்களின் கூட்டணியாய் இயங்கும் மிருகமாகிய சாம்ராஜ்யத்தின் மேல் அமர்ந்து மிருகத்தை வழிநடத்தும். போப்பின் ஆதிக்கத்தால் நடத்தப்பட்ட 10 ராஜாக்களின் கூட்டமைப்பாகிய Revival Rome Kingdom சில நாட்களில் வெளி 17:16ன்படி போப் மார்க்கத்தையே அழித்துப் போடும். இந்த மிருகத்திற்கு 7 தலைகள் உள்ளன (வெளி 17:9-11; 13:1). இந்த 7 தலைகளும் ரோம வழியிலுள்ள 7 ராஜாக்கள் என அறியலாம். ரோம 10 ராஜாக்களின் கூட்டமைப்பிலிருந்து தான் அந்திகிறிஸ்து எழும்புகிறான். 10 ராஜாவில் 3 பேரைத் தள்ளிவிட்டு எழும்புவான். தானி 7:8ல் சொல்லப்படும் சின்னக்கொம்பும் இதுதான். இப்படி ஏழாவதிலிருந்து எழும்பப்போகும் அந்திகிறிஸ்துக்கு சாத்தானின் அதிகாரமும் வல்லமையும் இணையும் போதுதான் மூர்க்கதனமும் மிருகத்தன்மையும் வருகிறது. அதுவரைக்கும் அமைதியாய் சமாதானமாய் இருப்பான். சாத்தானின் ஆவி நுழைந்த பின்னே யூதர்களோடுள்ள உடன்படிக்கையை முறித்துப் போடுவான்; கட்டப்பட்டிருக்கும் எருசலேம் ஆலயத்தை தீட்டுப்படுத்துவான்; தன்னையே வணங்கும்படி சிலைவைப்பான். முதல் 3 $^1/_2$ ஆண்டு வரை விடுபட்டுப் போன கிறிஸ்தவர்களை மாத்திரமே, இஸ்ரேலரோடு சேர்ந்து துன்பப்படுத்திய அவன், கடைசி 3 $^1/_2$ ஆண்டுகளில் இஸ்ரேலருக்கு பயங்கர ஆக்கினைகளைக் கொடுப்பான். யாக்கோபின் இக்கட்டுக்காலம் (எரே 30:7) இதுதான். தானி 9:27ன்படி 7 ஆண்டுகள் அவனின் ஆதிக்கம் இருக்கும். மத் 24:15ல் இயேசு சொன்ன பாழாக்குகிற அருவருப்பு இதுதான். இந்த சூழ்நிலையில் தான் இயேசுவாகிய கல் உருண்டு வந்து அவனையும் அவனோடுள்ள ராஜ்யங்களையும் அழித்துப்போடும் (வெளி 19). அல்லேலூயா! அவனுக்கு மிகவும் உறுதுணையாய் கள்ளத் தீர்க்கதரிசி எழும்பி, அவனுக்கு சிலை எழுப்பி மக்களை வணங்கவைப்பான; தேவ தூஷணம் செய்வான்.

ஆக, சபையானது மத்திய ஆகாயத்தில் எடுக்கப்பட்ட பின் தான் 10 நாடுகள் அடங்கிய Revivel ரோம சாம்ராஜ்யமாகிய மிருகத்தினின்று எட்டாவது சக்கரவர்த்தியாய் அந்திகிறிஸ்து வெளிப்படுவான். இந்த நாளையும் நாழிகையையும் ஒருவனும் அறியான். ஆனாலும் அது வெகு விரைவில் நடக்கப் போகிறது என்று தற்கால உலகச் செய்திகள் வெளிப்படுத்துகின்றன. 10 கூட்டு ராஜ்ய அமைப்புகள் தோன்றிய வண்ணம் இருக்கின்றன. அந்திகிறிஸ்தவின் 666 முத்திரை போன்ற பல காரியங்கள் நடந்து வருகின்றன.

நியூமராலஜி மூலமாக 666ஐ கண்டுபிடிக்கும் முயற்சிகள் கிறிஸ்தவர்கள் மத்தியில் கூட ஆரம்பித்திருக்கின்றன. எப்படியோ இயேசு சீக்கிரமாய் வந்து சபையை எடுத்துக் கொள்ளப் போகிறார்; அந்திகிறிஸ்து அப்போது ராஜாவாய் வெளிப்படப் போகிறான். நாமெல்லாரும் வருகைக்கு ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

# இரண்டு ஊதுதல்

வேதத்தில் இரண்டு இடத்தில் தேவன் ஊதியிருக்கிறார். **ஒன்று** ஏதேன் தோட்டத்தில். தேவன் மனுஷனை மண்ணினால் உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியில் ஊதினார் (ஆதி 2:7). தேவன் ஊதியதின் விளைவு என்ன தெரியுமா? அவன் ஜீவாத்மாவானான். ஆனால் இன்றோ ஊதும் ஊழியம் செய்வோர் ஊதும் போது, சபை மனுஷன் கீழே விழுகிறான். அதுவும் மல்லாந்து விழுகிறான். காரணம் என்ன என்று கேட்டால் தேவனின் வல்லமை, தேவனின் மகிமை இறங்குகிறது என்கிறார்கள். சாலமோன் தேவாலயத்தில் தேவனின் மகிமை இறங்கும் போது யாரும் மல்லாந்து விழவில்லை; முகங்குப்புற விழுந்தார்கள். தேவ பிரசன்னத்தால் நிறையும் போது வேதத்திலே தேவ மனுஷர்கள் முகங்குப்புறவே விழுந்தார்கள். ஆனால் கெத்சமனே தோட்டத்தில் "I am" (நான் தான் - யோ 18:6) என்று இயேசு சொன்ன உடனே (யாத் 3:14ல் முட்செடியில் தேவன் மோசேயிடம் சொன்ன இதே வார்த்தையை தியானியுங்கள்) கைது செய்ய வந்த யூதப்பாவிகள், தேவனின் நாம வல்லமையினால், மகிமையினால் பின்னிட்டு தரையில் விழுந்தார்கள் என்று பார்க்கிறோம். அப்படியானால் தற்கால ஊதும் ஊழியத்தில் பின்னிட்டு விழுவோரெல்லாம் இரட்சிக்கப்படாத பாவிகளா அல்லது ஊதுவோரின் ஆவிக்குள் சாத்தான் புகுந்திருக்கிறானா? (1நாளா 21:1; அப் 5:3; யோ 13:27). சிந்தியுங்கள். தெளிவு பெறுங்கள்.

<u>**இரண்டாவது இடம்:-**</u> இயேசு உயிர்த்தெழுந்த பின் யோ 20:22ல் சீஷர்கள் மேல் ஊதினார். இதன் விளைவு என்ன தெரியுமா? அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள காத்திருந்தார்கள்; பெற்றுக் கொண்டார்கள். யார் பரிசுத்த ஆவியைப் பெறமுடியும்? உலகத்தாரல்ல. பரிசுத்த ஆவியினால், யோ 3:5ன்படி மறுபடியும் ஜெநிப்பிக்கப்படும் இரட்சிக்கப்பட்டவன் தான். இதைத்தான் யோ 14:17ல் இயேசு சொன்னார். (ஆங்கில மொழி பெயர்ப்பில் வாசியுங்கள்).

சீஷர்களோ தங்களோடிருக்கும் பரிசுத்த ஆவியை உணராமல், தேவ வசனத்தை விசுவாசிக்காமல், இயேசுவின் உயிர்த்தெழுதலை கண்டும் நம்பாமல், மறுபடியும் தங்கள் உலகத் தொழிலுக்கே போனார்கள். காரணம் அவர்கள் செத்த ஆத்மாக்களாகி விட்டார்கள் (எபே 2:1) அவர்களை, ஆதாமைப் போலவே ஜீவாத்மாவாக்க வேண்டும் என்று விரும்பி, அப்படி ஜீவாத்மாவானால் தான், ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் பெறுவர் என எண்ணி, சீஷர்கள் மேல் ஊதினார். இன்றைக்கு நாம் அழைத்த அழைப்பில் தொடர்ந்து போக, பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள, அன்று போல் இயேசு வந்து ஊதமாட்டார். பதிலாக அவரது ஜீவனுள்ள வார்த்தைகளாலே நாம் ஊதப்படுகிறோம். ஜீவாத்மாவாகிறோம்! பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்கிறோம்! அல்லேலூயா!

அமெரிக்காவிலே ஊதும் ஊழியத்தில் பெயர் போன சகோ. பென்கின் அவர்களுக்கு, ஊதும் ஊழியம் தவறானது என்று தேவனால் உணர்த்தப்பட்ட உடனே, அதை விட்டு விட்டாராம்; அப்படி அவர் செய்தது தவறு என்றும் சபையில் பிரசங்கித்தாராம். இதன் விளைவாக ஆத்மாக்கள் குறைய ஆரம்பித்ததாம். (நம்மில் பெரும்பாலோர் உண்மையை உணரமாட்டார்கள் அல்லவா!) இதனால் வருமானமும் குன்றியதால், அவர் மிகவும் வேதனைப்பட்டாராம்! மறுபடியும் தனது ஊதுகிற ஊழியத்தை ஆரம்பித்தாராம். கூட்டம் பழையபடி சபையில் நிறைந்ததாம்! என்னே கிறிஸ்தவர்களின் உணர்வு! அந்த ஊழியர் தமிழகம் வந்தபோது ஊதுகிற காரியத்தை செய்யக்கூடாது என்றே வந்தாராம்! அதன்படியே செய்யாமலே போனார். ஆனால் நம் நாட்டில் இன்னும் இந்த ஆவி தலைதூக்கி உள்ளதே!

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இப்படிப்பட்ட கள்ளப் போதகர்களை அறிந்து கொண்டு அவர்களை விட்டு விலகு! தலை முடியை ஆட்டி விழவைப்பது, நெற்றிக்கு இருபுறமும் உள்ள பொட்டுகளை பிடித்து அழுத்தி விழ வைப்பது, தலையையோ நெற்றியையோ பிடித்து பின்னிட்டுத் தள்ளி விழ வைப்பது போன்ற பிசாசின் கிரியைகளை செய்யும் கள்ளக் கிறிஸ்துக்களை வசனத்தின் மூலம் எடைபோட்டு விலகு! பரிசுத்தமுள்ள தேவராஜ்யத்தில் பழகு! என்றும் ஆனந்தமே!

❖ ❖ ❖

# தேவ சித்தத்தை அறிவது எப்படி?

தேவ சித்தத்தை அறிந்து கொள்ளாத வரைக்கும், நாம் எப்படித்தான் ஜெபம் பண்ணினாலும் எல்லாமே கேட்கப்படாது (1யோ 5:14). தேவ சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக நமது மனம் - ஆத்மா - புதிதாகி மறுரூபம் ஆக வேண்டும் (ரோ 12:2). இதற்காகத்தான் நமக்கு பிரகாசமுள்ள மனக்கண்கள் வேண்டுமென்று பவுல் வேண்டுகின்றான் (எபே 1:19). ஏசா 55:8,9ஐ வைத்துக் கொண்டு "தேவனின் எண்ணங்களும், ஏக்கங்களும் எவ்வளவு உயர்ந்தவை, அப்படியிருக்க நாம் எப்படி அவைகளை அறிந்து கொள்ள முடியும்?" என்று சிலர் போதித்து, தேவ சித்தத்தை அறிந்து கொள்ள வழிவிடுகிறதே இல்லை. இது வஞ்சக ஆவியின் செயல். அப் 22:14ஐ ஆங்கிலத்தில் வாசித்தீர்களானால், தேவ சித்தத்தை நாமெல்லாரும் அறிந்து கொள்ள வேண்டுமென்று தேவனே விரும்புகிறார் என அறிகிறோம்! அவர் சித்தத்தை அறியாவிட்டால் அதன்படி செயல்பட முடியாது. அதன்படி செயல்படாவிட்டால் மத் 7:21ன் நிலை ஏற்பட்டு விடும்.

<u>தேவ சித்தம் இரண்டு பிரிவுகளாய் வெளிப்படுத்தப் படுகிறது.</u> 1) தேவனின் மாறாத பூரண சித்தம், 2) விட்டுக் கொடுத்து நிறைவேற்றும் சித்தம். இந்த இரண்டு வகைகளில் மாறாத பூரண சித்தத்தை அறிந்து, தெரிந்து புரிந்து கொள்ள செயல்பட ஒருவன் விரும்பாமல் இருக்கும் நிலையில், தேவன் அவன் விருப்பத்திற்கு விட்டுக் கொடுத்து தம் சித்தத்தை நிறைவேற்றுகிறார். இப்படி அவர் விட்டுக் கொடுத்து தம் சித்தத்தை (Permissive will) நிறைவேற்றும் போது, முழுமையான ஆசீர்வாதங்கள் வந்து சேராது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வோமானால், இஸ்ரேலருக்கு தாமே ராஜாவாய் நிரந்தரமாய் இருக்க வேண்டுமென்பது தேவ சித்தம். அதுதான் அவரின் மாறா பரிபூரண சித்தம் (Perfect will). ஆனால் இஸ்ரேலரோ தங்களை ஆவிக்குரிய ரீதியில் நடத்திச் செல்லும் சாமுவேலின் பிள்ளைகளின் செயல்பாடுகளின் நிமித்தமும், சுற்றுப்புற புற ஜாதி மக்கள் எல்லாமே ராஜாவோடு இருப்பதின் நிமித்தமும், ஆதாம் முதற்கொண்டு சாமுவேல் வரை தேவனே ராஜாவாயிருந்து தங்களை நடத்திய மாறா பூரண சித்தத்தை விடுத்து, தங்களின் சொந்த விருப்பம் நிறைவேற வேண்டி, தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று கேட்டனர். இதனால் தேவன், தன் மாறா பூரண சித்தத்திலிருந்து (Perfect will) கீழிறங்கி, தெரிந்து கொள்ளப்பட்ட மக்களுக்காய் விட்டுக் கொடுத்து, அவர்கள் விருப்பத்தை நிறைவேற்ற இணங்கி (Permissive will), அவர்களுக்கென்று சவுல் என்ற ராஜாவை ஏற்படுத்தினார். பலன் என்ன? அன்று முதல் இன்று

வரை பலமுறை சிதறடிக்கப்பபட்டு, நிம்மதியில்லாத ராஜ்யமாய் இஸ்ரேல் இயங்குகிறது. தொங்குகின்ற கத்தியின் கீழ் நிற்பது போல என்றென்றும் பயமும் திகிலும் இஸ்ரேலை ஆட்கொள்ளுகிறது; கிடைக்க வேண்டிய ஆசீர்வாதங்கள் நிறைவாய் கிடைப்பதில்லை. தேவன் இயேசு, தம் மாறாத சித்தப்படி அவர்களுக்கு ராஜாவாய் வரும்போது தான் அவர்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! உனக்குத் தேவை தேவனின் மாறாத சித்தமே! (Perfect will).

**தேவன் இரண்டு சித்தமாய் செயல்படுவது போல மனிதனும் மூன்று விதமான சித்தப்படி செயல்படுகிறான்.** 1. தன் சுய சித்தப்படி, 2. சுற்றியுள்ளோரின் சித்தப்படி, 3. சாத்தானின் சித்தப்படி. இதற்கு உதாரணமாய் சவுல் ராஜாவை எடுத்துக் கொள்ளலாம். சாமுவேல் வரும் வரை பொறுமையில்லாமல், தேவ சித்தத்தை உணராமல், ஆசாரியன் செய்ய வேண்டிய பலிமுறைகளை தன் சித்தப்படி செய்ததினால் ராஜ்யபாரம் அவனை விட்டு நீங்க ஏதுவாயிற்று. (1சாமு 13:9-14). இப்படியாய் சுயசித்தப்படி செயல்பட்ட சவுல், தேவன் சொன்னபடி அமலேக்கியரையும், அவர்களுக்குண்டான எல்லாவற்றையும் சங்கரிக்காமல், ஜனங்களின் சித்தப்படி தேவனுக்குப் பலியிட நலமான எல்லாவற்றையும் கொண்டு வந்தான் (1சாமு 15:20-28). அதுமட்டுமல்லாமல், சாத்தானின் குறி சொல்லுகிற ஆவியின் சித்தப்படி செயல்பட ஆரம்பித்தான் (1சாமு 28:7-9). இப்படியாய் சவுலைப் போல செயல்பட எல்லா மனிதருக்கும் சுயாதீனம் கொடுக்கப் பட்டிருந்தாலும், சவுலைப் போல செயல்பட்டு பரிதாப முடிவை அடையாமல் தேவனின் மாறாத பரிபூரண சித்தத்தை அறிந்து செயல்படுவதே நல்லது.

தேவன் தன்னுடைய சித்தத்தை ஒரேயடியாய், முழுமையாய் மனிதனுக்கு விளங்கப்பண்ணமாட்டார். கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, உன் தேசத்தையும், இனத்தையும், தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு வா என்று ஊர் தேசத்திலேயே சொன்னார். நான் காட்டும் கானான் தேசத்துக்குப் போ என்றார். எப்படிப்பட்ட தேசம் என்றும் சொல்லவில்லை. என்ன நடக்கும் என்றும் சொல்லவில்லை. அவனோ தேவ சித்தப்படி முழுமையாய் செயல்படாமல், தன் தகப்பனுடைய வீட்டோடே புறப்பட்டு வந்து ஆரானில் தங்கிவிட்டான்; கானானுக்குப் போகவில்லை. (ஆதி 11:31). அங்கே அவன் தகப்பன் தோராகு மரித்தபின்னே மறுபடியும் தேவன் பேசுகிறார். கானானுக்குப் போனால் 7 விதமான ஆசீர்வாதங்களை தர சித்தமாயிருக்கிறேன் என்று வெளிப்படுத்தினார் (ஆதி 12:2-3). தேவ சித்தப்படியே ஆபிராம் புறப்பட்டு

கானான் தேசம் போய் சீகேம் என்னும் இடத்தில் தங்கினான். அப்போது தேவன், "உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன்" (ஆதி 12:7) என்ற தன் பூரண சித்தத்தை வெளிப்படுத்தினார். இப்படியாய் தேவன் சிறிது சிறிதாய் நம் கீழ்ப்படியும் உள்ளத்தை அறிந்து தம் சித்தத்தை வெளிப்படுத்துகிறார். **யாருக்கெல்லாம் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தமாட்டார் தெரியுமா?** 1. பாவத்தில் நிலைத்திருப் பவர்களுக்கு, 2. ஆவியிலே வெறுமையாய் இருப்பவர்களுக்கு. 3. தேவனுடைய வார்த்தையை தியானிக்காதவர்களுக்கு, 4. இதுவரை வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய சித்தத்திற்கு தொடர்ந்து கீழ்ப்படியாதவர்களுக்கு, 5. தேவ சித்தத்தை அறிய ஆவியானவரின் ஒத்தாசையோடு ஆயத்தமும் வாஞ்சையும் இல்லாதவர்களுக்கு. இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நீ எப்படி இருக்கிறாய்? உன்னை நீயே நிதானித்து அறிந்து கொள்.

நன்மையாய்க் காணுகிற, கிடைக்கிற எல்லாமே தேவ சித்தம் என்று அறிந்து கொள்ள வேண்டாம். யோ 9:13-15ஐ வாசியுங்கள். ஒளியின் வேஷம் தரித்து பிசாசானவன் கெர்ஜிக்கிற சிங்கம் போல சுற்றித் திரிகிறான். ஜாக்கிரதையாய் இருங்கள்! எச்சரிக்கையாய் இருங்கள்! விழிப்போடு இருங்கள்! நினிவே பட்டணத்திற்கு யோனாவை போகச் சொன்னார் தேவன். அவனோ மறுத்துவிட்டான். மோசே கூட மூன்று முறை மறுத்துவிட்டு தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தான். இவனோ, நேரே தர்ஷீசுக்குப் போகும் கப்பலிலே ஏறினான். டிக்கெட்டும் கிடைத்தது; பெர்த்தும் கிடைத்தது. இப்படி நன்மையானது நடந்ததைப் பார்த்த உடனே, நினிவேக்குப் போவது தேவனுக்கு சித்தம் இல்லையென்று யோனா தன் சுயபுத்தியில் எண்ணி இருப்பான். முடிவோ... பரிதாபம். தேவன் தான் செய்ய நினைத்ததை செய்தே முடித்தார். அல்லேலூயா! தேவ பிள்ளையே! இப்படித்தான் பல கிறிஸ்தவர்கள், ஏதோ காணுகிற சில நன்மைகளை வைத்து இதுதான் தேவ சித்தம் என்று ஏமாந்து போகிறார்கள். தேவன் இயேசு நமக்கு சொல்லிக் கொடுத்த ஜெபத்தில், "உம்முடைய சித்தம் பரலோகில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்று சொல்லிக் கொடுத்தார். பரலோகில் வியாதியில்லை; வறுமையில்லை; பசியில்லை; கண்ணீர் இல்லை; கவலை இல்லை. எங்குமே ஆனந்தம்; எங்குமே சந்தோஷமும் சமாதானமும்.

இப்படித்தான் இருக்க வேண்டுமென்பது தேவ சித்தம். இதை உணராமல் பலர், இங்கே கவலைதான்; கண்ணீர் தான்; பரலோகில் தான் சந்தோஷம் என்று தேவ சித்தத்திற்கு விரோதமாய் அறிக்கையிடுகிறார்கள். அந்த அறிக்கையின்படியே அவர்களுக்கு

சம்பவிக்கிறது. நம்முடைய அறிக்கையோ விசுவாச அறிக்கையாய் இருக்க வேண்டும். குஷ்டரோகி கூட தேவ சித்தத்தை அறிந்து இயேசுவிடம் வருகிறான் (மத்). நம்மவர்களோ அவனிலும் கீழாய் இருந்து வியாதியை தேவ சித்தம் என்கிறார்களே!

தேவன் தன் சித்தத்தை,

1. கனவின் மூலமும்,
2. தரிசனத்தின் மூலமும்,
3. இருதய உணர்வின் மூலமும்,
4. சூழ்நிலைகள் மூலமும்,
5. அடையாளங்கள் மூலமும்,
6. தேவ மனுஷர் மூலமும்,
7. தேவ வார்த்தையின் மூலமும் வெளிப்படுத்துகிறார்.

இந்த ஏழு வழிகளுக்கும் வேதத்தில் உதாரணங்கள் உள்ளன. யோசேப்பிற்கு கனவில் வெளிப்படுத்தினார்; பேதுரு - கொர்நெலியுவுக்கு தரிசனத்தில் வெளிப்படுத்தினார்; பவுலுக்கு, அனனியா என்ற சீஷன் மூலம் வெளிப்படுத்தினார். இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். எந்த வழிகளில் தேவன் வெளிப்படுத்தினாலும் தேவ வார்த்தைக்கு ஒத்திருக்கிறதா என்று சொல்லி தியானம் செய்! தேவ ஆவியானவர் தம் சித்தத்தை வெளிப்படுத்துவார். ஏனென்றால் பிசாசானவன் மற்ற 6 வழிகளிலுமே செயல்பட வாய்ப்புள்ளது. சில நேரத்தில் வசனத்தையே தவறாய் உணர்த்த முயலுவான். எனவே நாம் நம் சித்தத்தையும், பிறரின் சித்தத்தையும் (அவர் எவ்வளவு பெரிய மனிதராய் இருந்தாலும் சரி) பிசாசின் சித்தத்தையும் தூர எறிந்து விட்டு, ஆவியானவரின் ஒத்தாசையோடு, வேத வசனத்தோடு தியானம் செய்தால், தேவ சித்தம் நிச்சயம் வெளிப்படும். இப்படியாய் **வசனத்தின் மூலமாய் தேவ சித்தம் வெளியான பின்னேயும், மற்ற 6 வழிகளில் உறுதி செய்ய முயலாதே!** அது அறிவீனம்! வசனத்திற்கு மிஞ்சியது ஒன்றுமே இல்லை. அல்லேலூயா! தேவ சித்தம் அறிய, உங்கள் மனம் மறுரூபமாக இன்றே இடங்கொடுங்கள். ஆவியிலே மறுரூபமாகி, புது சிருஷ்டியான நீ, ஆத்மாவிலும் சரீரத்திலும் மறுரூபமாக வேண்டாமா? இதுதானே தேவ சித்தம்! தேவ சித்தத்திற்கு இடங்கொடு! வெற்றி உனதே! ஆமென்.

❖ ❖ ❖

# புளித்த மாவும், ஸ்திரீயும், மூன்று படி மாவும்

மத் 13:33ல் பரலோக ராஜ்யத்தைப் பற்றி இயேசு கிறிஸ்து உவமைகளாய்ச் சொல்லும்போது இந்த மூன்றையும் உபயோகிக்கிறார். இஸ்ரவேலரால் இயேசு ராஜா நிராகரிக்கப்பட்டதால், பரலோக ராஜ்யம் இப்பூமியில் நிறுவப்படவில்லை. எனவே நமக்குள்ளே இயேசுவால் பரிசுத்த ஆவியைக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற நிழலாட்டமான ராஜ்யம், இப்பூமியில் இயேசுவின் இரகசிய வருகைவரை இருக்கப் போகிறது. அதன்பின் நிஜமான ராஜ்யம் இப்பூமியில் ஸ்தாபிக்கப்படும். அல்லேலூயா!

இந்த உவமையில் வரும் ஸ்திரீயானவள் சபையையும், புளித்தமா சுவிசேஷத்தையும், மூன்றுபடி மாவானது மனுமக்களையும் உருவகப்படுத்துகிறது என்று சிலர் விளக்குகின்றனர். நானும் கூட ஒரு காலத்தில் இதை நம்பினேன். இன்றோ தேவன் வெளிப்படையாய், உண்மையை, ஆவியானவர் மூலம் உணர்த்துகிறார். புளித்தமா என்பது சுவிசேஷம் அல்ல. எப்படியெனில் வேதத்தில் இது தீமையின் சின்னமாகவே எழுதப்பட்டுள்ளது (Symbol of Evil) இது பாவத்தைக் குறிக்கிறது. (1கொரி 5:6-8; கலா 5:9); கள்ள உபதேசத்தைக் குறிக்கிறது (மத் 16:6-12; மாற்கு 8:15-21) இயேசு வாழ்ந்த காலத்திலேயே பரிசேயரின் புளித்தமா (சட்டத்தின்படி நடத்தல் - Legalism), சதுசேயரின் புளித்தமா (சரீர உயிர்த்தெழுதல் இல்லை; ஆவியோ தேவ தூதர்களோ இல்லை - Scepticism), ஏரோதின் புளித்தமா (மதமும் உலகப்பற்றாசையும் இணைத்து வாழ்வது - Materialism) என்ற மூன்று விதமான கள்ள உபதேசம் இருந்திருக்கிறது என்று அவர் வாயாலேயே சொல்லக் கேட்கிறோம். பஸ்கா பண்டிகை முடிந்த உடனே புளிப்பில்லா அப்பப் பண்டிகை வருகிறது. லேவி 23:6-14ஐ வாசித்தால் முதற்பலனின் பண்டிகையில் அசைவாட்டும் தாள்கட்டோடு புளித்தமா ஏதும் சேர்க்க கூடாது. ஏனென்றால் இந்த முதற்கனி உயிர்த்தெழுந்த இயேசுவை குறிப்பதால், நம் இயேசு பாவமாக்கப்பட்டு மரித்து நீதியின் சூரியனாய் உயிர்த்தெழுதலினாலே இங்கே புளித்தமா சேர்க்கப்படலாகாது. ஆனால் பெந்தேகொஸ்தே பண்டிகையிலே புளிப்பான இரண்டு அப்பங்களை அசைவாட்ட வேண்டும் (லேவி 23:15-17) ஏனென்றால் அந்த நாள் 1கொரி 12:13ன்படி சபை உருவாகும் நாளுக்கு அடையாளம். சபையிலே கோதுமை மணிகளும் உண்டு; களையும் உண்டு; பாவத்திலிருந்து முழுமையான விடுதலை அடையாதவர்களும் உண்டு. (2 அப்பம் என்பது இஸ்ரவேலரையும்

சபைக்குள் வரும் புற ஜாதியாரையும் குறிக்கின்றது. ஆமோ 4:4,5ஐ கூட வாசியுங்கள்). புளித்தமா, சுவிசேஷம் என்றால் ஒருமுறை ஒரு ஊருக்குள் சுவிசேஷம் விதைக்கப்பட்டாலே அந்த ஊர் முழுவதுமே சுவிசேஷமயமாகிவிடுமே! ஆனால் இன்று நிலைமை அப்படி இல்லையே! எத்தனையோ முறை ஒரு ஊருக்குப் போய் சுவிசேஷம் சொல்லியும் ஒருவர் கூட இரட்சிக்கப்படாத கிராமங்களும் உண்டே! எனவே புளித்த மாவு என்பது கள்ள உபதேசத்தை, தீமையான காரியத்தை குறிக்கிறது என அறிகிறோம். (2தீமோ 4:34; 2பேது 2:1.2) இந்த புளித்தமா, மூன்று படி மாவையும் முழுவதும் புளிக்க வைக்கும் - முழுவதும் கெடுத்து விடும் என்று இயேசு சொல்கிறார். அப்படியானால் இந்த 3 படி மாவு என்பது எதைக் குறிக்கிறது?

மூன்று படி என்பது நேரிடையாய் 3 படி என்று அர்த்தமல்ல. ஒரு பெரிய குடும்பத்துக்கு ஒருமுறை உபயோகிக்கும் மாவின் அளவைக் குறிக்கிறது. தேவனுடைய மனுஷர்களுக்கு அப்பம் சுட சாராளுக்கு ஆபிரகாம் கட்டளையிடும்போது "3 படி மெல்லிய மாவு எடுத்துப் பிசைந்து அப்பம் சுடு" (ஆதி 18:6) என்று சொன்னதைப் பாருங்கள். இந்த மூன்றுபடி மாவு என்பது "Three measures of meal" என்று ஆங்கிலத்தில் போட்டிருப்பதால் இது சாப்பாட்டுக்குரியதென்றும், கெடாத நல்ல மாவு என்றும் அறிகிறோம். எனவே இந்த மாவு தேவனுடைய வார்த்தையாகிய ஆவிக்குரிய உணவை உவமானப்படுத்துவதாக உணரலாம் (See மத் 4:4; யோ 6:47-63) இந்த அப்பழுக்கில்லாத மனித வாழ்வுக்குத் தேவையான தேவ வார்த்தைகளுக்குள்ளே கெட்ட, பாவமான கள்ள உபதேசங்களும், பாரம்பரியங்களும், மனிதக் கற்பனைகளுமான புளித்தமாவை, ஒரு ஸ்திரி, நிழலாட்டமாயிருக்கும் பரலோக ராஜ்யத்திலே திணிக்கிறாள். பரலோக ராஜ்யத்தின் சத்தியங்கள் எல்லாம் எப்படி கறைப்படுத்தப் படுகின்றன; கருகலாக்கப்படுகின்றன என்பதை அன்றே இயேசு இப்படியாய் சொல்லியிருக்கிறார் (லூக் 18:8; 1தீமோ 4:1-8; 2தீமோ 3:5; 4:3-4; 2பேது 3:3-4) தேவனுடைய வார்த்தை என்ற போர்வையில் இப்படியாய் மறைத்துக் கொண்டு, கள்ள உபதேசம், பாவக்காரியம் எல்லாம் போதிக்கப்படுமாம். இப்படிச் செய்வது யார்? ஒரு ஸ்திரி! யார் அவள்?

ஸ்திரி என்றாலே தீர்க்கதரிசனத்தில் சபை என்று அறிவோம். நல்ல மாவு முழுவதும் புளிக்கும்படி புளித்த மாவை இவள் வைப்பதால் நிச்சயமாய் இவள் தேவனுடைய சபை அல்ல. வெளி 2:20ஐ வாசியுங்கள். தீயத்தீரா சபையில் தோன்றும் ஸ்திரீ யேசபேல் புளித்த மாவை அடக்கி வைக்கும் ஸ்திரிக்கு ஒப்பாகிறாள். அத்தோடு மாத்திரமல்ல. இவள் வெளி 17:5ல் வரும் ஸ்திரீக்கு நிழலாட்டமாகவும்

இருக்கிறாள். இந்த ஸ்திரீ கள்ள உபதேச, கள்ளக் கிறிஸ்துக்கள், கள்ளத் தீர்க்கதரிசிகள் அடங்கிய கிறிஸ்தவம் என்னும் போர்வையில் இயங்கும் சபைகளையும், அமைப்பகளையும் குறிக்கிறது. பாரம்பரியத்தையும், மனுஷருடைய கற்பனைகளையும் போதிக்கின்ற, கைக்கொள்கின்ற கிறிஸ்தவம் என்னும் போர்வையில் இயங்கும் சபைகளையும் அமைப்புகளையும் குறிக்கிறது.

இதை வாசிக்கும் தேவனுடைய நிழலாட்டமான பரலோக ராஜ்யத்தில் நிற்கின்ற தேவ பிள்ளையே! ஏன் சுவிசேஷம் பரவவில்லை புரிகிறதா? ஏன் 3 சதவீத கிறிஸ்தவன் அப்படியே பெருகாமலிருக்கிறான் தெரிகிறதா? சகல மத பிரார்த்தனைகளும் வழிபாடுகளும் ஒருமித்து நடக்கின்றனவே ஏனென்று தெரிகிறதா? குழந்தை ஞானஸ்நானம், சிலுவை வணக்கம், மாதா வழிபாடு, இரட்சிப்பு - வெறுப்பு, சடங்காச்சாரம், ஆவிக்குரிய விபச்சாரம், வசன மறைப்பு, நியாயப் பிரமாண கடைப்பிடிப்பு, அந்திக் கிறிஸ்துவின் ஆவி போன்றவை நம் சபைகளில் உள்ளனவே புரிகிறதா? இப்படிப்பட்டதான புளித்த மாவையும், இதை உபயோகிக்கும் ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்களையும் கள்ள உபதேச சபைகளையும் கள்ள தீர்க்கதரிசிகளையும் அடையாளம் கண்டு கொள்ளுங்கள். ஆவிகளைப் பகுத்தறியுங்கள்; கற்புள்ள கன்னிகையாய் அவர் வரும் போது எதிர்கொண்டு போக ஆயத்தமாயிருங்கள். நிஜமான பரலோக ராஜ்யத்தில் பங்குபெற தயாராயிருங்கள். வானத்திலிருந்து வரும் தேவ அக்கினியால் புளித்தமாவும் அதை உபயோகிக்கும் ஸ்திரீயும் பஸ்பமாகட்டும்! அல்லேலூயா!

❖ ❖ ❖

# நாம் ஏழையாயிருப்பது தேவ சித்தமா?

கிறிஸ்மஸ்ஸை கோலாகலமாகக் கொண்டாடி மகிழும் கிறிஸ்தவர்களுக்கே இதன் தாற்பரியம் புரியவில்லை. அவர் ஏன் தரித்திரராய் பிறந்தார் என்று பலருக்குத் தெரியவில்லை. நரிகளையும், பறவைகளையும், அண்ட சராசரங்களையும் படைத்த தேவனுக்கோ தலை சாய்க்க இடமில்லையே, ஏன் என்று பலர் யோசிப்பதில்லை (மத் 9:20). தரித்திரத்திலே இருந்த மக்கெதோனியா நாட்டு மக்களைப் பற்றி எழுதும் போது, பவுல் அவர்களுக்குச் சொல்லும் விசுவாச வார்த்தையை 2கொரி 8:9ல் வாசியுங்கள். இயேசுவுடைய தரித்திரத்தினாலே நாமெல்லாரும் ஐஸ்வரியவான்களாகும்படிக்கு நம்

நிமித்தம் தரித்திரரானாராம். இதை விசுவாசிக்கும் நமக்கு ஏழ்மையிருப்பது தேவ சித்தம் அல்ல என்று புரிகிறதல்லவா! இது ஆவிக்குரிய ஐஸ்வரியம் என்று சிலர் எண்ணுகின்றனர். அப்படியானால் இயேசு ஆவிக்குரிய ரீதியிலா தரித்திரரானார்? இல்லையே!... ஆவியிலே தரித்திரம் என்றால் கடலிலே நடக்க முடியுமா? அற்புதங்கள் தான் செய்ய முடியுமா? ஆவியிலே தரித்திரர் என்றால் ஏழ்மையைப் பற்றி எழுதிக்கொண்டிருக்கும் போது பவுல் அதை எழுத தேவை என்ன? விசுவாசிக்கிற கிறிஸ்தவனுக்கு வெற்றி வாழ்க்கை இந்த உலகில் உண்டல்லவா! (1யோ 5:4; 1கொரி 15:57; ரோம 8:37) 1பேது 2:9ன்படி நாம் ராஜா வீட்டுப் பிள்ளையாய் இருக்கும்போது, ராஜாவாகிய இயேசுவுக்கு, தம் பிள்ளைகள் ஏழ்மையாயிருப்பது சித்தமா யிருக்குமோ? அவருடைய சித்தம் அறியாமல், விசுவாசியாயிருந்து ஜெபித்தாலும், காணிக்கை கொடுத்தாலும், பயபக்தியாய் உத்தமமாய் வாழ்ந்தாலும் நமது உலகப் பிரகாரமான குறையாகிய ஏழ்மை - வறுமை தரித்திரம் எல்லாவற்றையும் தம் நாமம் மகிமைப்படும்படியாய், மகிமையாய் எப்படி நிறைவாய் ஆக்குவார்? (பிலி 4:19) சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாய்க் கிடக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவு படாது என்ற வசனம் பொய்யா? பூமிக்கு வந்து நன்மை செய்கிறவராய், சுற்றித்திரிந்த இயேசு (அப் 10:38) இன்றும் ஜீவிக்கிறாரே! அவருடைய கொள்கை, சித்தம், மகிமை, குணாதிசயம், எல்லாம் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவை ஆயிற்றே! "தாவீதின் நாட்களிலேயே நீதிமான் கைவிடப்படவேயில்லை; நீதிமானின் சந்ததி அப்பத்துக்கு இரஞ்சித்திரிந்ததில்லை" (சங் 37:25) எனும்போது, கிருபையின் நாட்களில் அது மாறிப்போகுமோ? "ஒவ்வொரு பாவியும் இரட்சிக்கப்பட்டு நீதிமானாக்கப்பட்டிருக்கிறான்; அவன் இனி பாவியல்ல" என்ற ஒரு விசுவாசம் வராதவரைக்கும் நீதிமான் பிழைக்க முடியாது (ஆபகூக் 2:4); தேவ சித்தத்தை உணர்ந்து ஜெபிக்க முடியாது; மகிமையாய் நிறைவுகளைப் பெற முடியாது; ஏழ்மை ஏழ்மைதான்.

கலா 3:7,9ன் படி ஆபிரகாமக்கு உண்டான ஆசீர்வாதம், தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கிற விசுவாச மார்க்கத்தாருக்கு உண்டல்லவா! விசுவாச மார்க்கம் என்றால் என்ன என்று அறியாமல், தெரியாமல், அதற்குள்ளே வராதவர்கள் தான் தேவ சித்தத்திற்கு விரோதமாய்ப் பேசுவார்கள். ஆதி 24:35ல் உள்ள ஆபிரகாமின் ஆசீர்வாதம் நமக்கில்லையா? அப்படிப்பட்ட சீமானாய், தன் பிள்ளைகள் வாழ வேண்டும் என்று தேவன் விரும்பமாட்டாரா! 400 வருடங்களாய் அடிமையாய்க் கிடந்தவர்களை, பாலும் தேனும் ஓடுகின்ற கானான் தேசத்துக்கு கொண்டுபோய் செழுமையாய் வைக்க வேண்டும் என்பது

தானே தேவனின் விருப்பம்! ஏழையாய் இருப்பது பாக்கியம் என்றும், ஏழையாய் இருப்பதால் தேவனுடைய சித்தத்திற்கு புறம்பாய் இல்லை என்றும் திருமதி ஸ்டான்லி ("ஆசீர்வாதம்") எழுதியது கண்டு ஆச்சரியப்பட்டேன். இப்படிப்பட்டவர்களின் மனக்கண்கள் பிரகாசமடைய ஜெபிக்கிறேன் (எபே 1:19) லூக் 6:20ஐ எடுத்துக்கொண்டு தரித்திரர்கள் பாக்கியவான்கள் என்கின்றனர். அந்த வசனத்தை முழுமையாய்ப் படிப்பதில்லை. தரித்திரம் இல்லாமல் இருக்கும் ஐஸ்வரியவான் களெல்லாம் பாக்கியவான்கள் இல்லையா? ஆபிரகாம், யாக்கோபு, தாவீது, யோசேப்பு போன்ற ஐஸ்வரியவான்களெல்லாம் பாக்கியவான்கள் இல்லையா? பாதி வசனத்தோடு நிறுத்தாமல் மீதியையும் படியுங்கள். ஏன் தரித்திரர்கள் பாக்கியவான்கள் தெரியுமா? சீஷர்களாய் இருப்பதால் (விசுவாசிகளானதால்) தேவனுடைய ராஜ்யம் அவர்களுடையது.

அந்த தேவனுடைய ராஜ்யத்திற்குள் வந்து விட்டோம் என்ற விசுவாசம் தரித்திரராகிய விசுவாசிகளுக்கு வந்துவிட்டால் எல்லாம் கூடக் கொடுக்கப்படும் (மத் 6:33). எனவே தான் அவர்கள் பாக்கியவான்கள். தரித்திரராய் இருப்பதால் அல்ல; தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொண்டதால் பாக்கியவான்கள். அல்லேலூயா! தேவனுக்கு ஒப்புக் கொடுத்தவர்களை தேவனே உடுத்துவிக்கிறார்; போஷிக்கிறார் (மத் 6:24-33). காட்டுப் புஷ்பங்களையே உடுத்துவிப்பவர் நம்மை உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா! இந்த நிச்சயத்தை உணராதவர்களை அற்ப விசுவாசிகள் என்று தேவன் அழைக்கிறார். உலகத்தை நேசிக்காமல் தேவனையே நேசிப்போருக்கு இம்மையிலே நூறத்தனையாய் ஆசீர்வதிப்பேன் என்று தேவன் சொன்னது பொய்யா? (மாற் 10:29,30). சிறுமைப்பட்டவர்களுக்கு (meek) சுவிசேஷம் அறிவிக்க இயேசு ஏன் வர வேண்டும் (ஏசா 61:1)? சுவிசேஷத்தினாலே அவர்களின் சிறுமை, வறுமை, தாழ்வு நீங்கும் அல்லவா! ஆமென். 1ம் சங்கீதத்தின் அடிப்படை சத்தியத்தை உணராவிட்டால், ஏழ்மையாயிருப்பது தேவ சித்தமென்று சத்தமிட்டுச் சொல்லும் கூட்டம் பெருகத்தான் செய்யும். விசுவாசக் குறைவினால் தேவனுடைய மகிமையைக் காணாமல் ஏழ்மையாய் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள் என்பதால், தேவனின் சித்தம் பொய்யாகிவிடுமா? விசுவாசத்திலே பொறுமையோடு இயேசுவின் வார்த்தையை விசுவாசித்து ஓடும்போதுதான் வெற்றி உண்டு. இது ஒரு நாளில் நடந்தாலும் நடக்கலாம்; ஒன்றிரண்டு காலங்கள் ஆனாலும் ஆகலாம். ஆனாலும் தேவனுடைய வார்த்தை மாறாது; தேவனின் வார்த்தை உண்மையுள்ளது. சங் 23:5 இப்பூமியிலேயே நிறைவேறும். அல்லேலூயா! "விசுவாச ஓட்டத்தில் சோம்பேறியாய் இருந்தால்

தரித்திரம் உன்னை ஆண்டுகொள்ளும்" என்று நீதிமொழிகளில் சொல்லப்பட்டதை வாசியுங்கள். "லாசருவின் வாழ்க்கை நமக்கு வேண்டுமா?" என்ற ஆசிரியரின் செய்தியை வாசித்தால் அவன் ஏன் தரித்திரனாய், அதுவும் வியாதியோடு இருந்தான் என அறியலாம்.

பரலோக ராஜ்ய மகிமை மாத்திரம் மனிதனுக்கு தேவன் வைக்கவில்லை. இந்த பூமியிலும் நாம் சமாதானமாய் சந்தோசமாய் வாழ வேண்டுமென்பதும் தேவசித்தம். அதனால்தானே எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை இரட்சகரின் பிறப்பை தேவதூதன் அறிவித்தான் (லூக் 2:10). கிறிஸ்மஸ் விழா கொண்டாடும் எவருக்கும் இந்த உண்மை புரியவில்லை; புரிந்திருந்தால், இவ்வுலகில் ஏழ்மைதான்; பரலோகில்தான் தனவந்தன் என்று சொல்லமாட்டார்கள். ஆறுநாளும் செழுமை உலகைப்படைத்து, சமாதான வாழ்வு - சந்தோச "பூலோக வாழ்வு" வாழ வழி செய்த பின் தானே, ஆதாமையும் ஏவாளையும் படைத்தார். "Thou mayest prosper and bein good health even as thy soul prospereth" என்று தானே வேதம் நம்மை வாழ்த்துகிறது (3யோ 2 in English). நித்திய ஜீவனை மாத்திரம் தான் தேவன் கட்டளையிட்டார் என்றால், உலக வாழ்க்கை எதற்கு? சாட்சியுள்ள ஜீவியம் எதற்கு? பிசாசின் கிரியைகளான வியாதி, வறுமை, ஆவிக்குரிய மரணம், தோல்வி போன்றவைகளை சிலுவையில் ஒழித்தது ஏன்? பிசாசை எதிர்த்து நிற்க, விரட்ட அதிகாரமும் வல்லமையும் நமக்கு கொடுத்தது ஏன்? தயவு செய்து சிந்தியுங்கள். பல கிறிஸ்தவர்கள் கொண்டாடும் கிறிஸ்மஸ் பண்டிகை நாட்களில் தரித்திர கிறிஸ்தவர்களுக்கு உடையும், உணவும், பணமும் கொடுக்கிறார்களே. ஏன்? எருசலேமில் உள்ள தரித்திரர்களுக்காய் பவுல் தர்மப்பணம் சேகரித்தாரே. ஏன்? மத் 26:11ல் இயேசு சொன்னபடி நம்மோடு இருக்கும் கிறிஸ்தவ தரித்திரர்கள் தரித்திரர்களாய் இல்லாமல் ஜீவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தானே! ஏழைக்கு இரங்குகிறவனுக்கு கடனாளியாகவே கர்த்தர் மாறுகிறார் என்றால். ஏழ்மை மாற வேண்டும் என்பதில் கர்த்தருக்கு எவ்வளவு அக்கறை பாருங்கள்! (நீதி 19:17). இது தானே தேவ சித்தம்! இப்படிப்பட்டதான பிதாவின் சித்தப்படி செய்பவனே பரலோகம் போவான்; மற்றப்படி அவரின் சித்தத்தை மறுதலிக்கிறவன் அல்ல (மத் 7:21). செழிப்பைத் திருடுபவன் பிசாசு; வறுமையிலே கொல்பவன் பிசாசு; தரித்திரத்தாலே பரம்பரையை அழிப்பவன் பிசாசு. இந்த வேலையை தேவன் செய்வாரா? இஸ்ரேலின் அடிமைத்தளையை அறுத்தவர் அவரல்லவா! பஞ்சகாலத்தில் இஸ்ரேல் மக்கள் மடிந்துவிடக்

கூடாது என்பதற்காகத்தானே யோசேப்பை முன்னமே எகிப்துக்கு அனுப்பி வைத்தார்! (ஆதி 50:20) நீதி 22:4; 10:22; ஏசா 25:4; 41:17,18 போன்ற பல வசனங்களின் மூலம் தேவசித்தத்தை அறிந்தும், தேவன் ஏழ்மையை உங்களுக்கு அளித்தால் கரம் நீட்டிப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லிக் கொடுப்பது எவ்வளவு பெரிய கள்ள உபதேசம்! எவ்வளவு பெரிய தேவ துரோகம்! அறியாமையினாலே பலர், சில வசனத்தை எடுத்துக் கொண்டு ‘‘தனவானையும் தரித்திரனையும் உண்டாக்கினவர் கர்த்தர்'' என்று ஊர்ஜிதப் படுத்துகிறார்கள். இன்னும் காலம் போகப் போக பாவியையும் நீதிமானையும் உண்டாக்கினவர் கர்த்தர் என்றே சொல்லிவிடுவார்கள். படைப்பின் பணியை தேவன் 7ம் நாளே நிறுத்திவிட்டார். அப்படியிருக்க ஆதாமுக்குப்பிறகு மனிதர்களை உருவாக்கியது யார்? தேவனா? அல்ல. ஆதி 1:28ன்படி மனிதனை உருவாக்க நமக்குத்தான் தேவன் சக்தியையும் அதிகாரத்தையும் கொடுத்துள்ளார். பாவசாயலான மனிதனின் சக்தி நாளுக்கு நாள் குறைந்தே வருவதை கண்கூடாய்க் காண்கிறோம். <u>**உலகிலே 3 சக்திகள் உள்ளன.**</u> 1) தேவ சக்தி, 2) பிசாசின் சக்தி, 3) மனித சக்தி. மனிதன் தனது உற்பத்தி செய்யும் பணியிலே தன் சக்திக்கு துணை நாடி, தேவன் பக்கமும் சாயலாம்; பிசாசு இருக்கும் பக்கமும் சாயலாம். தேவன் பக்கம் சாயும் போது பிறக்கும் பிள்ளை நன்மையானதாய் இருக்கும் (யாக் 1:17; 1கொரி 7:14) உடல் ஊனமுற்றவனுக்குப் பிறந்தாலும் குறைவோடு இராது; தரித்திரனுக்குப் பிறந்தாலும் அதிலே நில்லாது. பிசாசுக்குப் பிறந்தாலோ குறைவோடும் இருக்கலாம். நிறைவோடும் இருக்கலாம். இப்படிப் பிறந்தவனையும் தேவன் மாற்றலாம் (யோ 9:2) சாராள் இஸ்மவேலைப் பெற வைத்தது இப்படித்தான் (ஆதி 16:2) பிறக்கும் குழந்தை கெட்ட வழியில் பிறந்தாலும், நல்ல வழியில் பிறந்தாலும் அவைகளுக்கு சுவாசம் கொடுப்பவர் தேவன் (யோபு 33:4). ஏனெனில் அவர் விரும்பவதெல்லாம் ஏதோ ஒரு வழியில் அவருக்கென்று ஒரு கூட்டம் உருவாக வேண்டும் என்பது தான். இந்தக் கருத்தில் தான் “கர்த்தர் உண்டாக்கினார்'' என்று எழுதப்பட்டுள்ளது. அரசாங்கம் வீட்டுமனை இலவசமாய்க் கொடுக்க ஆணையிட்டாலும், இடத்தைப் பார்த்து சரி செய்து நல்ல படியாய் ஒதுக்கிக் கொடுப்பது அந்த ஊர் கலெக்டரும், எம்.எல்.ஏ, எம்பிக்களும் தான். இவர்கள் சரியாய் ஒதுக்கீடு செய்தாலும், செய்யாவிட்டாலும் பாடும் பழியும் சர்க்கார் மேல் தான் விழுகிறது. இவர்கள் மேலில்லை. இப்படித்தான் கர்த்தர் மேல் பழி வருகிறது. எனவே தரித்திரனைப் படைப்பதோ, அல்லது தரித்திரத்திலேயே நிற்கவைப்பதோ தேவசித்தமல்ல என்று அறிகிறோம். தரித்திரம் மாற வேண்டும் என்பதே தேவசித்தம்.

எனவே சகோதரர்களே! ஏழ்மையாகவே இருக்க வேண்டுமென்பது தேவ சித்தமல்ல; ஏழ்மையிலிருந்து விடுதலையாக்குவதே தேவ சித்தம். பாவிகளின் சொத்து நீதிமானுக்கே என்பது தேவனின் திட்டமல்லவா! (நீதி 13:22) இப்படியிருக்க நீதிமான்களாக்கப்பட்ட தரித்திரன் எப்படி கடைசி வரை ஏழ்மையிலேயே இருப்பான்? கொடுங்கள்; அதுவும் உற்சாகமாய்க் கொடுங்கள் என்று ஏழ்மையிலுள்ள விசுவாசிகளுக்கு உதவ தேவன் அநேகமுறை சொல்லியிருக்கிறாரே. அதன் பொருள் என்ன? ஏழ்மை மாற வேண்டும் என்பது தானே! தம்முடைய மகிமையினாலும் காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவு இல்லாதவரைக்கும், உலக ஜீவனுக்கு வேண்டிய யாவற்றையும் பெறவே முடியாது (2பேது 1:3) உண்ணவும் உடுக்கவும் போதுமென்றிருப்பதே ஏழ்மையற்ற வாழ்வு (1தீமோ 6:8) உலக ஐஸ்வரியவானாக இருப்பவனுக்கு இந்த எண்ணம் இராது. இவன் ஐஸ்வர்ய ஆசையுடையவனாயிற்றே! பரலோகம் இவனுக்கில்லை. போதும் என்ற மனதோடே கூடிய ஐஸ்வரியவானாய், சீமான் ஆபிரகாம் போல வசனத்தை விசுவாசித்து ஏழ்மையிலிருந்து விடுதலையாகி தேவ சித்தத்தை அனுபவிப்போம்! ஆமென்!

❖ ❖ ❖

# பலிகளைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்

இயேசு நமக்காய்ப் பலியானார் என்பதும் பழைய ஏற்பாட்டில் தகனபலி, போஜனபலி சமாதான பலி, பாவ நிவாரண பலி, குற்ற நிவாரண பலி போன்ற 5 விதமான பலிகளும் படைக்கப்பட்டன என்பதும் கிறிஸ்தவர்களுக்கு தெரிகிறது. ஆனால் "இந்த 5 பலிகளும் ஏன் செலுத்தப்பட்டன? இவைகளுக்கும் இயேசுவின் பலிக்கும் சம்பந்தம் எப்படி? இவைகள் நம் வாழ்வில் என்ன பங்கு வகிக்கின்றன?" என்று பெரும்பாலோனோர் சிந்திப்பதில்லை. இந்தப் பலிமுறைகள் லேவியராகமத்தில் உள்ளதால் அந்தப் புத்தகம் யூதமத சடங்காச்சார புத்தகம் என்று எண்ணி அதைப் பலர் படிப்பதில்லை. புதிய ஏற்பாட்டில் உள்ள எபிரேயர் நிருபமே இந்த லேவியராகமத்தின் விளக்கம் என்று பலருக்குப் புரியவில்லை. இந்தப் பலி முறைகளைப் பற்றி ஆவியானவர் நமக்கு விளக்குவாராக! பலி என்பது கிறிஸ்துவுக்கு முன் மாதிரியாய் இருப்பதால், அந்த மாதிரிக்கு ஏற்காதவைகள் பலியிடக் கூடாது.

மற்றவைகளை - அடித்துத் தின்பவைகளையோ, பிணம் தின்பவைகளையோ, வீட்டுவளர்ப்பு இல்லாதவைகளையோ - பலியிட்டால் அது ஏசா 53:7க்கு மாறாய்ப் போய்விடும்.

**சர்வாங்க தகனபலி**: பணக்காரர்கள், மந்தையிலிருந்தும், நடுத்தர மக்கள் பண்ணையிலிருந்தும், பலிப்பொருள்களை கொண்டு வரலாம். ஏழைகள் காட்டுப் புறாவையோ, புறாக்குஞ்சுகளையோ கொண்டு வரலாம். ஆடோ, மாடோ எதுவானாலும் ஆணாய்த்தான் இருக்க வேண்டும். அப்பழுக்கற்ற, குறைவற்றவை தேவை (See மல் 1:8) பிரகாரத்தின் வட பகுதியிலுள்ள பலிபீடத்தினருகில் நின்று பலி செலுத்துபவன் பலமாய் பலி பொருளின் தலையின் மேல் அழுத்திப் பிடிப்பான். இதன் பொருள் பலிமிருகமும் பலியிடுகிறவனும் ஒன்று என்பதாகும். மிருகத்தின் மரணம் தனக்கே உரியது என அறிக்கையிடுவதாகும். பலியான மிருகம் தோலுரிக்கப்பட்டு, பின் அதன் உடல் சந்து சந்தாக துண்டிக்கப்பட வேண்டும்; குடல்களும் தொடைகளும் கழுவப்பட வேண்டும். தகன பலிபீடத்தின் மேல் வைத்து அக்கினியால் தகனிக்கப்படும். எனவே இது சாவாங்க தகனபலி எனப்பட்டது. இரத்தமெல்லாம் பலிபீடத்தைச் சுற்றி ஆசாரியன் தெளிப்பான். தகனிப்புக்கு முன் மிருகம் கூறு போடப்பட்டது. அவயவங்களில் பழுது உண்டோ; எல்லாப் பகுதியிலும் பரிபூரணமோ என்று நிரூபிக்கவாகும். (லேவி 1:1-7) இந்த தகன பலி பாவத்துக்கென்று உள்ள பலியல்ல. கிறிஸ்துவின் சிலுவைப் பலி இதற்கு மாதிரியாய் இருக்கிறது என்று எபே 5:2 (English Version) மூலம் அறியலாம். தகனபலி பலி பீடத்தில் எப்படி "சுகந்த வாசைன" பலியாக விளங்கியதோ அப்படியே கிறிஸ்துவும் ஆகிவிட்டார். இந்த கிறிஸ்துவின் பலியோடு நாமும் பலியாகியிருக்கிறோம் என்று கலா 2:20 சொல்கின்றது. அதனால் பலியான கிறிஸ்துவோடு நமது மாம்சமும் மாம்சீக இச்சைகளும் அறையப்பட்டுள்ளன (கலா 5:24) இந்த தகனபலிக்கு மாதிரியாகத்தான் நம்மை முழுவதுமாக ஜீவபலியாய் ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று ரோ 12:1 சொல்கின்றது. தனிப்பட்டவர்கள் தனித்தனியாய் பலி செலுத்தினாலும். இஸ்ரேல் மக்களின் முழு குடும்பத்துக்காய் தினந்தோறும் ஆசாரியன் காலையிலும் மாலையிலும் இடைவிடாமல் சணல் அங்கி தரித்து, கர்த்தருக்கென்று அர்ப்பணித்து பலியிடுவான். இந்த தொடர் தகனபலி. கிறிஸ்து நமக்காய் இடைவிடாத தகன பலியாயிருக்கிறார் என்பதற்கு மாதிரியாய் உள்ளது. அது போலவே நாமும் தொடர்ந்து நம்மை தகனபலியாக அர்ப்பணம் செய்ய வேண்டும் என்பதையும் இது உணர்த்துகிறது.

<u>போஜனபலி</u> (லேவி 2:1-16): இதனை தகனபலியோடு சேர்த்துப் பலியிட வேண்டும். அப்போதுதான் தகனபலி சுகந்த வாசனைப் பலியாய் மாறும், போஜனபலியானது கஷ்டப்பட்டு சம்பாதித்த, விலைமிக்க கோதுமை மணியோடும், ஒலிவமரத்திலிருந்து தயாரிக்கப்பட்ட ஒலிவ எண்ணெயோடும், கெட்டுப் போகாது பாதுகாக்கும் உப்போடும், வாசனையைக் கொடுக்கும் தூபவர்க்கத்தோடும் இணைந்ததாகும். இது புளிப்பில்லாத மெல்லியமாவாகவும், புளிப்பில்லாத அதிரசம் அல்லது அடையாகவும், நெருப்பிலே வாட்டிய அல்லது வறுக்கப்பட்ட கதிராகவும், தானியமாகவும் இருக்கலாம்.

போஜன பலியில் ஓர் கையளவு ஆசாரியன் எடுத்து தகனிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பலியின் மேல் போடுவான். மீந்ததை ஆசாரியன் மட்டும் புசிப்பான். கோதுமை மணியான இயேசு கல்வாரி மலையில் அடித்து நொறுக்கப்பட்டார்; மாவானார்; பரிசுத்த ஆவி எனும் எண்ணெயுடன் கலந்திருந்தார். அழிவின்மை என்னும் உப்பால் சாரமேற்றப்பட்டார்; பரிசுத்த ஜீவனாகிய தூபவர்க்கத்தோடே படைக்கப்பட்டார். படைக்கப்பட்ட போது அவரே ஜீவ அப்பமானார். தகனபலி, நமது சரீரத்தின் பிரதிஷ்டையை அர்த்தப்படுத்துகிறது. போஜனபலியோ, அத்தோடு நில்லாமல், நமது உழைப்பின் பலனையும் (உடல் உழைப்பு மட்டுமல்ல; ஆவிக்குரிய ஊழிய உழைப்பும் கூட) கர்த்தருக்கு பிரதிஷ்டை செய்ய வேண்டியதை அர்த்தப்படுத்துகிறது.

<u>சமாதான பலி</u>: (லேவி 3:1-17) மந்தையிலிருந்தோ பண்ணையிலிருந்தோ கொண்டு வரப்படும் வீட்டு வளர்ப்பு மிருகமானாலும் அது ஆணாகவோ பெண்ணாகவோ அப்பழுக்கில்லாமல் இருக்க வேண்டும். பலிபீடத்தண்டை பலியிடுகிறவன் பலியின் தலை மேல் தன் கையை வைத்து அதைக் கொல்லுவான். அதின் கொழுப்பு, சிறுநீரகம் மற்றும் பிட்டத்துடை தகனிக்கப்படும். மார்க்கண்டம் அசைவாட்டப்பட்டு பிரதான ஆசாரியனுக்கும், முன்னந்தொடை படைக்கப்பட்டு, வழிபாட்டு ஆசாரியனுக்கும் மீந்த பகுதி பலி செலுத்தபவனுக்கும் சொந்தம். ஸ்தோத்திர - நன்றி பலி, பொருத்தனைப் பலி என்று இருவகை உண்டு. ஸ்தோத்திர பலியின் மாம்சம் அன்றே சாப்பிட்டாக வேண்டும்; மற்றதையோ மறுநாள் வரை வைத்து சாப்பிடலாம். 3ம் நாள் புசிக்கலாகாது. இவ்விருந்துண்ணல் (உபா 12:5-12) பிரகாரத்திற்குள்ளேயன்றி வேறெங்கும் செய்யக்கூடாது. பலி செலுத்துபவன் தேவனோடு ஒப்புரவாகி விட்டதை வெளிக்காட்டும் ஒப்புரவாக்கப்படுதலின் பலி இது. கிறிஸ்து நமது சமாதான பலியா யிருப்பதால், நாம் தேவனோடு அவராலே ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம் என்பது மட்டுமல்ல தம்மையே மெய்யான போஜனமாக்கி விருந்துண்ண

அவர் தந்த படியால் (யோ 6:53-56; மத் 26:26-29; 1கொரி 11:23-26) சமாதான பலி செலுத்துதல் நிஜவுருவில் கர்த்தருடைய பந்தியில் நிறைவேறுகிறது.

மேற்சொன்ன மூன்று பலிகளும் விரும்பிச் செய்வதாகும். (Voluntary) ஆனால் கீழ்வரும் பலிகள் ஒவ்வொரு ஆண்டும் கட்டாயமாய் (Compulsory) செய்ய வேண்டியவை. தேவனுக்கு விரோதமாய் செய்யப்பட்ட பாவங்களுக்காய் பாவ நிவாரண பலியும் மனிதனுக்கு விரோதமாய் செய்யப்பட்ட பாவங்களுக்காய் குற்ற நிவாரணபலியும் செலுத்தப்பட வேண்டும்.

<u>பாவ நிவாரண பலி</u>: (லேவி 4:1-35) ஆசாரியனுக்காகவும் சபையாருக்காகவும் பலியிட ஓர் பழுதற்ற இளங்காளையை பலியிட வேண்டும். இதில் சிந்தப்படும் இரத்தத்தை விரலினால், பரிசுத்த ஸ்தல திரைக்கு எதிரே ஏழுதரம் ஆசாரியன் தெளிப்பான். பின் சுகந்த தூப பீட கொம்புகளில் பூசுவான். மீதியை தகன பலிபீட அடியில் ஊற்றுவான். பலி தோலுரிக்கப்பட்டு, கொழுப்பு, சிறுநீரகம், ஜவ்வு இவைகளை தகனிக்க வேண்டும். பிரபுக்களுக்காக பலியிட பழுதற்ற வெள்ளாட்டுக் கிடாவும், சாதாரண மனுஷனுக்கு பலியிட வெள்ளாட்டுப் பெண்குட்டியும் பலியிட்டு இரத்தத்தை தகனபலிபீட கொம்புகளில் பூச வேண்டும். மீதியை பீட அடியில் ஊற்ற வேண்டும். கொழுப்பை தகனித்து விட்டு, பரிசுத்தமானதாய் கருதப்பட்ட மீதமுள்ள பகுதியை ஆசாரியர்கள் பிரகாரத்தில் வேக வைத்து சாப்பிட்டார்கள். பாவத்தின் பிராயச்சித்த பலியாக நகரத்துக்குப் புறம்பே கல்வாரிமேல் தம்முடைய இரத்தத்தை சிந்திய இயேசுவையே இந்த பலிமுறை எடுத்துக் காட்டுகிறது.

<u>குற்ற நிவாரண பலி:</u> (லேவி 5:1-7) ஆடுகளில் ஒரு பெண் குட்டியையோ அல்லது இரண்டு காட்டுப் புறாவையோ (புறாக்குஞ்சுக்குள்) அல்லது 3 measure அளவான மாவிலே 10ல் 1 பங்கை கொண்டு வரலாம். புறாக்களில் ஒன்றை பாவ நிவாரண பலியாகவும் மற்றொன்றை சர்வாங்க தகனபலியாகவும் படைக்கலாம். எண்ணெயோ தூபவர்க்கமோ இல்லாமாவை பாவ நிவாரண பலியாக படைக்கலாம். குற்ற நிவாரணபலியின் உட்கருத்து யாதெனில் ஒருவன் இன்னொருவனை நோகப் பண்ணும்படி தப்பிதம் செய்திருந்தால், அதை சரி செய்து சீர்படுத்தி அவன் தன்னால் முடிந்தவரை முயற்சி எடுக்க வேண்டும். தேவைப்பட்டால் இழப்பை ஈடுகட்டும் பணியில் அதனைத் திரும்பச் செலுத்தவும் வேண்டும். இப்படித்தான் சகேயுவும் அறிக்கையிட்டான் (லூக்).

❖ ❖ ❖

# பழைய ஏற்பாட்டுப் பண்டிகைகள் நமக்கு சொல்லும் உண்மைகள்

லேவி 23ம் அதிகாரத்தில், வாராவாரம் ஆசரிக்கும் சனிக்கிழமையாகிய ஓய்வு நாள் பண்டிகை அல்லாமல் வேறு 7 பண்டிகைகள் சொல்லப்பட்டுள்ளன. இந்த ஓய்வு நாள் பண்டிகை சரீர இளைப்பாறுதலுக்காய் இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்டது (உபா 5:15). மத் 11:28,29ன்படி இயேசு கிறிஸ்து நமது ஆத்மாவுக்கே இளைப்பாறுதல் கொடுத்துவிட்டதால் அதை விசுவாசிக்கும் போது சனிக்கிழமையாகிய ஓய்வு நாள் ஆசரிப்புப் பண்டிகை நமக்கு தேவையில்லை. இஸ்ரவேலர்களின் முதல் மாதம் மூன்று பண்டிகைகளும், 3வது மாதம் 4வது பண்டிகையும், 7வது மாதம் கடைசி 3 பண்டிகைகளும் கொண்டாடப்படுகின்றன. 3வது மாதத்திற்கும், 7வது மாதத்திற்கும் இடைவெளி ஏன்? அதில் நடப்பது ஏன்?

எகிப்திலே நிசான் மாதம் (முதல் மாதம்) ஆசரித்த பஸ்காவின் தொடர்ச்சியாய் அதே நாளில் இஸ்ரேலர்கள் பஸ்கா பண்டிகையை ஆசரித்தார்கள். (யாத் 12:13) இது சிலுவை மரணத்துக்கு நிழலாட்டம் (1கொரி 5:7). அதே நாளில், பஸ்கா ஆடு வெட்டப்படும். அதே நேரத்தில் இயேசு மரித்தார். அடுத்த நாளிலிருந்து 7 நாட்களுக்கு புளிப்பில்லாத அப்பப்பண்டிகை உண்டு. பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டார் என்று விசுவாசிப்போர் இயேசு கட்டளையிட்டபடி துர்க்குணம், பொல்லாப்பு ஆகிய புளித்த மாவை விட்டுவிட்டு, அவருடைய சரீரத்தையும் மரணத்தையும் நினைவுகூரும்படி நிஜமாய் போஜனம் பண்ணுவார்கள் (1கொரி 5:7,8) இதையே நாம் செய்கிறோம். மூன்றாவது முதற்பலன் பண்டிகை. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானதின் (1கொரி 15:20) நிழலாட்டப் பண்டிகை இது. நான்காவது பெந்தகொஸ்தே பண்டிகை. பெந்தகொஸ்தே என்றால் 50 நாள் என்று பொருள். அதாவது பஸ்கா பண்டிகைக்குப் பின்வரும் ஓய்வு நாளிலிருந்து 7 ஓய்வு நாள் கடந்து வரும் அடுத்த நாளில் இது கொண்டாடப்படும். அன்று இரு புளிப்புள்ள அப்பங்கள் அசைவாட்டப்படும். ஒரு அப்பம் இஸ்ரவேலரையும் மற்றொன்று புறஜாதியாரையும் குறிக்கிறது. இருதிறத்தாரும் இணைந்து சபையாய் கிறிஸ்துவுக்கு முன் நிற்பதாகும். இந்தப் பணியை செய்வதற்கே ஆவியானவர் அன்று பூமிக்கு வந்தார். கிறிஸ்தவ சபையும் உருவாயிற்று. யோவேல் 2:28,29 அப்போது நிறைவேற வேண்டும். இஸ்ரேலர் இயேசுவை ஒதுக்கியதால், பேதுரு பின்மாரி

பொழிந்தது என்று சபைக்காய் அந்த வாக்குத்தத்தத்தை எடுத்துக் கொண்டு செய்தி கொடுத்தார் (அப் 2). ஆனாலும் யோவேல் சொன்னது இஸ்ரேலருக்கு ஒரு நாள் நிறைவேறத்தான் போகிறது. ஆமென்.

3 மாத இடைவெளிக்குப் பின் எக்காளப் பண்டிகை 7வது மாதம் வருகிறது. இப்பண்டிகை மத் 24:31ல் சொல்வது நிறைவேறுவதாகும்; எசே 37ல் சொல்லப்பபட்ட உலர்ந்த எலும்புகள் உயிர்பெற்று இணைவதாகும். பல பகுதிகளில் உள்ள இஸ்ரேலர்களை கூட்டிச் சேர்க்கப்படுதலாகும். மோசே, நெகேமியா காலத்தில் இஸ்ரேலரை கூட்டிச் சேர்க்கவும், புறப்படப் பண்ணவுமே, எக்காளம் ஊதப்பட்டது என்பதை அறிந்து கொள்க. எக்காளப் பண்டிகை, நீண்ட இடைவெளிக்குப் பின் நடப்பதால் இந்த இடைவெளியில் என்ன நடக்கும்? இதை அறியும் முன்னே, இப்படி இஸ்ரேலர்கள் சேர்க்கப்படுவது தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தப்படி (ஆதி 15:18-21) அவர்களுக்கு தேசத்தை கொடுப்பதற்கே என்பதை உணர்வோம். அதே மாதம் 10ம் தேதி பாவ நிவாரண நாள் பண்டிகை. இயேசுவை கொன்ற பாவத்திற்கு நிவாரணம் (சக 12:10-14; 13:6-9; ரோ 1:26; அப் 15:17) கூட்டிச் சேர்க்கப்பட்ட இஸ்ரேலர், பாவ நிவாரணம் பெற்ற உடனே, அவர்களுக்கான தேசத்தைக் கொடுக்கப் போவதற்கான நிழலாட்டப் பண்டிகைதான் கடைசி கூடாரப் பண்டிகை. இப்போதுதான் 1000 வருட அரசாட்சி ஆரம்பம்.

பெந்தகொஸ்தெ பண்டிகைக்குப் பிறகு இஸ்ரேலர் கூட்டிச் சேர்க்கப்படுவதற்கு நிழலாட்டமான எக்காளப் பண்டிகைக்கு இடையில் உள்ள காலம் சபையின் காலம். இது கிறிஸ்தவர்களுக்காய் தேவன் வைத்துள்ள காலம். பண்டிகைகள் எல்லாமே இஸ்ரேலர்களுக்குத்தான். ஆனால் இயேசு கிறிஸ்துவினால் புறஜாதிகளாகிய நாம் இரட்சிக்கப்பட்டதால், இரட்சிப்பு நமக்கு வந்து நாம் சபையில் அங்கம் வகிக்கும் வரைக்கான, நிழலாட்டப் பண்டிகைகளாகிய முதல் 4 பண்டிகைகளையும் நமக்கென்று நாம் விசுவாசித்து எடுத்துக் கொள்கிறோம். இது விசுவாசத்தால் வந்தது. சபை ஆரம்பிக்க நிழலாட்டமான 4வது பண்டிகைக்ககுப் பின் சபை உலகெங்கும் பரவுகிறது. 1தெச 4:16-18; 1கொரி 5:51ன் படி இந்த சபை பூரணப்படுத்தப்பட்டு இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படும். இதற்குத்தான் இஸ்ரேலரின் பண்டிகையிலே இடைவெளி. நாம் எடுத்துக் கொள்ளப்பட்ட பின் வரப்போகும் அந்தி கிறிஸ்துவின் ஆட்சியில்தான் இஸ்ரேலர் கூட்டிச் சேர்க்கப்படுதல்; மேசியா நம்மோடு ஒலிவ மலையில் இறங்கி வரும்போது இஸ்ரேலர் பாவ நிவாரணம் பெறல்; பின் தங்கள் தேசத்தைப் பெற்று 1000 வருஷம் அவர்கள் ஆளுதல், நாமோ மீதி

உலகையே ஆளப்போகிறோம். ஆமென். காலம் கடைசி காலமாயிருப்பதால் இரகசியமாய் வைக்கப்பட்டு பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்ட, பெந்தகொஸ்தே நாளில் ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவ சபை, இரகசியமாகவே எடுத்துக் கொள்ளப்படப் போகிறது. ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

# நகையணிதல் புறஜாதிகள் வழக்கமா?

உலகிலே மூன்றுவித மக்கள் உள்ளனர்.

1. தேவனுடைய கிறிஸ்தவ சபையார்
2. இஸ்ரவேலர்
3. புறஜாதியார் (1கொரி- 10:33)

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் சபை கட்டப்படாததற்கு முன்பு இஸ்ரவேலர், புறஜாதிகள் ஆகிய இரு பகுதியினர் தான் இருந்தனர். யாக்கோபுக்கும் முன்னால், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகள், மற்ற புறஜாதிகள் மக்கள் என்று இருபிரிவினர் இருந்தனர். ஆக எல்லாக்காலத்திலும் தேவனுடைய பிள்ளைகளும் இருந்திருக்கிறார்கள்; மற்றவர்களும் இருந்திருக்கிறார்கள். நகையணிவது புறஜாதிகள் வழக்கமா என்பதை ஆதியாகமத்தியிலிருந்தே ஆராய்ந்து பார்த்தால் பல உண்மைகள் வெளிப்படும். பல ஆவிக்குரிய சபைகள் பொன், வெள்ளி என்றாலே பாவம் என்று எண்ணுகின்றனர். முதலில் பொன்னும் வெள்ளியும் பாவமான பொருளா என்று பார்ப்போம். ஏதேனிலிருந்து ஓடும் நதியிலிருந்து பிரிந்த பைசோன் என்ற ஆறு, ஆவிலா தேசம் முழுவதும் பாயுமாம். அந்த தேசம் பொன் விளையும் பூமியாம். அந்த தேசத்தின் பொன் நல்லதாம் (ஆதி 2:11,12) ஆக, படைப்பிலேயே பொன்னைப் படைத்து, அது நல்லது என்று தேவன் கண்டார். மட்டுமல்ல பரம எருசலேமிலும் பொன் வீதி உண்டாம். பொன்னானது பாவமான ஒன்று என்றால் அது பரலோகில் இருக்க முடியாதல்லவா! (வெளி 21:18-21) ஆசரிப்புக் கூடாரத்தில் கேரூபீன்கள், மேஜை, குத்துவிளக்கு, ஆசாரியனின் வஸ்திரம், எல்லாமே பொன்னால் இணைக்கப்பட்டவை யாயிருந்தது. (யாத் 25:18,19; 37:7,8; 25:23-29; 37:10-16; 25:31-39; 28:5-36; 39:2-31). சகல பொன்னும், கர்த்தருக்கு பரிசுத்தமானவை என்று யோசு 6:19 சொல்கிறது. பொன்னையும், வெள்ளியையும்

கர்த்தருக்கு காணிக்கையாகக் கொடுக்க வேண்டும் என்று தேவனே கட்டளையிட்டிருக்கிறார் (எண் 31:50,51; எண் 35:22; யோசு 22:8) தற்கால ஆவிக்குரிய சபை ஊழியர் கூட பொன், வெள்ளிகளைக் காணிக்கையாக கேட்கிறார்கள் அல்லவா! காணிக்கைக்குப் போகிற பொருள் பாவமானதாயிருக்குமா பரிசுத்தமுள்ளதாயிருக்குமா என்று நீங்கள் சிந்தியுங்கள். விசுவாச மார்க்கத்தின் தகப்பனான ஆபிரகாமுக்கு தேவனே வெள்ளியும் பொன்னும் கொடுத்திருக்கிறார். (ஆதி 24:35; 13:2). தேவனின் இருதயத்துக்கு ஏற்றவனான தாவீது ஒரு லட்சம் தாலந்து பொன்னை ஆலயம் கட்ட சேர்த்து வைத்திருந்தான் (1நாளா 22:14) சாலமோன் ராஜாவுக்கு ஒவ்வொரு வருஷமும் வரும் வெகுமதி 66 தாலந்து நிறை பொன்னாகும் (2நாளா 9:13; 1ராஜா 10:15) ஆக வேதத்தின்படி பொன் பாவமான ஒன்றல்ல என்றும், தேவன் ஏற்றுக் கொண்டது என்றும் அறிகிறோம்.

இந்தப் பொன்னை ஆபரணமாக தேவனுடைய பிள்ளைகள் அணிந்தார்களா? அல்லது நகையணிவது புறஜாதியார் பழக்கமா? இது கேள்வி. விசுவாச மார்க்கத்தின் தகப்பனான ஆபிரகாம் மகன் ஈசாக்குக்குப் பெண் பார்க்கப் போகும் போது எலியேசர், ரெபேக்காளுக்கு எஜமான் கொடுத்தனுப்பிய பொற்காதணியையும், பொன் கடகங்களையும் கொடுத்தான். அவளும் தரித்துக் கொண்டாள் (ஆதி 24:22.30) இது புறஜாதியாரின் வழக்கம் என்றால், தேவனின் சொல்லை மட்டுமே விசுவாசித்து, போகுமிடம் இன்னதென்று அறியாமலே புறப்பட்டு வந்த ஆபிரகாம் இப்படிச் செய்யச் சம்மதிப்பானா? நகையணிவது புறஜாதியார் வழக்கம் என்றால், எகிப்திலிருந்து புறப்பட்டு வந்த மக்கள் பொன்னணிகளை அணிந்து வர மோசே எப்படி சம்மதித்திருப்பான்? தேவனும் எப்படி அணியச் சொல்லியிருப்பார்? (யாத் 3:22). செங்கடல் தாண்டி சீனாய் மலை அருகில் வரும்போது இந்த பொன்னணிகளைத்தானே ஆரோன் கழற்றித் தரச் சொல்லி, கன்றுக்குட்டியை வார்த்தான் (யாத் 32:2,3) இஸ்ரேல் மக்கள் தங்களிடமிருந்து அஸ்திகடங்கள் (வளையல்கள்) காதணிகள், மோதிரங்கள், ஆரங்கள் (செயின்கள்) போன்றவற்றை மோசே கேட்டுக் கொண்டதினிமித்தம் தேவனுக்கென்று கொடுத்தார்கள் என்று யாத் 35:22 (See வச 5) சொல்வதால், நகைகள் அணிவது இஸ்ரேலர்களுக்கு வழக்கமாக இருந்தது என அறியலாம். சவுல் மரித்தபின் தாவீது பாடிய பாட்டிலே, "இஸ்ரவேலின் குமாரத்திகளே, உங்களுக்கு இரத்தாம்பரத்தைச் சிறப்பாய் உடுப்பித்து, உங்கள் உடையின் மேல் பொன்னாபரணங்களைத் திரிப்பித்த சவுலுக்காக அழுது புலம்புங்கள்" (2சாமு 1:24) என்று பாடியதால் ஆபரணங்கள்

அணிவது தேவ பிள்ளைகளின் பழக்கம் என அறிகிறோம். மனக்கண் திறக்கப்பட்ட யோபு, இரட்டத்தனையாய் தேவன் ஆசீர்வதித்த வேளையில் அவனுடைய உற்றார், உறவினர், நண்பர்கள் வந்து தங்கக்காசையும், பொன் ஆபரணங்களையும் பரிசாய்க் கொடுக்கும்போது, இது புறஜாதியார் வழக்கம் என்று கூறி அவன் மறுதலிக்கவில்லையல்லவா! (யோபு 42:11) கெட்ட குமாரன் கதையில் கூட தந்தை மகனுக்கு அன்போடு மோதிரம் போட்டான் என்று இயேசுவே சொல்வதால் இது நிச்சயமாய் புறஜாதியார் வழக்கமாய் இருக்க முடியாது. யோவான், இயேசுவை தரிசனத்திலே காணும்போது கூட, அவர் ஏழு பொன் குத்து விளக்குகளின் மத்தியில் மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்ததைக் காண்கின்றான் (வெளி 1:13) இப்படி அணிவது புறஜாதியார் வழக்கமாயிருந்தால் இயேசு அப்படி தரிசனத்தில் காட்டப்படுவாரா? எந்த ஒரு பெண்ணும் தன் ஆபரணத்தை மறக்கவே மாட்டாள் என்றும் (எரே 2:32) மணவாளனும் மணவாட்டியும் ஆபரணங்களால் அலங்கரிப்பார்கள் என்றும் (ஏசா 61:10) தேவனே சொல்வதால், நகையணிதல் புறஜாதியார் மார்க்கமே அல்ல என அறிகிறோம்.

அப்படியானால் பொன் ஆபரணங்களை அணிந்து கொள்ள தேவன் அனுமதியளிக்கிறாரா? எகிப்திலிருந்து புறப்படும்போது அங்குள்ளவர்களிடத்தில் பொன், வெள்ளியுடைமைகள், வஸ்திரங்கள் எல்லாவற்றையும் கேட்டு வாங்குங்கள் என்று தேவன் சொன்னார். வாங்கினதோடு மட்டுமல்லாமல், அவைகளை தங்கள் குமாரர்களுக்கும் குமாரத்திகளுக்கும் தரிப்பிக்கும்படி கட்டளையிட்ட தேவனல்லவா இவர்! (யாத் 3:22; 11:2; 12:35,36) அப்படியானால் தேவ பிள்ளைகள் ஆபரணங்களை அணியலாமா? இது கேள்வி. எசே 16:11ஐ வாசியுங்கள். பொன், வெள்ளியுமான சிங்கார ஆபரணங்களை எடுத்து அதிலே ஆண் சுரூபங்களை உண்டாக்ககக்கூடாது என்று எச்சரிக்கிறார் (யாத் 20:23) இப்படிப்பட்ட பொன்னினால் ஆன தெய்வங்களைத் தான் ராகேல் திருடி மறைத்து வைத்தாள் (ஆதி 31:32) இப்படியான பொன் ஆபரணங்களைத்தான் கர்வாலிமரத்தின் கீழே யாக்கோபு புதைத்துப் போட்டான் (ஆதி 35:4) மற்றபடி நகைகளை அணியக் கூடாது என்று தேவன் எங்கும் சொல்லவில்லை. அப்படியானால் 1தீமோ 2:9,10; 1பேது 3:3ன் அர்த்தம் என்ன?

அழகுக்காகத்தான் ஆபரணங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபரணங்களையே அலங்காரமாய்க் கொண்டு, இதிலே மட்டுமே கவனம் செலுத்தி, சாந்தமும் அமைதலும் இல்லாதிருந்தால் பிரயோஜனம் என்ன? நாணமும், தெளிந்த புத்தியும், தேவ பக்திக்குரிய

நற்கிரியைகளும் இல்லாதிருந்தால் பிரயோஜனம் என்ன? புருஷர்களை நிரந்தரமாய் ஆதாயப்படுத்திக் கொள்ள தற்காலிக நகை, உடை அலங்காரத்தை மட்டுமே பயன்படுத்தாமல், என்றென்றும் நிரந்தர அலங்காரமான பரிசுத்த நடக்கைகளே தேவை என்று தேவன் விரும்புகிறார். அதனால் பொன்னாபரணங்கள் தேவையில்லையா? போஜனம் தேவைதான். ஆனால் போஜனப்பிரியனின் தொண்டையில் கத்தியை வைக்க வேண்டும். அவனும் குடிவெறியனும் ஒன்று (நீதி 23:2,20) அப்படியே பொருளும், ஐஸ்வரியமும், செழிப்பும் தேவைதான். (நீதி 22:4; 3யோ 2; சங் 1; 2கொரி 8:9) ஆனால் பொருளாசை விக்ரக ஆராதனைக்கு சமம் (எபேசி 5:5; கொலோ 3:5) பணம் எல்லாவற்றுக்கும் உதவும் தான். (பிர 10:19) ஆனால் பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேறாயிருக்கிறது. (1தீமோ 6:10) பெண் ஆணுக்கு எப்போதும் துணையாய், இணையாய் இருக்கிறாள். அவள் நிச்சயம் தேவைதான் ஒரு ஆணுக்கு. ஆனால் பெண்ணாசை, அதாவது காமவெறி, விக்கரக ஆராதனைக்குச் சமம். (எபே 5:5). இவைகளை வாசிக்கும் தேவ பிள்ளையே! இதனால் போஜனம் வேண்டாமா? பொருளும் ஐஸ்வரியமும் வேண்டாமா? பணம் வேண்டாமா? பெண் வேண்டாமா? வேண்டும், வேண்டும். அப்படிப் போல பொன் ஆபரணங்கள் தேவைதான்; ஆனால் பொன்னாசை தேவையில்லை. இதைத்தான், மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய மூன்றும் தேவை யில்லை என்று உலக வழக்கச்சொல் விளக்குகிறது.

தேவனுக்குச் சமமாய், தேவ வார்த்தைக்கு ஈடாய் அல்லது அதற்கு மேலாய் எதை வைத்தாலும் பாவமே! உலகிலுள்ள அத்தனைப் பொருட்களிலும் பொன்னும் வெள்ளியும் தான் விலையேறப்பெற்றது. இதனால் தான் நம்முடைய மீட்பைப் பற்றி பேதுரு எழுதும் போது நாம் இவைகளால் மீட்கப்படாமல் இவைகளிலும் விலையேறப்பெற்ற இயேசுவின் இரத்தத்தினாலே மீட்கப்பட்டோம் என்று 1பேது 1:18,19ல் எழுதியிருக்கிறார். இப்படிப்பட்டதான வெள்ளியும் பொன்னும் ஒருவனிடத்தில் ஆபரணமாய் இருக்கும் போது அது அவனை ஆண்டு கொள்ள எத்தணிக்கும். அதற்கு அவன் அடிமையாக நேரிடலாம். ஆனால் அழியாத தேவனின் வார்த்தை அவனிடம் இருக்கிறதை (மத் 24:35) அவன் ஆவியிலே விசுவாசித்து நடந்தானாகில் பொன்னும் வெள்ளியும் அவனுக்கு தடையே இல்லை. எப்படிப்பட்ட அலங்காரமானாலும் ரோ 14:21ல் சொல்லப்பட்டபடி உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது, பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால் அவைகளில் ஒன்றும் தேவையில்லை. சாட்சியுள்ள ஜீவியமே தேவனின் எதிர்பார்ப்பு! நகை அணியாமலே அதின் மேல்

அறியாத ஒரு நாட்டம் கொள்வதும், நகை அணிந்து கொண்டே பேராசைக்காரனாய்த் திகழ்வதும் தேவனின் பார்வையில் பாவமே! வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது மேல் என்பது போல, நகை போட்டுக் கொண்டோரின் நடக்கைகளும் தெய்வீகத்தன்மையோடு இருக்க வேண்டும்.

பலர் எண்ணுகிறார்கள், "கர்த்தருக்காய் நகையை கழற்றி விட்டேன்; வெள்ளை டிரஸ் அணிகிறேன்; அந்நிய பாஷை பேசுகிறேன்; மருந்து எடுப்பதில்லை. எனவே நான் கண்டிப்பாய் பரலோகம் போவேன்" என்று. நிச்சயமாய் போக முடியாது.

"வாரம் இருமுறை உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியமெல்லாம் தசமபாகம் கொடுக்கிறேன்; பாவிகளைப் போல் நானில்லை" (லூக் 1:12) என்ற பரிசேயனின் நிலைதான் இவர்கள் நிலை. மனிதன் முகத்தைப் பார்க்கிறான்; தேவனோ உன் உள்ளத்தைப் பார்க்கிறார். உன் வரங்களை வைத்தோ, ஊழியங்களை வைத்தோ, காணிக்கைகளை வைத்தோ உனக்கு பரலோகம் தரப்போவதில்லை. அவைகளெல்லாம் இம்மை வாழ்விற்கு ஆசீர்வாதமாயிருக்கலாம். வசனம் நிறைந்த உன் ஆவியின் கனியால் மாத்திரமே நீ பரலோகம் போவாய்! நகையணியாமல், விலையுயர்ந்த ஆடைகளை அணியாமல், (See நீதி 31:22) மருந்து எடுக்காமல், சரீர உபவாசம் அதிகம் நிறைந்த வாழ்க்கை வாழ்வதால், உன் மாம்சீகம் ஒரு வேளை ஒடுங்கலாம்; ஆவியின் வல்லமை பெருகலாம்; மற்றபடி வேறொன்றுமில்லை. தேவ பிள்ளையே! கல்யாணம் பண்ணுகிறது தவறில்லை; நல்லதுதான். ஆனால் கல்யாணம் இல்லாமல் வாழ்வது மிகவும் நல்லது. அப்படியே நகை போடுவது தவறில்லை; அது புறஜாதியார் வழக்கமும் இல்லை. ஆனால் போடாதிருப்பது மிகவும் நல்லது. பொன் பாவமல்ல. அது தேவன் படைத்தது. அதைப் பாவிக்கும் முறைதான் முக்கியமானது. தேவ நாமம் எவ்விதத்திலும் தூஷிக்கப்படாதபடி நடந்து கொள்ளுங்கள். முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது தேவனுக்கு - தேவனுடைய வார்த்தைகளுக்குத்தானே ஒழிய, அழிந்து போகிற துருப்பிடித்தப் போகிற பொன்னுக்கு அல்ல. அது உனக்கு விக்ரக மாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு! தேவன் உன்னை வாந்தி பண்ணிப் போட இடங்கொடாதே! "நகையிலே பைத்தியம்; உடையிலே பைத்தியம்" என்று நீண்ட நாட்களுக்கு முன் ஜஸ்டின் பிரபாகரன் என்னும் பக்தன் பாடினானே, ஞாபகம் இருக்கிறதா? இதன் பொருள் என்ன? உடை போடக்கூடாது என்றல்ல; உடையிலே பைத்தியம் கூடாது. நகை போடக்கூடாது என்றல்ல; நகையிலே பைத்தியம் கூடாது. நீங்களும் நானும் கிறிஸ்தவுக்குள்

மாத்திரமே பைத்தியமாய் இருக்க வேண்டும் (1கொரி 1) வெறும் கிறிஸ்தவர்களாய் இருக்கக் கூடாது. ஆவியானவர் தாமே இன்னும் விளக்குவாராக!

❖ ❖ ❖

# சபை மேய்ப்பர்கள் எப்படி இருக்க வேண்டும்?

தற்காலத்தில் பைபிள் எடுத்தவர்களெல்லாம் பாஸ்டர் என்கிறார்கள். ஏதோ பைபிள் ஸ்கூலில் படித்துவிட்டு, ஒன்றிரண்டு தேவ செய்திகளை வைத்துக் கொண்டு, பாட்டுத்திறமையை வைத்துக் கொண்டு, மியூசிக் திறமையை வைத்துக் கொண்டு, தம்மை பெரிய மேய்ப்பர் என்று எண்ணி வால்போஸ்டர் அடித்து ஊரெல்லாம் ஒட்டி பிரஸ்தாபப்படுத்தும் சுயவிளம்பரக்காரர்கள் ஏராளம். காணிக்கைக்காக கண்ட பாரம்பரிய சபையாரோடும் பழகி, தேவையானால் மாதமொரு முறை சென்னைக்கே வந்து அறுவடை செய்து, விசுவாச ஊழியம் என்று பிரஸ்தாபிக்கும் பாஸ்டர்கள் ஏராளம்; ஏராளம். இந்த நிலையில் சபை பாஸ்டருக்கான தனிப்பட்ட அடையாள முத்திரை என்ன என்று வேதத்தில் அறிவோம்.

சுவிசேஷம் பற்றிய அனுபவமோ தேவனைப் பற்றிய அறிவோ இல்லாத எவரும் பாஸ்டராகக் கூடாது (2கொரி 5:17; யோ 3:5; கலா 5:16-26). ஜலமாகிய வார்த்தையினால் ஆவியானவரைக் கொண்டு மறுபடியும் பிறந்திருக்க வேண்டும். அப் 1:8ன்படி பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டு, வல்லமையாய் சாட்சியுள்ள ஜீவியம் செய்ய வேண்டும். குடும்பம் என்ற ஒன்று இருந்தால் அதை நல்ல முறையில் நடத்த வேண்டும் (1தீமோ 3:4) வியாதியால் தோற்கடிக்கப்படாத அல்லது வியாதியே வராத தெய்வீக ஆரோக்கிய வாழ்வு வேண்டும். வறுமை, கடன் பிரச்சனை, குழந்தைப் பெருக்கம், குடும்ப பாரம் போன்றவைகளை ஜெயித்த நிலை வேண்டும். (சங் 91:15; 3யோ 2) எல்லாவற்றையும் விட்டுவிட்டு. கிறிஸ்துவையே பின்பற்றி, அவமானம் நிந்தைகள் வந்தாலும் பொருட்படுத்தாமல், வசனத்தையே பிடித்துக் கொண்டு இயேசுவை நோக்கியே ஓட வேண்டும் (மாற் 10:29; எபி 12:1). மாறுபாடுள்ள சந்ததியை விட்டு விலகியிருக்க வேண்டும் (அப் 2:40) அவர்கள் தேவன் வயிறாய் இருக்கக்கூடாது (பிலி 3:19) ஆவியின் கனி, நீதியின் கனி நிரம்பியிருக்க வேண்டும். இயேசுவைப் போல்

ஆக வேண்டும். பண ஆசை, பெண் ஆசை, மண் ஆசை கூடவே கூடாது (1தீமோ 6:10).

ஏதோ ஒரு பேராசையாலோ, சொந்த விருப்பத்தாலோ அல்லது மரியாதைக்காகவோ, அந்தஸ்துக்காகவோ, சுக போக வாழ்வுக்காகவோ பாஸ்டராகக் கூடாது. தெய்வீக அழைப்பு வேண்டும். (அப் 13:3; 1கொரி 12:28; எபே 4:11; ரோ 11:29) படிப்பு வரவில்லையென்றால் பாஸ்டர் வேலையா? உத்தியோகங்களிளெல்லாம் கனமானது பாஸ்டர் உத்தியோகமே! ஒவ்வொரு மேய்ப்பருக்கும் பரிசுத்த எண்ணங்கள், குறிக்கோள்கள், தரிசனங்கள் வேண்டும். தேவ சித்தம், தேவனின் மகிமை, இழந்து போன ஆத்துமாக்களின் இரட்சிப்பு, சபையின் மேல் அலாதி கரிசனை, பட்சபாதமில்லாமை போன்றவை தலையாய குணங்களாய் இருக்க வேண்டும். (லூக் 19:10; அப் 20:28; 2கொரி 5:14-21; எபே 4:12). தாழ்மையே வெற்றிக்கு முதல்படி, பொறுமையே விசவாசத்தின் வெளிப்பாடு, மனிதர்களின் போதனை, ஞானம், கவர்ச்சி, முயற்சி போன்றவைகள் அல்லாமல், தேவனால் மட்டுமே நடத்தப்பட வேண்டும் (அபிஷேகம் Anointing Direction) ஒவ்வொரு காரியத்துக்கும் தேவனுடைய அபிஷேகத்தையே சார்ந்து இருக்க வேண்டும் (லூக் 11:13; 24:49; யோ 7:37-39; 14:12-17; 26:15-26; அப் 1:4-8; 5:32; 1கொரி 2:1-10; 12:1-11; 2கொரி 3) உதவி ஒத்தாசை வரும் கன்மலையை நோக்கி பார்க்க வேண்டும். வெள்ளைக் காகத்தைத் தேடும் கருப்பு எலியாக்களாய் இருக்கக்கூடாது. நான் உலகத்தானல்ல என்பதை ஒவ்வொரு செயலிலும் வெளிக்காட்ட வேண்டும். தன்னுடைய மந்தைகளின் உலக வாழ்விலும், ஆவிக்குரிய வாழ்விலும் ஏற்படும் பிரச்சனைகளில் வேத அறிவுரை கொடுத்து எல்லாவிதத்திலும் உதவி செய்பவர்களாய் இருக்க வேண்டும் (அப் 20:26-35; பே 1:15-19; 3:13-21; 1தெச 2:4-13; 2தீமோ 4:1-5; 13:7,17).

மேய்ப்பனானவன் இயேசுவைப் போல் மாதிரியாய் இருக்க வேண்டும். மந்தையை தலைமையேற்று நடத்த வேண்டுமே ஒழிய, விரட்டக்கூடாது. ஆரோக்கியமான உபதேசங்களால் போஷிக்க வேண்டுமே, ஒழிய அழிக்கக்கூடாது. எதைப் போதிக்கிறோமோ அதையே வாழ்ந்து காட்ட வேண்டும். சாட்சியில்லாத ஜீவியம் சாத்தானின் ஜீவியம் (1கொரி 4:9-13; 2கொரி 4:8-18; 6:1-10; எரே 23:1-8; எசே 1-9). திராட்சைச் செடியாகிய இயேசுவாகிய வார்த்தையோடு எந்நாளும் இணைந்திருக்க வேண்டும். (யோ 15) என்றைக்கும் கர்த்தருக்காய் உழைப்பவர்களாயும், கனி கொடுக்கிறவர்களாயும், ஜெப வீரர்களாயும், மாம்சத்தையும், மாம்சீகத்தையும் சிலுவையில் அறைந்தவர்களாகவும் இருக்க வேண்டும். அக்கிரமச் செய்கைக்

காரராகவும், கள்ளப் போதகர்களாகவும், கள்ள தீர்க்கதரிசிகளாகவும் இருக்கக்கூடாது. தன்னைத் தான் வெறுத்து, சிலுவையை எடுத்துக் கொண்டு நடக்க வேண்டும். அடுத்தவர்களுக்கு தொந்தரவு அளிக்கும் வகையில் ஆராதனை முறைமைகள் இருக்கக்கூடாது. அரசாங்கத்தில் ரிஜிஸ்தர் பண்ணாத இடத்தில் சபைவீடு கட்டி, பிரச்சனைக்குள்ளாகக் கூடாது. ஆத்ம ஆதாயமே குறிக்கோளாய் இருக்க வேண்டும். இயேசுவைப் போல அன்பு காட்டுகிறவர்களாய் இருக்க வேண்டும். ஆர்ப்பாட்டமோ, உண்ணாவிரதமோ, கோர்ட்டுக்குப் போவதோ, ஊர்வலம் நடத்துவதோ மேய்ப்பனுக்கு வேண்டாத ஒன்று. கர்த்தரே நியாயந்தீர்க்கிறவர். கோலும் தடியும் கொண்டு மந்தைகளை சிட்சித்து நடத்த வேண்டும்.

இன்னும் ஏராளம், ஏராளம். இடம் போதாது. மொத்தத்தில் இயேசுவைப் போல் சாட்சி வாழ்க்கை வாழ்ந்து ஆத்ம ஆதாயம் தேடி, இயேசு வரும்போது நீதியின் கிரீடத்தைப் பெற்றுக் கொள்ள ஆயத்தமாயிருக்க வேண்டும். அதிக ஆக்கினை கள்ளப் போதகர்களுக்கே உண்டு என்பதை மறக்கவேகூடாது (யாக் 3:1).

❖ ❖ ❖

# அந்தி கிறிஸ்துவின் முத்திரை என்ன?

இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனே அந்திகிறிஸ்து (1யோ 2:22). இப்போதும் அநேகர் மறுதலிக்கிறதினால் அநேக அந்திக்கிறிஸ்துக்கள் இப்போதும் உண்டு (1யோ 2:18). **கிறிஸ்து ஒருவராய் வெளிப்பட்டது போல அந்தி கிறிஸ்துவும் ஒருவனாய்த்தான் வெளிப்படுவான்.** அவன் ஒரு ராஜா என்று தானி 7:24லும், பாழாக்குகிற அருவருப்பு என்று மத் 24:15லும், கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் என்று 2தெச 2:3லும் சொல்லப்பட்டுள்ளது. சபை எடுபட்ட பின்புதான் அவன் வெளிப்படுவான் என்று 2தெச 2:3-8 விளக்குகிறது. ஆவியானவரின் வல்லமையோடு இயங்கும் சபை இன்னும் அநேகர் மனந்திரும்ப வேண்டுமென்று ஜெபித்துக் கொண்டிருப்பதால் அவனின் வருகை தடைபடுகிறது; கர்த்தரும் தடை பண்ணுகிற ஆவியோடு கூடிய சபையை எடுக்க தாமதிக்கிறார் (2பேதுரு 3:9) தானி 9:27ன் படி 7 வருஷம் அரசாளுவான். முடிவில் அர்மகதோன் யுத்தத்தில் அக்கினிக் கடலில் தள்ளப்படுவான் (வெளி 19). இவனின் முத்திரை என்ன? 666 என்று பலர் சொல்கின்றனர். இது தவறு.

கிறிஸ்து கொடுக்கும் முத்திரை கிறிஸ்தவர்களுக்கு பரிசுத்த ஆவி என்று முதலில் அறிந்து இந்த செய்தியை வாசியுங்கள் (எபே 1:13; See மத் 3:11).

வெளி 13:17,18ஐ வாசியுங்கள். **அந்தி கிறிஸ்துவுக்கு மூன்று அடையாளங்கள் சொல்லப்பட்டுள்ளன.** 1. முத்திரை, 2. நாமம், 3. நாமத்தின் இலக்கம், குமாரனுக்கென்று தனிப்பட்ட பெயர் இல்லாததது போல (நீதி 30:4) இவனுக்கு வேதத்தில் தனிப்பெயர் சொல்லப்படவில்லை. ஆனால் குமாரனாகிய கிறிஸ்துவுக்கு அநேக காரணப் பெயர்கள் இருந்தது போல இவனுக்கும் நிம்ரோத் முதற்கொண்டு (அதி 10) அநேக ராஜ்ய அதிபதிகள், கேட்டின் மகனாகிய யூதாஸ் காரியோத் போன்ற 35 பெயர்கள் வேதத்தில் உள்ளன. தற்காலத்தில் போப், முசோலினி, ஹிட்லர், ஸ்டாலின் போன்ற பெயராலும் அழைக்கின்றனர். அவனின் கிரேக்க அல்லது எபிரேய மொழி எழுத்துக்கள் அப்படியே இலக்கங்களாயிருக்கின்றன (numbers). சிலர் போப்பின் கிரீடத்தில் 'Vicarious Filidei' (கிறிஸ்துவுக்குப் பதிலாளி) என்று எழுதி இருப்பதால் ரோம இலக்கப்படி இதை கணித்து 666 என்று வருவதால், போப்தான் அந்திகிறிஸ்து என்கின்றனர். எந்த போப் அந்திகிறிஸ்து? அந்தி கிறிஸ்து ஒருவனல்லவா! மேலும் தற்போது அந்த கிரீடத்தை போப் அணிவதே இல்லையே இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? ஆக போப் அல்ல அந்தி கிறிஸ்து; நாமமே இன்னும் தெரியாத போது நாமத்தின் இலக்கத்தை எப்படி கணக்குப் பார்த்து 666 என்று கணிப்பது? சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்தான் அவன் வெளிப்படுவான். யாக்கோபின் இக்கட்டுக்காலம் வரும்போது இஸ்ரேலர்களும், முதல் 3½ வருஷ உபத்திரவ காலத்தில் கைவிடப்பட்ட பெயர்க் கிறிஸ்தவர்களும் புத்தியோடு கணக்குப் பார்த்து அந்த மிருகத்தின் நாமத்தின் இலக்கத்தை அறிந்து இரத்த சாட்சியாவர்கள். (இஸ்ரவேலர்களில் 1,44,000 பேரோ நெற்றிகளில் முத்திரை இடப்பட்டு பாதுகாக்கப்படுவர்) இப்போது அவன் நாமம் வெளிப்படாததால், கணக்குப் பார்க்க முடியாது.

ஆக அவன் நாமத்தின் இலக்கம் தான் அறுநூற்று அறுபத்தாறே ஒழிய அவனின் முத்திரை அல்ல (Mark). எப்படிப்பட்ட முத்திரை என்று வேதத்தில் சொல்லப்படவில்லை. அவனுடைய ராஜ்யத்தின் அடையாளமாய் (Emblem) அது இருக்கலாம். இது வெளிப்படையாய் வலது கைகளிலும் நெற்றிகளிலும் போடக்கூடிய அடையாளம் (வெளி 13:16; 14:9) அவனின் நாமத்திற்கும், நாமத்தின் இலக்கமாகிய 666க்கும் இது சம்பந்தமில்லை. எனவே போடப்போகும் முத்திரை 666 அல்ல

என்றும், நாமத்தின் இலக்கத்தை கணக்குப் பார்த்து, அந்திகிறிஸ்துவை யாரென்று மட்டும் உணரமுடியும் என்றும் அறிகிறோம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! அந்த நாள் நமக்கு வேண்டாம். இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

# வாரத்தின் முதலாம் நாள்தான் அப்பம் பிட்க வேண்டுமா?

அப் 20:7ஐ எடுத்துக் கொண்டு "கிறிஸ்துவின் சபையார்" வாரத்தின் முதல் நாள்தான் அப்பம் பிட்க வேண்டும்; மற்ற நாட்களிலெல்லாம் பிட்பது தவறு என்று போதிக்கின்றனர். இப்படி போதிப்பது கள்ள உபதேசம் என்று ஏற்கெனவே எழுதியிருக்கிறேன். அதை இன்னும் கொஞ்சம் விளக்க ஆவியானவர் ஏவுகிறார்.

அப் 20:6ன் படி ஏழு நாட்கள் துரோவா பட்டணத்திலே பவுல் இருந்தும், அந்த 7 நாள் வரை சபையார் யாரும் அப்பம் பிட்கும்படி கூடி வரவில்லை என அறிகிறோம். திங்கட்கிழமை பவுல் அந்த ஊரை விட்டுப் புறப்பட வேண்டியிருப்பதால் சீஷர்கள் அப்பம் பிட்கும்படி வாரத்தின் முதல் நாள் கூடி வந்தார்கள். எப்போதுமே ஒரு பெரிய ஊழியர் அந்த ஊரில் ஊழியம் முடித்து விட்டு கிளம்பும் முன், ஒரு பிரிவு உபச்சார விழா நடத்தி, அதிலே இயேசுவின் மரணத்தை நினைவு கூரும் வண்ணம் இராப் போஜனம் பண்ணுவது அப்போஸ்தலர் கால வழக்கம். அது இப்போதும் பல சபைகளிலே வழக்கமாயிருக்கின்றன. இதன்படியே அன்று "அப்பம் பிட்டார்கள் என்று இருப்பதை ஏற்றுக் கொள்ளாதவர்கள், அப் 17:1-3ன்படி, பவுல் வாரத்தின் 7ம் நாளாகிய சனிக்கிழமையை ஆசரித்தார்; சனிக்கிழமையில் ஆராதனை செய்தார்" என்று சொல்லி சனிக்கிழமை ஆசாரிப்புக்காரர்களாக மாறுவார்களா? அப் 17:1-3ன்படி நாம் அறிவது "ஆதி அப்போஸ்தலர்கள் எங்கெல்லாம் எப்போதெல்லாம் மக்கள் கூடுகிறார்களோ அங்கெல்லாம் சுவிசேஷம் அறிவித்தார்கள்" என்பதுதான். (See அப் 2:47; 17:17; 19:9; 1கொரி 9:19-2). ஆதி அப்போஸ்தலர்கள் நாட்களை முக்கியப்படுத்தவே இல்லை. அதனால் தான் சபை கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள் என்று (எபி 10:25) பவுல் பொதுவாக எழுதியுள்ளான். சபை என்றைக்கு வேண்டுமானாலும் கூடலாமே! எப்பொழுதெல்லாம் சபையாரெல்லாம் கூட வாய்ப்புண்டோ அப்போதெல்லாம் கூடலாம். ஞாயிறு விடுமுறை

யாகையால் அன்று கூடுகிறோம். இது மற்ற நாளைக்கு மாற்றப்பட்டால், அப்போதும் ஞாயிற்றுக்கிழமை தான் சபை கூடுவோமா? விடுமுறை நாட்களில் உபவாசக் கூட்டங்கள், கன்வென்ஷன், பைபிள் ஸ்டடி போன்றவை வைப்பதில்லையா? ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுந்த நாள் என்பது உண்மையே! ஆனால் அன்றைக்குத்தான் அப்பம் பிட்க வேண்டும் என்று ஒரு வசனம் கூட இல்லையே! ஆதி அப்போஸ்தலர்கள் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தார்கள் என்று அப் 2:38; 19:5 போன்ற வசனங்களைச் சொல்லி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் கொடுப்பது தவறு என்று ஒரு சபையார் சொல்கிறதால் அது உண்மையாகுமா? எதையுமே வசனங்களோடு ஒப்பிட்டு பார்த்து உண்மையை உணர வேண்டும்.

அப்பம் பிட்குதலை என் நினைவாய் செய்யுங்கள் என்று இயேசு சொன்னார் (லூக் 22:19) ஞாயிற்றுக்கிழமைதான் அவரை நினைக்க வேண்டுமா? அப் 2:46ன் படி அனுதினமும் அவர்கள் ஆரம்ப நாட்களில் எருசலேமில் அப்பம் பிட்கவில்லையா? அப் 20:7-11 வசனங்களைப் படியுங்கள். பவுல் நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான். இன்றைக்கு வாதிடும் சபையார் நடுராத்திரி மட்டும் ஆராதனை நடத்துகிறார்களா? அன்று அப்பம் பிட்டது ஞாயிறு காலையில் அல்ல; நடுராத்திரி வாக்கில்தான் என்று அப் 20:11 மூலம் அறிகிறோம். அப்படியானால் இன்றைக்கு வாதிடும் சபையார் நடுராத்திரியில் தான் அப்பம் பிட்கிறார்களா? இராப்போஜனம் என்பதால் இரவுப் போஜனம் என்று சொல்லி இருள் சூழ்ந்த பின் தான் அப்பம் பிட்கும் சபைகளும் உலகில் உண்டு. ஆனால் இயேசு அப்பம் பிட்டது வியாழன் மாலையில். யாராவது இயேசுவைப் போல் வியாழன் மாலை அப்பம் பிட்கிறார்களா? வியாழன் மாலை சபை கூடி வந்தால் மாத்திரமே அன்று அப்பம் பிட்கலாம்.

அடுத்து, வாரத்தின் முதல்நாளில் கூடினார்கள் என்றால் ஞாயிறு காலையா மாலையா இரவா? ரோம காலண்டர்படி இரவு 12 மணிக்குத்தான் அடுத்த நாள் பிறக்கிறது. ஆனால் வேதத்தின்படி சாயங்காலம் சூரியன் மறைந்தபின் தான் அடுத்தநாள் ஆரம்பமாகிறது. (ஆதி 1; லேவி 23:32). அப்போஸ்தலர் காலத்தில் ரோமன் காலக்கணிப்பு இல்லையல்லவா! அப்படியானால் வாரத்தின் முதல் நாள் கூடி, பவுல் நடுராத்திரி வரை பிரசங்கித்தான் என்றால் ரோம காலண்டர் கணக்குப் படி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மேல் கூடியிருப்பார்கள் என நிதானிக்கலாம். அதாவது வேத கணக்குப்படி, வாரத்தின் முதல் நாள் அப்போதுதான். நடுராத்திரி மட்டும் பிரசங்கித்து அதன் பின் அப்பம் பிட்டிருக்க வேண்டும். அதாவது தற்கால ரோம

காலகணக்குப்படி சனி இரவு 12 மணியைப் போல் அப்பம் பிட்டிருக்க வேண்டும். பொதுவாக பிரிவு உபச்சார விழா மாலையில்தான் நடக்கும் என்று நாமறிவோமல்லவா! அன்று பவுல் அப் 20:7ல் செய்த படியே செய்யவேண்டுமானால், வாதிடுவோர் சனிக்கிழமை மாலை சபை கூடட்டும்; இரவு அப்பம் பிட்கட்டும், ஆட்சேபனையில்லை. மற்றப்படி இந்த வசனத்தை வைத்துக் கொண்டு ஞாயிறு காலை தான் அப்பம் பிட்க வேண்டும் என்று வாதிடுவது அறியாமை. அல்லது கள்ள உபதேசம். இரட்சிப்பின் வாசனையில்லாத ரோமன் கத்தோலிக்கர் கூட சரியாகவோ தவறாகவோ அனுதினமும், காலையும் மாலையும் அப்பம் பிட்டு இயேசுவின் மரணத்தை நினைவு கூருகிறார்களே! பவுலைப் போலவே செய்ய வேண்டுமானால் அவனைப் போல மொட்டையடித்துக் கொள்வார்களா? அவனைப் போல நியாயப் பிரமாண முறைப்படி சுத்திகரித்துக் கொள்வார்களா? தனக்குக்கீழேயுள்ள தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் செய்தது போல இவர்களும், இவர்களுக்கு கீழுள்ளவர்களுக்கு விருத்தசேதனம் செய்வார்களா? வாதிடுவது எளிது. வசனப்படி ஆவியானவரின் மெல்லிய சத்தத்திற்கு காத்திருப்பதே மகா பிரதானம்! காதுள்ளவன் கேட்கக்கடவன். ஆமென்!

❖ ❖ ❖

## ஆவிக்குரிய யுத்தம் என்றால் என்ன?

உலகத்திலே மூன்று விதமான ஆவிகள் உள்ளன.

1. தேவனின் ஆவி,
2. சாத்தானின் ஆவி,
3. மனிதனின் ஆவி (1கொரி 2:11,12)

மனிதனின் ஆவி எப்போதுமே தேவ ஆவியையோ, அல்லது சாத்தானின் ஆவியையோ சார்ந்துதான் நிற்கும். நாம் தேவ ஆவியோடு இணைந்திருக்கும்போது நம்மோடு யுத்தம் பண்ண பிசாசானவன் முனைகிறான். அவனுடைய வேலையே திருடுவதும், கொல்வதும், அழிப்பதும் தானே (யோ10:10). ஆவி தான் ஆவியோடு இணையும் அல்லது யுத்தம் செய்யும்; நமது சரீரமோ ஆத்மாவோ அல்ல. இதைத்தான் பவுல் மாம்சத்தோடும் இரத்ததோடும் நமக்கு போராட்டம் அல்ல என்று எபே 6:12ல் எழுதுகிறான். அந்த வசனத்தில் எந்தெந்த ஆவிகளோடு நமக்குப் போராட்டம் உண்டு என எழுதுகிறான்.

இதை அறியுமுன்னே சாத்தானைப் பற்றி கொஞ்சம் அறிவோம். இந்த முழு உலகமே தற்போது அவன் ஆளுகையில் உள்ளது; அவன் இப்பிரபஞ்சத்தின் தேவனாயிருக்கிறான் (2கொரி 4:4; 1யோ 5:19; லூக் 4:6). இவனின் அந்தகார ஆவிக்குரிய ராஜ்யத்திலிருந்து தான் தேவனுடைய ஆவிக்குரிய ராஜ்யத்திற்குள் நாம் வந்திருக்கிறோம் (கொலோ 1:13; 1பேது 2:9) இவன் தான் பாவம், வியாதி, மரணம் எல்லாவற்றுக்கும் மூலகாரணன். அவன் நமக்கு எதிரி (1பேது 5:8); சோதனைக்காரன் (1தெச 3:5); பொய்க்குப் பிதா (யோ 8:44); ஆகாயத்து அதிகார பிரபு (எபே 2:2); தீயவன் (1யோ 2:14); குற்றப்படுத்துபவன் (வெளி 12:10); கொலைபாதகன் (யோ 8:44); வலுசர்ப்பம் (ஆதி 3:1); ஒளியின் தூதனின் வேடதாரி அவன் (2கொரி 11:4).

அசுத்த ஆவிகள் அல்லது விழுந்த ஆவிகளையுடைய பிசாசின் அல்லது பேயின் ராஜ்யத்தை உடையவன் இவன் (மத் 25:41; லூக் 11:24; மத் 12:24-28). சாத்தான் ஒருவன் தான். அவன்தான் வலுசர்ப்பம் என்றும் லூசிபர் என்றும் அழைக்கப்படுகின்றான். இவனுக்குக் கீழே தான் இந்த ஆவிகள் உள்ளன. எபே 6:12ஐ வாசித்தால் இவனையும் இவன் கூட்டத்தைப் பற்றியும் அறியலாம். இவர்கள் நான்கு பிரிவுகளாக இருக்கிறார்கள். (1) துரைத்தனங்கள்:- சாத்தானின் இராஜ்யத்தில் உள்ள தலைமை ஆளுநர்கள் (எபே 1:21; கொலோ 2:10), (2) அதிகாரங்கள்:- தலைமை ஆளுநர்களின் சித்தம் செயல்படுத்துபவர்கள், (3) இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள்:- அந்தகார ஆவிக்குரிய உலகை ஆள்பவர்கள் (தானி10:13-21; எபே 1:21; கொலோ 1:16-18), (4) வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகள்.

இந்த ஆவிகளோடு நமக்குள்ள ஆவிக்குரிய யுத்தம் இரண்டு வகைப்படும். **(1) சாத்தானின் ராஜ்யத்துக்குள் மறுபடியும் அவன் நம்மை நுழைக்க முயலும்போது செய்யும் யுத்தம், (2) மத் 28:18ன் படி சகலரையும் சீஷராக்கும் நமது செயலை தடை செய்யும் யுத்தம்.** இந்த இரு போராட்டங்களிலும் நாம் ஈடுபட்டு சாத்தானை மறுபடியும் தோற்கடிக்க தேவையில்லை; இயேசுதான் சிலுவையிலே வெற்றி சிறந்தாரே! (கொலோ 2:15) அப்படியானால் நாம் செய்ய வேண்டியது என்ன? இதை அறியும் முன்னே சாத்தான் எப்படி நம்மோடு போரிடுகிறான் என்று அறிய வேண்டும். எதிராளியைப்பற்றி அறிந்தால்தான் ஜெயிக்க முடியும். அவனுடைய தந்திரங்களை நாம் அறிந்திருக்க வேண்டும் (2கொரி 2:11). நாம் ரோ 10:9,10ன்படி ஆவியிலே இரட்சிக்கப்பட்டு புது சிருஷ்டியாய் தேவ ஆவியோடு இணைந்திருப்பதால், அவன் நமது அறிவு - சிந்தனை -

உணர்ச்சி ஆகியவைகளின் பிறப்பிடமான மனதை - ஆத்மாவைத் தான் போராட்டக்களமாக வைத்துக் கொள்வான். அவன் ஆத்மாவிலே குற்றப்படுத்துவான் (சக 3:1); ஏமாற்றுவான் (2கொரி 11:14); சோதிப்பான் (1தெச 3:5); பொய்களை கூறுவான் (யோ 8:44); கெட்ட எண்ணங்களையும், பயத்தையும், அவிசுவாசத்தையும், சோம்பலையும், திருப்தியின்மையையும்,நம்பிக்கையின்மையையும், தைரியமின்மை யையும், மாம்சீக இச்சைகளையும், கள்ள உபதேசங்கள், விக்கிரக ஆராதனைகள், லாகிரி வஸ்துக்கள், குறி சொல்லுதல், நாள் பார்த்தல் போன்றவைகளையும் ஆத்மாவில் திணித்து, ஆவிக்குரிய வல்லமையை குறைத்து, நமது சரீரமும் ஆத்மாவும் ஆவி சொல்வதை கேட்காமல், பிசாசினால் கெடுக்கப்பட்ட ஆத்மா சொல்வதையே கேட்க வைப்பான். இதனால் பாவமும், வியாதியும், மரணமும் உண்டாகின்றன. இப்படியாய் சாத்தான் செய்யும் போராட்டங்களில் நாம் எப்படி போராடி வெற்றி பெறுவது?

சாத்தானின் கிரியைகளை அழிக்கும் படிக்கே இயேசு வந்தாரல்லவா? (1யோ 3:8) அவர் தனது வெற்றியை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்; அந்த வெற்றியை விசுவாசித்து செயல்படும் போதே சாத்தான் தோற்றுப் போவான் என்று நமக்கு சொல்லிக் கொடுக்கிறார். நாம் மறுபடியும் போராடி ஜெயத்தைப் பெற்றுக் கொள்ள தேவையில்லை. சாத்தான், அவன் சிலுவையில் தோத்தான் என்று விசுவாசித்தாலே போதும். போராட்டத்திற்கான நமது செயலாக்கம் (Strategy) கீழ்க்கண்ட படி இருக்க வேண்டும்.

(1) சாத்தானின் செயல்பாடுகளை உணர்ந்திருக்க வேண்டும் (2கொரி 2:11)

(2) அவனுக்கு எதிலும் இடங்கொடாமல் இருக்க வேண்டும் (எபே 4:27)

(3) அவனது தாக்குதல்களுக்கு எதிர்த்து நிற்க வேண்டும் (யாக் 4:7; 1பேது 5:8.9),

(4) உனது பணியில் தேவன் எங்கேயிருக்கிறார் என்று உணர்ந்து நீ எதைச் செய்ய தேவன் சித்தமாயிருக்கிறாரோ அதையே செய்ய வேண்டும். இயேசு சொன்னார் “என் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவார்கள்” என்று. அதையே விசுவாசித்து செயல்படும்போது அவன் ஓடியே போவான்.

சாத்தானின் ஆவிக்குரிய போராட்டத்தில் நமக்குப் பாதுகாக்க அரண் தேவைப்படுகிறது. அந்த அரண்தான் சர்வாயுதவர்க்கம். வேத சத்தியம் (யோ 14:6) என்னும் அரைக்கச்சையை கட்டிக்கொள்ள

வேண்டும்; நீதியென்னும் மார்க்கவசம் அணியவேண்டும் (2கொரி 5:21); சமாதானத்தின் சுவிசேஷம் சொல்ல என்றைக்கும் ஆயத்தம் என்கிற பாதரட்சை வேண்டும். விசுவாசம் என்னும் கேடயம் வேண்டும் (எபி 12:1); இரட்சிப்பென்னும் தலைச்சீரா வேண்டும் (எபி 2:10); பாதுகாப்போடு மாத்திரம் இருந்தால் போதாது. சாத்தான் தாக்கும் போது திருப்பி அவனைத் தாக்கத்தக்கதான போராயுதம் நம்மிடம் வேண்டும். இல்லையென்றால் சாத்தான் தரும் அடிகளை வாங்கிக் கொண்டு சமாளிக்க வேண்டியிருக்கும். எதிர்க்கத் தேவையான ஆயுதங்களாவன:-

(1) **இயேசுவின் நாமம்** (அப் 16:18; பிலி 2:9-10)

(2) **தேவனுடைய வார்த்தை** (1யோ 2:14; எபே 6:17)

(3) **ஆவியானவர் தரும் வல்லமை** (அப் 10:38)

முதல் இரண்டு ஆயதங்களும் விசுவாசத்தால் நம்மிடம் வருகின்றன. வல்லமையானது ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும் நமக்குக் கிடைக்கிறது (மத் 17:21) நம்மைப் பாதுகாக்கவும், சாத்தானோடு போரிடவும் ஆயுதங்கள் இருந்தாலும், 1கொரி 15:57; மத் 10:1; ரோ 16:20; லூக் 10:19; ரோ 8:37-39; 1யோ 4:4; வெளி 12:11; யாக் 4:7; யோ 14:12 போன்ற வசனங்களின்படி ஆவிக்குரிய யுத்தத்தில் வெற்றிதான் கிடைக்கும் என்ற உறுதி வேண்டும். அப்போதுதான் யுத்தத்தில் ஜெயம் உண்டு.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! பிசாசை விரட்ட உனக்கு அதிகாரம் உண்டு; வல்லமையும் உண்டு. கவலைப்படாதே! கலங்கி நில்லாதே! சத்துரு வருவான்! சோதனை தருவான்! எதிர்த்து நின்றால் ஓடியே போவான்! சிலுவையிலே அவனைத் தோற்கடித்தவரின் பிள்ளையல்லவா நீ! நீங்கள் வாசிக்கும் இந்த செய்தியினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டுவிடாமல், அசையாமல், ஸ்திரமாயும், உறுதியாயும், விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் ஆவிக்குரிய யுத்தத்தில் வெற்றி பெறுவீர்கள்! சண்டை போடாமல், கஷ்டப்படாமல் தேவனால் கிடைக்கப் போகும் வெற்றி இது! ஆமென்!

❖ ❖ ❖

## ஆவிகளைப் பகுத்தறிவது எப்படி?

உலகத்திலே அநேக கள்ள தீர்க்கதரிசிகள், கள்ளக் கிறிஸ்துக்கள், கள்ளப் போதகர்கள் தோன்றியிருக்கிறார்கள். எல்லா ஆவிகளையும் நாம் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால்

உண்டானவைகளோ என்று சோதித்தறிய வேண்டும் (1யோ 4:1). அந்த ஆவிகள் ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு நம்மிடத்திலே வருவார்கள். உள்ளத்திலோ பட்சிக்கிற ஓநாய்கள் (மத் 7:15). இந்த கடைசி காலத்தில் இப்படிப்பட்டவர்களை அதிகமாய்க் காண்கிறோம். பேர் சொல்லி அழைத்து ஜோஷ்யம் போல் சொல்வது, அந்நிய பாஷை பேசி எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்து கடைசி காலத்தில் நடக்கப் போகிறவைகளை பட்டியல் போட்டு சொல்வது, பிசாசுகளை துரத்துவதால், அற்புதங்கள் செய்வதால் விசுவாசிகளை - அதுவும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிப்பது (மத் 24) போன்ற பல காரியங்களை டிவியிலும், மண்டபங்களிலும், மைதானங்களிலும், செய்கிறார்கள். வெளுத்ததெல்லாம் பாலென்று நம்பவைக்கிறார்கள். சாத்தான் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வது போல, இவர்களும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்து கொள்கிறார்கள் (2கொரி 11:14,15). அவர்களின் முடிவு மத் 7:22,23ன் படிதான் இருக்கும். இவர்கள் மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யர்கள்; பக்க வழியாய் சபைக்குள்ளே நுழைந்திருக்கும் காயீன்கள்; பிலேயாம்கள்; கோராக்கள் (1தீமோ 4:1; யூதா 4:11).

இப்படிப்பட்டவர்களை பகுத்தறிவது எப்படி? இதை அறியும் முன்னே ஒரு காரியத்தை நாம் அறிய வேண்டும். தென் கொரியா போதகர் பால்யாங்கிசோ எழுதியிருக்கிறார்:- "இரண்டு ஆவி மண்டலங்கள் உள்ளன. ஒன்று தேவ ஆவி மண்டலம்; (Divinity) மற்றொன்று சாத்தானின் ஆவி மண்டலம் (Satanic). அற்புதம் அடையாளங்கள் செய்தாலும் சரி; தீர்க்கதரிசனம் மற்றும் ஜோஷ்யம், குறி சொல்லுதல் போன்ற கிரியைகளினாலும் சரி; இந்த இரு ஆவி மண்டலங்களில் ஏதாவது ஒன்றிலிருந்து தான் வல்லமையோடு உருவாகின்றன". உண்மைதான். இதனாலேதான் எந்த காரியமானாலும் ஆவிகளைப் பகுத்தறியாத வரைக்கும் நாமும் அவைகளோடு போக வேண்டியது தான். தீமையான காரியம் பரவுவது மிக எளிது. இது ஒரு Infectious - ஒட்டக்கூடிய வியாதி. ஆதி மனிதன் பாவம் செய்தது ஒரு நொடிப் பொழுதில்; ஆனால் நல்ல காரியம் பரவ ஆண்டாண்டு காலங்கள் ஆகும். அதனால் தான் ஆதாம் வீழ்ந்து போனது முதல் இன்று வரை சுவிசேஷம் சொல்லிக் கொண்டேயிருக்கிறோம். உபா 13:1-3; கலா 1:6-8 போன்ற வசனங்களைத் தியானியுங்கள்.

இயேசு கிறிஸ்து மனிதனாய் வாழ்ந்த போது திமிர்வாதக்காரனை நோக்கி, "திடன் கொள்; உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்றார். அப்போது "இவன் தேவதூஷணம் சொல்கிறான்" என்று வேதபாரகர் தங்கள் உள்ளத்தில் சொல்லிக் கொண்டார்கள். இயேசு

அவர்கள் நினைவுகளை அறிந்து "உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன?" என்று கேட்டார். (மத் 9:2-6). இதுதான் ஆவிகளைப் பகுத்தறிதல். பரிசேயரின் ஆவியைப் பற்றி "விரியன் பாம்புக்குட்டிகளே! நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நினைவினால் வாய் பேசும்" என்று இயேசு பகுத்தறிந்து சொன்னதை வாசியுங்கள் (மத் 12:34). 18 வருஷமாய் சாத்தானால் கட்டப்பட்டு, எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியானவளை இயேசு கண்டு, அவளுக்குள்ளிருந்த ஆவியை உணர்ந்து விடுதலையாக்கினார் (லூக் 13:11-16). இப்படி ஏராளமாய் சொல்லிக் கொண்டே போகலாம். அவர் எல்லா ஆவியையும் அறிந்திருக்கிறார் (யோ 2:25) ஆமென்! பர்யேசு என்னும் மாய வித்தைகாரனும் தீர்க்கதரிசியுமான எலிமா என்பவன் செர்கிபவுல் என்னும் அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடி, தேவ வசனம் சொல்ல வந்த பர்னபாவோடும், பவுலோடும் எதிர்த்து நின்றான். அவனின் ஆவியை பகுத்தறிந்த பவுல், "பிசாசின் மகனே! நீதிக்கெல்லாம் பகைஞனே" என்று சொல்லி அவன் குருடனாக சபித்ததை அப் 13:6-12ல் வாசியுங்கள். பிலிப்பி பட்டணத்தில் பவுல் ஜெபம் பண்ணுகிற இடத்துக்குப் போகையில் ஒரு ஸ்திரீ பவுலைப் பார்த்து தினமும் "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர்; இரட்சிப்பின் வழியை அறிவிக்கிறவர்கள்" என்று சத்தமிட்டுப் புகழ்ந்த போதும், அவளுக்குள்ளிருந்த ஆவியை உணர்ந்தவனான பவுல், அந்த ஆவியை விரட்டினான். (அப் 16:16-18). இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நம்மையும், நமது ஊழியத்தையும், நமது தேவனையும் புகழுகின்ற ஆவிகளின் வார்த்தைகளில் ஏமாந்து போகாதே! அதையும் பகுத்தறிய வேண்டும்.

அந்நிய பாஷை பேசினாலும் சரி, அற்புதங்கள் செய்தாலும் சரி, வேத விளக்கங்கள் கொடுத்தாலும் சரி, பிசாசுகளை விரட்டினாலும் சரி, அப்படிப்பட்டவர்களின் ஆவிகளைப் பகுத்தறியாதவரைக்கும் மாறுபாடுள்ள சந்ததிகளை விட்டு நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள முடியாது (அப் 2:40). "அறியேன்" என்று தேவன் சொல்லும் நிலை அவர்களுக்கு மட்டுமல்ல; நமக்கும் வந்து சேரும் (மத் 7:22-23) எரே 23:16; எசே 22:28; மாற் 13:2; லூக் 6:26; 2பேது 2:1; 1யோ 4:1 போன்ற வசனங்களை தயவு செய்து வாசியுங்கள். **இப்படிப்பட்ட ஆவிகளைப் பகுத்தறியும் விதமாவது:-** 1. மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல (1யோ 4:3), 2. தேவனால் உண்டான ஆவி, எபி 6:1,2ல் சொல்லப்பட்ட கிறிஸ்தவனுக்கான மூல உபதேசத்தை -

அடிப்படை சத்தியத்தை ஏற்றுக் கொண்டு அதன் மேல் சபையை கட்டும், 3. ஜீவிய மாறுபாடு மற்றும் சத்திய மாறுபாடுள்ள சந்ததியை விட்டு வெளியேறாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல, 4. வசனத்துக்கு விரோதமாய் செயல்படும் ஆவி அசுத்த ஆவியே. அது பிசாசினால் உண்டானது. 5. இப்படிப்பட்ட ஆவிகளை அவைகளின் கனிகளாலே அறியலாம், 6. எல்லாவற்றுக்கும் மேலாக 1கொரி 12ல் சொல்லப்பட்ட ஆவியின் வரங்களில் ஒன்றான ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தால் தீர்க்கமாய் அறியலாம்.

கடைசி நாட்களில் வாழும் தேவ பிள்ளையே! தெரிந்து கொள்ளப்பட்ட தேவ பிள்ளைகளையும் வஞ்சிக்கும் தீய ஆவிகளையும், ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்களையும் அறிந்து கொள்ளாத வரைக்கும் பரலோகம் போவது சாத்தியமாகாது. ஆவிகளைப் பகுத்தறிய முதலில் கற்றுக் கொள்வோம்! ஆவிகளைப் பகுத்தறியாத வரைக்கும், அவர்கள் உலகப்பிரகாரமாய் எவ்வளவு பெரிய ஊழியம் செய்தாலும் அவர்களோடு இணையாதே! உன்னை நீயே இரட்சித்துக் கொள்! இது கடைசி கால விடுதலை முழக்கம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

# முதலாம் உயிர்த்தெழுதல்

வெளி 20:4-6ஐ வாசித்தால் முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான் என அறிகிறோம். வச 5ன்படி இப்படிப்பட்ட முதலாம் உயிர்த்தெழுதல் 1000 வருட அரசாட்சிக்கு முன் நடக்கிறது. 1000 வருட அரசாட்சிக்குப் பின்னும் உயிர்த்தெழுதல் உண்டென்றும், அதில் பங்கு பெறுவோர் 2ம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலுக்கு போவார்கள் என்றும் அறிய வேண்டும். இதைத்தான் யோ 5:28,29ல் இயேசு சொல்கிறார். கிறிஸ்து உயிர்த்தெழுந்ததினால் தான், நம் எல்லோருக்கும் உயிர்த்தெழுதல் கிடைக்கிறது என்பது அடிப்படை உண்மை. மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவர் இயேசு கிறிஸ்து (1கொரி 15:30; கொலோ 1:18). அவர் உயிர்த்தெழுந்த பிற்பாடு, பரிசுத்தவான்கள் பலரும் எழுந்ததால், மத் 27:52,53; எபே 4:8-10 மூலம் அறிகிறோம். இவர்களெல்லாரும், ஏற்கெனவே இந்த முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெற்றவர்கள். **இன்னும் இதிலே பங்குபெறப் போகிறவர்கள் யார்?** 1. இரகசிய வருகையில் பங்குபெறப்போகும்

நாமும், கிறிஸ்துவுக்குள் மரித்த அனைத்துப் பரிசுத்தவான்களும் (1தெச 4:16,17) 2. அந்தி கிறிஸ்துவின் ஆட்சியில் தேவனால் காக்கப்பட்ட 1,44,000 இஸ்ரேலர்கள் (வெளி 12:5; 14:1-5; ஏசா 6:7; தானி 12-1) 3. இரகசிய வருகையில் கைவிடப்பட்டு, பின் உபத்திரவ காலத்தில் மனம்மாறி இரத்த சாட்சியாய் மரித்த பரிசுத்தவான்கள் (வெளி 20:4; 19:11-21; யூதா 14; சகல 14-5) 4. உபத்திரவ காலத்தில் எழும்பப்போகிற இரண்டு சாட்சிகள் (வெளி 11:7-12) மேலே சொன்ன 4வித கூட்டத்தாரும், இயேசுவுக்குப் பின் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் வெளி 20:4ல் சொல்லப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரின் உயிர்த்தெழுதலும் இரகசியமே. இவர்கள் அனைவரும் உயிர்த்து கிறிஸ்துவுடனே கூட 1000 வருஷம் அரசாளுபவர்கள். ஆமென்.

இந்த முதலாம் உயிர்த்தெழுதலிலும் முதல் ரக கூட்டத்திலும் பங்குபெற நாம் வாஞ்சிப்போம். செயல்படுவோம். **இந்த உயிர்த்தெழுதலில் பங்கு பெற தகுதிகள் என்ன?** 1. கிறிஸ்துவுக் குள்ளாய் இருக்க வேண்டும் (2கொரி 5:17,18; கொலோ 3:3; யோ 15:7; கலா 2:20) 2. கிறிஸ்துவினுடையவர்களாய் இருக்க வேண்டும் (1கொரி 5:23; கலா 5:24) 3. பரிசுத்தவானும், பாக்கியவானுமாய் இருக்க வேண்டும் (வெளி 20:4-6; எபி 12:14) 4. நல்லவர்களாய் நீதிமான்களாய் இருக்க வேண்டும் (யோ 5:28,29) 5. எப்போதும் ஜெபம் பண்ணி விழித்திருந்து முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பாத்திரவான்களாய் இருக்க வேண்டும் (லூக் 21:36) 6. ஆவிக்குரிய சபையில் இணைந்திருக்க வேண்டும் (1கொரி 12:13; எபே 1:30-33; 4:4-6; 5:27; கொலோ 1:18,24) 7. சுத்தமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (1யோ 3:2-3) 8. பிழையும் கறை திரையற்றவர்களுமாயிருக்க வேண்டும் (எபே 5:27) 9. பரிசுத்த ஆவிக்குள்ளே நடக்கவும், வாழவும் வேண்டும் (கலா 5:16-26) 10. கிடைத்த, கிடைக்கிற - வசன வெளிச்சத்தில் நடக்க வேண்டும் (1யோ 1:7; கொலோ 2:6).

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நீ எப்படி இருக்கிறாய், முதலாம் உயிர்த்தெழுதலுக்கு ஆயத்தமாயிருக்கிறாயா? முதல் ரக கூட்டத்தில் இணைந்து கொள்ள வாஞ்சிக்கிறாயா? இயேசு சீக்கிரம் வருகிறார்! அவரது இரகசிய வருகையில் சேர்ந்து கொள்ள ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

# இரண்டாம் மரணம் என்றால் என்ன?

சென்ற செய்தியில் முதலாம் உயிர்த்தெழுதலைப் பற்றிப் பார்த்தோம். இது சரீர மரணத்திற்குப்பின் வரும் உயிர்த்தெழுதல் என்று அறிவோம். சரீர மரணம், ஆதாமின் மீறுதலினாலே ஏற்பட்டது (ரோ 5:12) இந்த சரீரமரணம் இரட்சிக்கப்பட்டவன், இரட்சிக்கப்படாதவன் ஆகிய அனைவருக்கும் உண்டு. இது ஒரே ஒருமுறை தான் வரும் (எபி 9:27) இங்கே, செய்தித் தலைப்பிலே இரண்டாம் மரணம் என்று போடப்பட்டதாலே, முதலாம் மரணம் என்ற ஒன்று இருக்க வேண்டுமல்லவா! வெளி 20:6ன் படி முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான். இவர்கள் முதலாம் மரணத்தை அனுபவித்திருக்கிறார்கள் என்று பொருள்.

எது முதலாம் மரணம்? எபே 2:1ன்படி அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்திருப்பதே முதலாம் மரணம். அதாவது, தேவ ஆவியோடு தொடர்பின்றி, இரட்சிக்கப்படாமலிருப்பதே முதலாம் மரணம். இதுதான் ஆவிக்குரிய மரணம். இந்த ஆவிக்குரிய மரணத்திலிருந்துதான் நாம் மறுபடியும் பிறந்திருக்கிறோம்; இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (யோ 3:3,5).

இந்த ஆவிக்குரிய மரணத்திற்குட்பட்டோர் எல்லோருமே முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவதில்லை. இந்த முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறாத மற்றவர்கள்; ஆயிர வருட அரசாட்சி இந்த பூமியில் நடக்கும் வரை உயிர்த்தெழுவதில்லை (வெளி 20:5). ஆதாமுக்குள் எல்லோரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் உயிர்த்தெழுதலில் பங்கு பெறாத பாவிகளுக்கும் உயிர்த்தெழுதல் உண்டு. ஆனால், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுபவன் நித்திய ஜீவனை அடைகிறான். மற்றவர்களோ ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறார்கள் (யோ 5:28,29) இந்த ஆக்கினை அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே கிடைக்கிறது. இந்த அக்கனிக் கடலுக்குள்ளே தள்ளப்படுவது தான் இரண்டாம் மரணத்தின் முடிவு (வெளி 20:14,10; மத் 25:41).

அப்படி தள்ளப்படும் போது அவர்களின் நிலை எப்படியிருக்கும்? கல்லறைக்குள் போனது சரீரம் மட்டுமே என்பதால், கல்லறையிலிருந்து உயிர்த்தெழுவதும் அந்த சரீரம் மட்டும்தானே! வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின் போது (வெளி 20:12) பாவிகள் உயிர்த்தெழுவர். தங்கள் சரீரங்களோடே உயிர்த்தெழுவர் "மரித்தவர்களின் சரீரம்தான் மண்ணிலே மக்கிப்போயிருக்குமே! அப்படியிருக்கும்போது எப்படி

பழைய சரீரத்தோடு எழ முடியும்?" என்ற கேள்விக்கு, Germ theory பதிலளிக்கிறது. ஒவ்வொரு மனித உடலிலும் அழிக்க முடியாத (Indestructible) உயிரணு (Living Germ) உள்ளது என்றும், சரீரம் தூளாகிடினும் விலங்குகளால் இரைக்குள்ளாகப்படினும், அணுப்பொறிகளால் ஆவியாய்ப் போயிடினும், இந்த உயிர் நுண்மம் வாழ்ந்திருக்கும் என்றும், அதிலிருந்துதான் உயிர்த்தெழுதலின் சரீரம் உண்டாகப் போகிறதென்றும், இந்த Theory விளக்குகிறது. இதற்கு ஆதாரமாகத்தான் 1கொரி 15:35-38ல் பவுல் எழுதியிருக்கிறார். இந்த சரீரத்தோடே முதலாம் மரணமடைந்த பாவிகள், வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின் போது, இதே சரீரத்தோடே உயிர்த்தெழுவார்கள். ஜீவ புஸ்தகத்தில் பெயரெழுதப்படாததினால், இவர்கள் இரண்டாம் மரணத்திற்கு உட்பட்டு அக்கினிக் கடலிலே பங்கடைவார்கள் (வெளி 20:15). சரீர மேனியோடே நரகத்தில் தள்ளப்படுவார்கள். அங்கே தான் பிசாசும், அந்தி கிறிஸ்துவும் கள்ள தீர்க்கதரிசியும் மற்றும் வெள்ளாடுகளாய்ப் பிரிக்கப்பட்ட இயேசு ஒலிவமலையில் காலடி வைத்து பூமிக்கு வரும்போது உயிரோடிருந்த புறஜாதி மக்களும் (வெளி 20:10; மத் 25:41) இருக்கிறார்கள். பொதுவாக மரணம் என்றாலே Cessasion of Communication - அதாவது தொடர்பு அற்றுப் போகுதல் என்று Dictionary (அகராதி)யில் அறிகிறோம். இந்த அக்கினிக் கடலிலே அவதிப்படுவோருக்கு தேவ தொடர்பு அற்றுப் போவதால், (முதலாம் ஆவிக்குரிய மரணம் போல) இனி மறுபடியும் இரட்சிப்பு என்பதே கிடையாது என்பதால் (எபி 9:27; வெளி 22:12) இந்த இரண்டாம் மரணத்தை நித்திய மரணம் என்றும் சொல்லலாம்.

முதல் ஆவிக்குரிய மரணத்திலும் தேவ தொடர்பு அற்றுப் போயிற்று; இரண்டாவது மரணத்திலும் பரலோக தொடர்பு முழுமையாய் அற்றுப் போயிற்று. இதுவே 2ம் மரணம். அர்மகதொன் பள்ளத்தாக்கு யுத்தத்திலேயே அந்திகிறிஸ்துவும், கள்ள தீர்க்கதரிசியையும் உயிரோடே தேவன் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே போட்டபடியால், அவர்கள் புறம்பான மாம்ச சரீரத்தோடே நரகம் போனார்கள். மட்டுமல்ல. 1000 வருடத்திற்குப் பிறகு சாத்தான் தன் ஆவிக்குரிய சரீரத்தோடே அதே அக்கினிக்கடலில் தள்ளப்படும் போதும் அவர்கள் எரிந்து போகவில்லை. எனவே நரக அக்கினி மாம்ச சரீரத்தை எரிக்காது; "மத் 25ல் வரும் செம்மறியாடு அதே மாம்ச சரீரத்தோடே தான் நரகத்தில் தள்ளப்பட்டது" என்றும் கணிக்கப்படுகிறது... எப்படியானாலும் 2ம் மரணம் இரட்சிக்கப்படாத பாவிகளுக்கு என்றும், இது அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலுக்குள் தள்ளப்படுவது

என்றும், பரலோக தொடர்பே நிரந்தரமாய் அற்றுப் போவது என்றும் அறிகிறோம்.

❖ ❖ ❖

# உபவாசம் பற்றி...

"ஏதோ ஒரு காரியம் நடக்க வேண்டுமென்றால் உபவாசம் இருக்க வேண்டும். அப்படியாய் உபவாசம் இருந்து உடலை வருத்தி ஆண்டவனிடம் ஜெபித்தால் அவர் இரங்கி நன்மை செய்வார்" என்று பல சபைகள் நம்பி செயல்படுகின்றன. இப்படி அறியாமையினால் தொடர்ந்து அழுது ஜெபிக்கும் போது, கண்ணீரை துடைக்கிற தேவன் இரக்கமாய், வேண்டிய காரியங்களை வாய்க்கச் செய்யும்போது, உபவாசமே சகாயம் பெற ஏற்றவழி என்று முடிவுகட்டுகின்றனர். உடலை வருத்தி லஞ்சம் கொடுப்பது போல் கொடுத்தால் தான் தேவன் பதிலளிப்பாரா? அந்நிய தெய்வங்களும் அப்படிச் செய்தால் தான் பலன் கிடைக்கும் என்று போதிக்கிறதே! யோ 1:12ன்படி அதிகாரமுள்ள பிள்ளையாகிய நாம் ஏன் அழுது கேட்டுப் பெற வேண்டும்? புத்திரர் என்ற உரிமையோடு கேட்கமுடியாதா? தைரியமாய் கிருபாசனத்தண்டையிலே நுழைய முடியாதா? (எபி 4:16).

மனிதன் ஏதேனிலே விழுந்து போகக்காரணமே உணவுதான் (கனி) ஆதி 3:6. எனவே சாப்பாட்டை குறைக்க குறைக்க அவன் விழுந்துபோக மாட்டான் எழுந்து நிற்பான். மத் 4:4ஐ பாருங்கள். அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இயேசு இருந்ததால்தான் அவர் எழுந்து நின்றார். பிசாசுக்கு எதிர்த்து நின்றார் (See நீதி 23:2,20,21) கெத்சமனே தோட்டத்தில் நித்திரை மயக்கம் ஏன்? ஜெபம் ஏன் சீஷர்களால் செய்ய முடியவில்லை? சிந்தியுங்கள். உணவை கொஞ்சமாகவோ முழுமையாகவோ இல்லாமலாக்குவது அல்லது குறைப்பது தான் உபவாசம். இதனால் மாம்சம் ஒடுக்கப்படுகிறது மாம்சீகமும் (Carnal) ஒடுக்கப்படுகிறது. ஆவிக்குரிய தன்மை பெலனடைகிறது.

வேதத்தில் 35 இடங்களில் உபவாசம் உள்ளது. தரியுராஜா ஒரு இரவு உபவாசம் இருந்தான் (தானி 6:18-24) யார் தேவன் என உணர்ந்தான். மோசே, யோசுவா, எலிசா, இயேசு போன்றோர் 40 நாள் உபவாசமாயிருந்தனர். 40 நாளுக்கு மேல் தண்ணீர் குடியாமல் மனிதனால் உபவாசம் இருக்க முடியாது என்று விஞ்ஞானம்

சொல்கின்றது. யூதர்களின் சட்டப்படி வருஷத்தில் பாவ நிவாரண நாளன்று (லேவி 23:27-32) உபவாசமிருக்க வேண்டும். 1200 ஆண்டுகளுக்குப் பிறகு சகரியா காலத்தில் 4 உபவாசம் ஒரு வருஷத்தில் இருந்தது (சக 8:19) இயேசுவுக்கு 500 ஆண்டுகளுக்கு முன் 104 உபவாசம் ஒரு வருஷத்தில் இருந்தது (லூக் 18:12). நாமும் அப்படித்தான் ஆசரிக்கிறோமா? சரீர ஆரோக்கியத்தை கெடுக்கும்படியாய் உபவாசம் கூடாது (அப் 27:33,34). எல்லா விசுவாசியும் உபவாசிக்க வேண்டியதுதான் (மத் 9:15). ஆனால் இந்த சரீரம் தேவனுடைய ஆலயம் என்பதை மறந்து விடக்கூடாது.

1. உபவாசத்தால் ஆவி பெலனடைகிறது. வசன விசுவாசம் வளர்கிறது; அவிசுவாசம் ஒழிகிறது (See மத் 4:1-11).
2. Faith needs prayer; prayer needs fasting. ஜெபம் செய்ய உபவாசம் தேவை. மற்றபடி உறக்கமும் சோர்வுமே நம்மை ஆண்டு கொள்ளும்.
3. தேவனுக்கு முன்பாக ஆத்மாவைத் தாழ்த்த (கீழ்ப்படிதல்) இது உதவும் (சங் 35:13).
4. உபவாசம் ஆத்மாவை சிட்சித்து வழி நடத்துகிறது (சங் 69:10).
5. சுய விருப்பம், சித்தம் எல்லாம் சிலுவையில் அறையப்படுகிறது.
6. எல்லா உலகக்காரியங்களையும் விட்டுவிட்டு தேவனோடு இருக்க வைக்கிறது (1கொரி 7:5).
7. ஜீரண உறுப்புகளுக்கு ஓய்வும் தருகிறது.
8. ஆவியாகிய பிசாசை வெல்ல ஆவியிலே வல்லமை வருகின்றது (மத் 17:21). அற்புதம் அடையாளம் நடக்கும்.
9. சோதனையை தாங்கி ஜெயிக்க முடிகிறது (1கொரி 10:13). மொத்தத்தில் விசுவாசத்திற்கு தேவை ஜெபம்; ஜெபத்திற்கு தேவை உபவாசம். விசுவாசத்தோடு கூடிய ஜெபம் உபவாசத்தில் செய்யும்போது அதிசயம் அற்புதம் நடக்கும், ஊழியத்திலும் நடக்கும். உபவாச நாளில் புருஷன் மனைவி பிரிந்து இருக்க வேண்டும் (1கொரி 7:5). தேவனுக்கு மட்டுமே தெரிய உபவாசிக்க வேண்டும் (மத் 6:16-18). வால் போஸ்டர் அடித்து கூட்டம் போட்டு விழா போல அல்ல.

**<u>வேதத்திலே எப்போதெல்லாம் உபவாசிக்கப்பட்டது என்று பார்ப்போம்.</u>**

1. நினிவே பட்டணத்தார் அழிவு வரும் போது மாம்சத்தை, மாம்சீகத்திலுள்ள பாவங்களை விட்டு உபவாசித்தார்கள் (யோனா

3:5-10). அவர்களின் பொல்லாத வழியிலிருந்தும் தேவனின் கோபாக்கினையிலிருந்தம் விடுதலை பெற்றார்கள்.

2. தேவனின் தீர்ப்பு வரும்போது யேசபேலின் புருஷன் ஆகாப்ராஜா உபவாசித்தான். ஆவியிலே எளிமை வந்தது (1ராஜா 21:23,24.27.29)

3. தேவதண்டனை வரும்போது உபவாசம் பண்ணினான் தாவீது (2சாமு 12:16-23) ஆனாலும் சரித்திர நியாயத்தீர்ப்பு நடந்தது (1தீமோ 5:24). இந்த உபவாசத்தின் மூலமாய் தேவ சித்தத்தைப் புரிந்தான் தாவீது

4. சாத்தானின் எதிர்ப்புகள் வரும்போது பவுலும் மற்றவர்களும் உபவாசித்தார்கள்; மெலித்தா தீவுக்கு வந்தார்கள் (அப் 27:9,33) இப்படி ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! மொத்தத்தில் உபவாசம் இருக்கும் போது மாம்சமும் மாம்சீகமும் கீழ்ப்படுகிறது. நம் ஆவி உயர்கிறது; வல்லமையைப் பெறுகிறது. ஆவிக்குரிய பிசாசின் கிரியைகளுக்கு எதிர்த்து நிற்க முடிகிறது; பிசாசை தோற்கடிப்பதால் எதிரே வந்த அத்தனையையும் ஒன்றுமில்லாமல் ஆக்க முடிகிறது. உபவாசிப்பதால் ஜெபம் பெருகுகிறது; ஜெபம் பெருகுவதால் விசுவாசம் வளர்கிறது; விசுவாசம் வளர்வதால் உலகை, மாம்சத்தை, பிசாசை ஜெயிக்க முடிகிறது.

❖ ❖ ❖

# கள்ள உபதேசங்கள் – வசன விளக்கம்

விசேஷமாய் தமிழ்நாட்டில் நம் கண்ணுக்கு முன் தெரிகின்ற பல சபைகளில் உள்ள கள்ள உபதேசங்களையும் ஏற்கெனவே எழுதி இருக்கிறேன். எபி 6:1,2ல் உள்ளது தான் கிறிஸ்தவத்தின் மூல உபதேசம்; அடிப்படை உபதேசம். இதற்கு எதிரிடையான அத்தனையுமே கள்ள உபதேசம்தான். ஆனால், வசனம் தெரியாமல் உபதேசம் பண்ணுவதெல்லாம் தவறான உபதேசங்கள். கள்ள உபதேசங்களை எதிர்த்து சொல்லும்போது அதற்கு வசன ஆதாரம் தேவையல்லவா! எனவே ஒரு சில கள்ள உபதேசங்களை வசன ஆதாரத்தோடு விளக்க விரும்புகிறேன். ஆவியானவர் தாமே வழி நடத்துவாராக!

(1) **சனிக்கிழமையை ஓய்வு நாளாக ஆசரிக்காதவன் அந்திகிறிஸ்து என்பது கள்ள உபதேசம்.** ஆதியாகமம் முதல் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வெளிவந்த சீன் வனாந்தரம் வரை ஓய்வு நாள் என்றே வேதத்தில் இல்லை; இதை எந்த மனிதனும் ஆசரிக்கவும் இல்லை. சீனாயில்தான் ஆரம்பமானது. உபா 5:15ன் படி அடிமைத்தனத்திலிருந்து வந்த இஸ்ரேலர் மறுபடியும் தொடர்ந்து வேலை செய்யாமல் ஓய்வை அனுசரிக்க தேவன் கட்டளை தந்தார். தேவன் தன் படைப்பின் வேலையை 7ம் நாளில் ஓய்ந்திருக்கச் செய்தார். இதை ஆசரித்தால் ஏசா 58:13-14ல் உள்ள யாக்கோபின் ஆசீர்வாதம் கிடைக்கும். கலா 3ன்படி ஆபிரகாமின் ஆசீர்வாதம் ஆவிக்குரிய இஸ்ரேலர்களாகிய நமக்குத் தேவையே ஒழிய மாம்சீக இஸ்ரேலருக்குரிய யாக்கோபின் ஆசீர்வாதம் நமக்குத் தேவையில்லை. ஞாயிற்றுக்கிழமை வேதத்தின்படி ஓய்வுநாளல்ல என்றும் அது வாரத்தின் முதல் நாள் - உயிர்த்தெழுந்த நாள் என்றும் அறிய வேண்டும். சனிக்கிழமைதான் ஓய்வு நாள் (லூக் 23:54; மத் 28:1); சங் 118:22-24ன்படி ஞாயிறு, மனமகிழ்ச்சியின் நாள். கி.பி. 598ல் போப் தன் அதிகாரத்தோட ஞாயிறுதான் ஓய்வுநாள் என்று சொல்லியிருக்கிறார். Refer "Lucious Fenaris Prompta Publication" & "Catholic Official Organ of Cordinal gibbons" ஞாயிறை, அரசாங்கம் விடுமுறை நாளாக்கியதால் மட்டுமே அந்த நாளில் சபையார் கூடி வந்து ஆராதிக்கிறோம்; ஓய்வு நாள் என்று அல்ல. ஞாயிறு விடுமுறை மாற்றப்பட்டால், மாற்றப்படும் நாளில் ஆராதிப்போம். பழைய உடன்படிக்கையில் 10 கற்பனையும் உள்ளது (யாத் 20 to 24:4,7,8). அதில் 4ம் கற்பனை ஓய்வுநாள் ஆசரிப்பு. 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணமாகிய பழைய உடன்படிக்கையை இயேசு சிலுவையில் நிறைவேற்றிவிட்டார் (மத் 5:17-18; ரோ 10:4; எபே 2:14-16). இது இஸ்ரவேலருக்கு விரோதமான சாட்சியாயிருந்தது (உபா 31:24-26); எனவே சிலுவையில் கிறிஸ்துவின் செயலால், தானாய் ஒழிந்தது (கொலோ 2:14-15; எபி 8:13). கொலோ 2:16-17ன் படி ஓய்வு நாள் ஆசரிப்பு கிறிஸ்துவுக்கு நிழலாட்டம். எப்படி? மத் 11:28-30ன் படி இயேசுவிடம் வந்தால் ஆத்ம இளைப்பாறுதல் உண்டு; 3யோ 2ன்படி சரீர சுகமும் இளைப்பாறுதலும் வந்து சேரும். ஆகவே ஓய்வுநாள் ஆசரிப்பின் மூலம் நமக்கு ஏதும் தேவையில்லை. இயேசுவே நிஜமானார். மட்டுமல்ல லேவி 23:1-3ன்படி ஓய்வு நாள் என்பது ஒரு பண்டிகை நாள் (யாத் 31:13; லேவி 19:3; எசே 20:20). கொலோ 2:16-17ன்படி பண்டிகையின்

நிஜமாகிய இயேசு வந்தபின் இந்த நிழல் பண்டிகைகள் தேவையில்லை.

(2) **ஆத்மா என்ற ஒன்று இல்லை என்பவன் படைப்பையே சந்தேகிப்பவன்;** பெரியார் கொள்கையும் இதுதான். ஆதி 1:26,27ன் படி ஆவியாகிய தேவன் தன் சாயலின் படியும் ரூபத்தின்படியும் உள்ளான மனுஷனாகிய ஆவியையும் ஆத்மாவையும் சிஷ்டித்தார் (See 2கொரி 4:16). ஆவியும் ஆத்மாவும் இணைந்தே உள்ளது. (எபி 4:12). இயேசு வரும்போது ஆவி, ஆத்மா சரீரம் குற்றமில்லாதிருக்க வேண்டும் (1தெச 5:23). See மத் 11:29,26,38; யோ 12:27; உபா 5:5; 1சாமு 18:1; யோபு 14:23; சங் 42:6; 84:2; நீதி 24:14; 2:10. ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள்" புத்தகத்திலுள்ள ஆவி - உயிர் - ஆத்மா செய்தியைப் படியுங்கள்.

(3) **"நரகம் என்ற ஒன்று இல்லை; உலகை தேவன் அக்கினியால் அழித்து சாம்பலாக்குவாரே (மல் 4:1-3) அதுதான் நரக வேதனை"** என்பது கள்ள உபதேசம். மத் 25:41; வெளி 19:20; 20:10; மத் 10:28 எல்லாம் பொய்யா?

(4) **இஸ்ரவேல் சபையின் மறுமலர்ச்சியே கிறிஸ்தவ சபை என்பது கள்ள உபதேசம்.** மத் 16:18ன் படி இயேசு புதிய கிறிஸ்தவ சபையை, உருவாக்கினார். அவர் சுய ரத்தத்தால் சம்பாதிக்கப்பட்ட புதிய சபை இது (அப் 20:28); புது சிருஷ்டி இது (எபே 2:14,16) பவுலுக்கு மட்டுமே வெளிப்படுத்தப்பட்ட இரகசியம் இது (எபே 2:18 - 3:6).

(5) **"இரட்சிக்கப்பட்டேன் என்று ஒருவரும் சொல்ல முடியாது.** மத் 24:13ன் படி இறுதியில் தான் இரட்சிப்பு உண்டு" - இது ஒரு கள்ள உபதேசம். அப் 2:47ன் படி, முதலாம் நூற்றாண்டிலேயே இரட்சிக்கபடுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டார் என்றால், அந்த இரட்சிக்கப்பட்டவர்கள் யார்? எபே 2:5,8 வசனத்தில் சொல்லப்படும் இரட்சிக்கப்பட்டோர் யார்? இரட்சிப்பிலே 3 வகை உண்டு. ரோ 10:9,10; 1பேது 1:23; யோ 3:3ன் படி மறுபடியும் ஆவியில் பிறப்பதுதான் ஆரம்ப இரட்சிப்பு. இது ஆவிக்குரிய இரட்சிப்பு. ரோ 12:1; யாக் 1:21ன் படி தினந்தோறும் ஆத்மாவிலே மறுரூபமாவது ஆத்ம இரட்சிப்பு. ரோ 8:23,24ன் படி இறுதியில் சரீர மீட்பாவது சரீர இரட்சிப்பு. ஆவிக்குரிய இரட்சிப்பில் நிலைத்திருந்து கனி கொடுக்கும் போது இறுதி இரட்சிப்பு, மத் 24:13ன் படி வருகையில் கிடைக்கும்.

(6) **"பரதீசு என்ற ஒன்று இல்லை" என்பது கள்ள உபதேசம்.** மரித்த பின் எல்லா ஆவியும் தேவனிடம் தான் போகும் (பிர 12:7) என்பது உண்மைதான். ஆனால் லூக் 16ன் படி, பாவி ஐஸ்வரியவானும், லாசரும் தனித்தனி இடம் போனார்களே. எப்படி? லூக் 23:43ன் படி நீதிமானாக்கப்பட்ட இயேசுவின் ஆவியும் தேவனிடம் தான் போனது. அங்கிருந்து இயேசுவின் ஆவி பாதாளம் அனுப்பப்பட்டு (சங் 16:10) மூன்றாம் நாள் ஐஸ்வரியவானிருந்த பாதாளத்திலிருந்து வெளிக் கொணரப்பட்டது. கள்ளனின் ஆவி லாசரு இருந்த இடம் போயிருக்கும். இரண்டு ஸ்தலமும் பூமிக்குள் தான். ஆனால் புதிய ஏற்பாட்டிலோ பரதீசு என்று - பரிசுத்தவான்களின் ஆவிகள் இருக்குமிடம் (எபி 12:23) மூன்றாம் வானத்தில் இருப்பதால் 2கொரி 12:3ன் படி அறிகிறோம். பூமிக்குள் இருந்த பரிசுத்தவான்களின் ஆவியை இயேசு தன்னோடு மேலே கொண்டு போய்விட்டார் என்று எபே 4:8-10ன் மூலம் சிலர் நிதானிக்கிறார்கள். "Weekly World News" (24.4.1990) என்ற பத்திரிக்கையைப் படித்தால், பூமியின் 9 மைல் ஆழத்திற்கு கீழே ஐஸ்வர்யவான் இருந்த பாதாளம் இருப்பதை அறியலாம். See வெளி 6:9,10.

(7) **"பரிசுத்த ஆவி என்பது தேவனல்ல; அது ஒரு சக்தி" என்கின்றனர் கள்ள உபதேசக்காரர்.** ஆவியானவர் கர்த்தர் (2கொரி 3:17); அவர் ஆள்தத்துவமானார் (ஆதி 1:2; லூக் 3:22; யோவா 14:16,26) இது குறித்து இந்த புத்தகத்திலுள்ள "பிதா இயேசு பரிசுத்த ஆவி" என்ற செய்தியை வாசியுங்கள். சில இடங்களில் வேதத்தில் ஆவி என்று மட்டும் இருந்தால், Power, வல்லமை, சக்தி எனப் பொருள்படும். ஆனால் பரிசுத்த ஆவியானவர் என்றால் அது ஆள்தத்துவமுள்ள தேவனையே குறிக்கும்.

(8) **"சங் 2:7ன் படி இயேசு தேவனல்ல; அவர் சிஷ்டிக்கப்பட்டவர்" என்பது கள்ள உபதேசம்.** அப் 13:32,33; எபி 5:5; 1:5 போன்றவற்றை வாசித்தால் சங் 2:7 உயிர்த்தெழுதலைப் பற்றியது என்றும், சிருஷ்டிக்கப்பட்டவர் என்பது அல்ல என்றும் உணரலாம். மோசேயிடம் முட்செடியில் பேசியவர் இவரே (See யோவா 8:24,28,58; 18:33; அப் 7:30). யோ 1:1; எபி 1:8,10; 1தீமோ 3:16; 1யோ 5:20 போன்ற வசனங்களை வாசியுங்கள்.

(9) **இரட்சிக்கப்பட்ட போதே பரிசுத்த ஆவி பெற்றாயிற்று என்பதும், பெந்தகொஸ்தே நாள் அனுபவம் நமக்கல்ல என்பதும் கள்ள உபதேசம்.** எபே 1:13ஐ ஆங்கிலத்தில்

வாசியுங்கள். விசுவாசிகளான பிற்பாடுதான் பரிசுத்த ஆவியை அந்த மக்கள் பெற்றார்கள் என்று அப் 19ல் அறிகிறோம். பெந்தகொஸ்தே அனுபவம் நம் எல்லோருக்கும் உண்டு என்று தானே அப் 2:39 சொல்கின்றது. See அப் 8:12,15; 10:44-46. "அந்நிய பாஷையா? அடையாளமா?" என்ற தலைப்புச் செய்தியை வாசியுங்கள்.

(10) **"1கொரி 13:10ன்படி தற்போது நடக்கும் அற்புதங்கள் பொய்; வரங்கள் நமக்கில்லை" என்பது கள்ள உபதேசம்.** மாற் 16:20 பொய்யா? 1கொரி 13:10ன் படி எவைகளெல்லாம் ஒழியுமாம்? 1கொரி 13:8,9ஐ வாசியுங்கள். அறிவும் ஒழியுமாமே! அப்படியானால் இன்று தானி 12:4ன் படி அறிவு பெருகிப் போகவில்லையா? ஒழிந்து போயிற்றா? இயேசு பூமியை ஆளுகை செய்யும் போதுதான் நம் அறிவு, வரங்கள் எல்லாம் தேவையில்லை; அழிந்து போகும். அது வரை வரங்கள் கிரியை செய்யும்.

(11) **"திரித்துவம் என்பது கிடையாது" என்கின்றனர் கள்ள உபதேசக்காரர்.** 1யோவா 5:7; மத் 28:19ன் விளக்கம் என்ன? மூலபைபிளில் இல்லையென்றால் இன்னும் இவர்கள் ஏன் இந்த வசனத்தை வைத்திருக்கிறார்கள்? God - தேவன் என்பதற்கு மூலபாஷை Elohim; இரண்டுக்கும் மேற்பட்ட பன்மையைக் குறிக்கும். "The LORD our God is one LORD" (உபா 6:4) என்பதில் ஒருமையில் பன்மை போடப்பட்டுள்ளது. ஆதி 2:24ல் ஆணும் பெண்ணுமாக ஒரே மாம்சமாயிருக்கிறார்கள் என்ற கருத்தின் வார்த்தையே இங்கும் உள்ளது. சங் 1:7; 2:17; சங் 110:1; அப் 7:55,56; ஆதி 1:2 போன்ற பல வசனங்களைப் பார்க்கலாம். "திரித்துவம்" என்ற வார்த்தை வேதத்தில் நேரிடையாக இல்லையென்பதால் அந்த சத்தியம் பொய்யா? "ஜெபமே ஜெயம்" என்ற வார்த்தை உண்டா? இல்லையே! அப்படியானால் ஜெயமே ஜெபம் என்பது பொய்யா?

(12) **"இயேசு தான் பிதா; இயேசுதான் பரிசுத்த ஆவியானவர்;" என்பது பொய் உபதேசம்.** யோ 4:23ன் பொருளென்ன? யோ 14:16ஐ தியானியுங்கள். பிதாவின் வலது பக்கம் நிற்பதை ஸ்தேவான் கண்டது பொய்யா?

(13) **இயேசுவின் நாமத்தில் தான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்பது வேதப்புரட்டு.** மத் 28:19-20 வேண்டாமா? அப் 10:48ல் கர்த்தரின் நாமத்தில் அல்லவா கொடுத்தார்கள்? அப்போஸ்தலர் செய்தது போல் செய்ய வேண்டுமென்றால் அவர்கள் எங்காவது இயேசுவின் நாமத்தில் கொடுத்ததாக

வசனமுண்டா? இயேசுவின் நாமத்தில் எடுத்ததாகத்தான் வசனம் உண்டு. 1கொரி 6:11ல் சொல்லப்பட்டபடி, விசுவாசி, இயேசுவின் நாமம் தரித்து - இயேசுவைத் தரித்து (கலா 3:27) - இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் எடுக்க நிற்க வேண்டும். பிதா - குமாரன் - பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஊழியர் ஞானஸ்நானம் கொடுப்பார். கொடுக்கிறவர், எடுக்கிறவர் வேலையை செய்யக்கூடாது; எடுக்கிறவர், கொடுக்கிறவர் வேலையை செய்யக்கூடாது. அப்போஸ்தலர் செய்தபடி செய்ய வேண்டும் என்று வீண்வாதம், வசன ஆதாரமின்றி செய்தால், அப் 20:7,11; 2:46 போன்றவற்றில் அப்பம் மட்டுமே பிட்டதாக உள்ளது; ரசம் சாப்பிட்டதாக இல்லையே. நாமும் அப்படியே அப்பம் மட்டும் பிட்கலாமா?

(14) **ஏசா 9:6ல் வரும் ''குமாரன்'' பிரன்ஹாம் என்பது வேதப்புரட்டு.** பாலனாய் இருந்த இயேசு ரோ 1:5ன் படி தேவ குமாரனாய் நமக்கு கொடுக்கப்பட்டார். குமாரனாகிய இயேசுவை மறுதலிப்பவன் அந்திகிறிஸ்து. (1யோ 4:3)

(15) **ரோ 16:16ன் படி கிறிஸ்துவின் சபை என்ற பெயரிருந்தால் தான் கிறிஸ்தவ சபை என்பது கள்ள உபதேசம்.** வெளி 2,3ல் உள்ள சபைகளுக்கு ஊர் பெயர்கள் உண்டே! 1கொரி 1:20; 10:33; 2கொரி 1:1; 2தெச 4:4 போன்றவற்றில் தேவனுடைய சபை (Church of God) என்று உள்ளதே. அது கிறிஸ்தவ சபை இல்லையா? 1தீமோ 3:15ல் உள்ள "ஜீவனுள்ள தேவனுடைய சபை" கிறிஸ்தவ சபைதானே! சபை பெயர் இரட்சிக்காது. தேவ நாமம் மகிமைப்படும்படி பெயர் வைப்பது தவறில்லை.

(16) **"சபையில் கைதட்டிப்பாடுவதோ இசைக்கருவி வாசிப்பதோ கூடாது'' இது கள்ள உபதேசம்.** பரலோகிலேயே இப்படி நடக்கிறது என்றால் நமக்கு மட்டும் தடையா? See எசே 28:13; வெளி 5:8; எபே 5:19,20; சங் 150:3-5. துதிப்பதிலே பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு எல்லாவற்றிலும் ஒன்றுதான். ஒரே தேவனுக்குத்தானே என்றும் துதி; பரலோகமே நமக்கு மாதிரி. அன்று லூசிபரின் பணி தெரியாதா?

(17) வாரத்தின் முதல் நாள்தான் அப்பம் பிட்க வேண்டும் என்பது கள்ள உபதேசம். அப் 20:7ல் உள்ளது பவுலுக்கு கொடுக்கப்படும் பிரிவு உபச்சார கூட்டத்தில் நடக்கும் இராப்போஜனம். இன்றும் பல சபைகளில் இப்படி நடக்கின்றன. அன்று இரவில்தான் அப்பம் பிட்டார்கள். அப்படித் தான் இன்றும் பிட்க வேண்டுமா?

அப் 2:46ன் படி வீடுகள்தோறும் தினமும் அப்பம் பிட்டார்களே, நாள் முக்கியமல்ல; அவர் நினைவாய் என்றைக்கும் இதை செய்யலாம் (லூக் 22:19; 1கொரி 11:23-25).

(18) **குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் அவமதிப்பதாகும்.** மனந்திரும்பி பாவ மன்னிப்பு பெற்று ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் (அப் 2:38; மத் 28:18).

(19) **பரிசுத்த ஆவி பெற்றதற்கு அடையாளம் உறுதி பூசுதல்; திடப்படுத்தல் அல்ல.** அந்நிய பாஷையே அடையாளம் (அப் 2:8).

(20) **பாவங்களை சபை மேய்ப்பரிடம் இரகசியமாய் அறிக்கையிட வேண்டுமென்று** ஒரு சபையும், சபையிலே எழும்பி நின்று பாஸ்டரிடம் பகிரங்கமாய் அறிக்கையிட வேண்டுமென்று ஒரு சபையும் கூறுவது வேதப்புரட்டு. பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் தேவனிடம் மட்டுமே உண்டு (மாற் 2:5,10; 1யோ 1:9). இயேசுவை கொன்ற யூதர்களுக்கு இது புரிகிறது; நம்மவர்களுக்கு இது புரியவில்லை யோ 20:23 ஐ மத் 6:12 உடன் ஒப்பிட்டு பாருங்கள்.

(21) **சிலைகள், படங்கள், வடிவங்கள், சிலுவைகள், புறா வடிவங்கள் உருவாக்குவதும், நமஸ்கரிப்பதும் தேவ துரோகம்** (யாத் 20:4; ரோ 1:23).

(22) **"மரியாள் உயிரோடே பரலோகம் போனாள்; அவளிடம் ஜெபிக்க வேண்டும்; அவளை வணங்க வேண்டும்'' என்பதெல்லாம் பிசாசின் கிரியை.** யோ 3:13ன் படி இயேசுவைத் தவிர யாரும் பரலோகம் போகவில்லை. இயேசுவின் மூலம் தான் ஜெபிக்க வேண்டும். (யோ 16:23; 14,13) மனுஷர்களையோ தூதர்களையோ வணங்குதல் பாவம் (யாத் 20:1,2; அப் 14:11-17; வெளி 22:9).

(23) **10 கற்பனை கிறிஸ்தவனை ஆள்கிறது என்பது கள்ள உபதேசம்.** 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் சிலுவையில் ஒழிந்தது. தேவனின் வார்த்தையே நம்மை வழி நடத்துகிறது. அவரே வழி; சத்தியம் (Law - Truth); வசனம்; ஜீவன்.

(24) **உத்தரிக்கிற ஸ்தலம் (Purgatory) என்ற ஒன்று உண்டு என்பது பொய்.** எபி 9:27; 2கொரி 5:10; வெளி 22:12 போன்ற பல வசனங்களை அறிந்திருந்தால், உத்திரிக்கிற ஸ்தலம் உண்டென்றும் அதிலுள்ள ஆத்மாக்கள் மோட்சம் போகும்படி

ஜெபிக்க வேண்டும் என்பதும் தவறு என புரிந்திருக்குமே! All Souls day; All saints day etc. எல்லாம் அறியாமையில் வந்தது.

(25) **மரியாள் மற்றும் புனிதர்களுக்கு பலி செலுத்துவது பிசாசுக்கு பலியிடுவது போல.** தேவன் இயேசு நமக்காய் பலியானதினாலே இனி தேவனுக்குப் பலியிடுவதே தேவையில்லை என்று சொல்லும்போது இவர்களுக்கு பலி ஏன் செலுத்த வேண்டும்? இனி நாம் தேவனுக்கு மட்டுமே செலுத்த வேண்டிய ஒரே பலி ஸ்தோத்திர பலியே!

(26) **"ஞாயிறு, ஓய்வு நாள்" என்ற கள்ள உபதேசம் போப் மூலம் வந்தது.** ஞாயிறு வாரத்தின் முதல் நாள்; நியாயப்பிரமாண ஓய்வு நாளுக்கு அடுத்த நாள்; இயேசு உயிர்த்தெழுந்த நாள் (மத் 28:1) எனவே ஞாயிறு மனமகிழ்ச்சியின் நாள்.

(27) **அறுப்பின் பண்டிகை, சேர்ப்பின் பண்டிகை, பஸ்காப் பண்டிகை போன்ற லேவி 23ன் பண்டிகைகளை கொண்டாடுவது இயேசுவின் முதலாம் வருகையை அவமதிப்பதாகும் (கொலோ 2:17).**

(28) **"நீதிமான் ஒருவனுமில்லை; எல்லாரும் பாவிகள் தான்" என்று சொல்வது இயேசுவின் இரத்தத்தின் மகிமையை அவமதிப்பதாகும்.** ரோ 3:23,24; 1கொரி 6:11 போன்ற பல வசனங்களால் இரட்சிக்கப்பட்ட அனைவரும் நீதிமான்களே!

(29) **புதிதாய் சபையில் சேர்வோர் தேவைப்பட்டால் முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கலாம் என்று சொல்லும் சபையே கள்ள உபதேச சபை.** கண்டிப்பாய் அனைவரும் மனந்திரும்பி பாவமன்னிப்பு பெற்று ஞானஸ்நானம் பெற்றே ஆக வேண்டும். இதுவே தேவனோடு செய்யும் உடன்படிக்கை (அப் 2:38; மாற் 16:16; 1பேது 2:21).

(30) **"ஈனச்சிலுவை இயேசுவினால் புனித சின்னமாயிற்று; சிலுவை மரத்திலே ஆசீர்வாதம் உண்டு" என்பது கள்ள உபதேசம்.** உணர்வில்லாத உயிரில்லாத சிலுவையை புனிதமாக்க இயேசு மரிக்கவில்லை; பாவியாகிய நாம், புனிதமாகவே மரித்தார் (யோ 3:16) மரக்கட்டை புனிதமாகாது. சிலுவையில் தொங்கிய இயேசுவின் வார்த்தை தான் ஆசீர்வாதமே ஒழிய சிலுவையால் அல்ல.

(31) **கொடியின் கீழ்தான் ஞானஸ்நானம் என்பது கள்ள உபதேசம்.** அப் 8:36ல் சொன்ன காந்தேகே மந்திரியின் உணர்வு

இவர்களுக்கு இல்லை. இயேசு கொடியின் கீழா ஞானஸ்நானம் எடுத்து மாதிரியைக் காட்டினார்?

(32) **திருமணம் மற்றும் ஊழியம் விஷயத்தில் எந்த சபையோடும் இணையலாம் என்பது அருவருப்பானது.** மாறுபாடுள்ள சந்ததியை விட்டுவிலகினால் மாத்திரமே இறுதி இரட்சிப்பு (அப் 2:40). இது விக்ரக ஆராதனைக்கு சமம் (2 கொரி 6). தேவன் ஏன் மோசேயை கொல்லப்போனார்? இரட்சிப்பின் அனுபவம் இல்லாத மனைவியோடு மோசே ஊழியம் போனதினால்தானே! (யாத் 4:4-26). இரட்சிப்பின் அனுபவமில்லாத குழந்தை ஞானஸ்நானம் கொடுக்கும் கள்ள உபதேச சபைகளில் அங்கம் வகிப்போரோடு ஊழியம் செய்வது பாவம்.

(33) சபையில் பாஸ்டரே கிடையாது; எல்லோரும் சகோதரர்கள் என்று சொல்வது தேவனுக்கு விரோதமானது. எபே 4:13ஐ வாசியுங்கள்.

(34) பரிசுத்த ஆவி வந்ததுதான் 2ம் வருகை என்பது கள்ள உபதேசம். அப்படியானால் யோ. 14:1-3; வெளி,22:12; 1 தெச. 4:16-18 போன்ற வசனங்கள் எதற்கு?

இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! எபி 6:1,2ல் உள்ள அடிப்படை உபதேசத்திற்கு எதிரான மேலே சொன்னவைகளை தியானியுங்கள்; செயல்படுங்கள்; கர்த்தர் நம்மோடே!

**(மேலும் விபரங்களுக்கு “கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்” என்ற ஆராய்ச்சி நூலை வாசியுங்கள்.)**

❖ ❖ ❖

# ஆசிரியரின் வெளியீடுகள்

## ஆராய்ச்சிப் புத்தகங்கள்

- ★ கருகலான சத்தியம் (பாகம் I)
- ★ கருகலான சத்தியம் (பாகம் II)
- ★ தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் I)
- ★ தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் II)
- ★ வியாதியா? மரணமா?
- ★ விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்! (பாகம் I & பாகம் II)
- ★ வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்
- ★ கதைகள் அறுபது
- ★ சிறுவர் ஊழியம்
- ★ இஸ்லாமியரின் கேள்விகள்
- ★ உங்களுக்குத் தெரியுமா?
- ★ கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்

## பாடல் சி.டி

- ★ ஆடியோ : ரூ. 50; வீடியோ : ரூ. 50
- ★ (ஆடியோ சி.டி. Vol. I, II, IV, VI மற்றும் DVD சி.டி. Vol. III, V)

## தீர்க்கதரிசன விளக்கவுரைகள் DVD

- ★ வெளிப்படுத்தின விசேஷம் (3 சி.டி)
- ★ தானியேல் (3 சி.டி)

(ஒரு செட் ரூ. 200/-)

## கருத்தரங்கு செய்திகள் DVD (ஒவ்வொன்றும் ரூ. 50/-)

- ★ இனி சம்பவிக்கப் போகிறவைகள்
- ★ குரான் சொல்லும் ஈசா தேவனா?
- ★ இயேசு ஏன் வரவில்லை?
- ★ வேதம் விஞ்ஞானத்திற்கு ஒத்திருக்கிறதா?
- ★ ஆவியின் அபிஷேகமும் அக்கினி அபிஷேகமும்
- ★ கள்ள உபதேசமும் கள்ள தீர்க்கதரிசினமும்
- ★ மாறுபாடுள்ள சந்ததி எது?
- ★ வேதம் பற்றி முஸ்லீம்கள் சொல்வது சரியா?
- ★ குரானில் குளறுபடிகள் உண்டா?
- ★ வேதத்தில் குளறுபடிகளா? பொய்த்தகவல்களா?
- ★ இயேசுபற்றி முஸ்லீம்களின் கருத்தென்ன?

**அரை மணிநேர DVD செய்திகள்** (ஒவ்வொன்றும் ரூ. 50/-)

★ இயேசு வருவாரா?
★ அந்தி கிறிஸ்து எப்போது வெளிப்படுவான்?
★ எது தேவசித்தம்?
★ வியாதி தேவனின் சிட்சையா?
★ திரித்துவம் உண்டா?
★ அந்நிய பாஷை
★ எது ஆவிக்குரிய சபை?
★ படைப்பின் இரகசியம்
★ மரணத்திற்குப் பின் நிலை என்ன?
★ தெய்வீக சுகம்
★ எது விசுவாச ஊழியம்? எது விசுவாச வாழ்க்கை?
★ இயேசுவின் இரத்தம்
★ பண்டிகைகள் தேவையா?
★ வரமும், கனியும், வல்லமையும், அதிகாரமும்
★ ஆசீர்வாதமும், சாபமும், வாக்குத்தத்தமும், தண்டனையும்
★ இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானமா?
★ இயேசு சர்வவல்லமையுள்ள தேவனா?
★ சபைக்குள்ளே நிறைவேறுகிற - நிறைவேறப்போகிற தீர்க்கதரிசனங்கள்
★ நியாயப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது?
★ நிறைவேற வேண்டிய உடன்படிக்கைகள்
★ யார் அந்த இரண்டு சாட்சிகள்?
★ யார் அந்த 1,44,000 பேர்?
★ 70 வார தீர்க்கதரிசனம்
★ 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம்

❖ ❖ ❖

**"End Time Deliverence Ministry Trust"**

Savings Bank Account no : 10372388517

State Bank of India, Chennai - 600 054.

(IFS Code : SBIN0004675)

(வங்கியில் அனுப்பிய உடனே எங்களுக்குத் தெரிவியுங்கள்)


**இயேசு சீக்கிரம் வருகிறார்!**
**ஆயத்தமாவோம்!!**
**ஆயத்தமாக்குவோம்!!!**

## ஆசிரியர் அழைத்தால் வரத் தயார்

ஞாயிறு ஆராதனைக்கு...
வேதப்பாடம் நடத்த...
வசன விளக்கம் கொடுக்க...
சுவிசேஷக் கூட்டம் நடத்த
கருத்தரங்குகள் வைக்க...

முஸ்லீம்கள், இந்துக்கள், நாத்திகர்கள்
ஆகியோரோடு கலந்துரையாட...
பைபிள் காலேஜில் போதிக்க...
உபவாசம், முழு இரவு ஜெபம்
போன்ற எல்லா கூட்டங்களுக்கும்

# வேதப் பொன்மொழிகள்

- ★ ஆட்களைப் பாராதே! ஆண்டவனைப்பார்!
- ★ வசனமுள்ள வாழ்வு வளமான வாழ்வு!
- ★ விசுவாசம் வெற்றியைத் தரும்
- ★ Where there is vision there will be provision
- ★ போதக சிட்சையே ஜீவ வழி
- ★ பரிசுத்தமாக்குவது வசனமே
- ★ கிரியை இல்லாத விசுவாசம் செத்தது
- ★ Have positive confession
- ★ பூமியிலே நூறத்தனை ஆசீர்வாதம் உண்டு
- ★ இரகசிய வருகைக்கு ஆயத்தமா?
- ★ வேதத்தை விதை! விளையச் செய்பவர் தேவன்
- ★ பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு
- ★ திக்கற்றவர்களையும், விதவைகளையும் விசாரிப்பதே மாசற்ற பக்தி
- ★ ஆசீர்வாதமும் சாபமும் மனிதனே சுதந்தரிக்க வேண்டும்
- ★ வாக்குத்தத்தம் ஒன்றல்ல; இரண்டல்ல; ஏராளம்
- ★ மூல உபதேசம் இல்லாத சபை கிறிஸ்தவ சபையல்ல
- ★ பரிசுத்த ஆவி பெற்றதற்கு அடையாளம் அந்நிய பாஷை

## இந்த மாத "விசுவாச முழக்கம்" வாசித்தீர்களா?

## நமது ஊழியங்கள்

1. "விசுவாச முழக்கம்" பத்திரிக்கை ஊழியம்
2. "விடுதலை கிறிஸ்துவின் சபைகள்"
3. "சேவியர் இறையியல் பயிலகம்" - பைபிள் காலேஜ் ஊழியம்
4. விசுவாசக் கருத்தரங்கு ஊழியம்
5. வசன விளக்கம் எப்போதும் (காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை)
6. வெப்சைட், சி.டி. ஆராய்ச்சி புத்தகங்கள், Facebook, you tube, Whatsapp ஊழியம்
7. கஸ்தூரிபாய் ஆசிரமம்.

இன்னும் பல .......

# faith brings success




Rev. Dr. A. Xavier
(Author)


## ஆசிரியரைப்பற்றி,,,,,,,

1951ம் ஆண்டு மே மாதம் 16ஆம் நாள், தமிழ்நாடு, திருச்சிமாவட்டம் மணப்பாறை அருகே உள்ள சின்ன உடையாபட்டி என்ற குக்கிராமத்தில் ஏழை குடும்பத்தில் ரோமன் கத்தோலிக்க சபையை சார்ந்த பெற்றோருக்குமகனாய் பிறந்தவர்தான் Rev. Dr. A. சேவியர்.

குழந்தை பருவம் முதல் பக்தியோடு வளர்க்கப்பட்டவர். B.Sc., (கணிதவியல்) படிப்பை திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் முடித்து. தொலைபேசி துறையில் பணியில் சேர்ந்து, படிப்படியாய் பதவி உயர்ந்து, டிவிஷனல் இன்ஜீனியராக ஆனார்.

கல்லூரியில் படிக்கும்போதே நாத்திகனாய் மாறி இயேசுவுக்கு எதிராளியாய் மாறினார். இந்நிலையில் நெல்லை மாவட்டம் குலசேகர பட்டினத்தை சார்ந்த C.S.Iசபை பெற்றோரின் மகள் கஸ்தூரிபாய் என்பவரை 16.06.1976 அன்று மணந்தார். பக்தியுள்ள மனைவியின் நடக்கையாலும், ஜெபத்தாலும், ஆசிரியருக்குள்ளே ஒரு மாற்றம் உருவானது.

1981–ல் நடந்த ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் ஏற்பட்ட மூளை முறிவிலிருந்து 1985–ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கிடைத்த விடுதலையால் ஒரு பெருத்த மாற்றம் உண்டாகி, 1986 நவம்பரில் இரட்சிக்கப்பட்டு ஆவிக்குரிய கிறிஸ்தவரானார். பெந்தகோஸ்தே சபையில் நுழைந்தவர்,செவென்த்டே அட்வென்டிஸ்ட் சபையினரால் ஈர்க்கப்பட்டு சபை மாறியதால் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, அந்த சபையிலிருந்து வெளியேறி, ஆவிக்குரிய விசுவாசியாய் மாறினார். விசுவாச விதையை தமிழகத்தில் விதைத்த தேசத்தின் தீர்க்கதரிசி ஜஸ்டின் பிரபாகரனின் போதனையால் விசுவாசத்தில் பெலப்பட்டு, ஊழியத்தில் நுழைந்தார். அநேக குக்கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் செய்தார். டிராக்ஸ் ஊழியம், தெருப்பிசங்கம், "எப்போதும் வசன விளக்கம்" போன்றவையெல்லாம் இவருக்கு தேவன் தந்த வரம். மிகவும் சிறிய சபைகளுக்கும் சென்று சத்தியத்தை பரப்பினார். "கடைசிகால விடுதலை முழக்கம்" என்ற மாத இதழை ஆரம்பித்து அதன்பின் "வசன முழக்கம்" என்ற பத்திரிக்கையை நடத்தினார். "விசுவாசம் வெற்றியைதரும்" என்ற தாரக மந்திரத்தை போதித்தார். வாரந்தோறும், மாதந்தோறும், வருடந்தோறும், சென்னையிலும், மாவட்ட தலைநகரங்களிலும் கருத்தரங்குகள் நடத்தி கிறிஸ்தவ சபைகளில் பெரிய எழுப்புதலை உருவாக்கினார். எந்த ஊழியத்திற்கும் யார் அழைத்தாலும் எதையும் பார்க்காமல் உடனே ஒத்துக்கொள்ளும் சுபாவம் உள்ளவர்.

தேவனின் தரிசனப்படி கஸ்தூரிபாய் ஆசிரமம், சேவியர் இறையியல் பயிலகம், விடுதலை கிறிஸ்துவின் சபை, விசுவாச கருத்தரங்குகள், ஊழியர் கருத்தரங்குகள், மற்றும் இணையதளம், தொலைக்காட்சி, முகப்புத்தகம் போன்ற பல ஊடகங்கள் மூலம் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். தற்போது "விசுவாச முழக்கம்" என்ற மாதஇதழ் கௌரவ ஆசிரியராகி ஒரு வசனப்புரட்சி செய்து வருகிறார். அன்னாரின் ஊழியம் விரிந்து பரவ அநேக ஆத்துமாக்களை வருகைக்காய் ஆயத்தமாக்க ஜெபியுங்கள்.


endtime deliverance ministry

endtimetrust xavier

9444979822

revdrxavier@gmail.com